
# பரகாலன் பைந்தமிழ்



பேராசிரியர்

டாக்டர் ந.சுப்புரெட்டியார்

# பரகாலன் பைந்தமிழ்




பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

# என் தலைமேல்
# இறைவன் திருவடிகள்

மின்னுருவாய் முன் உருவில்
வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த
திங்கள் தானாய்
பின்னுருவாய், முன்னுருவில்
பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே
எண்ணாது எண்ணும்
பொன்னுருவாய், மணியுருவில்
பூதம் ஐந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவில்
திகழும் சோதி
தன்னுருவாய் என்னுருவில்
நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடிஎன்
தலைமே லவே[1].

—திருமங்கையாழ்வார்

1. திருநெடுந். 1

# பரகாலன் பைந்தமிழ்

[ஆசிரியரின் 77-வது அகவை நினைவாக]


'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
'தமிழ்ப் பேரவைச் செம்மல்'

**பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்**

(எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பிஎச்.டி.,)

முன்னாள் : தமிழ்பேராசிரியர் - துறைத் தலைவர்
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி - 517 502 (ஆ. மா.)

இந்நாள் : தகுநிலைப் பேராசிரியர்
(கண்ணியப் பொறுப்பு),
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005



விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184. பிராட்வே • சென்னை • 600108

முதல் பதிப்பு : டிசம்பர், 1992

© டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் M.D.
ஆசிரியரின் இளைய மகன்
'வேங்கடம்'
AD-13 (மனை எண் 3354)
அண்ணா நகர், சென்னை-600 040
தொலைபேசி : 62 11 583

பக்கங்கள் : 48 + 564 = 612

**விலை : ரூ. 60-00**

**VENKATAM PUBLICATIONS**
AD-13 (Plot - 3354)
Anna Nagar, Madras - 600 040

அச்சிட்டோர் :

ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்,
7/40 கிழக்கு செட்டித் தெரு,
பரங்கிமலை, சென்னை-600 016

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே

— *தாயுமானவர்பராபரம்* 155



ஜஸ்டிஸ் N. கிருட்டிணசாமி ரெட்டியார் (ஓய்வு)

**சென்னை உயர்நீதி மன்றம்**

*பிறப்பு* : 23—12—1913

மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஓய்வுபெற்ற
சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர்

ஜஸ்டிஸ் N. கிருட்டிணசாமி ரெட்டியார் அவர்கட்கு

## அன்புப் படையல்

*பெருந்திரு உளத்தர்; வாய்மையால் ஞானம்*
*பிறங்கிடப் பிறங்கிடப் பொலிவோர்;*
*திருந்திய நீதிக் கோலினால் ஈசன்*
*திருவடி தொட்டநற் சீலர்;*
*அருந்தமிழ் போல இனியவர்; என்பால்*
*அன்பினர்; உளவளம் நல்கும்*
*மருந்தினர்; எங்கள் கிருட்டிண சாமி*
*வள்ளலுக் குரியதிந் நூலே.*

## அடியேனது வேண்டுகோள்

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்தில் சலனம் இல்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்
கனக்கும் செல்வம் நூறு வயது
இவையுந் தரநீ கடவாயே[2]

—பாரதியார்

2. பா. க. வி. நா.மாலை-7

# சிறப்புப் பாயிர மாலை

**டாக்டர் பு.மு. சாந்தமூர்த்தி**, எம்.ஏ., பிஎச். டி.,
*தமிழ்ப் பேராசிரியர் - துறைத் தலைவர்*
*சௌராஷ்டிர கல்லூரி, மதுரை-600 006.*

*வேங்கடவன் மலர்த்தாளில் நெஞ்சம் வைத்து*
*வினையகற்றும் பிரபந்த விளக்கை ஏந்தி*
*ஓங்குபுகழ்த் தமிழ்ச்சுடரின் பாதை கண்ட*
*உயர்வானப் பரப்பாக அறிவைத் தேக்கிப்*
*பாங்குடனே தொண்டாற்றும் என்றன் ஆசான்*
*பண்பட்ட தமிழ்ச்சுப்பு ரெட்டி யார்தம்*
*தேங்கமழும் நூலுக்குள் திளைத்து நின்றேன்*
*தேவநலத் தொடர்களிலே திருவைக் கண்டேன்.* 1

*செந்தமிழில் தோய்ந்தவுளம் என்ப தாலே*
*செம்மாந்த பாரதியை உணர்ந்த தாலே*
*சிந்தையிலே பல்லாற்றல் வளரக் கண்டார்*
*செழுந்தமிழின் நூற்பரப்பில் சிறப்புத் தந்தார்;*
*இந்தவளம் வாய்த்திட்ட இசைமை யாலே*
*இவர்பெற்ற* **அருங்கலைக்கோன்** *என்னும் பட்டம்*
*சந்ததமும் இவர்திறமை சாற்று மன்றோ?*
*சங்கத்துத் தமிழ்வளரும் சான்று மன்றோ?* 2

*விண்ணளவு விரிந்திலங்கும் அறிவின் ஈட்டம்*
*விரும்பித்தாம் கொண்டதனால் தமிழ வீட்டில்*
*எண்ணரிய துறைகளிலே இதயம் தந்தார்*
*இலங்குதுறை பலவற்றில் நூல்கள் தந்தார்;*

கண்ணுக்குள் கனிவுகளைத் தேக்கிக் கொண்டு
கல்விதரும் தமிழ்ச்செம்மல் ஆன ஆசான்
பண்பட்ட நெஞ்சாழம் பார்க்க வேண்டின்
பரகாலன் பாட்டாய்வே போது மென்பேன்! 3

சடகோபன் பொன்னடிஎன் றான ஆசான்
சாற்றுதமிழ்ச் சுப்புரெட்டி யார்தாம் கண்ணில்
நடமாடும் களஞ்சியமாய்த் தோற்றம் தந்தார்
நம்மாழ்வார் பாசுரத்தின் நயத்தைப் போல;
வடநாடும் தென்னாடும் கண்ட மாலின்
வளமான தலமெல்லாம் படைத்த தாலே
படமாடும் பாம்பணையில் பள்ளி கொண்ட
பரமனவன் திருவருளே வாழ்க்கை என்பார்! 4

நெற்றியிலே இறைச்சின்னம் நெஞ்சம் காட்டும்
நிமிர்ந்தநடைப் பெருமிதமோ நினைப்பைக்
காட்டும்;
கற்றதுறை அறிவெல்லாம் ஆற்றல் காட்டும்
களங்கமிலாக் குழந்தைமனம் இதயம் காட்டும்;
பொற்புடைய பணியென்றும் பொலிவைக் காட்டும்
புகழ்படைத்த படைப்புகளோ திறனைக் காட்டும்
நற்புலமை பேராண்மை தமிழே காட்டும்
நல்லிதயப் பண்பாட்டை வாழ்க்கை காட்டும்! 5

கண்டிருக்கும் வழிகாட்டி ஆசான் நெஞ்சக்
கனிவுகளை இவர்போலக் கொண்டா ரில்லை;
பண்டிருக்கும் நூல்களையும் ஆய்வு செய்வார்
பயன்கூட்டும் அறிவியலும் தேர்ந்து சொல்வார்!
மண்டிருக்கும் கலைச்செல்வம் யாவும் இந்த
மாநிலத்தின் பயனுக்கே என்ப தாலே
கொண்டிருக்கும் அருங்கலைக்கோன் பட்டம் உண்மை
கூறுகின்ற கல்வெட்டாய் என்றும் வாழும்! 6

திருநீற்றை அணிந்தபோதும் நெஞ்சிற்குள்ளே
திருமாலின் அருளிச்செயல் பாட்டே கேட்கும்
ஒருமனத்தில் இருகாட்சி படைத்துக் கொண்ட
ஒருமை நலப் பொதுமையதன் உணர்வு
கொண்டார்;
பெருந்தன்மை இவர்கொண்ட வாழ்க்கை என்றால்
பேரன்பே இவர்காட்டும் பாச மாகும்;
வருநாளின் வரலாற்றில் வாழும் நெஞ்சாய்
வாழ்கின்றார் சுப்புரெட்டி யார்என் பேனே! 7

பரமனருட் சுடர்பாடிக் கலியன் தந்த
பாசுரத்தில் திளைத்திட்ட என்றன் ஆசான்
வரலாற்றின் வழிநின்று வகுத்துத் தந்த
வளமான பயணங்கள் எல்லாம் நெஞ்சில்
சுரக்கின்ற அருளாகிப் பாய்வ தாலே
சொற்றமிழின் இறைக்காட்சி உளத்தில்
தோன்றும்!
வரமாக இந்நூலை ஏற்றுக் கொண்டால்
வருநாளின் பயணத்தில் இறைமை வாழ்த்தும்! 8

வளர்கின்ற ஆண்டுகளை வெல்லும் ஆர்வம்
வளமைசேர் தமிழுக்குள் வாழும் உள்ளம்
தளராத தமிழ்ப்பணியில் பொன்னி வெள்ளம்
தாமறிந்த கலைபிறர்க்குக் கூறும் வேட்கை
அளப்பரிய கருத்துகளை எண்ணும் நெஞ்சம்
அன்றாடம் இறைநெறியில் வழுவாச் செம்மை
உளமறிந்த ஆய்வுகளில் திளைக்கும் சீர்மை
உள்ளபடி ஐயாவை இவையே காட்டும்! 9

பேச்சினிலே சிரிப் பிருக்கும் சிரிப்பிற் குள்ளே
பெருமைதரும் கருத்திருக்கும் கனிவி ருக்கும்
மூச்சினிலே வேங்கடவன் மணமே வீசும்
முப்போதும் இறைமறவா முழுமை தோன்றும்;

பாச்சுவையில் திளைக்கின்ற போதில் நம்மைப்
பரவசத்தில் ஆழ்த்துகின்ற பண்பே தோன்றும்
நாச்சுவையில் நல்லவளம் கொண்ட ஆசான்
நான்பெற்ற வழிகாட்டி; என்றன் பேறே! 10

எல்லார்க்கும் வாய்க்காத இளமை நெஞ்சம்
இளநெஞ்சில் தமிழ்ப்பண்பே என்றும் தஞ்சம்
நல்லார்வம் வளர்ப்பதிலே சீர்மை கொள்ளும்
நாளெல்லாம் எழுதுவதில் உள்ளம் துள்ளும்;
சொல்லாண்மைப் பிரபந்தப் பாடற் காட்சி
சுவைநூல்கள் முன்கூறும் புலமைச் சாட்சி;
வல்லமைகள் எல்லார்க்கும் வாய்ப்ப தில்லை
வளர்துறையின் திறமைக்கும் இவர்போ லில்லை!
11

கலியனாரின் புகழ்காட்டும் நூலைப் போலக்
கனிதமிழில் பிறஆழ்வார் வாழ்வைக் கூறும்
பொலிவுள்ள பலநூல்கள் தமிழுக் கீந்து
பொன்னாழிக் கையானின் புகழைப் பாடி
வலிமைகளை நாளெல்லாம் வளர்க்க வேண்டும்
வாழ்க்கைநலப் பாதையிலே இருகை நீட்டி
மெலிந்தமனம் வீறுகொளும் வண்ணம் ஐயா
மேன்மேலும் இறைநூல்கள் படைத்தல்
வேண்டும்! 12

இனிக்கின்ற சொல்லாலே இறையைப் பாடி
இதயத்தை நெகிழவைக்கும் ஆழ்வார் பாட்டின்
தனிச்சுவையை ''வியாக்கியான'' உரையில் கண்டோம்
தமிழறிந்தார் நெஞ்சாரச் சுவைக்கும் வண்ணம்
கனிதமிழில் அவ்வுரைக்கும் விளக்கம் தந்தால்
காண்பதுவும் சுவைப்பதுவும் இறைமை ஒன்றே!
இனியதமிழ் உணர்வுடனே கேட்டுக் கொண்டேன்
எளியவனின் வேட்கையினைத் தீர்க்க என்றே! 13

என்றுமுள தென்தமிழை இயம்பிக் கம்பர்
எழுதிவைத்த இராமகாதைச் சுவையைப் போல
குன்றாத காதலுடன் கோதை சொன்ன
கொண்டாட்டத் திருப்பாவைப் பண்ணைப் போல
நன்றறிந்த ஆழ்வார்கள் நாளும் நாளும்
நவின்றிட்ட பிரபந்தப் பாடல் போல
என்றென்றும் ஐயாஉம் இளமை நெஞ்சால்
எமைவளர்க்கும் தமிழ்தருக என்றே கேட்பேன்! 14

தன்னைநன்றாய்த் தமிழ்செய்யு மாறு தேவன்
தந்ததமிழ் கொண்டதகை சான்ற ஐயா,
மன்னுமாரு தமிழ்ச்செம்மல் என்றே ஆனீர்
மாண்புடைய அருங்கலைக்கோன் என்றும் ஆனீர்;
தன்னின்பப் பெருக்காலே தமிழும் நாளும்
சடகோபன் பொன்னடிஎன் றிசைத்து வாழ்த்தக்
குன்றெனவே உயர்கின்றீர் வணங்கு கின்றேன்
கூறுதமிழ்ப் பாசுரம்போல் வணங்கு கின்றேன்! 15

கலியனார் இறைவாழ்வின் காட்சி கூறும்
கனிவான செய்திகளோ செவிசேர் இன்பம்
மலிந்திருக்கும் அகச்சான்றின் நிறைவைக் காட்டி
மணித்தமிழில் வடித்திருக்கும் வாழ்க்கைக் காட்சி
சலிப்பின்றி நமையழைத்துச் செல்லும் பாதை
சார்ந்திருக்கும் வைணவத்தின் செழுமைப் பாதை!
பொலிந்திருக்கும் கட்டுரைக்குள் பாடற் சான்று
பொன்னான ஆழ்வாரின் வாழ்வைக் காட்டும்! 16

வடநாட்டுத் திருத்தலங்கள் வழங்கும் தேவ
வளக்காட்சி ஒருமைக்குச் சான்று கூறும்;
திடங்கொண்ட மூவேந்தர் பார்வை கொண்ட
திருநாட்டின் பயணங்கள் அருளைக் கூறும்

மடைவெள்ளப் பெருக்காகக் கலியன் பாடல்
மாநிலத்தின் தலமெல்லாம் இருகை நீட்டி
நடைபோட்டுத் தந்திருக்கும் பயணக் காட்சி
நாளெல்லாம் மணிவண்ணன் நலனே கூறும்! 17

அகப்பொருளில் இறையன்பைக் காணும் பாங்கோ
ஆழ்வாரின் நெஞ்சளித்த பரிசி லாகும்;
தகவுடையார் சொல்விளக்கம், பரிசின் சீர்மைத்
தகுதிகாண விதந்தோதித் தரத்தைக் காட்டும்;
'மிகநல்ல மிகநல்ல' என்னும் வண்ணம்
மேலான தத்துவத்தின் விளக்கம் யாவும்
அகத்தினிலே திருவருளின் பதிவைக் காணும்;
அப்பதிவில் நிலைப்பதெலாம் இறைமை ஒன்றே! 18

முறையான மனக்காதல் முகிழ்த்து விட்டால்
முத்தமிழில் மாலவனைப் பணிந்து விட்டால்
நிறைவான பேரின்பம் நெஞ்சில் தோன்றும்
நினைவிற்குள் மணிவண்ணன் நேசம் தோன்றும்;
இறையின்ப அநுபவத்தைத் தந்த சொல்லில்
இனியவனைத் துய்த்தமனப் பற்றைக் கண்டேன்;
மறையாளன் திருவருளின் அநுப வத்தில்
மனம்தோய்ந்த என்னாசான் நெஞ்சம் கண்டேன்! 19

ஊர்விளக்கம் உற்றபல தலவி ளக்கம்
உயர்ந்தோங்கும் திருக்கோவில் விளக்கம் சேர்த்த
பேர்விளக்கம் பெருமைதரும் பாவி ளக்கம்
பேராளன் அருள்விளக்கம் செயல்வி ளக்கம்
சீர்விளக்கம் கலியனாரின் மனவி ளக்கம்
செந்தமிழின் சுவைஊட்டும் சொல்வி ளக்கம்
யார்தருவார் இவர்போல நூ லுக் குள்ளே?
எமையாளும் பரமனவன் விளக்கம் கண்டேன்! 20

*வண்டடைந்த 'மதுவிரதப்' பெயரைக் கூறும்*
*வனப்பிற்குள் மனம்பதிந்தால் பொலிவு தோன்றும்;*
*கொண்டிருக்கும் ஞானத்தில் தான்தன் பேச்சு*
*கூடிவரும் பிரேமத்தில் தான்பெண் பேச்சு*
*கண்டிருக்கும் சுவைகூறும் எழுத்திற் குள்ளே*
*கண்பதிந்தால் காண்பதெலாம் மாலின் காட்சி!*
*பண்கலந்த பாசுரத்தில் தோய்ந்த ஐயா*
*பார்த்தபடி படித்திட்டால் பரமன் காட்சி!* 21

*பெற்றவளின் உளமாகிப் பெருமை பேசிப்*
*பேணுகின்ற அகக்காதல் பேச்சி னாலே*
*பற்றுகின்ற தாய்ப்பாசுர விளக்க மெல்லாம்*
*பக்குவத்தை வெளிப்படுத்தும் ஆன்மக் காட்சி!*
*உற்றதுணை என்றுணர்ந்தே ஆன்ம வேள்வி*
*உருவாக்கும் தோழிப்பா சுரங்கள் எல்லாம்*
*நற்பயனைக் காண்பதற்கு வழிகள் காட்டும்*
*நம்மவரின் விளக்கங்கள் நயத்தைக் கூட்டும்!* 22

*உள்ளத்தில் உருக்கங்கள் வந்த வண்ணம்*
*உயிர்ப்பிற்குள் இறைவேட்கை வளர்த்த வண்ணம்*
*பள்ளமடை வெள்ளமெனப் பாய்ந்த வண்ணம்*
*பாடுகின்ற மகள்பாசுரப் பாடல் யாவும்*
*அள்ளுசுவை விளக்கத்தால் பொலிவைக் கூட்ட*
*அமைந்திருக்கும் கருத்தோட்டம் நெஞ்சிற் குள்ளே*
*தெள்ளூற்ற தமிழமுத இனிமை சேர்க்கும்*
*திருமாலின் அகவிளக்கம் அருளைச் சேர்க்கும்!* 23

*வழிபாட்டின் வழியில்தான் அருளைக் காணும்*
*வகைகூறும் தத்துவத்தில் பாவைக் காட்சி;*
*மொழிகின்ற அவதாரம், தத்து வத்தின்*
*முழுமைக்குள் அடங்குவதும் விளக்கக் காட்சி;*

விழிகளிலே நீர்மல்க உருகும் நெஞ்ச
விருப்பிற்குள் தத்துவமே விளைச்ச லாகும்;
மொழிப்பண்கள் தத்துவமாய் விளங்கும் சீர்மை
மொழிகின்ற சொல்லெல்லாம் உயிரின் காப்பே! 24

ஆழ்வாரின் பாடற்குள் ஆழங் காண
ஐயாவின் இறைநெஞ்சம் கொண்ட ஆர்வம்
ஆழ்ந்தமனப் பக்குவத்தின் வலிமை யாகும்
அமைந்துள்ள கட் டுரைகள் வளமை கூட்டும்;
சூழ்ந்திருக்கும் தலமெல்லாம் சுற்றிப் பார்த்துச்
சுடராழித் திருவாளன் பண்பைக் கூறி
வாழ்வியலைத் தந்திருக்கும் கலியன் பாடல்
வரலாற்றின் தலப்பயணம் அருளைச் சேர்க்கும்! 25

சொல்வரிசை சீர்வரிசை என்றே கண்டு
சுவையான விளக்கங்கள் கூறும் பாங்கும்
நல்விளக்கம் தரும்போதில் குறிப்பும் தந்து
நயவுரைகள் சேர்க்கின்ற நலத்தின் பாங்கும்
வல்லமையை முன்னிறுத்தும் திறமை என்பேன்
வளர்கின்ற நூலெங்கும் அந்தப் பாங்கே
நல்லியல்பாய் அமைவதுவும் சுவையைக் கூட்டும்
நற்பாடல் பெறும்விளக்கம் நம்மை வாழ்த்தும்! 26

தொடக்கமுதல் இறுதிவரை தொடரும் பக்கம்
தொடர்ந்துவரும் கலியனாரின் உள்ளம் காட்ட
அடக்கமுடன் வரும்விளக்க உரைகள் எல்லாம்
ஐயாவின் நெஞ்சார்ந்த புலமை காட்ட
நடக்கின்ற இவ் விரண்டும் ஒன் றாய்ச் சேர்ந்து
நல்லிறைவன் திருவருளின் நெருக்கம் காட்ட
வடநாடும் தென்னாடும் ஒன் றாய்ச் சேர
வடித்ததமிழ்க் கலியனார்போல் நூலும் வாழ்க! 27

தந்திருக்கும் இந்நூலின் உள்ளே உள்ளம்
தந்தவர்க்குத் திருமாலின் அருளே வாய்க்கும்;
சிந்தையிலே வைணவத்தின் செழுமை தேக்கிச்
சிறப்போர்க்கு மணிவண்ணன் மணமே வாய்க்கும்;
முந்தைமர பறிந்தோரின் பாசு ரத்துள்
மூழ்குவார்க்கு முகில்வண்ணன் காட்சி வாய்க்கும்;
சந்ததமும் தமிழ்ப்பாட்டின் இனிமைக் குள்ளே
சார்வோர்க்குப் பரமனருள் வாய்க்கும்; வாய்க்கும்! 28

சூழ்ந்தவினை வெல்லவேண்டி நாளும் பாடல்
சொல்வாரின் திருவுள்ளம் இளமை தானே!
தாழ்வகற்றும் பிரபந்தப் பண்ணில் தம்மைத்
தருவாரின் திருவுள்ளம் பசுமை தானே!
ஆழ்வார்கள் பாசுரங்கள் உயிரின் வேட்கை
அவைதோயும் திருவுள்ளம் இனிமை தானே!
வாழ்நாளில் தமிழ்ப்பாட்டில் தோய்ந்து தோய்ந்து
வளமறியும் திருவுள்ளம் இறைமை தானே! 29

கணிகண்ணன் பின்சென்ற மாலைப் போலக்
கனிதமிழின் பின்செல்லும் நெஞ்ச மெல்லாம்
துணிவுடைய இந்நூலின் பின்னே சென்றால்
தொடர்வதெலாம் நலமொன்றே உண்மை; உண்மை!
மணிவண்ணன் புகழ்பாடி அருளும் பாடி
மானிடத்தின் வெற்றிதரும் பண்கள் பாடி
அணியாசு நூல்மாலை ஏற்றுக் கொண்டால்
அடைவதெலாம் அவனருளே! திண்ணம், திண்ணம்!
30

44-A, மகால் முதல் தெரு,
மதுரை-625 001
24-11-1992

பு. மு. சாந்தமூர்த்தி

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம!

# அணிந்துரை

**பேராசிரியர் டாக்டர் A. V. ரங்காச்சாரி**
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
பொருளாதாரத்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்-608 002.

'தேனுடைக் கமலத் திருவினுக்கு அரசாகிய' தேவாதி தேவனை தொழுவதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்று எடுத்து இயம்பும் வகையில் சொல்மாலை முடித்த ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்களுள் காலத்தாலும், அரிய எளிய உபதேச முகத்தாலும் நமக்கு அருகே உள்ளவர் திருமங்கை ஆழ்வாராவர். கலியன் அருளிச் செயல் இல்லை என்றால், திவ்விய தேசத்து எம்பெருமான்களின் வடிவழகை உள்ளபடியே உணர்ந்து வழிபட வழியில்லை. ''விஷய ப்ரவணராகிய இவரைச் சாஸ்திரத்தைக் கொண்டு மீட்க வொண்ணாது; நம்மழகைக் காட்டியே மீட்க வேண்டும் என்று பார்த்து, தன்னழகை திவ்விய தேசம்தோறும் காட்டிக் கொடுத்தான் எம்பெருமான்'' என்று பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அழகாகப் பணித்தபடி.

அர்ச்சா திருமேனியில் உள்ள ஊற்றத்தை இவ்வாழ்வார் பாசுரங்கள் உண்டாக்குவதுபோல மற்றைய

ஆழ்வார்களின் பாசுரங்கள் உண்டாக்க மாட்டுவன அல்ல என்று சொல்ல இயலாத முறையில் அர்ச்சாநுபவம் மிகுந்திருக்கும் இவரிடத்தில். அவ்வநுபவத்தின் பெருமைக்குச் சேர, அழகிய சப்த ஜாலங்களும், வாத்திய அமைப்புகளும், பாடும் நாவுக்கும், கேட்கும் காதுக்கும், பேரின்பம் பயப்பனவாகும். பாடப்பெறும் பெருமாளும், அநுஸந்திக்கும் பெரியோர்களும், தம் நிலைமையை மறந்து இருக்கும் நிலையில் பாசுரங்களைப் பொழியும் அழகு இவர் ஒருவரதே. தம் பாடலில் எவ்வளவு ரஸத்தைக் கண்டால் ''வெண் சங்கம் ஒன்று ஏந்திய கண்ணா! நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள் தானே?'' என்று பெருமாளையும் கூப்பிட்டு 'பாடல் இன்பத்தை அநுபவிக்க வாரீர்!' என்று அழைக்க இயலும். ஆசு, விஸ்தாரம், மதுரம், சித்ரம் என்ற நான்கு வகைக் கவிதைகளைப் பாடுவதன் மூலம், 'நாலுகவிப் பெருமாளாகத்' திகழ்ந்த இவ்வாழ்வார் தமிழ்க்காவியத்தின் கரைகண்டவரே. கலிகன்றி ஒலி செய்த இன்பப் பாடலாம் பெரிய திருமொழியின் ரஸத்தை ''உண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயம் இராமாநுசன்'' என்பர் அமுதனார். நூல் துறை முற்றும் ஓதிய ஸ்ரீ பராசர பட்டர் தம்மைத் ''திருநெடுந் தாண்டகம் கற்றோம்'' என்று பெருமை கொள்வர். கவிதார்த்திக சிங்கமாகிய ஸ்ரீ வேதாந்தாசாரியரும் ''கலியன் உரை கொண்ட கருத்துடையோர்'' ஆவர். எம்பெருமானுடைய அர்ச்சாவதாரத்தில் உள்ள ஊற்றத்தாலே இவர் தம்மை ''தேஹாத்ம வாதியாகக் கூறிக்கொள்வர்'' என்றும், ''ஆத்மாவை வெய்யிலிலே இட்டு, சரீரத்தை நிழலிலே வைத்தவர்'' என்றும் பெரியோர் இவர் பெருமையைப் பேசுவர்.

ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்த திவ்ய தேசங்கள் 108-இல் 86 திவ்ய தேசங்களை நேரில் சென்று பாடிய பெருமை இவ்வாழ்வாருக்கே உரியது. இறைவன் வீற்றி

ருக்கக் கூடிய நிலைமையையும், அங்கே பாயும் ஆறு முதலானவற்றையும், திருத்தலங்களிலே உள்ள இயற்கை அழகினையும் திருமால் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் உள்ள திருவுருங்களையும், திருத்தலங்களுக்கே உள்ள ஸ்தல மஹிமைகளையும், தல புராணம் கூறும் தேவர்கள் வணங்கிய பெருமைகளையும் வியந்து கூறுவதால், இவை செவி வாயிலாக உணர்ந்து கூறிய செய்திகள் இல்லை என்பது உற்று நோக்க விளங்கும். ஓரிடத்திலேயே இருந்து திருத்தலங்களைப் பாடி இருந்தால், நாடெங்கும் பரவியுள்ள மக்கள் அப் பாடல்களைக் கேட்டு இன்புற முடியாது. எனவே, திருமால் சமயம் செழிக்க, திருத்தலங்கள்தோறும் சென்று, அங்கே கோயில் கொண்டுள்ள இறைவனைப் பாடிப் போற்றினார் என்பதற்கு இவர் பாடிய பாடல்களே சான்றாகும்.

இத்தகைய ஆழ்வாரின் திருத்தலப் பயணங்களையும் ஆழ்வார் பாடல்களின் அருமை பெருமைகளையும், நயங்களையும், **பரகாலன் பைந்தமிழ்** என்னும் இப் புதிய நூலின்கண் பேராசிரியர் **டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள்** தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஆக்கித் தந்துள்ளார்கள். 'பரகாலன் பைந்தமிழ்' பேராசிரியர் அவர்களது அடிமனத்தில் ஆழமாகப் படிந்து அநுபவிக்கப் பெற்று, அந்த அநுபவம் பீறிட்டுக் கொண்டு நூல் வடிவமாக அமையப் பெற்றது என்பதனை வரிகள்தோறும் உய்த்துணர முடிகிறது.

முதல் இயலில் திருமங்கை மன்னனின் பிறப்பு வளர்ப்பு, திருமணம் ஆகியவற்றை ஆசிரியர் வெகு அழகாகக் கூறி, திருமங்கை மன்னன் 'திருமங்கையாழ்வாராக' மாறிய காரணங்களை— குறிப்பாகக் குமுதவல்லியிட்ட கட்டளையை— "திருவிலச்சினையும், பன்னிரு திருமண் காப்பும் உடையவர்க்கொழிய மற்றவர்க்கென்னைப் பேச வொட்டேன்" என்றதை முதலில் கூறி, அவர் திருநறையூர் நம்பியிடம் அதை முறைப்படிப் பெற்று வந்தபோது

'அரசர் பெருமானே! தினமும் 1008 திருமால் அடியார்க்கு அமுது செய்வித்து, அவர்கள் ஸ்ரீபாத தீர்த்தமும், போனகம் செய்த சேடமும் உண்டு, ஓராண்டுக் காலம் வைணவ நெறியுடன் ஒழுக வேண்டும்' என்று அறிவிக்க, அதனையும் அவர் உறுதியுடன் நிறைவேற்றியதை உகந்த அரங்க நகரப்பன், அவரை உய்விக்க, பிராட்டியாரோடு நேரே எழுந்தருளியபோது, பெருமாளை வெருட்டி, திருமந்திரம் உபதேசிக்கப் பெற்ற வரலாற்றைச் சுவை படக் கூறியுள்ளார் பேராசிரியர் ரெட்டியார்.

இரண்டாவது இயலில், ஆழ்வார் வயலாலி மணவாள னிடமிருந்து உபதேசம் பெற்ற திருமந்திரத்தின் வைபவத்தையும், இதனை எம்பெருமான் பதரியில் தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று உபதேசித்தது, பின் அதனை ஆழ்வார்க்கு உபதேசித்த வரலாறு, இம் மந்திரத்தின சீர்மையை ஆழ்வார் உணர்ந்து, தமது முதல் பதிகத்தில் ''நன்று நானுய்ய நான் கண்டு கொண்டேன்'' ''செல்கதிக்கு உய்யுமாறெண்ணி நல்துணையாகப் பற்றினேன்'', ''நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்' என்று வெளியிட்டு, ''நற்பொருள் காண்மின், நாடிநீர் உய்மின், நாராயணா என்னும் நாமம்'' என்று கூறி, திருநறையூர் பாசுரத்தில் ''நானும் சொன்னேன். நமரும் உரைமின் நமோ நாராயணமே'', ''நங்கள் வினைகள் தவிர உரைமின் நமோ நாராயணமே'' என்றும், திருவேங்கடப் பதிகத்தில் ''பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும்'' என்று எட்டெழுத்தாகிய திருமந்திரம் ஸர்வாதிகாரம் என்று விளக்கி, திருக்கண்ணபுரத்தெம்பெருமானிடம் தாம் கற்ற திருமந்திரப் பொருள் சிறப்பு 'பாகவத சேஷத்வமே' என்பதை,

மற்றுமோர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு
உற்றிலேன்—உற்றதும் உன்னடியார்க் கடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின் திரு வெட்டெழுத்தும்
கற்றுநான் கண்ண புரத்துறை அம்மானே

என்று கோடிட்டுக் காட்டியுள்ளார்கள் (பக்கம் 26).

மூன்றாம் இயலில், திருமங்கையாழ்வாரின் வாழ்க்கை பற்றிய விவரங்களை அகச் சான்றுகளைக் கொண்டு, இவர் ஆலி நாட்டிற்கும் குறையல் பதிக்கும் தலைவர், பெருஞ் சேனையை உடையவர், வாட்போரில் பகைவர் உடல் துணிக்க வல்லவர், பெருஞ் செல்வமுடையவர், புலவர் போற்றும் புலமையும், கவிபாடும் திறமையும், வள்ளண்மையும் உடையவர், பரம்பரை பரம்பரையாகத் திருமால் அடியவர், மறந்தும் புறந்தொழாது திருப்பதிகள் தோறும் சென்று பரவும் அடியவர், திருக்குடந்தை ஆராவமுதனிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டவர் என்பவற்றையெல்லாம் ஆசிரியர் அழகாக விளக்கியுள்ளார். சீகாழியில் ஞானசம்பந்தர் சந்திப்பைக் கூறி, ஆழ்வார் கவிபாடி பரிசாக வேல்பெற்ற குறிப்பையும் வரைந்துள்ளார் (பக். 38). இந்த வரலாறு குருபரம்பரை மட்டுமன்றி, உடையவர் காலத்திலே வழங்கப்பட்ட திவ்யசூரி சரிதம், ப்ரபன்னாம்ருதம் முதலிய நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. மேலும் சீகாழிப் பதிகத் திருமுகத்துப் பாசுரத்தில் ஆழ்வார் தம்மை **கொற்றவேல் பரகாலனாக** சிறப்பித்துக்கூறிக் கொண்டதும் இதற்குச் சான்று பகரும்.

ஆழ்வார் திருவரங்கத்துத் திருப்பணிகள் பல செய்தமையை,

மாடமாளிகை சூழ்திரு வீதியும் மன்றுசேர்
    திருவிக்ரமன் வீதியும்
ஆடல்மாறன் அகளங்கன் வீதியும் ஆலிநாடன்
    அமர்ந்துறை வீதியும்
கடல்வாழ் குலசேகரன் வீதியும் குலவிசை
    மகேந்திரன் வீதியும்
தேடரிய தர்மவர்மா வீதியும் தென்னரங்கர்
    திருவா வரணமே.

என்று கோயில் ஒழுகு அறிவிக்கும். இப்பணிக்கு, நாகப் பட்டினத்தில் இருந்த பொன் பதுமையும் பயன் பட்டது என்பதைப் பட்டர்,

ஜித பாஹ்ய ஜிராதி மணி ப்ரதிமா
அபி வைதிகயந் நிவ ரங்க புரே
மணிமண்டப வப்ரகணார் விததே
பரகால கவி: ப்ரணமே மஹிதாத்.

என்று தமது ரங்கராஜஸ்தவத்திலும், பெரிய திருமடல் 137 வது கண்ணி வ்யாக்யானத்தில் "என்ன பட்டணத்தே புக்கான்? இடைச்சேரியன்றோ?—என்ன மகுட பங்கம் பண்ணினான்? துன்னு படலன்றோ?—என்ன ப்ரதிமை எடுத்தான்? வெண்ணெயன்றோ? என்ன திருப்பணி செய்தான்? தன் வயிறு வளர்த்தான் அத்தனையன்றோ? திருமங்கையாழ்வாரைப்போலே பரார்த்தமாக களவு காண்திறதன்று." என்று வ்யாக்யான சக்ரவர்த்தியான ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை வ்யாக்யான பங்க்திகளும், அதே கண்ணிக்கு அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வ்யாக்யானத்தில் 'களவு காண்பது துச்சமான தயிரும் வெண்ணையுமன்றோ! பௌத்த ப்ரதிமையோ? ஏதேனுமொரு திருமதிள் செய்கைக்காக வன்றோ"— என்ற பங்க்தியும் பக்கம் 40ல் கண்டுள்ள பேராசிரியரின் ஐயத்தைத் தெளிவிக்கும்.

நான்காவது இயல் முதல் 8 இயல்கள் வரை திருத்தலப் பயணம் பற்றியவை. இப் பயணத்தில் திருமங்கையாழ்வார் மேற்கொண்டதாகப் பெரிய திருமொழி அமைப்பில் உள்ள திருத்தலப் பயண முறையைத் தவிர்த்து, ஆசிரியர் தாமாகவே ஒரு வழிப்பயண முறையில் அமைந்துள்ளார். திருநாங்கூர்த் திருப்பதிகளை அநுபவிக்கும்போதும், பெரியவர்கள் நிர்வஹித்துள்ள பெரிய திருமொழி அமைப்பில் உள்ள வரிசையில்லாது புது வழியால் பயணத்தை விவரித்துள்ளார்.

வடநாட்டுத் திருத்தலப் பயணத்தில் திருப்பிருதி, வதரித்திருமலை, சாளக்ராமம், வடமதுரை, திருவாய்ப்

பாடி, பிருந்தாவனம், திருப்பாற்கடல், அயோத்தி, நைமிசாரணியம், துவாரகை, சிங்கவேழ்குன்றம், திருவேங்கடம் ஆகிய 12 வடநாட்டுத் திருப்பதிகளின் அமைப்பு, ஆழ்வார் காட்டும் இயற்கைச் சூழ்நிலை, புராண வரலாறு, ஆழ்வார் தமது பாசுரங்களால் எம்பெருமானை அநுபவித்துப் பாடிய பாங்கு, அப் பாசுரங்களின் வியாக்யான நயங்களில் ஆசிரியர் ஈடுபாடு ஆகியவை படிப்பவருக்கு நல்விருந்தாக அமைந்துள்ளன. நைமிசாரணியத்திலும், திருவேங்கடத்திலும், ஆர்த்தியின் கனத்தாலே தம் குற்றங்களை விரிவாகப் பேசி, பெரிய பிராட்டியாரை முன்னிட்டுப் பிரபத்தி பண்ணியும், அகோபிலத்தில் எம்பெருமானின் சந்நிதான மகிமையினால் மிருகங்களும் பகவத் பத்தியில் திளைப்பதை ஆழ்வார் பாசுரங்கள், அவற்றின் வ்யாக்யானம் கொண்டும் ஆசிரியர் விளக்கியிருப்பது படித்து இன்புறத் தக்கது.

தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தில், திருவள்ளூர், திருநின்றவூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை திருக்கடல்மல்லை, திருஇட எந்தை, திருக்கடிகை ஆகிய ஏழு பதிகளை ஓர் இயலிலும், காஞ்சித் திருத்தலங்கள் பதினைந்தினை ஒரு தனி இயலிலும், விளக்கியுள்ளார்கள். திருக்கடல்மல்லை பெருமாளின் சயனக்கோலத்தை விள்க்குமிடத்து, 108 திவ்ய தேசங்களில் இருபது தலங்களில் திருமால் சயனக்கோலம் கொண்டுள்ளதையும், சயன கோலங்களின் வகைகளையும் தெரிவித்து, அவ்வூர்த் திருமொழியில், திருமங்கை மன்னன் பகவத்பக்தியின் எல்லை நிலமான பாகவத பக்தியில் தாம் ஊறினபடியை,

தண்ணார்ந்த கடல்மல்லைத்
தலைசயனத் துறைவாரை
எண்ணாதே இருப்பாரை
இறைப்பொழுதும் எண்ணோமே

என்ற பாசுரத்தை எடுத்துக் காட்டியுள்ளார். திருஇட எந்தையில் நாயகி பாவனை அடைந்த ஆழ்வாரின் தாய்ப்பாசுர நயத்தை எடுத்துக் கூறும்போது, 'சேதந னுடைய செயல் தொகுதிகள் யாவும் பேற்றுக்கு சாதனம் அன்று; எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் இயல்பாகவே சுரக்கும் இரக்கமே பலனைப் பெறுவிக்க வல்லது' என்ற சீரிய மறைப்பொருளை பேராசிரியர் கூறியுள்ளது ஆழ்ந்து அநுபவிக்கத் தக்கது.

காஞ்சித்தலப் பயணத்தில் 'திரு அட்டபுயங்கரம்' என்று திவ்விய தேசத்திற்குப் பெயர் கொடுத்து, ஆனால் அட்ட புயகரம் என்ற திருநாமமே பொருத்தமுடையது என்பதனைத் தெரிவித்து, இப்பதிக்கு ஆழ்வார் நாயகி பாவனையில் மகள் பாசுரமாக அருளிச் செய்த பாசுரங் களை விளக்க, காதல் வெறி, பக்தி வெறி ஆகியவற்றின் தன்மையை முதலில் தெரிவித்து, அந்தப் பின்னணியில் பாசுரங்களின் நயத்தை ஒரு நாடகக் காட்சிபோல் சித்திரித்துள்ளது பேராசிரியரின் சொல்வளம், பாசுரங் களை அநுபவித்த பாங்கு, அதில் ஆழங்கால்பட்டமுறை இவற்றைக் கண்டு மகிழலாம். ஆழ்வார் காலத்தில் தனிச் சந்நிதியில் சீரும் சிறப்புமாக விளங்கி, ஆழ்வார் மங்களா சாஸனத்தைப் பெற்ற நிலாத்திங்கள் துண்டப்பெரு மாளும், கள்வனூர் பெருமாளும்பிற்காலத்தில் சிவாலயத் தின் பிராகாரத்தில் ஒருபுறத்தில் 'ஒண்டிக் குடித்தனமாக' எழுந்தருளியிருப்பது எண்ணி வருந்தத்தக்கது. பேராசிரியர் அவர்கள் ''மறந்தும் புறந்தொழா மாந்தர்'' நிலையிலுள்ள சில குறுகிய நோக்கமுடைய வீர வைணவர் தேவையற்ற தம் பத்தினித்தனத்தால் வழி படாது இருப்பது பரந்த நோக்கு உடைய வைணவர் களுக்கு வருத்தத்தை விளைவிக்கின்றதாக, முதலில் வீர வைணவர்களைச் சாடி, பரந்த நோக்குடைய வைண வர்கள் என்று ஒரு போலிச் சமரஸத்தை கற்பனை செய்து'' எம்பெருமானே அவர்கள் பரிதாப நிலை கண்டு

கழிவிரக்கம் கொள்ளுவதாகச்'' சித்திரிப்பது பேராசிரியரின் உண்மை மனநிலை தெரிவிக்கின்றது.

நடுநாட்டுத் திருத்தலப் பயணத்தில், நடுநாடு என்பதன் சிறப்பு, அசித்தை எம்பெருமான் உடலாகக் கொண்டிருப்பதால் அழகு தவழும் இடங்களில் எம்பெருமான் கோயில் கொண்டுள்ள தன்மை ''கோங்கரும்பு, சுரபுன்னைக் குரவுஆர் சோலைக் குழாம் வரிவண்டு இசை பாடும் பாடல்கேட்டு தீங்கரும்பு கண் வளரும்'' என்ற பாடல் பகுதிக்கு பேராசிரியர் தேனும் பாலும் அமுதும் கன்னலுமாக அளித்துள்ள பொருள் நயம் ஆழ்ந்து அநுபவிக்கத்தக்கது. திரு அயிந்திரபுரப்பயணத்தில் வண்டு என்பதின் உள்ளுறைப் பொருளை ஆசார்ய ஹ்ருதய நூலை ஒட்டி அளித்துள்ள விளக்கமும், அதனைக் கொண்டு திவ்விய தேசப் பாசுரத்தில் பல விளக்கங்களும், பேராசிரியரின் ஆழ்ந்த ஞானத்தையும், அதில் அவர் ஆழ்ந்து, நம்மையும் தோய்ந்து அநுபவிக்கச் செய்வது உணரத்தக்கது.

சோழ நாட்டுத் திருத்தலப் பயணத்தை, 'ஈரிருபதாம் சோழம்' என்ற 40 தலங்களையும் பேராசிரியர் 158 பக்கங்களில் மூன்று பகுதிகளாகப் பிரித்து, அநுபவிக்கிறார். திரு நாங்கூர்த் திருத்தலப் பயணத்தில் ஊர் வளம், தலச் சூழ்நிலை, தலத்து எம்பெருமான் சிறப்புகள், தத்துவக் கருத்துக்கள் ஆகியவற்றை அழகாக அநுபவிக்கச் செய்கிறார். மேலும், இந்த திவ்வியதேசப் பயணத்தில் ஆழ்வார் ஆங்காங்கே இந்த திவ்விய தேசம் பற்றி அருளியுள்ள பாசுரக் குறிப்புகளையும் தொகுத்து, ஆழ்வார் அநுபவ உணர்ச்சிகளையெல்லாம் படம் பிடித்துக் காட்டுகிறார்.

சிறுபுலியூரில் பாகவத வைபவத்தை ஆழ்வார் அருளிச் செய்துள்ளதைப் பேராசிரியர் அவர்கள் ''சிறுபுலியூர் என்ற திருத்தலமும் வேண்டா; அங்குள்ள சல சயனத்திருக்

கோயிலும் வேண்டா; அங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானும் வேண்டா; அத்திருக்கோயிலைத் தொழு வதையே இயல்பாக உடைய பாகவதோத்தமரின் திருவடி களே சரணம்'' (பக்கம் 24) என்று கூறியுள்ளது படிப்பவர் நெஞ்சை நெகிழச் செய்கின்றது.

பாண்டிநாட்டுத் திருத்தலங்களை 28 பக்கங்களிலும், மலைநாட்டு 5 திருப்பதிகளை 7 பக்கங்களிலும் விவரித்து, ஆழ்வாரின் திருத்தலப்பயணத்தை நிறைவு செய்கிறார். இந் நூலினைப் படித்த நமக்கும் நேரில் திருத்தலப் பயணம் சென்ற மன நிறைவு ஏற்படுகிறது.

''**அருளிச் செயல்கள்**'' என்ற தலைப்பில் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஆறு பிரபந்தங்களின் சாராம் சமும், மடல் பற்றிய விபரங்களும் கூறப்பட்டுள்ளன. தமது முதற் பிரபந்தமான பெரிய திருமொழியில் 86 அர்ச்சாவதார திவ்விய தேசஎம்பெருமான்களை மங்களா சாஸனம் செய்து, பத்தாம் பத்துமுதற்கொண்டு அவதார அநுபவத்தில் ஈடுபட்டு இராமாவதாரத்தை இராட்சசர் பாவனையிலும், கிருஷ்ணாவதாரத்தை யசோதை பாவனையிலும், மற்ற அவதாரங்களின் மேன்மையோடு கிருஷ்ணாவதாரத்தின் எளிமையைச் சேர்த்து அநுப வித்து, கடைசியில் பிரளயாபத்தில் பாதுகாத்த எம்பெரு மானையே கிட்டி உய்யும்படி உபதேசித்து, எம்பெருமான் திறத்தில் ஈடுபடாத அவயவங்கள் பயனற்றவை என்று தெரிவித்து, கடைசி திருமொழியில் தேஹ ஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேணும் என்று எம்பெருமானைப் பிரார்த்தித்து, முதல் பிரபந்தத்தைத் தலைக்கட்டினார். இரண்டாவது பிரபந்தமான திருக்குறுந்தாண்டகத்திலே பசி மிகுதியாகும்வரை சோறிடத் தாமதம் செய்யும் தாயைப்போல, தன்னை அநுபவிப்பதற்குத் தேவையான பெருவிடாய் பிறப்பித்த எம்பெருமான் முகம் காட்டா தொழிய, அவனை விட்டுக் கணமும் தரிக்க வொண்ணாமல்

எம்பெருமானை வாயினால் பேசியும், தலையாலே வணங்கியும், நெஞ்சாலே நினைந்தும் தரிக்கப் பார்க்கின்றார்.

இவ்வநுபலம் மேலும் விடாயை மிகுதியாகப் பிறப்பிக்க, திருவெழுக்கூற்றிருக்கையிலே ஆராவமுதனை "நின் அடியிணை பணிவன் வருமிடரகல மாற்றோ வினையே" என்று ஆர்த்தியோடு சரணம் புகுந்தும் அவனைப் பெறாமையாலே, கண்ணாஞ் சுழலையிட்டு இரண்டு தலையை அழித்தாகிலும் அவனை முகங்காட்டச் செய்வோம்" என்று உறுதி பூண்டு, மடலெடுக்கத் தொடங்கி, சிறிய திருமடலில் "அவதாரங்களில் உண்டான நீர்மையை அழிக்கிறேன்" என்றும், பெரிய திருமடலில்,' நீர்மைக்கு எல்லை நீலமான கோயில்களில் நின்ற நீர்மையையும் அழிக்கிறேன்" என்றும் "இனியும் காட்சி கொடுக்காவிடில் மக்கள் அனைவரும் எம்பெருமானிடம் நம்பிக்கை இழப்பர்" என்று எண்ணிய எம்பெருமான் முகம் காட்ட, தாம் அவனைப் பெற்றபடியை திருநெடுந்தாண்டகத்திலே அநுஸந்தித்துத் தலைக் கட்டுகின்றார்.

அகப் பொருள் தத்துவம், தாய், மகள், பாசுரங்கள் — தூது, ஆகிய இயல் விளக்கங்களில், ஆழ்வார்கள் தாமான தன்மையைவிட்டு "பெண் பாவனையை ஏறிட்டுக் கொள்ளுதல் எதற்கு?" என்ற வினாவினை எழுப்பி (பக். 353) "ஆழ்வார்கள் பெண் தன்மையைத் தாமாக ஏறிட்டுக் கொள்கின்றனரல்லர். இந்நிலை (அவஸ்தை) தானே பரவசமாக வந்து சேருகிறது" என்று அறிவித்து, இதற்கு அடிப்படையான தத்துவக் கருத்துகளை ஆசாரிய ஹிருதயத்தில் கூறப்பட்டுள்ள "ப்ரஜ ஞாவஸ்தைகள்" என்பதனை அஷ்டாட்சர விவரணம் கொண்டு விளக்கி, பரபக்தி, பரஞானம், பரமபக்தி முதலான பக்தியின் கொடுமுடிகளை தெரிவித்துள்ளது மிகவும் பாராட்டத் தக்கது.

தோழி, தாய், மகள் பாசுரங்கள், தூது விளக்கங்கள் இந்த நூலிலேயே மிகவும் சிறந்த பகுதியாகும். பரகாலர் தாய் நிலையில் பண்பட்ட தமிழ் பாடுகையில் தம் மகளைக் கண்டு பேசுவதாகவும், அவள் நோய் பற்றி அறிய விரும்பு வதாகவும் திருமாலிடம் தம் மகளின் நிலையை எடுத்துப் பேசுவதாகவும்; திருமாலோடு சென்ற மகளைக் குறித்து இரங்குவதாகவும் பல நிலைகளில் பாடுகின்றார். பரகாலர் தாய் நிலையிலிருந்து பாடும் திருப்பதிகள், திருவிடஎந்தை, திருவாலி, திருப்பார்த்தன்பள்ளி, திருவரங்கம், திருக் கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருநெடுந்தாண்டகம் இடைப் பத்து (11-20) நற்றாயாகவும், செவிலித் தாயாகவும் பாவித்துப் பாடும் பாடல்களின் உருக்கம் தாயின் உள்ளன்பைக் காட்டுவனவாகும்.

திருமங்கையாழ்வார் பெண் தன்மையை ஏறிட்டுக் கொண்டு, அட்டபுயகரம், திருவாலி, திருக்கண்ணபுரம் திருப்புல்லாணி முதலிய திவ்விய தேசத் தெம்பெருமான் களைக் காதல் மீதூரப் பாடுகின்றார் பரகால நாயகியின் உள்ளம் 'உணர்ந்த எம்பெருமான் அட்டபுயகரத்தில் ஸேவை ஸாதிக்க, இவ்வாழ்வார் நாயகி இவரை யார் என்று அறிந்து கொள்ள முடியாமல், ''யார் கொல் என்ன, அட்டயபுயகரத்தேன் என்றாரே'' என்கிறார்.

இறைவனோடு கலந்து பிரிந்த பரகால நாயகி, பிரிவினால் துன்புற்று, தலைவன் மீண்டும் வாராமையி னால், அவனைப் பிரிந்து தரிக்க மாட்டாமையினால், தானே அவன் இருப்பிடம் நோக்கிச் செல்ல, மேனி தளர்ச்சியுற, கண்களில் கண்ட வண்டு, குருகு முதலிய பறவைகளைத் தூது சொல்லி தன் ஆற்றாமையை வெளியிடுகிறாள். திருக்கண்ணபுரத் திறைவனிடம் கருத்து வைத்த பரகால நாயகி, தன்னுடைய வளைகள் கழன்று விழுவதைக் கூறுகிறாள். திருப்புல்லாணிப் பதிகத்தில் ''மனமே! நீ இங்கு வருந்துவதால் பயனில்லை. காதல்

கொண்ட வள்ளல் விளங்கும் புல்லாணி சென்று சேர். 'ஒரு நாளும் உன்னைப் பிரியமாட்டேன்' என்றவர் ''இப்போது பிரிந்து சென்று விட்டார். அவர் இருப்பிடம் சென்று வணங்குவோம்'' என்று கூறி புல்லாணி செல்ல புறப்படுகின்றாள். தான் படும் துன்பம் எல்லாம் கூறி புல்லாணியம்மானை அடையத் துடிக்கின்றாள் பரகால நாயகி.

தோழியோடு கொண்ட நாயகி அநுபவங்களை விளக்கும் பாசுரங்கள் இறைவனையும் கட்டுப்பண்ணி, நம்மையும் கரைந்துருக வைப்பவை. பக்தி இலக்கிய உலகில் ஒப்பற்ற இப் படைப்புகளின் சிறப்பினைப் பேராசிரியர் அவர்கள் நாடகமாகவே படம் பிடித்துக் காட்டுகின்றார். திருத்தண்காவையும், திருக்குடந்தையையும், திருக்கோவலூரையும் வாயாரப் பாடின விடத்திலும் மனநிறைவு பெறாமையாலே பரகால நாயகி ஆடவும் தொடங்குகிறாள். இப்படி இவள் ஆடுகின்றபடியைக் கண்ட அன்னை, ''நங்காய்! நங்குடிக்கு இதுவோ நன்மை?'' என்ன்கிறாள். அதாவது சேதந இலாபம் ஈசுவரனுக்கு புருஷார்த்தமேயன்றி, ஈசுவர இலாபம் சேதநனுக்குப் புருஷார்த்தமன்றே; அவனுடைய பேற்றுக்கு அவன் தானேயன்றோ பதற வேண்டும்? நீ இங்ஙனம் பதறலாமா?'' என்ற பேராசிரியரின் விளக்கம் ஸம்பிரதாயத்தின் தோய்ந்த பொருளை நயமாக எடுத்துரைத்துள்ளார்கள்.

**ஆழ்வாரின் இறையநுபவம்** என்ற தலைப்பில் திருமங்கை ஆழ்வாரின் பகவதநுபவம் தாமாகவும், நாயகி பாவத்திலும் அமைந்தது என்று (பக் 439) கூறி, திருநாமங்களைச் சொல்லி அநுபவித்தல், பகவத் குணாநுபவம், வடிவழகை வருணித்துப் பேசுதல், திவ்விய தேச அநுபவம், மனத்தை ஆற்றுப் படுத்துதல் ஆகியவற்றைக் கூறி, ஆழ்வாரின் பரத்துவ, வியூக, விபல அவதாரங்களில் அநுபவம், மற்றும் அன்னமாதி அருமறை

கள் அருளிச் செய்தது, அயக்ரிவ, கல்கி அவதாரங்கள், கஜேந்திரனுக்கு அருளியது ஆகியவற்றை அழகாக எடுத்துக்கூறிப் பேராசிரியர் ஆழங்கால் படுகின்றார்கள்.

நிறைவாக தத்துவக் கருத்துக்களை தத்துவம், இதம், புருஷார்த்தம் என்ற தலைப்பில், சித்து, அசித்து, ஈசுவரன் என்று தத்துவத் திரயத்தையும், சரீர-சரீரி பாவனை, இறைவனின் ஐந்து நிலைகள், பாகவத வைபவம், இதம்-சித்தோபாயம், சாத்தியோபாயம், பிரபத்தி நெறி, புருஷகாரம் மற்றும் புருஷார்த்தம் ஆகியவைகளின் விளக்கங்களை ஆழ்வார் பாடல்களைக் கொண்டு நுட்பமாகப் பொருள் சொல்லி அருமையாகத் தெளிவாக்கியுள்ளார்கள் பேராசிரியர் அவர்கள். வைணவ சமய நெறியின் தத்துவப் பொருளை விளக்கும்போது, அர்த்த பஞ்சக விளக்கங்களையும் ஆங்காங்கு இரஹஸ்ய கிரந்த நூல்களின் துணைகொண்டு மிக அற்புதமாக எழுதியுள்ளார்கள்.

ஆக, பேரரசிரியர் அவர்கள் தமது 77-வது வயதில், வயது முதுமையைப் பாராது அறிவு முதுமையையே பற்றாசாகக் கொண்டு, 555 பக்கங்களில் பரகாலன் பனுவல்களின் சாரத்தைப் பிழிந்து, வியக்கத்தக்க ஈடுபாட்டோடும், தோய்ந்த உள்ளத்தோடும், தம்மையே மறந்து ஆழ்வாராகவே ஒன்றி விடுகின்றார். பாசுரங்களின் சொல் வளம், உரை ஆசிரியர்களோடு பேராசிரியரும் பாசுரப் பொருள்களை அநுபவித்த பாங்கு, இறை அநுபவத்தில் ஆழ்வார் ஆழங்கால்பட்ட முறை ஆகியவைகளோடு இந் நூலைப் படிப்போரின் உள்ளங்களையும் இக்கட்டுரைகள் ஆழ்வாரின் பாசுரங்களைச் சேவித்து அநுபவிக்கத் தூண்டுகிறது. திருத்தலப் பயணக் கட்டுரைகளை படிக்கும் போது நாமும் ஆழ்வாரோடும் ஆசிரியரோடும் இத்திருத் தலங்களை எல்லாம் நேரில் சேவித்த பேற்றைப் பெற்று விட்டதான திவ்விய அநுபவத்தைப் பெறுகிறோம். பதரி வரை யாத்திரை சென்ற அடியேனுக்கே இந்த அநுபவம்

ஏற்பட்டது எனில் மற்றவர்களுக்கு இந்நூல் திருத்தப்பலப் பயணத்தில் ஆழ்ந்த ருசியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இதுகாறும் ஸ்ரீவைஷ்ணவ உலகில் 'பரகாலன் பைந்தமிழ்' பற்றிய இம் மாதிரியான அரிய பெரிய நூல் வெளிவந்தது இல்லை. திருமங்கை ஆழ்வார் பனுவல்களின் எல்லா நலனகளையும் வியாக்யானங்கள், இரஹஸ்ய நூல்கள், சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், கம்ப ராமாயணம் ஆகிய நூல்களின் உதவி கொண்டு பூரணமாக ஆய்வு செய்து, 341 பக்கங்களில் திருத்தலப்பயண அநுபவங்களையும், 218 பக்கங்களில் பரகாலன் பனுவல்களின் தத்துவங்களையும் மிக எளிய முறையில் படைத்துள்ளது பேராசிரியர் அவர்களின் அரிய சாதனையாகும். இந்நூல் பேராசிரியர் அவர்களின் 96 வது வெற்றி நூல். இந்நூலைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு வரவேற்கக் கடமைப்பட்டுள்ளது''. அரும்பாடுபட்டு, ஒரு குழுவாக எழுதக் கூடிய இந் நூலினை, உழைப்பின் உருவமாய்த் திகழும் பேராசிரியர் அவர்கள் தாம் ஒருவராகவே எழுதிப் படைத்துள்ளது அவரது அயராத ஊக்கத்தையும் பரந்த உள்ளத்தையும் காலத்தைப், பொன் போன்று போற்றி, பிறர்க்காகவே வாழ்வதையும் எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய உயர்குணச் செம்மல் ஆக்கிய இந் நூலுக்கு அணிந்துரை எழுதப் பணிந்த பேராசிரியருக்கு எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும், வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க வைணவம், வளர்க வைணவ நூல்கள்.

அன்பன்,
**A. V. ரங்காசாரி**

தில்லைத் திருச்சித்ரகூடம்
14-12-92

# நூல் முகம்

மின்னிலங்கு திருவுருவும்,
பெரிய தோளும்,
கரிமுனிந்த கைத்தலமும்,
கண்ணும் வாயும்,
தன்னலர்ந்த நறுந்துழாய்
மலரின் கீழே
தாழ்ந்திலங்கும் மகரம்சேர்
குழையும் காட்டி,
என்னலனும், என்னிறையும்
என்சிந் தையும்,
என்வளையும் கொண்டு;
என்னை ஆளும்கொண்டு
பொன்னலர்ந்த நறுஞ்செறுந்திப்
பொழிலி னூடே
புனலரங்கம் ஊரென்று,
போயி னாரே.'[3]

—திருமங்கையாழ்வார்

அடியேனது நல்வினைப் பயனாக 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்—நம்மாழ்வார் தத்துவம்' என்ற பொருளை ஆய்ந்து டாக்டர் பட்டம் (பி.எச். டி) பெற்றேன் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் (1969). பல்கலைக் கழக ஆய்வின் பயன் பொதுமக்களை அடைய

3. திருநெடுந். 25

வேண்டும் என்பது பல்கலைக் கழக மானிய ஆணையத்தின் கொள்கையாக இருந்து வருவது. இதனை நடைமுறைப் ப. வேண்டும் என்பது அடியேனின் விழைவு. ஆய்வு 'இறைவன்—தத்துவம்' ஆக இருப்பதால் இப்பணி 'புண்ணியமும் புருஷார்த்தமுமாக' அமைந்தது. இதற்கு முன்னும் (1977க்கு முன்னும்) இப்பணி செய்து வரினும் (1970 முதல்) ஓய்வு பெற்றதற்குப் பின்னர்தான் (நுகர் வினை — பிராரப்தம் — நீண்டு வருவதால்) என் பணி மும்முமரமாக நடைபெற்று வருகின்றது. அடியேன் எழுதி வரும் சமய நூல்களை வெளியிட சிறிதளவு மானியமும் அளித்து வருகின்றான் ஏழுமலையப்பன். பதினேழு ஆண்டுகள் (1960—1977) அவன் திருவடி வாரத்தில் தங்கிப் பணியாற்ற வாய்ப்பளித்தவன்; பணிக்காலத்தில் அடியேன் வாழ்வில் பல தடைக் கற்களை நிர்வாகத்தின் மூலம் எழுப்பி[4] அடியேனைக் கசக்கிப் பிழிந்தவன். இந்தத் தொல்லைகளையெல்லாம் தாங்கும் இதயத்தைத் தந்து தாக்குப் பிடிக்கும் ஆற்றலையும் அருளினான்.

என்சொலால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்
தன்சொலால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன் (திருவாய் 7.9:2)

என்று சடகோபனைத் திருத்தித் திருப்பணிகொண்டது போல, ஸ்ரீ சடகோபன் பொன்னடி'[5] யான அடியேனையும் தன்னைப்பற்றியே எழுதுமாறு திருத்திப் பணி கொண்டுள்ளான். இந்த வாய்ப்பினால் 16 வைணவ நூல்களைப்

4. நினைவுக் குமிழிகள் பகுதி 4 (என் திருப்பதி வாழ்க்கை) என்ற நூலால் இவற்றை அறியலாம்.

5. பண்ணுருட்டி வைணவப்பேரவை (1987) வழங்கிய விருது.

படைக்கச் செய்தான்.[6] இந்நூல் 17வது படைப்பாக அமைகின்றது. இவை தவிர, சைவசமயத்திலும் ஆழங்கால் படச்செய்து ஐந்து நூல்களைப் படைக்கச் செய்தான்.

பரகாலன் பற்றிய இந்நூலுக்கு முன்பதாக '**கலியன் குரல்**' (அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு 1989)[7] என்ற நூல் கலியனை (திருமங்கையாழ்வாரை)ப் பற்றிச் சுருக்கமாக அமைந்தது. பெருங்கவிஞரும் ஆழ்வாருமான கலியனை விரிவாக எழுதவேண்டும் என்ற எண்ணமே இந்நூல் அமையக் காரணமாயிற்று; இதுவும் ஏழுமலையான் திருவருளாலேயே எழுதி வெளிவரக் காரணமாக அமைந்தது. இதன் பயனைப் படிப்போர்தாம் மதிப்பீடு செய்யவேண்டும்.

இந்த நூலைச் செவ்விய முறையில் அழகுற அச்சிட்டு உதவிய திரு **வெள்ளையப்பன்** (அதிபர் ஸ்ரீ வேங்கடசிவரா அச்சகம்), அட்டை ஓவியம் வரைந்தும் அச்சுக் கட்டைகள் தயாரித்தும், அட்டையை நான்கு வண்ணங்களில் அச்சிட்டும், அதற்குக் காப்புரை (Lamination) அமைத்தும் உதவிய ஓவிய மன்னர் கலையரசர் திரு. P.N. **ஆனந்தன்** அவர்கட்கும் இதற்கு நன்முறையில் கட்டமைத்து கற்போர் கரங்களில் கவினுறத் தவழச் செய்த திரு V. **திருநாவுக்கரசுக்கும்** என் உளங்கனிந்த நன்றியைப் புலப் படுத்திக் கொள்ளுகிறேன்.

இந்தப் பெரிய நூலுக்குச் '**சிறப்புப் பாயிரமாலை**' வழங்கிய பேரராசிரியர் **டாக்டர்** பு. மு. **சாந்தமூர்த்தி** என் தலைமாணாக்கர்களுள் ஒருவர். எல்லோருமே சாந்தீபினி முனி

---

6. இந்நூலின் இறுதிலுள்ள நூற்பட்டியலைக் காண்க.
7. அப்பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய மூன்று பொழிகள் அடங்கியது.

வருக்குக் கண்ணன் மாணவனாக வாய்த்தது போல் எனக்கு வாய்த்தனர் எனக் கொள்வேன்.

டாக்டர் சாந்தமூர்த்தி 1939 இல் (21-8-1939) பிறந்தவர் (நான் பி. எஸ்சி பட்டம் பெற்ற ஆண்டு). சௌராஷ்டிரத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர். பள்ளிக் கல்வியை மதுரை சௌராஷ்டிர மேல்நிலைப் பள்ளியிலும் கல்லூரிக் கல்வியை மதுரை தியாகராசர் கல்லூரியிலும் பெற்றவர். 1965—67 இல் மதுரைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகத் திறமையுடன் பணியாற்றி நற்பெயர் பெற்றதால் 1967-முதல் மதுரை சௌராஷ்டிரக் கல்லூரியில்தமிழ்த்துறைத் தலைவர் பணி தானாக வந்தமைந்தது; அன்றிருந்து நாளிதுவரை பெரும் புகழுடன் பணியாற்றி வருகின்றார். நான் திருப்பதியில் பணியாற்றி வந்த இறுதிக் காலத்தில் (1977) மதுரை—காமராஜர் பல்கலைத்தில் நான் தலைவனாக இருந்த மூதறிஞர் குழுவில் இவர் பிஎச். டி. பட்டத்திற்குப் பதிவு செய்து கொண்டு ஆய்வு நடத்திக் கடுமையாக உழைத்துப் பட்டமும் பெற்றார்.

சௌராஷ்டிரக் கிளைமொழிகளின் பேச்சு நடை பற்றி விரிவாக ஆய்வு செய்யும் திட்டத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். கவியரங்கம், பட்டிமன்றம், வழக்காடுமன்றம், 'இலக்கியச் சொற்பொழிவுகள்' இவற்றில் பங்கு கொள்கின்றார். சங்க இலக்கியம், இடைக் கால இலக்கியங்கள், புதுக்கவிதை, புதினம், சிறுகதை, திறனாய்வு இவற்றிலெல்லாம் மிக்க ஈடுபாடு கொண்டவர். மதுரை—காமரசர் பல்கலைக்கழகக் கல்விப் பேரவையில் அரசு நியமன உறுப்பினராகக் இருந்து வந்ததுண்டு. சௌராட்டிரம் தாய்மொழியாக இருந்த போதிலும் தமிழகத்தில் —அதுவும் சங்கங்கள் தோன்றித் தமிழ் வளர்த்த மதுரையில் —வாழ்ந்து தமிழை ஆர்வத்துடன் பயின்றவர் சிறந்த தமிழறிஞராகத் திகழ்ந்து வருவதில் வியப்பில்லை. இவ்வளவு சிறப்

பையும் பெற்றுத் திகழும் இவர் என் நூலுக்கு **சிறப்புப் பாயிர மாலை** வழங்கியது இந்நூல் பெற்ற பேறு; என் பேறுமாகும். இதற்கு என் நன்றி. 'பண்யே பரமன் துதி' என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நோய் நொடியின்றி நீடு வாழ்ந்து பல் புகழ் பெற வேண்டும் என்பது என் ஆசி; வாழ்த்து.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் டாக்டர் A. V. அரங்காச்சாரியரின் நட்பு கிடைத்தது தில்லை கோவிந்தராசரின் திருவருள் என்பது என் நம்பிக்கை. சௌலப்பிய, சௌசீல்ய வடிவமாகத் திகழும் பேராசிரியர் பொருளாதாரத் துறையில் உழைப்பினால் உயர்ந்த செம்மல்; திருச்சித்திர கூடத்தைச் சேர்ந்தவர். 'பொருளல்ல வரையும் பொருளாகச் செய்யும்; பொருள் அல்ல தில்லை பொருள்' என்ற வள்ளுவர் போற்றும் பொருளாதாரத் துறையில் பணியாற்றி வருகின்றார். அதனைத் தெய்வப் பணியாகக் கொண்டு அத்துறை பிரகாசிக்கும் பொருட்டுப் பல ஆய்வு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்துப் புகழ் பெற்றவர். இந்தப் பணி தேகயாத்திரையின் பொருட்டுத் தில்லை கோவிந்தன் இட்டவழக்கு — உலகியலை ஒட்டி.

இதற்கு மேலாக இப்பெருமகனாரைத்—பிறவியிலேயே ஸ்ரீவைணவப் பிறவியுடையவரைத்—தில்லை கோவிந்தன் திருத்திப் பணிகொண்டு ஆன்மயாத்திரைக்கு ஆயத்தம் செய்து வருகின்றான் என்பது அடியேனின் கருத்து. ஆழ்வார் அருளிச் செயல்களிலும் ஆசாரிய வியாக்கியானங்களில் இரகசிய கிரந்தங்களிலும் ஆழங்கால் பட்டு அவற்றை இவர் மூச்சாகவும் பேச்சாகவும் அவன் அநுபவிக்கச்செய்து விட்டான் என்று எனக்குப்படுகின்றது. இவர் மேற்கொண்டுள்ள பல்வேறு வைணவப் பணிகள் இக்கருத்தினை அரண் செய்வனவாக அமைகின்றன.

இவர் எழுதி வெளியிட்ட நூல்கள்: (1) நாத—யாமுன வைபவப் பிரகாசிகை, (2) ஞானப் பிரான் வைபவப் பிரகாசிகை (3) சக்கரவர்த்தித் திருமகன் வைபவப் பிரகாசிகை, (4) எம்பார் வைபவப் பிரகாசிகை, (5) திருக்கோட்டியூர் நம்பிகள் வைபவப் பிரகாசிகை, (6) பெரியவாச்சான் பிள்ளை இரகசிய நூல்கள், (7) கலியன் அருளப்பாடு, (8) திருவாலி—திரு நகரித் தல வரலாறு, (9) காட்டு மன்னார் கோவில் தலவரலாறு, (10) தில்லை திருச் சித்திர கூட வரலாறு, (11) வளையமாதே வித்தல வரலாறு, (12) பரகால ஸூரிவர சுப்ரபாதம், (13) திருப்பாவை விளக்கவுரை, (14) மற்றும் பல மணி விழா வெளியீடுகள். இவை தவிர பல வைணவ மாநாடுகளில் பங்குகொண்டு சிறப்புரை, தலைமையுரை, பலநூட்கட்கு மதிப்புரை அணிந்துரை வழங்கி இறைப்பணி ஆற்றி வருபவர்.

மணவாள மாமுனிகள் ஏற்படுத்திய அஷ்டகோத்ரம்—இராமாநுசர் நிறுவின 74 சிம்மாசனாதிபதிகளில் ஒன்றான குமாண்டூர் இளைய வில்லி பரம்பரையில் வந்தவராகையாலே, ''குலதர்மம் செழிக்க'' இப்பெரு மகனார் தில்லை கோவிந்தராச சுவாமி தேவஸ்தானத்தின் வழிவழி அறங்காவலராகவும், இது தவிர, காட்டு மன்னார் கோவில் ஸ்ரீநாத முனிகள்—ஸ்ரீஆளவந்தார் திருக்கோவில், தில்லை கோதண்ட ராமர் திருக்கோவில் அறங்காவலராகவும் கைங்கரியம் புரிந்து வருகின்றவர்,

இவை தவிர, (1) ஆழ்வார் திருநகரி இராமநுசர் திருக்கோவில், (2) திருக்கோளூர் மதுரகவிகள் திருக்கோயில், (3) சிக்கில் கிடாரம் ஸ்ரீமணவாள மாமுனிகள் அவதரித்த தல சந்நிதி, (4) ஸ்ரீவல்லிபுத்தூர் ஸ்ரீமந்நாத முனிகள் சந்நிதி, (5) சேங்கனூர் பெரியவாச்சான் பிள்ளை சந்நிதி, (6) குருகைக் காவலப்பன் சந்நிதி, (7) ஸ்ரீநாத முனிகள் அவதரித்த சந்நிதி, (8) திருவாலி திருநகரி திரு

மங்கையாழ்வார் சந்நிதி, (9) திருக்கோவலூர் உலகளந்த பெருமாள் சந்நிதிமற்றும் பல திருக்கோவில்களின் திருப் பணி, திருக்குட முழுக்கு விழா நடத்தி கைங்கரியம் புரிந்து 'கைங்கரிய மணி'யாகத் திகழ்கின்றார்.

திருக்கோட்டியூர் ஸ்ரீநம்பிகளின் 1000-வது ஆண்டு விழாவையும் மதுரமங்கலம் ஸ்ரீ எம்பார் 960-வது ஆண்டு விழாவையும் முன்னின்று நடத்திப் பெரும்புகழ் பெற்ற வர். இங்ஙனம் வைணவ தத்துவத்தின் சிகரமாக விளங்கிக் கைங்கரியத்தைப் புரிந்து வரும் இப்பெருமகனார் சிறியே னின் நூலுக்கு அணிந்துரை வழங்கியது இந்நூலின் பேறு; அடியேனின் பேறுமாகும். 'நாடும் நகரமும் நன் கறிய' தொண்டக் குலத்தைச் சிறப்பிக்கும் இப்பெருமக னாருக்கு என் இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்து கின்றேன்.

வைணவச் செல்வர் ஜஸ்டிஸ் **நெலவாய கிருட்டிணசாமி ரெட்டியாரின்** அரிய நட்பு கிடைத்தது இறையருள் என்றே சொல்ல வேண்டும். 'தொண்டைநாடு சான்றோர் உடைத்து' என்று வழங்கப்பெறும் நாட்டைச் சார்ந்தவர். 1973 ஆகஸ்டில் 'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்' என்ற என் நூலுக்கு அரியதோர் அணிந்துரை நல்கி ஆசி கூறியவர்.

'மக்கள் நீதிபதி' என்று எல்லோராலும் போற்றப் பெறும் ஜஸ்டிஸ் ரெட்டியார் 1913இல் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் ரெட்டிப்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தவர். செங்கற்பட்டில் உயர் நிலைப் பள்ளிக் கல்வியை முடித்துக் கொண்டு சென்னை கிறித்து வக் கல்லூரியில் பட்டப் படிப்பையும் சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் முடித்துப் பட்டங்கள் பெற்றவர். செங்கற்பட்டில் 1940இல் வக்கீல் தொழிலைத் தொடங்கியவர். 1949இல் இந்திய அரசு பிறர் பொருளை

மோசம் செய்யும் வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பில் அவற்றை நடத்துவதற்கு சிறப்புநிலை அரசு வழக்குரை ஞராக நியமித்தது. 1950—56 இல் செங்கற்பட்டு மாவட்ட அரசு வழக்குரைஞராகப் பணியாற்றினார். இக்காலத்தில் மூன்று பெரிய வழக்குகளை நடத்தும் சிறப்பு நிலை அரசு வழக்குரைஞராகப் பணியாற்றினார். 1960—64 வரை மாநில அரசு வழக்குரைஞராகவும், 1964—66 வரை அட்வோகேட் ஜெனரலாகவும், 1966—75வரை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகவும் பணி யாற்றி ஓய்வு பெற்றவர்.

ஓய்வு பெற்ற பின்னர் 1977—1980 வரை தேசிய காவலர் ஆணையத்தில் சட்டச் சார்பான உறுப்பின ராகவும், 1978—1981 வரை சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு (syndicate) உறுப்பினராகவும், வக்கீல்கள்—காவலர்கள் சமாதானக் குழு, கோவில் நகைப்பாது காப்புக் குழு, அர்ச்சகர் பயிற்சித் திட்டக்குழு, கோவில் நிர்வாகக் குழு-ஆகியவற்றின் தலைவராகவும் (Chairman) பணியாற்றிப் பெரும் புகழ் பெற்றவர்.

தற்சமயம் பொது நல சம்பந்தமான 12 முக்கிய குழுக் களின் தலைவராகப் பணியாற்றி வருகின்றார். தமிழ்நாடு அரசு இலவச சட்ட விசாரணை வாரியத்தின் தலைவராக இருந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இதில் பல சிக்கலான வழக்குகளைத் தீர்த்து வைக்கும் அற்புதங் களை நிகழ்த்தி ஏழை எளியவர்களின் பாராட்டுதல்கட்கு உரியவராகத் திகழ்கின்றார்.

பழுதற ஓதிப் பாங்குடன் நடந்துவரும் இப்பெரியா ரைத் தமிழுலகம் சிறப்பாக வைணவ உலகம் நன்கு அறியும். 'தீதில் நன்னெறி'யுடன் திகழும் இப் பெரியார் தம்முடை பக்திச் சுவை நிறைந்த பேச்சால் தமிழ்ப் பெரு மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து அங்கு நிரந்தர இடம்

பெற்றவர்கள். இவருடைய ஆணித் தரமான பேச்சில் இவருடைய உயிர் நாடி பேசும். "நாடு நகரமும் நன்கு அறிய நமோ நாராயணா என்று பாடும் மனமுடைய பக்தர்."[8] இவர்; சீலம் நிறைந்த பண்புடைச் செல்வர். "உயர் திணை என்மனார் மக்கட்சுட்டே"[9] என்ற தொல் காப்பியக் கருத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழும் உயர் குணச் செம்மல். இறையன்பிலும் மெய்ப்பொருள் கருத்து களிலும் ஆழங்கால் பட்டு நிற்கும் இப்பெரியாருக்கு இந்தப் பக்திப் படையலைச் செய்து பெரும் பேறு பெற்ற வனாகின்றேன். இவர் ஆசியால் இன்னும் பல பக்திப் பனுவல்களைப் படைக்கும் ஆற்றலைப் பெறுவேன் என்பது என் அதிராத நம்பிக்கை.

இந்த நூலை எழுதவும், அது அச்சேறி வெளிவரவும் அருள் புரிந்து அடியேனின் இதயத்தில் நிரந்தரமாக எழுந் தருளி அடியேனைந் 'தீதில் நன்னெறி'யில் இயக்கி வரும் 'மின்னு மாமுகில் மேவு தண் திருவேங்கடமலை கோவில் மேவிய' விளக்கினை மனம் மொழிமெய்களால் வாழ்த்தி வணங்கிச் சரண் அடைகின்றேன்.

வந்தாய்; என்மனம்
    புகுந்தாய்; மன்னிநின்றாய்;
நந்தாத கொழுஞ்சுடரே!
    எங்கள் நம்பி!

8. திருப்புல்லாணி—4.
9. தொல்—சொல்—நூற்பா.

*சிந்தா மணியே!*
*திருவேங் கடம் மேய*
*எந்நாய்! இனியான்*
*உன்னை என்றும்வி டேனே!*[10]

—*திருமங்கையாழ்வார்*

'வேங்கடம்'
AD-13 (பிளாட் 3345)
அண்ணாநகர்,
சென்னை-6000 40
டிசம்பர் 25, 1992

**ந. சுப்பு ரெட்டியார்**
தொ.பே. 62 11 583

---

10. பெரி. திரு 1.10:9

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | அன்புப் படையல் | v |
| | சிறப்புப் பாயிரமாலை | vii |
| | அணிந்துரை | xvi |
| | நூல் முகம் | xxxi |
| 1. | பிறப்பு, வளர்ப்பு, திருமணம் | 1 |
| 2. | திருமந்திர வரலாறு | 15 |
| 3. | கலியன் வாழ்க்கை — அகச்சான்றுகள் | 27 |
| 4. | வடநாட்டுத் திருத்தலப் பயணம் | 42 |
| 5. | தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணம் | 80 |
| 6. | காஞ்சித் திருத்தலப் பயணம் | 102 |
| 7. | நடு நாட்டுத் திருத்தலப் பயணம் | 136 |
| 8. | சோழநாட்டுத் திருத்தலப் பயணம்—(1) | 160 |
| 9. | திருநாங்கூர்த் திருத்தலப் பயணம் | 197 |
| 10. | சோழநாட்டுத் திருத்தலப் பயணம்—(2) | 242 |
| 11. | சோழநாட்டுத் திருத்தலம் பயணம்—(3) | 277 |
| 12. | சோழநாட்டுத் திருத்தலப் பயணம்-(4) | 301 |
| 13. | பாண்டிநாட்டுத் திருத்தலப் பயணம் | 317 |
| 14. | மலைநாட்டுத் திருத்தலப் பயணம் | 335 |
| 15. | அருளிச் செயல்கள் | 342 |
| 16. | அகப்பொருள் தத்துவம் | 523 |

17. தாய்ப் பாசுரங்கள் 360
18. மகள் பாசுரங்கள் 386
19. மகள் பாசுரங்கள்—தூது பற்றியவை 416
20. ஆழ்வாரின் இறையநுபவம் 439
21. தத்துவக் கருத்துகள் 489

## பின்னிணைப்புகள்

1. பயன் பட்ட நூல்கள் 538
2. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் 541
3. 108—வைணவ திவ்விய தேசங்கள் 554
4. பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள் 559

குறிப்பு : அருள் கூர்ந்து பிழைகளைத் திருத்திக்கொண்டு நூலைப் படிக்கவும்

பக்கம்-160: சோழநாட்டுத் திருத்தலப் பயணம்-(1) என்று திருத்திக் கொண்டும்,

பக்கம்-242; 10. சோழநாட்டுத்திருத்தலப்பயணம்-(2) என்று திருத்திக் கொண்டும்,

பக்கம்-277; 11. சோழநாட்டுத் திருத்தலப் பயணம்-(3) என்று திருத்திக் கொண்டும்,

பக்கம்-301; 12. சோழநாட்டுத் திருத்தலப்பயணம்-(4) என்று திருத்திக்கொண்டும் படிக்கவும்.

## பிழை-திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 20 | ஐய்யங்கார் | ஐயங்கார் |
| | 21 | கொடுத்தார் | கெடுத்தார் |
| 7 | 11 | த்தியாராதனை | ததியாராதனை |
| 40 | 22 | விகாரம் | விகாரம் |
| 59 | 12 | நெடுஞ்சிக் | நெருஞ்சிக் |
| 62 | 3 | நமிசாரணியம் | நைமிசாரணியம் |
| 74 | 12 | உற்சவமுர்ததி | உற்சவமூர்த்தி |
| 78 | 30 | முதலடியானது | முதலடியானது |
| 81 | 14 | பன்னிரண்டடிகளில் | பின்னிரண்டடிகளில் |
| 83 | 26 | திருநின்றலூர் | திருநின்றவூர் |
| 87 | 18 | சாந்நரசிம்ம மூர்த்தி | சாந்த நரசிம்ம மூர்த்தி |
| 153 | 12 | நாதமுனிவர் | நாரதமுனிவர் |
| 157 | 7 | காட்டு பகுதி | காட்டும் பகுதி |
| 156 | 27 | சூழிநிலை | சூழ்நிலை |
| 160 | தலைப்பு | சோழநாட்டுத் திருத்தலப் பயணம் | பெயரை அடுத்து — (1) என்று போடுக. |
| 163 | 11 | கிருச்சித்ர கூடம் | திருச்சித்ர கூடம் |
| | 30 | வாராத்துகண்டு | வாராதது கண்டு |
| 179 | 19 | யின்றோ?' | யன்றோ?' |
| 217 | 23 | அநுட்டிப்பவர்களை; | அநுட்டிப்பவர்கள்; |

| | | | |
|---|---|---|---|
| 218 | 14 | திருநாங்கூரிடத்தும் | திருநாங்கூரிடத்தும் |
| 219 | 31 | நாராயணனைத் | நாராயணனைத் |
| 224 | 6 | எம்பக்கம் | எப்பக்கம் |
| | 13 | சென்பக | செண்பக |
| | | அலுக்கப்பெறு பூகால் | அறுக்கப் பெறுவதால் |
| | | இயூகே | இங்கே |
| 229 | | அரக்கலாம்பல் | அரக்காம்பல் |
| 235 | 29 | ஊதிய | ஊதிய |
| 242 | தலைப்பு | சோழநாட்டுத் திருப்பதிகள் | பெயரை அடுத்து — (2) என்று போடுக |
| | 4 | 17 சிறுபுலியூர் | 18. சிறு புலியூர் |
| 248 | 5 | உளளன்பு | உள்ளன்பு |
| | 11 | ஐந்து | நான்கு |
| 252 | 4 | உட்திருக்கண்ணாப்குடி | 20 திருகண்ணங்குடி |
| 261 | 27 | நிர்வாக்ான் | நிர்வாககன் |
| 264 | 5 | ஞானவன் | ஞானவான் |
| 267 | 25 | ஆழ்பொருளை | ஆழ்பொருளைப் |
| 272 | 22 | கோச்செங்கனன் | கோச்செங்கணான் |
| | | தம்பிக்குத | தம்பிக்குத் |
| 279 | 4 | எம்பெருமானை | எம்பெருமான் |
| | 8 | வனமுளையாள் | வனமுலையாள் |
| 285 | 36 | இத்தநிதலம் | இத்திருத்தலம் |
| 287 | 9 | பருகி பூக்களை | பருகிப் பூக்களை |
| 291 | 5 | சமி | சாமி |
| | 17 | ஊறல் | கூறல் |
| 294 | 7 | கின்றன்; | கின்றன; |
| 300 | 2 | மங்களாசசனம் | மங்களாசாசனம் |
| 301 | தலைப்பு | சோழநாட்டுத் திருப்பதிகள் | பெயரை அடுத்து — (3) என்று போடுக. |
| 307 | 6 | திருப்போர் நகர் | திருப்பேர் நகர் |
| 308 | 14 | தடாகங்களாய் | தடாகங்களால் |
| 311 | 4 | சாதிக்கின்றன | சாதிக்கின்றனர். |
| 311 | 10 | தலகுழாநிலை | தலச்சூழ்நிலை |
| | 12 | நகரப் போருந்து | நகரப்பேருந்து |
| 312 | 14 | பாகவிதோத்தமர்கள் | பாகவதோத்தமர்கள் |
| 323 | 2 | கடலநிற... | கடல்நிற... |
| 337 | தலைப்பு | பாண்டி நாட்டுத்... | மலைநாட்டுத்... |
| 339 | தலைப்பு | பாண்டி நாட்டுத்... | மலைநாட்டுத்... |
| | 10 | குன்றிலிட் | குன்றிலிட்ட |

| | | | |
|---|---|---|---|
| 348 | 23 | மார்பீல் | மார்பில் |
| 353 | 18 | டிரு | (நீக்குக) |
| | 29 | இன்ளோரு | இன்னொரு |
| 367 | 29 | திவ்வியார்த் | திவ்வியார்த்த |
| | | தீவிகை | தீபிகை |
| 368 | 14 | பயண | பயணம் |
| 377 | 9 | ஜொலோ | கொலோ |
| 392 | 8 | சம் லேஷிக்க | சம்ஸ்லேசிக்க |
| 399 | 18 | தீயிகை | தீபிகை |
| 402 | 14 | ப்ரிவுத் | பிரிவுத் |
| 409 | 9 | பாரத்தது | பாரதத்து |
| 427 | 3 | பன்னிரண்டடிகளில் | பின்னிரண்டடிகளில் |
| 428 | 18 | பக்களில் | பக்கலில் |
| 436 | 21 | இத்தனை | இததனைக் |
| 441 | 5 | இருப்பிலும் | இருப்பினும் |
| | 8 | செம்யும் | செய்யும் |
| 444 | 3 | சேஷ்ஷிதங்களை | சேஷ்டிதங்களை |
| | 13 | விண்ணம் | வண்ணம் |
| 445 | 17 | குளங்களையும் | குணங்களையும் |
| 450 | 15 | அடிகர் | அழகர் |
| 451 | 17 | சங்கம | சங்கம் |
| 452 | 8 | உயிர்த்தான் | உயிர்தான் |
| 456 | 1 | நிந்திய | நித்திய |
| | 8 | ஆயின் | ஆயன் |
| | 13 | எம்பெருயனை | எம்பெருமானை |
| 458 | 22 | அவதாங்களை | அவதாரங்களை |
| 460 | 1 | ஆளவள்ள | ஆளவல்ல |
| | 13 | தண்தார | தண்தா |
| 461 | 27 | அநுபவிக்கிறார் | அநுபவிக்கிறார் |
| 462 | 18 | திருவிக்கிரமன் | திரிவிக்கிரமன் |
| 463 | 20 | ஆமரவி அம்பனை | ஆமருவி அப்பனை |
| 464 | 11 | ஒண்மிகுதியில் | ஒண்மிதியில |
| 471 | 23 | வால் | வாய் |
| 475 | 1 | மதுகைபர் | மதுகைடபர் |
| 476 | 9 | பரசுராமன் | பரசுராம |
| | 14 | ஆவேசவாதாரத்நை | ஆவேசாவதாரத்தை |
| 481 | 4 | தரமான | தாமான |
| 482 | 17 | தண்டகாரணியத்திடல் | தண்டகாரணியத்தில் |
| 483 | 11 | சப்தாறுகாரம் | சப்தாநுகாரம் |

| | | | |
|---|---|---|---|
| 486 | 21 | ஆர்த்ததுப் | ஆர்த்துப் |
| 490 | 18 | தேசம் | தேகப் |
| 492 | 10 | எண்டாக்கம் | உண்டாக்கம் |
| | 12 | பரமபத்தில் | பரமபதத்தில் |
| | 24 | மூலப்பிாகிருதியாகும் | மூலப்பிரகிருதியாகும் |
| 495 | 3 | குணத் | குணக் |
| 498 | 13 | உருத்ரனது | உருத்திரனது |
| 520 | 18 | பிரதிபத்தியை | பிரபத்தியை |
| 526 | 18 | நன்னியகத்துவம் | அநன்னியகதித்துவத் |
| 527 | 15 | இறைவையுமான | இறைவியுமான |
| xxxi | 13 | செறுந்திப் | செருந்திப் |

# பரகாலன் பைந்தமிழ்

# 1. பிறப்பு, வளர்ப்பு, திருமணம்

**சோழமண்டலத்தில்** **'திருவாலி நாடு'** என்ற ஒரு பகுதி எண்டு. இதுவே **'மங்கை நாடு'** என்று கருதவும் இடமுண்டு. இப்போது சிறப்புடன் திகழும் 'திரு நகரி'ப் பகுதியைச் சார்ந்தது. இந்தத் திவ்விய தேசத்தின் அருகி லுள்ளது திருக்குறையலூர் என்ற சிற்றூர் இந்த ஊரில் கள்ளர்குடியில்[1] தோன்றிய ஒருவர் சோழ அரசனுக்குச் சேனைத்தலைவராக இருந்தார். இவருக்கு ஒருமகன் பிறந்தான். பிறந்த ஆண்டு நள என்பது; மாதம் கார்த் திகை நாள்; முழுமதியம் கூடிய கிருத்திகை நட்சத்திரம். 'கலந்த திருக் கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே' என்பது இவரது வாழித் திரு நாமம். இவரைத் திருமாலின் சார்ங்கம் என்ற வில்லின் கூறாக அவதரித்த தாகக்கொள்வர் வைணவப் பெருமக்கள். பிறந்த குழந்தை நீல நிறமாக இருந்தது பற்றி **'நீலன்'** என்ற பெயர் வழங் கியது. பெற்றோர் இட்ட பெயர் **கலியன்** என்பது. இவரே பின்னர் திருமங்கையாழ்வாராகின்றார். இவருக் குப் பரகாலன், கலிகன்றி முதலிய திருநாமங்களும் உள்ளன.

---

1 Tamil Studies என்பதன் ஆசிரியர் எம். சீநிவாச ஐய்யங்கார் thief's caste என மொழிபெயர்த்துக் கொடுத்தார்.

கலியன் தாம் பிறந்த குடிக்கேற்ப இளமையிலேயே ஆயுதப் பயிற்சி பெற்று அதில் நன்கு தேர்ச்சி அடைந்தார். தந்தையாருக்குப் பிறகு ஆலி நாட்டின் தலைவராகவும் சோழ மன்னனின் தானைத் தலைவராகவும் விளங்கினார். சோழ மன்னருக்குக் கொடியவர்களோடு போர் நேருங் காலத்தில் படைகளோடு முன் சென்று பகையை வென்ற தனால் 'பரகாலன்' என்ற புகழ்ப்பெயரும் இவரை வந்த டைந்தது. இவரது பராக்கிரமத்தை நன்கு உணர்ந்த சோழ அரசன் இவரைத் திருமங்கை நாட்டுக்குச் சிற்றரச னாக முடி சூட்டினான். குறுநிலத் தலைமை பூண்ட திரு மங்கை மன்னன் அரசுப்பணியைக் குறைவின்றி நடத்திப் புகழ் பெற்றார்.

திருமங்கை மன்னன் ஆட்சியில் அவர் அமைத்துக் கொண்ட அமைச்சரவையில் **நீர் மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான், தாள் ஊதுவான், தோலா வழக்கன்** என்ற நால்வர் இருந்தனர். இவர் இவர்ந்து வரும் குதிரை **ஆடல்மா** என்பது. இவர் இகவுலக வாழ்க்கையில் மிகவும் அதிகமாக ஈடுபட்டிருந்தார். கலையுணர்ச்சி மிக்கவரா கவும் திகழ்ந்தார்.

> கலையினொடும் கலைவாணர் கவியினொடும்
> இசையினொடும்......பொழுது போக்கி[2]

என்று தம் காலத்தைக் கலைஞரோடு கழித்தார். இதற்கு இவர்தம் பாசுரங்களிலேயே அகச்சான்றுகள் உள்ளன. அவை பிறிதோரிடத்தில் விளக்கப்பெறும்.[3]

**திருமணம்:** இங்ஙனம் இன்ப வாழ்வில் பொழுது போக்கி வருங்கால் இவர் ஆட்சிக்குட்பட்ட நாட்டில்

2. கலிங்கத்துப் பரணி-277
3. இயல்-3 காண்க.

**'அண்ணன் கோயில்'** என வழங்கும் திருவெள்ளக் குளம் என்னும் திருப்பதியில் மருத்துவத் தொழிலை மேற்கொண்டிருந்த வைணவர் ஒருவர் இருந்தார். இவருக்கு மக்கட் பேறு இல்லாதிருந்தது. அந்த ஊரிலுள்ள தாமரைப் பொய்கையில் சில தேவ கன்னிகையர் நாடோறும் நீராடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். ஒருநாள் அவர்களுள் ஒருத்தியான திருமாமகள் என்பாள் தன் இச்சையால் தேவ வடிவம் துறந்து மானுட வடிவம் கொண்டு குமுத மலர் கொய்து நின்றாள். ஏனையவர் நீங்கிப் போக இவள் மட்டிலும் தனித்து நின்றாள். அப்பொழுது மருத்துவர் அநுட்டானத்திற்காக அப்பொய்கைக்கு வர நேர்ந்தது அவர் தணித்து நின்ற அம்மங்கையை நோக்கி "பிள்ளாய் நீ யார்? தனித்து நிற்கக் காரணம் என்ன?" என்று வினவ, அவளும் "ஐயா, என்னோடு வந்த மங்கையர் என்னை விட்டு நீங்கிப் போயினர். இனி, என்னை உம்மோடு வைத்துக் கொள்ளுவீர்" என வேண்டினாள்.

மக்கட்பேறு இல்லாத அந்த பாகவதோத்தமர் மிகவும் உவப்புடன் இந்தப் பெண்மணியை அழைத்துக் கொண்டு தம் இல்லம் சென்று தம் துணைவிக்குக் காட்டித் தந்தார். அந்த அம்மையாரும் இவளை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். இவர் குமுதமலர் கொய்து நின்றதுவே காரணமாக குமுதவல்லி என்ற திருநாமமிட்டு அவளை அவர்கள் வளர்த்து வந்தனர். நாளடைவில் அக் கன்னிகையும் மணப்பருவம் எய்தினாள். அவளை வளர்த்து வந்த மருத்துவருக்கு குண நலனும் உருவ நலனும் உள்ள இந்நங்கைக்கு ஏற்ற கணவன் எப்படிக் கிடைக்கப் போகின்றானோ? என்ற கவலை எழத் தொடங்கியது.

இந்நிலையில் இந்நங்கையைப் பற்றிய செய்தி மங்கை மன்னனுக்கு எட்டியது. உடனே அரசரும் அந்த அழகிய நங்கையைக் காண்பதற்கு ஆசை கொண்டு திருவெள்ளக்

குளம் அடைந்து அம் மருத்துவர் இல்லம் சென்று அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது குமுதவில்லி ஏதோ காரியமாக இல்லத்திலிருந்து புறத்தே வரக் கண்டார்; அந்த நங்கையின் எழில் திருமேனியும் அன்ன நடையும் மருண்டமான் நோக்கும் மன்னரைக் கவர்ந்தன. மருத்துவரும் அம்மங்கையர் திலகம் தம்மையடைந்த வரலாற்றை மன்னருக்கு எடுத்துரைத்தார். அவளுடைய திருமணம்பற்றியும் தமக்குள்ள கவலையைத் தெரிவித்தார். அரசரும் அவளைத் தாம் மணப்பதாக உறுதி கூறினார். வளர்ப்புத் தாய் தந்தையரும் இவளை அரசருக்குத் தர சிந்தித்துக் கொண்டிருந்தனர். உடனே குமுதவல்லி குறுக்கிட்டு "திருவிலச்சினையும் பன்னிரு திருமண் காப்பும் உடையவர்க்கொழிய மற்றவர்க் கென்னைப் பேசலொட்டேன்" என்று தன் குறிக்கோளைத் தெரிவித்தாள்.

கலியனும் உடனே **திருநறையூர்**[4] சென்று அங்கு எழுந்தருளியுள்ள நம்பி திருமுன்பு திருவிலச்சினை பெற்றுப் பன்னிரண்டு திருமண்காப்புகளையும் தரித்துக் கொண்டு வந்தார். குமுதவல்லியார் மன்னரை நோக்கி, "அரசர் பெருமானே, ஓராண்டுக் காலம் நாடோறும் 1008 திருமாலடியார்கட்கு அமுது செய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தமும் பிரசாதமும் உண்டு நிறைவேற்றினாலொழிய நான் தங்களைக் கணவனாக ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று மற்றொரு நிபந்தனை விதித்தாள். இவரும் அவள்மீது கொண்ட ஆராக்காதலாலே அங்ஙனம் செய்வதாக வாக்குறுதி செய்து தந்தார். நிபந்தனையை நிறைவேற்றவும் செய்தார். அதன் பிறகு குமுதவல்லியாரை "நாடும் ஊரும் அறியக் கண்ணாலம் கோடித்துக்"

4. கும்பகோணத்திற்கருகிலுள்ள 'நாச்சியார் கோயில்' என வழங்கும் திருத்தலம்.

கலியனைக் கைபிடிக்கச் செய்தனர் அவள்தம் வளர்ப்புப் பெற்றோர்கள்.

**ததியாராதனை:** கலியன் தன் கையிலகப்பட்ட பொருளையெல்லாம் பாகவதர்கட்கு அமுது படைப்பதி லேயே செலவிட்டார். அரசனுக்குச் சேரவேண்டிய திறைப்பொருளும் இதிலேயே கரைந்தது. நாளடைவில் இச் செய்தி அரசனது செவிக்கும் எட்டியது. கொற்றவன் கோபங்கொண்டு இவர்பக்கல் திறை வாங்கி வருவதற் காகத் தன் சேவகரை அனுப்பினான். அவர்கள் வந்து கேட்டதற்கு இவர் 'காலை, பகல், மாலை, இரவு, நாளை பின்னிட்டு' என்பதாகச் சில தவணைகள் கூறிக் கால தாமதம் செய்து வந்தார். பின்னர், அச்சேவகர்கள் கடுமையாகத் தொந்தரவு செய்தமையால் நீலன் வெகுண்டு அவர்களை வெருட்டித் துரத்தினார். இதனை அறிந்த அரசன் மிகவும் சீற்றமுற்றுத் தனது தானைத் தலைவரை நோக்கி, ''நீ சேனையுடன் சென்று கலியனைப் பிடித்து வருக'' என்று பணிக்க,அவன் அங்ஙனமே பெரும் பெரும் படையொடு வந்து இவரை வளைத்துப் பிடிக்கத் தொடங்கினான். இவர் '**ஆடல்மா**' என்ற புகழ் பெற்ற பரிமீது இவர்ந்துசேனைகளோடு முன் சென்று எதிர்த்துப் பொருது தானைத் தலைவனைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்தார். இதனை அறிந்த அரசன் தானே சேனை களுடன் வந்து இவரை வளைத்தான். இவரும் தம் படை வலிமையால் அப்படையைக் கடந்து தமது திறமையைக் காட்டிப் பொருதார். பின்னர் **அருள்மாரி** என்னும் தமது பெயருக்கு ஏற்ப, கொற்றவனைக் கொல்லாகாது என்று சிறிது காலம் போர் நிறுத்தம் செய்தார். இதுவே சமயமாக அரசன் தந்திரமாய் நன்மொழி பகர்ந்து அருகில் வந்து, 'நீலா, நின் வீரத்தைக் கண்டு மெச்சினோம்'என்று பாராட்டி, 'விரை வில் திறை செலுத்துக' என்று சொல்லி இவரைத் தன்

அமைச்சன் வசம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பிச் சென்றான்.

**பேரருளாளன் நிதி காட்டுதல்:** அமைச்சன் இவரைப் பிடித்து ஒரு திருக்கோயிலில் சிறை வைத்தான். அங்கு உணவின்றி மூன்று நாள் பட்டினி கிடந்தார் நீலன். திருமாலின் திருவருளால் காஞ்சிப் பேரருளாளர் (வரதராசர்) இவர்மீது கருணை கொண்டு இவரது கனவிலே காட்சி தந்து 'உனக்குத் தேவைப் படும் நிதியை அளிப்போம். காஞ்சிக்கு வருக' என்று சொல்லியருளினான். அக்கனவை நனவாகவே நம்பிய கலியன் எம்பெருமானது திருவருளுக்கு மகிழ்ந்தார். பொழுது புலர்ந்ததும் அமைச்சனை நோக்கி 'அமைச்சரே, காஞ்சியில் நிதி உள்ளது. அங்கு வந்தால் தருவேன்' என்று கூற, அமைச்சனும் அதனை அரசனுக்கு அறிவித்து அவன் இசைவு பெற்றுப் பல பரிவாரங்களால் கலியனைக் காவல் செய்துகொண்டு கச்சிப்பதிக்கு இவரை அழைத்துச் சென்றான்.

காஞ்சியில் நிதியைத் தேடியும் அதனைக் காணாது கவலைக் கடலில் மூழ்கி மூர்ச்சித்தார். இந் நிலையில் பேரருளாளனாகிய வரந்தருமா மணிவண்ணன் மீண்டும் கனவில் எழுந்தருளி அபயமளித்து வேகவதியாற்றங்கரையில் நிதியுள்ள இடத்தைக் குறிப்பிட்டு அருளிச் செய்தார். கலியனும் மூர்ச்சை தெளிந்தெழுந்து இறைவன் குறிப்பிட்ட இடத்தில் நிதி கண்டெடுத்து அரசனுக்கு உரிய திறையைச் செலுத்தி மிகுதிப் பொருளை அடியார் தொண்டிற்காக வைத்துக் கொண்டார். அதன் பின்னர் அமைச்சன் திறைப் பொருளைக் கொண்டு சென்று அரசன் முன்னிலையில் வைத்து நடந்தவற்றையெல்லாம் ஒன்று விடாது கூறினான். அரசனும் இவர் பெருமையையும் மகிமையையும் நினைந்து வியப்பும் அச்சமும் கொண்டு இவரை வரவழைத்துச் சிறப்பாக உபசரித்துப்

பல மரியாதைகளைச் செய்தான். பின்னர் தான் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருளும்படி வேண்டினான். அடுத்து, 'பாஞ்சாலிக்குப் புடவை சுரந்தாற் போல மாயவன் அருளார்ந்த பெருகிய இப்பொருளை கருவறையில் வைக்கக்கூடாது' என்று துணிந்து அப் பொருள் முழுவதையும் இவரைப் பட்டினியில் வைத்த பாவம் தீர்வதற்காகப் பலபல பாகவதர்கட்கு அளித்துத் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டான். இவை குருபரம் பரையில் கண்ட செய்திகளாகும்:

**வயலாளி மணவாளனை வழிப்பறி செய்தல்:** இந்த நிகழ்ச்சியின் பின்னரும் கலியன் த்தியாராதனை யைத் தொடர்ந்து நடத்தி வந்தார். மீண்டும் பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டது. தாம் **நீர்மேல் நடப்பான்** முதலிய நால்வரையும் துணைகொண்டு ஆறலைத்தாகிலும் பொரு ளீட்டி அப்பொருளைக்கொண்டு ததியாராதனையை விடாது நடத்த வேண்டும் என்று உறுதி கொண்டு அந்த அடாத செயலிலும் இறங்கினார். இவர் களவு செய்வதும் வைணவ அடியார்களை ஆராதிப்பதுமாகிய நோன்பை நோற்று வந்ததால் அதனை நல்வினையாகக் கொண்டு இவர்மீது மிக்க கருணை கொண்டான் வயலாளி மணவாளன்.[5] இவரை அங்கீகரிக்க வேண்டும் என்று திருவுள்ளம்பற்றி இவர் தன்னையே வழிப்பறிக்குமாறு தான் ஓர் அந்தணனாகக் கோலம் கொண்டு பல அணிகளையும் தரித்து மணவாளக் கோலமாய் மனைவி யுடனே இவர் இருக்கும் வழியே எழுந்தருளி வந்து கொண்டிருந்தான். இந்நிலையில் திருமணங் கொல்லை யில் திருவரசமரத்தின் கீழ்ப் பதுங்கியிருந்த குமுத வல்லி மணவாளர் கண்டுகளித்த நிலையில் ஆயுத

5. திருவாலி என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக் கும் எம் பெருமான்.

பாணியாய்த் தன் தோழர் நால்வருடனும் பரிவாரங் களுடனும் வந்து தம்பதிகளை வளைத்துக் கொண்டார். தம்பதிகளின் அணிகளையெல்லாம் கழற்றச் செய்து அவற்றை ஒரு மூட்டையாகக் கட்டினார். திருமணமான வராதலால் கால் விரலில் பொன்னாலான அறுகாலி மோதிரம் (மெட்டி என்று சொல்வர்) காணப்பட்டது. அதையும் கழற்றித் தருமாறு கேட்டார்; கழற்ற முடிய வில்லை.

கலியன் என்ன செய்தார் தெரியுமா? உடனே மாப் பிள்ளையின் காலைப்பிடித்துக் கொண்டு[6] தம்பல்லால் கடித்து வாங்கினார். கட்டிவைத்த மூட்டையைத் தூக்க முயலும்போது தூக்க முடியவில்லை; பேர்க்கவும் முடிய வில்லை. உடனே மறையவரை நோக்கி, 'அந்தணரே, நீர் ஏதோ மந்திரம் செய்தீர்' என்று சொல்லி நெருக்க, 'அந்த மந்திரத்தை உமக்கும் சொல்லுகின்றேன்' என்று கழுத்தை அணைத்தார். கலியனும் சம்மதித்து 'நீர் சொல்லாவிடில் இந்த வாளுக்கு இரையாவீர்' என்று தம் கையிலுள்ள வாளைக் காட்டி அதட்டினார். உடனே மறையவரும் மூன்று பதமாய்,[7] எட்டு எழுத்துகளாய்[8] இலங்கும் சகல வேதசாரமான திருமந்திரத்தைக் கலியனின் வலத்திருச் செவியில் செவிக்கின்பமாய் முன்பு நரநாராயணராய்த் தமக்குத் தாமே சொல்லிக்கொண்ட குறைதீர உபதேசித் தார். அன்றியும், தாமும் பெரிய திருவடிமேல் காள மேகம் போன்ற திருமேனியுடன் (திவ்விய மங்கள விக்கிர கத்துடன்) பெரிய பிராட்டியார் பூமிப் பிராட்டியார் சமேதரராகச் சேவை சாதித்தார். இவ்வாறு வழிப்பறி

6. இதனால் பிரபத்தி (சரணாகதி) ஆகி விட்டது.

7. மூன்று பதம் = ஓம்+நமோ+நாராயணாய.

8. எட்டு எழுத்தாய்=ஓம் (1)+நமோ (1+1)+ நாராயணாய (1+1+1+1+1)=8

செய்யப்பட்டவர் ஆண்டாளை மணம் செய்து வந்த திரு வரங்கப் பெருமானே என்று ஆழ்வார்களைப் பற்றிக் கூறும் திவ்விய சூரிசரிதம் குறிப்பிடும்.

இங்ஙனம் யாதொரு காரணமும் பற்றாது கிடைத்த திருமந்திரத்தைப் பெற்றதனாலும், அந்தத் தெய்வத் திரு மேனியைச் சேவித்ததனாலும் முன்பு காலாழியைக் கழற் றின்போது பகவானுடைய திருவடிகளில் வாய் வைத்ததனாலும் கலியனின் அஞ்ஞான இருள் நீங்கியது; தத்துவஞானச் சுடர் பொங்கி எழுந்தது. எம்பெரு மானுடைய சொரூப, ரூப குண, விபூதி சேஷ்டி தங்களையும் அருள்மாரி என்னும்படியான பெரிய பிராட்டியாரின் அருளினாலே கண்டு அநுபவித்தார்; தானும் திருமங்கையாழ்வாராகி விடுகின்றார். இந்த அநுபவத்தின் கனத்தாலே தம்மிடம் குமுறியெழுந்த மட்டற்ற மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிடுவதற்கேற்ற ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, விஸ்தார கவி என்னும் நால்வகைக் கவிகளையும் பாடவல்ல புலமையுடைய வரானார். இந்தப் புலமை ஆற்றலின் விளைவாக,

வாடினேன்; வாடி, வருந்தினேன் மனத்தால்;
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்; கூடி இளையவர் தம்மொடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் திரிந்து
நாடினேன்; நாடி, நான்கண்டு கொண்டேன்
நாரா யணாஎன்னும் நாமம்[9]

[பெருந்துயர் - அளவற்ற துக்கங்கள்; இடும்பை- துன்பம்; இளையவர்-பெண்கள்; உணர்வெனும் பெரும்பதம்-ஞானம்]

9. பெரி-திரு. 1. 1 : 1

என்ற முதல் திருமொழியின் முதல் பாசுரம் தொடங்கிப் பத்துப் பாசுரங்களால் முதல் திருமொழியை நிறைவு செய்கின்றார்.

**திருத்தலப் பயணங்கள்:** அந்தணனாக வந்த எம்பெருமான்மூலம் திருமந்திர உபதேசம் பெற்றதும், திருமந்திரம் பிறந்த வரலாற்றுப் புகழ் பெற்ற பதரியைச் சேவிக்க வேண்டும் என்ற ஆர்வம் கிளர்ந்தெழுகின்றது. உடனே வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை மேற் கொள்ளுகின்றார். இதற்குக் காரணம் என்ன? திருமங்கையாழ்வாரின் வாழ்க்கை வரலாற்றில் இஃது ஓர் முக்கியமான திருப்பம், வாள் வலியால் மாயோனிடம் மந்திரம் (திருமந்திரம்) கொண்ட நிகழ்ச்சி முன்னர்க் குறிப்பிடப் பெற்றதல்லவா? இதனை,

> வாழி, பரகலான்! வாழி, கலிகன்றி
> வாழி குறையலூர் வாலிவேந்தன்—வாழியரோ
> மாயோனை வாள்வழ்யால் மந்திரம்கொள்
> மங்கையர்கோன்
> தூயோன் சுடர்மான வேல்.[10]

என்ற தனியனாலும் அறியலாம். மந்திரம் பெற்ற மகிழ்ச்சியால் ஆழிவாருக்கு அர்த்தபஞ்சக ஞானம்[11]

---

10. பெரிய திருமொழி தனியன்.
11. **அர்த்த பஞ்சகம்:** 1. ஆன்மாவின் இயல்பு, 2. ஈசுவரனது இயல்பு, 3. ஆன்மா அடையும் பயன், 4. அப்பயனை அடைதற்கு உபாயம் (வழி), 5. அப் பயனை அடைதற்குப் பகையாய் உள்ளவைகள். இவை முறையே 1. ஆன்ம சொரூபம், 2. ஈசுவர சொரூபம் 3 பல சொரூபம், 4. உபாய சொரூபம். 5. விரோதி சொரூபம் எனப்படும். இவற்றைப் பற்றி விளக்கம் அடைதலே 'அர்த்தபஞ்சக ஞானம்' எனப்படும்.

ஏற்படுகின்றது. பக்தி வெள்ளம் கரை புரண்டோடு கின்றது. பாசுரங்கள் பெருக்கெடுக்கின்றன. திருமந்திரப் பொருளின் எல்லை நிலமான திருத்தலங்களில் புக்கு அநுப விக்க இழிகின்றார். எம்பெருமான் 'சர்வசுவாமி' என்பதும் 'சர்வ சுலபன்' என்பதும் திருமந்திரத்தின் தேர்ந்த பொருளாகும். அடியவர்கள் இந்த உடம்புடன் அடிமை செய்து மகிழும் படிக்கும் பாங்காக எம்பெரு மான் பல இடங்களிலும் கோயில் கொண்டு தன்னுடைய சுவாமித்துவத்தையும் சௌலப்பியத்தையும் விளங்கக் காட்டிக்கொண்டு நிற்கின்றான். ஆகவே, திவ்விய தேசங்கள் — திருத்தலங்கள் — திருமந்திரப் பொருளுக்கு எல்லை நிலமாக அமைகின்றன. இத்தகைய திவ்விய தேசங்களை மற்றுமுள்ள ஆழ்வார்கள் அநுபவித்தார்க ளெனினும் திவ்வியதேச அநுபவமே திருத்தலப் பயண மாகக் கொண்டவர் இந்த ஆழ்வார் ஒருவரேயாவர். 86 திருத்தலங்களைச் சேவித்த பெருமை இவருக்கு உண்டு.

வதரியை நோக்கிச் சென்ற இந்த ஆழ்வார் இமய மலையிலுள்ள திருப்பிரிதி, வதரி, வதரி காச்சிரமம், சாளக் கிராமம், ஆகியவற்றை அநுபவித்துவிட்டு, நைமிசாரணி யம், வட மதுரை, அயோத்தி, பிருந்தாவனம், ஆயர்பாடி, வண்துவராபதி, சிங்கவேழ் குன்றம் ஆகியவற்றை மங் களாசாசனம் செய்கின்றார். இறுதியாக ஈரத்தமிழ் நடை யதடுவதற்கு எல்லை நிலமான திருவேங்கடத்தைச் சேவிக் கின்றார். திருப்பாற்கடலையும் பரமபதத்தையும் மான சீகமாகக் கண்டு அநுபவித்து மங்களாசாசனம் செய்து வடநாட்டுத் திருத்தலப் பயணத்தைத் தலைக்கட்டுகின் றார்.

திருவேங்கடத்திலிருந்து தொண்டை நாட்டுத் திருப்ப திகளை அநுபவிக்கத் திருவுள்ளம் கொண்டு திரு எவ்வு ளூர் (திருவள்ளூர்) திருக்கடிகை (சோழசிங்கபுரம்), திரு

நின்றவூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல் மல்லை, திரு இடஎந்தை, திருக்கச்சியிலுள்ள பதினான்கு திவ்விய தேசங்கள், திருப்புட்குழி ஆகிய தலங்களையெல்லாம் சேவித்து மகங்களாசாசனம் செய்து தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தை நிறைவு செய்கின்றார்.

அடுத்து, நடுநாட்டுத் திருத்தலங்களாகிய திருக்கோவலூர், திருவயிந்திரபுரம் ஆகிய திருப்பதிகளைச் சேவித்து மங்களாசாசனம் செய்கின்றார்.

சோழநாட்டுத் திருப்பதிகளையும் சேவிக்கத் திருவுள்ளம் கொண்ட ஆழ்வார் தில்லைச் திருச்சித்திர கூடம், காழிச் சீராமவிண்ணகரம், திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்று, இந்தளூர், தலைச்சங்க நாண்மதியம், வெள்ளியங்குடி, புள்ளம் பூதங்குடி, திருக் கூடலூர், திருவெள்ளறை, திருவரங்கம் கரம்பனூர் (உத்தமர் கோயில்), திருப்பேர் நகர் (அப்பக் குடத்தான் சந்நிதி), கோழி (உறையூர்), நந்திபுரவிண்ணகரம், திருவிண்ணகர் (ஒப்பிலியப்பன் சந்நிதி), திருக்குடந்தை, தஞ்சை மாமணிக் கோயில், கண்டியூர், திருநறையூர் (நாச்சியார் கோயில்), திருச்சேறை, திருவழுந்தூர், சிறுபுலியூர் சலசயனம், திருக்கண்ண மங்கை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருநாகை ஆகிய திருப்பதிகளைக் சேவித்துச் சோழ நாட்டுத் திருத்தலப் பயணத்தை நிறைவு செய்கின்றார்.

அடுத்து, பாண்டிநாட்டிற்கு வருகின்றார். திருமெய்யம் தொடங்கி, திருப்புல்லாணி, திருமாலிருஞ்சோலை (அழகர் கோயில்), திருக்கோட்டியூர், மதுரைக் கூடல் (தென் மதுரை), திருமோகூர், திருத்தண்கால் (சிவகாசிக் கருகிலுள்ளது), திருக்குறுங்குடி ஆகிய திவ்விய தேசங்களையெல்லாம் சேவித்து அவற்றை மங்களாசாசனம் செய்கின்றார்.

அடுத்து மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருநாவாய், திருமூழிக்களம் ஆகியவற்றைச் சேவித்துத் தம் திருத்தலப் பயணத்தைத் தலைக்கட்டுகின்றார். இங்ஙனமாக இந்த ஆழ்வார் 108 திவ்விய தேசங்களுள் 22 போக, மிகுந்தவை களை (86) மங்களாசாசனம் செய்தருளுகின்றார்.

**அருளிச் செயல்கள்:** திருமந்திர அநுபவமும் திருத் தலப் பயண அநுபவமும் பெற்ற இந்த ஆழ்வார் தமக் குண்டான பெருங்களிப்பால் ஆறு திவ்வியப் பிரபந்தங் களை அருளிச் செய்துள்ளார். அவை : 1. **பெரிய திருமொழி**, 2. **திருக்குறுந்தாண்டகம்**, 3. **திருநெடுந் தாண்டகம்**, 4. **திருவெழுக் கூற்றிருக்கை**, 5. **சிறிய திருமடல்**, 6. **பெரிய திருமடல்** என்பவையாகும். நம்மாழ் வார் அருளிச் செய்த நான்கு திருமறைகளின் சாரமாகத் திகழும் **திருவிருத்தம்**, **திருவாசிரியம்**, **பெரியதிருவந்தாதி**, **திருவாய்மொழி** என்ற நான்கு பிரபந்தங்களுக்கு ஆறு அங்கமாக இந்தப் பிரபந்தங்களை அமைந்தனவாகக் கொள்ளப்படும்.

மாறன் பணித்த
தமிழ் மறைக்கு மங்கையர் கோன
ஆறங்கம் கூற
அவதரித்த[12]

என்ற மணவாள மாமுனிகளின் உபதேச ரத்தின மாலைப் பாசுரத் தொடரால் இதனை அறியலாம். இங்கு எண்கள் ஒற்றுமையேயன்றிப் பொருள் ஒற்றுமை இல்லை என்பதை நாம் உளம் கொள்ள வேண்டும்.

**இறுவாய்:** திருமங்கையாழ்வார் மிகவும் ஈடுபாடு கொண்ட எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பி. இந்த

12. உபதேச ரத்தினமாலை-9

நம்பியின் திருவருளால்தான் காரியாருக்கும் உடைய நங்கையாருக்கும் திருக்குமாரராய் அவதரித்தார் நம்மாழ்வார். அவருக்குப் பிறப்பை நல்கி நமக்குத் தேனும் பாலும் கன்னலும் அமுதும் கலந்த திருவாய்மொழியைக் கிடைக்கச் செய்தார். இந்த நம்பி எழுந்தருளியிருக்கும் திருக்குறுங்குடியில்தான் திருமங்கையாழ்வார் தம் துணைவி குமுதவல்லியாரோடு தம் இறுதிக் காலத்தைக் கழிக்கின்றார். பரமவிரக்தராய் சிலகாலம் நம்பியின் வடிவழகைக் கண்டு அநுபவித்துக் கொண்டிருந்து அங்கேயே திரு நாட்டுக்கு எழுந்தருளினார்.

கலந்ததிருக் கார்த்திகையில்
கார்த்திகை வந்தோன் வாழியே!
காசினியில் குறையலூர்க்
காவலோன் வாழியே!
நலந்திகழா யிரத்தெண்பத்து
நாலுரைத்தான் வாழியே!
நாலைந்தும் ஆறைந்தும்
நமக்குரைத்தான் வாழியே!
இலங்கெழுகூற் றிருக்கையிரு
மடல் தந்தான் வாழியே!
இம்மூன்றில் இருநூற்றிருபத்
தேழீந்தான் வாழியே!
வலந்திகழும் குமுதவல்லி
மணவாளன் வாழியே!
வாட்கலியன் பரகாலன்
மங்கையர்கோன் வாழியே! [13]

13. வாழித் திருநாமம்-9

# 2. திருமந்திரத்தின் வரலாறு

**சே**தநர்கள் உய்வதற்குச் சாதனமான இரகசியங்கள் மூன்று. அவை: **திருமந்திரம், துவயம், சரமசுலோகம்** என்பவை. இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் பெருமை பெற்று விளங்கும். திருமந்திரம் எல்லா மந்திரங்களிலும் சிறந்து விளங்குவது; எல்லா வேதங்களின் சாரமானது: தீங்குகள் அனைத்தையும் போக்க வல்லது; எல்லாப் பலன்களையும் நல்க வல்லது; எல்லா உபாயங்களையும் தலைக்கட்டி வைக்க வல்ல ஒரு சாதனமாக இருப்பது. **சேதநம், அசேதநம், ஈசுவரன்** ஆகிய தத்துவங்களை வெளியிட வல்லது; வேறு மந்திரங்களின் உதவியின்றி எல்லாப் பலன்களையும் அளிக்க வல்லது; எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவானது. மாமுனிவர்களும் ஆழ்வார்களும் இந்த மந்திரத்தையே மிக விரும்பி இதன் பெருமையை அளவிலாது புகழ்ந்து பேசியுள்ளனர்.

எம்பெருமானிடம் கலியனால் ஆயுதப்பிரசவம் போல் வலிந்து பெறப்பட்டது இம்மந்திரம். ஆயுதப் பிரசவத்தில் வெளியான குழந்தையை மருத்துவரும் பிறரும் பாதுகாப்புடன் வளர்க்க வேண்டியவர்களாகின்றனர். இங்கு ஆயுதத்தைக் காட்டிப் பெறப்பட்ட மந்திரம் அனைவரையும் காப்பாற்ற வல்லது. இங்ஙனம் பெருமை பெற்று விளங்கும் திருமந்திரம் எட்டு எழுத்துகள் கொண்டதாகும். உபநிடதம் இந்த மந்திரத்தின்

எழுத்துகளைக் கணக்கிட்டு இந்த எட்டு எழுத்துகளும் ஸ்ரீமந் நாராயணனைக் காட்டக் கூடியதென்று கூறி இதனை ஓதுபவரது பெருமையைப் பரக்கப் பேசியுள்ளது.

சமுசாரிகள் பகவானுக்கு அடிமைப் பட்டிருத்தலையே இயல்பாகப் பெற்றவர்கள் என்று சாத்திரங்கள் கூறும். இது 'சேஷப்பட்டிருத்தல்'[1] என்று சொல்லப் பெறும். இந்த இயல்பை—நிலையை—எப்படியோ இவர்கள் மறந்துவிடுகின்றனர். ஒரு காரணமும் இன்றியே ஆட்கொள்பவனாகிய பகவானுடைய இத்தன்மையையும் மறந்து விடுகின்றனர். பகவானுடைய இத்தன்மையினால் அவனைச் சாத்திரங்கள் 'நிருபாதிக சேஷி'[2] என்று குறிப்பிடும். இங்ஙனம் பகவானுடைய இத்தன்மையினை மறந்து விட்டதனால் எம்பெருமானுக்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையாகிய கைங்கரியத்தைச்[3] (அடிமைத் தொழிலை) இழந்தனர். இந்த கைங்கரியத்தைச் சாத்திரம் 'புருஷார்த்தம்'[4] என்று குறிப்பிடும். 'ஈசுவரனுடைய தொண்டிற்கெனவே தோன்றிய நாம் எம்பெருமானுக்குச் செய்ய வேண்டிய கைங்கரியத்தை இழந்து விட்டோமே!' என்ற மன வருத்தம் சிறிதுமின்றியே சமுசாரப் பெருங்கடலில் விழுந்து பல்வேறு துன்பங்களால் உழன்று கொண்டிருந்தனர். இக்கூறிய துன்பங்கள் 'ஆதியாத்மிகம்',

1. சேஷம்—அடிமை
2. நிருபாதிக-ஒரு காரணமுமின்றி; சேஷி— தலைவன் சேஷன்—அடிமை.
3. கிங்கரன்—வேலையாள் (Servant) அவன் செய்யும் தொழில் கைங்கரியம்.
4. புருஷன்—ஆன்மா; அர்த்தம்—பொருள்; ஆன்மா அடைய வேண்டிய பொருள்; அதாவது கைங்கரியம்.

'ஆதிபௌதிகம்' என்றும் 'ஆதிதைவிகம்' என்றும் மூன்று வகையாகப் பிரித்துப் பேசப்பெறும். ஆதியாத்மிகம் என்பது, தன் உடலையும் மனத்தையும்பற்றிவரும் துன்பங்கள். இது 'சரீர ஆதியாத்மிகம்' 'மன ஆதியாத்மிகம்' எனப்படும். முன்னது உடலைப் பற்றிக்கொண்டு வரும் தலைவலி, நெஞ்சுவலி, காய்ச்சல், பெருநோய், காசநோய் முதலிய பிணிகளாகும். பின்னது காமம், குரோதம், பொறாமை முதலிய வேண்டப் பெறாத பண்புகளாகும். 'ஆதிபௌதிகம்' என்பது, பிசாசம், கொடிய விலங்குகள், மனிதர், இராக்கதர் முதலியவர்களால் நேரிடும் துன்பங்களாகும். 'ஆதிதைவிகம்' என்பது, காற்று, மழை, வெயில், இடி, மின்னல், நிலநடுக்கம் முதலியவற்றால் தெய்வசங்கற்பமாய் உண்டாகும் பேரிடர்கள் ஆகும். இவ்வகைத் துன்பங்கட்குக் காரணம் என்ன? 'அர்த்த பஞ்சக ஞானம்'[5] இன்மையே என்று சாத்திரங்கள் சாற்றும்.

இங்ஙனம் சேதநர்கள்[6]—நாம்—நம்முடைய வினைகளால் பிறப்பு-இறப்பு என்னும் சுழிகளில் சிக்கித் தடுமாறித் தம் காலத்தைப் பயனற்ற வழிகளில் கழித்தலைக் காணும் அருட்பெருங்கடலான ஈசுவரனால் தாங்க முடியவில்லை. '**கருணாநிதி**' என்ற பெயர் தனக்குப் பொருந்த வேண்டுமே என்ற கவலை கொள்ளுகின்றான். எல்லா உயிர்களோடும் 'இரட்சக—இரட்சிய சம்பந்தம்'[7] உடைய எம்பெருமான் எப்படி வாளா இருக்க முடியும்? சேதநர்கள் தங்களை அறிந்து கொள்ளவும், பகவானாகிய தன்னை

5. இயல்-1. அடிக்குறிப்பு-11 காண்க.
6. சேதநர்கள்—அறிவுடைய ஆன்மாக்கள்.
7. இதனை 'ஈச-ஈசத்தவ்ய சம்பந்தம்' என்றும் சாத்திரங்கள் குறிப்பிடும்.

அறிந்து கொள்ளவும் வேண்டிய அறிவினை நல்க வழி வகுக்க எண்ணுகின்றான். இந்த அறிவைப் பெற்றால் (பகவானாகிய) ஏரமப் புணையைக் கொண்டு தங்கள் பிறவி யாகிய பெருங்கடலைக் கடந்து வீடுபேறு என்னும் மறு கரையை அடைய முடியும் என்று திருவுள்ளம் கொள்ளு கின்றான். தானே சீடனாகவும் ஆசாரியனாகவும் வடிவம் கொண்டு பதரிகாச்சிரமத்தில்[9] அனாதியானதும், அர்த்த பஞ்சகத்தைச் சுருக்கமாகத் தெரிவிப்பதுமான திருமந்தி ரத்தை, அஃதாவது 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரத்தைவெளியிட்டருளினான். இதனை முமுட்சுப்படி,

> "சம்சாரிகள் தங்களையும் ஈசுவரனையும் மறந்து, ஈசுவர கைங்கரியத்தையும் இழந்து, இழந்தோம் என்ற இழவு மின்றிக்கே, சம்சார மாகிய பெருங்கடலிலே, விழுந்து நோவுபட, ஈசுவரன் தன் கிருபையாலே இவர்கள் தன்னை யறிந்து கரைமரஞ்சேரும்படி, தானே சிஷ்யனு மாய் ஆசாரியனுமாய் நின்று, திருமந்திரத்தை வெளியிட்டருளினான்"[10]

என்று பேசும்.

குருவினுடைய திருப்பெயர் **நாராயணன்**. சீடனுடைய திருப்பெயர் **நரன்**. இவர்தம் பிறப்பைப்பற்றியும் அறிந்து கொள்வது இன்றியமையாதது. சத்தியயுகத்தில் பதரி காச்சிரமத்தில் **தர்மதேவனுக்கும்** தட்சப் பிரஜாபதியின் மகளாகிய **மூர்த்திதேவிக்கும்** நரன், நாராயணன் என்று

9. இமயமலையிலிள்ள ஒரு திருப்பதி.
10. முமுட்சு-5

இருவர் பிறந்தனர்.[11] இவர்கள் இருவரும் திருமாலின் அவதாரங்கள். இவர்தம் குழந்தைப் பருவம் நைமிசாரணியத்தில் கழிந்தது.[12] தவவாழ்க்கை கந்தமாதன பருவதத்தில் தொடங்கியது. பின்னர் தேவர்கள், முனிவர்கள், மக்கள் இவர்கட்குக் குரு-சீட முறையை நன்கு விளங்கும் பொருட்டுப் பதரிகாச்சிரமத்திற்கு வருகின்றனர். இங்குத் தான் நாராயணன் நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசித் தருளினான். இவர்கள் துவாபர யுகத்தில் கண்ணனாகவும் பார்த்தனாகவும் பிறக்கின்றனர். பகவத்கீதை என்னும் பக்திக் கிரந்தம் பிறப்பதற்குக் காரணமாகவும் அமைகின் றனர் இவர்களைப் பற்றி இந்த ஆழ்வார்,

> இந்திரன் சிறுவன்
> தேர்முன் நின் றானை[13]

என்றும்,

> பார்ஏறு பெரும்பாரம் தீரப் பண்டு
> பாரதத்துத் தூது இயக்கிப் பார்த்தன் செல்வத்
> தேர்ஏறு சாரதியாய் எதிர்ந்தார் சேனை
> செருக்களத்துத் திறல் அழியச் செற்றான்
> தன்னை[14]

என்றும் குறிப்பிட்டு மகிழ்வர்.

11. இவர்களே தூவாபர யுகத்தின் இறுதியில் கிருட்டிணனாகவும் அருச்சுனனாகவும் அவதரித்தனர் என்ற கோட்பாடு ஒன்றும் உண்டு. பரமான் மாவுக்கும் சீவான்மாவுக்கும் இடையிலுள்ள தொடர்பை இக்கோட்பாடு விளக்குகின்றது.
12. அத்தத் திருப்பதி கிழக்கிந்திய இருப்பூர்தி வழியில் பலமு-சீதாப்பூர் கிளைபாதையில் உள்ளது; நிலையத்திலிருந்து ஒன்றரை கி மீ. தொலைவிலுள்ளது.
13. பெரி. திரு. 2. 3 : 6
14. ஷை. 2. 10 : 8

இவ்விடத்தில் பதரிகாச்சிரமத்தைப்பற்றிச் சிறிது கூறுவது பொருத்தமாகின்றது. பதரி இமயமலையிலுள்ள ஒரு திருத்தலம். இது வடமொழியில் இலந்தைமரத்தின் பெயராகும். அம்மரங்கள் அடர்ந்துகிடக்கும் இடம் வதரி. வதரிநான் எழுந்தருளியிருக்கும் திருமலை முழுவதும் வதரியாகும். அவன் எழுந்தருளியிருக்கும் தலம் வதரி யாச்சிரமமாகும். 'திருவதரி', 'திருவதரியாச்சிரமம்' ஆகிய இந்த இரண்டும் பற்றித் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற இரண்டு திருமொழி கள் பெரிங் திருமொழியில் உள்ளன.[15] இலந்தைப்பழம் பெரிய பிராட்டியாரின் திருவுகப்புக்குரியது. திருக் கோயில் முழுவதையும் இருள் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தைமரம் உள்ள தென்றும், கலியுகத்தில் அது மக்கட்குப் புலனாகாது என்றும் கூறப்பெறுகின்றது. இந்த மரத்தின் அடியில்தான் **வதரி-நாராயணன்** தவசி வடிவில் இருந்து நரனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்த தாக வரலாறு. இதுவே இன்றைய வதரி-நாராயணனின் திருக்கோயிலாகத் திகழ்கின்றது.[16] இந்த வதரியைத் திருமங்கையாழ்வார் 'பாரோர் புகழும் வதரி[17] என்று போற்றுகின்றார்.

எம்பெருமான் ஆசாரியனாய் நின்றது போதாதோ? சிஷ்யனாய் நின்றது எதன் பொருட்டு? என்ற ஐயம் எழு தல் இயற்கை. இதனையும் விளக்குதல் இன்றியமையாத தாகின்றது. சாத்திர முறைப்படி உபதேசிக்கும் ஆசாரி யனைச் சென்றடையும் சீடனிடம் சில இலக்கணங்கள்—

15. பெரி. திரு. 1.3; 1.4.
16 இந்த ஆசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** (இரண்டாம் பதிப்பு) என்ற நூலின் அட்டைப் படம் இந்த நிலைகளைக் காட்டுகின்றது
17. சிறிய திருமடல் - கண்ணி-17

நற் பண்புகள்—அமைந்திருத்தல் இன்றியமையாததாகும். இந்த இலக்கணங்களை உலகத்தாருக்கு அறிவிக்கும் பொருட்டு—செயல்கள் மூலம் அறிவிக்கும் பொருட்டு (Learning by Doing) — எம்பெருமான் சீடனாகவும் நின்றான் என்பதை உணர்தல் வேண்டும். இம்முறை பலர் பின்பற்றுவதற்கு வழியாகவும் அமையும்.

> ''சிஷ்யனாய் நின்றது சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டார் அறியாமையாலே அத்தை அறிவிக்கைக்காக'[18]

என்று இதனைச் சுருக்கமாக விளக்கும் முமுட்சுப்படி. இது மேனாட்டுக் கல்விமுறையில் குறிப்பிடப் பெறும் பல புதுமுறைகளை ஒத்திருக்கும் என்று கூறலாம்.

நன்னூலில் கூறப்பெறும் மாணக்கர்-ஆசிரியர் இலக்கணங்கள் பெரும்பாலும் சமயம்சாராக் கல்விக்குப் பொருந்துவனவாகும். சமயக்கல்வியில் ஈடுபடும் சீடனிடம் சாத்திர நம்பிக்கை, அறங்களை மேற்கொள்ளும் இயல்பு, திருமாலிடம் பக்தி, ஆசாரியனிடம் அளவற்ற விசுவாசம், ஆசாரியர் மனம் உகக்கும் வண்ணம் செயலாற்றும் சாதுர்யம், ஆசாரியருக்குப் பணிவிடை செய்வதில் விருப்பு, தன் உடல் பொருள் ஆவி அறிவு குணங்கள் முதலியவற்றை ஆசாரியனுக்கே உரிமையாக்கும் தன்மை, புலனடக்கம் முதலிய பண்புகள் அமைந்திருத்தல் இன்றியமையாதது

திருமந்திரத்தைப் பற்றியே இந்த ஆழ்வார் தமது பாசுரங்களில் மூன்று இடங்களில் பரக்கப் பேசுகின்றார். அவற்றையும் ஈண்டுக் காட்டுவது மிகவும் பொருத்தமுடைத்தாகும்.

---

18. முமுட்சு-6

**முதல் பத்து-முதல் திருமொழியில்:** எம்பெருமானிடம் எட்டெழுத்து மந்திர உபதேசம் பெற்றவுடன் தாம் எல்லாவற்றையும் பெற்றுவிட்டதாக மகிழ்ச்சி பொங்க 'நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று ஒருமுறைக்கு ஒன்பது முறை கூறி தமது பெறற்கரிய பேற்றை வெளியிடுகின்றார்.

ஆன்மவர்க்கங்களுக்கெல்லாம் உய்வதற்கு ஏதுவான பொருள் அவன் கடைக்கண் நோக்கு; அவனது திருவருள். அதைத்தான் 'உய்வதோர்ப் பொருள்' என்கின்றார். 'ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' (67) என்று பொய்கையாழ்வார் கூறுவதுபோல் கலியனின் ஞானம் எம்பெருமான் விஷயமாகக் கொண்டது. 'கோல் தேடி யோடும் கொழுந்ததே போன்றதே, மால் தேடியோடும் மனம்' (27) என்று பூதத்தாழ்வார் மொழிவது போல் ''அறிவு எம்பெருமானை நாடியது நல்லறிவு என்ற ஒரு சிறந்த பதவியிலே அடிவைத்து, அந்த விவேகத்தாலே சீமந் நாராயண நாமமே நமக்குத் தஞ்சம் என்று அறுதியிட்டது. நானும் அதனைக் கடைப் பிடித்தேன்'' என் கின்றார் (1)

''இதுகாறும் நஞ்சானவற்றை அமுதமாக மயங்கிக் கிடந்த நிலை நீங்கி உண்மையில் அமுதமாகவுள்ளதை சேவிக்கப் பெற்றேன்.'' என்கின்றார். அதாவது 'ஆராவமுதப் பெருமானைத் திருக்குடந்தையில் கண்டு தொழுதேன்; பொருளற்றவற்றைப் புகழ்ந்து பேசின வாயாலே திருமந்திரத்தை அநுசந்தித்து உண்மையான இயல்பினை அடைந்தேன்'' என்கின்றார்; 'தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்' என்ற தொடர், பெருமாளும் பிராட்டியும் சேர்ந்திருக்கும் நிலையைக் குறிப்பிடுவதாகக் கொள்ளல் வேண்டும். தொடக்கத்தில் திருக்குடந்தையைப் பேசி, சரமப் பிரபந்தமாகிய திருநெடுந்தாண்டகத்தின்

இறுதியிலும் 'தண்குடந்தைக் கிடந்த மாலை நெடியானை அடிநாயேன் நினைந்திட்டேனே' (தி. நெ. தா. 29) பேசு வதால் இந்த ஆழ்வார்க்கு மற்றைத் திருப்பதிகளெல்லா வற்றினும் திருக்குடந்தையின்மீதுள்ள அன்பு அளவற்றது என்பதை அறிய முடிகின்றது (3).

ஞானத்தின் திருவுருவாகிய வராகப் பெருமானின் திரு வருளால் தான் உய்வதற்கு உரிய நாராயண நாமத்தை உச்சரிக்க வழி ஏற்பட்டது என்று பேசுகின்றார் (4).

''எம்பெருமான் கருணையைத் திண்ணியதாகப் பெற்ற தனால் நல்லது, தீயது என்பவற்றை ஆராய்ந்துணரும் ஞானம் பெற்றேன். 'செல்கதிக்கு' அமைந்தேன். இப் போது நான் நாராயண நாமத்தை அநுசந்திக்க வேண்டும் என்று நினைக்கும் போதே எனது இதயம் நீர்ப்பண்ட மாக உருகுகின்றது; அத்திருநாமத்தை வாய்விட்டு நவிற் றத் தொடங்கினால் குரல் தழுதழுத்துப் போகின்றது; ஆனந்தக் கண்ணீர் உடம்பெங்கும் முத்து மாலையிட்டாற் போல் பெருகுகின்றது. இந்நிலையில் இரவு பகலும் நாராயண நாமத்தையே கூறி நிற்கின்றேன்'' என் கின்றார் (5).

'அடியேனுக்குப் பல உபகாரங்கள் செய்தவனும், அடியே னுக்குத் தந்தையும், அடியேனுக்கு எல்லா உறவு முறையும் பகைவர்களைப் போக்கி அடியேனை ஆண்டவனும், அடி யேனின் வாழ்க்கையில் எல்லாமாய் இருப்பவனும், சங்கல் பத்தாலும் சரமாரி பொழிவதாலும் இராட்சதப் பூண்டு களைக் கிழங்கெடுத்தவனுமான சர்வசுவாமி எழுந்தருளி யிருக்கும் பரம போக்கியமான தஞ்சை மாமணிக் கோயி லைத் தொழுது 'எல்லாவித உறவுகளும் அவனே' என்ற பொருளுக்கு வாசகமான நாராயண நாமத்தைக் காணப் பெற்றேன்' என்கின்றார் (6)

நூல்களைக் கற்றுக் கவிபாடும் கவிஞர்களை நோக்கி, ''ஐயோ, நீங்கள் வாக்கு படைத்ததற்கு இதுதானா பயன்? கஞ்சப் பிரபுக்களைக் கற்பகத் தரு என்றும், திண்ணையில் கூட ஒதுங்க இடந்தராமல் துரத்தியடிக்குபவனைச் சர்வ இரட்சகன் என்றும் கூறி உங்கள் சொற்களை எச்சிலாக் கிக் கொள்வது தானோ நீங்கள் கற்ற கல்விக்குப் பயன்? திருக்குடந்தைப் பெருமானை வாயாரப் புகழ்ந்து போவீர் களாக. நாராயணா என்னும் நாமமே நான் உங்கட்கு உப தேசிக்கும் பொருள்'' என்கின்றார் (7).

''அடியேன் செல்கதிக்கு உய்யும் நல்வழியை எண்ணி நாராயண நாமத்தை நல்துணையாகப் பற்றினேன்'' என்கின்றார் (8).

''நாராயண நாமத்தை நாவினால் நவிற்றினால் இழிகுலம் நீங்கிப் புதியதொரு நற்குலத்தை நல்கும். நற்குலமுடையோன் என்பதற்குப் பிறப்பு ஒரு காரண மல்ல;[19] பகவத்சம்பந்தமே காரணமாகும். வைணவ இலக்குமியைத் தரும். 'நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் செல்வம்' (பெரு. திரு. 5:9) என்பது குலசேகரர் வாக்கு. எத்தனைப் படுதுயர் இருந்தாலும் அடியார் திறத்தில் தரைமட்டமாக்கிவிடும். வீடு பேற்றையும் தரும். பகவதநு பவம் தருவதற்குப் பாங்கான வலிமை தரும். இவன் அறியாத நல்லவற்றையெல்லாம் நல்கும். 'பால்நினைந் தூட்டும் தாயினும் ஆயின செய்யும்' என்கின்றார்(9).

ஆகவே, தொண்டர்களை நோக்கி,

---

19. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் பொவ்வா' என்பது பொய்யா மொழி.

*துஞ்சும்போது அழைமின்; துயர்வரில் நினைமின்;*
*துயர்இலீர் சொல்லினும் நன்றாம்;*
*நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு*
*நாராய ணாவென்னும் நாமம் (10)*

என் அறிவுறுத்துகின்றார்.

**திருநறையூர் திருமொழி** (6.10): இத் திருமொழியின் திருப்பாசுரங்கள் (திருநாமப் பாசுரம் தவிர) ஒன்பதும் 'நமோ நாரணமே' என்ற மகுடத்தால் முடிவன. நறை யூர் நம்பியின் திருமுன்னர்தான் இந்த ஆழ்வார் திரு விலச்சினை பெற்றதை நாம் அறிவோம். இதனால் நறையூர் நம்பி இந்த ஆழ்வாருக்கு ஆசாரியராகின்றார். ஆசாரியருடைய திருநாமமே அநுசந்தேயமாதலால் திரு மந்திரமாகிய அத் திருநாமத்தைத் தாமும் அநுசந்தித்துப் பிறருக்கும் கற்பிப்பதாகப் பேசுகின்றார்.

இத் திருமொழியில் பலநிலை எம்பெருமான்களை நினைவு கூர்கின்றார். வராக அவதாரத்தில் பூமியைக் காத்தவன்; இராமனாக வந்து இலங்கையைப் பாழ் படுத்தியவன்; மாவலியின் செருக்கை அடக்கினவன்; திருக் குடந்தையில் கண்வளர்பவன் (1). காளியனை அடக்கி யவன்; வராக ரூபியாய் பூமிப்பிராட்டியைக் காத்தவன்; திரிவிக் கிரமாவதாரத்தில் பூமியைச் சுவாதீனப் படுத்திக் கொண்டவன் (2). குவலயா பீடத்தைக் கொன்றவன்; கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதளித்தவன்; அதில் வந்த பெண் அமுதைத் (இலக்குமி) தனதாக்கிக் கொண்ட வன்; யசோதைப் பிரராட்டி பலநாள் சேமித்து வைத் திருந்த வெண்ணெயை வெள்காமல் களவு செய்து உண்டவன் (3) காஞ்சித் திருப்பாடகத்தில் பாண்டவ தூதனாய் வீற்றிருப்பவன்; இராவணனைக் கொன்று வீடணனை ஏற்றுக் கொண்டவன்.

கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாய்க் கவித்து ஆயர்களையும் ஆநிரைகளையும் கல்மாரியினின்றும் காத்தவன்; ஏழு காளைகளை அடக்கிப் பின்னைப் பிராட்டியை மணந்து கொண்டவன்; இலங்கை அரக்கர்களை யமனுக்கு விருந்தாக அளித்தவன் (5). பூமி முதலிய அண்டங்களை இடையறாது நிலைநிற்கச் செய்தவன்; கோவர்த்தனத்தைக் குடையாக ஏந்தினவன் (7, 8). பூமிப் பிராட்டியார், பெரிய பிராட்டியார், பிரமன், இந்திரன், சிவன் மற்றுமுள்ள தேவர்கட்கெல்லாம் நாயகன் (9). இந்த நிலைகளிலெல்லாம் காணப்படும் தேனும் பாலும் அமுதுமாய திருமாலின் திருநாமம் நமோ நாரணமாகும். "நம்முடைய வினைகள் தீர நானும் இத்திருநாமத்தைச் சொன்னேன்; நீங்களும் சொல்லுங்கள்" என்று வைணவர்கள் கூட்டத்தை நோக்கிக் கூறுகின்றார் (6, 9). இங்ஙனம் நாமத்தை நாவினால் நவிற்றி நெஞ்சில் நிறுத்தினால் எல்லாப் பாவங்களினின்றும் விடுபட்டவராவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டுகின்றார் இத்திருமொழியை.

**கண்ணபுரத்துத் திருமொழி** *(8.10)* : எட்டெழுத்து மந்திரமாகிய பெரிய திருமந்திரத்தில் தாம் சாரமாக நம்பிக்கை பண்ணின பொருட்சிறப்பு 'பாகவத சேஷத்துவமே' என்பதை ஒரு பாசுரத்தில் (8. 10:3) வெளியிடுகின்றார்.

மற்றுமோர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு
உற்றிலேன் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை.

என்பதால் 'பாகவதர்கட்கு அடிமை' சொல்லப்பட்டிருத்தலைக் காணலாம்.

# 3. கலியன் வாழ்க்கை - அகச்சான்றுகள்

திருமங்கையாழ்வார் பாசுரங்களிலிருந்து இவர்தம் வாழ்க்கை பற்றிய பல செய்திகள் அறியக் கிடக்கின்றன. அவற்றை ஈண்டுக் காட்டுவோம்.

இவர் ஆலி நாட்டிற்கும், திருமங்கை குறையல் என்ற திருப்பதிகட்கும் தலைவர்.

> கூர்அணிந்த வேல்வலவன் ஆலி நாடன்
> கொடி மாட மங்கையர்கோன் குறையல் ஆளி.
> (4.4:10)
>
> மங்கை வேந்தன் (1.3:10)
>
> ஆலி நாடன் (7.3:10)
>
> புலமங்கைக் குலவேந்தன் (6.6:10)
>
> வயலாளி நன்னாடன்
> மங்கையர் தலைவன் (9. 8:10)

என்ற பெரிய திருமொழிப் பாசுரப் பகுதிகளால் இதனை அறியலாம்.

இவருக்குக் 'கலிகன்றி' முதலிய பல திருநாமங்கள் உண்டு.

அருள்மாரி யரட்டமுக்கி அடையார்சீயம்
......பரகாலன் கலியன் (3. 4:10)

கலிகன்றி (3. 2:10)

என்ற பாசுரப் பகுதிகள் இவற்றைத் தெரிவிக்கின்றன. இவர் பெருஞ்சேனையையுடையவர், யானைப்படை குதிரைப்படைகளையுடையவர், வாட்போரில் பகைவர்களின் உடல் துணிக்க வல்லவர் என்பன போன்ற தம் சேனையைச் சிறப்பித்துப் பேசும் செய்களை,

வாள்திறல், தானை
மங்கையர் தலைன் (10.9:10)

அமரில் கடமா
களியானை வல்லான் (2.4:10)

கடமாருங் கருங்களிறு வல்லான்
வெல்போர்க் கலிகன்றி (2.5:10)

ஆடல் மா வலவன் (5.8:10)

வாமான்தேர்ப் பரகாலன் (7.4:10)

ஆலுமா வலவன் கலிகன்றி (9.10:10)

மருவலர்தம் உடல்துணிய
வாள்வீசும் பரகாலன் (3.9:10)

என்ற பாசுரப் பகுதிகளால் அறியலாம்.

இவரது பெருஞ்செல்வ நிலையும், பெரிய வள்ளண்மையும், அதனால் புலவர் போற்றும் புகழும், பொய் மொழியொன்றில்லாத இவரது மெய்ம்மைத் திறமும், கைம்மாறு கருதாது மாநிலத்தார்க்கு வழங்கும் மாரி போன்ற இவரது பேரருளும், இவரது தமிழ்ப் புலமையும்

இவரது கவிபாடும் திறனும் சில பாசுரங்களால் அறியப் பெறும்.

வெந்திறல் களிறும் வேலை வாய் அமுதும்
 விண்ணொடு விண்ணவர்க்கு அரசும்
இந்திரர்க்கு அருளி எமக்கும் ஈந்தருளும்
 எந்தை (1.4:7)

கற்றார் பரவும் மங்கையர்கோன்
 காரார் புயற்கை கலிகன்றி (5. 1: 10)

பாரணிந்த தொல்புகழான் (4.4:10)

பொய்ம்மொழியொன் றில்லாத
 மெய்ம்மையான் (6.6:10)

அருள்மாரி (3.4: 10; 4.2:10; 8.6:10)

இருந்தமிழ்நூற் புலவன் (1. 7:10)

பாடேன் தொண்டர் தம்மைக்
 கவிப்பனுவல் கொண்டு (7.2:2)

என்ற பாசுரங்களால் இவை அறியப்பெறும்.

மேலும் இவர் மனைவிமக்கள் பலருடையவராகவும், வேட்டையாடுவதில் விருப்பமிக்கிருந்தவராகவும், அரசர் முதலிய பிறர்க்குப் பெரிதும் உழைத்து தம் வாணாளின் ஒரு பகுதியைவீணாகக் கழித்தவராகவும், பரம்பரையாகவே திருமாற்கடியமானவர் குலத்தில் உதித்தவராகவும், தம் தாய் தந்தையர் காலம் சென்ற பின்னர் தாம் அவ்வடிமைத் திறத்தில் முனைந்து நின்றவராகவும், அதனால் தெள்ளியராய்த் திருமால் அருளைச் சிக்கெனப் பெற்றவராகவும், தம் குடும்பத்தை முற்றத் துறந்து திருப்பதிகள்தோறும் பாடித் திருமாலடியாரென்று தேசமறியத் திரிந்தனராகவும், தம்முடைய

வாழ்க்கை வரலாறுகளைத் தம்முடைய திருவாக்கினா லேயே புலப்படுத்திக் கொள்வர்.

காவித்; தடங்கண் மடவார் கேள்வன் (6. 10; 10)

கொங்குமலர் குழலியர்வேள் (3. 4:10)

பிரிந்தேன் பெற்றமக்கள் (6. 2:4)

கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்துநாய் இனத்தொடும் திளைத்திட்டு (1.6;6)

பெரியேன் ஆயின்பின் பிறர்க்கே
உழைத்து ஏழை ஆனேன் (1. 9:7)

எந்தை தந்தை தம்மான்
என்று என்று எமர்ஏழ் அளவும்
வந்து நின்ற தொண்டர் (4.9:9)

எம்தாதை தாதை அப்பால்
எழுவர் பழ அடிமை
வந்தார் (7.2:6)

எம்மானும் எம்மனையும்
என்னைப் பெற்று ஒழிந்ததற்பின்
அம்மானும் அம்மனையும்
அடியேனுக் காகிநின்ற
நன்மான ஒண்சுடரே! (7.2:3)

கள்வனேன் ஆனேன்
படிறுசெய்து இருப்பேன்
கண்டவா திரிதந்தே
னேலும்
தெள்ளியே னானேன்
செல்கதிக்கு அமைந்தேன்
சிக்கெனத் திருவருள்
பெற்றேன் (1.1:5)

பிரிந்தேன் பெற்றமக்கள் பெண்டிர் என்று
இவர்பின் உதவாது அறிந்தேன் (6.2:4)

தேசம் அறிய உமக்கே
ஆளாய்த் திரிகின்றேமுக்கு (4. 9:4)

நறையூர் நம்பிக்கு என்றும்
தொண்டாய்க் கலியன்
ஒலிசெய் தமிழ்மாலை (7.1:10)

என்ற பாசுரப்பகுதிகளால் இவற்றை அறியலாம்.

இவர் திருமால் அடிமையில் சிறந்து விளங்கியவர் என்பதையும் மறந்தும் புறந்தொழா மாண்புடையாளர் என்பதையும் இவரது திருவாக்கினைக் கொண்டே தெளியலாம்.

பேரருளாளன் பெருமை பேசக்
கற்றவன் (9 5:10)

தேசம் அறிய உமக்கே
ஆளாய்த் திரிகின் றோமுக்கு (4. 9:4)

வேம்பின் புழு வேம்புஅன்றி
உண்ணாது அடியேன்
நான்பின்னும் உன்சேவடி
அன்றி நயவேன் (11. 8:7)

மற்றுஓர் தெய்வம் எண்ணேன்;
உன்னைஎன் மனத்து வைத்துப்
பெற்றேன் பெற்றதும் பிறவாமை (6.3:5)

கூறேன் நெஞ்சுதன்னால்
குணங்கொண்டு மற்றோர் தெய்வம்
தேறேன் உன்னையல்லால்
திருவிண் ணகரானே! (6.3:7)

என்ற பாசுரப் பகுதிகளில் இவற்றைக் காணலாம்.

**ஆராவமுதனிடம் ஈடுபாடு:** திருமங்கையாழ்வார் திருக்குடந்தை ஆராவமுதனிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டவர் என்பதை அவர்தம் பாசுரங்களால் அறிய முடிகின்றது. மறைந்துபோன திவ்வியப் பிரபந்தம் வெளிவருவதற்குத் திறவுகோலைத் தந்தவரல்லவா இப் பெருமான்? இந்த ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானைக் 'குடந்தை உத்தமன்'[1] என்கின்றார்; 'தண்குடந்தை நகராளன்'[2] 'தண்குடந்தைக் குடம் ஆடி'[3] என்று பேசுகின்றார்.

> கொந்துலாம் பொழில்சூழ் குடந்தைத்தலைக்
> கோவினை............
> எந்தையை......மறக்கேனே[4].

என்று மனம் உருகப் பாடுகின்றார் திருநறையூர்த் திருமொழியில்.

திருக்குறுந் தாண்டகப் பாசுரம் ஒன்றில்,

> தூவிசேர் அன்னம் மன்னும்
> சூழ்புனல் குடந்தை யானை
> பாவியேன் பாவி யாது
> பாவியேன் ஆயி னேனே[5]
>
> [தூவி-சிறகு; பாவியாது-சிந்தியாமல்]

என்று வருந்துகின்றார். 'பழுதே பலபகலும் போயின' என்று அங்கலாய்க்கின்றார். திருவுக்கும் திருவாகிய அழுந்தையில் மன்னி நின்ற அஞ்சனக் குன்றம் தன்னைச் சேவிக்கும் போதும் இந்த நகர் எம்பெருமான் ஆழ்வார் மனக்கண்முன் காட்சி தருகின்றார்.

---

1. பெரி. திரு 1.5:4
2. ஷை 3.6:5
3. ஷை. 3.6:7
4. ஷை. 7.3:3
5. திருக்குறுந்-14

பேரானை, குடந்தைப்
  பெருமானை இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள்
  மலர்மங்கை நாயகனை
ஆரா இன்னமுதை
  தென்அழுந்தையில் மன்னிநின்ற
காரார் கருமுகிலைக்
  கண்டு களித்தேனே.[6]

என்று எக்களிப்புடன் பாடுவதைக் காணலாம்.

எம்பெருமான் ஆசாரியனாக நின்று திருமந்திர உபதேசம் பெற்ற ஆழ்வார்,

தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்
  சூழ்புனல் குடந்தையே தொழுது என்
நாவினால் உய்ய நான்கண்டு கொண்டேன்
  நாராயணா என்னும் நாமம்[7]

என்று பாடுகின்றார். "ஆரா அமுதப் பெருமானைத் திருக்குடந்தையில் சேவித்தேன்; தீய பொருளைப் பேசின வாயாலே திருமந்திரந்தை அநுசந்தித்து ஸ்வரூபம் பெற்றேன்" என்று மகிழ்கின்றார். "தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்" என்றது பெருமாளும் பிராட்டியாரும் பிரியாது வாழும் சேர்த்தியைச் சொன்னபடியாகும். ஈண்டு அன்னம் என்றது எம்பெருமானை; துணை என்றது பிராட்டியை. நம்முடைய குற்றங்களைப் பொறுப்பிப்பவளும் பொறுப்பிப்பவனும் பிரியாது வாழும் குடந்தை என்பது குறிப்பு.

6. பெரி. திரு. 7.6:9
7. ௸ 1. 1:2

முதல் திருமொழியில் இங்ஙனம் பேசிய ஆழ்வார் இறுதிப் பிரபந்தமாகிய திருநெடுந்தாண்டகத்திலும் "தண்குடந்தைக் கிடந்த மாலை, நெடியானை, அடி நாயேன் நினைந்திட்டேனே"[8] என்று நாயகி நிலையில் திருக்குடந்தைக் கிடந்த மாலைப் பேசித் தலைக்கட்டுவ தால் இப்பெருமான்மீது இந்த ஆழ்வார் கொண்டுள்ள மிக்க ஆதரம் உறுதிப்படுகின்றது. பரகால நாயகி நிலையிலும்,

பெற்றேன்வாய்ச் சொல்இறையும் பேசக் கேளாள்
பேர்பாடி தன்குடந்தை நகரும் பாடி
பொற்றா மரைக்கயம்நீர் ஆடப் போனாள்;
பொருஅற்றாள் என் மகள்உம் பொன்னும் அஃதே.[9]

[பேர்-திருப்பேர் நகர்; பொற்றாமரைக்கயம்-திருக்குளம்; பொரு-ஒப்பு]

என்று தாய்ப் பாசுரமாகப் பேசுவர் ஆழ்வார். இங்கு ஆழ்வார் நாயகி எம்பெருமானையே 'பொற்றாமரைக் கயமாகப்' பேசுகின்றாள் என்பது பொருந்தும். அகப் பொருளில் புணர்ச்சியைச் 'சுனை ஆடல்' என்றும் 'நீராட்டம்' என்று பேசுகின்றோம் அல்லவா? எம்பெருமானுடன் கலவி செய்ய விரும்புவதையே இங்குப் பொற்றாமரைக் கயத்திற்கு நீராடப் போவதாகச் சொல்லுகின்றாள். இங்கு இன்சுவைமிக்க பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானம்: 'மகள்' அணி யரங்கம் ஆடுதுமே என்று ஊரைச் சொன்னாள் (திருநெடுந்-23). தான் 'பொற்றாரைக் கயம்' என்று பெரிய பெருமாளைச் சொல்லுகின்றாள். 'தயரதன் பெற்ற

8. திருநெடுந்-29
9. ஷெ 19

மரகத மணித்தடம்' (திருவாய் 10.1:8) என்றும், 'வாசத் தடம் போல் வருவானே' (ஷை 8.5:1) என்றும் தடாக மாகச் சொல்லக் கடவதிறே' என்பதாம். மேலும் 'உம்பொன்' என்கின்றது அல்லாத ஆழ்வார்களை; 'மத்துறு கடைவெண்ணெய் களவினிலுரவிடை யாப் புண்டு, எத்திறம்! உரலினோடிணைந்திருந் தேங்கிய எளிவே' (ஷை 1.3:1) என்று அவதாரத்தை அநுசந்தித்தே அவர்கள் மோகித்தது; அர்ச்சாவதாரத்திலிறே இவன் மோகிப்பது' என்ற வியாக்கியானப் பகுதியும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

இந்த ஆழ்வார் ஆரா அமுதனிடம் கொண்டிருந்த ஈடுபாடு இவர் அருளிய 'திருஎழுக்கூற்றிருக்கை' என்ற சித் திரக் கவியாலும் தெளிவாகின்றது. சார்ங்கபாணித் திருக் கோயில் ஊருக்கு நடுவே நடுநாயகம்போல் அமைந்துள் ளது. இத்திருக்கோயில் கும்பகோணத்திலுள்ள எல்லாக் கோயில்களையும்விடப் பெரிது. கோபுரமும் அப்படியே மிகப் பெரிதாக அமைந்துள்ளது; பதினொரு மாடங் களைக் கொண்டது. பெருமாள் சந்நிதியும் முன் மண்டபங்களும் ஓர் இரதம் போல் அமைக்கப் பெற்றுள் ளன. மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் சக்கரங்கள், இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகள் உள்ளன. இதனை நோக்கிய திருமங்கையாழ்வாரும் இத்திருக் கோயில் எம்பெருமானைப்பற்றி மங்களாசாசனம் செய் துள்ள 'திருஎழுக்கூற்றிருக்கை' என்ற பிரபந்தம் 'இரத பந்தம்' என்ற சித்திரக் கவியாக அமைத்தனர். இது சரணாகதித் தத்துவத்தை விளக்கும் பாசுரமாகும்.

'குன்றா
மதுமலர்ச் சோலை வண்கொடிப்' படப்பை
வருபுனல் பொன்னி மாமணி அலைக்கும்
செந்நெல் ஒண்கழனித் திகழ்வனம் உடுத்த

கற்போர் புரிசைக் கனக மாளிகை
நிமிர்கொடி விசும்பில் இளம்பிறை துவக்கும்
செல்வம் மல்கு தென்திருக் குடந்தை.
அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க
ஆடுஅரவு அமளியில் அறிதுயில் அமர்ந்த
பரம! நின் அடியினைப் பணிவன்
வரும்இடர் அகல மாற்றோ வினையே[10]

[குன்றா-குறையாத; மது-தேன்; படப்பை-தோட்டம்; பொன்னி-காவிரி; மணி-இரத்தினம்; கழனி-வயல்;கனகம்-பொன்; துவக்கும்-தொடும்; மந்திரம்-வேதம்; அமளி-படுக்கை; வினை-சம்சாரத் துன்பங்கள்; மாற்று-போக்கியருள்க]

என்ற அடிகளில் ஆர்த்தராய்ச் சரணம் புகுவதைக் கண்டு மகிழலாம்.

**ஞானசம்பந்தர் சந்திப்பு:** சோழநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்து வருகையில் சீகாழியில் இவருடைய சீடர்கள் வழக்கப்படி 'நாலுகவிப் பெருமாள் வந்தார்' ''அருள் மாரி வந்தார்'' 'அரட்ட முக்கி வந்தார்' 'ஆலிநாடர் வந்தார்'', 'மங்கை வேந்தர் வந்தார்', 'பரகாலர் வந்தார்' முதலான விருதுகளை ஏந்திக் கொண்டும், இந்த விருதுகளை வாயால் முழங்கிக்கொண்டும் ஆழ்வாருக்கு முன்னே செல்வாராயினர். அப்போது அவ்வூரிலிருந்த திருஞானசம்பந்தப் பெருமானின் அடியார்கள் வந்து 'எங்கள் நாயனார்' இருக்குமிடத்தில் நீங்கள் விருது ஓதிச் செல்லலாகாது' என்று தடுத்து நிறுத்தினர். ஆழ்வாரும், 'உங்கள் நாயனாருடன் தர்க்கிப்போம்' என்று அவ்வூர்த் தாடாளப் பெருமானை எழுந்தருள்வித்துக் கொண்டு சம்பந்தப் பெருமான் இருக்கும் இடம் சென்

10. திருஎழுக்-அடி (37-45).

றார். வாதப்போர் செய்யத் தொடங்குகையில் நாயனார் ஆழ்வாரை நோக்கி "உமது கவித்திறத்தை யான் காணு மாறு முந்துற முன்னம் ஒரு கவிபாடும்" என்று சொல்ல, உடனே ஆழ்வாரும் 'ஒரு குறளாய் இருநிலம்' (பெரி. திரு. 3.4). என்னும் திருமொழியை அருளிச் செய்தார் என்றும், அதில் பல சுருதிப்பாசுரத்தில் தம் விருதுகளெல்லாம் தோன்றும் படி,

செங்கமலத்து அயன் அனைய
மறையோர் காழிச்
சீராம விண்ணகர் என்
செங்கண் மாலை
அங்கமலத் தடவயல்சூழ்
ஆலி நாடன்
அருள்மாரி அரட்டுஅமுக்கி
அடையார் சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள்
மங்கை வேந்தன்
கொற்றவேல் பரகாலன்
கலியன் சொன்ன
சங்கமுகத் தமிழ்மாலை
பத்தும் வல்லார்
தடங்கடல்சூழ் உலகுக்குத்
தலைவர் தாமே.[11]

என்று பாடினார் என்றும்.சம்பந்தரும் இதைக்கேட்டு மறு மொழி சொல்ல இயலாமல் 'உமக்கு இவ்விருதுகள் யாவும் பொருந்தும்' என்று கூறிச் சென்றார் என்றும், அப்படிப் போகும்போது தமது வேலாயுதத்தை இவருக்குக் காணிக் கையாகக் கொடுத்துச் சென்றார் என்றும் குருபரம்பரை யில் ஒரு வரலாறு உண்டு. சைவ இலக்கிய வரலாற்றில்

11. பெரி-திரு. 3.4:10

இது பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. ஆகவே, இஃது ஆராயத்தக்கது. யாரோ ஒருவர் திருமங்கையாழ்வாருக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற குறுகிய நோக்குடன் இட்டுக் கட்டிய வரலாறுபோல் இது தோன்றுகின்றது.

**திருவரங்கரத்தில் திருப்பணி:** நாகப் பட்டினத்திலுள்ள பௌத்தப் பள்ளியொன்றில் இருந்த பொற்சிலையொன்றினைக் களவிற் கைப்பற்றி அதனை உருக்கி விற்றதனால் கிடைத்த பொருளைக் கொண்டு திருவரங்கத்தில் அழகிய மணவாளனுக்கு விமானம், மண்டபம், கோபுரம், மதில் முதலிய கைங்கரியங்களைச் செய்தார் என்பது குருபரம்பரையில் காணும் செய்தி. பரகாலர் தம் பரிவாரத்துடன் நாகப்பட்டினத்தை அடைகின்றார். மிகவும் சிறப்ப வேலைகளமைந்த புத்தவிகாரத்திற்குள் நுழையும் வழிகாணப் படவில்லை. விகாரம் முழுவதும் ஆய்ந்ததில் விகாரத்தின் உச்சியில் ஓர் இயந்திரம் இடைவிடாது சுழன்று கொண்டிருப்பதைக் காண்கின்றார். அதை நிறுத்துவதற்குரிய வழியைச் சிந்திக்கின்றார். பல வாழைத்தண்டுகளைக் கொணர்ந்து சிறுசிறு துண்டுகளாக்கி அச்சக்கரத்தில் இடைவிடாது கொடுத்துவர, அதன் நூல்கள் நடுவில் சிக்கிக் கொண்டதனால் அச்சக்கரப் பொறி அசையாமல் நின்று விடுகின்றது. பின்னர் அவ்வழியாகத் தம் சீடர்களுள் ஒருவரை விகாரத்தினுள் இறங்கச் செய்து அவரால் பொற்சிலையை எடுத்துக்கச் செய்கின்றார்.

சீடர் அதைக் கவரத் தொடங்குகையில் அந்தச் சிலை மந்திர பலத்தால் அவர் கைக்கு அகப்படாமல் அவ்விவகாரம் முழுவதும் ஓடத் தொடங்குகின்றது. புறத்திலிருந்து திருமங்கை மன்னன் தந்த குறிப்பின்படி சீடர் அதனைக் கைப்பற்றி விடுகின்றார். உடனே அதன் ஆற்றல் குன்றி,

ஈயத்தால் ஆகாதோ?
  இரும்பினால் ஆகாதோ?
பூயத்தால் மிக்கதொரு
  பூதத்தா லாகாதோ?
தேயத்தே பித்தளை நற்
  செம்புகளா லாகாதோ?
மாயப்பொன் வேணுமோ
  மதித்துன்னைப் பண்ணுகைக்கே?

என்று அந்தச் சிலை ஊளையிட்டுக் கொண்டு விழுகின்றது. பின்னர் அந்தச் சீடர் அப்பொற்சிலையை எடுத்துக் கொடுக்கத் திருமங்கையாழ்வார் மிக உகந்து அதை வாங்கி பங்கப் படுத்துகின்றார். நாகப் பட்டினத்திலிருந்து இரவோடு இரவாக எடுத்துக்கொண்டு வருகின்றார்.

பொழுது புலரும் சமயத்தில் திருக்கண்ணங்குடி என்னும் திவ்விய தேசத்தை அடைகின்றார். அங்கு உழுது சேறாயிருக்கும் ஒரு வயலில் அச்சிலையைப் புதைத்து வைக்கின்றனர் அவருடன் வந்தவர்கள். அருகிலிருந்த உறங்காப் புளிய மரத்தின் கீழ்த் தங்குகின்றனர். அந்த வயலுக்குரியவன் நாற்று முடிகளை எடுத்துக் கொண்டு நடுவதற்காக வயலுக்கு வருகின்றான். ஆழ்வார் அவனைத் தடுத்து நிறுத்தி ''இங்கு எங்கள் பாட்டன் தேடிய வயல்'' என்று வழக்கிடத் தொடங்குகின்றார். தோலா வழக்கன்தான் பக்கபலமாக இருக்கின்றானே! உழவன் திடுக்கிட்டு எதிர் வழக்கிடுகின்றான். அதற்குப் பரகாலர் ''நாளைக் காலையில் பத்திரம் கொண்டு வருகின்றேன்; இல்லாவிட்டால் நீ உழுது கொள்ளலாம்'' என்று கூற அவனும் அதற்கு ஒப்புக்கொண்டு மீண்டுச் செல்லுகின்றான்.

ஆழ்வார் புதைக்கப் பெற்ற சிலையை இரவோடு இரவாக எடுத்துக்கொண்டு திரு அரங்கம் வருகின்றார். அதனை விற்றுப் பணம் ஆக்குகின்றார்.[12] இந்தப் பணத்தைக் கொண்டு தம் திருப்பணியைத் தொடங்குகின்றார். திருப்பணி செய்து வருகையில் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை சேர்த்துவந்த இடம் நேர்படுகின்றது. அதனை ஒதுக்கி மதிலை அமைக்கின்றார் மங்கை மன்னன்.

**இது பற்றிய ஆய்வு:** திருப்பணி செய்ததை ஒப்புக் கொண்டாலும் நாகை செய்தி ஒப்புக் கொள்வதற்கில்லை.

1. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கடார வேந்தனான ஸ்ரீ மகாவிஜயோத் துங்கவன்மனால் நாகையில் 'சூடாமணி பக்தவிகாரம்' என்ற பௌத்தப் பள்ளி ஒன்று கட்டப் பெற்றதென்றும், அதற்கு முதல் இராசராசன் கி.பி. 1008இல் ஆனைமங்கலம் என்ற சிற்றூர் தானமாக அளிக்கப்பட்டதென்றும் கல்வெட்டுகளால் அறியப் பெறுகின்றன. இச்செய்திகள் ஆழ்வார் 11-ஆம் நூற்றாண்டின் பின்னிருந்தவர் என்று கொள்ள இடந்தருகின்றன. இது பொருந்தாது.

2. இராசராசன் மகன் முதல் இராசேந்தின் கி பி. 1013 முதல் கி.பி. 1245 வரை ஆட்சி செய்தவன். ஆகவே அவன் ஆட்சியில் விகாரம் நன்னிலையில் இருந்தது என்பது தெளிவு. இக்காலத்தே நாதமுனிகளின் திருப்பெயரர் ஆளவந்தார் வதிந்த காலம் என்பர். ஆகவே, முற்கூறிய கொள்கைப்படி கொண்டால் திருமங்கை மன்னன் ஆளவந்தாருக்குப் பின்னிருந்தவர் என்று கொள்ள நேரும். இது முற்றிலும் பொருந்தாததொன்று.

12. இந்த வரலாறு பட்டரின் ஸ்ரீரங்க ராஜஸ்வத்திலும் (சுலோகம்-36) காணப்படுகின்றது.

3. இந்த ஆழ்வார் காலத்திலும் பௌத்த சமணர்கள் சிற்சில இடங்களில் தலைமை பெற்று விளங்கினர் என்பதற்கும் அந்நூற்றாண்டில் ஆண்ட மன்னர்களும் ஒரே சமயச்சார்பின்றிப் பல சமயங்கட்கும் உதவி புரிந்தனர் என்பதற்கும் இலக்கியச் சான்றுகள் உள்ளன. இந்த ஆழ்வாரே தமது திருமாலிருஞ்சோலைப் பதிகத்தில்,

புந்தியில் சமணர் புத்தரென் றிவர்கள்
ஒத்தன பேசவும் உவந்திட்டு
எந்தைஎம் மானார் இமையவர் தலைவர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்[13]

என்று பாடியுள்ளமையே ஒரு சான்றாகின்றது.

இக்காலத்தில் தன்-வரலாறு நூல்கள் தோன்றிவருவது போல் அக்காலத்தில் தோன்றவில்லை. ஆனால் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் கோதைநாச்சியார் போன்ற ஆழ்வார்கள் தம் வரலாறு பற்றிய ஒரு சில செய்திகளைத் தம் அருளிச் செயல்களில் பொதிந்து வைத்திருத்தலைக் காணலாம்.

13. பெரி. திரு. 9-8 : 9

# 4. வடநாட்டுத் திருத்தலப் பயணம்

திருமந்திரம் பெற்றதால் அந்த மந்திரம் தோன்றிய இடமாகிய வதரியைக் கண்டு சேவிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆழ்வார் திருவுள்ளத்தில் கிளர்ந்தெழுகின்றது. இதனை முன்னரும் குறிப் பிட்டோம். வதரியை நோக்கிச் சென்ற ஆழ்வார் முதலில் திருப்பிரிதிக்கு[1] வருகின்றார். பிரிதி எம்பெருமானை வழிபட்டு ஒரு திருமொழியால் (1.2) மங்களாசாசனம் செய்கின்றார். இத்திருமொழியிலுள்ள ஒவ்வொரு பாசுரமும் திருத்தல வருணனையையும் அங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானையும் கூறுகின்றது. அதில் ஒரு பாசுரம்:

---

1. பிரிதி : இத்திருத்தலம் வதரிக்குக் செல்லும் வழியிலுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 3000 அடி உயரத்திலுள்ள இது ஹிரித்துவாரத்திலிருந்து 140 கல் தொலைவிலுள்ளது இது ஜோஸிமடம் - நந்தப் பிரயாகை - என வழங்கப் பெறுகின்றது. இங்குத்தான் அழகாநந்தா, மந்தாகினி என்ற இரண்டு நதிகள் ஒன்று சேர்கின்றன. நந்தர் என்ற மாமன்னர் இங்குப் பல வேள்விகள் இயற்றியதாகவும், அதன் நினைவாகத் தம் பெயரை இட்டதாகவும் சொல்லப்பெறுகின்றது. இந்த இடத்தில் கன்வ முனிவர் இருந்ததாகவும், துஷ்யந்தன்

கரைசெய் மாக்கடல் கிடந்தவன்
 கனைகழல் அமரர்கள் தொழுதேத்த
அரைசெய் மேகலை அவர்மகள்
 அவளோடும் அமர்ந்தநல் இமயத்து
வரைசெய் மாக்களிறு இளவெதிர்
 வளர்முளை அளைமிகுதேன் தோய்த்துப்
பிரச வாரிதன் இளம்பிடிக்கு
 அருள்செய்யும் பிரிதிசென்று அடைநெஞ்சே (5) [2]

[மாக்கடல்-திருப்பாற்கடல்; அரை - இடுப்பு; அவர்மகள்-பெரிய பிராட்டியார். களிறு-ஆண் யானை; வெதிர்-மூங்கில்; பிரசம்-தேன்; பிடி-பெண்யானை]

இஃது ஐந்தாவது பாசுரம்: பாடலின் முதல் இரண்டடிகள் எம்பெருமானையும் பின்னிரண்டடிகள் இயற்கைச் சூழ்நிலையையும் விளக்குவதைக் காணலாம்.

---

சகுந்தலையை இங்குத்தான் திருமணம் புரிந்து கொண்டதாகவும் செவிவழிச் செய்திகள் வழங்கி வருகின்றன. குளிர் காலத்தில் பதரிநாராயணன் திருக்கோயில் மூடப்பெறுங்கால் அங்குள்ள உற்சவர் இங்கு வந்து ஆறு திங்கள் தங்கி வழிபாடுகள் பெறுவர். இங்குள்ள சங்கரமடத்தில் நரசிம்ம சாலிக்கிராமம் உள்ளது; திருத்தலப் பயணிகள் இதனை வழிபடுவர். இங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் திருநாமம்: **பரமபுருடன்**; தாயார் **பரிமளவல்லி** நாச்சியார், பெருமான் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்; புயங்கசயனம். (இந்த ஆசிரியரின் '**வடநாட்டுத் திருப்பதிகள்**-என்ற நூலில் 8-ஆம் கட்டுரை காண்க. பெரி. திரு. 1.2 (பதிகம்).

2. இப்பாசுரத்திலுள்ள காட்சியை பூதத்தார் பாசுரத்திலும் (இரண் திரு. 75), கம்பன் பாடலிலும் (அயோ. சித்திர கூடம்-10) கண்டு மகிழலாம்.

**திருத்தலச் சூழ்நிலை :** இத்தலம் அமைந்துள்ள இடத்தில் சிறு துளிகளையுடைய காளமேகங்கள் அதிர் கின்றன. தோகைகளையுடைய மயில்கள் ஏறமுடியாமல் உன்னதமான மலையுச்சியில் கீழ்வயிறு தழுவும் படியாக ஏறிச் சென்று தோகைகளை விரித்துக் கூத்தாடுகின்றன. (1). மலை போன்ற வடிவினையுடையனவாய், வடிவுக் கேற்ற மிடுக்கையுடையனவாய், மிடுக்குக்கு உரிய சினத்தையுடையனவாய் மதக்களிறுகள் அஞ்சும் படியாக வாள்போன்ற பற்களையுடைய சிங்கங்கள் திரிகின்றன (2). இந்திர மணிமயமான பாறைகளின்மீது வேங்கை மலர்கள் உதிர்ந்து கிடக்கும் அழகிய படுக்கையின்மீது களிறுகள் தம் பிடிகளுடன் கிடந்து உறங்குவதற்குப் பாங்காக வண்டுகள் இன்னிசை பாடுகின்றன (3). பன்றி கள் தலை குனிந்து மாணிக்கப் பாறைகளைப் பிளக்க அதனால் பெயர்ந்த மணிகள் மலையருவிகளால் அடித்து வரப் பெறுகின்றன (4). முகில்வரை எட்டி வளர்ந்த குருக்கத்திப் பூஞ்சோலைகளில் வண்டுகள் தேனினைப் பருக நுழைந்து இசைபாடுகின்றன (5). அசோக மலர்கள் விரியும் போது செந்நிறத்தோடு திகழும் அழகைப் பேதை வண்டுகள் நெருப்பெ்ன மயங்கி அஞ்சுகின்றன (6). மிளகுக்கொடிகள் விண்ணை எட்டும் வேங்கை மரங்களைத் தழுவிப் படர்ந்து நிற்கும் சிறு மலைகளில் வேங்கைவரிப்புலிகள் நடமாடுகின்றன (7). இருள் சூழ்ந்த மலை முழஞ்சுகளில் பெரும்பசியுடன் மலைப் பாம்புகள் பெருமூச்சு விட்டுக் கொண்டுள்ளன (8). கறுத்த மாமுகில்கள் நீரின் கனத்தாலே இயங்க முடியாமல் ஓரிடத்தில் நின்று இடியோசைகளை எழுப்ப அவற்றை யானைகளின் பிளிறல்கள் என மயங்கி மலைப் பாம்புகள் மலைபெயர்ந்தாற்போல் பெயர்ந்து காத்துக் கிடக்கின்றன (10). இது பிரிதி அமைந்திருக்கும் இமயத் தின் சூழ்நிலை.

**பிரிதி எம்பெருமான் :** மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் யார்? வாலியை வானுலகிற்கு அனுப்பியவனும், வானர சேனை கொண்டு சேது அமைந்து இலங்கையை நாசம் செய்தவனுமான இராமன் (1, 2). உடுக்கை இடையையும், சுருண்ட கூந்தலையும், பளிச்சென்று இயங்கும் பற்களையும் உடைய பின்னைப் பிராட்டியின் பொருட்டு ஏழுகாளைகளை அடக்கிய கண்ணன் எழுந்தருளியிருக்கும் இடம் இதுவேயாகும் (3). ஒப்பற்ற வீரனாகிய இரணியனின் மார்பைப் பிளந்த நரசிம்மப் பெருமானும் இங்கு எழுந்தருளியுள்ளான் (4). திருவனந்தாழ்வானின் சயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் பெருமானும் இவனே (5). இவன் திருவடிகளை இமையோர்கள் நான்முகனை முன்னிட்டு ஆயிரம் பெயர்களால் அருச்சிக்கின்றனர். (7,8). இங்ஙனம் அர்ச்சையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆழ்வார் வியூக நிலை எம்பெருமானாகவும், அவதார நிலை எம்பெருமான்களாகவும் கண்டு களிக்கின்றார். எந்த நிலைகளில் பாடிப்பரவினாலும் அங்ஙனம் பாடிப் பரவப் பெறுபவன் பரமபதநாதனே என்பது வைணவக் கொள்கையாகும். இந்த எம்பெருமானை சேவித்த ஆழ்வார் **வதரியை**[3] அடைகின்றார். வதரி மலைக்கு

3. **வதரி:** திருவதரி இமயமலையிலுள்ள ஒரு திவ்விய தேசம். இது கடல் மட்டத்திற்கு 10380 அடி உயரத்தில் உள்ளது. ஹரித்துவாரத்திலிருந்து 202 கல் தொலைவிலுள்ளது. அண்மையில் உத்திரப் பிரதேச அரசு வதரி வரை மலைச்சாலையை அமைத்துள்ளது. ஹரித்துவாரம் (924 அடி உயரம்), ரிஷிகேசம் (1116 அடி உயரம்), அநுமன் சட்டி (8000 அடி உயரம்)- ஆகிய இடங்கள் வழியாக வதரியை அடைய வேண்டும். வதரி (இலந்தைமரம்)யின் அடியில்தான் வதரி நாராயணன் எழுந்தருளியுள்ளான்—தவசி வடிவில் திருவாழி திருச்சங்கு தாங்கிய நிலையில். எம்பெரு

ஒன்றும் (1.3), வதரிகாச்சிரமத்திற்கு ஒன்றுமாக (1. 4) இரண்டு திருமொழிகளால் வதரி நாராயணனை மங்களாசாசனம் செய்துள்ளார் ஆழ்வார்.

**வதரித்திருமலை:** வதரி நாராயணன் உகந்தருளின இடம் வதரித்திருமலை. அதுவும் ஆழ்வாருக்கு உவப்பாகின்றது. 'திருவேங்கடமாமலை, ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே' (திருவாய் 3.3:8) என்று கூறிய நம்மாழ்வாரைப் பின் பற்றி இவரும் மலையையே சேவிக்கின்றார். **'பாரோர் புகழும் வதரி'**[4] என்று சிறிய திருமடலில் மலைக்குப் புகழ்பாடியவர், பெரிய திருமொழி இம்மலைக்குரிய (1.3) பாசுரந்தோறும் 'வதரி வணங்குதுமே' 'வதரி வணங்குதுமே' என்று குறிப்பிடுகின்றார். வதரி இருக்கும் இமய மலைப் பகுதியோ 'கண்டியூர் அரங்கம், மெய்யம், கச்சி பேர் மல்லை'[5] என்னும் திருப்பதிகள் போலன்றி மிக்க சிரமத்துடன அடையக்கூடிய இடமாதலால் உடல் பாங்காக இருக்கும் பொழுதே சென்று சேவிக்க வேண்டும் என்று ஆற்றுப்படுத்துகின்றார். வதரியை 'மது உண் வண்டு பண்கள் பாடும் வதரி' (1.3:2), 'ஆயிரம் நாமம் சொல்லி, வெளிகொள் வண்டு பண்கள் பாடும் வதரி' (3) 'வாளை பாயும் தண் தடம் சூழ் வதரி' (4) என்று மலையின் இயற்கைக் காட்சியில் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றார். 'வண்டு பாடும் தண் துழாயான் வதரி' (5) என்று எம்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள இடம் வதரி

---

மான் **வதரிநாராயணன்:** இருந்த திருக்கோலம், கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார்: **அரவிந்தவல்லி நாச்சியார்:** (பெரி. திரு. 1.3; 1.4 பதிகங்கள். சிறிய திருமடல்(39) (மேலும் விவரங்கட்கு இந்த ஆசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** என்ற நூலில் 6-வது கட்டுரை காண்க).

4. சிறிய திருமடல்-கண்ணி-47

5. திருக்குறுந்-19

என்பதையும் குறிப்பிடுகின்றார். எம்பெருமானையும் 'வைப்பும் நங்கள் வாழ்வும் ஆனான்' (7) என்றும், 'மைத்தசோதி எம் பெருமான்' (6), 'வாசம்மல்கு தண் துழாயான்' (8) என்றும் போற்றிப் புகழ்கின்றார். மாதிரிக்கு இத் திருமொழியில் ஒரு பாசுரத்தைக் காட்டுவோம்.

புலன்கள் நைய மெய்யில் மூத்துப்
போந்திருந் துள்ளம்எள்கி.
கலங்க ஐக்கள் போத உந்திக்
கண்ட பிதற்றாமுன்
அலங்க லாய தண்துழாய்கொண் டாயிர
நாமம் சொல்லி
வலங்கொல் தொண்டர் பாடி யாடும்
வதரி வணங்குதுமே(9).

[புலன்கள் - இந்திரியங்கள்; நைய-சிதிலமாகும்படி; எள்கி-கலங்கி; ஐக்கள்-கோழைகள். கண்ட நெஞ்சில் தோன்றியவை எல்லாம்; அலங்கல்-மாலை; வலங்கொள் தொண்டர்-சிறந்த அடியார்கள்]

என்பது ஒன்பதாவது பாசுரம்.

முதுமைகாரணமாக பல அவல நிலைகள் தோன்றுவதற்கு முன்னர் வதரியை வணங்குமாறு ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார். வதரி நெடுமாலைப் பாடியும், பாட்டுக்குத் தகுதியாக ஆடியும் அநுபவித்தால் நீள் விசும்பு அருளப் பெறுவர் என்று பலனையும் சொல்லுகின்றார். இந்தப் பாசுரங்களில் கிருட்டிணாவதாரத்தில் பேய்ச்சி முலையூடு உயிரை வற்றவாங்கி உண்டதும் (1), காளையாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத்து நின்றது மான தீரச்செயல்கள் அநுசந்திக்கப் பெறுகின்றன, ஆழ்கடலைக் கடைந்து அமுதம் கொண்ட செய்தியும்(6)

குறிப்பிடப் பெறுகின்றது. நர-நாராயணன் எழுந்தருளியிருக்கும் ஆச்சிரமத்தைப்பற்றி ஒரு திருமொழியில்(1.4) பேசும் ஆழ்வார் பாசுரங்கள் தோறும் பொதுவாக ஆச்சிரமம் அமைந்திருக்கும் சூழ்நிலை பற்றியும் அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப்பற்றியும் பேசுகின்றார். இதிலும் மாதிரிக்கு ஒரு பாசுரம் காட்டுவோம்.

வெந்திறல் களிறும் வேலைவாய் அமுதும்
  விண்ணொடு விண்ணவர்க் கரசும்
இந்திரர்க் கருளி எமக்கும்ஈந் தருளும்
  எந்தைஎம் அடிகள்எம் பெருமான்
அந்தரத் தமரர் அடியிணை வணங்க
  ஆயிர முகத்தினால் அருளி
மந்தரத் திழிந்த கங்கையின் கரைமேல்
  வதரியாச் சிரமத்துள் ளானே(7).

[வேலை-கடல்; களிறு-ஐராவதம்! விண்-சுவர்க்கம் விண்ணவர்-தேவர். அந்தரம்-சுவர்க்கம்; அமரர்-தேவர்கள்: மந்தரம்-மந்தரமலை; இழிந்த-பெருகின]

என்பது ஏழாவது பாசுரம்.

**ஆச்சிரமத்தின் சூழ்நிலை:** இந்த ஆச்சிரமம் ஆகாயகங்கைக் கரையிலுள்ளது. தேவர்கள் கற்பக மலர்கள் கொண்டு வந்து சமர்ப்பித்து வணங்கும் இடம் (1); நான்முகனும் ஏனைய தேவர்களும் அடிக்கடி வந்து வழிபடும் இடம் (2); சூரியன் சுற்றிவரும் மேருமலைவரை முட்டி அங்கிருந்து கங்கைநீர் இழிவதும் மாடமாளிகையின் உச்சியில் நாட்டப் பெற்ற தூண்களில் கட்டப் பெற்றுள்ள துணிகள் காற்றில் அசைந்தாடுவதுபோல் தோன்றுவதுமான இடம் (3); இங்குள்ள கங்கை நீர் அப்சரமாதர்களின் சேலைகளும், மாலைகளும் திரட்டிவருவதுடன்

பல்வேறு இரத்தினக்கற்களையும் உருட்டிக் கொண்டு வருவதைக் காணலாம் (4); இங்குத்தான் அண்டத்தைச் சுமக்கும் மேருமலையின் உச்சியிலிருந்து கங்கை இழிகின்றது (5).

கபில முனிவரின் சாபத்தால் நீறாய்க் கிடந்த தம் முன்னோர்களான சகரபுத்திரர்கள் தூய்மையடைவான் வேண்டி பகீரதன் தவம்புரிந்து கங்கையைக் கொணருங்கால், அது பெரியதொரு மலையைப் பிளந்து கொண்டு அங்குள்ள யானைகளை அடித்துக் கொண்டு வருவதைக் காணக் கூடிய இடம் (6); ஒரு முகமாக வந்து இழிந்தால் பெரு விசையோடு வரும் மிடுக்கைக் கடல் பொறாதென்று கருதிய தேவர்களின் பிரார்த்தனைக் கிணங்க அது பல முகமாகப் பெருகி வருவதைக் காணலாம் (7); இந்தக் கங்கையின் வரலாற்றையே விசுவாமித்திரன் இராமலக்குமணர்கட்குச் சொல்லியதாகும் (8)[6]. பகிரதன் கங்கையை அவதரிப்பித்தபோது அது பிரமலோகத்தை ஊடறுத்துக் கொண்டு ஆகாயத்தினின்றும் இழிந்து அங்கிருந்து பூமி நடுங்கும்படியாகப் பிரவகித்துத் தெளிந்த நீரையுடைய கங்கை செல்லும் இடம் (9).

**எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்:** இந்தக் கரையின்மீதுள்ள ஆச்சிரமத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் யாவன்? பூமிப் பிராட்டியின் பொருட்டு வராக அவதாரம் எடுத்தவன்; பெரிய பிராட்டியின் பொருட்டு இராமனாக வந்தவன் (1); மாயமானாக வந்த மாரீசனை வானுலகிற்கு அனுப்பிய மாவீரன் (2); இராமாவதாரத்தில் இலங்கையரசன் இராவணன், அரக்கர்குலம் இவர்கள் யாவரும் ஒழியும்படியாகத் தீரச் செயல்கள் புரிந்

6. கம்ப. பாலகா. அகலிகை 33-61 பாடல்கள்.

தவன் (3); யசோதை வடிவு கொண்டு வந்து தனக்கு நஞ் சூட்டிய முலையைத் தந்த பூதனையை முடித்தவன் (5); நப்பின்னையின் பொருட்டு அசுராவேசமுடைய ஏழு காளைகளை அடக்கியவன் (6); தான் கடல் கடைந்த காலத்தில் கடலினின்றும் வெளிப்பட்ட ஐராவதம், அமிர்தம் ஆகியவற்றை இந்திரனுக்கு ஈந்து தேவர்கட்குத் தலைவனாக இருக்கும் தன்மையையும் நல்கியவன் (7); இப்பெருமானே மாரீசன்மீது வரிசிலை வளைத்துக் கணை தொடுத்தவன்; இரணியனின் மார்பைக் கீண்டவன்; நான்முகக் கடவுள் சிவன்மீது சீறி அவனுக்குக் கொடுத்த வெந்திறல் சாபத்தைத் தவிர்த்தவன் (8). "இத்தகைய எம்பெருமான் தொண்டர்களின் பிறவிப் பிணியைப் போக்கி வீடு பேற்றை அருளுபவன்— 'தொழுதெழு தொண்டர்கள் தமக்கு பிணியொழித்து அமரர் பெரு விசும்'பு அருளும் பேரருளாளன்'; மனமே, அவனே உன்னுடைய உறுதிப் பொருளாகும்" (4) என்று மனத்திற்கு உபதேசம் செய்கின்றார் ஆழ்வார்.

இந்த எம்பெருமானைப்பற்றிய இத் திருப்பாசுரங்களை ஓதுபவர்கள் மண்ணுலகை நெடுநாள் ஆண்டும், பிரமபதத்தை நிர்வகித்தும் அதன் பிறகு நித்திய சூரிகளுடன் ஒருங்கே இருப்பர் (10) என்று பலனையும் பேசித் திருமொழியை முடிக்கின்றார்.

வதரியிலிருந்து ஆழ்வார் சாளக்கிராமத்திற்கு[7] வருகின்றார். ஒருதிருமொழியால் (1, 5) இத் திருத்தலத்து எம்

---

7. **சாளக்கிராமம்:** இத்திருத்தலம் நேபாளத்தில் உள்ளது. காட்டுமாண்டு என்னும் தலைநகருக்கு 60 கல் தொலைவில் மேற்குத்திசையில் உள்ளது; கண்டகி என்னும் நதிக்கரையில் அமைந்துள்ளது. இத் திருத்தலம் பெருஞ்சாலைக்கு 100 கல்

பெருமானை மங்களாசாஸனம் செய்துள்ளார். வழக்கம் போல் பாசுரங்கள் தோறும் திருத்தலத்தின் சூழ்நிலையைக் காட்டுவதுடன் அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கின்றார். ஒவ்வொரு பாசுரமும் 'சாளக்கிராமம்' அடை நெஞ்சே!' என்று நெஞ்சை ஆற்றுப்படுத்தும் பாங்கில் அமைந்துள்ளது.

தாயாய் வந்த பேய் உயிரும்
    தயிரும் விழுதும் உடனுண்ட
வாயான்; தூய வரியுருவில்
    குறளாய்ச் சென்று, மாவலியை

தொலைவில் உள்ளது. குறுகிய மலையிடுக்குகளில் உள்ள ஒற்றையடிப் பாதை வழியாகத் தான் இத்திருத்தலத்தை அடைதல் வேண்டும். நெடுஞ்சாலைக்குப் பத்து கல் தொலைவுக்கு அப்பால் அங்கும் இங்குமாகப் பல சிற்றூர்கள் உள்ளன. அவ்விடங்களில் சிறுத்தைப் புலிகள் நடமாடுகின்றன. இத்தலத்திற்குப் போகிறவர்கள் நேபாள அரசிடம் இசைவு பெறுதல் வேண்டும். ஐம்பதிற்குக் குறைவான எண்ணிக்கையுள்ள திருத்தலப் பயணிகட்கு இசைவு வழங்கப் பெறமாட்டாது. பட்டாளத்தில் தெரிந்த பெரிய அலுவலர்கள் இருந்தால் அவர்கள் உதவியால் சற்று எளிதாகப் பயணத்தை அமைத்துக் கொள்ளலாம். **எம்பெருமான்:** ஸ்ரீமூர்த்தி பெருமாள்; **தாயார்:** ஸ்ரீதேவிநாச்சியார். எம்பெருமான் நின்ற திருக்கோலம்; வடக்கு நோக்கிய திருமுகமண்டலம் பெரி. திரு 1.5 (பதிகம்). மேலும் செய்திகளை வேண்டுவோர் இவ்வாசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** என்ற நூலில் 5-வது கட்டுரையைக் காண்க.

ஏயான் இரப்ப 'மூவடிமண்
இன்றே தா'என்று உலகேழும்
தாயான்; காயா மலர்வண்ணன்
சாளக் கிராமம் அடைநெஞ்சே (6)

[தாயாய்-தாய் வடிவு கொண்டு; பேய்-பூதனை; விழுது-வெண்ணெய்; ஏயான்-இரப்பதற்குத் தகாதவன்; வரி உரு-அழகிய உருவம்; இரப்ப-யாசிக்க; தாயான்-தாவிஅளந்து கொண்டவன்; வண்ணன்-நிறமுடையான்]

என்பது ஆறாம் பாசுரம்.

**திருத்தலச் சூழ்நிலை:** இத் திருத்தலம் நீர் நிலைகளால் சூழப் பெற்று வனப்புடன் திகழ்வது (3); எங்கும் தடாகங்கள் நிறைந்திருப்பது (5); சந்தன மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்தது (8); தடாகங்கள் தோறும் "உரம் பெற்ற மலர்க்கமலம் உலகலந்த சேவடிபோல் உயர்ந்து காட்டும்"[8]; சோலைகளில் வண்டுகள் களித்து இசைபாடும்; அருளியிருக்கும் கழனிகளில் கயல் மீன்கள் நிறைந்து கிடக்கும்; இம் மீன்கள் துள்ளிப் பாய்ந்து தடாகங்களிலும் ஏனைய நீர் நிலைகளிலும் தாமரை மொட்டுகளின் மேல் விழ, அவை மலர்ச்சிபெறும் (9); தாரா என்ற பறவைக் கூட்டங்கள் வயல்களில் காணப் பெறும் (4)

**திருத்தலத்து எம்பெருமான்:** இத்தலத்து எம்பெருமானைக் கூறுங்கால்,

8. பெரியாழ். திரு.4.9:8

உலவு திரையும் குலவரையும்
ஊழி முதலா எண்திக்கும்
நிலவும் சுடரும் இருளுமாய்
நின்றான்; வென்றி விறலாழி
வலவன்; வானோர்தம் பெருமான்
மருவா அரக்கர்க் கென்ஞான்றும்
சலவன் (3).

[திரை-அலைகள் (கடல்); வரை-மலை; ஊழி-காலம்; சுடர்-சூரியன், சந்திரன்; ஆழி-சக்கரம்; வலவன்-வலத்திருக் கையில் உடையவன்; வானோர்தம் பெருமான்-தேவாதி தேவன்; சலவன்-எப்போதும் நன்மை செய்யாதவன்]

என்கின்றார் ஆழ்வார். "உலவுகின்ற அலைகளையுடைய கடலும், காலம் முதலான சகல தத்துவங்களும் எட்டுத் திசைகளும், சூரிய சந்திரர்களும் இருளுமாகிய இப் பொருள்கட்கெல்லாம் அந்தர்யாமியாய் இருப்பவன்; வெற்றியையும் மிடுக்கையும் உடைய திருவாழியை வலக்கையிலே கொண்டவன்; தன்னை வழிபடாத அரக்கர்கட்கு நன்மை செய்யாதவன்' என்பது இதன் கருத்து.

மேலும், இவனை,

இருசுடராய்
வானாய் தீயாய் மாருதமாய்
மலையாய் அலைநீர் உலகனைத்தும்
தானாய் தானும் ஆனான் (7)

[இருசுடர்-சூரிய சந்திரர்கள்; வான்-ஆகாயம்; மாருதம்-காற்று; அலைநீர்-கடல் நீர்]

என்றும் காட்டுவர். சந்திர சூரியர்களாயும், ஆகாயமாயும், தீயாயும், காற்றாயும், மலைகளாயும், கடல்

சூழ்ந்த எல்லா உலகங்களாயும் இருப்பவன் இவன்தான் என்கின்றார். அந்தர்யாமியாக இருக்கும் இறைவனின் இருப்பைக் காட்டிய ஆழ்வார் அவதார தத்துவத்தையும் காட்டுவர்.

மான்களும் யானைகளும் குதிரைகளும் திரியும் காடும் கடந்து, வில்லையும் அம்பையும் துணையாகக் கொண்டு, சேதுகட்டி மதில் நீர் இலங்கை வாளரக்கர் தலைவனின் பத்துத் தலைகளையும் அறுத்தெறிந்தவனும் (1); மதநீரையுடையனவாய் மலைகள் வடிவெடுத்து நடந்தாற் போன்றுள்ள யானைத் திரள்களும், குதிரைக் கூட்டங்களும் முழக்கம் செய்யும் பெரிய தேர்களும், காலாட்களும் ஒன்றாகத் திரண்டு பெரிய கிளர்ச்சியுடன் தோற்றிய இலங்கையைச் சுடுகாடாக்கியவனும் (2) இவனே. சூர்ப்பணகையின் மூக்கையறுத்து அவளைப் பிலம்போன்ற வாயைத் திறந்துகொண்டு கதறச் செய்தவனும் (3) இவனே. தாயாய் வந்த பேயாம் பூதனையின் உயிரையும், தயிரையும் வெண்ணெயையும் ஒன்று சேர்த்து அமுத செய்தவனும், அழகொழுகும் வாமன உருவத்துடன் சென்று, 'மன்னா, இன்றே மூவடி மண் தா' என்று இரந்து எல்லா உலகங்களையும் தானாக அளந்து கொண்டவனும் (6); நரசிம்ம அவதாரம் செய்து இரணியனுடன் கடும் போரிட்டு, அவன்தன் நெஞ்சைப் பிளந்து உயிர் குடித்தவனும் (7); 'எந்தாய் சாபம் தீர்' என வேண்டிய சிவனின் சாபத்தைத் தன் திருமார்பில் இலங்கும் அமிர்த நீரைக் கொண்டு தீர்த்தவனும் (8) இந்த எம்பெருமானேயாவான்.

இங்ஙனம் இராமனாயும், கிருட்டிணனாயும், திரிவிக்கிரமனாயும், ஆள்-அரியாயும் (நரசிம்மனாயும்) எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாயும் உள்ள எம்பெருமானே அர்ச்சை வடிவாய் சாளக்கிராமத்தில் எழுந்தருளியுள்ளான். இந்த எம்பெருமானை அடியார் கூட்டமும்,

நித்திய சூரிகளும், பூணூல் இலங்கும் மார்பினையுடைய அந்தணர் குழாங்களும் இவன் திருக்கோயிலைச் சூழ்ந்து நின்று இவனைச் சேவிக்கின்றனர். 'ஒழிவில் காலமெல் லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்'[9] என்று இடைவிடாது அடிமை செய்யப் பாரித் திருக்கின்ற அடியார் திருக்கூட்டமும் பரமபதத்தில் பரத் துவத்தை அநுபவிப்பதைக் காட்டிலும் எம்பெருமானின் இங்குள்ள சௌலப்பியம், சௌசீல்யம் போன்ற திருக் குணங்களை அநுபவிப்பதில் பேரவாக் கிளர்ந்து இங்கு வந்து திரண்டிருக்கும் நித்திய சூரிகளின் திரள்களும், சாதிச் செருக்கே இயல்பாகவுடைய பார்ப்பனைக் கூட்ட மும் ஒரு சேர நிற்பது அகில நிலை ஒருமைப்பாட்டைக் (Univerself integration) காட்டி நிற்கின்றதன்றோ?

**4. வடமதுரை:** சாளக்கிராமத்தைச் சேவித்த ஆழ் வார் வடமதுரைக்கு[10] வருகின்றார். இது கண்ணன் பிறந்த திருப்பதியல்லவா? ஆழ்வார் பாடியதாகப் பதிகம் ஒன்றும் இல்லை. அடியார்கட்குப் பரதந்தரப்பட்டிருக்கும் தன்மை யில்-எளிமைக் குணத்தில்—உள்ளத்தைப் பறிகொடுத்த ஆழ்வார்.

---

9. திருவாய். 3.3:1

10. **வடமதுரை:** தில்லிக்கு முன்னதாகவே 170 கி. மீ. தொலைவில் உள்ள ஓர் இருப்பூர்தி நிலை யம். நிலையத்திலிருந்து நகரம் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. மேற்கிருந்து கிழக்கு நோக்கி ஓடும் யமுனை நதிக்கரையில் உள்ளது. முத்தி தரும் ஏழு நகரங்களுள் இதுவும் ஒன்று. கண்ணுக்கு மதுரமாயிருத்தலாலும், மது என்ற அசுரனை அழித்த இடமாதலாலும் இதற்கு மதுரை என்று பெயர் வந்ததாகக் கூறுவர். திருத்தலப் பயணிகள் வசதியாக நீராடுவதற்கு நல்ல படித்துறையொன்று அமைக்கப் பெற் றுள்ளது. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த

பெருநிலத்தார்,
இன்னார் தூதன் எனநின்றான்[11]

'கோதுஇல் செங்கோல்
குடைமன்னர் இடைநடந்த
தூதா'[12]

என்று பெருமையுடன் பேசுகின்றார். இச்சை காரணமாக எம்பெருமான் தன்னடியார்கள் திறத்தில் செய்யும் தாழ்ச்சி எல்லாம் இவனுடைய ஏற்றத்திற்குக் காரணமாக அமைந்தன; இவை இவனுக்கு ஒளியையும் தருகின்றன.

வேறு திருப்பதிகளை மங்களாசாசனம் செய்யும் போது இத்திருத் தலத்தின் பெயரும் ஆழ்வார் சிந்தையில் எழுகின்றது. திருநறையூர் பற்றிய திருமொழியில்,

வில்ஆர் விழவில் வடமதுரை
விரும்பி, விரும்பா மல்அடர்த்து,
கல்ஆர் திரள்கோள் கஞ்சனைக்
காய்ந்தான்; பாய்ந்தான் காளியன்மேல்[13]

என்ற பாசுரத்திலும்,

---

திருக் கோயில்கள் ஒன்று கூட இல்லை. பிற் காலத்தில் எழுந்த கட்டங்களும் பாழடைந்து கிடக்கின்றன. 'கேசவதேவ மந்திர்' என்ற திருக்கோயில் இன்று இல்லை. இந்த இடத்தில் பெரிய மசூதி ஒன்று உள்ளது. இவற்றிற்கு மேல் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** என்ற நூலில் 9-வது கட்டுரை காண்க.

பெரி. திரு. 6.7:5; 6.8:10; 9.9:6. சிறி. திருமடல் (3.9);

11. பெரி. திரு. 2.2:3
12. ஷெ. 6. 2:9
13. பெரி. திரு. 6. 7:5

மன்னும் மதுரை
வசுதேவர் வாழ்முதலை
நல்நறையூர் நின்றநம்பியை[14]

என்ற பாசுரத்திலும், திருமாலிருஞ் சோலைபற்றிய திருமொழியில்,

நேசமி லாதவர்க்கும்
நினையாதவர்க்கும் அரியான
வாசமலர்ப்பொழில் சூழ்
வடமாமது ரைப்பிறந்தான்[15]

என்ற பாசுரத்திலும் இந்த மங்களாசாசனத்தைக் காணலாம்.

**5. திருவாய்ப்பாடி:** வடமதுரையிலிருந்து ஆழ்வார் கண்ணன் வளர்ந்த இடமாகிய ஆய்ப்பாடிக்கு[16]

14. ஷை. 6. 8: 10
15. ஷை 9. 9:6
16. **திருவாய்ப்பாடி:** ஒரு சிறிய ஊர். வட மதுரையின் தென் கிழக்கில், யமுனையின் வட கரையில் உள்ளது. ஆற்றைத் தாண்டி சென்றால் சுமார் 6 கி. மீ. தூரத்தைக் கடந்து செல்ல வேண்டி வரும். பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டுமாயின் 9 கி. மீ. தூரத்தைக் கடந்தாக வேண்டும். கண்ணன் பிள்ளைப் பிராயத்தைக் கழித்த இடம் என்பதற்கு யாதொரு அறிகுறியும் தென்படவில்லை. அடையாளம் இன்றிப் போனமைக்கு இஸ்லாமியர் படையெடுப்பில் பல இடங்கள் பாழானமையே காரணம் என்று கொள்ளலாம். மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் 'வடநாட்டுத் **திருப்பதிகள்** என்ற நூலில் 12-வது கட்டுரை காண்க.

பெரி. திரு. 1.8:4; 5.5:5; 5.9:8.

வந்திருக்க வேண்டும், இங்கு ஆழ்வார் மங்களாசாசனம் செய்ததாகப் பாசுரங்கள் இல்லை. ஆனால் பிற இடங்களில் மங்களாசாசனம் செய்யும்போது இந்தத் திருத்தலத்தைப்பற்றிச் சிந்திக்கின்றார். திருவேங்கடத்தை மங்களாசாசனம் செய்யும்போது,

> கோத்தங்கு ஆயர்தம் பாடி யில்குர
> வைப்பி ணைந்தஎம் கோவலன் (1.8:5)

என்றும்,

> நாண்மலராள் நாயகனாய் நாமறிய
> ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி (5.5:5)

என்றும், திருப்பேர் நகரை மங்களாசாசனம் செய்யும் போது ஏழுகாளைகளை அடக்கிப் பின்னைப் பிராட்டியை மணந்த செய்தியைக் குறிப்பிடும் பாங்கில்,

> அம்பொன்ஆர் உலகம் ஏழும்
> அறியஆய்ப் பாடி தன்னுள்
> கொம்பனார் பின்னை கோலம்
> கூடுதற்கு ஏறு கொன்றான் (5.9:8)

என்றும் எம்பெருமானது எளிமையையும் உயர்வையும் இரண்டு ஆய்ச்சிகள் எதிரெதிராகக் கூறும் பாங்கில் அமைந்துள்ள பாசுரம் ஒன்றில்,

> தந்தைதளை கழலத்
> தோன்றிப்போய் ஆய்ப்பாடி
> நந்தன் குலமதலை
> யாய்வளர்ந்தான் காணேடி,
> நந்தன் குலமதலை
> யாய்வளர்ந்தான நான்முகற்குத்
> தந்தைகாண் எந்தை
> பெருமான்காண் சாழலே (11.5:2)

என்றும், இதே திருமொழியின் இன்னொரு பாசுரத்தில்,

அறியாதார்க்(கு) ஆனாயன்
ஆகிப்போய் ஆய்ப்பாடி
உறியார் நறுவெண்ணெய்
உண்டுகந்தான் காணேடி
உறியார் நறுவெண்ணெய்
உண்டுகந்த பொன்வயிற்றுக்கு
எறிநீர் உலகனைத்தும்
எய்தாதாள் சாழலே (11.5:4)

என்றும் கண்ணன் இங்கு வளர்ந்த கால நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருத்தல் காணலாம் :

**பிருந்தாவனம்:** நெடுஞ்சிக் காடாகக் கிடந்த இடம். கண்ணன் அவதரித்ததும் இந்த இடம் அந்நிலை மாறி 'விரஜபூமி' (மேய்ச்சல் நிலம்) யாக மாறிவிட்டது. வட மதுரையிலிருந்து பிருந்தாவனம்[17] சுமார் பத்துக் கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. பிருந்தாவனம் கண்ணன் குழலூதி கோபியருடன் 'இராசகிரீடை' (குரவைக் கூத்து) நிகழ்த்திய இடமாகும். இங்குக் காளியன் மடு, கோபியரின் துகிலுரிந்த கட்டம், கோபியரின் பக்திப் பரவசத்தைக் கண்ட அக்ரூரர் கண்ணீர் மல்க விழுந்து விழுந்து புரண்ட இடம், குழலூதிக் கோபியரின் உள்ளத்தைக் கவர்ந்த வனம் (பான்சிவனம்) மற்றும் சேவாகுஞ்சம், பக்தவிலோசனம் முதலியன உள்ளன. சில நாட்களில் நளளிரவில் இன்றும் கண்ணனின் குழலோசையைக் கேட்பதாக அங்குள்ளோர் கூறுகின்றனர்[18]

17. நூற்றெட்டு திருப்பதிகளுள் ஒன்றாகச் சேரவில்லை. வடமதுரையில் அடக்கிக் கொண்டார் போலும்.
18. 1974 - திசம்பரில் குருட்சேத்திரத்தில் அரியானா) நடைபெற்ற அனைத்திந்திய கீழ்த்

**6. திருப்பாற்கடல்:**[19] திருமங்கையாழ்வார் இந்த எம்பெருமானை 'பாற்கடலாய்' (திருநெடுந்-5) 'கடல் கிடந்த கனியே!' (ஷை—13), 'பாற்கடல் கிடந்தாய்!' (பெரி.திரு. 1.6:6) என்றெல்லாம் கூப்பிட்டழைப்பர். மேலும் இந்த ஆழ்வார் இந்த எம்பெருமானை 'அரவு அணை வேலைக் கிடந்தாய்' (பெரி. திரு. 3.5:2) 'பாற்கடல் கிடந்த பரமனார்' (4.10:4) 'கடல் கிடந்த கருமணி' (5 6:1) 'அறிதுயில் அலைகடல் நடுவே, ஆயிரம் சுடர்வாய் அரவு அணைத்துயின்றான்' (5.7:6), 'பரவைத்துயில் ஏறு' (7.3:6), 'வங்கம்மலி தடங்கடலுள் அநந்தன் என்னும் வரி அரவின் அணைத்துயின்ற மாயோன்' (7.8:1) என்பன போன்ற 'துணுக்குப் பாசுரங்களால்' நமக்கு இனம் காட்டுவர்.

திசை மாநாட்டின்போது நானும் என் ஆராய்ச்சி மாணவர் டாக்டர் **ந. கடிகாசலமும்** (இப்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றுபவர்) என் அரிய நண்பர் பண்டித திரு. **வி. நடேசனாரும்** வடமதுரை, பிருந்தாவனம் இவை இரண்டையும் சேவித்தோம்.

19. வடதுருவத்திற்கு அப்பால் உள்ளதாகச் சொல்லப் பெறுகின்றது. **எம்பெருமான்** : திருப்பாற்கடல் நாதன். தெற்கு நோக்கிய திருமுக மண்டலம். புயங்க சயனம், **தாயார்** : கடல் நாச்சியார். பெரி.திரு.: 1.6:6; 1.6:9; 1.8:2; 3.5:2; 4.10:4; 5.4:2; 5.6:1; 5.7:6; 7.1:3; 7.3:6; 7.4:7; 7.8:1; 8.9:2; 8.10:7; 9.6:5; 9.9:1; 10.1:3; 11.5:10 திருநெடுந் 9, 12 மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் '**வடநாட்டுத் திருப்பதிகள்**' என்ற நூலில் 13-வது கட்டுரை காண்க.

7. **பரமபதம்**[20]: இது திருநாடு நலம் அந்தம் இல்லாதோர் நாடு (திருவாய் (2.8:4) 'நித்திய விபூதி', 'பெரு நிலம்', 'பெரு விசும்பு', 'நீள் விசும்பு', 'உம்பர் உலகு', 'விண்ணகம்', 'நாரணன் உலகு' இன்பவீடு' 'அமரர் 'இன்ப வீடு', 'அமரர் உலகம்', 'வானோர் கடிநகர்' என்றெல்லாம் ஆழ்வார்கள் பன்னி உரைப்பர். திருமங்கையாழ்வார் திருக்குறுந்தாண்டகப் பாசுரம் ஒன்றில் (11) பரமபதநாதனை.

அண்டம் ஆய் எண்திசைக்கும்
ஆதியாய், நீதி ஆன
பண்டம்ஆம் பரமசோதி!
நின்னையே பரவுவேனே

என்று மங்களாசாசனம் செய்து மகிழ்கின்றார்.

8. **அயோத்தி**:[21] இத்திருத்தலத்தைப்பற்றி ஆழ்வார் பதிகம் ஒன்றும் இல்லை. அரக்கர்கள் 'குழமணி தூரம்' என்ற கூத்தை இராமபிரான் முன்னர் ஆடுவதாக

---

20. சிந்தை செல்லா சேண்நெடுந் தூரத்தது. பெரி திரு. 7.3:5. மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **வடநாட்டுத்திருப்பதிகள்** என்ற நூலில் 14-வது கட்டுரை காண்க.

21. **அயோத்தி**: இந்தத் திவ்விய தேசம் வாரணாசிக்கும் இலக்னோவிற்கும் (இலட்சுமணபுரி) இடையே கிழக்கு இருப்பூர்திப் பாதையில் உள்ளது. இதுவும் ஓர் இருப்பூர்தி நிலையம். இது பைசபாத் நிலையத்திலிருந்து ஏறக்குறைய 3 கி.மீ. தொலைவில் உள்ளது. சரயூ நதிக்கரையில் அமைந்த ஒரு சிறு நகரம். அயோத்தி-பகைவர்களால் போர் செய்து வெல்ல முடியாதது என்பது பொருள்.

அமைந்த பாசுரத்தில் 'அயோத்தி காவலன்தன் சிறுவனை' நினைந்து போற்றுகின்றார் ஆழ்வார்[22]

**9. நமிசாரணியம்:**[23] இங்கு எம்பெருமான் ஆரணிய வடிவத்தில் சேவை சாதிக்கின் என்று பெரியோர் பணிப்பர். ஒரு காலத்தில் முனிவர்கள் நான்முகனை நோக்கித் தவம் செய்வதற்குச் சரியான, இடம் இப்பூவுலககில் யாங்குளது? என்று தங்கட்குக் காட்டுமாறு வேண்டினர். அந் நான்முகனும் ஒரு தருப்பைப் புல்லைச் சக்கரம்போல் செய்து மண்ணுலகில் உருண்டோடச் செய்து அது சென்ற இடமே சிறந்தது என்று காட்டினதாகப் புராணவரலாறு. ஆகவே '**நைமிசம்**' எனப் பெயர் பெற்றது. நைமிசம்—நேமி விழுந்த இடம். நேமி—சக்கரம்; ஆரணியம்—காடு. எனவே '**நைமிசாணியம்**' என்ற திரு நாமம் பெற்றது.

---

22. பெரி. திரு. 10. 3: 8 பெரி. திரு: 10. 3: 8 மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** என்னும் நூல் 3-வது கட்டுரை காண்க.

23. **நைமிசாரணியம்:** இத் திவ்வியதேசம் கிழக்கிந்திய இருப்பூர்திப் பாதையில்— பலமு—சீதாபூர் கிளைபாதையில்—உள்ளது நிலையத்திலிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. ஊருக்கு மாட்டு வண்டியில் தான் செல்ல வேண்டும். **எம்பெருமான்:** தேவராசன், ஸ்ரீஹரி; **தாயார்:** இலக்குமி, புண்டரீக வல்லி. அகோபிலமடத்துச்சீயர் இங்கு எழுந்தருளியபோது திருநாடு அலங்கரித்து விட்டார். அவருடைய சமாதி இங்கு உள்ளது. அகோபில மடத்துக் கிளை யொன்றும் இங்கு உள்ளது பெரி. திரு. 1.6 (பதிகம்) மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** என்னும் நூலில் 4-வது கட்டுரை காண்க.

அயோத்தியிலிருந்து இத்திருத்தலத்திற்கு வந்த திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியால் (பெரி. திரு. 1.6) மங்களாசாசனம் செய்துள்ளார். பெரிய பிராட்டியாரின் முன்னிலையாகச் சரணம் புகுகின்றார் ஆழ்வார். 'தேனுடைக் கமலத் திருவினுக்கரசே! திருவடி அடைந்தேன்' (9) என்று பிராட்டியாரை முன்னிட்டுப் பிரபத்தி பண்ணுவதைக் காணலாம். இத்திருமொழியில் எம்பெருமானுடைய மேன்மைகளையும் தம்முடைய தாழ்வுகளையும் வெளியிட்டுக் கொள்ளுகின்றார் ஆழ்வார். எம்பெருமானிடம் அடைக்கலம் புகும் போது இங்ஙனம் செய்ய வேண்டும் என்பது சாத்திரவிதி-ஆர்த்தியின் கனத்தாலே தம்முடைய குற்றங்களையெல்லாம் விரிவாகப் பேசிக் கொண்டு சரணாகதி பண்ணுகின்றார்.

ஒருவர் செய்ய வேண்டிய வினைகள் என்று விதிக்கப் பெற்றுள்ள நல்வினைகளைச் செய்யாதொழிதலும், செய்யலாகாதென்று விலக்கப் பெற்றுள்ள தீவினைகளைச் செய்தலும் ஆகிய இருவகைக் குற்றங்கள் சாத்திரங்களில் கூறப பெற்றுள்ளன. இந்த இருவகைக் குற்றங்களும் தம்மிடம் நிறைந்திருப்பனவாகச் சொல்லிக் கொள்ளுகின்றார் ஆழ்வார்.

வாள் நிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
 மாதரார் வனமுலைப் பயனே.
பேணினேன்; அதனைப் பிழைஎனக் கருதி
 பேதையேன் பிறவிநோய் அறுப்பான்
ஏண்இலேன் இருந்தேன்: எண்ணினேன் எண்ணி
 இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன் (1)

[வால்நிலா-ஒளி பொருந்திய; நுதல்-நெற்றி; வன-அழகிய; பேணினேன்-ஆதரித்திருந்தேன்; ஏண் இலேன்-எண்ணாதவனாக; நாணினேன்-வெட்கித் துறந்தேன்]

என்று சிந்திக்கத் தொடங்குகின்றார். ''மாதர்களுடைய முறுவல் அழகையும், தோள் அழகையும், முலை அழகையும், வாய் வெருவிக்கொண்டு நெடுநாள் வரையில் சபலனாய்த் திரிந்தேன். இந்நிலையில் சம்சார நோயைத் தீர்த்துக் கொள்வதற்கு வழிதேடாமல் இருந்து விட்டேனே'' என்கின்றார். இந்தமுறையில் அவர் சிந்தனை செல்லுகின்றது.

மேலும், ''சிலம்பணிந்து செம்பஞ்சுச் சாறு பூசிய மாதர்களின் கால் அழகிலும், மைதீட்டிய கண்ணழகிலும் தோற்று, அறத்தையே மறந்தேன்; பாவங்களைச் செய்து பணத்தைத் திரட்டிப் புலன்கள் புசித்துக் களிக்கும்படியான தீய செயல்களை அநுபவித்துப் 'பழுதே பல பகலும் போக்கினேன் (2); முதலில் சூதாட்டம் ஆடத் தொடங்கினேன்; பகல்காலம் முழுவதும் அதில் கழியும். ஏராளமான பொருள்கள் கிடைக்கும். பெருஞ்செல்வனாதலால் இப்படிப் பொருள்களை இழக்கின்றான் என்று எண்ணினேன். குறுக்கு வழியில் பொருள் திரட்டி விடலாம் என்று திட்டம் போட்டு அவன் வீட்டில் புகுந்து கொள்ளையடித்தேன்; அப்பொருளைச் செலவிட வேண்டி சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுந்து கண்டவாறு திரிந்தேன்; மனம் போனவாறு எல்லாம் பொருள் திரட்டத் தொடங்கினேன் (3); மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரத்தை நாடித் திரிந்தேன் (4); ஒரு கவளச் சோற்றுக்கு இரங்கிக் கேட்டவர்கட்கு இல்லையே என்று சொன்ன நீசனானேன்: (5); நான் உயிர்க்கொலை புரிந்ததற்கும் ஓர் எல்லை இல்லை (6); நெஞ்சினால் நினைந்தும், வாயினால் மொழிந்தும், நீதி இல்லாதன செய்தும் அர்ச்சிராதி மார்க்கத்தினின்றும் வழிவிலகி, தூமாதி மார்க்கமே நித்தியம் என எண்ணி விட்டேன் (7). இங்ஙனம் பல வழிகளிலும் கெட்டுழந்த ஆழ்வாருக்கு 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கும்' பேறு கிட்டத்

தொடங்குகின்றது. நல்லவழியில் சிந்திக்கத் தொடங்கு கின்றார்.

இருள் தருமா இவ்வுலகில் தோன்றிய உடல் ஒரு குடி போல் தோன்றுகின்றது. இக்குடிசையில் எலும்புகள் தூண்களாக நடப் பெற்று இடை இடையே மாமிசத் தாலான சுவர்கள் வைக்கப் பெற்றுள்ளன. உரோமங்கள் மேலே வேயப் பெற்ற இக்குடிசைக்கு ஒன்பது வாயில்கள் உள்ளன. இக்குடிசையில் ஆன்மா வாழ்கின்றது. ஆன்மா குடிசையை விட்டு வெளிக் கிளம்பும் காலமே மரணம் ஆகும். இங்ஙனம் மரணம் நேர்ந்த பிறகு இவ்வான்மா அடைய வேண்டிய இடம் எம்பெருமானின் திருவடிகள் என்ற எண்ணம் ஆழ்வார் சிந்தையில் எழுகின்றது (9). இதனைத் தவிர யம பயமும் அடிக்கடி இவர் சிந்தையில் எழுகின்றது. 'நமன்தமர் செய்யும் வேதனைக் கொடுங்கி நடுங்கினேன்' (3) என்கின்றார். எமபடர்கள் செய்யும் கொடுமைகளைவிட அவர்தம் சொற்கள் கூரியவை. 'கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் படுவதோர் கொடுமிறைக்கு அஞ்சி' என்கின்றார் (5) ஆழ்வார். பிறர் மனை நயப்பவர்களை எமபடர்கள் என்ன செய்வார்கள் என்பதை,

வம்புஉலாம் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரம்என்று இவற்றை
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி
எற்றிவைத்து எரிஎழு கின்ற
செம்பினால் இயன்ற பாவையை, பாவீ!
தழுவு (4)

[வம்பு - மணம்; நம்பினார் - விரும்பினவர்கள்; எற்றி - துன்பப்படுத்தி; பாவையை - படிமத்தை)

என்று தம் கற்பனையில் சிந்திக்கின்றார். இதற்கு இன் சுவை மிக்க பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் சுவைக்கத்தக்கது: ',அவர் தாங்கள் (யமபடர்கள்) ஒரு கைக்கு ஆயிரம் பேராக வந்து பற்றுவார்களாய்த்து; பின் இவனுடம்புதன்னோடே எற்றுவார்கள்; அநந்தரம் (பிறகு) தங்கள் கைசலித்தவாறே பொகட்டிட்டு வைப்பர். இவர் இத்தனைபோது ஸ்த்ரீகளை யொழிய இருக்க வல்லரோ! அவனை அழைப்பியும் என்பர்கள். இவனும், 'நம்மை நலிவதெல்லாம் நலிந்தார்களாகிலும் இனி அவர் களை அழைக்கிறார்களிறே' என்று குறுவிழிகொண்டு கிடக்கும். எரியெழா நிற்பதாய் செம்பாலே செய்யப் பெற்ற பாவையைப் 'பாவீ, தழுவு' என்பார்களாய்த்து. கெடுவாய்! அவர்களொழிச்சினவன்றாகிலும் அநுதாபம் பிறந்து உகந்தருளினதொரு திருவாசலிலே ததுங்கினா யாகில் இன்று எங்களுக்குக் கைசலியா தொழியலாமே என்பார்களாய்த்து. அவர்கள் பண்ணும் நலிவைப் பொறுக்கலாம்; க்ரூரமான பேச்சாய்த்துப் பொறுக்கப் போகதது.''

இங்ஙனம் நன்ஞானம் தலையெடுக்கப் பெற்றதும் ஆழ்வார் நைமிசாரணியத்து எம்பெருமானிடம் அடைக்கலம் புகுகின்றார். பாசுரந்தோறும் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக 'வந்துன் திருவடி அடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்!' என்று முறையிடு கின்றார். நைசாரணியத்திலிருந்து துவாரகை செல்லுகின் றார் ஆழ்வார்.

10. **துவாரகை :** வடமதுரையிலிருந்து ஆழ்வார் துவாரகைக்கு[24] வருகின்றார். துவரைநாதனைச் சேவிக் கின்றார். பதிகம் ஒன்றும் பாடவில்லை. ஆனால் வேறு

24· **துவாரகை :** இத்திருத்தலம் குஜராத்மாநிலத்தில் உள்ளது. மேற்கிந்திய இருப்பூர்த்திப் பாதையில்

திவ்விய தேசங்களைமங்களாசாசனம் செய்யும்போது இந்தத் திவ்விய தேசத்தை நினைவுகூர்கின்றார். திருநறையூரை மங்களாசாசனம் செய்யும்போது,

முலைத்தடத்த நஞ்சுண்டு துஞ்சப் பேய்ச்சி
முதுதுவரைக் குலபதியாய்க் காலிப்பின்னே
இலைத்தடத்த குழலூதி ஆயர் மாதர்
இனவளைகொண் டான்அடிக்கீழ் எய்த கிற்பீர்
(6.6 : 7)

என்றும், மற்றொருதிருநறையூர் திருமொழியில,

மட்டேறு கற்பகத்தை
மாதர்க்காய் வண்துவரை
நட்டானை நாடி
நறையூரில் கண்டேனே (6.8 ; 7)

என்றும் நினைவுகூர்கின்றார்

---

ஜாம் நகருக்கும் தக்காவிற்கும் இடையிலுள்ள ஓர் இருப்பூர்திநிலையம். தக்காவிலிருந்து 18 கல் தொலைவிலுள்ளது. எல்லாவசதிகளும் கொண்ட ஒருசிறிய நகரம். இருப்பூர்தி நிலையத்திலிருந்து ஒரு கல்தொலைவிலுள்ளது இத்திருத்தலாம். இங்கு இராமாநுச கூடம் ஒன்று உண்டு. அங்குத் தங்கலாம். **இறைவன்: கல்யாண நாராயணன்;** இருந்த திருக்கோலம்; மேற்கு நோக்கிய திருமுகமண்டலம், **தாயார்:** கல்யாண நாச்சியார். பெரி திரு 6.6 : 7; 6.8 : 7 மேலும் விவரம் வேண்டுவோர் இவ்வாசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** 11-வது கட்டுரை காண்க.

**11 சிங்கவேழ்குன்றம் :** துவாரகையிலிருந்து சிங்க வேழ் குன்றம்[25] வருகின்றார் ஆழ்வார். இத்திருத்தலம் பற்றி ஒரு திருமொழியால் (பெரி. திரு 1.7) ஆழ்வார். மங்களாசாசனம் செய்துள்ளார். இப்பாசுரங்களில் நாம் ஆழங்கால்படுவோம். **சித்து, அசித்து, ஈசுவரன்** என்ற மூன்றும் வைணவதத்துவங்கள். இவை மூன்றும் தனித்தனி இயல்புடைய வேறு வேறு பொருள்கள்; என்றும் அழிவில் லாதவை. ஆயினும் எக்காலத்தும் இவை மூன்றும்

---

25. **சிங்கவேழ்குன்றம் :** இத்திருப்பதி இப்பொழுது 'அகோபிலம்' என்று குறிப்பிடப்பெறுகின்றது. சிங்கவேள் குன்றம், கருடாத்திரி, வேதாத்திரி, வீரக்ஷேத்திரம் என்ற திருப்ப பெயராலும் வழங்கப்பெறுகின்றது. இஃது ஆந்திர மாநிலத்தில் உள்ள திருத்தலம். சென்னை-பம்பாய் இருப்பூர்தி வழியிலுள்ள கடப்பையிலிருந்து பேருந்து வசதியுண்டு; நந்தியால், கர்நூல் என்ற இடங்களிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. கடப்பையிலிருந்து ஆர்லகட்டா வரையில் பேருந்தில் போக வேண்டும்; ஆங்கிருந்து 15 கி.மீ. தொலைவி லுள்ளது இத்திருத்தலம். பேருந்து வசதி உண்டு. ஸ்ரீபர்வதம் அல்லது நல்ல மலைத்தொடரில் தான் இக்குன்றம் அமைந்துள்ளது. தொடரின் தலைப்பகுதியே ஏழுமலையான் திருக்கோயில் கொண்டுள்ள திருமலை; உடற்பகுதி அகோபிலம்; வால் (கால்) பகுதி ஸ்ரீ சைலம் என்ற திருத்தலம். மலை அடிவாரம் கீழ் அகோபிலம் என்றும், உச்சிப்பகுதி மேல் அகோபிலம் என்றும் வழங்கப் பெறுகின்றன. கடல் மட்டத்திற்குமேல் 3000 ஆடி உயர முள்ளது. **எம்பெருமான்:** உக்கிர நரசிம்மர்; இருந்த திருக்கோலம்; கிழக்கே திருமுக மண்ட லம். **தாயார்:** இலக்குமி நாச்சியார். பெரி. திரு. 1:7 (பதிகம்)மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **'வடநாட்டுத் திருப்பதிகள்'** என்றநூலில் 2-வது கட்டுரை காண்க.

சேர்ந்தே உள்ளன. ஆழ்வாரின் ஒவ்வொரு பாசுரத்திலும் இம்மூன்று தத்துவங்களும் நன்கு பொருந்தி அமைந்திருப்பதைக் காணலாம்.

அங்கண் ஞாலம் அஞ்ச அங்கு
ஓர்ஆள்அரியாய் அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த
புனிதன இடம்;
பைங்கண் ஆனைக் கொம்பு கொண்டு
பத்திமை யால்அடிக்கீழ்
செங்கண் ஆளி இட்டு இறைஞ்சும்
சிங்கவேழ் குன்றமே (1)[26]

[ஞாலம்-பூமி; அரி-சிங்கம்; அவுணன்-அரக்கன்; உகிர்-நகம்; ஆளி-சிங்கம்]

என்ற பாசுரம். ஆழ்வார் பாசுரங்கள் தோறும் முன்னடிகளில் நரசிம்மாவதார வரலாறும், பின்னடிகளில் சிங்கவேழ் குன்றத்தின் நிலைமையையும் வருணிக்கப்பெற்று வைணவ தத்துவங்கள் குழைந்து பெய்யப்பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்.

---

26. சிங்கவேழ் குன்றம்—இது **'சிங்கவேள் குன்றம்'** என்றும் வழங்கப் படுவதுண்டு, **சிங்கம்**-நரசிம்ம சொரூபியாய், **வேள்**-யாவராலும் விரும்பப் படுகின்ற கட்டழகு உடையவரான பெருமான் எழுந்தருளிய, குன்றம்-திருமலை எனப் பொருள் படும். 'சிங்கவேழ் குன்றம்' என்பது நரசிம்ம மூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற ஏழு குன்றங்களையுடைய தலம் என்பது பொருள்.

முதலில் ஆழ்வார் காட்டும் மலையின் சூழலில் ஆழங்கால் படுவோம். அடர்ந்த காடுகள் நெருங்கி இருப்பது இத்திருமலை. ஆழ்வார் அச்சந்தரும் ஒரு நிலையைக் காட்டுகின்றார்.

ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும்
அன்றியும் நின்றழலால்
தேய்ந்த வேயும் அல்லது இல்லாச்
சிங்கவேழ் குன்றமே (3)

[ஓய்ந்த-களைத்துப்போன; மா- விலங்குகள்; அழல்-நெருப்பு; வேய்-மூங்கில்]

என்கின்றார். அலைந்து திரிந்து களைத்துப்போன மிருகங்களை அங்குக் காணலாம்; மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புப் பற்றி எரிந்து குறை கொள்ளியாக இருக்குமாற்றைச் சிறப்பாகக் காணலாம்.

காய்த்த வாகை நெற்றொ லிப்பக்
கல்லதர் வேய்ங் கழைபோய்
தேய்ந்த தீயால் விண்சி வக்கும்
சிங்கவேழ் குன்றமே (8).

[காய்த்த-காய்கள் நிறைந்த; ஒலிப்ப-ஒலியுண்டாக்க; கல் அதர்-கல் வழி; வேய்கழை-குழல் மூங்கில்]

என்று காட்டுவார் ஆழ்வார். ''வாகை நெற்றுகள் காற்று வீசுவதால் ஒலிக்கின்றன. மூங்கில்கள் உராய்வதால் உண்டான செந்தீ விண் முழுவதையும் சிவக்கச் செய்கின்றது. என்கின்றார். சில சமயம் சுழல் காற்று சிவந்த நெருப்பை வாரிக் கொண்டு விண் முழுவதும் ஓடிப் பரவுகின்றது (5). மூங்கில்கள் நெருப்பில் வேகின்றபோது ஒலி உண்டாகின்றது; அந்த நெற்பில் கற்களும் வேகின்றன (7). மேலும்

அந்த மலைச் சூழ்நிலையில் நெல்லி மரங்கள் கல்லிடை களில் முளைத்து வளர்ந்து அவற்றினிடையே பருத்துப் பாறைகளையும் பிளந்து தள்ளுகின்றன (9).

இங்ஙனம் அச்சத்தை விளைவிக்கும் அடவியில் குதிரை, சிங்கம், புலி, முதலிய கொடிய விலங்குகள் இங்கு மங்கும் ஓடியலைந்து ஓய்ந்து நிற்கின்றன (3). மூங்கில் புதர்களினின்றும் புலிகள் பெருவழியில் வந்து சேர்ந்து யானைகள் நடமாடின அடையாளங்களைக் கூர்ந்து ஆராய்கின்றன (2). அவை உலாவின இடங்களைத் தேடித் திரிகின்றன. மற்றும் இங்கு நடுப்பகலில் பகலவன் காலும் வெப்பம் தாங்கமாட்டாது நாய்களும் கழுகுகளும் அவ்விடத்தில் நடக்கும்பொழுது கால் தடுமாறித் திண் டாடுகின்றன (4).

எம்பெருமானின் சந்நிதான மகிமையினால் அவ் விடத்து மிருகங்களும் பகவத் பக்தியில் திளைக்கின்றன. சிங்கங்கள் களிறுகளைக்கொன்று அவற்றின் கோடுகளைப் பிடுங்கிக்கொண்டு வந்து எம்பெருமான் திருவடிகளில் வைத்து வணங்குகின்றன (1) "இவற்றுக்கு ஆனைகளின் மேலே சீற்றம் மாறாதே இருக்கச் செய்தேயும், பகவத் பக்தி ஒரு படிப் பட்டுச் செல்லுமாயிற்றே; சீற்றம் விக்ரு தியாய் (தோன்றியது) பகவத் பக்தி ப்ரகிருதியாய் (மூல காரணமாய்) இருக்குமாயிற்று" என்ற வியாக்கியானப் படுத்தி அநுபவித்து மகிழத் தக்கது. எம்பெருமானுடைய வரலாறு எதுவாயிருந்தாலும் அஃது ஆழ்வார்களுடைய நெஞ்சைக் கவர்வதுபோல் அப்பெருமான் உகந்தருளின நிலங்களில் உள்ளவை எதுவாயினும் 'அவ்விடத்தவை' என்ற காரணத்தினால் எல்லாம் இந்த ஆழ்வாருக்கு இன்பந் தருவனவாகும். "பிறர்க்குக் குற்றமாய்த் தோன்று பவையும் உபாதேயமாய்த் தோற்றுகையிறே. ஒரு

விஷயத்தை உகக்கையாகிறது''[27] என்ற வியாக்கியானப் பகுதி சிந்திக்கத் தக்கது.

இந்தச் சூழ்நிலையில் மக்களின் நடமாட்டத்தையும் பற்றிப் பேசுகின்றார் ஆழ்வார்

மலைத்த செல்சாத் தெறிந்த பூசல்
வன்துடி வாய்கடுப்ப
சிலைக்கை வேடர் தெழிப்ப றாத
சிங்கவேழ் குன்றமே (2)

[மலைத்த-ஆக்கிரமிக்கப் பெற்ற; சாத்து-திருத்தலப் பயணிகளின் கூட்டம்; பூசல்-போர்; பேரொலி; துடி-பறை; வாய்கடுப்ப-ஒலிக்க; தெழிப்பு-ஆரவாரம்]

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. இத்தலப் பயணமாகப் பலர் அந்த அடவியில் செல்லுகின்றனர். அவ்விடத்து வேடர்கள் அவர்களைத் தகைந்து போரிடுவர். ஒருவரோ டொருவர் பெரும்போர் நடத்துவர். அப்போரில் வேடர்களின் வில்லோசையும், பறையோசையும் இடைவிடாது இருந்து கொண்டே இருக்கும். இப்பொழுது இம்மலையில் வாழும் வேடர்கள் 'செஞ்சு' என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றனர். இவர்கள் மரபில் பிறந்த மங்கையொருத்தியை எம்பெருமான் உகந்து மணந்து கொண்டதாகத் தல வரலாறு கூறுகின்றது. இதனால் இப்பகுதி மகளிருக்குச் 'செஞ்சுலெட்சுமி' என்று பெயரிடும் வழக்கமும் இருந்து வருகின்றது.

பாசுரங்கள் தோறும் நரசிம்மாவதாரப் பெருமையில் ஆழ்வார் ஆழங்கால் படுவதைக் காண்போம். இந்தச்

---

27. பெரி. திரு. 1.7:3 இன் உரை.

சிங்கவேழ் குன்றத்தில் எம்பெருமான் **ஒன்பது** இடங்களில் ஒன்பது நரசிம்மர்களாக எழுந்தருளியுள்ளார். மலை செல்லும் வழியில் கீழ் அகோபிலத்தினின்று இரண்டு கி.மீ. தொலைவில் இருவர் உள்ளனர். ஒருவர் **சத்ரவட நரசிம்மர்** (1). இவர் ஓர் அரசமரத்தடியில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் அரவணை மேல் வீற்றிருந்த கோலமாய் அதிகாம்பீகரியத்துடன் சேவை சாதிக்கின்றார். மற்றொருவர் **யோகநரசிம்மர்** (2). இவர் ஒரு சிறிய திருக்கோயிலில் கால்மீது கால்போட்டுக் கொண்டு முன்னிரண்டு கைகளும் முழங்கால்களின்மீது தங்கிய வண்ணம் யோகம் செய்யும் பாவனையில் எழுந்தருளியுள்ளார்.

மேல் அகோபிலத்திலுள்ள திருக்கோயில் **கருடாத்திரி வேதாத்திரி** (அத்திரி - மலை) என்ற இரண்டு குன்றுகளுக்கிடையே **பாவநாசினி** என்ற நதியருகில் அமைந்துள்ளது. தெற்குப் புறத்தில் மூன்று குகைகள் உள்ளன. நடுவிலுள்ள குகையில் கற்பாறையில் குடைந்தெடுக்கப் பெற்ற திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவர் **உக்கிர நரசிம்மர்** (3). இருந்த திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலம் கொண்டவர். இவரே இத்தலத்தின் நாயகர். தாயார் இலக்குமி நாச்சியார். இவர் இரணியன் மார்பை தம் நகங்களால் கிழிக்கும் நிலையில் காட்டப் பெற்றுள்ளார். இவரைத்தான் ஆழ்வார் 'அவுணன், பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்' (1). 'கொலைக் கையாளன் நெஞ்சு இடந்த கூருகிராளன்' (2). 'அவுணன் வாய்ந்த ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்' (3), 'பொன் பெயரோன் இன்னுயிரை வவ்வி ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மான்' (4) 'அவுணன் பொன்ற ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்' (5) 'எரிந்த பைங்கண் இலங்கு பேழ்வாய் எயிற்றோடு இது எவ்வுரு என்று, இரிந்து வானோர் கலங்கியோட இருந்த

அம்மான்' (6) 'மூவுலகும் பிறவும் அனைத்தும் அஞ்ச ஆளரியாய் இருந்த அம்மான்' (7) என்று மங்களா சாசனம் செய்துள்ளார்.

இத்திருக்கோயிலின் கீழ்த் திசையில் சுமார் முக்கால் கி. மீ. தொலைவில் கோயில் கொண்டிருப்பவர் **வராக நரசிம்மர்** (4). இவர் பூமிப் பிராட்டியைத் தம் மடியில் தாங்கிக் கொண்டு சேவை சாதிக்கின்றார். இங்கிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் செங்குத்தான 'கண்டாத்திரி' எனப்படும் குன்றில் கோயில் கொண்டிருப்பவர் **பிரகலாத நரசிம்மர்** (5). இவர் குகையொன்றில் இலக்குமி தன் மடியிலிருந்த வண்ணம் சாந்த மூர்த்தியாகக் காட்சி அளிக்கின்றார். இங்கிருந்த உற்சவமூர்த்தி **ஆதிவண்சடகோபரால்** (மடத்தை நிறுவியவர்) அகோபில மடத்தில் வைக்கப்பெற்றுள்ளதாக அறிகின்றோம். பிரகலாத நரசிம்மன் அருகில் 'பிரகலாத பாறை' என வழங்கும் கல்மேடை ஒன்றுள்ளது, இதிலமர்ந்துதான் பிரகலாதன் எம்பெருமானிடம் பாடங்களைப் பயின்றான் என்பது புராண வரலாறு. இங்கிருந்து 3 கி. மீ தொலைவில் 'உக்குஸ்தம்பம்' என வழங்கும் தூண் உள்ளது. இதுவே இரணியன் புடைத்த தூண்; எம்பெருமான் நரசிம்ம உருவமாய் வெளிப்பட்ட தூண்.

இங்கிருந்து சுமார் இரண்டரைக் கி. மீ. தொலைவில் சேவை சாதிப்பவர் **ஜுவால நரசிம்மர்** (6). இப்பெருமானுக்குக் கார்த்திகைத் திங்களில் நெய்யில் அல்லது எண்ணெயில் திருவிளக்கு ஏற்றும் வழக்கம் இருந்து வருகின்றது. இங்கிருந்து (அல்லது கீழ் அகோபிலத்திலிருந்து) சுமாக ஏழரை கி. மீ. தொலைவில் ஸ்வேதாத்திரிகுன்றில் எழுந்தருளியிருப்பவர் **பாவன நரசிம்மர்** (7). இவரைப் பார் முலிடி நரசிம்மர்' என்றும் வழங்குவதுண்டு. மலை அடிவாரத்தில் எழுந்தருளியிருப்பவர்

**மாலோல நரசிம்மர்** (8), இவரை ஆராதனை தெய்வமாகக் கொண்டு தான் பிற்காலத்தில் அகோபில மடம் நிறுவப் பெற்றதாக வரலாறு. மலையடிவாரத்திலிருந்து சற்றுத் தொலைவில் அட்சய தீர்த்தத்திற்கு அருகில் எழுந்தருளி யிருப்பவர் **பார்க்கவ நரசிம்மர்** (9). வடக்கு நோக்கிய திரு முக மண்டலத்தர். அட்சய தீர்த்தத்தில் என்றும் நீர் அமுத தாரையாய் வற்றாது இருக்கும். திருத்தலப் பயணி கட்கு நீர் வசதியை நல்குவது.

இந்த ஒன்பது நரசிம்மார்களையும் சேவித்து 'சென்று காண்டற்கரிய (5), 'தெய்வமல்லால் செல்லவொண்ணர்' (4) என்ற ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்டு அநு பவிக்கலாம். 'அல்லிமாதர் புல்க நின்ற ஆயிரம் தோளனை' (9) சேவித்த களிப்பில் மூழ்கலாம் இவளணைத்ததால் (பெரிய பிராட்டியார்) இவளைக் கட்டிக் கொள்ள ஆயிரந் தோள் உண்டாமாயிற்று'' என்ற பெரிய வாச்சான் பிள்ளையின் உரைநயத்திலும் ஆழங்கால் படலாம். இங் கிருந்து ஆழ்வார் திருவேங்கடம் வருகின்றார்.

**12. திருவேங்கடம்:**[28] கோயில் (திருஅரங்கம்) திருமலை, பெருமாள் கோயில் (காஞ்சி) என்று வைணவப்

---

28. இப்போது ஆந்திரமா நிலத்தில் சித்தூர் மாவட்டத்தில் தமிழகத்தின் வடதிசையில் உள்ளது இன்று பெரும்பான்மையோர் திருப் பதி மலையைத் **'திருப்பதி'** என்றே வழங்கு கின்றனர் விவரம் அறிந்தோர் இதனைத் **'திருமலை'** என்று கூறுகின்றனர். இம் மலை 'ஏழுமலை' என்றே வழி வழியாக வழங்கப் பெறு கின்றது. இன்று பேருந்து மூலம் இறங்கும் போது இம்மலையின் பெயர்ப்பலகையைக்காண லாம். இந்த வழியில் கீழிருந்து மேலே செல் லுங்கால் **எருத்து மலை** (விருஷபாத்திரி) **நீல மலை** (நீலாத்திரி), **மைவரை** (அஞ்சனாத்திரி),

பெருமக்களால் போற்றப் பெறும் மூன்று திவ்விய தேசங்களுள் இது நடுநாயகமாகத் திகழ்கின்றது. ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற 213 பாசுரங்களில் 62 பாசுரங்கள் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்றவை.[29] பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் திருவேங்கடமுடையான் பெருமையைப் பலவாறு பேசி இனியராகுகின்றார். எம்பெருமான் பல்வேறு அவதாரங்கள் எடுத்து மக்களுக்காகச் செய்த பல்வேறு நற்செயல்களை எடுத்துக் காட்டி அகமகிழ்கின்றார். திருவேங்கடமுடையான் குருந்தம் ஒசித்த கோபாலனாக வந்தவன்; கொக்கின் வடிவமாக வந்த அசுரனை வாய்பிளந்து வானுலகிற்கு அனுப்பிய வித்தகன் (பெரி. திரு. 1.8:1);

---

பாம்புமலை (சேஷாத்திரி), கருடமலை (கருடாத்திரி), நாராயணமலை (நாராயணாத்திரி), வேங்கடமலை (வேங்கடாத்திரி) என்ற மலைகளைக் (அத்திரி-மலை) காணலாம் இந்த மலை பற்றி மேலும் எழுதுவது 'நாடறிந்த பார்ப்பனனை' அறிமுகப் படுத்துவது போன்றது. இறைவன்; திருவேங்கட நாதன், திருவேங்கடமுடையான், சீநிவாசன், வேங்கடநாதன், பாலாஜி, வேங்கடாசலபதி. நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்: தாயார்: அலர்மேல் மங்கைத் தாயார் (திருச்சானூரில்)

29. இந்த ஆசிரியரின் 'வடநாட்டுத் திருப்பதிகள்' என்ற நூலில் பக் 3இல் விவரம் காண்க. இவற்றுள் நான்கு பதிகங்கள்: ஏனையவை உதிரிப் பாசுரங்கள். இவை பிற இடங்களைப் பாடும் போது இடையில் 'மின் வெட்டு போல்' தோன்றுபவை. விவரம்' ஆ. பா: 1.8; 1.9: 1.10; 2.1 (பதிகங்கள்); 4.3:8; 4.7:5 5 3:4; 5.5:1; 5.6:7; 6.8:1; 7.3:5; 7.10:3; 8 2:3; 9.7:4; 9.9:9; 10.1:2; 10.10:5; 11.3:7; 11.5:10; திருக்குறுந்-7; திருநெடுந்-16; சிறி-திருமடல் (39); பெரி-திருமடல் (6 2).

கல்நெஞ்சத்தையுடைய பூதனையிடம் பாலமுதம் பருகிய துடன் அவள் உயிரையே குடித்து அற்புதச் செயலைப் புரிந்தவன்; கிருதயுகத்தில் வெள்ளை நிறத்தையும்,கலியுகத் தில் கறுப்புநிறத்தையும், துவாபரயுகத்தில் நீலமணி நிறத் தையும் கொண்டிருப்பவர் (2). கண்ணனாக இருக்கும் பொழுது மருதிடைத் தவழ்ந்து நளகூபர மணிக்கிரீபர் களின் சாபத்தை நீக்கிய பெருமையுடையவன்; குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்து ஆநிரைகளின் துன்பத்தைப் போக்கியவன் (3). பார்த்தனுக்குச் சாரதியாக நின்று தேரோட்டியவன்; ஆயர்பாடியில் கோபியருடன் குரவைக் கூத்தாடிய கோவலன் (4). மாணியாய்ச் சென்று மண்ணி ரந்து கொண்டவன்; இராமனாக நின்று மராமரங்கள் ஏழினையும் ஓரம்பினால் எய்து அற்புதச் செயலைப் புரிந் தவன் (5). பாலனாய் எழுலகுண்டு ஆலிலையில் துயின்ற வன்; திண்திறல் அரியாகி ஒண்திறல் அவுணன் உயிர் குடித்த திறலுடையவன் (6). பஞ்சபூதங்களின் வடிவாய் நின்று பேராயிரம் பெயர்களைக்கொண்ட பெம்மான் (7).

இன்னும் ஏழுமலையப்பன் இராவணனின் திண்ஆகம் பிளக்க அம்பு கோத்தது, இலங்கை அரக்கர்களை மடியச் செய்தது, நீரார் கடலும் நிலமும் முழுதுண்டு ஆலிளந் தளிரில் துயில் கொண்டது, உரிமேல் நறுநெய்யை அமுது செய்தது, குறளுருவாய் நின்று ஈரடிகளால் நிலமனைத் தையும் கவர்ந்தது, அரியாய்த் தோன்றி அவுணன் உடல் பிளந்தது. முதலிய செயல்களில் ஆழங்கால் பட்ட வண்ணம் (பெரி. திரு.1.10;1-5) பல வேண்டு கோள்களை விடுக்கின்றார் ஆழ்வார். 'அடியேனுக்கு அருளாயே' என்றும், 'அடியேனுக்கு அருள் புரியாயே' என்றும், ''குறிக்கொள் எனை நீயே' என்றும் பிரார்த்திக்கின்றார். அடுத்து, திருவேங்கடமுடையான் அவருடைய திருவுள் ளத்தில் வந்து புகுந்த பெருஞ்செயலைப் பேசி அநுபவிக் கின்றார். 'திருவேங்கடம் மேய என் ஆனை என் அப்பன்

என் நெஞ்சில் உள்ளானே' (6) என்றும், 'திருவேங்கடம் மாமலை மேயகோனே! என் மனம் குடி கொண்டு இருந்தாயே' (7) என்றும் பேசி இனியராகின்றமையைக் காண முடிகின்றது.

எம்பெருமான் திறத்தை எடுத்துரைத்த ஆழ்வார் தம் குற்றங்களையெல்லாம் விரித்துக் கூறித் தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டிச் சரண்புகுகின்றார். "எம்பெருமானே, உறவினர் அல்லாதாரை உறவினர்கள் என்று நம்பிக்கெட்டொழிந்தேன்' (1. 9:1); அநுபவிக்கத் தகாதவற்றை அநுபவித்து எண்ணற்ற பாவங்களைச் செய்தேன் (2). பல உயிர்களைக் கொன்று பலவகைப் பாவங்களைப் பண்ணினேன் (3). எண்ணற்ற யோனிகளில் பிறந்து இளைத்தேன்; ஒரு விதமான நற்செயல்களையும் புரிந்தேன் இலேன் (4.5). பஞ்ச பூதங்களாலான யாக்கையில் புகுந்து புலம்பித் தளர்ந்தொழிந்தேன் (6). அறியாப் பருவத்தே பல அவச் செயல்களைச் செய்து விட்டேன்; இளமைப் பருவத்தில் பெண்டிற்காகவே அலைந்து சதிர் கேடனானேன் (7) இங்ஙனம் பாவமே செய்து பாவியான அடியேன் உன்னைவிட்டுத் தரிக்க மாட்டாத அன்பு பிறந்து உன்னையே அடைக்கலமாகப் பற்றிக் கொண்டேன். முன்னைத் தீவினைகளை எண்ணி என்னைக் கைவிடாது ஆட்கொள்ள வேண்டும்" என்று கூறி, பாசுரங்கள்தோறும் 'வந்து அடைந்தேன்; அடியேனை ஆட்கொண்டருளே' என்று ஒரு முறைக்கு ஒன்பது முறை பன்னியுரைக்கின்றார்.

இத்திருத்தலம்பற்றிய நான்காம் திருமொழியில் (2.1) ஆழ்வார் 'பகவத் விஷய அநுபவம் எல்லார்க்கும் இல்லையாயிருக்க, தமக்கு மட்டிலும் கிடைக்க வேண்டியதற்குக் காரணம் யாது?' என்பதை ஆராய்ந்து பேற்றுக்கும் இழவுக்கும் நெஞ்சுதான் முதலடியானது என்று

துணிந்து, அந்த நெஞ்சைக் கொண்டாடும் போக்கில் ஒவ்வொரு பாசுரத்திலும் 'திருவேங்கடமுடையானுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே? திருவேங்கடமுடையானுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே!' என்று ஒரு முறைக்கு என்பது முறையாகச் சொல்லி மகிழ்கின்றார். நம் நாட்டில் நெஞ்சை வேறு படுத்திச் சொல்வது கவி மரபு. நெஞ்சைத் தூது விடுவதாகவும் சொல்லும் முறை உண்டல்லவா? இத்திருமொழியால் ஆழ்வார் தமது நெஞ்சைப் புகழ்ந்து பேசும் முகத்தால் திருவேங்கடமுடையானை அநுபவித்து இனியராகின்றார். இத்துடன் வடநாட்டுத் திருத்தலப் பயணம் நிறைவுபெறுகின்றது. தொண்டை நாடு செல்லத் திருவுள்ளம் கொள்ளுகின்றார் ஆழ்வார்.

# 5. தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணம்

வடநாட்டுத் திருத்தலப் பயணத்தை முடித்துக் கொண்ட பரகாலன் சான்றோர்கள் நிறைந்த தொண்டை நாட்டைத் திருவுளங் கொண்டு முதலில் **திருவள்ளூரில்**[1] தம் திருவடியை வைக்கின்றார். பெரும்பாலும் ஆழ்வார் பாடிய பாசுரங்கள் யாவும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பதிப்புகளில் அவர் பயணம் செய்த தல வரிசைகளிலே அமைந்திருப்பதாகக் கருதலாம். சைவ இலக்கியததிற்கு **'பெரிய புராணம்'** என்ற ஓர் அருமையான வரலாற்றுக் காவியம் அமைந்திருப்பதுபோல் வைணவ இலக்கியத்திற்கு அமையாதது ஒரு பெருங்குறை. இத்திருத்தலத்து எம்பெருமானை திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியால் (2.2) மங்களாசாசனம் செய்துள்ளார். வழக்கப் போல் இவர் பாசுரங்களில் காணப்பெறும் திருத்தலத்தின் நீர்வளம், நிலவளம், இயற்கை அழகு முதலியவை இத்திருமொழியில் காணப் பெறவில்லை. எம்பெருமானைப் பற்றிய செய்திகள் மட்டுமே நிறைந்தது இத்திருமொழி.

1. **திருவள்ளூர்:** இது சென்னைக்கு வடமேற்குத் திசையில் சென்னை-அரக்கோணம் இருப்பூர்தி வழியிலுள்ள திருவள்ளூர் நிலையத்திலிருந்து சுமார் இரண்டு கல் தொலைவிலுள்ளது. குதிரை

காசை யாடை மூடியோடிக்
    காதல்செய் தானவனூர்
நாச மாக நம்பவல்ல
    நம்பி நம்பெருமான்
வேயின் அன்ன தோள் மடவார்
    வெண்ணையுண் டான்இவனென்று
ஏச நின்ற எம்பெருமான்
    எவ்வுள் கிடந்தானே (1)

[காசை ஆடை-கல்லாடை (காஷாயம்); மூடி-மறைத்து; கானவன்-அரக்கன் (இராவணன்); நம்ப-சஙகற்பித்த; வேய்-மூங்கில்; மடவார்-பெண்கள்; ஏச-பரிகசிக்க]

என்பது முதல் பாசுரம், முன்னிரண்டடிகளில் இராமாவதார நிகழ்ச்சியினையும் பன்னிரண்டடிகளில் கிருட்டிணாவதார நிகழ்ச்சியினையும் அநுசந்திக்கின்றார் ஆழ்வார். மாயமான் வடிவுகொண்டு மாரீசன் இராமனையும் இலக்குவனையும் பிரித்த காலத்தில் இராவணன் சந்நியாசி கோலத்துடன் சீதாப்பிராட்டி இருக்கும் இடம்

வண்டி, மாட்டுவண்டி, பேருந்து வசதிகள் உள்ளன. சாலிஹோத்திர முனிவரால் ஏற்பட்ட ''எவ்வுள்'' என்ற பெயர் 'எவ்வுள்ளூர்' என்ற பெயராகி நாளடைவில் பல மாற்றங்கள் பெற்று 'திருவெள்ளூர்' என்ற பெயராக நிலைத்து விட்டது. **எம்பெருமான்** எவ்வுள் கிடந்தான் (மூலவர்) கிழக்கு நோக்கிய திருமுருக மண்டலம் சயனத் திருக்கோலம். உற்சவர், வீரராகவன்; **தாயார்:** கனகவல்லி. பெரி. திரு. 2.2 (பதிகம்); பெரி. திருமடல் (57) இத்திருத்தலம் பற்றிய விவரமான குறிப்புகளை இந்த நூலாசிரியரின் தொ. நா. தி. என்ற நூலில் (எட்டாவது கட்டுரை) காண்க.

வந்து பிச்சை கேட்டு அவளுடைய வடிவழகைக்கண்டு காதல் கொண்டதும், தன் செல்வச் சிறப்பையும் வெற்றிச் சிறப்பையும் விரிவாகச் சொல்லித் தன்னைக் கணவனாக ஏற்றுக்கொள்ளுமாறு பிதற்றியதும், அதனைச் செவி மடுத்த பிராட்டி மிக்க சினங்கொண்டு அவனை நோக்கிப் பல அவமானம் விளைவிக்கும் சொற்களைச் செப்பியதும், பின்பு இராவணன் தன் உண்மை உருவத்தைக் காட்டிப் பிராட்டியைத் தேரேற்றிக் கொண்டு போய் இலங்கையில் சிறை வைத்ததும் இதுவே காரணமாக அவன் நாசம் அடைந்ததுமான வரலாறு முன்னிரண்டு அடிகளில் குறிப்பிடப் பெற்றுள்ளது. கண்ணன் திருவாய்ப்பாடியில் திருவிளையாடல்கள் செய்தருளுங் காலத்து ஆய்ச்சியர் கைப்பட்ட வெண்ணெயைக் களவாடி அமுது செய்ததும் அக்களவுத் தொழில்களை அவர்கள் எடுத்துக்காட்டி கண்ணனை எள்ளி நகையாடியதுமான வரலாறு பின்னிரண்டு அடிகளில் காட்டப் பெற்றுள்ளது. இத்தகைய வீரனும் எளியனுமான எம்பெருமானே திருவெவ்வுள்ளூரிலே திருக்கண்வளர்ந்தருள்கின்றதாக ஆழ்வார் திருவுள்ளங்கொள்ளுகின்றார்.

வடிவழகு மிக்க சீதையின்மீது காதல் கொண்ட இராவணனுடைய பொன்முடிகள் பத்தும் போர்க்களத்தில் உருளும்படி சரந்துரந்தவன் **வீராகவன்.** இந்தச் சிரமந் தீர திருவெவ்வுள்ளூரில் திருக்கண்வளர்ந்தருள் கின்றான் (2). இராமாவதார காலத்தில் சிறிய திருவடி தூதுசென்றதால் பெற்ற ஏற்றத்தைக் கண்டு, அந்தக் குறைதீர, இழிகுலத்திலே வந்து பிறந்து பாண்டவர்களுக் காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூது சென்று பாண்டவ தூதன் என்று பேர்பெற்றவன் இங்குக் கண்வளர்ந்தருள் கின்றான் (3). நப்பின்னைப் பிராட்டியை மணம் புரிவதற்காக அவளுடைய தந்தையின் நியமனப்படி ஒருவர்க்கும் அடங்காத ஏழு எருதுகளை வலியடக்கின பெருவீரனே இங்குக் கண்வளர்ந்தருள்கின்றான் (4).

பாலனாகி ஏழுலகினையும் திருவமுது செய்து ஆலிலைமேல் பள்ளிக்கொண்டவனும் இவனே (5). அந்த எம்பெருமான் இங்குப் பரத்துவமும் சௌலப்பியமும் வாய்ந்த புருடோத்தமன். 'நம்பிசோத்தம்' என்று சொல்லித் தொண்டர்களால் அழைக்கப்படும் உயிர்த் தோழன். இப்படி எளியனாக அழைக்க உரியவனாக இருப்பினும் இவன் சாதாரணமானவன் அல்லன். தேவர்கட்கெல்லாம் மூத்தவன் என்றும், முக்கண்ணனுக்கு அந்தர்யாமியாக இருந்து செயலாற்றுபவன் என்றும் உண்மையை யறிந்த முனிவர்களால் தொழுதேத்தப் பெறுகின்றவன் (6). செயற்படும் பொருள்களையெல் லாம் தனக்கு உடலாகக் கொண்டுதான் அவற்றுக்கு ஆன்மாவாக இருப்பவன் இவனே. உலகங்களைப் படைத்த நான்முகனையும் படைத்தவன் இவனே. சாம வேதத்தால் பிரதிபாதிக்கப் பெற்றவனும் இவனே யாவன் (7). தனது திருமேனியில் ஒரு பக்கத்திலிருக்கும் சிவபெருமானும் உலகளந்த எம்பெருமானின் திருவடி களைத் தன் தலைமேல் சூட்டிக் கொண்டுள்ளான் (8). பெரிய பிராட்டியார் 'அகலகில்லேன் இறையும்' என்று தங்கி வாழும் திருமார்பையுடையவன்; நீலமேனி சாமள வண்ணனாகிய இவன் தேவேந்திரனுக்கும் நாதன் (9). இப்பதிகத்திலுள்ள பலசுருதிப் பாசுரம் நீங்களாக ஒன்பது பாசுரங்களும் **'எவ்வுள்கிடந்தானே'** என்று முடிகின்றன. அடுத்து திருநின்றவூர் வருகின்றார் ஆழ்வார்.

2. **திருநின்றவூர்**[2] : நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஊர். இதனால் இந்த ஊருக்கு இலக்குமி

---

2. **திருநின்றவூர்** இருப்பூர்தி நிலையம்; நிலையத்திலிருந்து சுமார் ஒரு கல் தொலைவில் இருப்பது இத்திருத்தலம். **எம்பெருமான்:** பக்த வத்சலர் (பத்தராவிப் பெருமாள்) கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம்.

பொருந்திய தலம் எனப் பொருள்படும் **'திருநின்றவூர்'** என்று பெயர் ஏற்பட்டதாகக் கருத இடம் உண்டு. இத் திருத்தலத்திற்கு ஆழ்வாரின் தனிப்பாசுரமோ பதிகமோ இல்லை. திருக்கடல் மல்லை எம்பெருமானை மங்களா சாசனம் செய்யும்போது,

**'நின்றவூர் நித்திலத்தை'**[3]

என்றும், திருக்கண்ண மங்கை எம்பெருமானுக்குச் சொல் மாலை சாத்தும் போது,

**'நின்றவூர் நித்திலத் தொத்தினை'**[4]

என்றும் மங்களா சாசனம் செய்து விடுவதைத்தான் காண முடிகின்றது. இந்த இரண்டு பாசுரத் தொடர்களிலும் எம்பெருமானின் நின்ற திருக்கோலம் காட்டப் பெறுகின்றது. ஆழ்வார் இத்திருத்தலத்திற்கு வந்ததாகக் கருதுவோரும், வரவில்லை எனக் கருதுவோரும் உண்டு.[5] அடுத்து சென்னை வருகின்றார் ஆழ்வார்.

3. **திருவல்லிக்கேணி** : இத்தலத்து எம்பெருமானை ஆழ்வார் ஒரு திருமொழியால் (2.3) மங்களா சாசனம் செய்துள்ளார்.

---

**தாயார்** : என்னைப் பெற்ற தாயார். பெரி. திரு. 2.5:2; 7.10:5 மேலும் விளக்கம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **''தொண்டை நாட்டுத் திருப்பதிகள்''** என்ற நூலில் 9-வது கட்டுரை காண்க.

3. பெரி. திரு. 2.5:2
4. ஷை 7.10:1
5. விவரம் **'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்'** (9-வது கட்டுரை) - பக் 146-148 காண்க.

3. **திருவல்லிக்கேணி** : சென்னையில் ஒரு பகுதி மெரீனா கடற்கரையிலுள்ளது. பார்த்த சாரதி, மந்நாதன், சக்கரவர்த்தித் திருமகன், தெள்ளிய

விற்பெரு விழவும், கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னை, புரம்எரி செய்த
சிவன்உறு துயர்களை தேவை
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்தன் தேர்முன் நின்றானை,
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே (1)

[வில்பெருவிழவு-கம்சன் தன் வில்லுக்கு எடுத்த பெருவிழா;மல்-மல்லர்கள்; வீழ-நாசம் அடைய; வேழம்-யானை (குவலயா பீடம்); களை-போக்கும்; பற்றலர்-பகைவர்; வீய-மாள; சிற்றவை-கையேயி]

என்பது முதற் பாசுரம். திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? கம்சன், மல்லர்கள், குவலயாபீடம், பாகன்—இவர்களை முடித்து வில் விழாவையும் முடித்தவன்; சிவனது சாபத்தைப் போக்கியவன். சாட்டை பிடித்து பார்த்தனுக்குச் சாரதியாக நின்றவன்; சிற்றன்னையின் சொல்லால் முடிதுறந்தவன் (1).

சிங்கர், தேவப்பெருமாள் (வரதராசர்) ஆகிய ஐந்து மூர்த்திகளாலும் ஆழ்வாரால் மங்களாசாசனம் பெற்றவர்களாதலின் இது **'பஞ்சமூர்த்தி தலம்'** என்று வழங்கப் பெறுகின்றது. கருவறை எம்பெருமான்: **வேங்கடக்கிருஷ்ணன்;** மூலவர் நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். உற்சவர்: **பார்த்தசாரதி** தாயார்: **உருக்குமிணிப் பிராட்டியார்.** இவர் எம்பெருமான் பக்கத்தில் நின்று சேவை சாதிக்கின்றார். பெரி. திரு 2.3 (பதிகம்). மேலும் விவரங்களை அறிய வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **'தொண்டை நாட்டுத் திருப்பதிகள்'** என்ற நூலில் 10-வது கட்டுரை காண்க.

வேத சொரூபி; அவரவர் வினைகேற்ற பலன்களைத் தருபவன். முனிவர்கள் நுகரும் கோதற்ற கனி போன்றவன்; நந்தனுக்கு ஆனைக்கன்று போன்ற பிள்ளை. ஜகத் காரணபூதன்; அமுதம் போன்ற இனியன் (2). தாயுருவாக வந்த பூதனையை முடித்தவன்; அசுரர்கட்கு யமன் போன்றவன்; மோகினி உருவந்தாங்கி தேவர்கட்கு அமுதளித்தவன் (3). ஆயர்களையும் ஆநிரைகளையும் கல்மாரியினின்றும் காத்தவன் (4). பெரிய பிராட்டிக்கு இன்பன்; பூமிப் பிராட்டிக்கு நாதன்; நப்பின்னைப் பிராட்டியின் நாயகன். மற்றவர்கட்குத் துணையாயிருப்பவன்; பாண்டவதூதன் (5). பாஞ்சாலியின் மானங் காத்து நூற்றுவர் மனைவிமார் தாலியை இழக்கச் செய்தவன்; பார்த்தனுக்குச் சாரதியானவன் (6). பரதாழ்வான், சத்துருக்கனாழ்வான், இளையாழ்வான், சீதாப்பிராட்டி தோத்திரம் பண்ணும் படியாக இருப்பவன்; இராவணனை முடித்தவன் (7). பிரகலாதன் பொருட்டு நரசிம்மனாக அவதரித்து இரணியனை முடித்தவன் (8). முதலையைக் கொன்று ஆனையின் துயர் தீர்த்தவன் (9). இந்தப் பெருமானைச் சேவித்த பின்னர் ஆழ்வார் திருநீர்மலை வருகின்றார்.

4. **திருநீர்மலை:**[6] திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியில் (2.4) மங்களாசாசனம் செய்கின்றார்.

அன்றாயர் குலக்கொடியோடு அணிமாமலர்
  மங்கையோடு அன்பளவி அவுணர்க்கு
என்றானும் இரக்கமி லாதவனுக்கு
  உறையும்இட மாவது இரும்பொழில்சூழ்

6. **நீர்மலை:** பல்லாவரம் என்ற மின் - இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் இரண்டு கல் தொலைவிலுள்ளது **எம்பெருமான்:** நீர்வண்ணன். நின்ற திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** அணிமாமலர் மங்கை நாச்சியார்.

நன்றாய புனல்நறையூர் திருவாலி
குடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தார்க்கு
இடம்மா மலையாவது நீர்மலையே (1)

[ஆயர் குலக்கொடி-நப்பின்னை; அணிமாமலர் மங்கை-உருக்குமிணி; அவுணர்-இராக்கதர்-புனல்-தீர்த்தம்: குடந்தை-கும்பகோணம்; தடம்: தடாகம்; கோவல் நகர்-திருக்கோவலூர்]

என்பது முதற் பாசுரம். திருநறையூரில் நின்ற திருக்கோலமாகவும், திருவாலியில் நரசிங்க உருவில் வீற்றிருந்த திருக்கோலமாகவும், திருக்குடந்தையில் சயனத் திருக்கோலமாகவும், திருக்கோவலூரில் உலகளந்த திருவடிகளை நீட்டி நடக்கும் திருக்கோலமாகவும் சேவை சாதிக்கும் எம்பெருமான் இந்த நான்கு வகைத் திருக்கோலங்களையும் இந்தத் திவ்விய தேசம் ஒன்றிலேயே கொண்டருளிச் சேவை சாதிக்கும் திருக்குணத்தை ஆழ்வார் அநுபவித்துப் பேசுகின்றார். அடிவாரத்தில் நீர்வண்ணர் (நின்ற திருக்கோலம்), மலையின் மீது சாந்நரசிம்ம மூர்த்தி (இருந்த திருக்கோலம்), அரங்கநாதர் (கிடந்த திருக்கோலம்) உலகளந்த மூர்த்தி (நடந்த திருக்கோலம்) சேவை சாதிப்பதை இன்றும் நாம் காண்கின்றோம்.

---

மலைமீது (1) அரங்கநாதர் (சயனத் திருக்கோலம்); தெற்கு நோக்கியதிருமுக மண்டலம். அவர் முன்னதாக அரங்க நாயகி. (2) சுற்று வழியில் உலகளந்த மூர்த்தி (நடந்ததிருக்கோலம்); சாந்த நரசிங்கமூர்த்தி (இருந்த திருக்கோலம். சக்ரவர்த்தின் திருமகன் (அடிவாரத்தில்) பெ. திரு. 2.4 (பதிகம்); 2.7:8: 5.2:8; 6.8:4; 7.1:7; 8.2:3; 9.2.8; 10.1:1; திருநெடுந். 13;சிறி. திருமடல் (39); பெரி. திருமடல் (67). மேலும் விவரம் அறிய வேண்டுவோர் இந்த ஆசிரியரின் தொ. நா. தி என்ற நூலில் 11-வது கட்டுரை காண்க.

இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் எப்படிப் பட்டவன்? காண்டவ வனத்தை அக்நி பகவான் உட்கொள்ள நியமித்தவன்; பாரதப் போரில் பூமியின் பாரங்களைத் தீர்த்து உலகங்களைக் காப்பாற்றியவன்; இரணியனின் மார்பைப் பிளந்தவன்: வாமனனாய் வந்து திரிவிக்கிரமனாய் வளர்ந்தவன் (2). திருமேனியில் திருவாழி யையும் கலப்பை, சங்கு இவற்றையும் தரித்துக் கொண் டிருப்பவன்; பாரதப் பெரும்போரில் திருவாழியினால் பகலவனை மறைத்தவன் (3). இரணியனை மாய்த்து அவன் பெண்டிர்களைத் தீக்குளிக்கச் செய்தவன். பாண்டவ சகாயனாயிருந்து நூற்றுவரை மாள்வித்தவன்; பாஞ்சாலியின் மானத்தைக் காத்தருளினவன் (4). சேது கட்டி இலங்கை சென்று இராவணனை நான்முகன் கணையினால் கொன்றொழித்தவன் (5). பாலனால் எழுலகுண்டும், ''இன்னும் வயிறு நிறையவில்லையே'' என்றவன்; சத்திரியப் பூண்டை பரசுராமனாகத் தோன்றி ஒழித்தவன். நீர்வண்ணன் என்னும் திருநாமத்தை யுடையவன் (6). பௌண்ட்ரக வாசுதேவனைப் பரலோகத் திற்கு அனுப்பியவன்; இரணியனுடைய மார்பைப் பிளந்து அவனைக் கொன்றொழித்தவன் (7).

இவ்வாறு எம்பெருமானுடைய வீரச் செயல்களைப் பேசி அநுபவித்த ஆழ்வார் ''திருநீர் மலையின் சிறப் பினைச் சொற்களால் பேசித் தலைக்கட்ட முடியாது. நான் சொல்லுவதை இப்போது நீங்கள் கேட்பீர்களாக. இத் திருப்பதி தன்னைப் பணிவார்களின் வினைகளை வேருடன் களைந்து விடுமாதலின், இதுவே நாம் உய்வதற்கு உரிய இடமாகும். புலன்வழியொழுகி மதிகெட்ட நீசர்கள் சென்று கிட்டமுடியாத எம்பெருமான் இங்கு திருக்கோயில் கொண்டுள்ளான். ஆகவே அவன் இருப்பிடம் செல்வோம், வாருங்கள்!'' என்று தாயுமான அடிகள் ''சேர வாரும்

செகத்தீரே''[7] என்று அழைப்பதுபோல் நம்மை அழைக்கின்றார் ஆழ்வார். பின்னர் கடல் மல்லைக்கு ஏகுகின்றார்.

5. **திருக்கடல் மல்லை:**[8] இத்திருத்தலத்தை இரண்டு திருமொழிகளால் (2-5;2-6) மங்களாசாசனம் செய்துள்ளார் ஆழ்வார். எம்பெருமானின் சயனத் திருக்கோலம் கண்டோர் மனத்தைக் கவரத் தக்கது. இந்தச் சயனத் திருக்கோலத்திலும் பலவகை உண்டு. 108 திவ்விய தேசங்களில் அவர் கிட்டத்தட்ட இருபதில் அனந்தன்மீது சயனம் கொண்டுள்ளார். இதனைப் 'பாம்பணைப் படுக்கை' (புயங்க சயனம்) என்று வழங்குவர். ஏனைய இடங்களில் உள்ளவை: உத்தியோக சயனம், தர்ப்பசயனம் (புல்படுக்கை-புல்லணை), போக சயனம் (இன்பப் படுக்கை), மாணிக்க சயனம், வடபத்திர சயனம் (ஆலிலைப் பள்ளி), வீரசயனம் என்பவையாகும். மாமல்லபுரத்தில் எம்பெருமான் கொண்டுள்ள திருக்கோலம் மேற்கூறிய வகையுள் ஒன்றிலும் அடங்காது. இங்கு வெறுந் தரையில் படுத்துக் கிடக்கின்றான். இறைவன் படுக்கப் பாயும் இன்றி தலைக்கு அணையும் இன்றித் தரையில் கிடக்கின்றான். இதனைத் '**தல சயனம்**' என்றே

7. காடும் கரையும்-என்ற மூன்று பாடல்களில்.
8. **திருக்கடல்மல்லை**: மாமல்லபுரம் என இன்று வழங்கும் இடம். சென்னையிலிருந்து 37 கல் தொலைவு. கடற்கரைத் தலம். காஞ்சியிலிருந்தும் செங்கற்பட்டுவிலிருந்தும் இவ்வூருக்கு வரலாம். பேருந்து வசதி உண்டு. **எம்பெருமான்**: தலசயனப் பெருமாள். கிடந்த திருக்கோலம் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் **தயார்**: நிலமங்கை நாச்சியார். ஆ. பா: பெரி திரு. 2.5; 2.6 (பதிகங்கள்)! 3:5 : 8; 7 : 4; திருக்குறு. 19); திருநெடும் 9; சிறி-திருமால் (39); பெரி திருமடல் (58) மேலும் விவரம் வேண்டுவோர் தொ.நா.தி. என்ற நூலில் 13-வது கட்டுரை காண்க.

வழங்குகின்றனர். இங்ஙனம் தரையில் எழுந்தருளியிருக்க நேர்ந்ததற்கு ஒரு புராண வரலாறு உண்டு.[9]

அர்ச்சையில் எம்பெருமானைக் காணும் திருமங்கை யாழ்வாருக்கு எம்பெருமானின் வியூக விபவாவதார வீரச் செயல்கள் பலவற்றைத் திருவுள்ளங்கொண்டு அவரது பெருமைக் குணத்தில் தம் மனத்தை ஈடுபடுத்து கின்றார். பெரும்பாலும் கண்ணனது வீரச் செயல் களே அவரது திருவுள்ளத்தில் ஒருசேரத் தோன்றி குமிழியிடத் தொடங்குகின்றன. அவற்றைப் பாசுரங்க ளாகப் பேசி இனியராகின்றார். திருக்கடல் மல்லைப் பெருமான் பாலனாய் ஏழுலகுண்டு உமிழ்ந்தவன்; பாற் கடலில் துயில் அமர்ந்து பல்வேறு செயல்களைக் கவனிப் பவன்; கடும்பரிமேல் கற்கியாக வரப்போகின்றவன்; வளைமருப்பின் ஏனமாகிப் பாரிடத்தை எயிறு கீற இடந்தவன்; இருநிலனும் பெருவிசும்பும் இரண்டடி கட்குப் போதா என்று அளந்து கண்டவன்; இலங்கையி லுள்ள வலியரக்கர் பெருவரைத் தோள் இறும்படி நெரித்தவன்; மாயமான் மாயப் பின் தொடர்ந்தவன்; அணிகள் பூண்ட அவுணர் கோனின் ஆகத்தைப் பிறை எயிற்று அடல் அரியாய் நின்று பிளந்தெறிந்த பெம்மான்; பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்து அரக்கர்கள் உண்ணாதபடி செய்தவன்; கசேந்திரனுடைய இடர் களைந்தவன். இந்த எம்பெருமானே நின்றவூர் நித்திலமாக இருப்பவன்; தஞ்சை மாமணிக்கோயிலில் எழுந்தருளியிருப் பவன்; தண் ஆர்ந்த வருபுனல்சூழ் திருமெய்யத்தடவரை மேல் பணங்கள் மேவிக் கிடக்கின்றவன்; நான்கு வேதங் கள், ஐந்து வேள்விகள், ஆறு அங்கங்கள் இவற்றைக் கண்டவன்.

9. **தொ. நா. திருப்பதிகள்** (கட்டுரை-13) பக். 219 காண்க.

இங்ஙனம் திருமங்கையாழ்வார் எம்பெருமானைப் பற்றிப் பேசி மகிழும் ஒரு பாசுரத்தை ஈண்டுக் காட்டு வேன்.

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றானை அன்று பேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்று மேய்த்து
விளையாட வல்லானை வரைமீகானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையங் காக்கும்
கடும்பரிமேல் கற்கியை நான் கண்டு கொண்டேன்.
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசய னத்தே
(2.5:3)

[உரு-வடிவம்; உய்ய-பிழைக்க; வித்தகன்-ஆச்சரியமானவன்; வரைமீகான்-மலைமீதுள்ள காடு; தடம்-குளம்; கருமுகில்-காளமேகம்; நெறி-வழி; கடி-மணம்]

என்பது பாசுரம். இதில் அடங்கியுள்ள வைணவ தத்து வத்தை விரிவஞ்சி விளக்க முடியவில்லை.[10] ஒவ்வொரு பாசுரமும் எம்பெருமானைக்

'கடிபொழில்சூழ் கடல்மல்லைத்
தலசய னத்தே'

என்று முடிகின்றது.

கண்ணனாக அவதரித்து நிறைவேற்றின திருவிளை யாடல்களே அதிகமாக இத்தலத்து எம்பெருமானின் செயல்களாகப் பேசுகின்றார் ஆழ்வார். ஆழ்கடலில் தோன்றின அமுதத்திற்கு நிகரான எம்பெருமான் குதிரை

10. தொ. நா. தி. பக். 221-223 கண்டு தெளிக.

வடிவாக வந்த **கேசி** என்னும் அசுரது வாயைக் கிழித்தெறிந்து அவனைக் கொன்றவன்; கம்சனின் குவலயாபீடம் என்ற யானைகளின் கொம்புகளைப் பறித்து முறித்தெறிந்தவன்; அருச்சுனனைக் கருவியாகக் கொண்டு காண்டவ வனத்தைக் கனல் எரிவாய்ப் பெய்வித்தவன்; நஞ்சு தடவப் பெற்ற முலையுடன் பாலூட்ட வந்த பூதனையிடம் பாலமுதம் பருகி அவளது உயிரையும் குடித்த வித்தகன்; கோகுலங்கள் ஆநிரைகள் தளராமல் குன்றம் ஏந்திக் கல் மாரி தடுத்தவன்; ஆயர் பாடியில் சேமித்து வைத்திருந்த தயிர் வெண்ணெய் அனைத்தையும் அமுது செய்து களித்தவன். இடைப்பெண்களோடு குரவைக் கூத்தாடியவன். அடுக்கின குடங்களைக் கொண்டு குடக்கூத்து ஆடியவன்; பாண்டவர்க்காகத் தூது சென்றவன்; பொய்யாசனம் இடுவித்து நிலவறையில் நிறுத்தி வைத்த மல்லர்கள் யாவரையும் ஒருசேரக் கொன்றொழித்த மாவீரன். இத் திருமொழியை (2.5) ஓத வல்லவர்கள் முன்னைத் தீவினைகளை வேரோடறுத்துத் தொலைத்திட்டு நித்தியானந்தம் அநுபவிக்கப் பெறுவார்கள் என்று பலன் சொல்லித் பதிகத்தைத் தலைக் கட்டுகின்றார்.

அடுத்த திருமொழி (2.6)யில் ஆழ்வார் தாம் பாகவத பக்தியில் ஊறினபடியை வெளியிடுகின்றார். பாகவத பக்தி என்பது, பகவத் பக்தியின் எல்லை நிலமாக உண்டாவது. ஆகவே,

> தண்ணார்ந்த கடல்மல்லைத்
> 　　தலசயனத் துறைவாரை
> எண்ணாதே இருப்பாரை
> 　　இறைப்பொழுதும் எண்ணோமே (1)

என்று கூறுவர். இந்தக் கருத்திலேயே ஒவ்வொரு பாசுரமும் முடிவுறுகின்றது. கடல் மல்லையில் வராக மூர்த்தியின் திருக்கோயில் ஒன்றும் உண்டு. இஃது ஒரு குகைக்

கோயில். இந்தக் கோயிலில் பூசை முதலியன நடைபெறு கின்றன. இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் **ஞானப்பிரான்**[11] என்ற திருநாமத்தையுடையவர். இவரை ஆழ்வார்,

ஏனத்தின் உருவாகி
நிலமங்கை எழில்கொண்டான்
வானத்தில் அவர்முறையால்
மகிழ்ந்தேத்தி வலங்கொள்ள,
கானத்தின் கடல்மல்லைத்
தலசயனத்து உறைகின்ற
ஞானத்தின் ஒளியுருவை
நினைவார் எம்நாயகரே (3)

[ஏனம்-வராகம்; நிலமங்கை-பூமிப் பிராட்டி யார்; எழில்-அழகு; வானத்தில் அவர்-தேவர் கள்; ஏத்தி-துதித்து; கானம்-காடு; நாயகர்-தலைவர்]

என்ற பாசுரத்தால் மங்களாசாசனம் செய்து மகிழ்கின் றார். வராகப் பெருமானுக்கு 'ஞானப்பிரான்' என்று திருநாமம் வழங்குதல் வைணவ சம்பிரதாயம். அது தோன்றவே பாசுரத்தில் 'ஞானத்தின் ஒளி உரு' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது[12]. இங்கு எம்பெருமான் தனது வலக் காலை ஆதிசேடன் மீது வைத்துக் கொண்டும்

---

11. ஞானப்பிரானைப் பற்றியும் ஒரு வரலாறு ஒன்று உண்டு. இதனை **தொண்டை நாட்டுத் திருப்பதிகள்** என்ற நூலில் பக். 221-222-இல் கண்டு தெளிக.

12. திருவிருத்தம்-99 இலும் நம்மாழ்வார் 'ஏனத் துருவாய் இடந்த பிரான் ஞானப் பிரான்' என்று அருளியுள்ளதை ஈண்டு நினைவு கூரலாம்.

இடத்துடையின்மீது பூமிப் பிராட்டியைத் தாங்கிக் கொண்டும் உள்ளார். இவர் '**திருவல எந்தை**' எனவும் வழங்கப்படுகின்றார்.

திருமால் வராக அவதாரமாக வந்த காலத்தில் நெடுங் காலம் காட்டில் விளையாடிப் பொழுது போக்கினதாகப் புராண வரலாறு ஒன்று உண்டு. இதனைத் திருவுள்ளத்தில் கொண்டே பெரியாழ்வாரும்,

வானத் தெழுந்த மழைமுகில் போல்,
கானத்து மேய்ந்து களித்து விளையாடி
ஏனத்து உருவாய் இடந்தஎம் மண்ணினை
தனத்தே வைத்தான்.[13]

[வானம்-ஆகாயம்; முகில்-மேகம்; கானம்-காடு; இடந்த-கோட்டால் குத்தி எடுத்த; மண்-பூமி; தானத்து-அதன் இருப்பிடத்தில்]

என்று அருளிச் செய்துள்ளமை ஈண்டு எண்ணி மகிழத் தக்கது. அடுத்து, ஆழ்வார் 'திருஇட எந்தை' என்ற தலத்திற்கு வருகின்றார்.

6. **திருஇட எந்தை:**[14] இத்தலத்து எம்பெருமான் திருமங்கையாழ்வாரின் திருவுள்ளத்தை மிகவும் கவர்ந்த வராகமே காணப்பெறுகின்றார் திருமலைக்குச் சென்று ஏழுமலையானை மங்களாசாசனம் செய்யும் பொழுதும் இவர் இந்த ஆழ்வாரின் திருவுள்ளத்தில் இடம் பெற்றிருந் தமையைக் காணலாம்.

---

13. பெரியாழ். திரு. 2.10 9

14. **திருவிட எந்தை:** கடல மல்லையிலிருந்து சற்றே றக்குறைய ஐந்து கல் தொலைவிலுள்ளது. இது வும் கடற்கரைப் பகுதியிலுள்ள தலமேயாகும். மாமல்லபுரத்திலிருந்து சென்னை செல்லும் பேருந்தில் ஏறி இவ்வூரருகில் இறங்கி ஒரு ஃபர் லாப் தூரம் நடந்து சென்றால் இத்திருக்

ஏத்துவார்தம் மனத்துள் ளான், இட
வெந்தை மேவிய, எம்பிரான்,
தீர்த்தநீர்த் தடம்சோலை சூழ்திரு
வேங்க டம்அடை நெஞ்சே[15]

[ஏத்துவார்தம்-துதிப்பவர்களுடைய; மேவிய-பொருந்திய; தடம் சோலை-பெரிய சோலை]

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறியலாம்.

இத்திருப்பதி எம்பெருமானைப் பற்றிய ஆழ்வார் பதிகம் தாய்ப்பாசுரங்களாக நடைபெறுகின்றது இங்கு ஆழ்வாரிடம் நாயகியின் நிலை ஒரு புறத்திலும் தாயின் நிலை மற்றொரு புறத்திலும் எழுவதைக் காண்கின்றோம். பெற்றோர் அல்லது உறவினர் துணையின்றித் தானாகவே புணர்ந்து தலைவனுடைய மேம்பாட்டிலே மிகவும் ஈடுபட்டுத் தான் பிறந்த குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் 'அவனைக் கிட்டியல்லது நான் உயிர் வாழேன்' என்று பதற்றத்தை யுடையவளாக இருப்பவள் மகள். பெற்று வளர்த்துப் பெண் பிள்ளை தக்க பருவம் எய்தின வுடன் தலைவனிடமுள்ள அன்பு மிகுதியினால் அவளுருப்

கோயிலை அடையலாம். இந்த ஆழ்வாரைத் தவிர, வேறு எந்த ஆழ்வாராலும் மங்களாசாசனம் செய்யப் பெறாத தலம். **எம்பெருமான்:** ஆதி வராகப் பெருமாள் (மூலவர்) நின்ற திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். **தாயார்:** அகில வல்லி **உற்சவர்:** நித்திய கல்யாணப் பெருமாள் தனிக் கோயில் கொண்டுள்ள தாயார்; **கோமளவல்லி** ஆ.பா: பெரி திரு. 1 8:4; 2.7 (பதிகம்) சிறி. திருமடல் (39); பெரி திருமடல் (58). மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் தொ. நா. தி. என்ற நூலில் 12-வது கட்டுரை காண்க.

15. பெரி. திரு. 1. 8:4.

பிடத்திற்குச் செல்ல வேண்டும் என்று பதறுங்கால் படி கடந்து புறப்படுதல் தான் பிறந்த குலத்தின் பெருமைக் குச் சிறிதும் பொருந்தாதென்று தடுத்து நிற்பவள் தாய். இந்த இரண்டு மனநிலைகளும் ஆழ்வார் மனத்தில் நடை. பெறுவதால் எம்பெருமானை அநுபவிப்பதில் ஆழ்வார்க்கு விரைவு உண்டானமையும், தாம் பதறக்கூடாது என் கின்ற எண்ணம் உண்டானமையும் புலனாவதை அறிய லாம். அப்பெருமானுடைய தனிச்சிறப்பினை நோக்கும் பொழுது பதற்றமும், தன் சொரூபத்தை நோக்குமளவில் தாம் பதறக் கூடாது என்ற எண்ணமும் உண்டாகும். இந்த இரண்டு வகையான மனநிலைகளும் பாசுரங்களில் நிழலிடுவதைக் காணலாம். இங்குத் தாய் நிலையிலுள்ளது ஆழ்வாருடைய அந்தக் கரணங்களுள் ஒன்றான 'நெஞ்சம்' அல்லது 'மனம்' என்பதனையும், அவ்வந்தக் கரணங்களுள் வேறுபட்ட சீவான்மாவாகிய ஆழ்வார் தாமே இங்குத் தலைவியாக (மகளாக)க் கூறப்பெற்றவர் என்பதையும் எண்ணி உணர்தல் வேண்டும்.

பரகால நாயகியைப் (திருமங்கையாழ்வாரைப்) பெற்றெடுத்த திருத்தாயார் திருவிட எந்தைப் பெருமா னிடத்தில் தன் மகள் காதல் கொண்டிருக்கின்ற நிலைமை யையும் அக்காதலின் அநுபவம் கைக்கூடாமையினால் அவள் பல்வேறு விகாரங்களை (மாறுபாடுகளை) அடைந்திருக்கின்ற நிலைமைகளையும் ஒவ்வொரு பாசுரங்களிலும் ஒவ்வொருவகையாக எடுத்துரைக் கின்றாள். பின்னர் ஒவ்வொரு பாசுரத்திலும் "இப்படிப் பட்ட என்மகள் விஷயத்தில் நீ செய்ய நினைத்திருப்பது என்னோ? பிரானே!" என்று வினவுகின்றாள். இங்ஙனம் இத்தலத்து எம்பெருமானிடம் ஈடுபாடுள்ள ஆழ்வார் தம்முடைய ஆராக் காதலை எடுத்துக்காட்டித் தன்னைத் ஏற்றருளத் திருவுள்ளமோ? அல்லது ஏற்றருளாதிருக்கத் திருவுள்ளமோ? இரண்டிலொன்றைத் தன் சோதிவாய் திறந்து கூற வேண்டும் என்று வேண்டுகின்றார்.

இனி, இங்கு ஒரு பாசுரத்தைக் காட்டுவேன்.

திவளும்வெண் மதிபோல் திருமுகத்(து) அரிவை
செழுங்கடல் அமுதினில் பிறந்த
அவளும்'நின்' ஆகத்(து) இருப்பது அறிந்து,
ஆகிலும் ஆசைவி டாளால்;
குவளைஅம் கண்ணி கொல்விஅம் பாவை
சொல்லு;நின் தாள்நயந் திருந்த
இவளையும் மனத்தால் என்நினைந்(து) இருந்தாய்
இடவெந்தை எந்தை பிரானே (1)

[திவளும்-பிரகாசிக்கின்ற; மதி-சந்திரன்; திருமுகம்-அழகிய முகம்; அரிவை-இளம் பருவமுள்ள பெண்; அவள் பெரிய பிராட்டியார்; ஆகம்-மார்பு; குவளை-நீலோற்பலம்; பாவை-பதுமை]

என்பது ஆழ்வார் பாசுரம். "இடவெந்தை பிரானே! உன்மீது என் மகள் ஆசை கொள்ளுதல் கூடாது நீயோ பாற்கடலில் பிறந்த அழகிய திருமகளை ஒரு நொடிப் பொழுதும் விடாது திருமார்பில் வைத்துக் கொண்டுள்ளாய். இதனை அறிந்திருந்தும் என்மகள் உன்மீது காதல் கொண்டுள்ளாள்; கொண்ட ஆசையைக் கைவிடுவாளாகவும் இல்லை. தன்னுடைய தனிச் சிறப்பினை எண்ணி நீ திருமகளிடத்தில் காட்டும் அன்பைவிட தன்னிடத்தில் தான் அதிக அன்பைக் காட்டுவாய் என்று எண்ணங் கொண்டிருக்கின்றாள். யார் எது விரும்பினாலும் உனது திருவுள்ளம் உவந்தாலன்றிப் பலன் கிடைக்க மாட்டாதாகையால் என் மகள் விஷயத்தில் நீ என்ன செய்யத் திருவுள்ளம் கொண்டுள்ளாய்? அடியேன் அறியச் சொல்லியருள்க" என்று வேண்டுகின்றாள்.

இப்பாசுரத்தின் நயத்தைச் சிந்திப்போம். சிசுக்களுக்குத் தாயின் முலைபோல அடியவர்கட்கு எம்பெருமானுடைய திருவடியே கதியாதலின் 'நின்தாள் நயந்திருந்த இவளை' என்கின்றார். "சொரூப ஞானம் இல்லாத காரணத்தால், திருமகள் நின் திருமார்பை விரும்பினாள்; என்மகள் நற்குடிப் பிறந்து நல்லறிவு வாய்க்கப் பெற்றவளாதலின் நின் திருவடியையே விரும்புகின்றாள்" என்ற சமத்காரம் தோன்றப் பேசுகின்றாள் தாய். 'உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்?'—இஃது எல்லா சாத்திரங்களின் பொருளையும் அடக்கிக் கொண்டுள்ள வினாவாகும். 'சேதநருடைய செயல் தொகுதிகள் யாவும் பேற்றுக்குச் சாதனம் அன்று; எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் பிறக்கும் இரக்கமே பலனைப் பெறுவிக்க வல்லது' என்ற தொனிப் பொருள் இதில் அடங்கிக் கிடக்கின்றது[16]. இத்தலத்து எம்பெருமான் தனது தேவியை இடப்பக்கத்தில் தாங்கிக் கொண்டிருத்தலால், இத்தலம் 'திரு இட எந்தை' (திருவினை இடப் பக்கத்துக் கொண்டிருக்கும் எந்தை) என்ற திருநாமத்தால் வழங்கி வருகின்றது என்பது ஈண்டு அறியத்தக்கது.

தமிழில் அகப்பொருள் துறைகளில் வரும் செய்திகளை எல்லாம் பொருத்தி **நாயக-நாயகி பாவனையாக** வரும் பாசுரங்களைச் சுவைமிக்கதாக்கியுள்ளனர் ஆழ்வார் பெருமக்கள். தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு ஏற்படும் உடல் நிலைகளையெல்லாம் எம்பெருமான்மீது ஆராக்காதல் கொண்டிருக்கும் ஆழ்வார் நாயகிக்கும் ஏற்படுவதாகச் சொல்லுவது கவிதை மரபாகி விட்டது. இதுபற்றிய கருத்துகள் யாவும் பிறிதோர் இடத்தில் விளக்கப் பெற்றுள்ளது.

---

16. 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பது மணிவாசகரின் திருவாக்கு (சிவபுராணம் அடி. 48).

அடுத்து ஆழ்வார் '**திருக்கடிகை**' என்ற தலத்தை நோக்கி வருகின்றார்.

7. **திருக்கடிகை**[17] : இப்பெயரால்தான் ஆழ்வார்கள் இத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். '**கடிகை**' என்ற சொல்லுக்கு 'நாழிகை' என்பது பொருள். பிரகலாதனுடைய மகிழ்ச்சியின்பொருட்டு ஒரு நாழிகை நேரம் இத்தலத்தில் யோக நிலையில் நரசிம்மன் தோன்றியிருந்த காரணத்தால் இது 'கடிகாசலம்' என்ற பெயரால் வழங்கி வருவதாகக் கூறுவர் பெரியோர். நாம் ஒரு நாழிகை காலம் இத்தலத்தில் தங்கியிருந்தாலும் நமக்கு முக்தி உண்டு என்பது செவிவழிச் செய்தி.

இந்த எம்பெருமானைத் திருமங்கையாழ்வர் ஒரே ஒரு பாசுரத்தால் மங்களா சாசனம் செய்துள்ளார். ஒரு பாசுரம் என்றாலும் ஒப்பற்றதாக விளங்குவது அது. எத்தனை தரம் வேண்டுமானாலும் ஓதி உளங்கரையலாம்.

17. **திருக்கடிகை :** இது சோழசிங்கபுரம் (சோளிங்கர்) என வழங்கிவருகின்றது. பண்டைக் காலத்தில் இவ்வூருக்கு வழங்கி வந்த பெயர் '**கடிகாசலம்**' என்பது. திருத்தணியிலிருந்து இவ்வூருக்குப் பேருந்து வசதி உண்டு. தென்னிந்திய இருப்பூர்தி வழியில் (அரக்கோணம் காட்பாடி கிளை வழியில்) சோளிங்கர் ஒரு நிலையமாக இருப்பினும் நிலையத்திலிருந்து $8\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ள இத்திருத்தலத்திற்கு வர வசதிகள் குறைவு. திருத்தணி அரக்கோணத்திலிருந்து வருவதே சிறந்தது. எம்பெருமான் யோக நரசிம்மர்; இருந்த திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** அமிர்தவல்லி. பெரி. திரு 8. 9: 4, 9. சிறி திருமடல் (39). மேலும் விவரம் வேண்டுவோர் ஆசிரியரின் **தொ. நா. தி.** என்ற நூலின் 7-வது கட்டுரை காண்க.

மிக்கானை மறையாய்விரிந்த
விளக்கை, என்னுள்
புக்கானைப் புகழ்சேர்
பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக் கடிகைத்
தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை
அடைந்(து) உய்ந்து போனேனே[18]

[மிக்கான்-சிறந்தவன்; மறை-வேதம்; புகழ்-கீர்த்தி; பொலிகின்ற-விளங்குகின்ற; தக்கான்-தகவுடையவன்; அக்காரம்-வெல்லக்கட்டி; உய்ந்து-பிழைத்து]

என்பது ஆழ்வார் பாசுரம். யோக நரசிம்மர் சற்றேறக் குறைய 400 அடி உயரமுள்ள ஒரு மலையின்மீது எழுந்தருளியுள்ளார்.

இந்த எம்பெருமான் எப்பொழுதும் மாலை அலங்காரத்துடன் எழுந்தருளியிருப்பவன். கம்பீரமான உருவத்தன்; கண்களிலே சாந்தம் நிலவும் தன்மையன். இதனால்தான் ஆழ்வாரும் '**தக்கான்**' (தக்க பெருமையை யுடைய பரம தயாளு) என்றும், அநுபவிப்பவர்கட்கு அவன் வெல்லம்போல இனிப்புள்ள கனியாக-விளங்கனி யாக - விளங்குகின்றான் என்றும் இத்தலத்து எம்பெருமானைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். இந்த யோக மூர்த்தியைப்பற்றி ஒரு புராண வரலாறு உண்டு.[19] வெல்லக் கட்டியையே விதையாகக் கொண்டு ஒரு

18. பெரி. திரு. 8.9:4. சிறிய திருமடலிலும் '**கடிகை**' என்ற பெயர் வருகின்றது (கண்ணி-73).

19. **தொண்டை நாட்டுத் திருப்பதிகள்** (கட்டுரை-7) பக். 121, 122.

மரத்தை உண்டாக்கி அதில் பழம் பழுத்தால் எவ்வளவு இனிப்பாக இருக்குமோ அவ்வளவு இனிமை மிகுந்தவன் எம்பெருமான் என்பது ஆழ்வார் திருவுள்ளம். **'தக்கான்'** என்பதும் **'அக்காரக்கனி'** என்பதும் இத்தலத்து எம்பெருமானுக்கு ஆழ்வார் சூட்டிய திருநாமங்களாகும்.

அடுத்து, ஆழ்வார் காஞ்சியிலுள்ள திருத்தலங்களைச் சேவிக்கும் நோக்குடன் காஞ்சியை நோக்கி வருகின்றார். காஞ்சியில் இவர் சேவித்த தலங்களைப்பற்றி அடுத்த இயலில் காண்போம்.

# 6. காஞ்சித் திருதலப் பயணம்

**தொ**ண்டை நாட்டுத் திருப்பதிகளுள் கோயில் நகரம் (Temple City) என்று புகழ்ப்படும் காஞ்சி வரலாற்றுச் சிறப்பு பெற்றது. நம்மாழ்வார் தமது முதல் பிரபந்த மாகிய திருவிருத்தத்தில் திருவெஃகா (26), திருவரங்கம் (28), திருவேங்கடம் (31) என்ற மூன்று திருப்பதிகளை மட்டிலுமே மங்களாசாசனம் செய்தமையன்றி 'கோயில் திருமலை, பெருமாள் கோயில்' என்று சிறப்பித்துக் கூறப் பெற்றுள்ளதாகப் பெரியோர் பணிப்பர். இத்தலத்தைப் பற்றிப் புராண வரலாறு ஒன்று உண்டு.[1] முத்தி தரும் ஏழு நகர்களுள் காஞ்சிபுரம் மிகவும் முக்கியமானது.

*காசிமுத லாகியநன் னகரி யெல்லாம்*
*கார்மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா*[2]

*[நகர்-பட்டணம்; கார்மேனி-நீல நிற உடல்; கச்சி-காஞ்சிபுரம்]*

என்று புகழ்வர் வேதாந்த தேசிகர். காஞ்சியில் **பதினெட்டு** திவ்விய தேசங்கள் உள்ளனவாக வைணவர்களிடையே

---

1. **தொண்டை நாட்டுத் திருப்பதிகள்** (கட்டுரை-1) பக். 2-5.
2. தே. பி. 122, 237. ஏனைய ஆறு; அயோத்தி, மதுரை, மாயை, காசி, அவந்தி, துவாரகை என்பன.

வழங்கும் பேச்சு ஒன்று உண்டு. ஆனால் இங்கு **பதினான்கு** திவ்விய தேசங்களே உள்ளன. சுமார் ஐந்து கல்லுக்கு மேல் நீண்டிருக்கும் இந்நகரத்தை இரண்டு கூறுகளாக்கிச் **சிவகாஞ்சி** (பெரியகாஞ்சி), **விஷ்ணுகாஞ்சி** (சின்னகாஞ்சி)[3] என்று பெயரிட்டுள்ளனர். பெரிய காஞ்சியில் உள்ள பெரிய கோயில் ஏகாம்பர நாதர் திருக்கோவில்; சின்ன காஞ்சியில் உள்ள பெரிய கோவில் வரதராசர் திருக்கோயில். ஆயினும் பெரிய காஞ்சியில்தான் அதிக மான சிவாலயங்கள் உள்ளன. சுமார் முப்பதிற்கு மேற்பட்ட சிவாலயங்களும், இருபதிற்கு மேற்பட்ட திருமால் ஆலயங்களும் இந்த இரு பகுதிகளிலும் இருப்பனவாகத் தெரிகின்றது.

பெரிய காஞ்சியில் 1. உலகளந்த பெருமாள் சந்நிதி (ஊரகம்), 2. திருக்காரம், 3. திருநீரகம், 4. திருக்கார் வானம், 5. வைகுண்டப் பெருமாள் சந்நிதி (பரமேச்சுர விண்ணகரம்), 6. திருப்பவள வண்ணம், 7. திருப் பாடகம், 8. நிலாத்திங்கள் துண்டம், 9. திருக் கள்வனூர் ஆகிய ஒன்பது திவ்விய தேசங்களும்; சின்ன காஞ்சிபுரத்தில் 1. அத்திகிரி, 2. திருவெஃகா (சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதி) 3. அட்டபுயகரம், 4. திருத்தண்கா (விளக்கொளிப் பெருமாள் சந்நிதி), 5. வேளுக்கை என்ற ஐந்து திவ்விய தேசங்களும் உள்ளன. திருமங்கையாழ்வார் சின்ன காஞ்சிபுரம் தொடங்கிதான் தம் மங்களாசாசனத்தையும் தொடங் கினார் என்று கருதி நாமும் அவ்வாறே இக்கட்டுரையில் பதிவு செய்வோம்.

3. 'ஜைன காஞ்சி'தான் 'சின்னக்காஞ்சி' ஆயிற்று என்பர் ஆய்வாளர்கள். சேலம் மாவட்டத்தில் 'சின்னசேலம்' என்ற ஓர் ஊர் உண்டு. அது ஜைனசேலம்' ஆக இருந்திருக்க வேண்டும் என்று நினைக்க இடம் உள்ளது.

8. **அத்திகிரி**[4]: இப்பெயர் ஏற்பட்டதற்கு ஒரு புராண வரலாறு உண்டு. பண்டு இத்தலத்தில் திக்குயானைகள் வந்து எம்பெருமானை ஆராதித்தமையால் அதுபற்றி 'ஹஸ்திகிரி' (அத்திகிரி) என்று திருநாமம் ஏற்பட்டதாகக் கூறுவர் ஒரு சாரார். இந்திரனது யானையாகிய ஐராவதம் நெடுநாள் தவம் செய்து மலை வடிவம் கொண்டு பெருமானைத் தாங்கிக்கொண்டிருப்பதால் இப்பெயர் ஏற்பட்டதாகப் பிறிதொரு சாரார் மொழிவர். கசேந்திராழ்வான் பூசித்துப் பேறு பெற்ற தலமாதலால் இப்பெயர் ஏற்பட்டதாகக் கூறுவதுமுண்டு. எது எப்படி யாயினும் யானை போன்று உயர்ந்த கட்டுமலையில் எம்பெருமான் எழுந்தருளியிருப்பது மட்டிலும் உண்மை என்பதை நேரில் பார்த்தவர்கள் நன்கு அறிவர்.

முதலாழ்வார் காலத்திடல் பூதத்தாழ்வார் இத் திருக்கோயில் எம்பெருமானை 'அத்தியூரான்' என்ற பெயரால் குறிப்பிடுகின்றார்[5]. இவர்கள் காலத்திற்குச் சற்று பிற்பட்டவரான திருமழிசையாழ்வார் காலத்திலும் இப்பெயர் கேள்விப்படவில்லை. வேறு ஆழ்வார்களும் இத்திருக்கோயிலைப்பற்றிப் பேசவில்லை. இராமநுசர் காலத்தில்தான் இத்திருக்கோயில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்கின்றதாக அறிய முடிகின்றது.

---

4. காஞ்சியிலுள்ள **வரதராசர் சந்நிதி**. ஹஸ்தி-யானை; கிரி-மலை. ஹஸ்தி கிரி, தமிழில் 'அத்தி கிரி,' என்றாயிற்று. இறைவன் : **பேரருளாளன், வரதராசர், தேவப்பெருமாள்** தாயார் **பெருந்தேவித் தாயார், மகாதேவி** பெரி. திரு. 6 10.4; திருக்குறுந், 19, திருநெடுந் 15. மேலும் விவரம் வேண்டுவோர் இந்தஆசிரியரின் '**தொ. நா. தி.**' என்னும் நூலில் 1-வதுகட்டுரையைக் காண்க.

5. இரண். திருவந். 96, 97.

திருப்பரமேச்சுர விண்ணகரத்தை மங்களா சாசனம் செய்யும் பாசுரம் ஒன்றில்,

உரந்தரு மெல்லணைப் பள்ளிகொண்டான்
ஒருகால்முன்னம் மாவுரு வாய்க்கடலுள்
வரந்தரு மாமணி வண்ணன் இடம்[6]

[உரம்தரு-வலிமிக்க; மாஉரு-விலட்சணமான வடிவம்]

என்ற அடிகளில் வரும் 'வரந்தரும் மாமணி வண்ணன்' என்ற தொடர் வரதராசனைக் குறிப்பதாகக் கொள்வர். இப்படிக் கொண்டால் இப்பாசுரம் ஒன்றே ஆழ்வாரால் அத்திகிரி அருளாளனை மங்களா சாசனம் செய்யப்பட்ட பாசுரமாகும். இக்காரணத்தால் காஞ்சிப் பகுதி வைணவர்கள் இப்பாசுரத்தை இரட்டித்து ஓதும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

9. **திருவெஃகா**[7]: இத்தலத்தைப்பற்றிய புராண வரலாறு ஒன்று உண்டு.[8] திருமங்கையாழ்வார் திருக்குறுந் தாண்டகத்தில்,

---

6. பெரி. திரு. 2. 9: 3
7. இஃது இன்று 'சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில்' என்று வழங்கப்படுகின்றது. இது காஞ்சியில் ஆடிசன் பேட்டைக்கு அருகில் வரதராசப்பெருமாள் சந்நிதியை நோக்கிச் செல்லும் கீழ்மேல் சாலைக்கு வடபுறமாகச் சற்று உள்ளே தள்ளி உள்ளது. பெரும் பாணாற்றுப் படையிலும் (அடி 290-91) இத் திருக்கோயில் பற்றிய குறிப்பு காணப் பெறுகின் றது. **எம்பெருமான்**: சொன்னவண்ணம் செய்த பெருமாள்; கிடந்த திருக்கோலம் (புயங்க சயனம்); மேற்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்** :

கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டினார் உய்யல் அல்லால்
மற்றையார்க் குய்ய லாமே (19).

[மற்றையார்-அல்லாதவர்கள்; கச்சி-திருவெஃகா
வில் நோக்கு]

என்று பாடுவார். இதில், "கச்சி வெஃகாவில் நோக்கு; பள்ளி கொண்ட திருப்பதிகளை முன்னும் பின்னும் பேசி யிருக்கையிலே" என்று பேசுவர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள். திருநெடுந்தாண்டகத் திலும்,

கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய
களிறென்றும் கடற்கிடந்த கனியே என்றும் (15)

[கல் உயர்ந்த-கல்லால் செய்யப்பட்ட; மேய-எழுந்தருளியிருக்கின்ற; களிறு-மதயானை; கடல்-திருப்பாற்கடல்]

என்று அருளிச் செய்வர் இவ்வாழ்வார்.

---

கோமளவல்லி நாச்சியார். பெரி. திரு. 2.6:5; 10.1:7. திருநெடுந். 8, 13, 14; சிறி. திருமடல் (39); பெரி. திருமடல் (64). மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **தொ. நா. தி.** என்னும் நூலில் (கட்டுரை - 2) காண்க.

8. **தொ. நா. தி.** (கட்டுரை-2) பக். 26-28.

10. **திரு அட்டபுயங்கரம்**[9] : இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானுக்கு எட்டு கைகள் உள்ளன. திருவாழி, திருச்சங்கு, தாமரை, வாள், கேடயம், வில், அம்பு, கதை என்ற எட்டு திவ்வியாய்த ஆழ்வார்கள் இக்கைகளை அலங்கரிக்கின்றனர். ஒரு திருமொழியில் (1.8:5) **'எண்கையான்'** என்று ஆழ்வார் குறிப்பிடும் எம்பெருமான் அட்ட புயகரத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமானே என்பது ஆன்றோர் கொள்கை. பெரிய திருமடலிலும் ஆழ்வார் **'அட்டபுயகரத்து எம்மான் ஏற்றை'** (கண்ணி-128) என்று இந்த எம்பெருமானைக் குறிப்பிடுவர்.

இவை தவிர ஒரு தனிப் பதிகத்தாலும் அட்டபுயகரத்து எம்மானை மங்களாசாசனம் செய்கின்றார். இப்

---

9. **அட்டபுயங்கரம்:** அருளாளர் திருக்கோயிலை நோக்கிச் செல்லும் கீழ்-மேல் சாலைக்குத் தென் திசையில் உள்ளது இத்திவ்விய தேசம். அஷ்ட + புய + க்ருஹம் என்பன அட்டபுயகரம் என்றாயிற்று. 'க்ரஹம்' என்ற வடசொல் 'கரம்' எனத் திரியும். ஆகவே, அஷ்டபுஜனுடைய க்ரஹம் அட்டபுயகரம் என்பது. 'அட்டபுயவகரம்' என்பது 'அட்டபுயகரம்' என மருவிற்று எனவும் கொள்ளலாம். அகரமாவது அக்ரஹாரம். திவ்விய தேசத்தை முன்னிட்டே எம்பெருமானைப் பேசவேண்டும் என்பது ஆழ்வார்களின் திருவுள்ளமாதலின், 'அட்டபுயன்' என்று எம்பெருமானை வழங்காமல் 'அட்டபுயங்கரத்தான்' என்று வழங்கினர் என்பது ஆன்றோர் கருத்து. **எம்பெருமான்:** ஆதிகேசவப் பெருமாள்; நின்ற திருக்கோலம்; மேற்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** அலர்மேல் மங்கை. இவருக்குச் தனிச் சந்நிதி உண்டு. பெரி. திரு. 2.8 (பதிகம்); பெரி. திருமடல் (64); மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **தொ. நா. தி.** என்ற நூலில் 3-வது கட்டுரை காண்க.

பதிகத்தில் ஆழ்வார் தாமான தன்மையை விட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறிட்டுக் கொண்டு வேற்றுவாயாலே பேசி அநுபவிக்கின்றார். இப்பதிகம் 'மகள் பாசுரமாக' நடைபெறுகின்றது. இந்தத் திருப்பதியில் எம்பெருமான் ஆழ்வார் நாயகிக்கும் பரம போக்கியமாகச் சேவை சாதிக்கின்றான். இந்தச் சேவையில் நாமும் ஆழங்கால் படுகின்றோம். இந்த அநுபவத்தை விளக்குவதற்கு முன் காதல்வெறி-பக்திவெறி. இவற்றின் தன்மைகளை விளக்குவது இன்றியமையாதது.

* * * *

காதல் வெறி எத்தனையோ விதமாக உருவெடுக்கும். காரணமின்றி மகிழ்ச்சியும் எக்களிப்பும் உண்டாகும்; துன்பமும் துயரமும் தலைக்காட்டும். ஆறுதலும் ஆதரவும் தோன்றும்-இன்னும் என்னென்னவோ செய்யும். கள் வெறியைவிடக் காதல்வெறி உறைப்புடையது; ஆற்றலுடையது. காதல் வெறி இராவணனையும் சூர்ப்பணகையையும் படுத்திய பாட்டைக் கம்பராமாயணம் கற்றோர் நன்கு அறிவர். இருவரும் முறையே[10] ஒரு தூணை சீதையாகவும் இராமனாகவும் காணும் காட்சியை மிகவும் அற்புதமாக, நகைச்சுவை தோன்றும் பாணியில், சித்திரித்துள்ள கம்பனின் கவித் திறமையை, அவன் காட்டும் உளவியல் தத்துவத்தை எவரும் மறுத்தல் முடியாது.[10] காதல் வெறியைப் போன்றதே பக்தி வெறியும், பக்தியுணர்ச்சி முற்றிய நிலையில் அதன் விளைவு தனிச்சிறப்புடையது. அந்நிலையில் அஃது உருவெளித்தோற்றமாக செயல்புரிவதை ஆழ்வார்கள் அற்புதமாகக் காட்டியுள்ளனர். உருவெளித் தோற்றம்(Hallucination)என்பது என்ன? ஒரு பொருளைப் பற்றி இடைவிடாது நினைக்கின்ற முதிர்ச்சியில் நினைக்கப் பெற்ற பொருளின் உருவம் போலியாகக் கண்ணுக்கெதிரில்

10. கம்ப. ஆரணிய. மாரீசன்வதை-148, 149

தோன்றுவதே உருவெளித் தோற்றம் என்பது. இந்த உருவெளித்தோற்றம் அன்பினாலும் நிகழும்; அச்சத்தினாலும் உண்டாகும். சூர்ப்பணகையினால் சீதாப் பிராட்டியின் அழகை விரிவாகக் கேட்டறிந்த இராவணன் அச்சீதையை இடைவிடாது நினைத்த காரணத்தால் ஒரு பெண்ணுருவம் அவனுக்கு உருவெளித்தோற்றமாகக் காணப்பட்டது. அங்ஙனமே இராமனது எழிலில் ஈடுபட்டு அவனை அணைய வேண்டும் என்று எண்ணிய சூர்ப்பணகைக்கும் ஓர் ஆணுருவம் உருவெளித் தோற்றமாகக் காணப்பட்டது. இவை இரண்டும் அன்பினால் நிகழ்ந்தவை. இராவணன், தான் சீதையைக் கவரும் பொருட்டுத் தனக்கு உதவியாக, மாரீசனைப் பொன்மானாகச் செல்லுமாறு ஏவியபோது, மாரீசன் இருமுறை இராமனால் 'சூடு கொண்ட பூனை' யாதலின் பார்த்தவிடமெங்கும் தனக்கு இராமனுருவம் தோன்றுவதாகக் கூறியது அச்சத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். இத்தகைய உருவெளித் தோற்றத்தைத் தொல்காப்பியரும் 'நோக்குவ எல்லாம் அவையே போறல்'[11] என்று ஒரு காதல் துறையாக வகுத்துக் காட்டுவர்.

* * * *

பரகால நாயகி உறக்கம் வராமல் எம்பெருமானை நினைத்த வண்ணம் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள். அவள் ஊனக்கண் முன்னே,

மின்னிலங்கு திருவுருவும், பெரிய தோளும்,
கரிமுனித்த கைத்தலமும், கண்ணும், வாயும்
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின், கீழே
தாழ்ந்துஇலங்கு மகரம்சேர் குழையும் காட்டி[12]

[கரி-குவலயாபீடம் என்ற யானை]

11. தொல். பொருள். களா. நூற். 18.
12. திருநெடுந். 25

நிற்கும் எம்பெருமானை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அறிந்துகொள்ளாமல் இருக்கவும் மனம் வரவில்லை. சொந்த அறிவு அவளது ஆராய்ச்சிக்குத் துணை செய்யவில்லை. அவர் திருமுகத்தை நேரே நோக்கிப் பேசமுடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது. அதனால் முகம் நோக்கி வாய் எழும்ப முடியாத நிலை ஏற்பட்டுவிடுகின்றது அவளுக்கு. 'இவர் நம் தலைவராகவே இருத்தல் கூடும்' என்று நெஞ்சிலே ஓர் எண்ணமும் தோன்றினமையால் வினவ முடியாத நாணமும் இவளை ஆட்கொண்டு விடுகின்றது. இன்னாரெனத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அவாவோ அதிகரித்துவிடுகின்றது, இந்நிலையில் அருகிலிருக்கும் வேறொருவரை நோக்கி 'இப்பெரியார் யார்?' என்று வினவுகின்றாள். அதற்கு எம்பெருமானே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூறுகின்றான். எம்பெருமானோ விநாடிக்கு விநாடி தன் திருக்கோலத்தை மாற்றி மாற்றிக் காட்சி அருள்கின்றான். அதனால் இவளுடைய வினாவும் மாறிமாறித் தொடுக்கப் பெறுகின்றது. எல்லா வினாகட்கும் எம்பெருமானே, 'நான் அட்டபுயகரத்தேன்' என்றே விடை தருகின்றான்.

படுக்கையறையில் இங்ஙனம் பேச்சுகள் நடந்து கொண்டிருப்பது தாய்மார், தோழிமார் செவியில் படுகின்றது. உடனே அவர்கள் பரகால நாயகியின் பள்ளியறைக்கு விரைந்து வந்து "நங்காய் ஏதாவது மனமயக்கம் ஏற்பட்டதா? இவை என்ன பேச்சுகள்?" என்று வினவுகின்றனர். "ஒன்றும் மனமயக்கம் இல்லை. ஒரு பேரருளாளரைச் சேவிக்கப் பெற்றேன்; 'இவர் யார்?' என்று வினவினேன். அட்டயுகரத்து எம்மான், 'நான் தான் அட்டபுயகரத்தேன்'என்று மறுமொழி தருகின்றான் இதனை நீங்களே காணுங்கள்" என்று கூறுகின்றாள் ஆழ்வார் நாயகி. இங்ஙனம் பரகால நாயகி தன் தோழிமார்க்கும் அன்னைமார்க்கும் நடந்த வரலாறு

கூறுவதாக இந்த எம்பெருமான்மீது மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ள திருமொழியில் அடங்கிய காட்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நம் மனத்திரையில் அமைகின்றன.

**அரியுருவக்காட்சி :** அன்று பிரகலாதன் பொருட்டு 'பேழ்வாய் வாள் எயிற்றுக் கோளரியாய்த்' தோன்றிய பொழுது திரிபுரம் எரித்த சிவபெருமானும் மலர் மிசை மசைமேல் வீற்றிருக்கும் அந்தப் பயங்கர உருவத்தைக் கண்டு வியந்தனர். மூன்று உலகத்திலுள்ளவர்களும் கடல் ஒலிபோல் வழிபாட்டு ஒலிகளை முழக்கிக் கொண்டு அப்பேருருவத்தை வணங்கினர்: நெருப்புப் போன்ற உளைமயிர்களோடும் கூரிய வாள் போன்ற கோரப் பற்களோடும் தோன்றிய நரசிங்கம் இரணியனது மார் பினைப் பிளந்த காட்சியைக் கண்டு வியந்தனர். அந்த நரசிங்க உருவத்தில் எம்பெருமான் ஆழ்வார் நாயகிக்குக் காட்சி தருகின்றான். இவள் 'ஆர்கொல்?' என்று அயலில் நின்ற ஒருவரை வினவ, எம்பெருமானே, 'நான் அட்ட புயகரத்தேன்' என்று மறுமொழி பகர்கின்றான் (2.8:1). இந்தக் காட்சியில் ஈடுபட்டு மகிழ்வுற்ற நிலையில் திடீரென்று காட்சி மாறுகின்றது.

**அடுத்தக் காட்சிகள் :** அமரர்கள் அருமறைகளை ஓதி வணங்கக் காட்சி தருகின்றான் எம்பெருமான். அவனது மேன்மையை நோக்க 'வெந்திறல் வீரராகவன் போல்' தோற்றம் அளிக்கின்றான். தாழநின்று பரிமாறும் சில குணத்தை நோக்கினால் திருவேங்கடமுடையானின் சேவைபோல் தோன்றுகின்றது. இங்ஙனம் சேவை சாதிப் பவரை இன்னார் என்று இனங் கண்டு கொள்வதற்குமுன் காட்சி மாறுகின்றது. நீர்மையும் மேன்மையும் ஒரே ஆதாரத்தில் விளங்கும் நிலையில், வாமன-திரிவிக்கிரம வடிவத்துடன், காட்சி நல்குகின்றான் எம்பெருமான். இதனை,

வந்து குறளுரு வாய்,நிமிர்ந்து,
மாவலி வேள்வியில் மண்ணளந்த
அந்தணர் போன்றிவர் 'ஆர்கொல்?' என்ன
'அட்டபுயகரத் தேன்'என் றாரே' (2.8:2)

என்று ஆழ்வார் நாயகி கூறுகின்றாள். ஈண்டும் எம் பெருமானே மறுமொழி தருகின்றான்.

**கண்ணனாகச் சேவை :** மேற்கண்ட காட்சி மறைந்து வேறொரு முறையில் காட்சி தருகின்றான் எம் பெருமான். கண்ணபிரானுடைய சிறுச் சேவகமும் திருமேனி அழகும் தோன்றுமாறு எட்டுப் புயங்களிலும் எட்டுவித ஆயுதங்களைத் தாங்கிய நிலையில் சேவை பாலிக்கின்றான். இக்காட்சியைக் காட்டும் ஆழ்வாரின் சொல்லோவியம் :

செம்பொன் இலங்கு வலங்கையாளி
திண்சிலை, தண்டொடு சங்கம்ஒள்வாள்,
உம்பர் இருசுடர் ஆழியோடு
கேடகம் ஒண்மலர் பற்றிஎற்றே!
வெம்புசினத்(து)அடல் வேழம் வீழ
வெண்மருப்(பு) ஒன்றுபறித்(து) இருண்ட
அற்புதம் போன்றிவர் 'ஆர்கொல்?' என்ன
அட்டபுயகரத் தேன்என் றாரே(2.8:3)

[வாளி-அம்பு; சிலை-வில்; தண்டு-கதை; சங்கம்-திருச்சங்கு; வாள்-கத்தி; உம்பர்-மேற்பட்டு; ஆழி-சக்கரம்; கேடகம்-கேடயம்; ஒண்-அழகிய; பற்றி-தரித்துக்கொண்டு; வெம்பு சினம்-மிக்க கோபம்; அடல்-மிடுக்கு; மருப்பு-கொம்பு; அம்புதம்-மேகம் (நீரைக் கொடுப்பது என்ற காரணப் பெயர்].

இங்குக் குறிப்பிட்ட எட்டுத் திவ்வியாயுதங்களையும் திருவுள்ளம் பற்றியே பேயாழ்வார் "தொட்டபடை எட்டும் தோலாதவென்றியான்" (99) என்று குறிப்பிட்ட னரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. மலர் மன்மத னுக்கு ஆயுதமாதலால், ஈண்டு மலரும் ஆயுத வரிசையில் கொள்ளப்பட்டது ஏன்? என்று எண்ணும்போது "எதிரி களை வெல்வதற்கு ஆயுதங்களும், என்னைப் போன்ற சிறுமிகளை வசப்படுத்துவதற்கு மலரும் கொண்டு சேவை சாதிக்கின்றான் எம்பெருமான்" என்று ஆழ்வார் நாயகி எண்ணுவதாகக் கருத முடிகின்றது.

கண்ணன் சேவையில் ஆழங்கால் பட்டுக் கொண்டுள் ளாள். கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்துப் பெருமழையினின்றும் ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்த அற்புதச் செயலைச் சிந்திக்கிறாள். மாய யானை யின் கொம்புகளை முள்ளங்கியைப் பிடுங்குவது போலப் பிடுங்கிய அற்புதச் செயலை அவன் கையிலுள்ள மருப்பு நினைக்கச் செய்கின்றது. இவன் கண்ணனே என்று அறுதி யிடுவதற்கு முன்பு காட்சி மாறுகின்றது. பேரொளி மிக்க திருவாழியும் திருச்சங்கும் கைகளில் இலங்க வேதம் ஓதுபவர்கள் முன்நிற்க, பரமபத நாதன்போல் சேவை சாதிக்கின்றான். இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்றாக மாறிய காட்சிகளால் ஐயுற்ற ஆழ்வார் நாயகி 'இவர் ஆர்கொல்?' என்று அயலவர் ஒருவரை வினவ, 'நான் அட்டபுயகரத் தேன்' என்று எம்பெருமானே விடை பகர்கின்றான். (2.8:4)

மீண்டும் காட்சி மாறுகின்றது. முன்னைய உருவம் மாறி நீலமேக சாமள வண்ணனாய்க் காட்சி அளிக்கின் றான் எம்பெருமான். இவன் வியூக நிலையிலுள்ள ஐயனோ என்று ஐயுறுகின்றாள் பரகாலன் நாயகி.

கலைகளும், வேதமும், நீதிநூலும்,
கற்பமும் சொற்பொருள் தானும்மற்றை
நிலைகளும், வானவர்க் கும்பிறர்க்கும்
நீர்மையி னால்அருள் செய்துநீண்ட
மலைகளும், மாமணி யும்,மலர்மேல்
மங்கையும், சங்கமும் தங்குகின்ற
அலைகடல் போன்றிவர் 'ஆல்கொல்?' என்ன
அட்டபுயகரத் தேன்என் றாரே (2 8:5)

[கலை-உபநிடதம்; வேதம்-நான்மறை; நீதி நூல்-இதிகாசம்; கல்பம்-கல்பசூக்தம்; சொல்-இலக்கணம்; பொருள்-மீமாம்சை; நீர்மை-கருணை; மணி-கௌத்துவம்; மங்கை-பெரிய பிராட்டியார்]

இப்பாசுரத்தில் ''சாத்திரங்களாகிய கடல்களைத் தந்தருளிய கருங்கடலோ இவர்?'' என்று விடுக்கும் வினாவிற்கு ''அட்டபுயகரத்தேன், நான்'' என்று எம்பெருமான் விடையளிக்கின்றான்.

எம்பெருமான் கடல்போல் இருப்பவன் என்று சொல்லுவதுண்டு. நிறம்பற்றி வந்த உவமையாகச் சொல்லுவது இது. 'முகில் வண்ணன்', 'மை வண்ணன்', 'கடல் வண்ணன்' என்ற பெயர்களினால் இதனை அறியலாம். ஈண்டுச் சொல்லப்பெறுவது : கடலிலுள்ள பொருள்கள் யாவும் எம்பெருமானிடத்திலும் உள்ளன என்பதாகும். கடலிலுள்ள மைநாகம் போன்ற மலைகளை நினைந்தும் எம்பெருமானுடைய திருத்தோள்களை நினைந்தும், 'கடலும் மலைகளையுடையது, எம்பெருமானும் மலைகளையுடையவன்' என்று கூறப் பெறுகின்றது. கடலிலும் மாமணிகள் உள்ளன; எம்பெருமானும் ''குருமா மணிப்பூண்'' என்ற கௌத்துவ மணியையுடையவன். மலர்மங்கை தங்கப்பெற்றது கடல்; எம்பெரு

மானும் "'அகலகில்லேன் இறையும்' என்ற அலர்மேல் மங்கை உறைமார்பன்"[13]. சங்குகட்கு உறைவிடம் கடல்; எம்பெருமானும் இடக்கையில் திருவாழியைத் தரித்திருப்பவன்.

எம்பெருமானின் கோல நிறத்தில் ஊன்றிவிடுகின்றது ஆழ்வார் நாயகியின் நெஞ்சு. "இவருடைய தன்மைகளை எந்தவிதமாக அறியப் பார்த்தாலும் ஒன்றும் அறியக்கூட வில்லையே. ஆய்ந்தெடுத்த அணிகளையுடைய மகளிருடைய வளையல்கள், நெஞ்சு, நிறை முதலிய அனைத்தையும் தம்முடையவனாகவே ஆக்கிக் கொள்வதற்காகவே இங்கு வந்து சேர்ந்தனர் போலும்!" என்று நினைக்கத் தோன்றுகின்றது அவளுக்கு.

எங்ஙனும் நாம்இருவர் வண்ணம்எண்ணில்
 ஏதும் அறிகிலம்; ஏந்திழையார்
சங்கும்,மனமும், நிறைவும் எல்லாம்
 தம்மன வாகப் புகுந்து (2.8:6)

[வண்ணம்-தன்மைகள்; ஏந்திழையார்-மகளிர்; சங்கு-இங்கு வளையல்கள்; நிறைவு-அடக்கம்; தம்மனவாக-தம்முடையனவாகும்படி; புகுந்து-வந்து சேர்ந்து]

என்று எண்ணுகின்றாள் பரகால நாயகி. இவருடைய நீலமேனியோ பூவையும் காயாவும் நீலமும் மேகமும் போன்றுள்ளது. அந்தத் திருமேனியில் ஈடுபடுகின்றாள் பரகால நாயகி.

பொங்கு கருங்கடல்தாமும் பூவைகாயா
 போதவிழ் நீலம் புனைந்தமேகம்
அங்ஙனம் போன்றிவர் ஆர்கொல்? என்ன
 அட்டபுயகரத் தேன்என் றாரே. (2.8:6)

---

13. திருவாய். 6.10:10

['போதவிழ்' என்ற அடைமொழியைப் பூவை காயாவுக்கும் கூட்டி பொருள் கொள்க].

என்ற பாசுரப்பகுதி திருமேனியின்பால் அவருடைய ஈடுபாட்டினைக் காட்டுகின்றது. ''கால் ஆழும், நெஞ்சு அழியும், கண் சுழலும்''[14] என்ற அவளுடைய நிலையைக் காண முடிகின்றது.

எம்பெருமானுடைய திருமேனியின் இயற்கை யழகிலும் தன்னுடைய உள்ளத்தைப் கொடுத்துவிடு கின்றாள் பரகால நாயகி.

முழுசிவண்டு ஆடிய தண்துழாயின்
மொய்ம்மலர்க் கண்ணியும் மேனிஅம்சாந்(து)
இழுசியகோலம் இருந்த வாறும்
எங்ஙனம் சொல்லுகேன்! ஓவிநல்லார்
எழுதிய தாமரை அன்னகண்ணும்
ஏந்தெழில் ஆகமும் தோளும்வாயும்
அழகியதாம் (2.8.7)

[முழுசி-(தேனில்) மூழ்கி; மொய்ம்மலர்க் கண்ணி-நெருங்கத் தொடுக்கப்பட்ட மாலை; சாந்து-சந்தனம்; ஓவிநல்லார்-ஓவியர்; ஏந்து எழில்-மிக்க அழகு; ஆகம்-மார்பு]

என்று அவள் பேசுகின்ற பேச்சினால் இதனை அறியமுடி கின்றது. ''தேன் ஒழுகும் திருத்துழாய் மாலையைச் சாத்திக்கொண்டிருந்த அழகும், சந்தனக் காப்பால் பொலிந்த அழகும் என்னே! அன்றியும், அவருடைய திருக்கண்களும், திருமார்பும், திருத்தோள்களும், திருப் பவழமும் (உதடுகள்) ஓவிய வல்லாரால் எழுதப்

14. பெரி. திருவந்-34

பெற்றவை போன்று யாதொரு குறையும் கூற வொண்ணதபடி அழகு விஞ்சி இருந்தன'' என்று ஈடுபட்டுப் பேசுகின்றாள் ஆழ்வார் நாயகி.

மேலும் கூறுகின்றாள் பரகால நாயகி: ''என் முன்னே தோன்றியருளின பெரியவர் தனியராய் வந்திலர். அவரைச் சுற்றிலும் நித்தியசூரிகள் சூழ்ந்து வணங்கிக் கொண்டிருந்தனர். அவர் வாயினின்றும் வேத ஒலிகள் வந்துகொண்டிருந்தன. அருகில் பெரிய பிராட்டியார் பட்டத்து இராணிபோல் திகழ்ந்தாள். இடக்கையில் திருச்சங்கும் வலக்கையில் திருவாழியும் பொலிந்தன. கருநெய்தல் பூவோ? அன்றி கடல்தானோ? என்னும் படியான வடிவழகு தோன்றியது. அந்த வடிவழகும் கண் அழகும் எல்லை காண முடியாதபடி இருந்தன. என்னுடைய உயிர்தான் இங்ஙனம் உருவெடுத்துத் தோன்றுகின்றதோ? என்று எண்ணக்கூடியவாறு அவ் வடிவம் பேரன்புக்கு இலக்காக இருந்தது. இத்தகைய வரை இன்னார் என்று அறுதியிடமுடியாத நிலையில் இருந்த நான் 'இவர் ஆர்கொல்?' என்றேன். அவரோ 'நான்தான் அட்டபுயகரத்தேன்' என்றார்'' என்பதாக (2.8:8).

அவளுடைய பேச்சு மேலும் தொடர்கின்றது: ''அந்தத் தெய்வத் திருவுருவைக்கண்டதும், என் வளையல் கள் நழுவிவிட்டன. என்னுடைய நெஞ்சமும் அவர் வயத்ததாகிவிட்டது. இப்படி என்னுடைய அனைத்தையும் கவர்ந்துகொண்ட பிறகும் 'இவ்விடத்தில் இன்னமும் ஏதாவது இருப்பின், அவற்றையும் கொள்வோம்' என்ற திருவிருப்பால் என் இடை துவளும்படியாக உற்று நோக்கித் தன் திருப்பவளத்தைத் திறந்து ஏதோ ஒன்று பணித்தார். இவர் நோக்கும் நோக்கில் நஞ்சு கலந்த தாகவே காணப்பட்டது. 'இவர் ஆர் சொல்?' என்று கேட்கவும் அச்சமாகவுள்ளதே என்று சொல்லும்தோதே

'நான்தான் அட்டபுயகரத்தேன்' என்றார் என்பதாக (2.8:9). அடுத்து 'வேளுக்கை' என்ற திவ்விய தேசத்திற்கு வருகின்றாள் ஆழ்வார்.

**11. வேளுக்கை**[15] : இந்தத் திவ்விய தேசம் சின்ன காஞ்சிபுரத்தில் உள்ளது. 'வேளிருக்கை' என்பது 'வேளுக்கை' என மருவி வழங்குகின்றது. இது வடமொழியில் "காமாஸிகா' என்று வழங்கப்பெறுகின்றது, காமாஸிகா - காம் + ஆஸிகா - விருப்பம் பற்றி நிற்கும் இடம் என்று பொருள்படுகின்றது. திருமங்கையாழ்வார், தமது பெரிய திருமடலில்,

> மன்னு மதிள்கச்சி
> வேளுக்கை ஆளரியை[16]
>
> [வேள்-ஆசை ஆள்-அரி-நரசிம்மம்]

என்று மங்களாசாசனம் செய்துள்ளார். இங்கு எம்பெருமான் நரசிம்மனாகச் சேவை சாதிக்கின்றார். அடுத்து, ஆழ்வார் திருத்தண்காவிற்கு வருகின்றார்.

---

15. **வேளுக்கை** : 'திருத்தண்கா'விற்குத் தென் கிழக்குத் திசையில் 4 ஃபர்லாங் தொலைவில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் மிகச் சிறியது; பாழடைந்த நிலையில் காணப்பெற்ற இஃது இன்று புதுப்பிக்கப் பெற்றுள்ளது. **எம்பெருமான்:** ஆள் அழகிய சிங்கர். (முகுந்த நாயகன்); நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்** : வேளுங்கைவல்லி. பெரி. திருமடல் (63).

16. பெ. திருமடல்-கண்ணி 127

**12. திருத்தண்கா:**[17] இத்தலத்து எம்பெருமான் மீது திருமங்கையாழ்வார்,

> என்னை ஆளுடை ஈசனை, எம்பிரான்
> தன்னை, யாம்சென்று கண்டும்தண் காவிலே
> (10.1:2)
>
> [ஆளுடை-அடிமைகொண்ட]

என்று தானானதன்மையில் மங்களாசாசனம் செய்கின்றார். இவர் மங்களாசாசனம் செய்த மற்றொரு பாசுரம் தாய்ப்பாசுரமாக அமைந்துள்ளது.

> முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை, மூவா
> மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற
> அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய
> அந்தணனை, அந்தணர்தம் சிந்தை யானை
> விளக்கொளியை, மரகதத்தைத் திருத்தண் காவில்
> வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு

---

16. **திருத்தண்கா:** இந்தத் திவ்விய தேசம் காஞ்சிபுரத்தில் 'தூப்புல்' என்ற பகுதியில் உள்ளது. வேதாந்த தேசிகர் அவதரித்த இடமும் இதுவே. குளிர்ந்த சோலைகளையுடையதால் இத்தலம் '**தண்கா**' என்று திருநாமம் பெற்றது போலும் **எம்பெருமான்:** தீபப்பிரகாசர் (விளக்கொளிப் பெருமாள்); நின்ற திருக்கோலம்; மேற்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** மரகதவல்லித் தாயார். இத்தலத்து எம்பெருமான் பண்டைக்காலத்தில் சயனத் திருக்கோலமாக எழுந்தருளியிருந்ததாகப் பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானத்தாலும், அரும்பத உரையினாலும் மற்றும் சில குறிப்புகளாலும், அறியக் கிடக்கின்றது. பெரி. திரு. 10.1:2 திருநெடுந். 14.

'வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக!' என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே (14)

[முளைக்கதிர் - இளஞ்சூரியன்; மூவா - நித்திய மான; அந்தணர்-வைதிகர்; பாடக் கேட்டு-குளிர பாடக் கேட்டு; மடகிளி-அழகிய கிளி]

என்பது திருநெடுந்தாண்டகத்திலுள்ள தாய்ப் பாசுரம். இந்தப் பாசுரத்தைச் சிந்திக்கும்போது, **'விளக்கொளி'** என்ற தொடர் இத்தலத்து எம்பெருமானைக் குறிக்கின்ற தாக உணர்கின்றோம். விளக்கின் ஒளி எங்ஙனம் பொருள்களை விளங்கச் செய்யுமோ, அங்ஙனமே இந்த எம்பெருமானும் ஆன்மாவின் இயல்பு, ஈசுவரனது இயல்பு, ஆன்மா அடையும் பயன், அப்பயனை அடை தற்கு உபாயம், அப்பயனை அடைதற்குப் பகையாய் உள்ளவை ஆகிய 'அர்த்த பஞ்சகத்தையும்' தனக்கு விளங்கச் செய்வான் என்பதை இப்பெருமானின் திருநாமம் குறிக்கின்றது.

இத்துடன் சின்ன காஞ்சிபுரத்து எம்பெருமான்களின் சேவை நிறைவு பெறுகின்றது. பெரிய காஞ்சிபுரத்தை நோக்கி வந்தவர் முதலில் உலகளந்த பெருமாள் சந்நிதிக்கு வருகின்றார்.

**13. உலகளந்த பெருமாள் கோவில்:**[18] பெரிய காஞ்சி யிலுள்ள இத்திருக்கோயிலின் கருவறைக்கு முன்பதாக

18. **உலகளந்த பெருமாள் கோவில் :** பெரிய காஞ்சி புரத்தில் (சிவகாஞ்சி) நான்கு இராஜவீதிகள் சூழ ஊரின் நடுவே அமைந்துள்ளது. இது இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் நான்கு ஃபர்லாங் தொலைவில் உள்ளது. நகரப்பேருந்து நிலையிலிருந்து கூப்பிடு தூரத்தில் உள்ளது. இதனை **ஊரகம்** என்ற மற்றொரு திருநாமத்

இடப்புறத்தில் சுவரில் உரக வடிவாகவுள்ள மூர்த்தியை முதலில் சேவித்த ஆழ்வார், "நிறைந்த கச்சி ஊரகத் தாய்!" (திரு. நெ. தா. 8), காமரு பூங்கச்சி ஊரகத்தாய்' (ஷெ-13) என்றும் 'ஊரான்' (பெரி. திரு. 1.5:4)[19] என்று மங்களாசாசனம் செய்கின்றார்.

அடுத்து, கருவறையிலுள்ள மிக உயரமான திருமேனியைக் கொண்ட உலகளந்த திரிவிக்கிரமனைச் சேவிக்கின்றார். இந்தக் காட்சியைப் பெரிய திருமடலில் அற்புதமாகச் சித்திரித்துக் காட்டுகின்றார்.

தன் உருவம் ஆரும்
அறியாமல் தான்அங்கு ஓர்

மன்னும் குறள்உருவில்
மாணியாய் - மாவலிதன்
பொன்இயலும் வேள்விக்கண்
புக்கிருந்து போர்வேந்தர்

மன்னை மனங்கொள்ள
வஞ்சித்து — நெஞ்சுருக்கி
'என்னுடை பாதத்தால்
யான்அளப்ப மூவடிமண்

---

தாலும் வழங்குவதுண்டு. இத்தலத்தில் எம்பெருமான் உரக வடிவமாகவும் சேவை சாதிப்பதால் இப் பெயர் ஏற்பட்டது என்பர். **எம்பெருமான்:** உலகளந்த பெருமாள்; நின்ற திருக்கோலம்; மேற்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** அமுதவல்லி நாச்சியார். திருநெடுந். 8, 13; சிறி. திருமடல் (39); பெரி. திருமடல் (63). மேலும் விவரம் வேண்டுவோர் **தொ. நா. தி.** என்னும் நூலில் 4-வது கட்டுரை காண்க.

19. சாளக்கிராமம்பற்றிய திருமொழியில்.

'மன்னா! தருக' என்று
வாய்திறப்ப — மற்றவனும்
'என்னால் தரப்பட்டது'
என்றலுமே அத்துணைக்கண்

மின்னார் மணிமுடிபோய்
விண்தடவ — மேல்எடுத்த
பொன்னார் கனைகழல்கால்
ஏழுலகும் போய்கடந்தங்(கு)

ஒன்றா அசுரர்
துளங்க — செலநீட்டி
மன்னில் அகலிடத்தை
மாவலியை வஞ்சித்துத்
தன்னுலகம் ஆக்குவித்த
தாளானை (பெ. திருமடல் கண்ணி
(107-113)

[குறள்உரு - வாமனன்; மாணி - பிரம்மச்சாரி; பொன்இயலும்-தங்கதானம் செய்யும் படியான; போர் வேந்தர் மன்னன்-மாவலி; அத்துணைக் கண்-அந்தக் கணத்தில் துளங்க-துன்பப்படும் படி]

இந்தப் பகுதியிலுள்ள வருணனை நம்மிடம் வியப்பும் வெருட்சியும் ஒருங்கே தோன்றச் செய்கின்றன. திரைப் படத்தில் ஊனக் கண்ணால் காணும் காட்சியில் மனம் ஈடுபடுவதுபோல் இங்கு மனத்திரையில் காணும் காட்சி நம்மை மெய்மறக்கச் செய்கின்றது. அடுத்து திருச்சுற்றில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைச் சேவிக்கத் திருவுள்ளங் கொள்ளுகின்றார்.

**14. திருநீரகம் :** இங்கு இந்தச் சந்நிதி வடக்குத் திருச் சுற்றில் உள்ளது. நீரின் தன்மையுடையவனான எம்

பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதலால் **'நீரகம்'** என்ற திருநாமம் பெற்றதாகப் பெரியோர் பணிப்பர். இந்த எம்பெருமானை ஆழ்வார் **'நீரகத்தாய்!'** (திரு நெடுந். 8) என்ற ஒரே சொல்லால் மங்களாசாசனம் செய்துள்ளார். எம்பெருமான் சந்நிதியில் ஒரு கரண்டி தீர்த்தம் பெற்றது போன்ற மகிழ்ச்சி நமக்கு ஏற்படு கின்றது. எம்பெருமான்: **ஜகதீசப்பெருமாள்;** நின்ற திருக் கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு நில மங்கைவல்லித் தாயாருடன் காட்சி தருகின்றார்.

15. **திருக்காரகம்:** இஃது இத்திருக்கோயில் தாயார் சந்நிதிக்கு எதிரில் உள்ளது. மேகத்தின் தன்மை கள் போன்றவற்றைக் கொண்ட திருக்குணங்கள் நிறைந்த எம்பெருமான் கோயில் கொண்ட இடமாதலின் இது **'காரகம்'** என்ற திருநாமம் (கார்-மேகம்) பெற்றதாகப் பெரியோர் கூறுவர். இந்தத் தலத்து எம்பெருமானை ஆழ்வார்.

**உலகம் ஏத்தும் காரகத்தாய்!**

(திருநெடுந். 8)

என்ற மூன்று சொற்கள் கொண்ட ஒரே தொடரால் மங்களாசாசனம் செய்துகொண்டு மகிழ்கின்றார் ஆழ்வார். நமக்கும் தீர்த்தம், திருத்துழாய், சடகோபம் பெற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இந்த எம்பெருமான்- **கருணாகரப் பெருமாள்:** நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு **பத்மாமணி** நாச்சியாருடன் சேவை சாதிக்கின்றார்.

16. **திருக்கார்வானம்:** இந்தச் சந்நிதி உலகளந்த பெருமாள் திருக்கோயிலின் நுழைவாயிலைக் கடந்த வுடன் வலப்புறமாக வெளிச்சுற்றில் அமைந்துள்ளது. ...ின் தன்மைகள் யாவும் இத்தலத்து எம்பெருமா

னிடத்தும் அநுசந்திக்கத் தக்கவையாக இருப்பதால் இத் தலத்திற்கு கார்வானம் என்ற திருநாமம் ஏற்பட்டதாகக் கூறுவர் பெரியோர். திருமங்கையாழ்வார் மட்டிலும்,

**'கார்வானத்து உள்ளாய்!'**

(திருநெடுந். 8)

என்ற இரு சொற்களைக்கொண்ட தொடரால் மங்களா சாசனம் செய்து மகிழ்கின்றார். நம்மிடமும் தீர்த்தமும் திருத்துழாயும் பெற்ற உணர்ச்சி எழுகின்றது. இந்த எம்பெருமான்-கள்வன்-நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டு **கமலவல்லி நாச்சியா ருடன்** காட்சி நல்குகின்றார்.

**17. வைகுண்டப் பெருமாள் சந்நிதி**[20] **:** இது **திவ்வியப் பிரபந்தத்தில் 'பரமேச்சுர** விண்ணகரம்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. பரமேச்சுரன் (பரமபதநாதன்-தேவாதி தேவன்) எழுந்தருளியிருக்கும் திவ்வியதேசமாதல் பற்றி இப்பெயரால் வழங்கி வருகின்றது இத்திவ்விய தேசம். இந்தத் திவ்விய தேசத்தைத் திருமங்கையாழ்வார் மட்டிலுமே ஒரு பதிகத்தால் (2.9) மங்களாசாசனம் செய்துள்ளார்.

---

20. **வைகுண்டப்பெருமாள் கோயில் :** இது உலகளந்த பெருமாள் சந்நிதிக்குக் கீழ்த்திசையில் உள்ளது. இருப்பூர்தி நிலையத்திலிருந்து இரண்டு ஃபர்லாங் தொலைவிலுள்ளது. நகரப் பேருந்து நிலையத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் உள்ளது. **எம்பெருமான் :** பரமபதநாதன்; வீற்றிருக்கும் திருக்கோலம்; மேற்கு நோக்கிய திருமுக மண்டலம். 'தாயார்': வைகுந்தவல்லி, இந்தப் பெருமான் பரத்துவ நிலையைக் காட்டுபவர்.

இத்திருக்கோயிலின் விமானம் முகுந்த **விமானம்.** விமானத்தில் இரண்டு சந்நிதிகள்

சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்
சுவைஊறுஒலி நாற்றமும் தோற்றமுமாய்
நல்லரண் நாரணன் நான்முகனுக்கு
இடந்தான் தடஞ்சூழ்ந் தழகாயகச்சி
பல்லவன் வில்லவன் என்றுலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற்
பல்லவன் மல்லையர் கோன்பணிந்த
பரமேச்சுர விண்ணக ரமதுவே (2.9:1).

[வன்சொல்-வேதம்; பணிந்த-அடிமை செய்த; பல்லவன், வில்லவன் என்போர் அரசர்கள்; மல்லையர்கோன்-கடல் மல்லையைத் தலைநகராகக் கொண்ட ஆண்டவன்]

என்பது முதற் பாசுரம். சாதாரணச் சொற்கள்கூட அச் சொற்கள் குறிக்கும் பொருள்களுள் அந்தரான்மாவாய் உறையும் எம்பெருமான் அளவும் சொல்லி நிற்கும் என்பது வேதாந்திகளின் கொள்கை. வேதங்கள் எம்பெருமானைப் பற்றி பேசுகின்றன. ஞானேந்திரியங்களால் அநுபவிக்கப் பெறுபவன் எம்பெருமான். முத்தொழில்களையும் மூன்றுருக் கொண்டு நிர்வகிப்பவன். இத்தகைய பெருமான் பல்லவ மன்னனின் கைங்கரியம் பெற்று பரமேச்சுர விண்ணகரத்தில் எழுந்தருளியுள்ளான். தன்னைப் போல்

---

உள்ளன. முதல் தளத்திலுள்ள (First Floor) சந்நிதியில் அரங்கநாதன் சீதேவி பூதேவித் தாயார்களுடன் சயனத் திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். இவரை வியூக நிலையைக் காட்டுபவராகக் கொள்ளலாம். இரண்டாவது தளத்தில் (Second Floor) உள்ள எம்பெருமான் பரவாசுதேவன் நின்ற திருக்கோலத்தில் காட்சி நல்குகின்றார். இவருக்குப் பூசை, புனஸ்காரம் இல்லை பெரி - திரு. 2.9 (பதிகம்), மேலும் விவரம் வேண்டுவோர் தொ.நா.தி. என்ற நூலில் 5-வது கட்டுரை காண்க.

ஓரரசன் கைங்கரியம் செய்த தலமாதல்பற்றி பாசுரங்கள் தோறும் அவனை விடாது போற்றுகின்றார் ஆழ்வார்.

அடுத்து வரும் பாசுரங்கள் ஒவ்வொன்றிலும் எம்பெருமானின் வீரச் செயல்களையும் வெற்றிச் செயல் களையும், அவன் அவதாரத்தில் மேற்கொண்ட அருஞ் செயல்களையும் சொல்லிச் சொல்லி அநுசந்திக்கின்றார். "புவனங்கள் அனைத்தையும் நான் முகனைக் கொண்டு படைத்தவன் எம்பெருமான்" என்ற வியஷ்டி சிருஷ்டி யைப்பற்றிப் பேசுகின்றார்,[21] இரண்டாம் பாசுரத்தில் இந்த எம்பெருமானே வைகுண்டப் பெருமாள் சந்நிதியில் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

திருப்பாற்கடலில் அழகெல்லாம் திரண்ட கோலத் துடன் திருவனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டு திருக் கண்வளர்ந்தவனும், திருவத்தி மாமலையில் வரந்தரு மாமணி வண்ணனாய்-வரதராசனாய் - எழுந்தருளியிருப் பவனுமான எம்பெருமானே பரமேச்சுர விண்ணகரத் தில் வைகுண்டநாதனாகக் காட்சிதருகின்றான் என்று கூறுவதில் வியூக, அர்ச்சைத் திருமேனிகள் பேசப் பெறு கின்றன. (3). இப்பாசுரத்தில் 'வரந்தரு மாமணி வண்ணன்' என்ற சொற்றொடர் அத்திகிரி

---

21. தத்துவத்திரயம் - ஈசுவரப் பிரகரணம்-சூத்திரம் 12இல் கூறியுள்ள கருத்து இது. கிருஷ்டி இரு வகைப்படும்; சமஷ்டி சிருஷ்டி, வியஷ்டி சிருஷ்டி என. சமஷ்டி சிருஷ்டி-மூலப்படைப்பு (Primary Creation); நான்முகனை நாராயணன் படைப்பது இது. வியஷ்டி சிருஷ்டி - முற்றிலு மான படைப்பு (Secondary Creation); நான் முகன் தொடக்கமானவர்களைக் கொண்டு எல்லாவற்றையும் படைப்பித்த செயல் இது. இவற்றின் விரிவான செய்திகள் வைணவ ஆகமங்களில் நுவலப்பெறும்.

அருளாளனைக் குறிப்பதாகக் கொள்வர் வைணவப் பெருமக்கள். ஆகவே, இப்பாசுரம் கச்சித் திருப்பதியாரால் இரட்டித்து ஓதப்பெறுகின்றது. இதனை முன்னரும் குறிப்பிட்டுள்ளேன்.

அடுத்த பாசுரத்தில் எம்பெருமான்,

அண்டமும் எண்திசையும் நிலனும்
அலைநீரொடு வான்எரி கால்முதலா
உண்டவன் எந்தை பிரான் (4)

என்று குறிக்கப்பெறுகின்றான். பிரளயப் பெருங்கடலில் சிக்கித் தத்தளிக்கும் இந்த உலகங்களை எல்லாம் பாலனாக இருந்து திருவமுது செய்து ஆலிலையில் அறிதுயில் கொள்ளும் அண்ணலின் அகடிதகடநா சாமர்த்தியம்[22] பேசப் பெறுகின்றது. இங்ஙனம் ஆபத்துக் காலத்தில் அனைத்தையும் தம் திருவயிற்றில் வைத்து நோக்கி பெருமான் சம்சாரப் பெருங்கடலில் தவிக்கும் நம்மை நோக்குவான் வேண்டி பரமேச்சுர விண்ணகரத்தில் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வார் பெறவைத்த குறிப்பாகும். ஈண்டு எம்பெருமானின் காத்தல் தொழில் பேசப் பெறுகின்றது என்பது தெளிவு.

ஆனையின் துயர்தீர்த்த அருஞ்செயலும், காளியன் நாகத்தின் கொழுப்பை அடக்கிய தீரச் செயலும் அடுத்து அநுசந்திக்கப் பெறுன்றன.

தூம்புடைத் திண்கை வன்தாள் களிற்றின்
துயர்தீர்த்து அரவம்வெருவ முன்நாள்
பூம்புனல் பொய்கை புக்கான் (5)

---

22. அகடிதகடநா சாமர்த்தியம் - சாதிக்க முடியாதவற்றையும் சாதிக்கும் திறமை (அகடித-சேர்க்க முடியாதவற்றை; கடநா-சேர்த்து வைக்கின்ற; சாமர்த்தியம்-திறமை)

[தூம்பு-துளை; கை-துதிக்கை; வன்தாள்-வலிய கால்; களிறு-யானை; அரவம்-பாம்பு; வெருவ-அஞ்சும் படியாக; பூம்புனல்-அழகிய நீர்; பொய்கை-குளம்]

என்பது இந்நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் பாசுரப்பகுதி. மீனமர் பொய்கை நாள்மலர் கொய்யுங்கால் முதலையி னால் அடர்ப்புண்ட கானமர் வேழத்தின் இடரைத் தீர்த்தருளின் எம்பெருமான் இந்திரியங்களாகிய பல முதலைகளின் வாயில் அகப்பட்டுத் தவிக்கும் நம்மையும் காத்தருள்வான் என்பது ஆழ்வார் விட்டுவைத்த குறிப்பு.

அடுத்த நான்கு பாசுரங்களிலும் எம்பெருமானின் நரசிம்மாவதாரம், வாமன - திரிவிக்கிரமாவதாரம், இராமாவதாரம், கிருட்டிணாவதாரம் ஆகிய நான்கு அவதாரங்களின் வீரச் செயல்கள் அநுசந்திக்கப் பெறு கின்றன.

இங்ஙனம் ஆழ்வார் கூறும் நான்கு அவதாரங்களும் நம்மை அவதார இரகசியத்தை நினைக்கச் செய்கின்றன. எம்பெருமானுடைய அவதாரங்கள் யாவும் மெய் யானவை; இந்திரசாலம் போல் மயக்குபவை அல்ல. எம்பெருமான் தனக்கேயுரிய இயல்புகளனைத்தையும் அவதார காலத்திலும் கொண்டுள்ளான். அவதார காலத்திலும் அவனுடைய திருமேனி இராசச - தாமச குணங்களின் சம்பந்தமே இல்லாது சுத்த சத்துவமாக உள்ளது. எம்பெருமான் இக்கரும பூமியில் அவதரிப்ப தற்கு அவனது சங்கல்பமேயன்றிக் கர்மம் காரணமன்று. பூமியில் அறம் குன்றி மறம் தலையெடுக்கும் பொழுது எம்பெருமான் அவ்வக் காலத் தேவைக்கேற்றவாறு அவதாரங்களை மேற்கொள்ளுகின்றான். சாதுக்களை இரட்சிப்பதே அவதாரத்தின் முக்கிய பலனாக அமை கின்றது.

அடுத்து ஆழ்வார் அண்மையிலுள்ள 'பவள வண்ணம்' என்னும் திருப்பதிக்கு எழுந்தருள்கின்றார்.

18. **திருப்பவள வண்ணம்**[23] : இந்தத் திவ்விய தேசத்திற்கு எழுந்தருளிய திருமங்கையாழ்வார் திருநெடுந் தாண்டகத்தில் **'பவளவண்ணா'** (9) என்று இவரை **மங்களா**சாசனம் செய்கின்றார். இதைத்தவிர ஆழ்வார் பாசுரங்களில் இந்த எம்பெருமானைப்பற்றி வேறு குறிப்புகள் இல்லை. 'பவளவண்ணா' என்பதற்கு 'பவளம் போல் விரும்பத்தக்கதான வடிவு படைத்தவனே!' என்பதே பொருளாகத் தோன்றுகின்றது. பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானத்திலும் இப்படித்தான் காணப்படுகின்றது. எனினும் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் 'திருப்பவள வண்ணம் என்னும் திருப்பதியில் உறைபவனே!' என்றே பொருள் கொண்டுள்ளார்கள். பெரியவாச்சான் பிள்ளைக்கு முற்பட்டவரும் பராசரபட்டர் திருவடிகளில் பணிந் துய்ந்தவருமான திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் திருவுள்ளத்தைத் தழுவியே இங்ஙனம் கூறுவர் பிரதிவாதி பயங்கரம்.பவள வண்ணம் திருப்பதிக் கருகில் உள்ள பச்சைவண்ணர் திருப்பதிக்கு ஆழ்வார் ஏனோ எழுந்தருளவில்லை. அவர் காலத்தில் அத் திருக் கோயில் இல்லை போலும்.

இத்திருத்தலத்திலிருந்து ஆழ்வார் நேராகத் 'திருப் பாடகம்' என்ற திவ்விய தேசத்திற்கு வருகின்றார்.

---

23. பவளவண்ணம் : பெரிய காஞ்சிபுரத்தில் வைகுண்டப் பெருமாள் அருகிலுள்ளது இத் திவ்விய தேசம். **எம்பெருமான்:** பவளவண்ணன். **தாயார்:** பவளவல்லி நாச்சியார். திருநெடுந். 9

19. **திருப்பாடகம்**[24] : திருமங்கையாழ்வார் இந்தத் திருத்தலத்திற்கு வந்து எம்பெருமானைச் சேவித்தபோது கண்ணன் கழுத்தில் ஓலை கட்டிக்கொண்டு பாண்டவத் தூதனாய் துரியோதனிடம் சென்றபோது நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று ஆழ்வார் நினைவில் எழுகின்றது. துரியோ தனன் இரகசியமாகத் தன் சபா மண்டபத்தில் மிகப் பெரிய நிலவறையொன்றை நிறுவினான். அதனுள்ளே அநேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் நிறுத்தினான். அப்படுகுழியைப் பிறர் அறியாவண்ணம் மூங்கிற்பிளப்பு களால் மேலே மூடச் செய்தான். அதன்மீது நவரத் தினங்கள் இழைக்கப்பெற்ற சிறந்த ஆசனம் ஒன்றை அமைத்து அதன்மீது கண்ணபிரானை வீற்றிருக்கச் செய்தான். கண்ணனைக் கொல்வதற்காகத் துரியோ தனன் மேற்கொண்ட சதித்திட்டம் இது. கண்ணன் அதன்மீது ஏறியதும் மூங்கிற் பிளப்புகள் முறிபட்டு ஆசனம் உள்ளிறங்கிப் பிலவறையில் செல்லுங்கால், அப்பெருமான் மிகப்பெரிய உருவம் எடுத்து பல கை களையும் கால்களையும் கொண்டு மல்லர்களை எதிர்த்து அவர்களைக் கொன்றொழித்தான். இந்த நேர் அநுபவம் அப்போது பாசுரமாக அமையவில்லை. ஆனால் **திருகண்ணங்குடி**[25] எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும் பாசுரத்தில்,

---

24. **திருப்பாடகம் :** பெரிய காஞ்சியில் ஞானப் பிரகாசர் திருமடத்திற்கு அருகிலுள்ளது இந்தச் சந்நிதி. இது 'பாண்டவதூதர் சந்நிதி' என்று வழங்கப்பெறுகின்றது. பாடு + அகம், பாடகம் ஆயிற்று. பெருமை தோன்ற எழுந்தருளியிருக் கும் தலம் என்பது இதன் பொருள். **எம்பெரு மான் :** பாண்டவதூதன்; வீற்றிருந்த திருக் கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். **தாய்மார்கள் :** உருக்குமிணி, சத்திய பாமை பெரி.திரு. 6.10:4; பெரி. திருமடல் (63).

25. சோழநாட்டுத் திவ்விய தேசங்களில் ஒன்று.

அரவநீள் கொடியோன்
அவையுள்ஆ சனத்தை
அஞ்சிடாதேஇட அதற்கு
பெரியமா மேனி
அண்டம்ஊ டுருவ
பெருந்திசை அடங்கிட
நிமிர்ந்தோன் (9.1:8)

[அரவம்-பாம்பு; அவை-சபை; அஞ்சிடாதே-பயப்படாமல்; இட-அமைக்க; மேனி-உடம்பு; நிமிர்ந்தோன்-வளர்ந்த பெருமான்]

என்ற பகுதியாக இடம் பெறுகின்றது. அப்போது கொண்ட விசுவருபத் திருக்கோலத்தின் நினைவுச் சின்னமாகப் பெரிய திருமேனியுடன் சேவை சாதிக்கும் இடம் பாடகம் ஆகும். இந்தத் திவ்விய தேசத்திற்கு வந்தபோது ஆழ்வார் இந்த எம்பெருமானை,

கல்ஆர் மதிள்சூழ் கச்சி நகருள்
நச்சி, பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க இருந்த
அம்மான் (6.10:4)

என்று அநுசந்திக்கின்றார் ஆழ்வார். இவர் திருநெடுந்தாண்டகத்தில்,

கல்உயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய
களிறு (15)

[மேய-எழுந்தருளியிருக்கும்]

என்று அநுசந்தித்த எம்பெருமான் திருப்பாடகத்து நாயனார் என்பவரே என்பது பெரியவாச்சான் பிள்ளையின் திருவுள்ளம்.

**20. நிலாத்திங்கள் துண்டம்**[26]: இங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான் ஏழுதலை நாகத்தைக் குடை யாகக் கொண்டு சேவை சாதிக்கின்றார். திருமங்கை யாழ்வார் மட்டிலும் இவரை,

**நிலாத்திங்கள் துண்டத்தாய்**[27]

என்றஒரே தொடரால் மங்களா சாசனம் செய்துள்ளார். திருமங்கையாழ்வார் பரந்த நோக்கத்தால் இத்திருத் தலத்தை அடைந்து வழிப்பட்டிருந்தும், 'மறந்தும் புறந் தொழாமாந்தர்' நிலையிலுள்ள சில குறுகிய நோக்குடைய வீர வைணவர்கள் தேவையற்ற தம் 'பத்தினித்தனத்தால்' வழிபடாதிருப்பது பரந்த நோக்குடைய வைணவர்களுக்கு வருத்தத்தை விளைவிக்கின்றது. ஏன்? அர்ச்சை வடிவ மான இந்த எம்பெருமானே அவர்களின் பரிதாப நிலை கண்டு கழிவிரக்கம் கொள்ளுகின்றார். ஆனால் வணங்கும் அருள் அவர்கள்மீது பாலிக்கவில்லை!

**21. திருக்கள்வனூர்**[28]: 'கள்வன்' என்று திருமங்கையாழ்வாரால் திருநாமம் இடப்பெற்ற இவர்

---

26. **'நிலாத்திங்கள் துண்டம்**: இத்திவ்விய தேசம் கச்சி ஏகாம்பரநாதர் திருக்கோயிலின் முதல் திருச்சுற்றில் அமைந்துள்ளது. **எம்பெருமான்**: நிலாத்திங்கள் துண்டத்தான்; மேற்கு நோக்கிய திருமுக மண்டலம்; நின்ற திருக்கோலம். **தாயார்**: நேரொருவர் இல்லா வல்லி (பெரு மான் அருகில் இருப்பவர்). திருநெடுந். 8 வீரவைணவர்கட்கு இந்த எம்பெருமான் சேவை பாலிப்பதில்லை.

27. திருநெடுந். 8

28. **கள்வனூர்**: காஞ்சியில் காமாட்சியம்மன் சந்நிதிக்குள் உள்ளது. **எம்பெருமான்**: ஆதி வராகப்பெருமாள்; நின்ற திருக்கோலம்; மேறகு நோக்கிய திருமுக முண்டலம். **தாயார்**: அஞ்சிலை

காமாட்சியம்மன் திருக்கோயிலினுள் அர்த்த மண்டபத்தின் நுழை வாயிலின் இடப்புறச் சுவரிலுள்ள மாடம் ஒன்றில் எங்கோ திருடிவிட்டு பதுங்கிக் கொண்டிருக்கும் ஒரு கள்வனைப்போல் ஒளிந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். இது கருதியே திருமங்கையாழ்வார் இவரை,

**கள்வா![29]**

என்ற ஒரே சொல்லில் மங்களா சாசனம் செய்தனர் போலும்! குமுதவல்லித் தாயாரை மணந்து கொள்ளும் பொருட்டு அவர் விதித்த நிபந்தனையாகிய நாள் தோறும் 1008 பாகவதர்கட்குத் திருவமுது செய்வித்தல் என்ற பணியைச் செவ்வனே நிறைவேற்றும் பொருட்டுக் கள்வர் கூட்டத் தலைவனாக நின்று கொள்ளையடித்த பெருமானன்றோ இவர்? வேறு ஆழ்வார்கட்கும் இந்த எம்பெருமான் கிட்டவில்லை. ஆழ்வார் திருநகயில் திருப்புளியாழ்வாரின் கீழிருந்து கொண்டு மானசீகமாக மங்களாசாசனம் செய்த நம்மாழ்வாரையும் அவர் பாசுரங்களில் அகப்படாது ஏமாற்றிவிட்ட **'கள்வன்'** இந்த எம்பெருமான். இவரையும் வீர வைணவர்கள் சேவிப்பதில்லை.

**22. திருப்புட்குழி[30] :** கள்வனிடம் விடைபெற்றுக் கொண்ட 'முன்னாள் கள்வனாகிய' ஆழ்வார் இத்திருத்

---

வல்லி நாச்சியார். இருவரும் அருகிலிருக்கும் படியான தனித்தனி மாடத்தில் எழுந்தருளியுள்ளனர்.

29. திருநெடுந். 8

30. **திருப்புட்குழி :** இத்தலம் காஞ்சியிலிருந்து தென் மேற்குத் திசையில் சுமார் ஏழு கல் தொலைவிலுள்ளது. நெடுஞ்சாலையில் இறங்கி உட்புறமாகவுள்ள குறுக்குச் சாலையில் நான்கு ஃபர்லாங் தூரம் நடந்து சென்று இத்திருப்

தலத்திற்கு வருகின்றார். இந்த ஆழ்வார் ஒருவர் மட்டிலுமே இந்த எம்பெருமானை மங்களா சாசனம் செய்துள்ளார். திருவிட எந்தை எம்பெருமானைத் தாய்ப்பாசுரமாக மங்களா சாசனம் செய்யும் பொழுது,

**'புலங்கெழு பொருநீர்**
**புட்குழி பாடும்' (2.7:8)**

என்று குறிப்பிடுகின்றார், ''என்மகள் திருப்புட்குழி என்னும் திருப்பதியின் நீர்வளங்களைப்பற்றிப் பாசுரங் கள் பாடா நின்றாள் என்று பரகால நாயகியின் நிலையைக் குறிப்பிடுகின்றார் அவளுடைய திருத்தாயார். பெரிய திருமடலில் ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை,

**புட்குழிஎம் போரேற்றை'** *(கண்ணி—117)*

என்று குறிப்பிடுகின்றார்.

திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த காஞ்சித் திருப்பதி எம்பெருமான்கள் சிலரைத் தவிர எல்லா எம்பெருமான்களும் தனித் திருக்கோயில்களில் சுதந்திரமாக எழுந்தருளிச் சேவை சாதிக்கின்றனர்.

---

பதியை அடைதல் வேண்டும். பெரிய உடையார் என்றசடாயுவின் திருமேனியை ஒரு குழியிலிட்டு தகனம் செய்து ஈமக் கடன்களை முறைப்படி செய்தனர் இராமலக்குவணர்கள். தகனம் செய்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கும் இடம் **புட்குழி**. (புள்—சடாயு) 'திரு' என்ற அடைமொழிபெற்று 'திருப்புட்குழி' என்றா யிற்று. **எம்பெருமான்:** விசயராகவப் பெருமாள்; போரேறு ஆகவபுங்கவன்; வீற்றிருந்த திருக் கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** மரகதவல்லித் தாயார். பெரி. திரு. 2.7:1; பெரி. திருமடல் (57).

திருக்காரகம், திருக்கார்வானம், திருநீரகம் இத்தலத்து எம்பெருமான்கள் தமக்கு உறவுடைய உலகளந்த பெருமானின் திருமாளிகையின் புறவீடுகளில் (out houses) தங்கிக் காலம் கழிக்கின்றனர். இருந்தாலும் தனி வீடுகளில் இருப்பது இவர்கட்குப் பரம திருப்தி. நிலாத் துண்டத்து எம்பெருமான் ஏகாம்பரநாதர் திருக்கோயிலிலும், திருக்கள்வனூர் எம்பெருமான் காமாட்சி அன்னையின் திருக்கோயிலிலும் ஒண்டுக் குடித்தனமாக எழுந்தருளி, சைவர்களிடம் கைங்கரியம் பெற்றுக்கொண்டு 'மறந்தும் புறந்தொழா' வீரவைணவர்கட்கு முகம் காட்டாமல் சைவர் - வைணவர் என்ற வேறுபாடு காட்டாத மற்றவர்கள் அனைவருக்கும் சேவை சாதிக்கின்றனர். திருமாலை வணங்காத சில சைவர்கட்கும் காட்சி தந்து அவர்களை உய்விக்கவே இந்த சைவத்திருப்பதிகளில் எழுந்தருளியுள்ளனர் போலும்!

# 7. நடுநாட்டுத் திருத்தலப் பயணம்

'நடு நாடு' என்றால் நடுவில் உள்ள நாடு எனப் பொருள்படும்'. சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு தொண்டைநாடு இவற்றிற்கு நாற்புறத்தெல்லை கூறிய கம்பநாடன் நடு நாட்டிற்கு எல்லை கூறவில்லை. எனவே, இவர்காலத்து நடுநாடு என்னும் பிரிவு இருந்த தில்லை எனக் கருத வேண்டியுள்ளது. 'நடுநாயகம்' என்னும் சொற்றொடர்க்குப் பொருள் கொள்வதுபோல் 'நடு நாடு' என்பதற்கும் பொருள் இருக்கலாம் என்று கருதவும் இடம் உண்டு. நடுநாடு என்பது திருவயிந்திர புரமும் திருக்கோவலூரும் அடங்கிய நாடு. முதல் ஆழ்வார்கள் மூவரும் மொழிவிளக்கேற்றி முகுந்தனைத் தொழுதநாடு' என்ற சிறப்பெய்தியது இந்நாடு. இச் சிறப்பைக் கருதி திருக்கோவலூருள்ள இந்நாட்டை 'நடு நாடு', நடுநாயகமாகவுள்ள நாடு எனவும் கொள்ள லாம். நடுநாட்டிற்குத் தெற்கே சோழநாடு, பாண்டுநாடு மலைநாடு என்ற மூன்றும்; வடக்கே தொண்டை நாடு, வடநாடு, திருநாடு என மூன்றும்; இந்த மூன்று மூன்று நாடுகட்கு நடுவே, உள்ள நாட்டை 'நடு நாடு' எனக் கொண்டனர் போலும்! இது பரமபதவாசி பூதூர் மகா வித்துவான் **கி. வேங்கடசாமி ரெட்டியார் அவர்களின்** கருத் தாகும்'[1] எது எப்படியிருப்பினும் 'திவ்வியப் பிரபந்தம்'

1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (அவர் பதிப்பு) பின்இணைப்பு 3. பக் 177. காண்க.

முதல் முதலாகத் தோன்றிய இடம் திருக்கோவலூர். இதைக் கருத்தில் கொண்டு திருமங்கையாழ்வார் **திருக்கோவலூர்**[2] என்னும் திருப்பதியை நோக்கி வருகின்றார்.

ஆழ்வார் திருக்கோவலூர் திருவிக்கிரமனை ஒரு திருமொழியால் (பதிகம் 2-10) மங்களா சாசனம் செய்கின்றார். பெரிய திருமொழியில் வேறு ஐந்து பாசுரங்களிலும்[3] திருநெடுந்தாண்டகத்தில் மூன்று பாசுரங்களிலும்[4] திருக்கோவலூர் குறிப்பிடப் பெறுகின்றது. 'கோவலூர் மன்னும் இடைக்கழி மாய்வனைப்'[5] பாடிய திருமொழியில்,

---

2. **திருக்கோவலூர்** : தென்னிந்திய இருப்பூர்திப் பாதையில் - விழுப்புரம் - காட்டுப்பாடி இருப்பூர்திக் கிளை வழியில் திருவண்ணாமலைக்குத் தென்திசையில் அமைந்துள்ள நிலையம். திருவண்ணாமலையிலிருந்து வருவோர் பேருந்து மூலமாகப் புறப்பட்டு நேராக ஊருக்குள்ளேயே வந்து இறங்கலாம். இருப்பூர்தி வழியாக வருபவர் நிலையத்தில் இறங்கி நிலையத்திற்கு அருகிலுள்ள அரகண்ட நல்லூரிலிருந்து 2 கல் தொலைவு நடந்து அல்லது குதிரை அல்லது மாட்டு வண்டியில் சென்று தலத்தை அடையலாம். **எம்பெருமான்:** திரிவிக்கிரமன்; ஆயனார்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** பூங்கோவல் நாச்சியார். மேலும் விவரம் வேண்டுவோர் இந்த ஆசிரியரின் **தொ. நா. தி.** என்ற நூலில் 15-வது கட்டுரை காண்க.
3. பெரி. திரு. 2.4:1; 5.6:7; 6.10:5; 7.3:2; 7.10:4
4. திருநெடுந். 6, 7, 17.
5. பெரி. திருமடல்-60.

மஞ்சாடு வரையேழும் கடல்கள் ஏழும்
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்
எஞ்சாமல் வயிற்றடக்கி யாலின் மேலோர்
இளந்தளிரில் கண்வளர்த்த ஈசன் தன்னை
துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணை தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச் செய்ய
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே (1)

[மஞ்சு-மேகம்; வரை-மலை; துஞ்சா-மாறாமல்; சோமு-ஒருவேள்வி; செஞ்சாலி-செந்நெற்பயிர்கள்]

என்பது முதற்பாடல். முன்னிரண்டு அடிகளில் இறைவனைப் பற்றியும் பின்னிரண்டு அடிகளில் திருப்பதியின் நீர்வளம், நிலவளம் பற்றியும் கூறுவனவாகப் பாடல் அமைந்துள்ளன. "திருக்கோவலூரில் இன்று நான் சேவிக்கப் பெற்ற பெருமான் ஆபத்திலே வந்து உதவும் உபகார சீலன். மலைகள், கடல்கள், வானுலகு, மண்ணுலகு முதலிய எல்லாவற்றையும் பிரளயம் கொள்ளாதபடி திருவயிற்றில் வைத்துக் காத்தருளி ஓர் ஆலந்தளிரிலே சிறுகுழந்தையாகத் திருக்கண் வளர்ந்தருளின் முழுமுதற் கடவுள் காண்மின்" என்கின்றார்.

**தலத்தின் இயற்கைச் சூழ்நிலை:** இந்த ஊர் திருக்கோவலூர்[6] எப்படிப்பட்டது? நீர் வரவு மாறாமல் பெருகிச் செல்வதும், பொன்முத்து மாணிக்கங்களைக் கொழித்து

6. கோபாலன் எனப்படும் ஆயனார் எழுந்தருளியிருக்கும் திருத்தலமாதல் பற்றி இதற்குத் 'திருக்கோவலூர்' என்ற திருநாமமாயிற்று. **'கோபால'** என்ற வடசொல் **'கோவல்'** எனத் திரிந்தது.

எழாநின்றதுமான பெண்ணையாற்றின் தென்கரையி லுள்ளது திருக்கோவலூர். இங்குள்ள வைதிகர்கள் பலனைக் கருதாது சோமயாகங்களைப்[2] புரிந்துகொண்டி ருப்பவர்கள். அப்படி ஆவர்கள் ஒரு பலனையும் கருதாது வேள்வி புரிந்தாலும், இவர்களது யாகமும் பகவானது நினைவினால் ஒருபலனைக் கொடுக்கவல்லதாகையாலே கண் காணும் பலன்கள் சம்பவிக்கும் செந்நெற் பயிர்கள் வயல்களில் செழிப்புற்று விளைக்கும்.

இவ்விடத்தில் ஒரு கருத்து நினைவு கூரத்தக்கது. அசித்தை எம்பெருமான் உடலாகக் கொண்டிருப்பதால், எங்கெங்கெல்லாம் அழகு கொழிக்கின்றதோ அங்கங் கெல்லாம் இறைவன் திருக்கோயில் கொண்டிருப்பான் என்று கருதித் தமிழர்கள் இறைவனுக்குக் கோயில் எடுத்து வழிபட்டனர். பெரும்பாலும் ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்து வழிபட்ட 108 திவ்வியதேச எம்பொருமான்களும் அழகுதவழும் இடங்களிலேயே திருக்கோயில் கொண்டு சீவான்மாக்கள் கடைத்தேறும் கருத்துடன் அவர்களிடம் கருணை வெள்ளமிட்டோடச் செய்கின்றனர். இத்தகைய அழகுமிக்க திருப்பதிகளில் ஒன்று நடுநாட்டைச் சார்ந்த **திருக்கோவலூர்.** ஆண்டவனின் உடலாக இருக்கும் அசித்தின் அழகினை இப்பகுதியில் கண்டுகளிக்கலாம்.

திருக்கோவலூரின் நீர்வளம் நிலவளம் ஆழ்வாரின் பாசுரங்களில் நன்றாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளன. தோப்புகளும் துரவுகளும் சோலைகளும் சூழ்ந்த அழகான

---

2. 'சோமம்' - என்ற வடசொல் 'சோமு' எனத் திரிந்தது. 'சோமலதை' என்ற வகைக் கொடியின் இரசத்தைப் பருகுதலை அங்கமாகவுடையது மூன்று ஆண்டுகளில் சாதிக்கத்தக்கதும் ஆனது சோமயாகம்.

பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளது. தென்னந்தோப்பு கள் கமுகந்தோட்டங்கள் மாஞ்சோலைகள் முதலிய வற்றை எம்மருங்கும் காணலாம்.

கோங்கரும்பு சுரபுன்னைக்
குரவுஆர் சோலைக்
குழாம்வரிவண்டு இசைபாடும்
பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும்
கழனி சூழ்ந்த
திருக்கோவலூர்(4)

[கோங்கு, சுரபுன்னை, குரவு - மரவிசேடங்கள்; கண்வளரும் கணுக்கள் வளரும்; உறங்க வுமாம்.]

என்பது பாசுரப்பகுதி. கோங்கு அரும்புகளும் சுரபுன்னை களும் குரவமலர்களும் நிறைந்த சோலைகளில் கூட்டம் கூட்டமாகவுள்ள வண்டுகள் பூக்களிலுள்ள மதுவினை யுண்டு அதனால் பெறும் களிப்பிற்குப் போக்கு வீடாக இன்னொலிகளை எழுப்புகின்றன. இந்த இசைப்பாடல் களின் இன்பச் சாறு பாயப்பெற்ற வயல்களிலுள்ள கரும்புகளின் கணுக்கள் வளர்கின்றன. வண்டுகள் பாடும் இசையைக்கேட்டு அஃறிணைப் பொருளாகிய கரும்பும் அசைவற்று நிற்பதாகக கூறும்[7] பாநயம் எண்ணி எண்ணி அநுபவிக்கத்தக்கது.

இன்னொரு விதமாகவும் பொருள் கொண்டால், திருக்கோவலூர் எம் பெருமானையே கரும்பாகக் குறிப்

7. சர். ஜே. சி. போஸின் (தாவரங்களின் வளர்ச்சிக்கு இசை துணை செய்கின்றது) கொள்கை ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

பிட்டதாகக் கருதலாம். வண்டுகள் வெறும் இன்னொலிகளை எழுப்பாமல் முதலாழ்வார்களின் பாடல்களையே இன்னொலிகளாக எழுப்பினதாகக் கருதலாம். அமுதூறும் அப்பாடல்களின் இன்பப் பெருக்கில் திளைக்கும் **'திருக்கோவலூர்த் தீங்கரும்பு'** (எம்பெருமான்) கண்வளர்கின்றதாகவும் கொள்ளலாம். இங்ஙனம் அவரவர்களின் பத்திக் கேற்றவாறு கற்பனையும் வளரும்; அதில் பாட்டநுபவத்துடன் பக்தியநுபவமும் கலந்து ஊற்றெடுத்து நம்மைப் பேரின்பக்கடலில் கொண்டு செலுத்தும் பக்தியநுபவத்தின் கொடுமுடியைக் கண்ட திருமங்கையாழ்வார் திருக்கோவலூர்த் திரிவிக்கிரமனை இங்ஙனம் எல்லாம் சிந்தித்து அநுபவித்திருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறில்லையில்லவா? மூன்று ஆழ்வார்களைக் கரும்பினைப்பிழியும் மூன்று ஆலை உருளைகளாகவும், அவர்களால் நெருக்குண்ட எம்பெருமானை நெருக்குண்ட இடமாகிய திருக்கோவலூர் அருகில் விளையும் கரும்பாகவும், அந்த எம்பெருமானின் சௌலப்பிய குணத்தைச் சாறாகவும் வேதாந்த தேசிகர் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நம் நினைவுக்கு வருகின்றது.[8] மேற்குறிப்பிட்ட ஆழ்வாரின் பாசுரமே இச்சுலோகத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்க வேண்டும்.

திருக்கோவலூரைச் சுற்றியுள்ள சோலைகளில் ஏராளமான கமுகமரங்கள் காட்சியளிக்கின்றன. கமுகமரத்தின் நிறமோ கறுப்பு; அவற்றின் பாளைகளின் நிறமோ பச்சை. அவை வெடித்து வெளிப்படுத்தும் பாக்குப் பிஞ்சுகள் வெண்ணிற முத்துகளை யொத்துள்ளன. முற்றின பச்சைநிறப் பாக்குக் காய்கள் மரகதம்போல் பொலிவுற்றுத் திகழ்கின்றன; பழுத்த செந்நிறப் பாக்குப் பழங்களே பவளங்களைப்போல் காட்சியளிக்கின்றன.

---

8. தேஹளீச ஸ்துதி - சுலோகம்(7)

பாக்குமரங்களினூடே வளர்ந்துள்ள சுரபுன்னையின் மொக்குகள் மலர்ந்து சோலைகளைப் பொலிவுறச் செய்கின்றன.

கருங்கமுகு பசும்பாளை
வெண்முத்து ஈன்று
காய்எல்லாம் மரகதமாய்ப்
பவளம் காட்ட (7)

[கமுகு—பாக்கு]

என்று ஆழ்வார் இக்காட்சியினைத் தம் பாசுரத்தில் புலப்படுத்துகிறார்.

இன்னொரு பாசுரத்தில் ஆழ்வார் வயல் வாய்ப்பும் பொழில் வாய்ப்பும் இயல்பாகவே அமையப் பெற்ற இத் திவ்விய தேசத்தை ஒரு பொற்கொல்லனின் களரியாகக் காட்டும் திறம் படிப்போரை ஈர்க்கின்றன. பொற் கொல்லன் பட்டறையில் கரிகள் கொட்டப்பெற்றி ருக்கும்; பொன்களும் முத்துகளும் நிறைந்திருக்கும்; தீப்பிழம்பு சுடர்விட்டுக்கொண்டிருக்கும். திருக்கோவலூர் அங்ஙனம் காட்சியளிக்கின்றது.

எழுந்தமலர்க் கருநீலம்
இருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச்
செம்பொன் காட்ட
செழுந்தடநீர்க் கமலம்தீ
விகைபோல் காட்டும்
திருக்கோவலூர் (3)

[எழுந்த-தீயினின்றும் மேற்கிளம்பின; கருநீலம்-கருநெய்தல்; கமலம்-தாமரை; தீவிகை-விளக்கு]

என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதி இக்காட்சியினைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. இங்குக் கருநீல மலர்கள் கரியாகவும் புன்னையின் மொக்குகள் முத்துகளாகவும், புன்னைப் பூக்கள் பொன்னாகவும், தாமரை மலர்கள் நெருப்பாகவும் உருவகிக்கப்பெற்றுள்ள பாசுரத்தின் நயம் அநுபவித்து மகிழத் தக்கது. இவற்றிலெல்லாம் கட்புலப் படிமங்கள் (Visual images) அமைந்து அத் திருப்பதியை மானசீகமாகக் காட்டுவதையும் பார்க்க முடிகின்றது.

இத்தகைய சாலைகள் சூழ்ந்த திருப்பதியில் தென்றற் காற்று வீசி அச்சூழலை மேலும் இன்பமயமாக்குகின்றது.

சிறைஅணைந்த பொழில்அணைந்த
தென்றல் வீசும்
திருக்கோவ லூர் (5)

[சிறை அணைந்த—நீர்அரண் நெருங்கின;
பொழில்—சோலை]

என்ற பாசுரப்பகுதியால் இதனை அறியலாம். இவ்வளவு வளத்திற்கும் அவ்வூரருகில் ஓடும் "துஞ்சாநீர் வளம் சுரக்கும் பெண்ணையாறே" காரணமாகும்! பெரும்பாலான நாட்களில் நீர்வற்றிக் கிடக்கும் இந்த ஆற்றில் மழைக்காலத்தில் வெள்ளம் பெருகியோடும்; கோடையில் ஊற்று நீர் கிடைக்கும். இதுவும் பயிரிடு வதற்குப் பயன்படும்.

**ஊர் அமைப்பு:** திருக்கோவலூர் ஒரு சிறிய ஊரே. எனினும் நல்ல கட்டட வசதிகள் சிறந்த ஊர் என்று சொல்லலாம். பேச்சுத்திறமற்ற ஒருவர் பெரிய பொருளை எடுத்துப் பேசும்பேசும்போது கேட்போருக்கு அப்பொருள் சிறிதாக அமைந்துவிடும்; அங்ஙனமே பேச்சுத்திறம் மிக்க

ஒருவர் சிறிய பொருளை எடுத்துப் பேசினாலும் அது பெரிதாகத் தோன்றுவதும் உண்டு. பெரும்புலவரும் 'நாலுகவிப் பெருமாள்' என்ற விருதையும் பெற்றுள்ள மங்கை மன்னன் வாக்கில் சிறிய பொருளும் பெரியதாக அமைவதற்குத் தட்டில்லை. ஆகவே, இவர் வாக்கில் இந்த ஊர்,

செல்வச்
செறியார்ந்த மணிமாடம்
திகழ்ந்து தோன்றும்
திருக்கோவலூர் (6)

[செறி ஆர்ந்த—நெருக்கம் பொருந்திய; மணிமாடம்—இரத்தின மயமான மாளிகைகள்; திகழ்ந்து—விளங்கப்பெற்று)

என்றவாறு அமைந்துவிடுகின்றது. இந்தத் திருத்தலத்தில் ஏழு இசைகள், ஆறு அங்கங்கள், ஐந்து வேள்விகள், நான்மறைகள், மூத்தீ[9] ஆகியவற்றைக் கொண்டு இறைவனை இடையறாமல் துதிக்கும் தூய நான்மறையாளர் வாழ்கின்றனர்.

வந்தனைசெய்து இசையேழாறு
அங்கம் ஐந்து
வளர்வேள்வி நான்மறைகள்
மூன்று தீயும்
சிந்தனைசெய்து இருபொழுதும்
ஒன்றும் செல்வத்
திருக்கோவலூர் (2)

9. ஏழு இசைகள்—நிஷாதம், நிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம்,தைவதம்,பஞ்சமம் என்பவை. ஆறு அங்கங்கள்—சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பவை. முத்தீ—காருகபத்தியம், ஆகவணீயம், தாட்சிணாக்கினி என்பவை.

[வந்தனைசெய்து-அடிபணிந்து; இருபொழுதும்-இரவும் பகலும் (காலையும் மாலையும்); சிந்தனை செய்து—மனனம் செய்து; ஒன்றும்—பொருந்தும்]

என்ற பாசுரப்பகுதியில் இதனை அறியலாம். அவர்கள் வாழும் வீடுகள்தோறும் மறையொலி ஓங்கி நிற்கும்; புகழ்மணம் வீசும்; தெருக்களிலுள்ள மண்டபங்களி லெல்லாம் 'வாரம் ஓதுகை' என்ற வேதபாராயணம் நடைபெறும். இவற்றைத் திருநெடுந்தாண்டகப் பாசுரத்தில்,

மறைவளரப் புகழ்வளர
  மாடந் தோறும்
மண்டபம்ஒண் தொளிஅனைத்தும்
  வாரம் ஓத (5)

[ஒண்தொளி—அழகியவீதி]

என்று ஆழ்வார் குறிப்பிடுவர். மேலும், அந்தணர்கள் ஒரு பலனையும் விரும்பாமல் மனத்தூய்மையுடன் சோமயாகங்களைச் செய்கின்றனர் என்பதும், அக்காரணத்தால் நெற்பயிர்கள் செழித்து வளர்கின்றன என்பதும் ஆழ்வார் பாசுரத்தால் அறியப்படும் செய்திகள் (1). திருநெடுந்தாண்டகத்திலும்,

கடிபொழில்சூழ் நெடுமறுகில்
  கமல வேலி (7)

[கடி—மணம்; நெடுமறுகு—அகன்ற தெரு; கமல வேலி—தாமரைத் தடாகங்கள் சுற்றிலும் உள்ள]

என்று இத்திருப்பதியின் நறுமணம் மிக்க சோலைகளை யும் அகன்ற தெருக்களையும் ஊருக்கென்று வேலிபோல் அமைந்த தாமரைத் தடாகங்களையும் ஆழ்வார் காட்டி உரைப்பர்.

**ஆயனார்:** ஆழ்வார் கண்ணுக்கு ஆயனார் எவ்வாறு காட்சி தந்தார் என்பதைப் பாசுரங்கள் உணர்த்துகின்றன. பிரளயத்தில் ஆபத்து நேராதபடி உலகைத் திருவயிற்றில் வைத்துக் காத்தவன் (1). திருப் பாற்பகலில் திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொண்டுள்ள பெருமானே திருக்கோவலூரில் சேவை சாதிப்பவர் (2). முதலை வாயில் சிக்கிக்கொண்ட கசேந்திராழ்வானைக் காத்த பெருமான் என்பதையும் தம் விரோதிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகவே திருக் கோவலூரில் சந்நிதி பண்ணியிருப்பவன் (3). பெரிய திருவடியின்மீது எழுந்தருளி மாலி[10] என்னும் அரக்க னுடைய தலையை அறுத்தொழித்து சாதுக்களை வாழ்வித்தவன். இப்படிப்பட்ட வீரச் செயல்களையும் மற்றுமுள்ள சௌலப்பிய சௌசீல்ய குணங்களையும் நினைந்து நைந்து உள் கரைந்துருகிக் கண்ணீர் பெருக

10. மாலி, மாலியவான், சுமாலி என்னும் அரக்கர் மூவரும் சகோதரர்கள். இவர்கள் திருமாலுடன் போர்புரிந்த வரலாறு உத்தர இராமாயணத்தில் (7-வது சருக்கம்) விவரிக்கப் பெற்றுள்ளது. மாலி கருடன் மீது இவர்ந்து வந்த திருமாலுடன் போருடற்றும்போது சிறிது அடிபட்டுத் தேரை விட்டு இழிந்து கதையினால் கருடனை மோதினான்; இங்ஙனம் புடைபட்ட புள்அரசன் மிகத் துன்புற்று அவ்வேதனைக்கு ஆற்றாது திருமாலைப் போர்க்களத்தினின்றும் பின்புற மாக எழுந்தருளிக் கொண்டுபோனான்: திரு மால் பராமுகமாகத் திரும்பியிருக்கையிலும் அவன்மீது தமது திருவாழியைச் செலுத்த, அது மாலியினது முடியை அறுத்துத் தள்ளியது.

நிற்கும் அடியார்கள் நெஞ்சகத்தில் தித்தித்திருப்பவன்(4). இராமபிரானாகத் திருவவதரித்துக் காடுறைந்த காலத்தில் கரன், கவந்தன், வாலி முதலியோரை வானுலகத்திற்கு அனுப்பி இலங்கை சென்று இராவணனையும் அரக்கர் சேனைகளையும் துணித்தொழித்த பெருமானே இந்தத் திரிவிக்கிரமன் (5).

பலர் சேர்ந்து தயிர் கடைந்து திரண்ட வெண்ணெயை உறியில் வைத்திருந்ததை அறிந்த கண்ணபிரான் கள்ளனாகச் சென்று வாரி விழுங்கும்போது கையும் வாயும் வெண்ணெயுமாகக் கண்ட யசோதைப் பிராட்டி அவனை உரலோடு பிணைத்துத் தாம்பினால் கட்டி வைப்பாள்; அப்போது அவன் இருக்கும் நிலை கட்டுத் தறியில் கட்டி வைக்கப்பெற்ற யானைக் குட்டிபோல் தோற்றமளிப்பான்; உண்மையிலேயே வருந்தி அழுபவன் போலக் கண்ணீர் ததும்ப நிற்பான். அந்த நீர்மை தோன்ற திருக்கோவலூரில் எழுந்தருளியுள்ளான் (6). குவலயாபீடம் என்ற யானையைக் கொன்று, குதிரை வடிவாக வந்த கேசியென்னும் அரக்கன் வாயைக் கிழித்தெறிந்து, நப்பின்னையை அடையும்பொருட்டு ஏழு காளைகளின் வலியடக்கி, இரட்டை மருதமரங்களைச் சாய்த்துத் தன் மேல் விழுந்த சகடத்தை அது முறிந்தொழியும்படி உதைத்துத் தள்ளித் தன்னை எதிர்த்து வந்த மல்லர்களை ஒழித்துக்கட்டி, இத்தனை வஞ்சகச் செயல்களைச் செய்து வந்த கஞ்சனுக்கு நஞ்சாகி அவனையும் முடித்த பெருமான்தான் திருக்கோவலூரில் எழுந்தருளியிருப்பவன் (7). பூமியின் பெரும் பாரம் தீர்க்கப் பாண்டவர் பொருட்டுத் தூது சென்று பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து போர்க்களத்தில் எதிரிகளின் சேனைகளை ஒழித்துக்கட்டிய பெருமானே திருக்கோவலூரில் கோயில் கொண்டிருப்பவன் (8). பெரிய பிராட்டியும் பூமிப் பிராட்டியும் இரண்டு பக்கத்திலும் திகழவும், திருவாழி

திருச்சங்கு இரண்டு திருக்கைகளில் பொலியவும்' 'பெரிய தொரு கற்பகத் தருவோ?' என்னும்படி அடியவர்கட்கு கருணை பொழிபவனும், செந்தாமரை போன்ற திருவடி, திருக்கை, திருவாய் திருக்கண் ஆகிய அவயங் களின் ஒளியாலும் பீதக ஆடையின் காந்தியினாலும் செம்பொன்மயமான திருமேனியையுடைய பெருமானே திருக்கோவலூரில் கோயில் கொண்டிருப்பவன் (9).

இன்னும் இந்தப் பெருமான் எழுந்தருளியிருக்கும் 'திருக்கோவலூருக்குப் போவோம், வா' என்று நெஞ்சை விளிக்கின்றார் ஆழ்வார். ''கலப்பையை ஆயுதமாகக் கொண்ட நீண்ட கையையுடையவனும், நித்திய சூரிகட்குத் தலைவனும், பெரிய திருவடிக்குத் தனிப் பாகனும் அரக்கர்கள்மீது எப்பொழுதும், சீற்றம் கொண்டிருப்பவனுமான எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் திருப்பதிகளிலெல்லாம் அவனுடைய திருவடி களைப் பாடிப் பூமி முழுவதும் பரவிவருகின்ற பெண்ணையாறு பாயும் படியான திருக்கோவலூரைச் சேவிப்போம் வா'' என்று நெஞ்சை அழைக்கின்றார் (நெடுந். 5). மேலும், மிடுக்குடைய கார்த்த வீரியன் முதலான அரசர்கள் முடியும்படி கோடலிப் படையைத் தரித்துப் பரசுராமனாய் அவதரித்தவனும் தமது திருக் குணங்களால் அனைவரையும் ஈடுபடுத்தவல்ல இராமனாய் அவதரித்தவனும், பாணாசுரப் போரில் சுப்பிரமணியன் முதலியோரைத் தோல்வியடையச் செய்த கண்ணனாய் அவதரித்தவனுமான எம்பெருமான் எழுந்தருளியிருப் பதும் துர்க்கையால்[11] காவல் செய்யப்பட்டிருப்பதுமான திருக்கோவலூரைச் ''சேவிப்போம், வா மனமே!'' என்னும் நெஞ்சை அழைக்கின்றார் ஆழ்வார். (ஷ்டி-6.)

11. இத்திருக்கோவிலைக் காவல் புரிகைக்காக விந்திய மலையைச் சார்ந்த அடவியில் இவள் தவம் புரிந்ததாகவும், திரிவிக்கிரமன் ஆணை

திரிவிக்கிரமனை ஆழ்வார் அர்ச்சையில் சேவித்த தாலும் (காஞ்சி, திருக்கோவலூர்) அப்பெருமானை விபவத்தில் மானசீகமாகச் சேவித்ததாலும் அந்தத் திருக்கோலத்தை தமது பாசுரங்களில் அமைத்துக் காட்டு கின்றார்.

ஒண்மிதியில் புனல்உருவி
ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமருசீர்
அவுணன் உள்ளத்(து)
எண்மதியும் கடந்(து)
அண்டமீது போகி
இருவிசும்பின் ஊடுபோய்
எழுந்து, மேலைத்
தண்மதியும் கதிரவனும்
தவிர ஓடித்
தாரகையின் புறந்தடவி
அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து
நின்ற எந்தை
மலர்புரையும் திருவடியே
வணங்கினேனே (5)

யால் அவள் காவல் புரியும் பணியை ஏற்றதாக வும் புராண வரலாறு கூறும். துர்க்கை காவல் புரிவதைத் திருமங்கையாழ்வாரே தமது பாசுரங் களில் (பெரி திரு. 2. 10: 6; திருநெடுந். 7) குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலும் துர்க்கை யின் சிலையைத் திருமால் ஆலயங்களில் காண்பது இல்லை. எனினும், அதனை ஈண்டுக் காண்கின்றோம். இத்திருக்கோயிலின் முதல் திருச்சுற்றின் முகப்பிலேயே, சந்நிதிச் சுற்றுக் குள் நுழைந்ததும் இடப்புறத்தில் இத்தேவி சேவை சாதிக்கின்றாள்.

[ஒண்மிதி-ஓரடி இட்டு; புனல்-ஆவரண நீர்; அவுணன்-மாவலி; எண்மதி-நினைத்திருக்கும் எண்ணம்; விசும்பு-ஆகாயம்; மதி-சந்திரன்; தாரகை-நட்சத்திரம்; மலர்புரையும்-தாமரை மலரையொத்த]

என்பது திருநெடுந் தாண்டகப் பாசுரம்.

இந்தப் பாசுரத்தில் 'வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கிய' உலகளந்த திரிவிக்கிரமனை மானசீக மாகக் காண்கின்றோம். காஞ்சியில் உலகளந்த பெருமாள் சந்நிதியில் சுவரின்மீது செதுக்கியுள்ள சிற்பம் இந்தப் பெருமான் தனியே நிற்கும் வடிவமாகும். திருக்கோவ லூரில் மூலவரின் திருவுரு மரத்தாலானது, எம்பெருமானின் ஒரு திருவடி மாவலியின் தலைமீது வைத்த நிலையில் உள்ளது. மற்றொரு திருவடியோ விண்ணை அளப்பதாகத் தூக்கிய நிலையில் காணப் பெறுகின்றது. பெரிய பிராட்டியார், மாவலி சுக்கிராச்சாரியார், மிருகண்டு முனிவர், அவர் துணைவி, முதலாழ்வார்கள் மூவர் முதலானோர் சூழநிற்க வலத் திருவடியை நான்முகனும், இடத்திருவடியை மாவலியின் புதல்வன் நமுசியும் ஆராதித்து நிற்கின்றனர். மாவலியை வெற்றிகொண்ட எக்களிப்பால் இடக்கையில் இருக்க வேண்டிய சங்கினை வலக்கையில் ஏந்திய நிலையில் காணப்பெறுகின்றார் எம்பெருமான்.

திருக்கோவலூர் சேவை முடிந்ததும் திருவயிந்திரப் புரம் சேவிக்கத் திருவுள்ளங் கொண்டு அந்தத் திருப்பதியை நோக்கி வருகின்றார் ஆழ்வார்.

**திருஅயிந்திரபுரம்**[12] : எழில் கொழிக்கும் இயற்கைச் சூழ்நிலையிலமைந்த இத்திருத்தலத்தைத் திருமங்கை

12. **திருஅயிந்திரபுரம்** : தென்னிந்திய இருப்பூர்திப் பாதையில் கடலூர் நிலையத்திலிருந்து சுமார் மூன்றுகல் தொலைவிலுள்ளது. கடலூரிலிருந்து

யாழ்வார் ஒரு திருமொழியில் மங்களா சாசனம் செய்துள்ளார். (3.1)

இருந்தண் மாநிலம் ஏனம் அது ஆய், வளை
மருப்பினில் அகத்தொடுக்கி
கருந்தண் மாகடல் கண்துயின் றவன்இடம்
கமலநன் மலர்த்தேறல்
அருந்தி இன்னிசை முரன்றெழும் அளிகுலம்
பொதுளியம் பொழிலூடே
செருந்தி நாண்மலர் சென்றணைந் துழிதரு
திருவயிந் திரிபுரமே (1)

[இருந்தண்-மிகக் குளிர்ந்த; ஏனம்-பன்றி; வளை மருப்பு - வளைந்த கோரப்பல்; ஒடுக்கி-அடக்கி; அம்பொழில்-அழகிய சோலை; கமலம்-தாமரை; தேறல்-தேன்; முரன்று - பாடிக் கொண்டு:

பேருந்து வசதிகள் உள்ளன. எம்பெருமான்: தெய்வநாயகன்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். தாயார்: வைகுண்ட வல்லி. தாயாருக்குத் தனிச் சந்நிதி உண்டு. இங்கு வேதாந்த தேசிகருக்கு ஒரு பெரிய சந்நிதி உள்ளது. திருக்கோயிலுக்கு அருகிலுள்ள ஔஷதாத்திரியில் (மருத்துமலை) பெரிய திருவடியும் ஹயக்கிரீவனும் தேசிகனுக்கு நேரில் காட்சி தந்ததாக வரலாறு. அநுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்து இலங்கையை நோக்கி வந்த காலத்தில் ஒரு சிகரம் முறிந்து விழுந்ததாகவும் அதுவே இம்மலை என்பதாகவும் ஐதிகம்.

'அஹீந்திரபுரம்' என்ற வடசொல் 'அயிந்திரபுரம்' என்று விகாரப்பட்டது. அஹீந்திரன்—திருவனந்தாழ்வான். அவன் வழிபட்ட தலமாதலால் 'அயிந்திரபுரம் என்ற நாமம் ஏற்பட்டு 'திரு' என்ற அடைமொழியுடன் சேர்ந்து 'திருஅயிந்திரபுரம்' என்று வழக்காறு பெற்றது.

அளிகுலம் - வண்டுக் கூட்டங்கள்; பொதுளி-நெருங்கி; செருந்தி-சுரபுன்னை; அணைந்து - சேர்ந்து; உழிதரு-சஞ்சரிக்கப்பெற்ற]

என்பது முதல் பாசுரம். முதல் இரண்டடிகளில் திவ்விய தேசத்து எம்பெருமானின் சிறப்பும், பின் இரண்டு அடிகளில் திவ்விய தேசத்தின் சிறப்பும் கூறப்பெறு கின்றன. பாசுரந்தோறும் இங்ஙனமே அமைந்துள்ளது. திவ்யமாகிய திருமேனியில் (அசித்து) எம்பெருமா னாகிய பரமான்மா அமைந்து வைணவ தத்துவமாகிய **சரீர-சரீரிபாவனையை** விளக்கும் பாங்கில் அமைந்திருப்பது போல் தோன்றுகின்றது.

பாசுரத்தில் ஆழங்கால் பாடுவோம். கோலவராகமாகி பூமிப்பிராட்டியை மீட்டுக் கொணர்ந்தவனும் பாலாழி யில் திருக்கண் வளர்ந்தருள்பவனுமான எம்பெருமான் கோயில் கொண்டருளிய இடம் திருவயிந்திரபுரம். அவனோ "உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத் துள் ஊறிய தேனாக" (4.3:9) இனிப்பவன். அவன் உறை யும் இடம் சோலைகள் சூழ்ந்தது. அச் சோலைகளில் திரள் திரளாக வண்டுகள் புகுந்து மதுவைப் பருகிக் களித்து அக்களிப்பிற்குப் போக்குவீடாக இன்னிசைகளைப் பாடிக்கொண்டு உலாவுகின்றன. அங்ஙனம் உலாவுங்கால் செறியப் பூத்த சுரபுன்னை மரங்கள் எதிர்ப்படுகின்றன. அவற்றிலும் மதுவைப் பருகச் செல்லுகின்றன. அவ் வண்டின் குழங்கள். இப்பாசுரத்தில் விபவ அவதார எம்பெருமானும் (வராக மூர்த்தி) வியூக எம்பெருமானும் (பாற்கடல் துயிலும் பரமன்) ஆழ்வார் திருவுள்ளத்தில் சேவை சாதிக்கின்றனர். நாமும் அவர்களைச் சேவித்து மகிழ்கின்றோம்.

இப்பாசுரத்தில் வரும் **'வண்டு'** என்பதன் உள்ளுறைப் பொருளில் நம் மனம் ஈடுபடுகின்றது. வண்டுகட்கு

'மது விரதம்' என்ற ஒரு திருப்பெயர் உண்டு. தேனைத் தவிர வேறொன்றையும் உணவாகக் கொள்ளாதது என்பது இதன் பொருள். அது போன்ற தன்மையர் அடியார்கள் (பாகவதர்கள்) ஆதலின் 'உளங்கனிந்திருக்கும் அடியவர்' என்று சிறப்பிக்கப் பெறுகின்றனர். வண்டு கட்கு மேல்நோக்கிய வழிக்குச் செல்லக் கருவியாகப் பயன்படும் இரண்டு சிறகுகள் போன்று அடியவர்கட்கு அவர்களின் ஞான அநுட்டானங்கள் பயன்படுகின்றன. இதனால் வண்டுகளைப் பாகவதர்களாகச் சொல்லுவது மரபு[13]. அத்தகைய பாகவதர்கள் பகவத் பாகவத போக்கி யதைகளை அநுபவித்த ஆனந்தத்திற்குப் போக்கு வீடாக நாதமுனிவர், தம்பிரான்மார் (அரையர்) முதலானோரைப் போல "பண்கொள் தலை கொள்ளப் பாடிப் பறந்தும் குனித்தும் உழல்வர்" (3.5:2); இந்த நிலையை 'இன்னிசை முரன்று எழும்' என்ற சொற்றொடர் குறிப் பிடுகின்றது. பகவத் பாகவத குணாநுபவத்திற்கு வாய்த்த இடங்கள் 'பொழில்' எனப்படும். 'செருந்தி' என்ற சுர புன்னை மரத்தைக் குறித்ததன் தாற்பரியம் என்னவென்றால்: "தன் ஒப்பார் இல் அப்பன் தந்தனை - தனதாள் நிழலே" (6.3:9) என்று ஆழ்வார் குறிப்பிட்ட வாறு சம்சாரமாகிய கொடிய வெயிலிலே தபிக்கப் பெற்றவர்கட்கு நிழல் தந்துவிடாய் தீர்க்கும் நன்மர மாகிய எம்பெருமானின் கழலிணைகளில் சேர்ந்திருக்கும் இருப்பே 'செருந்தி' என்று குறிக்கப் பெற்றுள்ளது. எனவே, சாரத்தை அறிந்தவர்களாகிய (ஸாரக்ராஹிகள்) பாகவதர்கள் கூட்டம் கூட்டமாகத்திரண்டு பகவத் பாகவத குணாநுபவக் களிப்பாலே எம்பெருமானைப் பற்றிய இசைப் பாடல்களை—ஆழ்வார்களின் பண் ணார்ந்த பாடல்களைப்—பாடிக்கொண்டு எம்பெரு

13. ஆசா. ஹரு. சூத்திரம். 152. (புருடோத்தம நாயுடு அவர்களின் பதிப்பு).

மானின் திருவடிப் பேற்றினையே நினைந்து கொண்டு வாழும் இடம் திருவயிந்திரபுரம் ஆகும்.

**திருத்தலச் சூழ்நிலை :** எம்பெருமான் கோயில் கொண்டுள்ள எழிலார்ந்த திருவயிந்தரபுரச் சூழ்நிலை களைப் பாசுரங்கள் பல கோணங்களில் காட்டி நிற்கின்றன.

'பின்னும் மாதவிப் பந்தலில் பெடைவரப்
பிணியவிழ் கமலத்து
'தென்ன' என்றுவண் டின்னிசை முரல்தரு
திருவயிந்திர புரமே

[மாதவி-குருக்கத்தி; பெடை-பெண் அன்னம்; பிணி-கட்டு; கமலம்-தாமரை; முரல்தரு-பாடா நிற்கின்ற]

என்பது ஒரு கோணத்தில் பார்க்கப்பெறும் சூழ்நிலை. ஆண் வண்டுகள் தம்முடைய பெண்வண்டுகளுடன் கூடித் தாமரை மலரின்மீது இருந்துகொண்டு **'மதுபானம்'** பண்ணுகின்றன. தம்பதிகட்குள் ஊடல் (பிரணய கலகம்) ஏற்படுகின்றது. பெண்வண்டு ஆண்வண்டைவிட்டு நீங்கிக் குருக்கத்திப் பந்தலில் புகுந்து ஒளிந்துகொள்ளுகின்றது. அதனைப் பிரிந்து ஆற்றமாட்டாத ஆண்வண்டு, தனது துணைகொண்டு ஊடல் தீர்ந்து ஓடிவருமாறு தாங்கொணாத தனது சிரம நிலையை வெளியிடுகின்ற இன்னிசைப் பாடல்களைத் தாமரை மலரில் இருந்து கொண்டு பாடுகின்றது. இப்படிப்பட்ட பொழில் வாய்ப்புப் பொருந்தியது இத்திவ்வியதேசம். வண்டானது கிளைகளின் (சாகைகளின்) நுனியிலே திரியுமாப்போல வேதசாகையின் நுனியில் (உபநிடதங்களில்) விளங்கு கின்ற எம்பெருமான் எம்பிராட்டியுடன் ஊடல் கொண்டு செய்யும் செயல்களைச் சொல்லியதாகக் கொள்வர்

வியாக்கியாதாக்கள். ''பிராட்டியும் தானுமான சேர்த்தியில் ப்ரணயகலகம் மாறாதே சொல்லுமாப்போலே யாயிற்று அகங்குத்தை திர்யக்குகளையுடைய யாத்திரையும்''[14] என்ற இன்சுவை மிக்க பெரிய வாச்சான்பிள்ளை அருளில் செயலில் ஆழங்கால்பட்டு நிற்கின்றோம். இன்னொரு பக்கத்தில் அன்பொடு பொருந்தி வாழும் அன்னப்பறவைகளின் தம்பதிகள் காட்டப்பெறுகின்றன. இவை பெரிய தாமரைப் பூவாகிய படுக்கையில் பொருந்தி வாழ்கின்றன. இவற்றின் வாழ்வு மேலும் இனிதாகும் பொருட்டு செந்நெல் நிறைந்த கதிர்கள் சாமரம் வீசுகின்றன. (7)

பிறிதொருகோணத்தில் பாசுரம் காட்டும் சூழ்நிலை இது. நெருங்கிய குருக்கத்திச் செடிகளோடும் செண்பக மரங்களோடும் தழுவி நிற்கின்றன முல்லைக்கொடிகள். செந்தாமரைப் பூக்கள் அங்குள்ள வயல்களில் செழித்து வளர்ந்து காணப்பெறுகின்றன. (3) வயல்களின் இன்னொரு பக்கத்தில் மெல்லிய கரும்பின் இளந்தடிகள் ஓங்கி வளர்ந்து காணப்பெறுகின்றன. வயல்களின் பிறிதொரு புறம் கருப்பஞ்சாற்றின் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேறு காணப் பெறுகின்றது (4)

மற்றொரு கோணத்தில் காணும் சூழ்நிலை இது: வானத்தில் சஞ்சரிக்கும் சந்திரன் தவழப்பெறும் ஓங்கி உயர்ந்த பெரிய மலையும் பெரிய மதிளும் சூழ்ந்திருக்கப் பெற்றது இத்திருத்தலம். இந்த மலையில் வண்டுகள் இசைபாடும் சோலைகள நிரம்ப உள்ளன (6).சோலையில் குரங்குகள் புரியும் சிறுகுறும்புகள் கூறப்பெறுகின்றன.

---

14. அங்குத்தை—அவ்விடம்; திர்யக்குகள்—விலங்குகள்.

பொன்மலர் திகழ்வேங்கை
கோங்கு செண்பகக் கொம்பினில் குதிகொடு
குரக்கினம் இரைந்தோடி
தேன்க லந்ததண் பலங்கனி நுகர்தரு
திருவயிந்தர புரமே (5)

[பொன்மலர்—பொநிறமான பூக்கள்; கொம்பு—கிளை; தண்பலங்கனி—சிறந்த பலாப்பழம்; நுகர்தரு—உட்கொள்ளப் பெற்ற]

என்பது இச் சிறு குறும்புகளைக் காட்டும் பாசுரப்பகுதி. வேங்கை மரம், கோங்குமரம், செண்பகமரம் ஆகிய வற்றின் கிளைகளில் குதித்தோடிக் கீசு கீசுக்சென்று பெரிய ஆரவாரங்களை விளைவித்து தேன்மிக்க சிறந்த பலாப்பழங்களைப் பறித்து நுகர்கின்றன குரங்குகள். குரங்குகளைக் கூறியது சபலரான சம்சாரிகளைக் குறிப்பாக புலப்படுத்தியவாறாகும். 'நின்றவா நில்லா' நெஞ்சினையுடையவராய் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்று கின்ற கீழான பலன்களை நாடும் தன்மையுடையவர்கள் சம்சாரிகள். இப்படிப்பட்டவர்களின் தன்மையும் குரங்கு களின் தன்மையும் ஒப்புமை கொண்டவையன்றோ? இப்படிப்பட்ட சம்சாரிகள் 'உண்டியே உடையே என்று உகந்து ஓடும்' (பெரு-திரு. 3; 4) தன்மையராயினும் பலாக்கனி போன்ற பகவத்குணங்களையும் இடை இடையே அநுபவித்து வாழ்வர் என்பதையும் குறிப்பாகப் புலப்படுத்துகின்றது பாசுரம்.

இன்னொரு கோணத்தில் நோக்கினால் திருத்தலத்தின் மலைவளர் அகில் உந்தித் அருகில் ஓடும் கருட நதியின் வளமான சூழ்நிலை நம் கண்ணில் படுகின்றது.

'தடம்ஆர்
வரைவ ளந்திகழ் மதகரி மருப்பொருடு
மலைவளர் மலர்உந்தித்

திரைகொணர்ந்தணையு செழுநதி வயல்புகு
திருவயிந்திர புரமே (8)

[தடம்ஆர்-குளங்கள் நிறைந்த; மதகரி-மத யானைகள்; மருப்பு-தந்தம்; மலைவளர்-மலையில் வளரும்; திரை-அலை; உந்தி-தள்ளி; அணை-சேருகின்ற; செழுநதி-அழகிய ஆறு]

என்பது கருடநதியின் காட்சியைக் காட்டு பாசுரப் பகுதி கருட நதி வெள்ளமாய்ப் பெருகி வருங்கால் யானைத் தந்தங்களையும், அகில் மரங்களையும், மற்றும் பல பல மணிகளையும் கொழித்துக் கொண்டு வருகின்றது. இந்த ஆறு கழனிகளில் கால்களாகப் பாய்ந்து அதனை வள மிக்கதாக்குகின்றது. இந்த ஆற்றில் மீன்கள் துள்ளிவிளை யாடுகின்றன. ஆறுபாயும் வெற்றிலைக் கொடிக்கால்களில் கணுக்கள்தோறும் வெற்றிலைக் கொடிகள் கிளைக் கின்றன. சோலைகளிலுள்ள பாக்குமரங்கள் இளங்குருத்து களை விடுங்கால் சோலை முழுதும் நறுமணம் வீசு கின்றது (9).

**தலத்து எம்பெருமான்** : எம்பெருமானின் நிலை பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்தாக இருப்பினும் இந்த ஐந்து நிலைகளிலுள்ள எம்பெருமான்கள் வேறுபாடற்ற ஒருவரே என்பது வைணவதத்துவம். இதனை,

மூவர் ஆகிய ஒருவனை மூவுலகு
உண்டுஉமிழ்ந்(து) அளந்தானை
தேவர் தானவர் சென்றுசென்று இறைஞ்ச, தண்
திருவயிந்திர புரத்து
மேவு சோதியை (10)

[தானவர் - அரக்கர்கள்; மேவு - பொருந்தி யுள்ள; சோதி - பரஞ்சோதி]

என்ற இறுதிப் பாசுரப் பகுதி தெளிவாக்குகின்றது. மும் மூர்த்திகளாக நின்று படைப்பு, அளிப்பு, அழிப்புச் செயல் களைச் செய்பவனும் (பரநிலை) மூவுலகுண்டு உமிழ்ந்த வனும் (வியூகநிலை), இவ்வுலகினை அளந்தவனும் (விபவ நிலை), திரு அயிந்திர புரத்தில் உறையும் சோதி யும் (அர்ச்சைநிலை) ஒருவனே என்பது ஆழ்வார் கருத் தாகும்.

**வெற்றி,வீரச் செயல்கள் :** மேற்கூறப் பெற்ற உண்மையின் அடிப்படையில் பாசுரங்கள் தோறும் குறிப்பிடப்பெறும் எம்பெருமானின் வீரச்செயல்களும் வெற்றிச் செயல்களும் நம் மனத்திடல் குமிழியிடுகின்றன. இந்த எம்பெருமான் கோலவராகமாகிப் பூமியை மீட்டுக் கொணர்ந்தவன்; திருப்பாற்கடலில் யோகத்துயில் கொண்டிருப்பவன் (1). சுடர்விட்டு ஒளிரும் திருவாழியை ஏந்தியவன்; செய்யவள் உறையும் திருமார்பன்; வேதங் கள் ஓதும் பல்வேறு பொருள்களும் தானேயாக இருப்ப வன் (2). பாலனாகி எழுலகையும் உண்டு சிறிய ஆலந்தளிரில் அறிதுயில் கொள்ளும் மாயவன் (3). இரணி யனின் மார்பை இரண்டு பிளவாக்கிப் பள்ளியில் ஓதிய அவன் மகன் சிறுக்கன் உய்யக் கருணை வெள்ளம் பாய்ச்சியவன் (4). மாவலியின் வள்ளண்மையைப் பயன் படுத்திக் கொண்டு அவனிடம் மூவடிமண் இரந்து பெற்று எல்லா உலகங்களையும் தன் திருவடியால் அளந்து தன்னுடையனவாக்கிக் கொண்டவன் (5). கூனியின் கொடிய சொற்கேட்டுப் பிராட்டியோடு கானகத்திற்கு எழுந்தருளிய காளமேகம் (6). பிராட்டியின் காரண மாகவே இலங்கைபர்கோன் முடிகள் பத்தையும் அயன் சரத்தால் உருண்டோடச் செய்த வீரராகவன் (7). அப் பிராட்டியினை அடைவதற்காகவே வில்லிறுத்த வித்தகன். பசிக்கோபத்தால் இந்திரன் பெய்வித்த கல்மாரியைக் குன்றம் ஏந்தித் தடுத்து ஆயர்களையும் ஆநிரைகளையும்

காத்தமாயன் (8). பார்த்தன் பொருட்டுப் பாரதப்போரில் தேரேறும் சாரதியாகித் திருவாழி ஏந்திய கையால் சாட்டையை ஏந்திய கோமகன் (9). இத்தகைய எம்பெருமானையே திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்து நம்மையும் வாழ்வித்தார்.

அடுத்து, ஆழ்வார் சோழ நாட்டுத் திருத்தலங்களைச் சேவிக்கத் திருவுள்ளம்பற்றித் தில்லையை நோக்கி வருகின்றார்.

# 8. சோழநாட்டுத் திருத்தலப் பயணம்

நடுநாட்டுத் திருப்பதிகளான திருக்கோவலூர், திருவயிந்திரபுரம் ஆகிய இரண்டையும் மங்களாசாசனம் செய்தருளின பின்னர் சோழ நாட்டிலுள்ள திவ்விய தேசங்களை எல்லாம் மங்களா சாசனம் செய்யத் திருவுள்ளம் பற்றுகின்றார் ஆழ்வார். முதலில் தில்லைத் திருச்சித்திர கூடத்தில் இழிகின்றார்.

**1. தில்லைச் திருச்சித்திரகூடம்**[1]**:** தலத்திற்குப் போந்த ஆழ்வார் இரண்டு திருமொழி களால் (3. 2; 3. 3) மங்களாசாசனம் செய்கின்றார். இத்திருப்பதியின் எழிலார்ந்த சூழ்நிலை இவர் மனத்தைக் கவ்வுகின்றது. 'சேமங்கொள்பைம் பூண் பொழில் சூழ்ந்த தில்லைத் திருச்சித்திர கூடம்' (3. 2: 5), என்றும்,

1. **சித்திரகூடம்** (சிதம்பரம்) : தென்னிந்திய இருப் பூர்தி வழியில் சிதம்பரம் நிலையம். நிலையத்தி லிருந்து திருக்கோயில் சுமார் ஒரு கி. மீ. தொலைவு. ஆதியில் இத்தலம் 'தில்லை' (Excoecaria Agallecha Linn) என்ற ஒருவகைப் புதர்ச் செடிகள் நிறைந்த வனமாயிருந்தமையின் 'தில்லை' என்ற பெயர் பெற்றது. 'சித்திர' கூடம் என்பது விசித்திரமான சிகரங்களை யுடையது எனப் பொருள்படும் காரணப்பெயர். இஃது இராமபிரான் வனவாசம் செய்த காலத்து

'தெய்வப் புனல்சூழ்ந்து, அழகாயதில்லைத் திருச்சித்திர கூடம்' (7) என்றும், 'சேடுயர் பூம்பொழில்தில்லைத் திருச்சித்திர கூடம்' (3.3:1) என்றும் வருணிக்கின்றார். ஊரைச் சூழ்ந்த சோலைகளில் மயில் கூட்டங்கள் ஆடுகின்றன. அவை சோலைகளே ஆடுவனபோல் காட்சியளிக்கின்றன. தீர்த்தங்கள் மதுவோடு கூடிப் பெருகுவதால், மதுவின் நசையால் வண்டுகள் திரளாக மொய்க்கின்றன. (3.2 : 1). அருகில் வெள்ளாறு (நிவா என்று குறிப்பிடுவார் ஆழ்வார்) தில்லையை வலங்கொண்டு வருகின்றது. இந்த ஆறு யானைக் கொம்புகளையும், சந்தன மரங்களையும் தள்ளிக்கொண்டு பெருக்கெடுத்து வருங்கால் முத்துகளைக் கொழித்துக் கொண்டு வந்து கழனிகளில் தள்ளும்; அந்த முத்துகள் விதைவிதைத்துபோல் காட்சி அளிக்கும். அவற்றைக் கயல்கள் கண்டு 'இவை என்னவோ?' என்று வெருவித் திரியும் (3.2 : 7)

நான் மறையாளர்கள் நாடோறும் தீவளர்த்து வைதிக கருமங்களைத் தவறாது செய்யும் ஊர்.

வாய்த்து வேதம் மலிகின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீஓங்க ஓங்கப் புகழ்ஓங்கு தில்லை (3. 2 : 2)

---

அவனது திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருந்த தொருமலை. அதனைப் போலவே, இத்தலமும் எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருந்ததுபற்றி அத்திருநாமமே இதற்கும் இடப் பெற்றது. போலும் எம்பெருமான்: கோவிந்தராசன், சித்திர கூடத்துள்ளான்; கிழக்கு நோக்கியா திருமுக மண்டலம்; சயனத்திருக் கோலம். தாயார் : புண்டரீகவல்லி. நடராசர் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. பெரி. திரு. 3 2; 3.3 பெரி. திரு. மடல் (24). மேலும் விவரம் அறிய விழைவோர் சோ. நா. தி. (2) என்ற நூலில் 1-வது கட்டுரை காண்க.

[மலிகின்ற - குறைவற்றிருக்கின்ற; சீர்-நற்குணங்கள்; மறையாளர்-வைதிகர்கள்; நாளும்-நாள் தோறும்; ஓங்க-வளர.]

என்பது ஆழ்வார் திருவாக்கு. இவரே இன்னொரு பாசுரத்தில்,

மூவா யிர நான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லை (3.2 : 8)

[முறையால்-முறைப்படி; அணங்காய-திவ்விய மான.]

என்று இந்த அந்தணர்களைச் சிறப்பிப்பர். 'நாங்கை நாலாயிரம், தில்லை மூவாயிரம்' என்பது வழக்கமாக வழங்கிவரும் வசனம். இங்கு அந்தணர்கள் நாளும் வேதம் ஓதிக்கொண்டிருக்கையாலே, அவர்கள் வீட்டுப் பெண் பிள்ளைகளும் எப்போதும் அவ்வொலிகாதில் பட்ட உறைப்பின் மிகுதியாலே வேதங்களைச் சொல்லுவர். அவர்கள் கையிலேயிருந்து வளர்ந்து பேசும் கிளிப்பிள்ளை களும் நான்மறைகளைப் பாடுகின்றனவாம் என்கின்றார் ஆழ்வார் (3.2 : 6).

ஊன்வாட உண்ணாது உயிர்காவல் இட்டு
உடலில் பிரியாப் புலன்ஐந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா:
தமதா இமையோர் உலகுஆள கிற்பீர்
கான்ஆட மஞ்ஞைக் கணம்ஆட, மாடே
கயஆடு கால்நீரப் பழனம் புடைபோய்த்
தேன்ஆட, மாடக் கொடுஆடு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே (3.2 : 1)

[ஊன் - மாமிசம்; காவல்இட்டு - போகாதபடியாக; மஞ்ஞை - மயில்; கணம் - கூட்டம்; மாடு - பக்கம்; தேன் - வண்டு; கயல் - மீன்; கால் - வாய்க்கால்; பழனம் - வயல்]

என்பது முதற்பாசுரம். வீடுபேற்றை அவாவும் முமுட்சுகள் ஊன் உண்ணாது நீரையும் காற்றையுமே உட்கொண்டு உயிரைக்காத்துப் புலன்களை ஒடுக்கித் தவம் புரிகின்றனர். சிலர் இளங்காய்களையும் நெடுநாள் உலர்ந்த பழங்களையும் உட்கொண்டு ஐந்து தீயூடு நின்று தவம் புரிகின்றனர். இவர்கள் நிலையைக் கண்டு கழிவிரக்கம் கொண்ட ஆழ்வார் ''தில்லைத் திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்கேள்'' என்று ஒரு தடவைக்கு ஒன்பது தரமாக ஆற்றுப் படுத்துகின்றார். இத்திருத்தலம் சென்று சேர்ந்தால் பரமபுருஷார்த்தம் எளிதாகக் கிடைக்கவேண்டியிருக்க, அரிய வழிகளை மேற்கொள்வது ஏன்?' என்று கேட்கின்றார். இப்பாசுரத்தில் நீக்க வேண்டியவற்றைப் பின்னடிகளிலும் பேசுகின்றார் ஆழ்வார்.

ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும் பொழுது பலவிபவாவதாரப் பெருமான்களை அநுசந்திக்கின்றார். அவர்களுடைய வீரச்செயல்களிலும் விசித்திரச் செயல்களிலும் ஆழங்கால் படுகின்றார். ஒருகாலத்தில் இந்த வையம் பரந்த கடல் வெள்ளத்தில் மூழ்கிப்போக, அப்பொழுது மிக்க சினங்கொண்டவராகத் திருவுருவாகி அதைத் தம் கோட்டால் தூக்கிக் கொணர்ந்தவன் (3.2 : 3); அழகிய வாமன உருவங்கொண்டு மாவலியின் வேள்வி நிலத்திற்குச் சென்று மூவடிமண் இரந்து பெற்றவன் (4); இருபத்தொரு தலைமுறை க்ஷத்திரியர்களைக் கொன்றொழித்த பெருமான் (5); வருணன் உதாசீனத்தால் அணைகட்ட வாராத்து கண்டு அவன் மீது சினங்கொண்டு 'அனைவரும் நடந்தே செல்லும்படி கடலை வற்றச்செய்வேன்' என்று கூறிப் பொங்கி எழுந்து வருணனைச் சரண்

அடையச் செய்து சேதுகட்டியவன் (6); இலங்கை நகரை ஓரம்பால் அழித்தவன் (6); பிரகலாதாழ்வான் பொருட்டு நரசிம்ம உருவத்துடன் தோன்றி அவன் தந்தை இரணியனை அழித்தவன் (8). இத்தகைய எம்பெருமான் தான் சித்திர கூடத்தில் எழுந்தயிருளிருப்பவன் என்கின் றார் ஆழ்வார்.

கிருட்டிணாவதாரத்திலும் அதிகமாக அவ்வவதாரத்தில் நிகழ்ந்த பல அற்புதச் செயல்களை நினைந்து போற்றுகின்றார் ஆழ்வார். இங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? நப்பின்னைப் பிராட்டிக்கும் பெரிய பிராட்டிக்கும் கொழுநன்; குதிரை வடிவாக வந்த கேசி என்னும் அசுரனின் வாயைப் பிளந்து கொன்றவன்; குன்றம் ஏந்தி ஆயர்களைக் கல்மாரியி னின்றும் காத்தவன் (3.2:7,8; 3.3:1). இரட்டை மருத மரங்களிடையே தவழ்ந்து அவற்றை முறித்துத் தள்ளின வன்; கோவர்த்தன மலையைக் கொற்றக் கொடையாக எடுத்து ஆயர்கட்கும் ஆநிரைகட்கும் வந்த துன்பத்தைக் காத்தவன்; அழகிய பெண்ணுருவாய் வந்து நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயன்ற பூதனையின் உயிர் குடித்தவன்; 'அறியாதார்க்கு ஆனாய னாகிப் போய் ஆய்ப்பாடி, உறியார் நறுவெண்ணெய் உண்டு உகந்தவன்'; நப்பின்னையின்பொருட்டு ஏழு கொல்லேறுகளைத் தொலைத்துத் திருவாய்ப் பாடியின் தெருவில் கூத்தாடியவன்; குவலயாபீடம் என்னும் களிற்றின் கொம்புகளிரண்டையும் சேற்றிலிருந்து முள்ளங்கியைப் பிடுங்குவதுபோல் பிடுங்கி அவற்றையே ஆயுதமாகக் கொண்டு களிற்றினையும் பாகனையும் யமலோகத்திற்கு அனுப்பினவன் (3.3:1—7). இத்தகைய எம்பெருமான் 'பின்னானார் வணங்கும் சோதியாக', கோவிந்தராசனாக, திருத்தில்லையில் கோயில் கொண்டி ருப்பதாக ஆழ்வார் அநுசந்தித்து அகமகிழ்கின்றார்.

கோவிந்தராசர் (மூலவர்) திருப்பாற்கடல் நாதன்போல் சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். வியூக நிலை எம்பெருமானை அர்ச்சை நிலையில் சேவித்து அகங்களிக்கின்றார் ஆழ்வார்.

இரண்டாம் திருமொழியில் (3. 3) 'வருவான்' (2, 3, 4, 5, 6, 8), 'வீதிவருவான்' (7), 'வருகின்றான்' (1) என்று அருளிச் செய்திருப்பதால், அவர் இத்திருப்பதிக்கு எழுந்தருளிய சமயம் பெருமாளுக்குத் திருவீதி புறப்பாடாக இருந்திருக்கலாமென்று சிலர் கருதுவர், இதனை நிலை நிறுத்த,

கருமுகில் போல்வதோர் மேனி
　　கையன ஆழியும் சங்கும்
பெருவிறல் வானவர் சூழ
　　ஏழுல கும்தொழுது ஏத்த
ஒருமகள் ஆயர் மடந்தை
　　ஒருத்தி நிலமகள் மற்றைத்
திருமக ளோடும் வருவான்
　　சித்திர கூடத் துள்ளானே　　(3. 3 : 9)

[கருமுகில்-காளமேகம்; விறல்-ஆற்றல்; ஆயர் மடந்தை-நப்பின்னை (நீளாதேவி); நிலமகள்-பூமிப்பிராட்டி; திருமகள்-பெரிய பிராட்டியார்]

என்ற பாசுரத்தைக் காட்டலாம். திருமேனி காளமேகம் போன்றுள்ளது. அதற்குப் பொலிவு தருவனபோல் திருக்கையிலுள்ள திருவாழி, திருச்சங்குகள் ஒளிர்கின்றன. இந்திரன் உள்ளிட்டதேவர் குழாங்கள் சுற்றிலும் சூழ்ந்து வருகின்றன. மற்றுள்ளாரும் தொழுது துதிக்கின்றனர். சீதேவி, பூதேவி, நீளாதேவி என்ற நாய்ச்சிமார் மூவரும் எம்பெருமானும் எழுந்தருளியுள்ளனர். இப்படிப்பட்ட விபவம் பொலியப் புறப்பட்டெழுந்தருளா நின்றனன்

எம்பெருமான் என்று கண்ணாரக் கண்டு வாயாரப் பேசுகின்றார் ஆழ்வார். இன்னொரு பாசுரத்தில் இந்த மூன்று தேவிமார்களைப் பற்றி,

பூமங்கை தங்கிப் புலமங்கை மன்னிப்
புகழ்மங்கை எங்கும் திகழ (3.2:5)

என்று பேசுவர். இவர்களுள் முதல் தேவியாகிய சீதேவி (பெரிய பிராட்டியார்) எம்பெருமானுடைய வலக் கையைப் பற்றினள்; இரண்டாம் தேவியாகிய பூதேவி (பூமிப் பிராட்டியார்) அவனுடைய இடக்கையைப் பற்றினள். மூன்றாம் தேவியாகிய கீர்த்திதேவி (புகழ் மங்கை) அதாவது நீளாதேவி உலக முழுவதையும் இடமாகப் பற்றினாள் என்று ஒரு சமத்காரம் தோன்றப் பேசும் ஆழ்வார் வாக்கு நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. இங்ஙனம் எல்லாம் சித்திர கூடத்தினை மங்களாசாசனம் செய்த ஆழ்வார் சீகாழிக்கு வருகின்றார்.

2. **சீகாழி**[2]: ஆழ்வார் பெருமக்களுள் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு அதிகமான எண்ணிக்கையில் திவ்விய தேசங்களைச் சேவித்தவர் திருமங்கை மன்னன். திருச்சித்திர கூடத்தைப் பற்றிப் பேசும்போது 'தில்லைத்

2. **சீகாழி:** விழுப்புரம் - மயிலாடுதுறை இருப்பூர்தி வழியில் ஒரு நிலையம். நிலையத்திலிருந்து அரைக்கல் தொலைவிலுள்ளது காழிச் சீராமவிண்ணகரம் என்னும் திவ்விய தேசம். **எம்பெருமான்** : தாடாளன், திரிவிக்கிரம மூர்த்தி; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்** : மட்டவிழும் குழலி நாய்ச்சியார். பெரி. திரு. 3. 4 (பதிகம்) மேலும் விவரம் வேண்டுவோர் **சோ. தி. ந.** (2) 2-வது கட்டுரை காண்க.

திருச்சித்திர கூடம் சேர்மின்களே' என்கின்றார். காழிச் சீராம விண்ணகரத்தைப் பற்றிப் பேசும்போது 'காழிச் சீராம விண்ணகரம் சேர்மின் நீரே' என்கின்றார்'; திருநறையூரைப் பற்றிப் பேசும்போது 'திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே' என்கின்றார். இப்படிப் பல திருப்பதிகளையும் எடுத்துரைத்து 'சென்று சேர்மின்கள்-சென்று சேர்மின்கள்' என்றால் 'எந்தத் திருப்பதியில் சென்று சேர்வது?' என்று வைணவ அடியார் ஒருவரை மற்றோர் அடியார் கேட்க, அதற்கு அவர், "ஆழ்வார் திருவாயில் நுழைந்து புறப்பட்ட திருப்பதிகள் எல்லாம் நுழைந்து புறப்பட வேண்டியது பிராப்தம்' என்று அவர் மறுமொழி பகர்ந்தது வைணவ சமூகம் நன்கு அறியும். 'தான் உகந்த ஊரெல்லாம் தன் தாள் பாடிய' (திருநெடுந். 6) ஆழ்வாரே 'பதியேபரவித் தொழும் தொண்டர்' (7.1:7) என்று குறிப்பிடுவதால் எம்பெருமான் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் சென்று சென்று சேவிக்க வேண்டும் என்பது உட்கருத்து.

காழிச் சீராம விண்ணகரத்து எம்பெருமானை ஆழ்வார் ஒரு திருமொழியால் (3.4) மங்களா சாசனம் செய்கின்றார்.

ஒருகுறளாய் இருநிலம்மூ வடிமண் வேண்டி
உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்
'தருக எனா' மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாள்அணைவீர் தக்க கீர்த்தி.
அருமறையின் திரள்நான்கும் வேள்வி ஐந்தும்
அங்கங்கள் அவைஆறும் இசைகள் ஏழும்
தெருவில்மலி விழாவளமும் சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின் நீரே (1).

[இருநிலம்—விசாலமான நிலம்; ஒடுக்கி-ஆக்கிரமித்து; ஒன்றும்-மூன்றாவது அடி நிலத்

தையும்; தாடாளன்-பெருமை பொருந்தியவன் ;
தாள்-திருவடி; திரள்-கூட்டம் தொகுதி]

என்பது முதற் பாசுரம்; கம்பீரமாத நடைபெறுகிறது. இந்தப் பாசுரத்தில் திரிவிக்கிரமாவதாரம் பற்றிய செய்தியுடன் வடமொழி இலக்கியம்பற்றிய குறிப்புகளையும் தருகின்றார் ஆழ்வார். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என மறைகள் நான்கு. பிரம்மயஜ்ஞும், தேவயஜ்ஞும், பூதயஜ்ஞும், பித்ருயஜ்ஞும், மநுஷ்யஜ்ஞும் என வேள்விகள் ஐந்து. சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என வேதாங்கங்கள் ஆறு. நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம் என இசைகள் ஏழு. இந்தப் பதிகத்தில் பாசுரங்களின் பிற்பகுதி திவ்வியதேசத்தைப் பற்றிய வருணனையையும், முற்பகுதி இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும் எடுத்துரைக்கின்றன.

**திவ்வியதேசவளம் :** இத்தலத்தைச் சூழ்ந்துள்ள வயல்களில் சூல்கொண்டுள்ள சங்குகள் கருவுயிர்க்கும் நிலையிலுள்ளன; அங்கு உழுகின்ற எருதுகள் அங்கும் இங்கும் ஓடுகின்றன; இந்த அதிர்ச்சியினால் சங்குகள் முத்துகளை ஈனுகின்றன. வெள்ளைவெளேரென்று இருக்கின்ற இந்த முத்துகளைக் கொக்குகள் கண்டு தம்முடைய முட்டைகள் என்று மயங்குகின்றன; அவற்றைச் சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டுள்ளன. கழனிகளில் எங்கும் தாமரை மலர்கள் நிறைந்துள்ளன; மீன்கள் குறுக்கும் நெடுக்குமாகத் துள்ளிக் குதிக்கின்றன (2). கழனிகளில் பயிர்களினிடையே உள்ள நெய்தல், குவளை, குமுதம், தாமரை இவற்றைக் களைபறிக்கும் கடைச்சிமார்கள் நெய்தல், குவளை மலர்களைத் தங்கள் கண்களாகவும், சிவந்த ஆம்பல் மலர்களைத் தங்கள் வாயாகவும் தாமரை மலர்களைத் தங்கள் முகமாகவும் மயங்கிக் களை

பறியாமல் கழனியை விட்டு வெளியேறுகின்றனர் (3, 5). கடலில் உள்ள சங்குகள் அவ்விடத்தை இகழ்ந்துவிட்டு நீங்கிச் சீகாழியில் வந்து சேர்கின்றன; தாழைகள் நிறைந்த கழனிகளில் திரிகின்றன; பின்னர் கழனிகளை யும் துறந்து கழனிகட்கு வருகின்றன; பின்னர் மழைநீர் வெள்ளமாகப் பெருகி வருகின்ற வாய்க்கால்களின் மூலம் ஊரிலுள்ள வீதிகளில் வந்து சேர்ந்து சங்குகளையும் முத்து களையும் ஈனுகின்றன (7). அணில்கள் கிளைகிளையாகத் தாவித் தவழ்வதனால் பாக்குமரங்களின் பழுத்த காய்கள் உதிர்ந்து விழுகின்றன; அவை பலா மரங்களின் காய்களின் கனத்தால் தாழ்ந்த கிளைகளில் நெருங்கியிருக்கும் பருத்த, கனியப் பழுத்த, பலாப்பழங்களின் மது விழுவதால் அவை நசுங்கித் தேனைப் பொழிகின்றன (8). வண்டுகள் தம்முடைய பேடையோடும் சேர்ந்திருந்து நீர்நிலைகளி லுள்ள தாமரைப் பூவில் புகுந்து தேனைப் பருகி, அங்கே உறங்கி, பூந்தாதுத் துகள்களில் புரண்டு களித்து இசை பாடுகின்றன (9). இங்ஙனம் ஆழ்வார் சீகாழியின் மருத நில வளத்தைக் காட்டுகின்றார்.

**நகராட்சி :** ஆழ்வார் பாசுரங்களிலிருந்து நகரைப் பற்றியும் ஓரளவு அறியமுடிகின்றது. நகரிலுள்ள பெரிய மாடங்களில் பதிக்கப்பெற்ற நீல மணிகள் அந்திப் பொழுதை ஆதாரமாகவுடைய இருளை அதிகப்படுத்து கின்றன; அவற்றின் நடுவே அழுந்தியுள்ள முத்துகள் குளிர்ந்த திங்களின் நிலவொளியைக் காட்டுகின்றன; இவற்றின் இடைஇடையே அழுத்தப்பெற்றுள்ள பவளங் கள் எழுஞாயிற்றின் சிறந்த ஒளியைப் பரப்புகின்றன (4). நகரிலுள்ள மாளிகைகள் மலைபோன்று உயர்ந்துள்ளன. அந்த மாளிகையின்மீதுள்ள தளத்தில் நின்று உடுக்கை இடைமாதர்கள் நட்புடன் உரையாடி மகிழ்கின்றனர். அவர்களின் தாமரை போன்ற முகத்தின் ஒளியைக் கண்ட திங்கள் வெள்கி வருந்துகின்றான். நான்கு மறைகள்,

ஆறு அங்கங்கள், ஐந்து பெரு வேள்விகள், ஏழு சுரங்கங்கள், வீதிநிறைந்த திருவிழாச் சிறப்புகள் ஆகியவற்றால் புகழ்பெற்றது இத் திருத்தலம் (1).

**திருக்கோயில் எம்பெருமான் :** இத்திருத்தலத்து எம்பெருமான் ஆழ்வாரிடம் ஏற்படுத்திய அநுபவம். எம்பெருமான் ஆழ்வாருக்கு உலகளந்த மூர்த்தியாகக் காட்சி தருகின்றான் (1). தனக்கு ஆயுள் மிகுதி என்று அகங்காரம் கொண்டிருந்த நான்முகனின் செருக்கையடக்கியவனாகவும்;[3] சிவனின் சாபத்தைத் தீர்த்த நாராயண மூர்த்தியாகவும்; (2) அடுத்து, கோலவராக அவதாரம் எடுத்து பூமிப்பிராட்டியாரை அண்டபித்தியினின்றும்

---

3. **உரோமசன்மரின் வரலாறு :** இஃது இதிகாச புராணங்களில் எங்கும் காணப்பெற்றிலது. பலர் மூலம் பலவாறாகக் கேட்ட கதையைச் சுருக்கிக் கூறுவர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள். உரோம சன்மர் உடல் முழுவதும் கரடிபோல் அடர்ந்த மயிர்களையுடைய ஒரு மாமுனிவர். இவர் நீண்ட காலம் வாழ்ந்து எம்பெருமானைச் சிந்தனை செய்ய விரும்பினார். பரந்தாமன் இவர் முன் சேவை சாதித்து இவர் விருப்பத்தைக் கேட்க, முனிவர் இந்த உடம்புடன் எம்பெருமானைத் தொழ விரும்புவதால் பல்லாயிரம் நான்முகர்க்குரிய ஆயுளைத் தந்தருளுமாறு வேண்டினார். பரந்தாமனும் திருவுள்ளம் உவந்து 'மாமுனிவரே, நான்முகனுடைய ஆயுளை நீர் அறிவீர். ஒரு நான்முகன காலம் சென்றால், உம்முடைய உடம்பினின்றும் ஒரு மயிர் இற்றுவிழக் கடவது; இப்படி ஒவ்வொரு நான்முகனின் முடிவிலும் ஒவ்வொரு மயிராக இற்று 'இனி உடம்பில் ஒரு மயிரும் இல்லை' என்று சொல்லத்தக்க நிலைமை நேரும் அளவும் நீர் வாழ்ந்திருக்கக் கடவீர்' என்று வரம் அருளினர் என்பது வரலாறு.

விடுவித்துத் தன்கோட்டு நுனியில் வைத்தருளிய கோல வராக மூர்த்தியாகவும் வாணனுடைய ஆயிரந்தோள் களைத் துணித்த கண்ணனாகவும் (3); வலிமிக்க ஏழு காளைகளை அடக்கிப் பின்னைப் பிராட்டியை மணந்த பெருமானாகவும், இரணியனின் மார்பைப் பிளந்து அவனை முடித்தருளிய நரசிம்ம மூர்த்தியாகவும் (4) சேவை சாதிக்கின்றான்.

இருபத்தொருமுறை சத்திரியர்களைக் கொன்று அவர்தம் குருதியால் தம் வமிசத்தில் மாண்டவர்கட்குத் தர்ப்பணம் செய்த பரசுராமனாகவும் குவலயாபீடம்என்ற யானையைக் கொன்றொழித்த கண்ணனாகவும் (5); வாலி கவந்தன், விராதன் இவர்களை மீளா உலகிற்கு அனுப்பிய இராம மூர்த்தியாகவும் (6); இராவணனுடைய பத்துத் தலைகளையும் பனங்காய்களை உருட்டுமாப்போலே இற்று விழச் செய்த காகுத்தனாகவும் (7); அழகெலாம் திரண்டு திகழும் சத்தியபாமாவுக்காக உம்பருலகச்சோலை யிலிருந்தும் பாரிசாதமரத்தைப் பிடுங்கி வந்த கண்ணபிரா னாகவும் (8); பிறையணிந்த பிஞ்ஞகனை வலப்புறத்தி லும் நான்முகனை நாபிக் கமலத்திலும் பெரிய பிராட்டி யாரைத் திருமார்பிலும் வைத்துக் கொண்டிருக்கும் மூர்த்தியாகவும் (9) காட்சியளிக்கின்றான். இந்த மூர்த்தி களையெல்லாம் மானசீகமாகக் கண்டு அநுபவித்த ஆழ்வார் "இத்தகைய எம்பெருமான்தான் காழிச்சீராம விண்ணகரில் கோயில் கொண்டுள்ளான்; அவனை வணங்கும் பொருட்டு அத்திருத்தலத்திற்கு ஏகுவீர்" என்று நம் போன்றவர்களை ஆற்றுப்படுத்துகின்றார். அடுத்துத் திருவாலி திருநகரிக்கு வருகின்றார்.

3. **திருவாலி : திருநகரி**[4] : எம்பெருமானைத் திரு மகள் ஆலிங்கனம் செய்த தலமாதலால் இத்திருத்தலம்

---

4. **திருவாலி :** மாயூரத்தினின்றும் திரு வெண்காடு செல்லும் சில பேருந்துகள் திருவாலி வழியாகச்

**'திருவாலி'** என்ற திரு நாமத்தால் வழங்கி வருகின்றது. இந்த எம்பெருமானை ஆழ்வார் தானான தன்மையில் ஒரு பதிகத்தாலும் (3.5) பிராட்டிநிலையை ஏறிட்டுக் கொண்டு இரண்டு திருமொழிகளாலும் (3.6; 3.7) மங்களாசாசனம் செய்துள்ளார். இவற்றைத்தவிர பெரிய திருமொழியில் ஒன்பது பாசுரங்களிலும் திருநெடுந் தாண்டகம் (12), சிறிய திருமடல் (39), பெரியதிருமடல் (67) களிலும் இந்த எம்பெருமானைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார்.[5]

செல்லும். அவற்றுள் ஒன்றில் ஏறி இத்திருத் தலத்தை அடையலாம். சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து தென் கிழக்குத்திசையில் 6 கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதிகள் உண்டு. திருநகரியும் திருவாலியும் இரண்டு கல்தொலைவால் பிரிக்கப்பெற்றுள்ளன. **எம்பெருமான்:** வயலாளி மணவாளன், கல்யாண அரங்கன், வேதராசன்; இருந்த திருக்கோலம்; மேற்கு நோக்கிய திருமுகமண்டலம். **தாயார்:** அமிர்த கடவல்லி. இங்கு நரசிம்மமூர்த்தி சந்நிதி ஒன்று உண்டு: திருநகரியிலும் திருக்கோயிலுக்குப் பின் புறத்தில் ஒரு நரசிம்மமூர்த்தி சந்நிதி உண்டு.

திருநகரியில் திருமங்கையாழ்வாருக்கு ஒரு தனிச்சந்நிதி உண்டு. திருமங்கையாழ்வார் அவதரித்த **குறையலூர்** ஆலிநகருக்கு அருகில் உள்ளது. பங்குனி உத்தரத்தன்று திருநகரிக்கு அரைக்கல் தொலைவிலுள்ள வேதராசபுரம் என்ற ஊருக்கருகிலுள்ள ஒரு மைதானத்தில் நடை பெறும் **வேடுபறி** உத்சவம் மிகு புகழ்வாய்ந்தது. பெரி. திரு. 2.4:1; 3.5; 3.6; 4.9:2; 6.8 : 2; 8.9; 6,8; 10.1 : 3; 11.3:9; 11.7:3; 11.8:6. மேலும் விவரம் நாடுவோர் **சோ.நா.தி,** (2) 15 வது கட்டுரை காண்க.

5. பெரி.திரு: 2.4:1; 4.9:2; 6.8:2; 8.9:6,8; 10.1:3; 11.3:9; 11.7:3; 11.8:6

**தலச்சூழ்நிலை :** இந்தச் சூழ்நிலையை ஆழ்வார் பல பாசுரங்களில் பேசுகின்றார். இந்த ஊரை அடைவதற்கு முன்பே திருத்தலச் சூழ்நிலை ஆழ்வார் கண் வட்டத்தில் விழுகின்றது. 'புல்லிவண் டறையும் பொழில் புடை சூழ் தென் ஆலி' (3.5:10) என்று சோலை வளத்தைப் பேசுகின்றார். அசோக மரத்தின் இளந் தளிர்கள் எல்லாவிடங்களிலும் பரவி இருப்பதனால் எங்கும் செந்தழல் பரவி இருப்பது போன்ற காட்சி காட்சி தருகின்றன (1). புன்னை மரங்களும் சுரபுன்னை மரங்களும் பொருந்தி யிருக்கின்றன. சோலைகளில்; அங்குள்ள விசாலமான தடங்களில் அன்னங்கள் தங்கி வாழ்கின்றன (4). புன்னை, ஞாழல் மரங்களின் நிழலில் குளிர்ந்த தாமரைப் பூவின்மீது ஆண் நண்டுகள் தங்கி யிருக்கின்றன (7). இளவண்டுகள் செண்பகப் பூவையும் மல்லிகைப் பூவையும் தழுவி அவற்றை விட்டு நீங்கித் தென்னை மரங்களின் பாளைகளில் உள்ள தாதினை அளைகின்றன (8). கருப்பஞ்சாறு அட்டபுகை காள மேகம்போல் எங்கும் பரவி மணம் வீசுகின்றது; சோலையிலுள்ள மயில்கள் அப்புகைத் திரளை மேகத் திரளாக மயங்கிக் களித்துக் கூத்தாடுகின்றன (2). அலையெறிகின்ற நீர்வளம் பொருந்திய வயல்களில் செந்நெற்பயிர்களை அறுப்பவர்களின் முகத்தில் மீன்கள் குதித்துப் பாய்ந்து கருப்பஞ்சோலைகளில் சென்று சேர்கின்றன (3). துதிப் பாடல்களின் மதுரமான ஓசையும் சங்குகளின் முழக்கமும், பல்வேறு வகைப்பட்ட இசைக்கருவிகளின் ஒலியும், மாதர்களின் நடன ஒலியும் நீங்காதிருக்கப் பெற்றிருப்பது திருவாலி (5). சந்தியாவந்தனம் முதலிய நித்திய கருமங்கள், யாகம் முதலிய நைமித்திக கருமங்கள், காமிய கருமங்கள் இவற்றைத் தெரிவிக்கும் வேதங்களைத் தொன்று தொட்டு ஓதியும் ஓதுவித்தும் வரும் அந்தணர்கள் நிறைந்திருக்கும் இத்திருத்தலத்தைக் (6) காண்கின்றார் ஆழ்வார்.

**இறையநுபவம் :** ஆழ்வார் பெற்ற இறையநுபவம் பாசுரங்களில் பளிச்சிடுகின்றது. ஆழ்வார் எம்பெருமானை நினையாதிருந்தும், அவன் தானாகவே இவரைப் பொருட்படுத்தி இவருடைய நெஞ்சிலே வந்து குடிகொண்டான். தன்னையொழிய வேறொன்றிலும் நெஞ்சுபட்டி மேயாதபடி ருசியையும் பிறப்பித்தான். ஒரு நொடிப்பொழுதாகிலும் இறைவனை விட்டுப் பிரிந்தால் பிழைக்க முடியாது என்ற நிலையையும் பிறப்பித்தான். இதை எண்ணிய ஆழ்வார் "இனி, நான் உன்னைப் போகவிடேன்; என் நெஞ்சினிலே நிரந்தரமாகக் குடியிருந்து ஒழிவில் காலமெல்லாம் அடிமை கொண்டருள வேண்டும்" என்கின்றார். இதனைப் பாசுரங்கள் தோறும் (3.5) பன்னியுரைக்கின்றார்.

வந்துனது அடியேன் மனம்புகுந்தாய்;
　　புகுந்ததன்பின், வணங்கும்என்
சிந்தனைக்கு இனியாய் (1)

　　[வணங்கும்-வணக்கமுற்ற]

நீலத்தட வரைமாமணி நிகழக்
　　கிடந்ததுபோல், அரவு அணை
வேலைத்தலைக் கிடந்தாய் அடியேன்
　　மனத்து இருந்தாய் (2)

　　[வரை-மலை; நிகழ-விளங்க; வேலை-திருப்பாற்கடல்]

என்று பலவாறு உரைத்ததைக் கண்டு மகிழலாம். பாசுரந்தோறும் 'திருவாலி அம்மானே!' என்று ஆழ்வார் விளித்து மகிழ்வதையும் கண்டு அநுபவிக்கலாம்

மேலே கண்ட மானச அநுவம் முதிர்ந்து உண்மையான நேர்க்காட்சி போன்று வளர்ந்து விடுகின்றது. ஆற்றாமை பிறந்து விடுகின்றது. கரைபுரண்ட ஆற்றா

மையால் ஆழ்வார் தலைவனோடு கலந்து பிரிந்த ஒரு பிராட்டியின் நிலையை ஏறிட்டுக்கொண்டு பரகால நாயகியாகி அந்நிலையில் பேசுகின்றார்[6]. அடுத்திரு மொழி (3.7) தாய்ப்பாசுரமாக நடைபெறுகின்றது. இதுவும் பிறிதோர் இடத்தில் விளக்கப் பெறுகின்றது.[7] அடுத்து திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றையும் மங்களா சாசனம் செய்யத் திருவுள்ளம் கொண்டு புறப் படுகின்றார்[8].

அடுத்த **இந்தளூர்** என்ற திவ்விய தேசத்தை நோக்கி வருகின்றார்.

**4. இந்தளூர்[9]:** இந்தத் திவ்விய தேசத்து எம்பெரு மானை ஆழ்வார் 'இந்தளூர் அந்தணன்' (பெ. திருமடல் 63) என்று குறிப்பிடுகின்றார். சந்திரனது சாபம் நீங்கப்

6. இதனை **'மகள் பாசுரம்'** என்று வழங்குவர். தூது விடுவதாக அமைந்த இப்பதிகம் பிறிதோர் இடத்தில் (கட்டுரை-18) விளக்கப் பெறுகின்றது.
7. இதனை (கட்டுரை-17) தெளியலாம்.
8. இதனைத் தனிக் கட்டுரையில் (கட்டுரை-9) கண்டு மகிழலாம்.
9. **இந்தளூர்:** மயிலாடுதுறை இருப்பூர்தி நிலையத் திலிருந்து வடகிழக்குத் திசையில் மூன்று கல் தொலைவிலுள்ளது; அதாவது மயிலாடுதுறை யின் வடக்கு முனையிலுள்ளது. இருப்பூர்தி நிலையத்திலிருந்து குதிரை வண்டி, மாட்டு வண்டியில் போகலாம். மயிலாடுதுறை நகரிலி ருந்து நடந்தே செல்லலாம். **எம்பெருமான்:** சுகந்தவனநாதன், பரிமளரங்கன், அந்நியரங்கன், மருவினியமைந்தன் என்ற திருநாமங்களும் உள்ளன. மூலவருக்கு நான்கு புயங்கள் உள்ளன. சயனத்திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** புண்டரீகவல்லி; சந்திர

பெற்றதால் இத்திருத்தலம் 'இந்தளூர்' என்ற திருநாமம் பெற்றது. இதற்கு வடமொழியில் 'சுகந்தவனம்' என்ற திருப்பெயரும் வழங்கி வருகின்றது. ஒரு திருமொழியால் (4.9) இப்பெருமானை மங்களாசாசனம் செய்கின்றார். இத்திருமொழியின் பாசுரங்களின் அநுபவம் பேரின்பம் பயப்பதாக உள்ளது. இந்தப் பாசுரங்களை நாவினாற் சொன்னாலும் பிறர் சொல்லக் கேட்டாலும் நெஞ்சு நீர்ப் பண்டமாய் உருகும். திருவிந்தளூர் எந்தையைக் கண்ணாரக் காண வேண்டும் என்றும், கையாரத் தொழ வேண்டும் என்றும், 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்'[10] என்றும் எவ்வளவோ பாரித்துக்கொண்டு வந்தார் ஆழ்வார். ஆனால் அப்பெருமான் திருக்கண்களால் குளிர நோக்குதல், வாரியணைத்தல், வினவுதல், அத்தாணிச் சேவுகத்தில் ஏவுதல் ஆகியவற்றில் ஒன்றும் செய்திலன்! நிரங்குச (தடையில்லாத) சுவாதந்திரனான அவனது திருவுள்ளத்தை யார்தான் அறியவல்லார்? கல்நெஞ்ச திதையும் உருக்கவல்ல ஆழிவாருடைய பாசுரங் களைச் செவிமடுக்க வேண்டும் என்று பிச்சேறினான் போலும். கோபுரவாயிலின் கதவையும் அடைத்துக் கொண்டு கிடந்தான் போலும். பாசுரங்களை மிடற்றொலி கொண்டு ஓதினால், ஓதி உளம்கரைந்தால், ஆழ்வார் துடிக்கின்ற துடிப்பை அறியலாம்.

பிரேமத்தால் பெண்பேச்சாக அமையப் பாசுரமிட்டுக் காட்டுகின்ற துடிப்பை ஆழ்வார் தானான தன்மையில் காட்டுகின்ற திருமொழியாகும் இது. பெண் பேச்சாக வெளியிடும்போது வெளிவரும் நெஞ்சுருக்கும் உணர்ச்சி

சாபவிமோசனவல்லி. பெரி. திரு. 4.9 (பதிகம்) பெரி. திருமடல் (69). மேலும் விவரம் வேண்டு மாயின் சோ நா.தி.—(2). கட்டுரை-3 காண்க.

10. திருவாய் 3.3:1

களையெல்லாம் இத்திருமொழியில் தானான தன்மையில் அருளிச்செய்த அழகு அற்புதமாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

நும்மைத் தொழுதோம் நுந்தம்
பணிசெய் திருக்கும் நும்மடியோம்;
இம்மைக் கின்பம் பெற்றோம்
எந்தாய் இந்த ளூரீரே!
எம்மைக் கடிதாக் கருமம்
அருளி ஆஆஎன்(று) இரங்கி,
நம்மை ஒருகால் காட்டி
நடந்தால், நாங்கள் உய்யோமே (1)

[இம்மை-இப்பிறவி; ஆஆ-ஐயோ; கருமம்-கைங் கரியம்; அருளி-நியமித்து; ஒருகால்-ஒரு தடவை; காட்டி-சேவை சாதிப்பித்து; நடந்தால்-உலா வினால்]

என்பது முதற் பாசுரம். "இந்தளூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! அடியேன் உம்மை வணங்கினேன். நீர் சேஷி என்றும், அடியேன் சேஷபூதன் என்றும், அடிமை செய்தலே முறை என்றும் நன்கு அறிந்தே கைங்கரியத்தை நாடுகின்றேன். உம்மைப் பார்ப்பதே கடினமாக உள்ளது. உம்முடைய திவ்விய மங்கள விக்கிரகத்தை ஒரு தடவை யாவது அடியேன் பார்க்கலாகாதா?" என்கின்றார்.

தொடர்ந்து பேசுவது: நெஞ்சில் நீங்காதிருக்கும் செல்வமே, கட்புலனுக்குச் சிறிது காலமாவது இலக்காகக் கூடாதா? கண்ணாலே கண்டு களிக்கப்பெறும் அநு பவத்தை நீர் வஞ்சித்தீராகிலும் மனத்தால் அநுபவிக்க அநுபவிக்க இனிதாயிருக்கின்றதே. "அந்தண் ஆலிமாலே சோலை மழகளிறே! நறையூர் நின்ற நம்பி" என்று வேறு

திருத்தல எம்பெருமான்களையும் இந்தத் திருத்தல எம்பெருமானாகக் கண்டு 'அடியேற்கு இறையும் இரங்காயே' என்று கெஞ்சும் பாவனையில் பேசுகின்றார் ஆழ்வார் (2).

"நான் சேவித்தாலும் சேவிக்கின்றேன்; இழந்தாலும் இழக்கின்றேன்; அடியேனுக்கு இஃது ஒரு பெரிய பொருளன்று. நீர்குணசாலி என்று பேர் படைப்பதற்குப் படாத பாடுகள் பட்டுள்ளீர். மாவலியிடம் முன்னம் குறளுருவாய் மூவடிமண் இரந்து பெற்று, பின்னர் திரிவிக்கிரமனாகி மூவுலகங்களையும் அளந்து பெரும்பாடுகள் பட்டும் பெரிய குணம் சம்பாதித்தீர். "தான் உலகுக்கெல்லாம் சேஷி; எல்லாரையும் நான் குளிர நோக்கக் கடவேன்' என்று உறுதியாகத் தனிமாலை இட்டிருக்கும் நீர் என்னை நோக்கா தொழியலாமா?"

ஆசை யென்னும் கடலில்
வீழ்ந்திங் (கு) அயர்ந்தோம் அயலாரும்
ஏசு கின்றது இதுவே
காணும் இந்த ளூரீரே (3)

[அயர்ந்தோம்-அறிவு கெட்டோம்; அயலார்-பிறர்; ஏசுதல்-பரிகசித்தல்]

என்கின்றார். "திருமங்கை மன்னன் திருவிந்தளூர்ப் பெருமானைக் காண ஆசைப்பட்டு அது பெறாதே முடிந்தான்" என்ற பேச்சு நாற்சந்தியில் கிளம்பினால் இதனைக் காட்டிலும் மிக்க குற்றம் வேறு உண்டோ? ஒருவர் ஆசைப்பட்ட அழகையும், ஒருவர் அந்த் ஆசைக்கு முகம் காட்டின அழகையும் என்ன சொல்லுவோம்! சர்வரட்சகன் இப்படியன்றோ இருப்பது!' என்று அயலார் ஏசுவார்களே; அப்படிப்பட்ட ஏச்சுக்கு இடமாகும்படி நடந்து கொள்ள வேண்டா' என்பதே அடியேன் சொல்லுவது"(3)

அடுத்து கல் நெஞ்சையும் உருக்கும் வண்ணம் பேசுகின்றார் ஆழ்வார்.

ஆசை வழுவா தேத்தும்
　　எமக்கிங் கிழுக்காய்த்து அடியோர்க்குத்
தேசம் அறிய உமக்கே
　　யாளாய்த் திரிகின் றோமுக்கு
காசின் ஒளியில் திகழும்
　　வண்ணம் காட்டீர் எம்பெருமான்
வாசி வல்லீர்! இந்த
　　ளூரீர்! வாழ்ந்தே போம்நீரே (4)

[வழுவாது-குன்றாமல்; ஏத்தும்- துதிக்கும்; இழுக்கு-குற்றம்; தேசம்-நாடு; ஆளாய்-தொண்டாய்; காசு-பொற்காசு; வண்ணம்-வடிவழகு; வாசி-வேறுபாடு, தாரதம்மியம்]

''அடியேன் உம்மீது ஆசை குன்றாமல் துதிக்கின்றேன். நீர் அடியேனை உதாசீனம் செய்யச் செய்ய அதுவே எருவாக ஆசை மேலும் வளர்கின்றது. இப்படி நான் துதித்தால் 'சேஷபூதர் சேஷியைத் துதிப்பது முறையின்றோ?' என்று எல்லோரும் கருதவேண்டியது முறை; அங்ஙனம் நினையாமல் என் செயலைப் பரிகசிக்கின்றனரே. கூவிக் கூவி நெஞ்சுருகக் கதரும் கலியனுக்குக் காட்சி அளிக்காமல் இருக்கின்றானே; 'இவன் சர்வலோக சரண்யனாம்; திருநாமத்தின் அழகுதான் என்னே!' என்று சிலர் என்னைப் பரிகசிக்கின்றனர். மேலும் சிலர், 'பல்லெலாம் தெரியக் காட்டிப் பலகால் வேண்டினவிடத்திலும் வாய்திறவாது இருக்கும் ஒருவனை நாணம் கெட்டு ஏத்துகின்றானே இக்கலியன்!' என்று ஏளனம் செய்கின்றனர். அந்நியர்களாக இருக்கும் எங்களுக்கென்றே கொண்டிருக்கின்ற திருமேனியை எமக்குக் காட்டாதிருப்பது என்னோ?

**வாசிவல்லீர் :** 'மிகச் சிறந்த நம் திருமேனியை நித்திய சூரிகள் மட்டிலுமே காணவல்லர்கள். அற்பனான இவன் காணலாகாது' என்ற நினைப்போ? சர்வசாதாரண மான திருமேனியை இன்னார்க்குத்தான் காட்டலாம், இன்னார்க்குக் காட்டலாகாது' என்ற வேறுபாடு கொள்ளலாமோ?

**இந்தளூரீர் :** 'நித்தியசூரிகட்குக் காட்சி தரும் வடிவை நித்திய சம்சாரிகட்கும் எல்லாப் பொருள்களை யும் அளிப்பதற்கன்றோ இந்தளூரில் வந்து நிற்பது? வாசியற முகங்கொடுக்க வந்து நிற்கின்ற இடத்தில் வாசி (வேறுபாடு) வைக்கின்றீரே. வாழ்ந்தேபோம் நீரே; உம்முடைய உடம்பு உம்மை ஆசைப்பட்டவர்கட்காக ஏற்பட்டது என்று நினைத்திருந்தோம்; அப்படியன்றாகில் உம்முடைய உடம்பை நீரே கண்டு கொண்டு, நீரே தொட்டுக்கொண்டு, நீரே முகர்ந்து கொண்டு, நீரே கட்டிக்கொண்டு நீரே வாழ்ந்துபோம்' என்று வெறுப் புடன் பேசுகின்றார்.

'அசித்தும் எம்பெருமானின் திருமேனி' என்ற துணிவுடைய இந்த ஆழ்வார் வீணாக வருந்துகின்றார் என்று இந்தளூர்ப் பெருமான் திருவுள்ளம் பற்றியிருப்ப தாகக் கொண்டு ஆழ்வார் பேசுகின்றார்: "நீ எம்பெரு மான், நீர் எம்பெருமான், திசையும் இரு நிலனும் எம்பெருமான்" என்ற சாத்திரப் பொருள் அடியேனுக்குத் தெரியாமல் இல்லை. 'சங்கும் சக்கரமும் புன்முறுவல் கொண்ட முகமும்' திகழும் திவ்விய மங்கள விக்கிர கத்தைக் கண்டு களிக்கப் பேரவாக் கொண்டிருக்கும் அடியேனுக்கு ஜகத் சொரூபனாக இருக்கும் இருப்பு என்ன பயன் அளிக்கும்? அடியேன் போன்றோர் கண்டு களிக்க அன்றோ இந்தளூரில் வந்திருப்பது? நீர் பரவாசுதேவ னாக இருக்கும் இருப்பு நித்தியசூரிகளின் அநுபவத்திற் காக. வியூக நிலை நான்முகன் முதலானோரின் கூக்

குரலைக் கேட்பதற்காக. விபவாவதாரங்கள் அக்காலத்து இருந்தவர்க்காக ஒழிந்தன. அந்தர்யாமியாக இருக்கும் இருப்பு பிரகலாதாழ்வான் போன்றவர்க்காக - அர்ச்சாவதார நிலையொன்றே அடியேன் போன்றோர்க்குப் பிழைப்பு. சம்சாரிகட்கு முகம் கொடுப்பதற்கன்றோ இஃது ஏற்பட்டது? குருடர்க்கு ஏற்பட்ட இடத்தில் விழிக்கண்ணர் புகலாமா? விழிக்கண்ணர்க்கு இடம் குருடர்க்குப் பயன்படுமோ?'' என்கின்றார் (5).

அடுத்து, ஆழ்வார் பேசுவது நம் உள்ளத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது.

சொல்லாது ஒழியகில்லேன் அறிந்த
சொல்லில் நும்அடியார்
எல்லாரோடும் ஒக்க எண்ணி
யிருந்தீர் அடியேனை;
நல்லார் அறிவீர்; தீயார்
அறிவீர்; நமக்குவ்வுலகத்தில்
எல்லாம் அறிவீர் ஈதேஅறிவீர்
இந்த ளூரீரே (6)

[ஒக்க-சமமாக; நமக்கு ஈதே-என்னுடைய தன்மை ஒன்றினையே]

''ஆழ்வீர்! நீ சேஷபூதர்; நான் சேஷி; என்னை வற்புறுத்திக் காரியம் கொள்வது உம் சொரூபத்திற்குச் சேராது என்பது உமக்குத் தெரிந்ததுதானே. 'அவன் செய்வன செய்து கொள்ளட்டும்' என்றிராமல் மீண்டும் மீண்டும் நிர்ப்பத்திப்பது உமக்குத்தகாது'' என்று எம் பெருமான் திருவுள்ளம் கொண்டதாகக் கருதி ஆழ்வார் விண்ணப்பிக்கின்றார்: ''இந்தளூரீர், அடியேன் விண்ணப்பம் செய்ய நினைத்ததைக் கூசாமல் சொல்லி விடுகின்றேன். சேஷபூதன் சேஷியை

வற்புறுத்தலாகாது என்று முறையறிந்து அடியேனால் இருக்க முடியவில்லை. எல்லாம் அறிந்த தேவரீருக்குத் தெரியாத செய்தி ஒன்று உண்டு. உம்மைப் பிரிந்து தரிக்க மாட்டாத அடியேனை உம்முடைய அடியவர்கள் எல்லோரோடும் சமமாக நினைத்திருக்கின்றீர். 'ஒருக் கணமும் கலியன் உம்மைப் பிரிந்திருக்க முடியாது' என்ற உண்மையை மாத்திரம் உம்மால் தெரிந்து கொள்ள முடியவில்லை. நீர் இந்தளூரில் வந்து நிற்கும் செயலை மறந்தீரே'' (6) என்கின்றார்.

''நீர் எல்லாவித ஆற்றல்களை யுடையவராயிருந்தும் அடியேனிடத்து ஒரு கைங்கரியம் கொள்ள ஆற்றலற்ற வரானீர். 'இந்த நீசனால் என்ன கைங்கரியம் பண்ண முடியும்?' என்று நினைத்து அடியேனைத் தள்ளி வைக் கின்றீர். நிறையொன்றுமில்லாத நீசனேனையும் கைங்கரி யங்களுக்கு ஆளாம்படித் திருத்திப் பணி கொள்ள உமக்கு ஆற்றல் இல்லையே. அடியோடு எமக்கு ஆற்ற லில்லாதபடி மண்கட்டியாகப் படைத்து வைத்திருந் தாலும் ஒருவாறு ஆறியிருக்கலாம். சேதந கோடியில் படைத்து வைத்தீர்; சேஷத்துவமே சொரூபம் என்பதை யும் உணர்த்தி வைத்தீர்; கைங்கரியம் புரியாவிடில் சேஷத் துவம் நிறைவு பெறாது என்றும் புரிய வைத்தீர், இவ் வளவு அறிவையும் பிறப்பித்து வைத்து அடியேனை ஒன்றுக்கும் உதவாதபடி தள்ளி வைத்தீர். கைங்கரியம் கொள்ளாவிடினும் திருவடியையாவது சேவை சாதிப்பிக் கலாம்; அந்தப் பேறும் பெற்றிலேன்; திருவடியையும் காட்டாதொழிந்தீர். பிறர்க்கென்றே ஏற்பட்டிருக்கும் திருவடிகளையும் உமக்காகக் கொண்டீர் போலும்;'' (7) என்கின்றார்.

''இந்தளூர் எம்பெருமானே! உமக்குப் பல நிறங்கள் உள்ளனவாகச் சாத்திரங்களால் அறியக் கிடக்கின்றது. கிருதயுகத்தில் உள்ளவர்கள் சத்துவகுணம் நிறைந்தவர்

களாய் சுத்தமான நிறத்தை உகக்கும் தன்மையர்களா கையால் அவர்கட்காகப் பால்நிறவண்ணரானீர்; திரே தாயுகத்தில் பசுமை நிறத்தைக் கொண்டீர்; கலியுகத்தில் எந்த நிறத்தைக் கொண்டாலும் ஈடுபடுவாரின்மையால் இயற்கையான நீலநிறத்தைக் கொண்டீர். இப்போது அர்ச்சையாக எழுந்தருளியிருக்கும் இருப்பில் எந்த நிறம் கொண்டிருக்கின்றீர் என்பதை அடியேன் அறிய வேண் டாவோ? 'இதோ பாராய், இதுவே என்வண்ணம்' என்று சொல்லி வடிவைக் காட்டியருளுவீர்'' (8) என் கின்றார்.

''ஏழுதலைமுறையாக வந்து அடிமை செய்யும் குடி யிலே பிறந்த அடியேன் விஷயத்தில் இவ்வளவு ஆலோசிக் கின்றீர். இது தகுதியோ? 'தம்முடைய திருமேனியைச் சேவிப்பதற்கு இவன் தகுந்தவனா? தகாதவனா? என்று வாசி பார்க்கின்றீரே. இது பொருந்துமோ? திருமேனி யைக் கண்ணில் காட்டுவதற்கு இவ்வளவு ஆலோசிக்கின்ற நீர் ஓர் ஆலோசனையும் பண்ணாமல் நெஞ்சகத்தின்பால் முன்னே வந்து குடிகொண்டு விட்டீரே. இஃது ஏன் செய் தீர்? நெஞ்சில் புகுந்ததுபோல் கண்ணிலும் புகவேண்டும்; கண்ணில் புகாததுபோல் நெஞ்சிலும் புகாதிருக்க வேண்டும். ஒன்றுக்கு ஆலோசனை பண்ணாதவர் ஒன்றுக்கு மட்டிலும் ஆலோசனை பண்ணுவது ஏனோ? திருமேனியின் நிறத்தைச் சிறிதும் காட்டாதிருக்கின்றீரே, நித்திய சூரிகட்குக் காட்சி கொடுக்கும் வடிவை இங்குள் ளார்க்கு முழுக்காட்சி கொடுப்பதற்காகவன்றோ இங்கு எழுந்தருளியிருப்பது?''(9) என்று கூறுகின்றார். இங்ஙனம் 'இந்தளூர் அந்தணனைச் சேவித்துக் கொண்டு தலைச் சங்க நாண் மதியம் வருகின்றார் ஆழ்வார்.

5. **தலைச்சங்க நாண்மதியம்:**[11] இத்திருத்தலத்து எம்பெருமான் திருமங்கை மன்னனின் உள்ளங்கவர்ந்தவ ராதலால் இவரது பெரிய திருமடலில் தன்னிலைமையெல் லாம் அறிவித்தற்கு உற்ற எம்பெருமான்களுள் ஒருவராக 'நந்நீர்த் தலைச்சங்க நாண்மதியை', (73) என்று குறிப்பிடு கின்றார். தனிப்பதிகம் இல்லை. திருக்கண்ணபுரத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்யுங்கால் இந்த எம்பெருமானையும் ஒரு பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

---

11. **தலைச்சங்க நாண்மதியம்:** இத்திருத்தலம் தென்னிந்திய இருப்பூர்தி மயிலாடுதுறை-தரங்கம்பாடி கிளைப் பாதையில் உள்ள ஆக்கூர் நிலையத்திலிருந்து மூன்று கி. மீ. தொலைவில் உள்ளது; இதே பாதையிலுள்ள செம்பொன்செய் கோயில் நிலையத்தினின்று ஆறு கி. மீ. தொலைவிலுள்ளது. மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் செல்லும் பேருந்தில் பயணம் செய்து வழியிலுள்ள தலைச் சங்கநாண்மதியம் (தலைச்சங்காடு) என்ற ஊரில் இறங்கி மேற்குத் திசை நோக்கி முக்கால் கி. மீ. நடந்து வயல்களுக்கு இடையிலுள்ள திருக்கோயிலை அடையலாம். கருவறை மட்டிலுமே உள்ளது; அதன் முன்னே ஒரு சிறு மண்டபமும் உள்ளது. தாயாருக்குத் தனி சந்நிதி இல்லை. எம்பெருமான் (மூலவர்) தலைச்சங்க நாண் மதியப் பெருமாள்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். **தாயார்:** தலைச்சங்க நாச்சியார், செங்கமல வல்லி. **உற்சவர்:** வெண்சுடர் பெருமாள். கருவறைக்கு வெளியே காட்சி தருகின்றார். இவர் பூர்ண சந்திர மண்டலத்தில் எழுந்தருளியிருப்பது குறிப்பிடத் தக்கது. இது வேறு எங்கும் காணப் பெறாத திருக்காட்சி. பெரி. திரு. 8. 9:9 பெரிய திருமடல் (67) மேலும் விவரம் அறிய விரும்புவோர் சோ. நா. தி- (2) என்ற நூலில் கட்டுரை—4 காண்க.

கண்ணார் கண்ணபுரம்
கடிகை கடிகமழும்
தண்ணார் தாமரைசூழ்
தலைச்சங்க மேல்திசையுள்
விண்ணோர் நாண்மதியை
விரிக்கின்ற வெஞ்சுடரைக்
கண்ணாரக் கண்டுகொண்டு
களிக்கின்றதிங் கென்றுகோலோ[12]

[கண்ஆர்-அழகிய; கடி-மணம்; விண்ணோர்-நித்திய சூரிகள்; வெம்சுடர்-சூரியன்; ஆர-நிறைவு பெறும் அளவு]

என்பது பாசுரம். "நறுமணமும் குளிர்ச்சியும் பொருந்திய தாமரை மலர்களால் சூழப்பெற்ற தலைச்சங்காட்டில் மேல்திசையில் நித்திய சூரிகட்கு எந்நாளும் அநுபவிக்கத் தக்கவனான எம்பெருமான் இந்நில உலகில் எல்லோரும் வணங்கும்படி எளிதில் கிட்டுபவன் ஆனான். உதய காலத்தில் விரியும் சூரியனைப்போல் மிக்கவனான அவனை இந்நிலத்தில் கண்கள் நிறைவு பெறும் அளவும் கண்டு களிப்பெய்துவது என்றைக்கோ?" என்று கூறிப் பெருமகிழ்ச்சி அடைகின்றார். 'அழுந்தூர் நின்ற அஞ்சனக் குன்றத்தை'ச் சேவிக்கத் திருவுள்ளம் கொள்ளுகின்றார் ஆழ்வார்.

6. **திருவழுந்தூர்**[13] : திருமங்கை யாழ்வார் மட்டிலுமே இத்தலத்து எம்பெருமானை நான்கு பதிகங்க

12. பெரி. திரு. 8.9:9
13. **திருவழுந்தூர் :** இத்திருத்தலம் விழுப்புரம் கடலூர் - திருச்சி தென்னிந்திய இருப்பூர்திப் பாதையில் உள்ளது. நிலையத்தில் மெயில் எக்ஸ்பிரஸ் வண்டிகள் நிற்கா. மயிலாடுதுறையில் இறங்கி நல்லதொரு விடுதியில் தங்கி

ளாலும் நான்கு பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்துள்ளார்[14]. பெரியதிருமடலை அழுந்தூர் அஞ்சனக் குன்றத்தை 'அழுந்தூர் எழுஞ்சுடர்' என்று உருவகப் படுத்திப் பேசுகின்றார். இத்திருத்தலத்தின் நீர்வளமும் நிலவளமும் அமைந்த சூழ்நிலை ஆழ்வார் மனத்தைக் கவர்ந்ததனால் இதனை அவர் பாசுரங்களில் காண முடிகின்றது.

**அழுந்தூர் வளம்:** திருவழுந்தூர் வளத்தை ஆழ்வார்,

*மலைத் திகழ்சந்து அகில்கனகம்*
*மணியும் கொண்டு*
*வந்துந்தி வயல்கள்தொறும்*
*மடைகள் பாய*
*அலைத்துவரும் பொன்னிவளம்*
*பெருகும் செல்வத்து*
*அணி அழுந்தூர் (7.8:3)*

*[மலை-குடகுமலை; சந்து-சந்தன மரம்; கனகம்-பொன்; மணி-இரத்தினம்; மடை-நீர் பாயும் வழி]*

என்று காட்டுகின்றார். காவிரி பெருகும்பொழுது குறிஞ்சி நிலக் கருப்பொருளாகிய சந்தனம், அகில் முதலிய

---

பேருந்தில் வருவதே சிறந்தது. எம்பெருமான் ; ஆமருவி அப்பன் (பசுவை விரும்பிய அப்பன்); நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார் : செங்கமல வல்லி. மேலும் விவரம் வேண்டுவோர் சோ. நா. தி.(2) என்ற நூலில் 7-வது கட்டுரை காண்க.

14. பெரி. திரு. 7.5; 7.6; 7.7; 7.8; 10.7:1 தி. நெ. தா. 15, 26 சி. மடல் (39) பெ. மடல் (61)

வற்றைப் புரட்டி அடித்துக்கொண்டு வரும். இவை கழனிகளில் நீர் மடைவழியாகப் பாய்தலினால் மிக்க வளத்தையுண்டாக்கிப் பெருஞ்சிறப் பெய்தும் திருவழுந் தூர். தான் பெருகும்பொழுது பொன்னைக் கொழித்துக் கொண்டு (செம்மண்ணைக் கரைத்துக் கொண்டு) (செம் மண் வண்டல் பயிர்கட்கு நல்லது) வருதலால் காவிரி 'பொன்னி' என்ற திருநாமம் பெற்றது. எம்பெருமான் பெருந்துயரத்தினால் வருந்துகின்ற அன்பருள்ள இடங் களில் சென்று பாதுகாப்பது போலவே, இக்காவிரியின் வெள்ளமும் வேண்டும் இடங்களிலெல்லாம் வந்து பரவும் என்ற நயந்தோன்றுமாறு அருளிச் செய்துள்ளார் ஆழ்வார் என்பதையும் சிந்திக்கின்றோம்.

**இயற்கைச் சூழ்நிலை :** இத்திருத்தலத்து இயற்கைச் சூழ்நிலை ஆழ்வார் சிந்தையைக் கவர்ந்ததால் அவரது மங்களாசாசனப் பாசுரங்களில் இதனைக் கண்டு மகிழ முடிகின்றது. அரச சின்னமாகிய வெண்சாமரை வீசவும், வாத்தியங்கள் ஒலிக்கவும், ஓரரசன் தன் பட்டத்து அரசியுடன் சீரிய சிங்காதனத்தின்மீது வீற்றிருத் தல் போல, இத்திருப்பதியில் செந்நெற்பயிராகிய சாமரைகள் வீசவும், சங்கங்கள் முழங்கவும் அன்னப் பறவைகள் தமது பேடைகளுடன் செந்தாமரை மலர் களில் ஏறி வீற்றிருக்கும் (7.8:2). மற்றும், தாமரைப் பூக்களின்மேல் வரி வண்டுகள் இசையிடாநிற்க அந்த இசைக்கேற்ப அன்னப் பறவைகள் தம் பேடையுடன் சேர்ந்து நடனம் ஆடும் (7.5: 9). இவ்வூரைச் சுற்றிலு முள்ள வயல்களில் நெல்லுக்குக் களையாக முளைத்த குவளைப் பூக்கள் மாதர்களின் கண்களையொத்திருக்கும்; நீர் நிலைகளில் உண்டான ஆம்பல் மலர்கள் அவர்களது வாய் போன்று விளங்கும்; இதழ்மிக்க தாமரைப் பூக்கள் அவர்களது முகம் போன்று திகழும் (7.5:10). வயல்களில் உள்ள பாக்கு மரங்களில் முதிர்ந்த பழங்கள் பவளத்தை யும், பசுங்காய்கள் மரகதத்தையும், விரிந்த பாளைகள்

வெண்முத்துகளையும் நினைப்பூட்டும். வாழைமரங்கள் எம்மருங்கும் குலைகளுடன் நிறைந்து நின்று நிலச் செழிப்பினை நிலைநாட்டும்.

> 'செம்பவளம் மரகதம்நல்
> முத்தம் காட்டத்
> திகழ்பூகம் கதலிபல
> வளம் மிக்கு எங்கும்' (7.8:8)
>
> [பூகம்-கமுகு; கதலி-வாழை]

என்ற பாசுரப் பகுதியில் இதனை அறியலாம்.

வயல்களிலுள்ள குருகினங்கள் திரள்திரளாக மீன்களைப் பிடிக்க நீர்நிலைகளில் வந்து இழியும்; தம் வாய்க்குள் அடங்கக்கூடிய சிறு மீன்களைப் பிடித்துக் கதுப்பிலே அடக்கிக் கொண்டிருக்கும். இந்நிலையில் வேறொரு பெரிய மீன் வந்து தோன்ற, அதனைப் பிடிக்க அஞ்சிப்போய் பின்னையும் ஆசையினால் அதனை நெருங்கிக் கிட்டும் (7.5:2). குட்டிக்கு இரைதேடப் போகும் புள் தனியே செல்லாது தன் காதல் பெடையோடு சென்று சேற்றைக் கண்ட விடத்தும் பின் வாங்காது இரை தேடித் திரியும்; இங்கே ஒரு சங்கை பிறக்கலாம். "மீன்கள் நிறைந்திருக்கும் இடத்தில் 'இரைதேடும்' என்பது எப்படிப் பொருந்தும்? மீன் அருமைப்பட்டிருந் தாலன்றோ 'இரைதேட' வேண்டும்" என்பதாக. "புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடி" என்றுள்ள சொற்போக்கை நோக்கினால் ஐயம் எழக் காரணம் இல்லை. அங்குள்ள மீன்கள் நிலவளத்தாலே தூணும் துலாமும் போலே தடித் திருக்கும்; அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்கு அடங்க மாட்டாவாகையால் பொருத்தமான சிறிய மீன்களைத் தேடிப்பிடிக்க வேண்டுமல்லவா?" இந்த நுட்பமும் நம் கருத்தில் எழுகின்றது (7.8:4).

இன்னும் பாக்குமரங்கள் நிறைந்துள்ள சோலைகள் எங்கும் வண்டுகள் இசைபாடும்; குயில்கள் கூவும்; மயில் கள் கூத்தாடும். இந்தச் சூழ்நிலையில் அலைகளையுடைய காவிரியின்நீர் பக்கங்களில் சுற்றிப் பாய்தலினால் ஊரின் அழகை மிகுவிக்கும்.

புலம்புசிறை வண்டுஒலிப்ப,
பூகம்தொக்க
பொழில்கள்தொறும் குயில்கூவ,
மயில்கள் ஆல
அலம்புதிரைப் புனல்புடை சூழ்ந்து
அழகுஆர் செல்வத்து
அணி அழுந்தூர் (7.8:4)

என்ற பாசுரப் பகுதியில் இதனைக் கண்டு மகிழலாம். ஊருக்கு இயற்கையே பின்னணியாக அமைந்திருப்பதைக் கண்டு வியக்கின்றோம்.

**அணி அழுந்தூரின் அழகு:** இனி ஆழ்வார் தம் பாசுரங்களில் அணி அழுந்தூரின் அழகையும் காட்டு கின்றார். ஊர் எப்போதும் கார்காலத் தோற்றத்துடன் மிளிரும். காற்றும் துகல்களும் மேகபடலங்களும் சிறப் பாகக் கார்காலத்தில் காணப் பெறும். அதுபோலவே,

துகிலின் கொடியும் தேர்த்துகளும்
துன்னி மாதர் கூந்தல்வாய்
அகிலின் புகையால் முகிலேய்க்கும்
அணியார் வீதி அழுந்தூரே (7,5:5)

என்கின்றார் ஆழ்வார். இங்குள்ள மாடமாளிகைகள் மேக மண்டலத்தளவும் ஓங்கியிருக்கும். மாளிகைகளின் முனையிலே பாதுகாப்புக்கு உறுப்பாகச் சூலங்கள் நாட் டப்பெற்றிருக்கும் (இடிதாங்கியாக). அவை மேகங்களின்

கீழ் வயிற்றை இடித்துப் பிளக்க, மழை சொரியும்(7.5:6). இவ்வூர் வீதிகள் கடல்போல் நீண்டிருக்கும். மாளிகைகள் சுண்ணச் சாந்திட்டு வெளுத்திருக்கும்; அவை விண்ணுலகத்தளவும் ஓங்கியிருக்கும். சூரியனின் கதிர்களைக் கரும் பாலைப் புகை வந்து மறைத்து எங்கும் நிழல் செய்யும் (7.5:7).

இங்குள்ள மாதர்கள் தேன் ஒழுகும் கூந்தலையுடையவர்கள். கொம்புகள் செறிந்திருக்கும் குருக்கத்தியின் மேலே, செருக்காலே தளிரையும் பூக்களையும் கோதி மது பானம் பண்ணின வண்டினங்கள், அவற்றைவிட இன்பம் மிகுந்ததோர் இடம் தேடிப் போய இராத் தங்க வேண்டும் என்று எண்ணங் கொண்டு இங்குள்ள மகளிரின் கூந்தற் கற்றையில் ஏறும் (7.5:3), இங்குள்ள பெண்கள் பொன் மயமான சிலம்புகளைக் காலிலணிந்து கொண்டு நடனம் செய்வதால் உண்டாகும் ஒலி ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் (7.8:5). இவ்வூர் மகளிர் கிளியைப் போன்ற இன் சொல்லையும் அன்னப் பேடையைப் போன்ற மென்னடையையும் உடையவர்கள் (7.8:5). திருவிழாக் காலங்களில் திருவீதியில் நடைபெறும் விழாக்காட்சிகளைக் காணும் பொருட்டு வீதியின் இரு புறங்களிலுமுள்ள மாளிகையின் திண்ணைகளில் 'ஆடு ஏறு மலர் குழலார்' ஏறி நின்று காட்சிகளைக் கண்ணுறுவர் (7.8:9).

திருவழுந்தூரிலுள்ள நான்மறை வல்ல அந்தணர்கள் எப்போதும் ஏதாவதொரு வேள்வியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பர். இவர்கள் யாவரும் இளைஞர்களே. அவர்கள் மழை பெய்யும் பொருட்டுச் செய்யும் கேள்வியால் அது செய்யப்படும் முன்னரே மழை பொழிந்து விடுகின்றது. காரணம் உண்டானவுடனே ஒரு நொடிப்பொழுதும் தாமதியாமல் காரியம் உண்டாகி விடுகின்றது (7.5:1) இவ்வூர் மறையவர்கள் எப்போதும் எம்பெருமானைச் சூழ்ந்து கொண்டு துதியா நிற்பர் (7.5:5,6). இவர்கள்

மறையோதுவதால் எழும் ஒலி எப்போதும் கடல் ஒலி போல் ஒலித்துக் கொண்டேயிருக்கும் (7 5:8). இவ்வூர் அந்தணர்களின் தன்மையை,

எங்கும்மலி நிறைபுகழ்நாள்
வேதம் ஐந்து
வேள்விகளும் கேள்விகளும்
இயன்ற தன்மை
அங்கமலத்து அயன் அனையார் (7.8:1)

[வேள்வி-யாகம்; கேள்வி-நூற்கேள்வி; கமலம்-தாமரை; அயன்-நான்முகன்]

என்று எடுத்துக்காட்டுவர் ஆழ்வார்.

''செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்; திசைமுகனை அனையவர்கள் செம்மைமிக்க அந்தணர்கள்'' (7.8:7) என்று இவர்களைச் சிறப்பித்துப் பேசுவர். மண்டபம் முதலிய எல்லா இடங்களிலும் வேதம் ஓதிய அந்தணர்கள் நிறைந்து காணப் பெறுவர் (7.8:6).

**தலத்து எம்பெருமான்:** இத்தகைய சிறந்த சூழ்நிலையில் அமைந்த சிறப்புமிக்க திருவழுந்தூரின் மேற்குப் பகுதியில் திகழ்வது பெருமான் கோயில். இந்த இருப்பிடத்தை வலியுறுத்துவதுபோல், ஒருமுறைக்கு ஒன்பது முறையாக,

அழுந்தூர் மேல்திசை
நின்ற அம்மானே

என்று ஒரு திருமொழியிலும் (7. 7)

அணி அழுந்தூர்
நின்று உகந்த
அமரர் கோவே

என்று மற்றொரு திருமொழியினும் (7.8) பன்னியுரைக்கின்றார் ஆழ்வார். இத்திருத்தலத்து எம்பெருமான் ஆமருவியப்பன்; பசுவை விரும்பிய அப்பன். இதனை நினைந்தே ஆழ்வாரும்,

அன்றாவின் நறுநெய்
அமர்ந்துண்ட அணிஅழுந்தூர்
நின்றானை (7. 6: 4)

என்று மங்களா சாசனம் செய்கின்றார். பசு நெய்யை விரும்பி அமுது செய்வதற்காகவே திருவழுந்தூரில் எழுந்தருளியுள்ளான் ஆமருவியப்பன். திருவாய்ப் பாடியின் நிலையிலே திருவழுந்தூரைத் திருவுள்ளம் பற்றினான் என்பது ஆழ்வார் பெற வைக்கும் குறிப்பு. அன்றியும், இத்திருப்பதியை மங்களா சாசனம் செய்யத் தொடங்கும் முதல் திருமொழி முதற் பாசுரத்திலேயே,

தந்தைகாலில் பெருவிலங்கு
தாள்அவிழ நல்லிருட்கண்
வந்த எந்தை பெருமானார்
மருவிநின்ற ஊர்போலும் (7.5:1)

[தந்தை-வசுதேவர்; தாள்அவிழ-பூட்டு இற்று விழும் படியாக; நல்லிருள்-நடுநிசி; வந்த-திருவவதரித்த; மருவி நின்ற-நித்திய வாசம் செய்த]

என்று கண்ணனை இனங்காட்டி விடுகின்றார் ஆழ்வார். இவ்விடத்தில் ஓர் இதிகாசம்; கிருட்டிணாவதாரத்தில் கண்ணன் பிருந்தாவன எல்லையில் தன் தோழன்மார்களுடன் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கின்றான். இந்த நேரத்தில் அவ்வழி ஏகின நான்முகன் ஆநிரைகளைத் திருவழுந்தூருக்கு ஓட்டி வந்து விடுகின்றான்.

இதையறிந்த கண்ணன் புதிதாக ஓர் ஆநிரையையே உண்டாக்கி ஆயர்களிடம் தந்துவிடுகின்றான். நான்முக னும் தன் பிழையை உணர்கின்றான். அவனது வேண்டு கோளின் படியே திருவழுந்தூர் சென்ற பசுநிரையைக் காக்கும் கோவலனாக—ஆமருவி அப்பனாக—அழுந்தூர் நின்றுகந்த கோவாக—அழுந்தையில் மன்னி நின்ற தேவாதி தேவனாக எழுந்தருளி விடுகின்றான்.

**ஐந்து நிலை எம்பெருமான்கள் :** திருமங்கையாழ் வார் ஆமருவி அப்பனை மங்களாசாசனம் செய்யும்போது பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை நிலையிலுள்ள எம்பெருமான்களையும் அநுப வித்து இனியராகின்றார். 'பரனே... மாதவனே மது சூதா' (7.7:4) என்றும், 'வெள்ளத்துள் ஓர் ஆவிலை மேவி' (7.5:4) என்றும், 'உலகுண்ட ஒருவா' (7.7:1) என்றும் பரத்துவ நிலை எம்பெருமானைப் பரவுகின்றார். 'ஒலி நீர் உலகங்கள் படைத்தானை' (7.6:3) என்று வியூக நிலை எம்பெருமானைச் சிந்திக்கின்றார்.

விபவாவதாரங்களை எண்ணும்போது நரசிம்மன், பரசுராமன், ஆதிவராகம், வாமன-திரிவிக்கிரமன், ஹயக்ரீவன், இராமன், கிருட்டிணன் என்ற இந்த எம்பெருமான்கள் ஆழ்வார் சிந்தையில் எழுகின்றனர். 'சிங்கம் அது ஆய் அவுணன் திறல் ஆகம் முன் கீண்டு' (7.6:1) என்றும், சினம் மேவும் அடல் அரியின் உருவம் ஆகி, திறல் மேவும் இரணியது ஆகம் கீண்டு' (7.8:5,) என்றும் நரசிங்கப் பெருமானை நினைக்கின்றார். 'ஆதி வராகம் முன் ஆனாய்' (7.7:4) என்றும்

சிலம்புமுதல் கலன்அணிந்து
ஓர்செங்கட் குன்றம்
திகழ்ந்ததென திருவுருவம்
பன்றி ஆகி

இலங்குபுவி மடந்தைதனை
இடந்து புல்கி
எயிற்றிடைவைத் தருளிய
ஈசன் (7.8:4)

என்றும் வராகப் பெருமானை அநுபவிக்கின்றார். 'பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுக மாக அருளியஎம் பரமன் காண்மின்' (7.8:2) என்று ஹயக்கிரீவ மூர்த்தியைப் போற்றுகின்றார்.

வானவர்தம் துயர்தீர
வந்து தோன்றி,
மாண்உருஆய் மூவடிமா
வலியை வேண்டி
தான்அமர ஏழ்உலகும்
அளந்த வென்றித்
தனிமுதல்சக் கரப்படைஎன்
தலைவன் காண்மின் (7.8:6)

என்று வாமன—திரிவிக்கிரமாவதாரத்தை அநுபவிக்கின்றார். 'கோ ஆனார் மடியக் கொலைஆர் மழுக் கொண்டருளும் மூவா வானவன்' (7.6:2) என்று பரசுராமனைப் பகர்கின்றார்.

அவதாரங்களில் இராமனும் கிருட்டிணனும் அதிக இடம் பெறுகின்றனர். இராவணனது பத்துத் தலை களையும் இருபது கைகளையும் அறுத்த (7.5:1; 7.8:7) செயல்களை அநுசந்திக்கின்றார். கண்ணனை நினைக்கும் போதுதான் பார்த்தனுக்குத் தேரேறி சாரதியானது, குன்றேந்தி மாரி தடுத்தது, கஞ்சனைக் காய்ந்தது, பூதனை யிடம் முலையுண்டு அவளது உயிர் குடித்தது, தயிர் நெய் அமுது செய்தமையால் அன்னையால் ஆப்புண்டது, விடை ஏழை அடர்த்தது, கும்பமிகு குவலயாபீடத்தைக்

கொன்றது, குரவை கோத்தது, சகடாசுரனை உதைத்துக் கொன்றது போன்ற வெற்றிச் செயல்கள் ஒவ்வொன்றாகத் தோன்றி ஆழ்வாரை மகிழ்விக்கின்றன.

அந்தர்யாமித்துவ எம்பெருமானைச் 'செவ்வாய் முறுவல் செய்தருளி, மாடுவந்து, என் மனம் புகுந்து நின்றார்' (7.5:6) என்றும், 'அடியேன் மனம் புகுந்து என் நீலக் கண்கள் பனி மல்க நின்றார்' (7.5:7) என்றும், 'என் நெஞ்சு நிறையக் கை கூப்பி நின்றார்' என்றும் சிந்தித்து மகிழ்கின்றார்.

அர்ச்சாவதார எம்பெருமான்களில் ஆமருவி அப்பனைத் தவிர, திருக்குடந்தைப் பெருமான், நறையூர் நம்பி ஆகிய எம்பெருமான்களையும் அநுபவிக்கின்றார். ஆழ்வாரின் நறையூர் நம்பி அநுபவம் அழகிய மணவாளர் சீயர் என்ற வைணவப் பெரியாரின் உள்ளத்தைக் கவர்ந்து விடுகின்றது. இதனைச் சுவையாக எடுத்துக் கூறுவர் சீயர். "இந்த ஆழ்வார் வாக்கினின்றும் நறையூர் நம்பி நூறு பாசுரங்கள் பெற்றிருந்தும் மனநிறைவு பெறாதவனாய் மீண்டும் வந்து முகம் காட்டினதைக் கண்டு ஆழ்வார் 'திரு நறையூர் நம்பீ!' (7.7:4) என்கின்றார். திருவிண்ணகரில் ஆழ்வார் எழுந்தருளியிருக்கும் போது நம்பி எதிர் கொண்டு சென்றதனால் 'திருநறையூர்த் தேனே!' (6.3:3) என்று பேசினார்.[15] ஆழ்வார் திருநறையூரினின்று மீண்டு திருநறையூர் செல்லுமளவும் கூடவந்து வழிவிட்டுத் திரும்புகையாலன்றோ 'நறையூர் நம்பீ......அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே!' (7.7) என்று பேசுகின்றார்" என்பதாக.

15. இப்பாசுர நயத்தைச் **'சோழ நாட்டுத் திருப்பதிகள் முதற் பகுதி'** (கட்டுரை-12) காண்க.

வைணவ தத்துவமாகிய சரீர-சரீரி பாவனையும் திருவழுந்தூர் பற்றிய இவ்வாழ்வாரின் பாசுரங்களில் இடம் பெறுகின்றது.

பகலும் இரவும் தானேயாய்
பாரும் விண்ணும் தானேயா (ய்)
நிகரில் சுடரில் இருளாகி
நின்றார். (7.5:5)

இதில் 'பாரும் விண்ணும் தானே ஆய்' என்பதனால் அசித்து எம்பெருமானின் உடலாய்த் திகழ்கின்றது என்று அவனது திவ்விய மங்களத் திருமேனி காட்டப் பெறுகின்றது.

# 9. திருநாங்கூர்த் திருத்தலப் பயணம்

திருவாலி-திரு நகரியைச் சேவித்த திருமங்கையாழ்வார் திருநாங்கூர் திருப்பதிகளைச் சேவித்திருக்க வேண்டும் ஒரு வழியாகச் சோழநாட்டுத் திருப்பதிகளின் ஒரு பகுதியை[1] முடித்துக்கொண்டு திருநாங்கூர்த் திருப்பதிகளைச் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுவதாகக் கட்டுரை அமைகின்றது. ஒருவித ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்கவே இந்த அமைப்பு. திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்று. அவை: 1. திருமணி மாடக்கோயில், 2. திருவைகுந்த விண்ணகரம், 3. திருஅரிமேய விண்ணகரம், 4. திருத்தேவனார்த்தொகை, 5. திருவண் புருடோத்தமம் 6. திருச்செம்பொன்செய் கோயில், 7. திருத்தெற்றியம்பலம், 8. திருமணிக் கூடம், 9. திருக்காவளம்பாடி, 10. திருவெள்ளக் குளம், 11. திருப்பார்த்தன் பள்ளி என்பவையாகும். இவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலுள்ள (பெரிய திருமொழியில் உள்ள) வரிசையாகும். இந்த வரிசையில்தான் ஆழ்வார் இத் திருத்தலங்களைச் சேவித்திருக்க வேண்டும். அவர் மன்னராதலால் எல்லா வசதிகளும் பெற்றவர். விருப்பப்படியெல்லாம் சேவிக்கலாம். நம் வசதிப் படிதானே நாம் சேவிக்க வேண்டும்? திருநகரியிலிருந்து ஒரு மாட்டு வண்டியை அமர்த்திக் கொண்டு திருவாலியைச் சேவித்தபிறகு 'திருத் தேவனார்த்

1. சோழநாட்டுத் திருப்பதிகள்-1 காண்க.

தொகை' என்ற திருத்தலத்திற்கு வருகின்றதாகக் கருதிக் கொள்ளுகின்றோம்.

7. திருத்தேவனார்த் தொகை:[2] இது 'கீழைச் சாலை மாதவப் பெருமான் கோயில்' என்று பொது மக்களால் வழங்கப்பெறுகின்றது. இத்திருக்கோயில் மண்ணியாற்றின் தென்கரையில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது.

போது அலர்ந்த பொழில்சோலைப்
புறமெங்கும் பொருதிரைகள்
தாதுதிர வந்தலைக்கும்
தடமண்ணித் தென்கரைமேல்
மாதவன்தான் உறையுமிடம் (4.1:1)

[போது-பூக்கள்; அலர்ந்த-மலரப் பெற்ற; தாது-மகரந்தப் பொடி; தடம்-பெரிய; மாதவன்-திருமகள் நாதன்]

---

2. திருத்தேவனார்த் தொகை: இது திருநாங்கூர்த் திருப்பதியில் நான்காவது. இது சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் ஆறு கி. மீ. தொலைவிலுள்ளது. இத்திருக்கோயில் நுழைவாயிலில் இராசகோபுரம் இல்லை. இப்பகுதியிலுள்ள பெரும்பான்மையான கோயில்கட்கு இராசகோபுரம் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் விமானம் இரண்டு தளமாக அமைந்து மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் இத்திருக்கோயிலுக்கு அழகூட்டுகின்றது. கருவறைக்கு முன்னர் விசாலமான மண்டபம் ஒன்று உள்ளது. இதனைக் கடந்துதான் கருவறைக்குச் செல்ல வேண்டும். எம்பெருமான்: தெய்வ நாயகப் பெருமான் (மூலவர்); உற்சவரின் திருநாமம் மாதவப் பெருமான். மூலவர் மேற்கு நோக்கிய திருமுக மண்டலம்; நின்ற திருக்கோலம். தாயார்: கடல் மகள் நாச்சியார். இவருக்குத் தனிச் சந்நிதி உண்டு. திரு 4.1 (பதிகம்), மேலும் விவரம் வேண்டுவோர் சோ.நா.தி. (2) 16-வது கட்டுரை காண்க.

என்று ஆழ்வாரும் தம் பாசுரத்தில் குறிப்பிடுவர். இத் திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

**தலச் சூழ்நிலை:** இக்கோயில் எழிலார்ந்த சோலைகள் அமைந்த சூழ்நிலையில் அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இருப்பது அல்லவா? திருமங்கையாழ் வாரும் இதனைப் 'பொழில் திருத்தேனார்த் தொகை' (2), 'தேனாரும் மலர்ப் பொழில்சூழ் திருத்தேவனார்த் தொகை' (3), 'சுந்தர நல் பொழில் புடைசூழ் திருத்தே வனார்த் தொகை' (4), 'சேடேறு பொழில்சூழ் திருத் தேவனார்த் தொகை' (7) 'சீராரும் மலர்ப் பொழில்சூழ் திருத்தேவனார்த் தொகை' (8) என்று குறிப்பிடுவர். திருக் கோயிலின் புறமெங்கும் பூக்கள் மலரப்பெற்ற சோலைகள் உள்ளன. அப் பூக்களின் தாது உதிரும்படியாக மண்ணியாற்றின் அலைகள் வீசுகின்றன (1).இந்த மண்ணியாற் றங்கரையில் மிக்க பலசாலிகள் வசித்து வருகின்றனர் (5). இதனைத் திடகாத்திரமுள்ள உழவர்களைக் குறிப்பிடுவ தாகக் கொள்ளலாம். இவர்களைத் தவிர, திருநாங்கூரில் அக்காலத்தில் அந்தணர்களும் வாழ்ந்து வந்தனர் என் பதைப் 'பெருஞ் செல்வத்து எழில் மறையோர் நாங்கை தன்னுள்' என்று இருமுறை (7. 8) குறிப்பிடுவதையும் காணலாம்.

**தத்துவக் கருத்துகள்:** ஆழ்வார் பாசுரங்களில் உள்ள தத்துவக்கருத்துகளில் நம் மனம் அசை போடு கின்றது. ஒரு பாசுரத்தில்,

யாவருமாய் யாவையுமாய்
    எழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய
    மூர்த்தி (2)

[யாவருமாய்-சேதநப் பொருள்களுமாய்; யாவையுமாய்-அசேதநப் பொருள்கள் எல்லாவற்றையும்; வேதப்பொருள்களுமாய்-வேதம் கூறும் பொருள்களுமாய்]

என்ற பகுதியைச் சிந்திக்கின்றோம். "உயிருள்ள பொருள்களையும், உயிரில் பொருள்களையும் எம்பெருமான் உடலாக உடையவன்; நான் மறைகளும் எம்பெருமானின் சொரூபம்; உருவம், குணம், விபூதி முதலியவற்றைக் கூறுகின்றன. எம் பெருமான் நான்முகன் உருவத்தில் உலகைப் படைக்கின்றான்; தானான தன்மையில் காத்தல் தொழில்களைச் செய்கின்றான்; உருத்திரன் உருவத்தில் அழிக்கின்ற தொழிலை மேற்கொள்ளுகின்றான்" என்பதை உணர்த்துகின்றது.

இங்குக் கூறிய 'சரீர-சரீரி பாவனை' என்ற தத்துவத்தை,

வானாடும் மண்ணாடும்
    மற்றுள்ள பல்லுயிரும்
தானாய எம்பெருமான் (3)

என்று வேறுவிதமாகக் கூறுவர் ஆழ்வார். இதில் 'பல்லுயிரும் தானான எம்பெருமான்'—என்பதற்குப் பெரிய வாச்சான்பிள்ளை தரும் சிறப்பான விளக்கம்: "தானும் குடும்பமுமாய்க் கலநெல் ஜீவிப்பான் ஒருவன் 'உனக்கென்ன வேணும்?' என்றால்'; 'எனக்குக் கலநெல் வேணும்' என்னுமிறே தன்னபிமானத்துக்குள்ளே அடங்குகையாலே. அப்படியே தானே இதுக்கெல்லாம் அபிமானியாயிருக்கிற ஸர்வேச்வரன்—ஸ்வயதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களும் (தன்னைத் தவிர பிற பொருள்களும்) தனக்கு ப்ரகாரமாய் புறம்பு ஒருவரின்றிக்கே உபய விபூதியும் தன்னிழலிலே யொதுங்கும் படியிருக்கையாலே

தலைவனானவன் வந்து நித்தியவாசம் பண்ணுகிற தேஸம்' என்பது.

**எம்பெருமான் :** இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் இந்திரன், இமையவர் முனிவர்கள், நான்முகன், கதிரவன், சந்திரன் இவர்கட்குத் திருவருள் பாலித்தவன் (4) பிரளயாபத்தில் ஆகாயம், கடல்கள் தீவுகள், குலவரைகள் இவற்றையெல்லாம் திருவமுது செய்து உய்யக் கொண்ட பிரான் (5) பாலகனாய் ஏழுல கத்தையும் உண்டு. ஆலிலையில் கண்பாறியவன் (6). இரணியாசுரனைக் கிழித்தழிக்க நரசிம்மனாக எழுந் தருளியவன் (7). குவலயாபீடம் என்ற மதக்களிற்றினைப் பாகனோடு அக்களிற்றின் தந்தத்தைக் கொண்டே அழித்தவன் (9). சீதாப் பிராட்டியை மணம் புணர்வதற் காக வயிரம் பற்றிய திண்ணிதான வில்லை முறித்தவன் (8), இந்த எம்பெருமான்களே (வியூகம், விபவ அவதாரங் கள்) திருத்தேவனார் தொகையில் எழுந்தருளியிருப்பவன் (அர்ச்சையாக) என்று பாசுரங்களில் தெரிய வைக் கின்றார் ஆழ்வார். இந்தத் தலத்தைச் சேவித்த ஆழ்வார் திருக்கூடலூர் வந்து அதனையும் சேவித்துக் கொண்டு[3] 'திருமணிக் கூடம்' என்ற திவ்விய தேசத்திற்கு வருகின்றார்.

8. **திருமணிக்கூடம்[4] :** திருமங்கையாழ்வார் மட்டி லுமே ஒரு திருமொழியால் (4.5) இத்திருத்தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார். இத்திருத்தலம் மண் சாலைக்கருகில் ஒரு புளியந்தோப்பில் உள்ளது.

---

3. சோழநாடுத் திருப்பதிகள் 3 என்ற கட்டுரையைக் காண்க. (கட்டுரை—11)

4. **திருமணிக்கூடம் :** இது திருநாங்கூர்த் திருப்பதி களுள் எட்டாவது. இத்திருத்தலம் சீகாழி இருப் பூர்தி நிலையத்திலிருந்து சுமார் எட்டு கி. மீ. தொலைவில் உள்ளது. திருநாங்கூர்த் திருப்பதி

**தலச்சூழ்நிலை :** இத்திருத்தலத்தின் சூழ்நிலையை ஆழ்வார்,

> தேம்பொழில் கமழும் நாங்கூர்த்
> திருமணிக் கூடம் (1)
>
> [தேம்பொழில்—தேன்மிக்க சோலை]

என்று சோலை வளத்தைக் காட்டுவர். காவிரியாற்றின் பாய்ச்சல் எங்கும் பரவிக் கண்டவிடங்கள் எங்கும் பொற்குவியல்கள் குவிக்கப் பெற்றுள்ளன; எம்மருங்கும் தேன் மிக்க சோலைகள் உள்ளன. மங்கைமார் தங்கள் கொங்கைத் தடத்தில் அணிந்திருந்த குங்குமச் சேறுகளை தீர்த்தமாடுங்கால் நீரில் கழுவ, அவற்றோடு கூடிப் பெருகும் காவிரியாற்று நீர் நறுமணம் கமழுகின்றது (2) சோலைகளில் குரங்குகள் முந்துறத் தேமாங்கனியைப் புசித்து அதன் சுவை தெவிட்டவே, அதனை மாற்றுவதற்கு வாழைப் பழங்களை நுகர்கின்றன; அப்போது மதுவைப் பருகுவதற்காக ஏற்கெனவே அப்பழங்களில் படிந்திருந்த வண்டினங்கள் வெருவியோடுகின்றன (4). பொதிய மலையினின்றும் நறுமணத்துடன் புறப்பட்ட தென்றல் மன்றங்கள், வயல்கள், காவுகள், மாடங்கள் இவை தோறும் புகுந்து வீசுகின்றது (7). தாமரைப் பூவில் தேன் வெள்ளம் அதிகமாகி நீரில் பெருகுகின்றது. அதனைப் பருகுவதால் கொழுத்த வாளை மீன்கள் களிப்பாலே புரய் கின்றன; செங்கயல்கள் அதனைக் கண்டு அஞ்சித் துள்ளி வேறிடத்திலுள்ள நீர் நிலைகட்குப் பெயர்கின்றன

களை மாட்டு வண்டியைத் துணை கொண்டு தான் சேவிக்க வேண்டும். எம்பெருமான்: மணிக் கூட நாயகம்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார்: திருமா மகள் நாச்சியார். பெரி. திரு. 4.5 (பதிகம்) மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ. நா. தி. (2) கட்டுரை—18 காண்க.

(8) இவ்வூரிலுள்ளார் வேதங்களைக் கற்றுத் துறை போய வித்தகர்கள்; இவர்கள் ஆசையுடன் அறங்களை அநுட்டித்துக் கைவண்மையால் தீ வளர்த்து ஓம்புகின்றனர். (3). பண்டொருகால் பாண்டிய மன்னன் படையெடுத்து வந்த பொழுது அவனை வெருட்டி ஓட்டி விட்டனர் இவ்வூரிலுள்ள அந்தணர்கள்; பிறிதொரு சமயம் சோழ அரசனையும் அப்படியே தோற்கடித்து ஓட்டினராம் (6). இந்த ஊர்த் திருமாளிகைகள் சந்திர மண்டலத்தையும் எட்டும் படியாக உள்ளன (10).[5]

**எம்பெருமான் :** இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆழ்வார் பலபடப் புகழ்ந்து பேசுகின்றார். இவன் கசேந்திரனின் துயரைத் தொலைத் தருளியவன்; கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துக் கோநிரையைக் காத்தருளிய கோமான் (1). பூதனையின் நஞ்சு தோய்ந்த முலையை உண்பதுபோல் பாவனை செய்து அவள் உயிரை உறிஞ்சியவன்; இலங்கை நகர்மீது கடுமையான கணைகளைச் செலுத்தி இராக்கதப் பூண்டுகளை அழித்தவன் (2). குதிரை வடிவாக வந்த கேசி என்னும் அரக்கனை வாய் கிழித்து வானுலகுக்கு ஏற்றியவன்; இரட்டை மருத மரங்கள் இற்று முறிந்து விழும்படி தவழ்நடை கற்றவன்; ஏழு காளைகளை அடக்கிப் பின்னைப் பிராட்டியை மணந்தவன் (3). குவலயாபீடம் என்னும் யானையின் தந்தங்களைப் பறித்து யானையையும் பாகனையும் கொன்றவன்; குருந்த மரத்தை முறித்தொழித்த கோவலன்; கொக்கு வடிவமாக வந்த பகாசுரன் என்ற அசுரனை வாயைக் கிழித்து வானுலகுக்கு அனுப்பியவன் (4). சூர்ப்பணகையின் மூக்கையும் காதையும்

5. இன்று இச்சூழ்நிலைகள் சிறிதேனும் இல்லை. கடவுளே கைவிட்ட இடத்தைத்தான் (God for saken place) காண முடிகின்றது. ஏதோ ஓரளவு தோப்புகள் உள்ளன; அவ்வளவே.

முலைக்கண்களையும் வாளால் தடிந்தவன்; பூமிப் பிராட்டியும் பெரிய பிராட்டியும் தன்னைவிட்டுப் பிரியாதவர்களாகப் பொருந்தியிருக்கப் பெற்றவன் (5). மீன், வாமனன், அன்னம், வராகம், நரசிம்மம், ஹயக்கிரீபன் என்ற அவதாரங்களை எடுத்தவன். அண்டமும் சூரியனும் சந்திரனும் மற்றுமுள்ள பொருள்களும் தானாகவே இருக்கப் பெற்றவன் (6).[6]

குன்றமும் வானும் மண்ணும்
குளிர்புனல் திங்க ளோடு
நின்றவெஞ் சுடரும் எல்லா
நிலைகளும் ஆய எந்தை(7)

திருமணிக்கூடத்தில் எழுந்தருளியுள்ளான். இவன்தான்,

சங்கையும் துணிவும் பொய்யும்
மெய்யும்இத் தரணி ஓம்பும்
பொங்கிய முகிலும் அல்லாப்
பொருள்களும் ஆய எந்தை (8)

[சங்கை—ஐயம்: தரணி...பூமண்டலம்; ஓம்பும் பாதுகாக்கும்; முகில்—மேகம்]

ஆவான். மேலும்,

பாவமும் அறமும் வீடும்
இன்பமும் துன்பந் தானும்
கோவமும் அருளும் அல்லாக்
குணங்களும் ஆய எந்தை (9)

இவனேயாவான். இந்த எம்பெருமானை மும்மூர்த்திகளும், முனிவர்களும், தேவர்களும் வந்து வணங்குவர்.

---

6. இது வைணவ தத்துவமாகிய **சரீர சரீரி பாவனை**யாகும்.

அடுத்து, காவளம் பாடித் திருப்பதியைச் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார் ஆழ்வார்.

**9. காவளம்பாடி**[7]: திருமங்கையாழ்வார் மட்டிலும் இத்திருப்பதி எம்பெருமானை ஒரு திருமொழியால் (4. 6) மங்களாசாசனம் செய்துள்ளார்.

**நாங்கை நாட்டுவளம்**: இத்திருமொழியில் நாங்கை நாட்டுவளம் நவிலப்படுகின்றது. நாங்கை நாட்டு நிலைகளில் கயல் மீன்கள் அச்சத்தால் துள்ளியோடுகின்றன; மலர்களில் வண்டுகள் ஆரவாரத்துடன் தேனை நுகர்ந்து இன்புறுகின்றன (4). நாட்டின் சோலை

7. **காவளம்பாடி**: இத்திருத்தலம் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் பத்துக் கி. மீ. தொலைவில் உள்ளது. திருநாங்கூர்த் திருப்பதிகளில் இஃது ஒன்பதாவது. திருமணிக்கூடத்திலிருந்து மாட்டு வண்டியில் வரலாம். இங்கிருந்து 4கி.மீ. தொலைவிலுள்ளது. எந்த வசதிகளும் இல்லாத ஒரு சிற்றூர். **எம்பெருமான்**: கோபால கிருஷ்ணன், கண்ணன்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்**: மடவரல் நாங்கை செங்கமல வல்லி நாச்சியார்.

இத்திருக்கோயிலின் வழிபாடு காலை 10 மணிக்குத்தான் தொடங்குகின்றது. இந்த நேரத்தைத் தவிர வேறு நேரத்தில் வந்தால் சேவைக் கிடைக்காது. இத்திருக்கோயிலிலிருந்து ஒன்றரைக் கி. மீக்குக் கிழக்குத் திசையில் திருமங்கையாழ்வார் அவதரித்த **குறையலூர்** என்ற சிற்றூர் உள்ளது. இதற்கு எதிர்த்திசையில் முக்கால் கி. மீ. தொலைவில் திருமங்கையாழ்வார் நாடோறும் 1008 அடியார்க்குத் திருவாராதனம் செய்த **மங்கைமடம்** என்ற சிற்றூர் உள்ளது. பெரி. திரு 4. 6 (பதிகம்) மேலும் விளக்கம் வேண்டுவோர் **சோ.நா.தி.** 2 கட்டுரை 19 காண்க.

களின் நிழலில் நறுமணம் நிறைந்து காணப்பெறு கின்றது. (6). சோலைகளில் எங்கும் நறுமலர்கள் பூத்துக் குலுங்குகின்றன; கால்வாய்கள் தோறும் நீர் பாய்ந் தோடிய வண்ணம் உள்ளது (7, 8). சோலைகள் எங்கும் அழகிய மயில்கள் தோகையை விரித்தாடுகின்றன (9). பருத்தெழுந்த பலாமரங்களிலும் நறுமணம் வீசும் கனிகள் பழுத்துத் தொங்குகின்றன; இவை கனிந்து விழுந்து தேன் வெள்ளமிடப் பெற்றனவாகத் திகழ்கின்றன (3). திருநாங் கூரில் விண்ணளாவிய பெரிய மலைகள் போன்ற மாட மாளிகைகள் பொருந்திக் காணப்பெறுகின்றன (5). இவற்றில் நான்மறை வல்ல அந்தணர்களும் பகைவர்களை விரைவில் வென்று ஒழிக்க வல்ல வீரர்களும் வாழ்கின் றனர் (1, 2)

'**எம்பெருமான்** : திருப்பாசுரங்களைச் சேவிக்கும் போது பரத்துவ, அவதார எம்பெருமான்கள் நமக்குச் சேவை சாதிக்கின்றனர். முதலையால் கௌவப்பெற்ற ஆயிரந் திருநாமங்களை அநுசந்தித்த கசேந்திராழ் வானின் இடர் களைந்த எம்பெருமான் காட்சி நல்கு கின்றான். (1) ஆதிவராகமாகி அண்டபித்தியில் அழுந் திக்கிடந்த பூமியைக் கொணர்ந்தவன்; மாவலியின் வேள்வி பூமியில் வாமன மாணியாக எழுந்தருளிக் குறை யிரந்தவன் (2). இராமனாக வந்து வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு மகுடம் சூட்டியவன் (3). இராவண னுடைய பத்துத் தலைகளையும் அறுத்துத் தள்ளி வீடண னுக்கு அரசை அளித்தவன் (4). கண்ணனாக வந்து காளியன் என்ற நாகத்தின்மீது பல்வேறு நர்த்தனங் களைச் செய்தவன் (5). மல்லர்களைக் கொன்று பாரதப் போரில் பல்லாயிரம் அரசர்களை நாசமடையச் செய்த வன் (6). தரும புத்திரனுக்கு அரசளிக்க விரும்பித் தூது போனவன்; குவலயாபீடத்தையும் அதன் பாகனையும் கொன்றொழித்தவன் (7). சத்தியபாமைக்காக தேவேந்

திரனைச் செற்று, விரைந்து நந்தவனத்தின் அழகை அழித்து கற்பகத் தருவினை பூமிக்குக் கொண்டு வந்தவன் (8). காயத்ரீ, த்ரிஷ்டுப், ஜகதீ, அநுஷ்டுப், பங்க்தி என்று சொல்லப் பெறும் சந்தஸ்ஸுக்களெல்லாம் தானாக இருப்பவன்; எழுத்துகளின் எண்ணிக்கை கொண்டு சந்தஸ்ஸுகளின் பெயர்களை அறுதியிட்டவன்; பஞ்ச பூதங்கட்கு நியாமகன்; காரியப் பொருள்கள் யாவும் அழிந்து கிடந்த காலத்து எல்லாம் தன் பக்கலிலே ஐக்கிய மாகித் தானொருவனே என்னும்படி நிலைபெற்றிருப் பவன்; இவற்றையெல்லாம் பாகுபாடு செய்து காரியங் கொள்ள நினைத்த காலத்து இவற்றுக்கெல்லாம் காரண பூதனாக நின்றவன்; இவ்விதமாக அருமறைகளால் உணர்த்தப்படுபவன் (9). காவளம் பாடிக் கண்ணனைச் சேவித்த கலியன் திருப்பார்த்தன் பள்ளிக்குப் போகச் சித்தமாகின்றார்.

**10. திருப்பார்த்தன் பள்ளி**[8] **:** திருமங்கையாழ் வார் ஒரு திருமொழியால் (4. 8) இத்தலத்து எம்பெரு மானை மங்களா சாசனம் செய்துள்ளார். இத்திருமொழி **'தாய்ப் பாசுரமாக'** நடைபெறுகின்றது. பரகால நாயகியைப் பெற்றெடுத்த திருத்தாயார் பார்த்தன் பள்ளிப் பெருமானிடத்தில் தன் மகள் காதல் கொண்டு

8. **திருப்பார்த்தன் பள்ளி :** திருநாங்கூர்த் திருபபதி களுள் இது **பதினொன்றாவது** திருப்பதியாகும். பார்த்தனுக்காச் சேவை சாதித்த இடமாதலால் இத்திருபபெயர் பெற்றது. இது சீகாழி இருப் பூர்தி நிலையத்திலிருந்து பத்துக் கி.மீ. தொலைவி லுள்ளது. திருநாங்கூரிலிருந்து 4 கி மீ. தொலைவு. எந்தவித வசதிகளும் இல்லாத ஊர். **எம்பெருமான்:** தாமரையாள்கேள்வன்; நின்றதிருக் கோலம்; மேற்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** தாமரை நாயகி. பெரி.திரு. 4 8 (பதிகம்). மேலும் விவரம் வேண்டுவோர் **சோ. நா. தி.** (2) கட்டுரை 20 காண்க.

இருக்கும் நிலையை வெளியிடுகின்றாள்; அப்பெருமானை நினைந்து வாய் வெருவிக் கூறும் படிகளை ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு வகையாகக் கூறுகின்றாள்.

கவள யானைக் கொம்பொ சித்த
கண்ணன் என்றும் காம ருசீர்க்
குவளை, மேகம் அன்ன மேனி
கொண்ட கோன்என் ஆனை என்றும்,
தவள மாடம் நீடு நாங்கைத்
தாம ரையாள் கேள்வன் என்றும்
பவள வாயாள் என்ம டந்தை
பார்த்தன் பள்ளி பாடு வாளே (1)

[கவளம்-யானையின் உணவு; ஒசித்த-முறித் தொழித்த; காமரு- (காமம்+தரு) - ஆசையை விளைவிக்கின்ற; சீர்-அழகு; அன்ன-ஒத்த; மேனி - உடல்; கோன் - சுவாமி; தவளம் - வெண்மையான]

என்பது முதற் பாசுரம். பார்த்தன் பள்ளியில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை எப்படி எப்படியெல் லாம் என் மகள் அநுபவிக்கின்றாள் தெரியுமா? "குவலயா பீடம் என்ற யானையின் கொம்புகளைச் சேற்றிலிருந்து முள்ளங்கியைப் பிடுங்குவது போல எளிதில் பிடுங்கி அதன் உயிரைத் தொலைத்திட்ட கண்ணன்; அப்படிப்பட்ட சூரன் அவன். அவனது திருமேனியின் நிறம் குவளை மலர், காள மேகம் இவற்றின் நிறத்தையொத்துக் கண்ணைக் கவரும் திறத்தது. யானையை எத்தனை தடவை பார்த்தாலும் ஒவ்வொரு தடவையும் கிடைத்தற் கரிய பொருள்போல் காணப்பெறுவது போலவே, தன் கண்ணனும் அப்பொழுதைக்கப்பொழுது ஆராஅமுதமாக இருக்கின்றான்" என்கின்றாள்.(1). "யானையை முடித்த செய்தியை ஒரு தடவை சொல்லி முடியக் கூடியதோ?

மிகவும் வேகமாகச் சீறிவந்த களிற்றுடன் போர் புரிவதும் வெற்றி பெறுவதும் எளிதான செயலல்லவே என்று அந்த வீரத்திலேயே ஈடுபட்டுக் 'கஞ்சன் விட்ட வெஞ்சினத்த களிறு அட்ட காளை' என்கின்றாள். சிறிய வயது சென்ற பிறகு செய்த இச் செயல் கிடக்கட்டும். தொட்டில் பருவத்தில் செய்த அரும்பெருஞ் செயல் உங்கட்குத் தெரியுமோ? வஞ்சனையாகக் கொல்லவந்த பேய்ச்சியின் முலையுண்கின்ற போக்கில் அவள் உயிரையும் உண்ட மாயன் அன்றோ இவன்?'' என்கின்றாள்(2).

''இவன் நான்முகன் படைத்த அண்டங்களிலுள்ளோர் எல்லோர்க்கும் சுவாமி; தனக்கு ஆனை போன்றவன்; திருமறைகளும் தேடிச்செல்லும் செல்வன்'' என்கின்றாள் (3). இதனை ஊடல் தோன்றச் சொல்லுகின்றாள் என்று கொள்ள வேண்டும். ''நேற்றுவரை அடங்கிக் கிடந்த இவள் அழகிய வளையல்களணிந்த மகளிர் முன்னே வரம்பு அழிந்தவளானாள்; பெண்மைக்குரிய மரியாதைகள் அழியப் பெற்றாள்; பல மகளிரின் எதிரே சேது கட்டுவித்து இலங்கையைப் பாழ் படுத்திய மிடுக்கன்'' என்று தலைவனைப் புகழ்கின்றாள் (4). ஒரு பிராட்டிக்காகப் படாதன பட்டு அரும் பெருஞ் செயல்கள் ஆற்றியவன் தன் விஷயத்தில் அலட்சியமாக இருப்பதாகச் சொல்லுகின்றாள் என்று கொள்ள வேண்டும். ''முன்பு ஒரு காலத்தில் அரக்கர்களின் ஆவி முடியும்படியாக ஆழ்கடல் சூழ் இலங்கையைப் பொடி படுத்திய பெருவீரன்; ஆண்மைக்கு இலக்கணமாக அழகிய வில்லைக் கையிலே உடையவன்'' என்கின்றாள் (5). இதனால் தன் மகள் 'அடக்கங் கெட்டாள்; பெருநிந்தைக்கு ஆளானாள்' என்று தாய் கூறியவாறு.

''பிரளய காலத்தில் (ஊடலில்) உலக முழுவதையும் தன் திருவயிற்றில் வைத்துக் காத்துப் பின்னர் வெளிப்படுத்திய

பெருமான்; கடல் போன்ற திருமேனி நிறமுடையவன்'' என்கின்றாள் (6). ''எத்தனையோ பிறவிகளாகத் தேடிப் பிடித்து என் நெஞ்சைத் தன் இருப்பிடமாகக் கொண்ட நாதன்; அவனோ யார்க்கும் அகப்படாத கள்வன்; நான்கு மறைகளும் தேடிப்பார்த்தாலும் அவற்றுக்கும் அகப்படாத தொலைவிலுள்ள பெருமையுடையவன்'' என்கின்றாள்(7). ''உயர்ந்தோராலும் சாதாரண மக்களாலும் புகழப் பெறு பவன்; சந்திர சூரியர்களாலும் மற்றுமுள்ள உம்பராலும் கிட்டமுடியாமல் பெருஞ்சுடர் விட்டிலங்கும் திருவாழி யாழ்வானை ஆயுதமாக உடையவன்; அடியார் பக்கம் பேரன்புடையவன்'' என்கின்றாள் (8). ''கண்ணன் என் றும், வானவர்கள் காதலித்து மலர்கள் தூவும் எண்ணன் என்றும், எல்லோர்க்கும் இன்பம் அளிப்பவன் என்றும், ஏழ் உலகங்கட்கும் காரண பூதன் என்றும் பேசுகின்றாள் என்மகள்''(9) என்கின்றாள். இத்தகைய பெருமான் பார்த் தன் பள்ளியில் திருக்கோயில் கொண்டுள்ளான் என்று சொல்லி விட்டு அத்திருப்பதியின் திருநாமம் இட்டு இசை பாடத் தொடங்கிவிட்டாள் தன் மகள் என்று திருத் தாயார் ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகப் ''பார்த் தன் பள்ளி பாடுவாளே'' என்று கூறுகின்றாள். இப்பாசு ரங்களை ஓதுபவர்கள் ''ஏர்கொள் நல்ல வைகுந்தத்துள் நாளும் இன்பம் எய்துவர்'' (10) என்ற குறிப்பை நினைந்து பாடுவார் பெறும் பேற்றினை நினைக் கின்றோம். ஆழ்வார் 'திருவெள்ளக் குளம்' என்ற திருத் தலத்தைச் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

**11. திருவெள்ளக்குளம்:**[9] **'அண்ணன் கோயில்'** என்ற இதன் இன்னொரு திருநாமமே. எங்கணும் பெரு

9. **திருவெள்ளக் குளம்:** இது திருநாங்கூர்த் திருப்பதி களுள் **பத்தாவது.** மயிலாடுதுறை-சீகாழி நெடுஞ் சாலையில் சீகாழியை அடைவதற்குச் சுமார் மூன்று கிலோ மீட்டர் முன்னதாகவே ஒருகிளை

வழக்காக உள்ளது. திருமங்கையாழ்வார் மட்டிலுமே இத்தலத்து எம்பெருமானை ஒரு திருமொழியால் (4.7) மங்களாசாசனம் செய்துள்ளார். இத்தலத்துத் தீர்த்தம் 'திருவெள்ளக்குளம்' என்பது; புஷ்கரிணியின் திருநாமமே திவ்விய தேசத்திற்கும் வழங்கலாயிற்று என்பது கருதத் தக்கது. முதற் பாசுரத்திலேயே **'திருவெள்ளக் குளத்து அண்ணா!'** என்று எம்பெருமானை விளிப்பதால் **எம்பெருமான் அண்ணன்** ஆகின்றார்: அவன் எழுந்தருளி யிருக்கும் கோயில் **அண்ணன் கோயில்** ஆகின்றது, இந்தக் கோயிலின் திருநாமமே தலத்துப் பெயராகவும் ஆகிவிடு கின்றது.

**தலத்துச் சூழ்நிலை :** ஆழ்வார் பாசுரங்களினால் இத்தலத்துச் சூழ்நிலை அறியக் கிடக்கின்றது. இத்திருத் தலம் சிறிது சோலை சூழ்ந்தது.

---

சாலை (மண் சாலை) காணப்படும். (இப்போது அது தார்சாலையாகி இருக்கக் கூடும்). அங்கு 'திருநாங்கூர், அண்ணன் கோயில்' என்ற பெயர் பலகைகள் காணப்படும். இங்கிருந்து மாட்டு வண்டியை அமர்த்திக்கொண்டு தான்திருநாங் கூர்த் திருப்பதிகளைச் சேவிக்க வேண்டும். நெடுஞ் சாலையிலிருந்து இரண்டு கி மீ. தொலைவி லுள்ளது திருவெள்ளக் குளம். இது குமுதவல்லி யின் வளர்ப்பிடமாகும். திருத்தேவனார்த் தொகையிலிருந்து மேல் திசையில் முக்கால் கி. மீ. தொலைவிலுள்ளது. சீகாழி இருப்பூர்தி நிலை யத்திலிருந்து தென்-கிழக்குத் திசையில் சுமார் பத்து கி. மீ. தொலைவிலுள்ளது. சிறிய ஊர்; எந்த வசதிகளும் இல்லாத ஊர். **எம்பெருமான்;** கண்ணன், நாராயணன்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** பூவார் திருமகள் நாச்சியார் பெரி. திரு 4.7 (பதிகம்) மேலும் விவரம் வேண்டுவோர் சோ. நா. தி-(2) கட்டுரை 8 காண்க.

'தேனார் பொழில்சூழ் திருவெள்ளக்குளம்'(4)

[தேன் ஆர்—தேன் நிறைந்த]

'சேடார் பொழில்சூழ் திருவெள்ளக்குளம்'(5)

[சேடு ஆர்—திரண்டு இருக்கும்]

'சேலார் வயல்சூழ் திருவெள்ளக் குளம்'(7)

[சேல் ஆர்—மீன்கள் நிறைந்த]

'சீரார் பொழில்சூழ் திருவெள்ளக்குளம்'(8)

[சீர் ஆர்—சிறந்த; பொழில்—சோலை]

என்றெல்லாம் ஊரைச் சுற்றியுள்ள சோலைகளையும் வயல்களையும் ஆழ்வார் குறிப்பிடுவதைக் கண்டு மகிழலாம்.

**திருவேங்கடம்பற்றிய குறிப்பு :** வடநாட்டுத் திருப்பதிகளில் திருவேங்கடத்திற்கு எவ்வளவு சிறப்புண்டோ அவ்வளவு சோழ நாட்டுத் திருப்பதிகளில் திருவெள்ளக் குளத்திற்கு உண்டு. அங்கும் இங்கும் வழிபாடுகள் சிறப்பாகவே நடைபெறும். இந்த ஒற்றுமை நயம் விளங்கவே,

வேடார் திருவேங்கடம்
மேய விளக்கே(5)

[வேடுஆர்—வேடர்கள் மலிந்திருக்கும்]

என்று வேற்றுமையின்றி எம்பெருமானை விளிக்கின்றார் ஆழ்வார். திருவேங்கடம் பற்றிய திருமொழிகளில் 'கண்ணார் கடல் சூழ்' (1.10) என்பது ஒரு திருமொழி. அதன் சாயையாகவே இத்திருமொழி அருளிச் செய்யப் பெறுகின்றது. இரண்டு திருமொழிகளின் தொடக்கமும் ஒரு விதமாகவே இருக்கும்படி அமைய வைத்ததும் உய்த்துணரத் தக்கது. திருவேங்கடம் பற்றிய திருமொழி

**கண்ணார் கடல் சூழ்** *(1:10:1)* என்றும், இத்திருமொழி **'கண்ணார் கடல் போல்'** *(4:7:1)* என்றும் தொடங்கப் பெற்றிருத்தலைக் காணலாம். பாசுரங்களின் நடைப் போக்கும் கருத்துப் போக்கும் ஒருவிதமாக இருத்தலையும் ஒப்பிட்டு உணர்ந்து மகிழலாம். இது காரணமாகவே இத்திருத்தலம் **'தென் திருப்பதி'** என்று வழங்குகின்றது போலும்.[10]

**எம்பெருமானை வேண்டுவது:** திருவெள்ளக் குளத்து எம்பெருமானை நோக்கி ஆழ்வார் வேண்டுவது "திருவெள்ளக் குளத்து எம்பெருமானே, கடல் போன்ற திருமேனியையுடையனாயிருப்பது சம்சாரத்தில் கொதிப் படைந்து கிடக்கும் எம்போலியருடைய தாபங்களைத் தணிப்பதற்கன்றோ? அப்படியிருந்தும் அடியேனுடைய தாபங்களை இன்னமும் அகற்றாமலிருப்பது என்னோ?(1). சர்வ ரட்சகன் என்பது விளங்கவன்றோ நீ திருத்துளாய் மாலையை அணிந்திருப்பது? நீ என் இடரை நோக்கா தொழியில் துளபமாலை அணிந்திருப்பது பயனற்றதாகு மல்லவா? (2). போவார் வருவாரெல்லாம் கையெடுத்து வணங்கும் படியாக எளியனாக உள்ளாய். இந்திரன் பசிக் கோபத்தினால் ஏழுநாள் இடைவிடாது மழை பெய்வித்த போது கோவர்த்தன மலையைக் குடையாகக் கவித்துத் திருவாய்ப்பாடியின் இடரை நீக்கியனவனன்றோ நீ? (3).

"நீ குவலயாபீடம் என்னும் யானையின் கொம்பு களை முறித்தாய் (4) பிராட்டிக்காக அரிய பெரிய காரியங்களைச் செய்தாய்; மலைகளைக் கொண்டு சேது அமைக்கச் செய்தாய் (6). சங்கல்பமாத்திரத்தாலேயே படைப்பு அழிப்புகளைச் செய்து தலைக்கட்டவல்லவன்

10. கும்பகோணத்திற்கருகிலுள்ள **ஒப்பிலியப்பன் சந்நிதியும்** (திருவிண்ணகர்) நாகர்கோயிலுக்கருகிலுள்ள **திருவண்பரிசாரமும்** தென் திருப்பதி என்று வழங்குதலும் உண்டு.

நீ. ஆயினும் கையிலே கோலைக் கொண்டு கறவைகளின் பின்னே சென்று அவற்றை மேய்த்தாய் (7). பூமியைப் பிரளயம் கொண்ட காலத்தில் வராக அவதாரம் எடுத்து அதனை இடந்து எடுத்தாய். நாராயணன் என்று பேர் பெற்றுள்ளாய். சரீரத்திற்கு நன்மை செய்ய வேண்டுவது சரியான ஆன்மாவின் கடமையன்றோ? (8). இப்படி யெல்லாம் பலருக்குப் பல்வேறு விதமாக அருள்பாலித்த நீ அடியேனுக்குச் சிறிது அருள் செய்து துன்பங்களைப் போக்கலாகாதா'' என்று பாசுரங்கள் தோறும் பன்னிப் பன்னி வேண்டுகின்றார் ஆழ்வார். இறுதியாக, ''பிராட்டியானவள் உன்னை விட்டுப் பிரியாதிருக்கவும் நான் இழப்பது என்னோ?'' என்ற கருத்தையடக்கிப் **'பூவார் திருமாமகள்புல்கிய மார்பா!'** (9) என்று விளிக்கின்றார். நம்மாழ்வார் ',அகலகில்லேன் இறையும்' என்று அலர்மேல் மங்கை உறைமார்பா!'' (திருவாய் 6. 10: 10) என்று பேசினது இத்துடன் ஒத்திருப்பதைக் கண்டு மகிழலாம். அடுத்து, மணிமாடக் கோயிலைச் சேவிக்கத் திருவுள்ளம் கொள்ளுகின்றார்.

**12. மணிமாடக்கோயில்**[11] : இதனை நாராயணர் கோயில் என்றும் வழங்குகின்றனர். நாங்கூர் என்பது

11. **மணிமாடக் கோயில் :** திருநாங்கூர்த் திருப்பதிகளுள் இது முதலாவது திருத்தலமாகும். சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் 8 கி. மீ. தொலைவிலுள்ளது திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றையும் மாட்டு வண்டியின் துணை கொண்டே சேவிக்க வேண்டும். **எம்பெருமான் :** நந்தாவிளக்குப் பெருமாள், நாராயணன்; இருந்த திருக்கோலம், கிழக்கு நோக்கிய திருமிக மண்டலம். **தாயார் :** புண்டரீகவல்லித் தாயார். உற்சவர் குள்ளமாயும் அமைதியாயும் காணப்படுகின்றார். பெரி. திரு. 3.8 (பதிகம்); பெரி. திருமடல்(68) மேலும் விவரம் வேண்டுவோர் **சோ. நா. தி.** (2) என்ற கட்டுரை 11 காண்க.

ஒரு பெரிய இடம். "நாங்கூர் நாலாயிரம்" என்று வழங்கி வரும் சொற்றொடர்ப்படி நாலாயிரம் வைணவக் குடிகள் வாழ்ந்த இடமாதலால் அவரவர்கட்கு அணித்தாக இருக்குமாறு எம்பெருமான் பதினொரு இடங்களில் சந்நிதி பண்ணலாயிற்று. திருமங்கையாழ்வார் மட்டிலும் இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளார். இத் திருத்தலத்தை,

—நாங்கூரில்
மன்னும் மணிமாடக்
கோயில் மணாளனை (72)

என்று தம் பெரிய திருமடலில் குறிப்பிடுவர். இதைத் தவிர ஒரு திருமொழியில் (3.8) இத்தலத்து எம்பெரு மானை மங்களாசாசனம் செய்துள்ளார்.

**திருத்தலச் சூழ்நிலை;** இந்த ஆழ்வார் பாசுரங் களில் இத்திருத்தலச் சூழ்நிலை அற்புதமாகச் சித்திரிக்கப் படுகின்றது. "வண்டார் பொழில் சூழ்ந்து அழகாய நாங்கூர்" (10) என்று சிறப்பிப்பர். மேலும்,

எத்திசையும்
கந்தாரம் அமிதேன் இசைபாட, மாடே
களிவண்டு மிழற்ற நிழல்துதைந்து
மந்தாரம் நின்று மணம் மல்கும் நாங்கூர் (1)

[கந்தாரம்-தேவகந்தாரி இராகம்: களிவண்டு - ஒரு வகைச் சாதி வண்டு; மிழற்ற-ஒலிக்க; மந்தா ரம். பாரிஜாத மரங்கள்; துதைந்து-நெருங்கி; மல்கும்-நிறைந்திருக்கும்]

என்ற பாசுரப் பகுதியில் ஓரளவு நன்கு இச்சூழ்நிலை காட்டப் பெறுகின்றது. எல்லா இடங்களிலும் அழகிய தேன்சாதி வண்டுகள் தேவகாந்தாரி இராகப் பாடுகின்

றன; களிவண்டு சாதியிற் பிறந்த வண்டுகள் பக்கங்களில் ஆலாபனம் பண்ணுகின்றன. பாரிஜாத மரங்கள் நெருங்கி நின்று நிழல் தருவதுடன் நறுமணத்தையும் நல்குகின்றன என்று கூறுகின்றார் ஆழ்வார். வீரசிங்கங்களால் கொல்லப் பெற்ற யானைகளின் கொம்புகளையும், அகில் மரங்களையும், அழகிய முத்துகளையும், வெளுத்த சாமரங்களையும், மலையில் விளையக்கூடிய பல்வேறு பண்டங்களையும் காவிரிநதி அலைகளால் தள்ளிக் கொண்டு வருகின்றது. திருநாங்கூரில் காவிரியாறு நேரே பெருகுவதில்லையாயினும் காவிரிக் கால்களின் பெருக்கு சுற்றுப் பகுதிகளில் உள்ளமைபற்றி 'பொன்னி... திரையுந்து நாங்கூர்' என்று கூறப்பெற்றிருப்பது ஈண்டு அறியத் தக்கது (3). மரங்களின் தளிர்கள் அசைந்தாடுவதால் அவற்றின் அருகிலுள்ள பூங்கொடிகளின் திரள் ஆடுகின்றது; குயில்கள் கூவுகின்றன; மேகங்கள் உலவும் சோலைகளில் மயில்கள் நடனமாடுகின்றன (5).

வயல்களில் எருமைகளின் இருப்பை,

ஓங்கு பைந்தாள்
கண்ஆர் கரும்பின் கழைதின்று வைகி
கழுநீரில் மூழ்கி செழுநீர்த் தடத்து
வண்ஏந்து இளமேதிகள் வைகும் நாங்கூர் (6)

[ஓங்கு - உயர்ந்து; பசுந்தாள் - பசுங் கால்கள்; கண் ஆர்-கணுக்கள் நிரம்பிய; கழை-கரும்பு; வைகி-தாமதித்து நடந்து; தடத்து-தடாகத்தில்; மண் ஏந்து-கொம்புகளில் மண்ணைத் தாங்கி; எருமைகள்]

என்று காட்டுவர் ஆழ்வார். வயல்களில் இளைய எருமைகள் கரும்புத் தலையாடியை (தோகையை) மேய்ந்து, அளவுமீறித் தின்றதாலே நகர்ந்து செல்லமாட்டாமல்

இருந்த இடத்திலேயே இடம் - வலம் கொண்டு அசை போடுகின்றன; பிறகு மெதுவாக நடந்து சென்று செங்கழுநீர்ப் பூக்கள் நிரம்பியிருக்கப்பெற்ற அழகிய நீர் நிரம்பிய தடாகத்திலே மூழ்குகின்றன; குட்டையின் சேற்றிலே கொம்புகளைக் குத்தி மண்ணுருண்டையைப் பெயர்த்தெடுத்துத் தாங்கிக்கொண்டு கிளம்பி, பின்னர்க் கரையேறவும் முடியாதபடி அவ்விடத்திலேயே தாமதித்துக் கிடக்கின்றன (6). அன்னப் பறவைகள் தாமரைப் பூக்களில் தம்பதிகளாக இருந்து கொண்டு விளையாடுங்கால் அம்மலர்கள் துகைக்கப்பெற்று அவற்றினின்றும் மது வெள்ளம் பெருகிச் செங்கழுநீர் மடைகளிலும் ஓடிப் பாய்கின்றது (9).

**நகரச் சிறப்பு :** திருநாங்கூர் நகரச்சிறப்பு பற்றியும் பாசுரங்களால் அறிய முடிகின்றது. இந்நகரத்தில் மாட மாளிகைகள் விண்ணளவும் ஓங்கியுள்ளன; அவற்றில் புறாக்கள் கொடுங்கையின் மேலுள்ள மெல்லிய பேடைகளுடன் உல்லாசமாகக் கலவி செய்து மகிழ்கின்றன (2). இவ்வூரிலுள்ள வைதிக அந்தணர்கள் காருகபத்தியம், ஆகவநீயம், தாட்சிணாக்கினி என்ற முத்தீ வளர்த்து, இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற வேதங்களை ஓதி பிரம்மவேள்வி, தேவ வேள்வி, பூத வேள்வி, பித்ரு வேள்வி, மனுஷ்ய வேள்வி என்ற ஐம்பெரு வேள்விகளை அநுட்டிப்பவர்களை; சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம் கல்பம் என்ற வேதாங்கங்கள் ஆறையும் பயின்றவர்கள்; நிஷதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம் என்ற ஏழு ஸ்வரங்களையும் அறிந்தவர்கள் (4). இங்குள்ள வைதிக அந்தணர்கள் அல்லும் பகலும் மறையோதிக்கொண்டே இருப்பர்; அவர்கள் வீட்டு மகளிரும் விடாமல் காதில் பட்ட உறைப்பின் மிகுதியால் மறை வாக்கியங்களை விடாமல் சொல்லுகின்றனர்; அவர்கள் கையிலே இருந்து வளர்ந்து சொன்னதைச் சொல்லுமாம்

கிளிப்பிள்ளைகளும் மறைபாடுகின்றன. ஆக, இப்படி வைதிகர்கள் வாயிலும், அவர்கள் வீட்டு மகளிரின் வாயிலும், அம்மகளிர் வளர்க்கும் கிளிப்பிள்ளைகள் வாயிலும் வேத ஒலி மலியப் பெற்றது இத்திருத்தல மாகும் (8).

திருநாங்கூரின் மாடமாளிகைகளில் கொடிகள் நாட்டப் பெற்றுள்ளன (5) இக்கொடிகள் சந்திர மண் டலத்தை எட்டியிருக்கும்; சந்திரன் சஞ்சரிக்கும்போது, இக்கொடிகளில் துவக்குண்டு அப்பால் செல்ல முடியாத படி அவற்றோடு விளையாடுகின்றான். இப்படிப்பட்ட மாளிகைகள் நிறைந்த வீதிகளில் குறத்திகள் தங்கட்கு விளையாட்டாகக் கிடைக்கின்ற நன்முத்துகளைக் கூடை கூடையாக கொண்டு நாழி நெல்லுக்கு விற்பனை செய் கின்றார்கள். திருநாங்கூரரிடத்தும் முத்துகள் ஏராள மாக இருக்கையாலே, அவர்கள் வந்து அவற்றைக் கொள்வதில்லை; குறத்திகள் தாங்களே சென்று, வேண்டாமென்று கதவடைத்துக் தள்ளினாலும், 'நாழி நெல்லுக்கு நானாழி முத்துக் கொள்ளுங்கள்' என்று வலுக்கட்டாயமாகக் கொடுக்குமாறு கூறுகின்றமை தோன்றும். இந்தச் சந்தைநிலை விவரத்தால் ஊரின் செல்வச் செழிப்பைச் சொன்னவாறு (7).

**தலத்து எம்பெருமான்:** இத் தலத்து எம்பெரு மானின் பெருமையும் பாசுரங்களில் பேசப் பெறுகின்றது. தேவர்கள் இத்தலத்தில் குழுமி எம்பெருமானை 'நந்தா விளக்கே! அளத்தற்கரியாய்! நரநாராயணனே! கருமா முகில் போன்ற எந்தாய்!' என்று பரவுகின்றனர். ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை 'நந்தா விளக்கே' என்று குறிப்பிட்டமையால் எம்பெருமானின் திருநாம மும் '**நந்தா விளக்கு**' என்று வழங்கலாயிற்று. "சுயம் பிரகாசமான ஞானத்தை ஸ்வரூபமாக உடையவனே!"

என்பது இதன் பொருளாகும் (1). இத்திருக் கோயிலில் சந்நிதி பண்ணியிருப்பவன் 'ஆதிமூலமே!' என்று கூவியழைத்த முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடின கசேந்திரன் என்ற யானையின் துயர் துடைத்தவன் (2). யானையின் துயர்தீர்த்த எம் பெருமானுக்கு அண்டினவர்களின் விரோதிகளைக் களைந் தொழிந்தால் அம்மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகப் பெரிய பிராட்டி வெகுமானம் பண்ணுகின்றாள்; தனது திரு முலைத் தடத்தாலே அவனை அமுக்கிக் கட்டித் தழுவு கின்றாள்(3). முன்பொரு காலத்தில் கருடப் பறவையின் மீது ஏறிக்கொண்டு எழுந்தருளி மாலி, சுமாலி முதலிய அரக்கர்கள் எட்டுத் திசைகளில் சிதறியோடவும் பல உயிர் மாண்டொழியவும் கடல் சூழ் இலங்கையை அழித்த பெருமான் (4). பேய்ச்சியின் முலையிலுள்ள நஞ்சினை அவளுயிருடன் ஒக்க உண்டவன்; வத்ஸாசுரனை எறிதடி யாகக் கொண்டு கபித்தாசுரன் மேல் சுழற்றி எறிந்து இரு வரையும் ஒருங்கே முடித்தவன்; குருந்த மரத்தை ஒசித்த கோபாலன்; தடந்தாமரைப் பொய்கைபுக்கு மங்கைய ருடன் தீர்த்தமாடி மகிழ்ந்த பிரான் (5, 6). யமுனையின் ஒரு மடுவிலிருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் நச்சுத் தீயால் கொதிப்பித்துக் கொடுமை புரிந்து வந்த காளியன் என்ற நாகத்தின் கொழுப்பை யடக்கி அதன் தலைமேல் நர்த்தனம் ஆடிய பெருமான் (7). சுருண்ட கூந்தலையுடைய இடைச்சியரின் ஆடைகளை அபகரித் தவன்; அவர்தம் சிற்றில் களைச் சிதைத்தவன்; முற்றா இளம் பெண்டிருக்கு விளையாட்டையும் ஆசைப் பெருக் கையும் விளைவித்த பெருமான் (8). ஏழு காளைகளை அடக்கி நப்பின்னைப் பிராட்டியின் மெல்லிய புயங்களை விரும்பி அணைத்தவன்; சுடர் ஆழியையும் ஒண்சங்கையும் தாங்கி நிற்பவன் (9). இவ்வாறெல்லாம் கருத்துப்பட நர நாராயணனைச் சேவித்த ஆழ்வார் திருவைகுந்த விண்ண கரத்தைச் சேவிக்கத் திருவுள்ளம் கொள்ளுகின்றார்.

**13. வைகுந்த விண்ணகரம்:**[12] இத்தலத்துப் பெருமானை ஆழ்வார் ஒரே திருமொழியால் (3.9) மங்களாசாசனம் செய்துள்ளார். பாசுரங்களில் ஆழங்கால் படும்போது முதலில் நம் கண் வட்டம் செல்லுவது தலத்துச் சூழ்நிலையில்.

**தலத்துச் சூழ்நிலை:** பெரும்பாலும் பாசுரங்களின் பிற்பகுதியில் தல வருணனை அமைகின்றது. எம்பெருமான் திருவுள்ளம் உவந்து எழுந்தருளியிருப்பதற்குப் பாங்கான தலம் என்பதை மூதலிக்கின்றார் ஆழ்வார்.

சலங்கொண்டு மலர்சொரியும்
மல்லிகையொண் செருந்தி
சண்பகங்கள் மணநாறும்
வண்பொழிலி னூடே
வலங்கொண்டு கயலோடி
விளையாடு நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் (1)

[சலங்கொண்டு-நீரைப்பருகி; ஒண்- அழகிய; செருந்தி-சுர புன்னை; வண்-அழகிய; கயல்-மீன்]

---

12. **வைகுந்த விண்ணகரம்:** திருநாங்கூர்த் திருப்பதிகளுள் இஃது இரண்டாவது திருப்பதி. இத்திருத்தலமும் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் 8 கி. மீ. தொலைவிலுள்ளது. எம்பெருமான் வைகுந்தத்தில் எழுந்தருளியிருப்பது போலவே இத்திருத்தலத்திலும் வீற்றிருந்த திருக்கோலமாகச் சேவை சாதித்தலால் இத்திருத்தலம் 'வைகுந்த விண்ணகரம்' என்று பெயர் பெற்றது. **எம்பெருமான்:** வைகுந்த நாதன்; தாமரைக்கண் நெடிய பிரான் என்ற மற்றொரு திருநாமமும் இவருக்கு உண்டு. வீற்றிருந்த திருக்கோலம்;

என்கின்றார். மல்லிகை சுரபுன்னை சண்பகம் முதலியவை எங்கும் அடர்ந்திருப்பதனால் அவற்றின் நறுமணம் நிறைந்துள்ளது. நீரைவிட்டுப் பிரிந்தால் ஒரு நொடிப் பொழுதும் வாழமாட்டாத மீன்களும் நீர் உறுத்துவதாகக் கொண்டு அதைவிட்டு நீங்கி அதனைவிட நிலம் மிதிதானே நன்றாயிருக்கின்ற சோலையிலே வந்து சேர்ந்து அச்சோலையின் நறுமணத்தை முகர்ந்து கொண்டு துள்ளி விளையாடுகின்றனவாம். பார்த்தவிடமெங்கும் பெரிய செந்நெற் பயிர்களும், இளந்தெங்கினை மரங்களும், வெற்றிலைக் கொடிகளும், அழகிய குலைகளையுடைய பாக்கு மரங்களும் ஒன்றுக் கொன்று மீறிக் கொண்டு செழித்து வளர்ந்துள்ளன; வண்டுகள் பலவிதமான இன்னோசைகள் எழுப்ப, அவற்றிற்கேற்ப மயில்கள் நடனம் ஆடுகின்றன (3).

திருத்தலத்தைச் சுற்றியுள்ள கழனிகளில் செந்நெல்களும், தாமரைப் பூக்களும், மீன் வகைகளும், செங்கழுநீர் மலர்களும் சேர்ந்து கொண்டு கழனிகள் உள்ள இடமெங்கும் திகழ்கின்றன. வெளியில் நோக்கினால் வயல்களின் வளம் சொல்லுக்கு எட்டாதது; உள்ளே நோக்கினால் வைதிகர்களின் செழிப்பு சொல்லுந் தரமன்று (5). இளங் கமுக மரங்களும், குலைகள் நிறைந்த தென்னை மரங்களும், வெற்றிலைக் கொடிகளும் நெற்பயிர்களும், கரும்புகளும் எம்மருங்கும் செழித்து ஓங்கி வளர்ந்துள்ளன (7). தாமரை மலர்களினின்றும் செங்கழுநீர் மலர்களினின்றும் தேன் வெள்ளமிட்டுப் பாய்கின்றது; வயலிலுள்ள உழவர்கள் 'இப் பெரு வெள்ளத்தினால் பயிர்கள் அழிந்திடும்' என்று அஞ்சி மடைகளை அடைக்கின்றார்களாம் (8). கயல், வாளை, சேல் என்னும் மீன்வகைகள்

கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** வைகுந்தவல்லி. பெரி. திரு 3.9 (பதிகம்) மேலும் விவரம் வேண்டுவோர் சோ. நா. தி-(2) கட்டுரை 10 காண்க.

செந்நெற் பயிர்களிடையே அழகிய பொய்கைகள்போல் ஒவ்வொரு வீதியிலும் நிறைந்து காணப்பெறுகின்றன (9) இந்தத் தலத்திற்கருகிலுள்ள கடலில் கப்பல்கள் நிறைந்துள்ளன (10).

ஊரின் சூழ்நிலையும் பாசுரங்களில் குறிப்பிடப்பெறுகின்றன. குற்றமற்ற வைதிகர்கள் நிறைந்திருக்கப் பெற்றது நாங்கூர். "நாங்கூர் நாலாயிரம்" என்ற வாக்குப் படி அமைந்துள்ளது. இதனால் வேத ஒலிகளும் இசையொலிகளும் எங்கும் கேட்கப் பெறுகின்றன (2). நாங்கூரின் மாடமாளிகைகளின் உச்சியில் பாதுகாப்புக் குறுப்பாக நாட்டப் பெற்றுள்ள சூலங்கள் மேக மண்டலத்தளவும் ஓங்கியிருப்பதனால் அவை மேக மண்டலங்களின் வயிறுகளைக் குத்திப் பிளக்க அவற்றினின்றும் முத்துகள் சிதறி விழுந்து மாளிகைகளிலெங்கும் மலிந்து கிடக்கின்றனவாம் (4). வேதவேதாங்கங்களைக் கற்றுத்துறை போகிய வித்தக மறையோர் பொறுமை முதலிய நற்குணங்களைக் கொண்டவராய்த் திகழ்கின்றனர் (6). இங்ஙனம் நாங்கூரின் வளம் பேசப் பெறுகின்றது.

**எம்பெருமான்:** தலத்தில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் பெருமையும் பாசுரங்களில் பேசப் பெறுகின்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் தீ மனத்தையுடைய இரணியனின் மார்பைப் பிளந்த நரசிம்மன்; தடங்கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதளித்தகானை; முகில் வண்ணன் (1, 2). உலகமெல்லாம் பிரளயப் பெருங்கடலில் மூழ்கி அழிந்து போகாமல் அவை யாவற்றையும் தன் திருவயிற்றில் அடக்கிக் காத்தருளியவன்; உருத்திரனுக்குப் பிச்சையிட்டு அவன் சாபத்தைத் தீர்த்தருளியவன் (3). 'கலையிலங்கு அகலல்குல்குல அரக்கர் குலக்கொடி'யைக் காதோடு மூக்குடன் அரிந்து அவளைக் கதறியழச் செய்த கார்நிறவண்ணன் (4). மின்னனைய

மெய்ப்பொருந்தல் மெல்லியற்காக இலங்கை வேந்தனின் பத்துத் தலைகளையும் பனங்காய்கள் போல் சிதறியோடச் செய்து அவனது இருபது தோள்களும் சின்னபின்னமாம் படி செய்து இலங்கை நகரையும் பொடி படச் செய்த சூரன் (5). அழகிய பெண் உருவங்கொண்டு நஞ்சு தீட்டிய முலையுடன் வந்த பூதனை பேய் வடிவத்துடன் மாயும்படியாக அவளது உயிரை உண்டவன்; இரட்டை மருத மரங்களை முறித்துத் தள்ளினவன்; சகடாசுரனைச் சாடியவன் (6). இளங்கன்று வடிவாக வந்த வத்சாசுரனைத் தூக்கி விளாமரத்தின்மீது ஆவேசித்திருந்த கபித்தாசுரன் மேல் எறிந்து இருவரையும் ஒரு சேர ஒழித்தவன்; இடைச்சியர் வீடுகளில் உறிகளில் சேமித்து வைத்திருந்த தயிர் வெண்ணெய் நெய்பால் முதலியவற்றைத் தன் திருவுள்ளம் குளிரும்படித் திருவமுது செய்தவன் (7). தீட்சணியமான திருவாழியால் நரகன் உயிர் தொலைத்த நாயகன்; பெரிய பிராட்டியாருக்கும் சிவபெருமானுக்கும் பகுதியாகக் கொடுத்த திருமேனியையுடையவன் (8). வானவர்களும் மாமுனிவர்களும் ஒருங்கு கூடிச் சிறந்த மலர்களைக் கொண்டு அருச்சிக்கப் பெற்ற எம்பெருமான் (9) சங்கம் சக்கரம் தண்டு முதலிய திவ்வியாயுதங்களை ஏந்திய தாமரைக் கண் நெடிய பிரான் அமர்ந்த நிலையில் காட்சி தருபவன் (10). அடுத்து, அரிமேய விண்ணகரத்தைச் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

14. **அரிமேய விண்ணகரம்:**[13] இத் தலத்து எம்பெருமானை திருமங்கையாழ்வார் ஒருவரே மங்களாசாசனம் செய்துள்ளார் (3. 10).

13. **அரிமேய விண்ணகரம்:** அடியவர்களின் பாபங்களைப் போக்குவதனால் 'ஹரி' எனபடுகின்ற எம்பெருமான் நித்திய வாசம் செய்யப் பெற்ற தலம். இத்திருப்பதி மணிமாடக் கோயிலிலிருந்து (இக்கட்டுரையில்-12வது) சுமார் ஒரு ஃபர்லாங்

**தலத்துச் சூழ்நிலை :** நாங்கூர்த் தலத்துச் சூழ் நிலையை ஆழ்வார் பிரசுரங்களில் காண முடிகின்றன. தாழைகளும் தாமரைகளும் செங்கழு நீர்ப் பூக்களும் தடாகங்கள்தோறும் மலிந்து கண்டவிடமெங்கும் விளக்கம் பெற்றதாய் ஆகாயத்தை அளாவிய சோலை களை உடையது(1). எம்பக்கம் நோக்கினாலும் புன்னை மரங்கள் காணப் பெறுகின்றன. இம் மரங்களிலுள்ள மொக்குகள் முத்துகள் போலவும் மலர்கள் பொன் போல வும் காட்சி அளிக்கின்றன. தேனைச் சொரியா நிற்கும் பலாமரங்கள் நிறைந்துள்ளன (2). மல்லிகை மலர்களும் செங்கழு நீர்ப் பூககளும், திரள் திரளாகப் பூத்த மலர் களையுடைய சுரபுன்னைகளும், பாக்குப் பாளைகளும் செண்பக மலர்களும் மணம் விசப்பெற்ற சோலைகளின் நடுவே கரும்பாலைகளின் புகை பரிமளிக்கப் பெற்றுள்ளது (4). எங்குப் பார்த்தாலும் வாத்திய ஒலிகளும், வண்டினங்களின் ஒலிகளும், வேதம் ஓதுவாரின் குரல் ஒலிகளும், மடவாரின் சிலம்புகளின் ஒலியும், கடல் ஒலிகயும் விளங்கப் பெற்றது. நாங்கூர் (5) செந்நெற் பயிர்களை அறுவடை செய்யுங்கால அவற்றைப் பிடிக் கின்ற பிடியில் தாமரைகளும் மீன்களும் சேர்ந்து பிடிபட்டு அறுக்கப் பெறுபூகால் அவற்றிலிருந்து உதிர்ந்த முத்துகள் வலைச்சியர்களால் வாரித் திரட்டப் பெறு கின்றன. நாங்கூர் அருகில் கடல் உள்ளதால் கடலலைகள் இயூகே வந்து கூடும். அவற்றுடன் முத்துகளும் வந்து

---

தொலைவிலுள்ளது. இது 'குடமாடு கூத்தர் கோயில்' என்ற திருப்பெயராலும் வழங்கி வரு கின்றது. எம்பெருமான்: குடமாடு; கூத்தன் வீற் றிருக்கும் திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திரு முக மண்டலம். உற்சவர். சதுர புஜகோபாலன். தாயார்: அமிர்த கடவல்லி. திருவாங்கூர் திருப்ப தியில் மூன்றாவதாகும். பெரி. திரு. 3 10 (பதிகம்) மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ. நா. தி. (2) கட்டுரை-14 காண்க.

சேரும். அவை மீன்களின் வயிற்றில் புகும்; அவை அறுவடையில் வெளிப்படுகின்றன. (6). புனல் அலையெறிந்து துறைகள்தோறும் முத்துகள் கிடக்குமிடம் (7). சோலைகளில் பறவைகளின் ஒலிகளும் அப்போதலர்ந்த செவ்விய பூக்களில் வண்டுகள் தேனைப் பருகினகளிப்புக்குப் போக்கு வீடாகச் செய்யும் இன்னோசைகளும் கேட்கப் பெறுகின்றன (8). காவிரியாறு சந்தனமரங்களையும், அகில் மரங்களையும் நவரத்தினங்களையும் தள்ளிக்கொண்டு வந்து சோலைகளிலும் வயல்களிலும் அவற்றிற்குச் செழிப்பினை உண்டாக்குகின்றது (9).

**நகர்வளம்:** ஆழ்வாரின் நற்றமிழ்ப் பாசுரத்தில் நகர் வளத்தையும் காண முடிகின்றது. மிக்க புகழ் படைத்த வேதியர்கள் வாழ்கின்ற ஊர் திருநாங்கூர் (1). இவர்கள் சாத்திரங்களை நன்கு கற்றவர்கள்; ஆன்ம குணம் நிறைந்தவர்கள் (2). அழகிய மகளிர் நிறைந்து வாழுமிடம் (3). மனத்தாலும் வாக்காலும் பகவானது மந்திரங்களையும், நான்மறைகளையும், வேதாங்கங்களையும், மற்றுமுள்ள கலைகளையும் கரைத்துக் குடித்து ஆசாரம் நிறைந்த வைதிகர்கள் வாழும் இடம் (7). கொடிகள் பொதிந்த மதில்களும் மாட மாளிகைகளும், கோபுரங்களும், நெருங்கிய மணிமயமான மண்டபங்களும், அறச்சாலைகளும் கும்பல் கும்பலாக அந்தணர்களும் நிறைந்திருக்கும் ஊர் (8). பரம வைதிகர்கள் சிறந்த மலர்களைக் கொண்டு எம்பெருமான் திருவடிகளே சரணம் எனக் கூறி அருச்சிக்கும் அந்தணர்கள் வாழுமிடம் (9). வேதம் ஓதுவதில் நான்முகனையும், அழகில் முருகனையும் ஒத்திருக்கும் அந்தணர்கள் நிறைந்திருக்கும் ஊர் (10).

**தலத்து எம்பெருமான்:** இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பெருமைகளில் ஆழ்வார் ஆழங்கால் பட்டு அநுபவித்ததைக் காண்போம். குற்றங் குறைகட்குக்

கொள்கலனாக இருப்பவர்கள் அஞ்சிக்கிடவாமல் சேதநர்கள் எவ்வளவு அபராதங்கள் புரிந்திருந்தாலும் அவற்றை நற்றமாக எடுத்துரைக்க வல்ல பெரிய பிராட்டியாரும் அவற்றைப் பொறுப்பிக்க வல்ல பூமிப்பிராட்டியாரும் ஒரு நொடிப் பொழுதும் எம்பெருமானை விட்டுப் பிரியாமல் இருக்கும் இருப்பைப் பேசுகின்றார் ஆழ்வார்.

திருமடந்தை மண்மடந்தை
இருபாலும் திகழத்
தீவினைகள் போய்அகல
அடியவர்க் கென்றும்
அருள் நடந்து இவ்வேழுலகத்
தவர்பணிய வானோர்
அமர்ந்தேத்த இருந்தஇடம் (1)

[திருமடந்தை - பெரிய பிராட்டியார்; மண் மடந்தை - பூமிப்பிராட்டியார்; தீவினைகள் - பாவங்கள்; அருள் நடந்து - கிருபை பண்ணி]

என்பது ஆழ்வார் வாக்கு. இங்கு சந்நிதி பண்ணியுள்ள எம்பெருமான் போர் புரிந்த இடங்களிலெல்லாம் வெற்றியே கண்டுவந்த நரகாசுரனைத் தொலைத்த திருவாழியையுடையவன்; அமரர்கள் பொருட்டு அருள் கூர்ந்து அலைகடல் கடைந்து அமுதம் எடுத்தருளியவன்; இரத்தினம்போல் சிறந்தவன்; ஆழ்வாருக்கு அமுதம் போன்றவன் (2). உம்பரும் இவ்வேழ் உலகும் ஏழ்கடலும் எல்லாம் உண்ட பிரான்; இடையர்கள் கண்ணால் கண்டு களிப்படையும்படி குவலயாபீடத்தின் கொம்புகளைப் பிடுங்கி அவற்றால் அந்த யானையையும் பாகனையும் கொன்றொழித்துப் பின்னர் கம்சனையும் குடுமியைப் பிடித்திழுத்து மஞ்சத்தினின்றும் கீழே தள்ளிக் கிரீடம் சிதற அடித்துக் கொன்றொழித்தவன் (3). நரசிம்ம வடிவங்கொண்டு இரணியன் மார்பைத் தன் வள்ளுகிரால்

பிளந்து கொன்று அவன் மகன் பிரகலாதன் திறத்துப் பேரருள் செய்த பெருமான் (4). கண்டவர்கள் மனம் களிக்கும்படி மாவலியின் யாக பூமியில் வாமன மாணியாகச் சென்று மூவடி மண் இரந்து பெற்று மேலுலகங்களையும் மற்றும் எல்லாவற்றையும் அளந்து கொண்ட எம்பெருமான் (5). வாள் நெடுங்கண் மலர்க் கூந்தல் மைதிலிக்காக இலங்கை மன்னன் இராவணனைக் கொல்ல சிலை வளைத்த தயரதன் சேய்; ஆழ்வாரின் ஒப்பற்ற இரட்சகன். நித்திய சூரிகளின் தலைவன் (6). தீ மனத்துக் கம்சனின் கபடச் செய்கைக்கிணங்கக் கெட்ட எண்ணத்துடன் திரிந்து கொண்டிருந்த தேனுகனையும் நஞ்சு தீட்டிய முலையுடன் வந்த பூதனையையும் முடித்தவன். காமனைப் பயந்த[14] கரிய திருமேனியுடைய அம்மான் (7). கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை; காமரு சீர்முகில் வண்ணன். இந்திரன் பசிக் கோபத்தினால் ஏழு நாள் விடாது கல்மாரி பொழிந்தபோது கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துக் கன்றுகளையும் இடையர்களையும் காத்தருளின் கோமான்; இடைச் சாதியின் மெய்ப்பாடு தோன்றக் குடக் கூத்தாடியவன்; திருமங்கையாழ்வார் இத்தலத்து எம்பெருமானுக்குக் 'குடமாடு கூத்தன்' என்ற திருநாமம் சூட்டுகின்றார் (8). பேய் வடிவை மறைத்துத் தாய் வடிவுடன் நஞ்சு தீட்டிய முலையோடு வந்த பூதனையின் பாலை அவள் உயிரோடு அமுது செய்தவன்; அந்த நஞ்சுக்கு மாற்றாகத் தயிர் வெண்ணெய் முதலியவற்றை வாரி உண்டவன்; கம்சனுடைய உயிர் குடித்தவன். உலகம் உண்ட பெருவாயன் (9). வலிமிக்க ஏழு காளைகளின் வலியடக்கி பின்னைப் பிராட்டியின் செவ்விய தோளைப் புணர்ந்துகந்த பெருமான் (10). இத்தகைய பெருமை வாய்ந்த பெரு

14. கண்ணன் உருக்குமிணிப் பிராட்டியிடம் மன்மதன் அம்சமாகப் பிரத்தியும்னனைப் பிறப்பித்தவன்.

மான்தான் அரிமேய விண்ணகரத்தில் எழுந்தருளியிருப் பவன். அடுத்து, 'திருவண்புருடோத்தமம்' என்ற திவ்விய தேசத்தைச் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

**15. திருவண் புருடோத்தமம்**[15] : திருமங்கையாழ் வார் மட்டிலும் இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளார் (4. 2), பெரும்பாலும் பாசுரங்களின் முன்னிரண்டு அடிகளில் எம்பெருமான் பற்றிய செய்தி களும் பன்னிரண்டு அடிகளில் நாங்கூரின் நீர்வளம், நில வளம், சோலை வாய்ப்பு இவைபற்றிய செய்திகளும் அடங்கியுள்ளன.

**தலச் சூழ்நிலை:** திருநாங்கூர் சோலைகளால் சூழப் பெற்ற இடம்.

செம்ப லாநிரை செண்பகம் மாதவி
 சூதகம் வாழைகள்சூழ்
வம்பு லாம்கமு கோங்கிய நாங்கூர்
 வண்புரு டோத்தமமே. (1).

[நிரை-வரிசை; மாதவி-குருக்கத்தி; சூதகம்-மாம ரம்; வம்பு-வாசனை; கமுகு-பாக்கு]

என்பது முதற் பாசுரம் பலாமரங்களின் வரிசைகளும்,

15. **திருவண்புருடோத்தமம் :** இத்திருத்தலம் அண்ணன் கோயிலிலிருந்து சுமார் மூன்று கி. மீ. தொலைவிலும், சீகாழி இருப்பூர்தி நிலையத்தி லிருந்து தென் கிழக்குத் திசையில் சுமார் எட்டு கி. மீ. தொலைவிலும் உள்ளது. **எம்பெருமான்:** புருடோத்தமன்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** புருடோத்தம நாயகி. தாயாருக்குத் தனிப் பெயர் ஏனோ இல்லை. Mrs. and Mr. Purnshothaman என்று திருமண அழைப்பிதழ்களில் போடும் மரபையொட்டித் தன் பெயரை மறைத்துக்

செண்பக மரங்களின் கூட்டமும் நிறைந்துள்ளன இச் சோலைகளில்; மாமரங்களும் வாழை மரங்களும் செறிந் துள்ளன(1). சோலைகளில் கூத்தும் பாட்டும் நடைபெற்ற வண்ணம் உள்ளது. மேகமுழக்கம் கேட்கப் பெறுங்கால் மயில்கள் தம் தோகைகளை விரித்துக் கூத்தாடுகின்றன; மயில்களின் நடனத்திற்கேற்ப வண்டுகள் இசையொலியை எழுப்புகின்றன (3). பல இடங்களில் கருப்பஞ் சோலை கள் காணப்பெறுகின்றன: எம்மருங்கும் கழனிகளில் செந் நெற் பயிர்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. நடைபாதையின் அருகிலுள்ள பொய்கைகள் சோலைகள் சூழ்ந்து காணப் பெறுகில்றன (4). திருநாங்கூருக்கும் ஊரைச் சூழ்ந்துள்ள வயலுக்கும் வேறுபாடு காணமுடியாத நிலை. வயலில் வளர்ந்துள்ள கோங்கு மரங்களின் அரும்புகளை நோக்கின் அவை அவ்வூர்ப் பெண்களின் கொங்கைகள்போல் தோற் றம் அளிக்கின்றன. அங்கு மலர்ந்திருக்கும் அரக்கலாம்பல் மலர்களை நோக்கின்.அவை அவ்வூர் மகளிரின் செவ்விதழ் களை நினைவூட்டுகின்றன. செவ்வி பெற மலர்ந்த செந் தாமரைப் பூக்களை நோக்கின், அவை அவ்வூர் மங்கை யரின் முகங்களாகத் தோற்றம் அளிக்கின்றன (6). பாக்குச் சோலைகளின் நடுவே தென்னை மரங்கள் ஓங்கி வளர்ந் துள்ளன; அவற்றினின்றும் முதிர்ந்து பெருத்த காய்கள் இற்றுக் குளங்களில் விழுகின்றன; இவற்றின் பேரொலி யைக் கேட்ட மீன்கள் தங்களை இரையாக்கிக் கொள் வதற்கு ஏதோ ஒன்று நீரில் குதித்துவிட்டது என்று வேறி டம் தேடித் துள்ளித் தாவுகின்றன. எம்பெருமானிடத் தில் காரணமின்றிப் பயந்து கலங்கும் பரிவுடையவர்களின்

கொண்டனர் போலும். இங்குள்ள உற்சவர் பேரெழில் மிக்கவர். திருநாங்கூர்த் திருப்பதி யில் இஃது ஐந்தாவதாகும். பெரி. திரு. 4. 2 (பதிகம்). மேலும் விவரம் வேண்டுவோர் **சோ. நா. தி.** (2) கட்டுரை 9 காண்க.

நிலைக்கு இது போலியாகும் என்று பணிப்பர். பெரியோர் (8). பெண்குரங்கு உட்கார்ந்த நிலையில் வாழைக் கனிகளை நுகர்ந்து தனது குட்டியை அணைத்துக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்று போய் மாமரக் கிளைகளில் தங்கியிருக்கின்றது (9).

**நாங்கூர்வளம்:** நாங்கூர் நகர்பற்றிய குறிப்புகளும் ஆழ்வார் பாசுரங்களில் காணப்பெறுகின்றன. 'தில்லை மூவாயிரம்', 'நாங்கை நாலாயிரம்' என்ற வழக்கு உண்டல்லவா? தில்லையில் மூவாயிரம் தீட்சிதர்கள் இன்று இராவிடினும் தீட்சிதர்கள் கூட்டம் உள்ளது. நாங்கையில் நாலாயிரம் வைணவர்கள் இருந்திருக்க வேண்டும்; ஆனால் இன்று அத்திபூத்த மாதிரி ஏதோ ஒன்றிரண்டு குடும்பங்கள் தாம் உள்ளன. அவர்களும் வறுமையால் வாடி மிகவும் மெலிந்துள்ளனர்.

> நல்ல வந்தழல் மூன்றுநாள்
> வேதம் ஐவேள்வியோடு ஆறங்கம்
> வல்ல அந்தணர் மல்கிய
> நாங்கூர் (2).

> [தழல்-நெருப்பு; மூன்று-மூன்று அக்கினி; வேள்வி-யாகம்; வல்ல-பயின்ற; மல்கிய-நிறைந்திருக்கப்பெற்ற]

என்று நாங்கையில் வாழ்ந்த (நாலாயிரம்) வைணவர்களைக் குறிப்பிடுவர். இங்கு வாழ்ந்த அந்தணர்கள் மூன்று அக்கினிகளை வளர்த்தவர்கள்; நான்கு வேதங்களைக் கரைத்துக் குடித்தவர்கள்; ஐந்து வேள்விகளைச் செய்கின்றவர்கள்; வேதத்தின் அங்கங்கள் ஆறையும் தெளிவாக அறிந்தவர்கள். இத்தகையோர் இங்கு அதிகமாக வாழ்ந்திருந்தனர். இங்குள்ள மாடமாளிகைகள் விண்ணைத் தழுவியிருந்தன (கற்பனையில் கூறுவது); இந்த மாளிகை

யில் கட்டியிருந்த கொடிகள் விண்ணைத் தழுவி சூரியனு டைய கதிர்களை மறைத்து நிழல் செய்கின்றன (5). இள மகளிர் நடனமாடுங்கால் அவர்கள் கால்களில் அணிந் திருக்கும் தண்டைச் சிலம்பின் ஒலியும் வேறு சிலர் பந்த டிக்குங்கால் அவர்கள் கைகளில் அணிந்திருக்கும் வளை களின் ஓசையும் எம்மருங்கும் கேட்கப் பெறும் (7).

**எழுந்தருளியிருக்கும் இறைவன்:** இங்கு எழுந்த ருளியிருக்கும் இறைவன் பெரு வள்ளல்; இவனது திரு நாமம் புருடோத்தமன் என்பது. வள்ளன்மை மிக்க எம் பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதலால் இத்திருத் தலமும் **வண்புருடோத்தமம்** என்ற திருநாமம் பெற்றது. இந்த எம்பெருமானே பெரிய கடலில் சேது கட்டி இலங் கையை அடைந்து அந்நகரின் தலைவனான இராவணன் தலைகளை அறுத்துத் தள்ளினவன்: அவன் தம்பி வீடண னுக்கும் முடி சூட்டியவன் (1). யமுனை நதிக்கரையில்,

பல்ல வந்திகழ் பூங்கடம் பேறிஅக்
காளி யன்பண அரங்கில்
ஒல்லை வந்துறப் பாய்ந்துஅரு நடஞ்செய்த
உம்பர் கோனே (2).

[பல்லவம்-தளிர்கள்; பூகடம்பு-பூத்த கடம்பு; பணம்-படம்; ஒல்லை-விரைவாக; உம்பர் கோன்-தேவாதி தேவன்]

ஈண்டு எழுந்தருளியிருப்பவன். கண்ணன் ஏறிய கடப்ப மரம் காளியன் நஞ்சாகிய நெருப்பினால் கொளுத்தப் பெற்று இலை, பூ, காய், கனி, முதலியவை ஒன்றுமின்றி மொட்டைமரமாக இருந்தாலும், கண்ணபிரான் அதன் மீது ஏறுங்கால் அவன் திருவடி பட்ட மாத்திரத்தில் 'பல்லவந்திகழ் பூங்கடம்பாக' மாறிற்று என்பது ஆழ் வார் திருவுள்ளம் என்பதையும் சிந்திக்க வைக்கின்றது.

(2). தேவேந்திரனுக்குப் பலியிட வேண்டுமென்று இடையர்கள் சமைத்த சோற்றை முழுவதும் திருவமுது செய்தவன்; கோவர்த்தன மலையைக் குடையாகக் கவித்து ஆநிரைகளைக் கல் மாரியினின்றும் காத்தவன் (3). குவலயாபீடம் என்ற யானையின் கொம்புகளைப் பறித்து அந்த யானையினையும் அதன் பாகனையும் கொன்றொழித்தவன்; அரண்மனையினுள் புகுந்து சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களை ஒருசேர முடித்தவன்; அதன் பிறகு கம்சனை அரியணையின் மீதிருந்து தள்ளி அவனையும் உதைத்துத் தள்ளி உயிர் குடித்தவன் (4). சக்கரத்தில் ஆவேசித்துத் தன்னைக் கொல்லக் காத்திருந்த சகடாசுரனை அச்சக்கரத்தை உந்தித் தள்ளி அவனை வானுலகிற்கு அனுப்பிய கோமான்; பாணாசுரனுக்குத் துணையாக வந்த உருத்திரனை அவன் சேனைகளோடும் சுற்றத்தாரோடும் தோற்றோடச் செய்து அவன் ஆயிரந் தோள்களையும் துணித்தொழித்த பெருமான் (5).

மாவலியிடம் மூவடிமண் நீரேற்றுப் பெற்று திருக்கையில் நீர் விழுந்தவுடன் ஓங்கி உலகளந்த உத்தமன்; இவன் திருவடி நான்முகன் உலகளவும் செல்லும்போது நான்முகன் அத்திருவடியை மலரிட்டு வணங்கித் துதிக்கவும் அத்திருவடியினின்றும் கங்கை நீர் பெருகும்படியாகவும் செய்த வித்தகன் (6). அச்சம் என்பதை ஒருநாளும் கனவிலும் கண்டறியாத பெருமிடுக்கனான இரணியனின் நெஞ்சு உறையும்படியாக அவனது மார்பை இரு பிளவாகப் பிளந்து குருதி வெள்ளத்தைப் பெருக்கின நரசிம்மனும் இவனே; கம்சனது ஏவலினால் குதிரை வடிவம் கொண்டு தன்னைக் கொல்லும் பொருட்டு வந்த கேசி என்னும் அசுரனைக் கொன்றொழித்தவனும் இந்த எம்பெருமானே (7). சிவனது சாபந் தீரப் பிட்சையளித்த பெருமான்; நம்முடைய பாவங்களையும் தொலைக்க வேண்டியே ஈண்டு எழுந்தருளியிருப்பவன்

(8). இந்துவார்சடை ஈசனைப் பயந்தவன் நான்முகன்; அந்த நான்முகனையே தனது திருநாபிக் கமலத்தில் உண்டாக்கின பெருமான் (9). இங்ஙனம் கிருஷ்ணாவ தாரச் சேஷ்டிதங்களையும் இராமாவதார தீரச் செயல் களையும் நரசிம்மாவதாரப் பெருமையினையும் வாமன —திரிவிக்கிரமாவதார மகிமையினையும் ஒரு சேர அநுபவிக்கும் ஆழ்வார் வைணவ சமயத்தின் கடவுள் தத்துவத்தையே விளக்கி விடுகின்றார். எல்லா நிலை எம்பெருமான்களும் அர்ச்சை நிலையில் புருடோத்த மனாக எழுந்தருளியிருப்பதை எடுத்துக் காட்டுகின்றார். அடுத்து, திருச்செம்பொன் செய்கோயிலை மங்களா சாசனம் செய்யத் திருவுள்ளங் கொள்ளுகின்றார் ஆழ்வார்.

**16. திருச்செம்பொன் செய்கோயில்:**[16] நாங்கூர் திருப்பதிகளுள் நட்ட நடுவே இருப்பதுபோல், திரு மங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்த திருமொழியும் (4, 3). நாங்கூர் பதிகங்கள் பதினொன்றில் நன்னடுவே

---

16. **திருசெம்பொன் செய்கோயில் :** இது திருநாங்கூர் திருப்பதிகளில் ஆறாவதாகும். இதுவும் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து கீழ்த்திசையில் சுமார் எட்டு கி. மீ. தொலைவிலுள்ளது. இந்தத் திருப்பதி திருநாங்கூரில் **நட்ட நடுவில் உள்ளது.** இதனை இத்திருப்பதிகப் பாசுரங்களில் (4.3:8) பாசுரந் தவிர) 'நாங்கை நன்னடுவுள் செம் பொன் செய்கோயில்' என்ற சொற்றொடரில் குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காணலாம். **எம்பெருமான் :** பேரருளாளன் (ஆழ்மார் குட்டியபெயர்); நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். உற்சவர்—செம் பொன் அரங்கநாதன். **தாயார்:** அல்லிமாமலர் நாச்சியார். பெரி. திரு. 4.3 (பதிகம்) மேலும் விளக்கம் வேண்டுவோர் **சோ. நா. தி.** (2) கட்டுரை 13 காண்க.

அமைந்திருக்கும் அழகும் போற்றத் தக்கது. **'நந்தா விளக்கே'** (3.8) என்று தொடங்கி **'கவள யானை கொம் பொசித்த'** (4.8) என்ற திருமொழியளவாகப் பதினொரு திருமொழிகள் திருநாங்கூர்த் திருப்பதிகளை மங்களா சாசனம் செய்வனவாகும். இவற்றுள் இத்திரு மொழி (4.3) நன்னடுவே அமைந்திருப்பதைக் காணலாம்.

**திருப்பதியின் சூழ்நிலை** : இத்திருப்பதியும் சோலைகள் நிறைந்த சூழ்நிலையில் அமைந்துள்ளது. பாசுரங்களில் இந்நிலை ஏனைய திருமொழிப் பாசுரங்கள் போல் விரிவாகக் குறிப்பிடப் பெறாவிடினும் 'மலர்ப் பொழில்சூழ் காங்கை' (5) 'தேனமர் சோலை நாங்கை' (10) என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இங்ஙனமே திருநாங்கூர் மாடமாளிகை நிறைந்த ஊர் என்பதை 'சீரணி மாட நாங்கை' (1) என்று ஒரே பாசுரம் குறிப்பிடு கின்றது. ஏனைய பாசுரங்களில் 'சிறப்புடைமறையோர்' (2), 'திடமொழி மறையோர்' (3), 'திசைமுகன் அனை யோர்' (4), 'செல்வநான் மறையோர்' (6), 'செஞ்சொல் நான்மறையோர்' (7), 'தெளிந்த நான்மறையோர்' (8) என்றும் வைதிக அந்தணர்களின் பெருமை பேசப் பெறுகின்றது.

**தலத்து எம்பெருமான்** : இத்தலத்து எம்பெரு மானைத் திருமங்கையாழ்வார் **'பேரருளாளன்'** என்று திருநாமம் சூட்டுகின்றார், இவர் 'மலர்மகளோடும் மண்மகளோடும்' நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிப்பதையும் குறிப்பிடுகின்றார், (1). ஆழ்வார் இவரை,

பிறப்பொடு மூப்பொன்று இல்லவன் தன்னை
　　பேதியா இன்பவெள் ளத்தை
இறப்பெதிர் காலம் கழிவும் ஆனானை'
　　ஏழிசை இன்சுவை தன்னை (2)
　　[பேதியா—விகாரமடையாத]

என்று குறிப்பிடுவர். இங்கு எழுந்தருளியிருக்கும் பிறப்பில் பல்பிறவிப் பெருமான் மூப்பின்றி என்றும் இளையவனா யிருப்பவன்; பேதியா இன்ப வெள்ளத்தன்; எக்காலத்தும் நிலை பெற்றிருப்பவன்; ஏழிசைகளிலும் உண்டாகும் சுவையே வடிவு கொண்டாற் போன்றவன்; மறைகளில் கூறப் பெறுபவன்; தேவாதி தேவன் (2). பஞ்சபூதங்கள், இருசுடர், பூமியிலுள்ள உயிர்கள், உயிரற்ற பொருள்கள் இவற்றிற்கு அந்தர்யாமியாக இருப்பவன்; கடல் நிற வண்ணன் (3) வாமன மாணியாக மாவலியின் யாக பூமியில் மூவடிமண் இரந்து பெற்று உலகளந்தவன்; நித்திய சூரிகள் அடியிணை வணங்க அலையெறி பாற் கடலில் துயிலும் பரமன்; அனைவரையும் காப்பதற்கு அறிகுறியாக உயர்மணி மகுடம் சூடி நிற்பவன் (4). சாதுக்களை நலியும் அரக்கர்களை அழிப்பதற்காகத் தாய்போல் கருணை காட்டும் சக்கரவர்த்தித் திருமகனாக அவதரித்தவன் (5). மலைகளைக் கொண்டு அணைகட்டி மலையின்மீது அரண் அமைத்த இலங்கை நகர் பொடிபட அம்பு தொட்டவன் (6). குவலயாபீடம் என்னும் யானையை அழித்தவன்; கம்சன் பூசையில் வைத்திருந்த வில்லை முறித்தவன்; மல்லர்களை அடர்த்தவன்; கஞ்சனைக் காய்ந்தவன் (7). வாணனின் ஆயிரம் தோள்களும் அறுந்து விழும்படி திருவாழியைச் செலுத்தியவன்; திருவேங்கடமலையில் சேவை சாதிக்கும் வேங்கட கிருஷ்ணன் (8). மற்றும்.

'களங்கனி வண்ணா! கண்ணனே என்றன்
 கார்முகி லேயென நினைந்திட்டு
உளங்கனிந் திருக்கும் அடியவர் தங்கள்
 உள்ளத்து ஊறிய தேன் (9)

[கார்முகில் — காளமேகன்; கனிந்திருத்தல் பரிபக்குவமாயிருத்தல்]

போல் இனியனாயிருப்பவன் (9). இத்தகைய எம்பெருமானை 'வணங்கி அல்லல் தீர்ந்தேன்' என்கின்றார் ஆழ்வார். அடுத்து, ஆழ்வார் திருத்தெற்றியம்பலம் சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

**17. திருத்தெற்றியம்பலம் :** [17] திருமங்கையாழ்வார் மட்டிலுமே இத்திருத்தலத்து எம்பெருமானை ஒரு பதிகத்தால் (4.4) மங்களா சாசனம் செய்துள்ளார். இவர் பாசுரங்களில் தலத்தின் சோலைவளம், நகர்வளம், எம்பெருமானின் பெருமை இவற்றைக் கண்டு அநுபவிக்கலாம்.

**தலத்துவளம் :** தலத்துவளத்தை ஆழ்வார்,

*நூற்றிதழ்கொள் அரவிந்தம்*
*நுழைந்த பள்ளத்(து)*
*இளங்கமுகின் முதுபாளை*
*பகுவாய் நண்டின்*
*சேற்றளையில் வெண்முத்தம்*
*சிந்து நாங்கூர்த்*
*திருத்தெற்றி அம்பலம் (1)*

[கமுகு — பாக்கு; பகுவாய் — விரிந்த வாய்;. அளை — வளை]

---

17. **திருத்தெற்றியம்பலம் :** இது நாங்கூர்த் திருப்பதிகளில் ஏழாவது. இத்தலமும் சீகாழி இருப்பூர்தி நிலையத்திலிருந்து கீழ்த்திசையில் சுமார் எட்டு கி. மீ. தொலைவில் உள்ளது. **எம்பெருமான் :** செங்கண்மால்; சயயத்திருக்கோலம் (புயங்க சயனம்); கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். **தாயார் :** செங்கமலவல்லி நாச்சியார். பெரி. திரு. 4 4 (பதிகம்) மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ. நா. தி. -(2) கட்டுரை-12 காண்க.

என்று கூறுவார். வயலிலுள்ள நண்டுகள் உணவிற் காகத் தாமரைப்பூவில் சென்று புகுவது உண்டு; அங்ஙனம் போயிருக்கும்போது பாக்குப் பாளைகளினின்றும் உதிரும் வெண்முத்துகள் இறைக்கப்பட்டு நண்டின் வளை மூடப் பெறுகின்றது என்று கூறுகிறார் ஆழ்வார். திருநாங்கூர் வயல்களில் நெற்பயிர்கள் செழித்து வளர்கின்றன; அந்த நெற்பயிர்களின்மேல் கருநெய்தற்பூக்கள் வரிசை வரிசை யாய்ப் படர்ந்துள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வண்டுகளின் ஆரவாரமும், பூக்கொய்தற்பொருட்டுச் செல்லும் மங்கையரின் பாதச் சிலம்புகளின் ஒலியும் சேர்ந்து தொனிக்கின்றன (2). திருநாங்கூரைச் சுற்றிலும் தென்னை மரங்களும் மாமரங்களும் செறிந்து கிடக் கின்றன; ஓங்கியிருக்கும் தென்னை மரங்களினின்று தேங்காய் நெற்றுகள் மாமரங்களின்மீது வீழ்கின்றன; அந்த அதிர்ச்சியினால் மாம்பழங்கள் உதிர்ந்து வீழ் கின்றன; அவற்றையெல்லாம் திரட்டி உருட்டிக் கொண்டும், மற்றும் பலவகையான மலர்களை அடித்துக் கொண்டும் பெருவெள்ளமாகப் பாய்ந்துவிடும் காவிரி யாற்றுக் கால்வாய்களையுடையது திருநாங்கூர் (3). அழகு பொருந்திய மலர்கள் மலிந்துள்ள சோலைகள் விண்ணை முட்டுமளவும் பரவியுள்ளது; அவை எழில் மதியை அசைய வொட்டாமல் தடுத்து நிறுத்துகின்றன (4). நறுமணம் கமழ்கின்ற மலர்களையணிந்த கூந்தலை யுடைய மகளிர்நீரில் படிந்து நீராடுகையில் தங்கள் கொங்கைத் தடங்களில் அணிந்திருந்த குங்குமக் குழம்பு களைத் தேய்த்துக் கழுவுவதனால் நீரோட்டம் செந்நிறம் அடைந்து வெண்மணல் நிலங்களில் தவழ்கின்றது (7). திருமணிக் கூடத்துத் திரு மொழியிலும்,

கொவ்வைவாய் மகளிர் கொங்கைக்
குங்குமம் தழுவிப் போந்த
தெய்வநீர் கமழும் நாங்கூர் (4.5:2)

[கொவ்வை — கொவ்வைக் கனி போன்ற]

என்று இதே கருத்தை கூறியிருப்பது ஈண்டு உளங் கொள்ளத் தக்கது.

**நகர்வளம் :** நகர்வளத்தையும் ஆழ்வார் பாசுரங்களால் அறிய முடிகின்றது. திருநாங்கூரிலுள்ள மணி மாடங்கள் மதிமண்டலத்தளவும் ஓங்கியுள்ளன (4). நகரில் வீதிதோறும் மலை மலையான மாடங்கள் வரிசை வரிசையாக இடை விடாது ஒன்றோடொன்று சேர்ந்து நெருங்கியுள்ளன; இத்தகைய வீதிகளில் மதுர மொழி களையுடைய மகளிர் தம்புருவ நெருப்பினால் ஆடவர் களின் மனத்தைக் கவர்ந்து கொள்ளுகின்றனர் (5).

மான்போலும் மென்நோக்கின்
செய்ய வாயார்
மரகதம்போல் மடக்கிளியைக்
கைமேல் கொண்டு
தேன்போலும் மென்மழலைக்
பயிற்று (6)

[செய்ய-சிவந்த; மரகதம்-பச்சை நிறம்)

விக்கின்றனர். ''நாங்கூர்த் தெருக்கள் தோறும் நான் மறைகள், ஆறு அங்கங்கள், இதிகாச புராணங்கள் இவற்றின் முழக்கம் எங்கும் கேட்கப் பெறுகின்றன (8). நான்கு வேதங்களையும் விடாமல் ஓதிக் கொண்டுள்ளனர் அந்தணர்கள் (9),

**எம்பெருமான் :** திருத்தெற்றியம்பலத்து எழுந்தருளி யிருக்கும் செங்கண்மால் எப்படிப்பட்டவன்? திருத்தெற்றி யம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் செங்கண்மால் (செந் தாமரைக்கண்ணன்) மண்ணின் பாரம் நீங்க வடமதுரை யில் பிறந்தவன்; கஜேந்திரன் என்ற யானையைக் காத்தவன் (1). முன்பு கம்சனால் ஏவப்பெற்றுப் பேய்

வடிவை மறைத்துத் தாய் வடிவு கொண்டு நஞ்சு தீற்றிய முலை கொடுக்க வந்த பூதனையின் உயிர் குடித்தவன் (2). திருவாய்ப்பாடியிலுள்ள சிறுகுடில்களில் தந்திரமாக நுழைந்து வெண்ணெயை வாரியுண்பதும்,

> மச்சொடு மாளிகை ஏறி
> மாதர்கள் தம்இடம் புக்கு
> கச்சொடு பட்டைக் கிழித்து
> காம்பு துகில்அவை கீறி
> நிச்சலும் தீமைகள்[18]

> [மச்சு — நடுநிலை; மாளிகை — மேல்நிலை; கச்சு — முலைக்கச்சு; பட்டு — பட்டை; காம்பு துகில் — கரைகட்டின சேலை; கீறி — கிழித்து; நிச்சலும் — நாடோறும்]

என்று பெரியாழ்வார் கூறுவதுபோல் மகளிரிடத்தில் சில தீம்புகளைச் செய்வதுமாய் இங்ஙனம் திருவாய்ப் பாடி முழுவதும் நலிவுபடுத்திய கண்ணனே இத்திருத் தலத்தில் எழுந்தருளியிருப்பவன் (3). முன்பொருகால் நப்பின்னைப் பிராட்டியைத் திருமணம் புரிவதற்குக் கன்யாசுல்கமாக வைக்கப் பெற்றிருந்த ஏழு காளைகளை அடக்கி அப்பிராட்டியை மணம் புரிந்தவன் (4). பெரிய பிராட்டியாரோடும் பின்னைப் பிராட்டியாரோடும் நித்தமும் கலவி புரிந்தும் இளமை மாறாத பெருமான் (5). 'இராமன் என்ற ஒரு சிறு பயல் பூமியை எல்லாம் ஆள்பவனாக நினைத்து அகங்காரப்படுகின்றான்; அதை அறிந்தும் அவனைத் தண்டியாமல் பொறுத்திருப்பான் அரக்கர்கட்குத் தலைவனாவனோ?' என்று கிளர்ந் தெழுந்த இராவணனது மலைபோன்ற இருபது தோள் களையும் ஒரே சமயத்தில் அறுத்தொழித்த தனி வீரன் (6). மாணி நிலைக்கு உரிய கோலத்துடன் வாமன

18. பெரியாழ் திரு 2.7:3

உருவம் கொண்டு மாவலியின் யாகபூமிக்குச் சென்று பூமிதானம் பெற்ற பெருமான் (7). ஆழ்வாரின் வராக அவதார ஈடுபாடு மிகவும் அற்புதமானது.

சிலம்பினிடைச் சிறுபரல்போல்
பெரிய மேரு
திருக்குளம்பில் கணகணப்ப
திருவா காரம்
குலுங்கநில மடந்தைதனை
இடந்து புல்கிக்
கோட்டிடைவைத தருளியஎம்
கோமான் (8)

[சிலம்பின் இடை — தண்டைச் சிலம்பின் நடுவில்; பரல் — பருக்கைக் கல்; திருக்குளம்பு — அழகிய குளம்பு; திரு — இலக்குமி; ஆகாரம் — உடம்பு; நிலமடந்தை — பூமிப்பிராட்டி; இடந்து — கோட்டால் குத்தி எடுத்து; புல்கி — தழுவி]

என்று கூறுவர் ஆழ்வார். இதில் வராக அவதாரமாகிய பேருருவத்தைக் காட்டுகின்றார். இந்தக் கோல வராகத்தின் திருக்குளம்பில் மேருமலை தண்டைச் சிலம்பின் நடுவிலிட்ட பருக்கைக் கல் போன்று கணகணவென்று ஒலிக்குமாம்; திருமார்பில் பிராட்டியிருக்கும் இருப்பு குலுங்குமாம்; இந்த நிலையில் அண்டபித்தியில் சார்ந்து கிடந்த பூமிப் பிராட்டியைக் கோட்டால் குத்தி எடுத்துத் தழுவிக் கொண்டு கோரப் பல்லின்மீது நிலை"நிறுத்திக் கொண்ட கோமான் (8). எல்லா இடங்களையும் கடந்து எட்டுத் திக்குகளிலும் எல்லாம் பூமியிலும் அண்டத்திலும் பரவிக் கீழ்வெள்ளம் கிளம்பிக் கடல் பெருகும்படியான பிரளயப் பெருவெள்ளத்தை முன்பொருகால்திருவயிற்றில் அடக்கிக் கொண்டவன் (9). இத்தகைய பெரும் புகழ்

வாய்ந்த எம்பெருமானே திருத்தெற்றியம்பலத்தில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருப்பவன்.

குறிப்பு : நாங்கூர் வடமொழியில் **நாகபுரி** என வழங்கும். ஆண்டு தோறும் தை அமாவாசையன்று நாங்கூரைச் சேர்ந்த பதினொரு திருக்கோயில் எம்பெருமான்களும் தங்கக் கருடவாகனங்கள்மீது காலையில் எழுந்தருளி மாலை வரையிலும் **திருமணி மாடக்கோவிலில்** (முதலாவது திருப்பதி) தங்குவார்கள். இதற்கென இத்திருக்கோயிலில் வரிசையாகத் தனித்தனி மண்டபங்கள் உள்ளன. எல்லோரும் இரவில் கருடசேவை தருகின்றனர். திருமங்கையாழ்வார் அன்னவாகனத்தின்மீது எழுந்தருளுவார். ஆண்டு முழுவதும் பதினொரு தங்கக் கருடவாகனங்களும் இத்திருக்கோயிலிலேயே பாதுகாப்பாக வைக்கப் பெறும். எம்பெருமான்கள் இந்த விழாக்கோலம் கொள்ளுவதற்குச் சென்னையிலுள்ள பல வைசியர்கள் (கோமுட்டிகள்) செலவை ஏற்கின்றனர். அதன்பிறகு 'அம்போ' என விட்டுவிடுவர். இந்த எம்பெருமான்களைக் கவனிப்பார் இலர். நித்திய பூசைகள்கூட பெரும்பாலான திருக்கோயில்களில் நடைபெறுவதில்லை.

# 11. சோழ நாட்டுத் திருத்தலப் பயணம்

இந்தக் கட்டுரையில் ஆழ்வார் சேவித்த ஏழு திருப்பதிகள் காட்டப் பெறுகின்றன. திருவழுந்தூரைச்சேவித்த ஆழ்வார் சிறுபுலியூர் என்ற திருப்பதிக்கு வருகின்றார்.

17. **சிறுபுலியூர்**[1] : 'சிறுபுலியூர்' என்பது திருத்தலத்தின் திருநாமம். ஆழ்வாரின் மங்களாசாசனத் திருமொழிப் பாசுரங்கள்தோறும் 'சிறுபுலியூர் சலசயனம்' என்றே இத்திருக்கோயில் குறிப்பிடப் பெறுகின்றது. எம்பெருமான் புலிக்கால் முனிவருக்கு

1. **சிறுபுலியூர்**. இத்திருத்தலம் தென்னிந்திய இருப்பூர்தி வழியில் மயிலாடுதுறை — காரைக்குடிக் கிளைப் பாதையில் கொல்லுமாங்குடி என்ற திருத்தலத்திற்குக் கிழக்கே நடந்து ஒரு கல் தொலைவு சென்று இத்திருத்தலத்தை அடையலாம். மயிலாடுதுறை சந்திப்பிலிருந்து எட்டு கல் தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. பேருந்து ஊரருகில் நிற்கும். கால்நடையாக இவ்வூரை அடையலாம். எம்பெருமான்; அருமாகடலமுதன். சயனத்திருக்கோலம் (புயங்க சயனம்); கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். உற்சவமூர்த்தி; கிருபா சமுத்திரப் பெருமாள்; **தாயார்:** திருமாமகள் நாச்சியார் பெரி. திரு. 7.9 (பதிகம்); 7.9:9 (முக்கியம்) மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ. நா. தி. (2) கட்டுரை — 5 காண்க.

(வியாக்கிரகபாதர்)[2] பாலசயனமாய்ச் சேவை சாதித்த தலமாதல் பற்றி இவ்வூர் சிறுபுலியூர் என வழங்கப் பெற்றதாகக் கூறுவர். சலம் என்பது மாயை; உறங்கு வான்போல் யோகு செய்வதற்குக் கொண்ட சயன மாதலால் 'மாயப் படுக்கை' எனப்பட்டது.

**திருத்தலத்துச் சூழ்நிலை[3] :** இத்திருப்பதியைத் திருமங்கையாழ்வார் ஒரு திருமொழியால் (7.9) மங்களா சாசனம் செய்துள்ளார். தமிழகத்தில் மருத வளத்திற்குப் பேர் போனது கீழ்த்தஞ்சை; சிறப்பாக நன்னிலம் வட்டம். சோலைகளும் வாவிகளும் நீரோடைகளும் நிறைந்த ஊர் சிறுபுலியூர். ஆழ்வார் மருத நிலவளத்தைத் தம் பாசுரங்களில் மிக அழகாகக் காட்டுவார்.

வெள்ளம்முது பரவைத்திரை
விரிய கரைஎங்கும்
தெள்ளும்மணி திகழும்சிறு
புலியூர் (1)

[வெள்ளம் — நீர் ஓட்டம்; பரவை - கடல்; திரை — அலை; தெள்ளும் — கொழிக்கப் பெற்ற; மணி-இரத்தினங்கள்]

''கடல் வெள்ளம் அலையெறிந்து நவமணிகளைக் கொண்டு வந்து கொழிக்கும் நீர்க்கரைகளையுடைய சிறுபுலியூர்'' என்கின்றார் ஆழ்வார்.

அறையும்புனல் ஒருபால்;வயல்
ஒருபால் பொழில்ஒருபால்;
சிறைவண்டுஇனம் அறையும்சிறு
புலியூர் (3)

---

2. வியாக்கிரகபாதர் ; வியாக்கிரகம்-புலி; பாதர் - கால்களையுடையவர்.

[அறையும்-ஒலிக்கின்ற; புனல்-நீர்; ஒருபால்-ஒரு பக்கம்; பொழில்-சோலைகள்; சிறை-சிறகுகள்; இனம்-திரள்கள்]

"ஊரைச் சூழ்ந்த நீர்நிலைகளிலும் வயல்களிலும் பொழில்களிலும் வண்டுகள் இன்னொலிகளை எழுப்பிக் கொண்டுள்ளன; கண்ணுக்கும் செவிக்கும் விருந்தூட்டும் சூழ்நிலையை யுடையது சிறு புலியூர்" என்கின்றார் ஆழ் வார். நீர் நிலைகளில் வண்டுகள் ஒலிக்குமோ? என்ற வினா எழுகின்றது. நீர் நிலைகளில் மதுவோடு கூடிய வெள்ளப் பெருக்கும் இருக்குமாதலால் மதுவின் நசையினால் வண்டு கள் வந்து மொய்க்கும்.

இன்னும் ஆழ்வார், "எறிநீர்ச் செந்தாமரை மலரும் சிறு புலியூர்" (5) என்று இவ்வூரைக் காட்டுவர். மேலும்,

முழுநீலமும் அலராம்பலும்
அரவிந்தமும் விரவிக்
கழுநீரொடு மடவார் அவர்
கண்வாய்முகம் மலரும்
செழுநீர்வயல் தழுவும்சிறு
புலியூர் (6).

[முழுநீலம்-முற்றிலும் கறுத்துள்ள நீலோற்பலம்; அரவிந்தம்-தாமரை; கழுநீர்-செங்கழு நீர்ப் பூக்கள்; விரவி-சேர்ந்து; மடவார்-பெண்கள்].

என்று காட்டுவர். இங்கு, சிறு புலியூரில், ஊருக்கும் வய லுக்கும் வாசி (வேறுபாடு) தெரிந்து கொள்ள வொண் ணாதபடி இருக்கும் என்கின்றார். நீலோற்பலங்களைப் பார்த்தால் அவ்வூர்ப் பெண்களாகத் தோற்றும்; அரக்காம் பல்களை நோக்கினால் அப் பெண்களின் செவ்விதழ்களை நிகர்ப்பனவாக இருக்கும்; தாமரை மலர்களைக் காணின்,

அம்மகளிரின் முகம்போலக் காட்சி யளிக்கும். எனவே, உள்வீதிகட்கும் வெளி நிலங்கட்கும் வேறுபாடு தெரிவரிய தாக இருக்கும். இவ்வூர்ப் பெண்கள் கிளிப் பிள்ளை கட்குப் பேசும் பயிற்சி தருவதை ''கிளிமடவார் செவ்வாய் மொழி பயிலும் சிறுபுலியூர்''. (8) என்று காட்டுவர்.

**ஊரின் நிலை:** ஊர் எப்படிப் பட்டது? 'திருவிற் பொலி மறையோர்' வாழும் ஊராகும் சிறு புலியூர்; ஓமத் தீயை வளர்க்கும் மறையோர் வாழும் ஊராகும் (2, 7). அக்காலத்தில் வேதம் ஓதி வேள்வி வளர்க்கும் அந்தணா ளர் வாழ்ந்த ஊராக இருந்தது என்பதை ஆழ்வார் இந்த இரண்டு பாசுரங்களில் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இப்பொழுது அத்தகையோர் அங்கு மருந்துக்கும் கிடைப் பதில்லை. ஊர் சிறிய ஊராயினும் தேவையான ஒரு சில பொருள்கள் விற்கும் அங்காடிகள் உள்ளன.

இத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் இணையடிகளன்றி வேறொன்றையும் அறியாதவர் திருமங்கையாழ்வார்.

பறையும் வினை; தொழுதுய்ம்மின், நீர்
 பணியும் சிறு தொண்டீர்!

..........................................
 புலியூர்ச்சல சயனத்து
உறையும்இறை அடியல்லது
 ஒன்று.இறையும் அறியேனே (3).

[பறையும்-தொலைந்து போம்; வினை - பாவங் கள்; சிறு தொண்டீர்-கீழானவற்றில் தொண்டு பட்டுத்திரிகின்றவர்களே; ஒன்று-வேறொன்று; இறையும் - சிறிதும்].

இவ்வாறு தகுதியற்றவர்களைப் பணிந்து திரிகின்றவர் களை நோக்கி, ''சிறு புலியூர்ச் சலசயனத்தைத் தொழுது

உய்வீர்களாக; அப்படித் தொழுதால் நும் பாவங்கள் யாவும் தொலைந்துபோம்'' என்று ஆற்றுப் படுத்துகின்றார் ஆழ்வார். ''இங்குப் பொருந்தி வாழ்கின்ற பெருமானுடைய இணையடிகளன்றி வேறொன்றையும் அறியேன்' என்று தனது பற்றுறுதியையும் வெளியிடுகின்றார். மேலும் ''சலசயனத்து ஆன் ஆயன் அடியல்லது ஒன்றும் அறியேன் அடியேனே'' (4) என்று கூறுவர். கிருஷ்ணாவதாரத்து எம்பெருமானே இங்கும் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வாரின் நம்பிக்கை. ''கிருஷ்ணாவதாரம் தீர்த்தம் ப்ரஸாதித்ததென்று வெறுக்க வேண்டாதபடி பிற்பாடர்க்கும் அநுபவிக்கலாம்படி அவ்வதாரத்தின் படியே வந்து சாய்ந்தவன்'' என்பது பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானம்.

''சிறுபுலியூர் என்ற திருத்தலமும் வேண்டா; அங்குள்ள சலசயனத் திருக்கோயிலும் வேண்டா; அங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானும் வேண்டா; அத்திருக்கோயிலைத் தொழுவதையே இயல்பாகவுடைய பாகவதோத்தமர்களின் திருவடிகளே சரணம் என்று இருப்பார்க்குத் துயரெல்லாம் தொலைந்திடும்'' என்கின்றார் ஆழ்வார். ''சலசயனம் தொழும் நீர்மையுடையார் அடிதொழுவார் துயர் இலரே'' (6) என்பது திருமங்கையாழ்வாரின் திருவாக்கு. ''தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்'' (திருவாய். 7.1:11) என்ற நம்மாழ்வாரின் திருவாக்கும் ஈண்டு ஒருங்கு வைத்து எண்ணிப் போற்றத் தக்கது. பாகவதர் வழிபாடு பகவான் வழிபாட்டை விடச் சிறந்தது என்பது வைணவ சமயத்தின் தலையாய கோட்பாடு.

சிறுபுலியூர் எம்பெருமான் இருக்கும் இடம் தனக்குத் தெரியவில்லையே என்கின்றார் ஆழ்வார்.

சேயொங்குதண் திருமாலிருஞ்
சோலைமலை உறையும்
மாயா! எனக் குரையாய்இது;
மறைநான்கின் உளாயோ?
தீஓம்புகை மறையோர் சிறு
புலியூர்ச்சல சயனத்—
தாயோ? உனது அடியார்மனத்
தாயோ? அறி யேனே (7).

[சேயோங்கு-மிக உயர்ந்த; தண்-குளிர்ந்த; உறையும்-வசிக்கும்; மறை-வேதம்; தீ-ஓமத் தீ; ஓம்பும்-வளர்க்கும்; மறையோர்-வேதியர்]

என்பது ஆழ்வார் பாசுரம். "எம்பெருமானே! அடியேனுக்கு ஓர் ஐயம்; நீ நான்மறையில் உள்ளாயா? நினது அடியார்களின் நெஞ்சில் உள்ளாயா? நீ இன்ன இடத்தில் உள்ளாய் என்பதை அடியேனால் அறியக் கூடவில்லை. நீயே நின் சோதிவாய் திறந்து அருளிச் செய்தருள் வாயாக!" என்கின்றார்.

பெரிய பிராட்டியார் மார்பில் உறையும் எம்பெருமானிடம் ஆழ்வார் சரண்புகுகின்றார்.

கருமாமுகி லுருவா! கனல்
உருவா! புனல் உருவா!
பெருமால்வரை உருவா! பிற
உருவா! நின துருவா!'
திருமாமகள் மருவுஞ்சிறு
புலியூர்ச்சல சயனத்து
அருமாகடல் அமுதே! உனது
அடியேசரண் ஆமே (9)

[மா-பெரிய: முகில்-மேகம்; உருவா-உருவமுடையவனே; கனல்-நெருப்பு; புனல்-நீர்; மால்வரை-

பெரிய மலை; நினது-உன்னுடைய; திருமா மகள்-பெரிய பிராட்டியார்].

என்பது ஆழ்வார் பாசுரம். இத்திருப் பாசுரத்தின் இனிமை கனிந்த நெஞ்சினரால் நன்கு அநுபவிக்கத் தக்கது. ஆழ்வார் தமது உளளன்பு நன்கு விளங்க எம் பெருமானை வாயார விளிக்கின்றார். இறுதியில் "உன் திருவடிகளே சரணம்" என்று கூறி அவன் திருவடிகளில் சரண்புகுகின்றார். அடுத்து திருக்கண்ணபுரம் என்ற திருத்தலத்தைச் சேவிக்கத் திருவுள்ளம் கொள்ளுகின்றார்.

**19. திருக்கண்ணபுரம்:**[3] இத்திருத்தலத்தை திருமங்கையாழ்வார் 10 பதிகங்கள், ஐந்து தனிப்பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.[4] திருக்கண்ணபுரம் **ஐந்து** கிருஷ்ணன் கோவில்களுள் ஒன்று; மற்றவை திருக்கண்ணங்குடி, திருக்கண்ண மங்கை, திருக்கண்ணன் **கவித்தலம்**, திருக்கோவலூர் என்பவையாகும். ஆழ்வார் இத்தலத்தைப் பாடிய பத்து திருமொழிகளில் தானான

3. **திருக்கண்ணபுரம் :** திருவாரூரையும் மயிலாடு துறையையும் இணைக்கும் இருப்பூர்தி வழியில் நன்னிலம் நிலையத்திலிருந்து சுமார் ஒன்பது கி. மீ. தொலைவிலுள்ளது. நன்னிலத்திலிருந்து நாகூர் செல்லும் பேருந்தில் ஏறித் திருப்புகலூர் என்ற திருத்தலத்தில் (நாவுக்கரசர் முக்தி அடைந்த திருத்தலம்) இறங்கி குதிரை வண்டி மூலம் ஒன்றரை கி. மீ. தொலைவிலுள்ள திருக் கண்ணபுரத்தை அடைதல் வேண்டும். **எம்பெருமான்:** சௌரிராஜப் பெருமாள்; நின்ற திருக் கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார் :** கண்ணபுர நாயகி. மேலும் விளக்கம் வேண்டுவோர் **சோ. நா. தி.** (2) கட்டுரை. 6 காண்க.

4. பெரி.திரு. 8.1 முதல் 8.10 முடிய (10 பதிகங்கள்)· திருநெடுந். 16, 27; சி. மடல் (49) பெ. மடல்(9).

தன்மையில் பாடியவை ஐந்து; பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு வேற்று வாயால் பேசியவை ஐந்து[5] இதனால் ஊரின் சூழ்நிலை, ஊரின் நிலை, கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் பெருமைகள் இவற்றைப் பேச அதிக வாய்ப்புகளைப் பெறுகின்றார் ஆழ்வார். பெரும்பாலும் குற்றெழுத்துகளே நிரம்பப் பெற்றுச் **சித்திரக்கவிகளாலும்** ஒரு திருமொழியைப் (8.7) பாடி மகிழ்கின்றார். இதன் ஒவ்வொரு பாசுரமும் 'கணபுரம் அடிகள்தம் இடமே' என்ற தொடர்களால் இறுகின்றது.

**தலச் சூழ்நிலை :** தலச் சூழ்நிலையை ஆழ்வார் இவ்வாறு காட்டுவர்: கண்ணபுரம் குளங்கள் நிறைந்த ஊர் (8.7:1); களை பறிக்கின்றவர்கள் களைக்கொட்டு களைக் கொண்டு களை பறிக்குங்கால் சிறுதூறுகளின்றும் புறப்படும் முயல்கள் அவர்கள் முகத்தில் துள்ளும்; செழிப்பான கழனிகளில் கயல் மீன்கள் துள்ளும் (3); சோலைகளெங்கும் நறுமணமுள்ள மலர்களைக் கோதி, மதுவைப் பருகி அக்களில்பால் இசை எழுப்பும் (4, 6); கழனிகளில் கலப்பைகளைச் செலுத்தும் போதும், காலால் குழப்பும் போதும் இடையிலே தப்பிக் கிடந்த தாமரை மலர்களினின்றும் நறுமணம் புறப்படும் (8).

மேலும், கண்ணபுரம் காடும் வயல்களும் சூழ்ந்திருக் கும் (8.8:1); வயல்களில் செழித்த நெற்பயிர்கள் ஓங்கி வளர்ந்து இருள் மூடிக் கிடக்கும் (4); வயல்களில் பொன்

5. வேற்றுவாயால் பேசியவை ஐந்தனுள் தாய்ப் பாசுரமாகப் பேசியவை இரண்டு (8.1; 8.2) பதிகங்கள்; மகள் பாசுரமாக நடப்பவை மூன்று (8. 3; 8. 4; 8. 5) திருமொழிகள். இவற்றைப் பற்றிய செய்திகளை வேறிடங்களில் கண்டு மகிழ லாம்.

போன்ற நெல் விளைச்சலைக் காணலாம்; பல இடங்களில் முல்லை மலர்கள், கருமுகை மலர்கள், செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்து கிடக்கும் (5); நீலோர்ப்பல மலர்கள் எங்கும் மணம் பரப்பி நிற்கும்; அவற்றில் வண்டுகள் கூட்டங்களாக மதுவினைப் பருகும் (6); கடலை அடுத்திருப்பதால் பரிமளம் மிக்க தழைகள் ஊருக்கு வேலி போல் அமைந்திருக்கும் (7); ஒரு பக்கத்தில் கடலலைகள் முத்துகளை ஒதுக்கித் தள்ளும்; இன்னொரு புறத்தில் அழகிய செந்நெற் பயிர்கள் சாமரம்போல் வளைந்து வீசும் (9). கிட்டத்தட்ட மேற்குறிப்பட்ட சூழ்நிலையை இன்றும் காணலாம்.

**ஊரின் சிறப்பு:** கண்ணபுரம் என்னும் ஊரின் சிறப்பைப் பற்றியும் பேசுகின்றார் திருமங்கை மன்னன். 'பெருகுநீர்க் கண்ணபுரம்' (8. 2: 3) என்கின்றார். எப்பொழுதும் இவ்வூரில் விழாக்கள் மலிந்திருக்கும்; ஏராளமான வைணவர்கள் வந்து குழுமுவர். இதனை ஆழ்வார் "மணம் மலி விழவினொடு அடியவர் அளவிய கணம்" (8. 7: 3) என்று கூறுவர். இந்த வைணவர்கள் சதா சுருதியோடு கூடின அருமறைகளை ஓதிய வண்ணம் இருப்பர்(8. 7: 7); நாடோறும் தழல் வளர்த்து வாழும் அந்தணர்களும் (8. 1: 7) சாத்திரங்களைக் கற்ற வைதிகர்களும் வாழும் இடம் இது (8. 1: 8).

**கண்ணபுரத்து அம்மான்:** ஆழ்வார் தானான தன்மையில் நின்று பேசும்போது, 'கண்ணபுரம் நாம் தொழுதுமே' என்று ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாகச் சொல்லி 'தொண்டீர், உய்யும் வகை கண்டேன்' என்று தொண்டர்களை ஆற்றுப்படுத்துகின்றார்; தன் மனத்திற்கும் "வருந்தாது இரு நீ, மடநெஞ்சே, நம்மேல் வினை சாரா" என்றும் (8. 6: 6), "மால்ஆய், மனமே! அருந்துயரால் வருந்தாதிரு" என்றும் (8. 6: 8) உபதேசம்

செய்கின்றார். "கணபுரம் அடிகள் தம் இடமே" என்று ஒரு தடவைக்கு ஒன்பது தடவைக்கு எம்பெருமானின் இருப்பிடத்தையும் அநுபவித்து இனியராகின்றார். (8.7) எம்பெருமானை மீன், ஆமை, வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், தசரதராமன், பலராமன் கிருட்டிணன் என்று அவதார மூர்த்திகளைக் கண்டு அநுபவித்து அகமகிழ்கின்றார் (8. 8). "இக்கண்ணபுரத் தம்மானுக்கன்றி வேறொருவருக்கு உரியேன் அல்லேன்" என்று தம் அநந்யார்ஹ சேஷத்துவத்தை, "அம்மானை - அடியேன் அடைந்து உய்ந்து போனேனே" என்றும், "கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு அடியேன் ஒருவனுக்கு உரியேனோ?" (8. 9: 5) என்றும் வெளியிட்டு அகமகிழ்கின்றார். அடுத்த திருமொழியிலும் "நின்னையல்லால், வருதேவர் மற்று உளர் என்று என் மனத்து இறையும் நான் கருதேனே" (8. 10: 2) என்று தாம் மறந்தும் புறந்தொழா மாந்தன் என்பதை அரண் செய்கின்றார். இதற்கு முத்தாய்ப்பாக,

> "மற்றும்ஓர் தெய்வம்
>     உளதென்று இருப்பாரோடு
> உற்றிலேன்; உற்றதும் உன்
>     அடியார்க்கு அடிமை
> மற்றெல்லாம் பேசிலும் நின்
>     எட்டு எழுத்தும்
> கற்று நான்" (8. 10: 3)
>
> [மற்றும் - உன்னைக் காட்டிலும்; உற்றிலேன் - இணங்கேன்]

என்று பேசுவர். "பிற தெய்வங்களைத் தொழுவாரோடு இணங்கமாட்டேன்; உன் எட்டெழுத்து மந்திரம் அர்த்த பஞ்சகத்தைப் பேசினாலும், நான் கண்ட சிறப்புப் பொருள் பாகவத சேஷத்துவமேயாகும்" என்று தம்

ஊற்றத்தை வெளியிடுகின்றார். அடுத்து, திருக்கண்ணங்குடி என்ற திருத்தலத்தைச் சேவிக்கத் திருவுள்ளம் கொள்ளுகின்றார்.

**21. திருக்கண்ணங்குடி:**[6] திருமங்கையாழ்வார் மட்டிலும் ஒரு திருமொழியால் (9.11) இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்துள்ளார். பாசுரங்களின் பின் இரண்டடிகளில் தலத்தைப் பற்றியும் முன் இரண்டு அடிகளில் எம்பெருமானைப் பற்றியும் பேசி இனியராகின்றார் ஆழ்வார்.

**திருத்தலச் சூழ்நிலை:** குவளை மலர்கள் தாமரை மலர்கள், ஆம்பல் மலர்கள், செங்கழுநீர் மலர்கள் ஆகிய இம் மலர்களால் அழகு விளங்கப் பெற்ற கழனிகளால் சூழப்பெற்றது திருக்கண்ணங்குடி (2);

6. **திருக்கண்ணங்குடி:** இத்திருத்தலம் திருவாரூர் நாகப்பட்டினம் இருப்பூர்தி வழியில் கீழ் வேளூர் (கீவளூர்) நிலையத்தருகில் உள்ளது. இந்த நிலையத்தில் இறங்கி வடபுறத்தில் இருப்பூர்தி நிலையத்தையொட்டிச் சுமார் ஒன்றரைக் கி. மீ. தொலைவு நடந்து சென்று இவ்வூரை அடையலாம். திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பேருந்தில் வந்தால் இந்த ஊரிலேயே இறங்கலாம். கண்ணன் கோயில் கொண்டிருப்பதால் 'கண்ணன் குடி' என்ற திருநாமம் பெற்றது. தமிழ்நாட்டின் ஐந்து கண்ணன் கோயில்களில் இதுவும் ஒன்று. எம்பெருமான்: தாமோதர், நாராயணன், உலகநாதன், சியாமலா மேனிப் பெருமாள்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். தாயார்: அரவிந்தவல்லி நாச்சியார், உலக நாயகி. பெரி திரு.9.1 (பதிகம்) மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ. நா. தி-(1) கட்டுரை-18 காண்க.

குவளைநீர் முளரி குமுதம்ஒண் கழுநீர்;
　　கொய்ம்மலர் நெய்தல்ஒண் கழனி
திவளும்மா ளிகை சூழ் செழுமணிப் புரிசைத்
　　திருக்கண்ணங்குடி (2).

என்பது ஆழ்வார் திருவாக்கு. இங்கு உரிய காலத்தில் மலரும் புன்னை, மல்லிகை, முல்லை, ஆகிய மலர்களின் மீது அளாவி நறுமணத்துடன் கூடிய தென்றல் காற்று எல்லாப் பக்கங்களிலும் வீசும். (3); இங்குள்ள கழனிகளில் மென்னடை அன்னங்கள் மெல்லிய தாமரை மலர்களாகிய இருக்கைகளில் அலையெறிகின்ற நீரில் உண்டான இலையாகின்ற குடை நிழலில் இருபக்கமும் செந்நெற்கவரி வீச வீற்றிருக்கும் (5); குலைகள் நிரம்பிய வாழைத் தோப்பும், ஓங்கி வளர்ந்துள்ள பாக்கு மரங்களும், குரவ மரங்களும் நல்ல பலா மரங்களும், குளிர்ந்த மாமரங்களும், குருக்கத்தியும் நிறைந்த செழிப்புள்ள சோலைகளால் சூழப்பெற்றது இவ்வூர் (6); அன்றியும், மேகங்கள் முரசொலிபோல் முழங்க, தேன்கூடுகளில் திரியும் பொறி வண்டுகள் இன்னிசை முரல, கானில் உலாவும் மயிற் கணங்கள் கூத்தாடும் (7); சிறந்த மணிகளையும், மரகதக் குவியல்களையும், வயிரங்களையும், மூங்கிலில் உதிர்ந்த முத்துகளையும் ஆற்றலைகள் தள்ளிக்கொண்டு வந்து கழனிகளெங்கும் குவிக்கும் (8); நெருங்கிய குருகத்திகளும், சுரபுன்னைச் சோலைகளும், சூழ்ந்துள்ள செண்பகங்களும் ஆகிய இவற்றின் மலர்களில் வண்டுகள் 'தென்ன தென்ன' என முரன்று இன்னிசைப் பண்களை எழுப்பியவண்ணம் இருக்கும் (9). உயர்ந்த கொடிகள் ஒளிமிக்க மதி மண்டலத்தளவும் சென்று சேரும்படியான ஓங்கிய சிகரங்களையுடைய அழகிய ஒளி மிக்க மாடமாளிகைகளைக் கொண்டது இவ்வூர் (2, 4); இவ்வூரில் நான்மறைகள், ஐந்து வேள்விகள், ஆறுசாத்திரங்கள், அரிய கலைகள் இவற்றை ஓம்பும் அந்தணர்கள் வாழ்கின்றனர் (1).

**தலத்து எம்பெருமான்:** இத்திருத்தலத்தில் சேவை சாதிக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? திருப்பாற் கடலில் பாம்பணையில் பள்ளிகொண்டிருக்கும் வியூக மூர்த்தியே திருக்கண்ணங்குடியில் அர்ச்சாவதார வடிவத்துடன் எழுந்தருளியுள்ளான்.

வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய
வாளர வின் அணை மேவி
சங்கமார் அங்கை தடமலர் வுந்திச்
சாமமா மேனின் தலைவன் (1)

[வங்கம்-மரக்கலம்; முந்நீர்-கடல்; வரி-கோடு; நிறம்-அழகு; வாள்-ஒளி பொருந்திய; அரவு-பாம்பு; அணை-படுக்கை; மேவி-பொருந்தி; உந்தி-கொப்பூழ்; சாமம்-நீலநிறம்; மேனி-உடல்]

என்று காட்டுவார் ஆழ்வார். மற்றும் இவனே கசேந்திரன் என்ற யானை அரசு முதலையால் கௌவப் பெற்று வருந்தியபோது அம்முதலை துண்டாக அறும்படி திருவாழிப் படையை ஏவி, அந்த யானை சூட்ட நினைந்த தாமரைப்பூவை ஏற்றுக் கொண்டவன் (2); மூவுலகங்களும் பிரளய வெள்ளத்தில் மூழ்கித் துன்புற்ற காலத்தில் பேருருவமும் ஒற்றைக் கொம்பும் வாய்ந்த பெருமீனாகத் திருவவதரித்துத் தன் செதிலினகத்தே கடல் வெள்ளம் ஒடுங்கும்படி செய்த பெருமான் (3); பண்டொரு கால் மலைபோல் பெருத்த வடிவும் வெளுத்த கோரப் பற்களையும் நெருப்போடொத்த கண்களையும் கொண்ட வராக உருவமாய்த் திருவவதரித்துப் பூமிப்பிராட்டியின் பிரிவுத் துன்பத்தைப் போக்கிய பெம்மான் (4); மாவலியிடம் மூவடிமண் இரந்து பெற்று ஏழுலகங்களையும் ஈரடியால் தாவி அளப்பதாக விம்மி வளர்ந்த பெருமான் (5); இருபத்தொரு தலைமுறையளவும் பூமியிலுள்ள அரசர்களின்

மணிமுடி சிதறும்படிக் கொன்று குவித்து அவர்களுடைய குருதி வெள்ளத்தில் தீர்த்தமாடிக் கோபம் தணியப் பெற்ற பரசுராமனாகத் திருவவதரித்தவன் (6); தனது மிடுக்கினால் தேவர்களைத் துன்புறுத்திய இராவணனை முடித்துக் கட்டிய பெருமான் இவன் (7); கழுத்தில் ஓலைகட்டிப் பாண்டவர்க்காகத் தூது சென்றபோது, துரியோதனனைப் பொய்யான ஆசனத்தையிட்டுக் கொல்ல நினைத்த போது பெரிய திருமேனியையுடையவனாக வளர்ந்து அவன் திட்டத்தைக் குலைத்தருளிய பெம்மான் இவன் (8); பார்த்தனுக்குச் சாரதியாக நின்று மாபாரதம் முடித்தருளிய மாயனே இவன் (9). இத்தகைய எம்பெருமானைச் சேவித்து மங்களாசாசனம் செய்தபிறகு திருநாகை செல்லத் திருவுள்ளம் கொள்ளுகின்றார்.

**21: திருநாகை:**[7] இத்திவ்விய தேசத்தை இந்த ஆழ்வார் மட்டிலும் ஒரு திருமொழியால் (9.2) மங்களாசாசனம்செய்துள்ளார். திருக்கோயிலில் உட்புகுந்து செளந்தரிய ராஜனைச் சேவித்தார்; என்றைக்கும் எங்கும் கண்டறியாத திருக்கோலமாயிருந்தது. அந்தப் பெருமானை இன்னான் என்று அறியக் கூடவில்லை; முகத்தை நேரே பார்த்து முன்னிலையாக்கிப் பேசமுடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது. அச்சோதி வெள்ளத்தில் நெஞ்சைப் பறிகொடுத்துத் தம் ஆண் தன்மையை இழந்து பெண்மை நிலை எய்திப் பரகால நாயகியாகின்றார். இத்திருமொழி **'மகள் பாசுரமாக'**

7. **திருநாகை :** நாகப்பட்டினம் இருப்பூர்தி நிலையம். நிலையத்திலிருந்து சுமார் இரண்டு ஃபர்லாங் தொலைவிலுள்ளது திருக்கோவில். **எம்பெருமான்:** செளந்தரியராஜன். நின்ற திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** செளந்தரியவல்லி. பெரி. திரு. 9.2 (பதிகம்). மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ. நா. தி- (1) கட்டுரை-19 காண்க.

நடைபெறுகின்றது. அப்பெருமானுடைய ஒப்புயர்வற்ற வடிவழகையும் திவ்வியாயுத திவ்விய பூஷணப் பொருத்தங்களையும் சிருங்கார விலாசங்களையும் மற்றும் கண்ட அதிசயங்களையும் தோழியிடம் சொல்லி வியக்கின்றாள் :

பொன்இவர் மேனி; மரக தத்தின்
    பொங்குஇளஞ் சோதி அகலத்து ஆரம்
மின்இவர் வாயில்நல் வேதம் ஓதும்
    வேதியர்; வானத்து ஆவர்; தோழி!
என்னையும் நோக்கிஎன் அல்குல் நோக்கி,
    ஏந்திளம் கொங்கையும் நோக்குகின்றார்;
அன்னைஎன் நோக்கும்என்று அஞ்சு கின்றேன்;
    அச்சோ ஒருவர் அழகியவா!

[மேனி-உடல்; அகலம்-மார்பு; ஆரம்-மாலை;
அல்குல்-நிதம்பம்; அச்சோ-ஆச்சரியம்]

என்று தோழியிடம் ஆழ்வார் நாயகி எம்பெருமானின் திவ்விய மங்கள விக்கிரகத்தில் தன் நெஞ்சு பறியுண்டமை தோன்றச் சொல்லுகின்றாள்.

தொடர்ந்து பேசுகின்றாள்: ''இப்பெரியர் குடந்தைக் கிடந்த கோவலன் என்னலாம்படி விளங்குவர்; அதுவும் தெளிவாகத் தெரியவில்லை. திருவாழி திருச் சங்குகள் திருக்கைகளில் ஏந்தியுள்ளார்; இள மகளிர் இளைஞர்களைச் சுற்றிக் கொண்டிருப்பார்களாகயாலே இவரும் இள மகளிர்களால் சுற்றி வணங்கப் பெற்றுள்ளார். இவர்தம் உள்ளம் குளிரும்படி முத்து மயமும் பொன் மயமுமான திருவாபரங்களை அணிந்து கொண்டுள்ளார்; அம்மகளிரை உவந்து தழுவதற்கு நான்கு திருத்தோள்களையுடையவராகத் திகழ்கின்றார். இவருடைய அழகோ நம்மால் பேச முடியாது (2).

''இவருடைய திருக்கண்களின் அழகுதான் என்னே! தாமரைக் கண்ணன் என்னலாம்படித் தோன்றுகின்றார். ஓங்கிப் பரந்த மலைகள் போலே திகழ்கின்றனவாய்த் தோள் வளைகள் முதலியவற்றின் புகர் விஞ்சி விளங்கப் பெற்றவையான ஆயிரம் திருத்தோள்களும் அவயவந் தோறும் திருவாபரணங்களும் பொலிந்து நிற்கும் அழகைத்தான் என் சொல்லுவேன்! அலங்காரமும் வேண்டாத வடிவு தானே அமையாதோ என்னலாம் படியான அழகு அமைந்திருப்பதுதான் என்னே! இவ்வழகை நோக்குங்கால் இவர் திருமெய்யத்தில் எழுந்தருளியிருப்பவர் போலவும் தாவி உலகையெல்லாம் அளந்தவர் போலவும் தோன்றுகின்றார்'' (3).

''அவருடைய பரத்துவ சௌலப்பியங்களைக் கூறுகின்றேன், கேளாய். மணங்கமழும் திருத்துழாய் மாலைகளைத் தோளிணைமேல் அணிந்துள்ளார்; திருக்கைகளில் திருவாழி திருச்சங்குகளைப் பூவேந்துமாப் போலே ஏந்தியுள்ளார்; இப்படிப்பட்ட பரத்துவம் கொண்டிருந்தும், எட்டாதவராக இராமல் நாமிருக்குமிடத்திலேயே வந்து புகுந்துள்ளார்! பரமரசிகர். இளமை ததும்பும் பருவமுடையவராகத் திகழ்கின்றார். இவருடைய வாயிதழ்கள் திருப்பவளம் போலிரா நின்றன; திருவுருவமோ செம்பவளத் திரள்போலே விரும்பத் தகுந்ததாக இரா நின்றது. இங்ஙனம் உவமையில்லாதவரை உவமையிட்டுச் சொல்லுவதும் சரியன்று என்னும்படி பேரழகுடையவர் (4).

''உறையூரையும் தென்மதுரையையும் இருப்பிடமாகக் கொண்டு காட்சிதரும் கோபால கிருட்டிணன் போன்றவர்; மலை போன்ற திண்ணிய நான்கு திருத்தோள்களையுடையவராகக் காட்சி தருகின்றார். இவருடைய திருமேனியின் தோற்றம் கருங்கடலையொத்துள்

ளது. இத்தகைய பெருமானை நான் எங்கும் கண்டதாக நினைவில்லை இவருடைய வடிவழகு பேச்சுக்கு நில மன்று காண்! இவர் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்ந்திடுக'' (5)

''தோழீ, இவரைப் பார்த்தால் கம்சன் அரண்மனை வாயிலில் மதமூட்டி நிறுத்தி வைக்கப்பெற்ற வேழத்தின் மருப் பொசித்துக் கொன்ற கோவலன் போன்றுள்ளார். அவர்தானோ இவர்? அணிகள் பூண்ட மங்கையர் தம் நெஞ்சைத் தஞ்சமாக வுடையவரோ இவர்? இன்னா ரென்று அறுதியிடக் கூட வில்லையே! தாமரை போன்ற திருக் கண்கள் இருக்கும் அழகை என்னென்று சொல் வேன்! முன்பு கஞ்சனை மஞ்சத்தினின்றும் தள்ளித் திருத்தாளால் உதைத்த தனி வீரராகவே தோன்று கின்றார். இராவணனைப் போன்ற வணங்காமுடிகளும் இவரைக் கண்டவாறே பரவசப்பட்டு வணங்கும்படி யன்றோ இவர்தம் அதிசயம் இருப்பது? ஓர் அஞ்சனக் குன்றம்தான் இங்ஙனம் வடிவம் கொண்டு நிற்கின்றதோ? என்னலாம்படி இருக்கின்றார் காண்! வாய்கொண்டு சொல்லவொண்ணாத பேரழகு படைத்த இவர் திறத்தில் நான் என்னவென்று சொல்வேன்?'' (6).

''தோழீ, தாமரை மொட்டை மலர்விக்கச் செய்ய வல்ல பேரருளாளரான ஆதித்தியனோ இவர்? இவரைப் பார்த்தவாறே என் பக்கல் நினைவின்றியே என் நெஞ்சு இவரை வணங்கி நிற்கின்றது. உன்னையறியாமல் எனக்கு வரும் நன்மையொன்றுமில்லையே! அப்படியிருந்தும் உன்னையும் என்னையுமறியாமல் இப்படி ஒரு நன்மை யுண்டானது என்னே! இவர் செய்கின்ற காதல் விளை யாட்டுகளோ நெடுநாளாக மிகப் பழகியவர் செய்பவை போல் உள்ளன. ஆயினும், இதற்கு முன்பு இவரைக் கண்டதாகவும் எனக்கு நினைவு இல்லை. உற்று நோக்கு

கின்ற திருக் கண்களும் அணைக்க முற்படுகின்ற திருக்கைகளும் திரளச் செறியப் பூத்த தாமரை என்னலாம்படி உள்ளன. திருவடியோ மேகத்திரள் என்னலாம்படி உள்ளது இவர்தம் அழகுக்கு யாரே ஒப்புச் சொல்ல வல்லார்?'' (7).

''மேக மண்டலத்தளவும் செல்லும்படி ஓங்கி மாமதி வந்து தீண்டும்படியாக உயர்ந்துள்ள திருமாலிருஞ்சோலை மணாளர் தாமே என் நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் எழுந்தருளி ஒரு நொடிப் பொழுதும் நீங்கிற்றிலர்; திரு நீர் மலை எம்பெருமான் போலவும் திகழ்கின்றார்: அறுதியிடுச் சொல்ல முடியாத நிலையிலுள்ளேன். மிக உயர்ந்த பொன்மலை மேலே காளமேகம் படிந்து வருமாப்போலே பெரிய திருவடியின்மீது வீற்றிருந்து எழுந்தருளும் கோலத்தை வந்து காணுங்கள்! இவருடைய அழகுக்குப் பாசுரமிட என்னாலகுமா? (8).

''தோழீ, இப்பெரியாரைக் கண்டதும் 'இவர் ஆபத்துக்கு உதவுபவர்' என்று நினைக்கத் தோன்றுகின்றது. திக்குகள் எட்டிலும் வந்து அலையெறியா நின்றுள்ள கடல்களையும் ஏழுலகங்களையும் ஒரு சமயம் திருவயிற்றில் வைத்துப் பிரளயம் கொள்ளாதபடி காத்து ஒரு சிறிய ஆலந்தளிரில் துயில்கொண்ட ஆச்சரியன் என்று தோன்றும்படி உள்ளார். 'கூடாதவற்றையும் கூட்டுவிப்பவர் இவர்' என்று தெரிகின்றது. ஆயினும், இவர்தம் வியத்தகு செயல்களை நான் அறிகின்றிலேன். திருவுருவத்தை நோக்கினால் மேகம் போலவும் மலை போலவும் தோன்றுகின்றது. திருக்கண்களும் திருப்பவளமும் நறுமணங்கமழும் தாமரைபோல் உள்ளன இவர்தம் மேன்மைக்குத்தக்க மேன்மையுடையவர்களே இவரைக் கிட்டலாமேயன்றி நமக்குக் கிட்டவொண்ணாது என்று பின்வாங்க நேர்ந்தாலும் இவர்தம் பேரழகு நம்மைப் பின் வாங்க வொட்டுகின்றதில்லை'' (9). இந்த எம்பெருமானைச் சேவித்த

பின் 'கணமங்கைக் கற்பகத்தைச்' சேவிக்கத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

22. **திருக்கண்ணமங்கை:**[8] இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் திருமங்கையாழ்வார் 'கணமங்கைக் கற்பகம்' (பெரிய திருமடல்) என்று மங்களாசாசனம் செய்கின்றார். இப்பெருமானை மங்களாசாசனம் செய்யப்பெற்ற ஒரு திருமொழியில் (7.10).

பெரும்பு றக்கட லை,அட லேற்றினைப்
பெண்ணை, யானைஎண் ணில்முனி வர்க்கருள்
தருந்த வத்தை,முத் தின்திரள் கோவையைப்
பத்த ராவியை, நித்திலத் தொத்தினை
அரும்பி னைஅல ரை,அடி யேன்மனத்
தாசை யை,அமு தம்பொதி யின்சுவைக்
கரும்பி னைகனி யைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே (1)

[அடல்ஏறு-செருக்குடைய காளை; தவம்-தவப் பயன்; கோவை-மாலை; பத்தர் ஆவி-பக்தர் கட்கு உயிர் போன்றவன்].

---

8. **திருக்கண்ணமங்கை:** திருவாரூருக்கு மேற்கே சுமார் எட்டு கி. மீ. தொலைவிலுள்ளது. கும்பகோணம் செல்லும் சாலையிலுள்ளது. திருவாரூரிலிருந்தும் கும்பகோணத்திலிருந்தும் பேருந்து வசதி உண்டு. **எம்பெருமான்:** பக்தவத்சலப் பெருமாள்; பத்தராவிப் பெருமாள் சற்றுப் பெரிய மூர்த்தி; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம். **தாயார்:** அபிஷேக வல்லி. இவருக்கு இங்குத் தனிக்கோயில் உண்டு. திருமங்கையாழ்வார் மட்டிலும் மங்களாசாசனம் செய்த திருத்தலம் இது. பெரி திரு. 7. 6: 5; 7. 10 (பதிகம்); 10.1:1; 11.6:7; சிறி திருமடல் (39) பெரி. திருமடல் (57) மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ. நா. திரு. (1)கட்டுரை- 20 காண்க.

என்பது முதற் பாசுரம். இதிலும் இதனைத் தொடர்ந்து வரும் ஒன்பது பாசுரங்களிலும் எம்பெருமான் தன் பெருமைகளையெல்லாம் காட்டிக் கொடுத்தமையைப் பரக்கப் பேசி இனியராகின்றார் ஆழ்வார்.

''பரந்த கடல்போலே அளவிடமுடியாத சொரூப சுபாவங்களையுடையவன்; செருக்குடைய காளை போல் மேனாணிப்புள்ளவன்; பெண்ணைப்போல் பாரதந்திரமே வடிவானவன்; ஆணைப்போல் சுவாதந்திரியமாயிருப்பவன்; எண்ணிறந்த யோகியருக்கு அருள் பாலிக்கும் தவப் பயனாயுள்ளவன். முத்தின் திரளாகிய மாலை போன்றவன்; பக்தர்கட்கு உயிர் நிலையாயிருப்பவன்; முத்துக் குவியல் போன்றிருப்பவன்; அரும்புபோல் இளமையுடையவன்; மலர்ந்த பூப்போல் யௌவன பருவமுள்ளவன்; அடியேன் மனத்தில் புதிது புதிதாக எழும் ஆசைக்கு இலக்கணமானவன்; அமுதத்தை நீராகப் பாய்ச்சியதனால் வளர்ந்த இன்சுவையுள்ள கரும்புபோல் இனிமையுடையவன்; கனிபோல்கண்ட போதே நுகரத்தக்கவன் (1). பக்தியோகத்திற்குத் தூண்டுபவன்; பரமபதம் அளிக்க வல்ல பிரபத்தியோகத்திற்கு ஏவுபவன்; அன்பு இல்லாதார்க்குப் பொய்யன்; திருவாழியைத் திருக்கையிலுடையவன்; கடல் நிற வண்ணன்; எல்லாரிலும் மேம்பட்டவன்; ஆலிலையில் பள்ளிகொண்ட ஆச்சரியன்; நேற்றைப் போதில் நுகரப்பெற்ற பொருளைப்போல் நெஞ்சை விட்டகலாத யோக்கியதையையுடையவன்; இன்று அநுபவிக்கப்பெறும் பொருள் போன்றவன்; மேலுள்ள காலமும் இப்படியே அநுபவிக்க உரியவன்; திங்கள், ஆண்டு இவற்றிற்கு நிர்வாக்கன்; கன்னற்கட்டி போன்றவன்; கருப்பஞ்சாறு போன்றவன் (2).

''வேறு புகலற்ற அடியேன் போல்வார் திறத்தில் காரணமில்லாமல் கருணை காட்டுபவன்; சிவனைத் தன் திருமேனியில் வைத்து அதனைத் தன் பேறாக உகந்திருக்

கும் சீலகுணத்தில் சிறந்தவன். எப்போதும் இத்திருக் குணத்தையே இயல்பாகவுடையவன்; பனிமா மதியம் தவழப் பெற்ற ஆகாயமாக இருப்பவன்; பகலவனுக்கு அந்தர்யாமியாக இருப்பவன்; வடவேங்கடத்தின் கொடு முடியைத் தன் இருப்பிடமாகக் கொண்டவன்; நம்மால் விரும்பி வணங்கப்பெறுபவன்; போகம் அநுபவிப்பதற் கான பகல் இராப் பொழுதுகட்கு நாயகன் (3). பேய்ச்சி முலையிலுள்ள நஞ்சினை அமுது செய்த சிறுக்கன்; தெள்ளியார் வணங்கப்பெறும் தேவன்; திருக்கோவலூரில் இடைக்கழியில் முதலாழ்வார்களால் நெருக்குண்ட இளங் குமரன்; அந்தணர்களின் சிந்தையுள் புகுந்து அவர்களைத் தன் வழியே நியமித்துக் கொண்டிருப்பவன்; பிரகாசமே வடிவாகவுடையவன்; இத்தன்மைகளால் அடியேனை ஆட்படுத்திக்கொண்டவன்; எய்ப்பினில் வைப்பாக இருப் பவன்; பொன்னும் மணியும்போல் எல்லாராலும் விரும்பப் பெறுபவன் (4).

"நித்தியானந்தத்தால் காளைபோல் மிடுக்குடை யவன்; இமயத் திருப்பிரிதியில் தன் இருப்பைக்காட்டி அடியேனைத் தன் வசப்படுத்திக் கொண்டவன்; இம்மை மறுமைப் பயன்களை விரும்புவார்க்கு அளிக்கவல்லவன்; தான் விரும்பும் மனிதர்களைப் பரமபதத்தில் கொண்டு வைக்க வல்லவன்; கையிலே திருவாழியாழ்வான் இருப்ப தனால் எதிரிகட்கு எமன் போன்றவன்; திருநின்றவூரில் முத்துத் திரள்போல் வடிவு கொண்டு எழுந்தருளியிருப் பவன்;[9] நீலமணி மயமான மலைபோன்று வடிவினையு

9. திருமங்கையாழ்வார் இத்திருத்தலத்திற்கு வந்து இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பாடித் துதிக்கையில், திருநின்றவூர் பத்தரா விப் பெருமாள், முன்பு திருக்கடல் மல்லையில் ஒரு பாடல் பெற்றது போதாதென்று மீட்டும் அவ்வூரிலுள்ள நாய்ச்சியாரான'என்னைப்பெற்ற

டையவன்; ஊற்றின்பத்தைத் தரும் தென்றல்போல் விரும்பத் தக்கவன்; நீர்போல் உயிர் தரிப்பிற்கு ஏது வானவன் (5). நினைத்ததை நினைந்தவாறு செய்து தலைக்கட்டிக் கொள்ளவல்ல சாமர்த்தியன்; கேசியை அழித்து கேசவன் என்ற திருநாமம் பெற்றவன்; ஒளிமிக்க அணிகலன்களை வைத்தற்குரிய செப்பு போன்றவன்; திருமகள் கேள்வன்; பவளத்தின் ஒளியை ஒத்திருப்பவன்; ஏழுலகங்கட்கும் நாயகன்; கால தத்துவன்; திருவாழி ஏந்திய திருக்கையன்; அந்தணர்களின் கல்விக்குப் பொருளாக இருப்பவன் (6).

''எப்பொழுதும் முற்றிலும் மனநிறைவுடையவன்; திசை நான்முகனுக்குத் திருத்தமப்பன்; மூவரில் மூத்தவன்; பேரொளி வீசும் திருமேனியையுடையவன்; மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் தலைவன்; சிவனைக் கூறுடம்பாகக் கொண்டவன்; அரி என்ற திருநாமமுடையவன்; எல்லாப் பொருள்களும் தன்னிடத்தில் பொருந்தும் படியான முழுமுதற் கருத்தன் (7). கன்றினால் கனியுதிர்த்த காளை; பூதனையின் முலை தீட்டிய நஞ்சுடன் அவளுடைய உயிரையும் உண்ட சிறுவன்; இராவணனை மாய்த்த வீரன்; அன்பர்கட்கு ஆரா அமுதம் போன்றவன்; நச்சுவார் உச்சிமீது நிற்கும் நம்பி; கஞ்சனைக் காலனுலகிற்கு அனுப்பிய காளை (8). இசைபோல் இனியன்; இசையின் சாரமானவன்; பாலினுள் நெய்போல் மறைந்திருக்கும் பான்மையன்; நித்தியவிபூதிக்கு நாதன்; பேரொளி வீசும் திருமேனியன்; வேள்வி சொரூபி; விளக்

தாயாரால்' நினைவூட்டப் பெற்றவராய், ஆழ்வார் எதிரில் வந்து காட்சியளிக்க, ஆலி நாடர், ''நின்றவூர் நித்திலத்தொத்தினை... கண மங்கையுட் கண்டு கொண்டேனே'' (பெரி திரு. 7. 10:5) என்று அப்பனையும் சேர்த்துத் துதித்தனர் என்பது ஈண்டு அறியத் தகும்.

கொளி போன்ற சுய ஒளியையுடையவன்; பூமிபோன்ற பொறுமையுடையவன்; மலைபோல் அசைக்க வொண்ணாதவன்; வேண்டுமிடங்கட்கு வருவித்துக் கொள்ளவல்ல அலைநீரினைப் போன்றவன்; அடியவரிடத்துப் பேரவாக் கொண்டவன்; சிறந்த ஞானவன்; வைதிகர்கட்குக் கண்போன்றிருப்பவன் (9)". இப்படிப்பட்ட எம்பெருமானைக் கண்ணமங்கையில் கண்டு கொண்டதாகக் களிப்பெய்துகின்றார் ஆழ்வார்.

**திருமொழியை ஓதுவதன் பயன்** : 'நலம் அந்தம் இல்லதோர் நாடாகிய திருநாட்டிற்குச் சென்று காண வேண்டிய பரமபுருடனான — புருடோத்தமனை — இந்த நிலத்தில், திருக்கண்ணமங்கையில் காணப்பெற்றேன்' என்று ஆவலுடன் அருளிச் செய்த திருமொழியை நன்கு ஓதி உணர்பவர்கள் விண்ணுலகில் தேவர்களாய்த் திகழ்வர் என்று பயன் உரைத்துக் தலைக்கட்டுகின்றார் ஆழ்வார். எம்பெருமானை நோக்கியும் பேசுகின்றார்:

> "வெண் சங்கம் ஒன்(று) ஏந்திய
> கண்ண! நின்தனக் கும்குறிப் பாகில்
> கற்க லாம்கவி யின்பொருள் தானே (10)

என்பது ஆழ்வார் வாக்கு. "வெண் சங்கம் ஏந்திய கண்ணனே, உனக்கும் இத் திருமொழியில் ஆதரம் உண்டாகில் எனக்குச் சீடனாகவிருந்து கற்க வேண்டுங் காண்!" என்கின்றார். அவ்வளவு சீரிய குடிகொண்டதாம் இத்திருமொழி என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். இதன் சொல்லின்பமும் பொருளின்பமும் எம்பெருமானையும் வணங்கப்பண்ணி ஈடுபடுத்தும் என்பது குறிப்பு. "ஒரு வஸிட்டன்பாடே ஸாந்தீபினிபாடே தாழநின்று அதிகரிக்கக் கடவ அவனுக்குத் திருமங்கையாழ்வார் பாடே அதிகரிக்கை தாழ்வோ?" என்பது பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானக் குறிப்பு.

இராமாவதாரத்தில் வசிட்ட சீடன் என்றும் கிருஷ்ணாவதாரத்தில் சாந்தீபினி சீடன் என்றும் பேர்பெற்ற பெருமானுக்கு அர்ச்சாவதாரத்தில் பரகால சீடன் என்று பெயர் பெறுதல் பெருமையாம் என்று வியாக்கியான சக்கரவர்த்தியின் கொள்கை. அடுத்து ஆழ்வார் 'திருநறையூர்' என்ற திருத்தலத்துக்கு வரத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

**23. திருநறையூர்[10] :** நறையூர் நம்பியைத் திருமங்கையாழ்வார் ஒருவரே 109 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார்.[11] இப்பாசுரங்களில் வரும் கருத்துகளை நிரல் படுத்திக் கூறுவோம்.

---

10. **திருநறையூர் :** திருக்குடந்தையிலிருந்து திருவாரூர் செல்லும் சாலையில் (சுமார் பத்து கி மீ. தொலைவில்) உள்ளது. நறையூர் நம்பியின் இருப்பிடம் சற்று உயரமான இடத்தில் அமைந்துள்ள இந்த இடம். **'சுகந்தகிரி'** என்பது சுகந்தம் - நறுமணம் இதுவே தமிழில் **'நறையூர்'** என்ற திருநாமம் பெற்றது. **எம்பெருமான்:** நறையூர் நம்பி; சீநிவாசன்; நின்றதிருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார் :** வஞ்சுளவல்லி நம்பிக்கை நாச்சியார். தனிச் சந்நிதி இல்லை. இத்திருத்தலம் கருட சேவைக்குப் பேர் போனது. இங்குள்ள கருடன் **'கல் கருடன்'**; கருங்கல்லால் ஆனவன் பெரி. திரு. 2. 4: 1; 4. 9: 2; 6. 3: 3; 6. 4 to 7. 3 (10 பதிகங்கள்); 7. 7: 4; 8. 2: 2; 10. 1: 5 திருநெடுந். 16, 17; சிறி. திருமடல் (30); பெரி. திருமடல் (38). மேலும் விளக்கம் வேண்டுவோர் சோ.நா. தி. (1) கட்டுரை. 12 காண்க.

11. இந்த ஆழ்வார் 100க்கு மேற்பட்ட பாசுரங்களால் மங்களா சாசனம் செய்த மற்றோர் எம்பெருமான் திருக்கண்ணபுத்து சௌரிராஜன் (102 பாசுரங்கள்).

**இயற்கைக் காட்சிகள் :** இயற்கை எழில் கொழிக்கும் இடங்களில் எல்லாம் எம்பெருமான் கோயில் கொண்டுள்ளான் என்ற உண்மையை நிலை நாட்டுவது போல் இந்த ஆழ்வார் பாசுரங்களில் இயற்கை எழில் சித்திரிக்கப் பெறுகின்றது. நறையூரை அடுத்துள்ள சோலையைப் பற்றி ஆழ்வார் 'நறவுஆர் பொழில் சோலை' (7. 1; 1) 'நறை சேர் பொழில்' (6. 4: 10) என்று கூறுவார். இந்தச் சோலையில் தேமாவின் செந்தளிர்களைக் குயில்கள் கொந்திக் கூவும் (6. 5: 2). அவ்விடத்தின் நிலப்பண்பாலே மீன்கள் மிகவும் பருத்திருக்கும்; அவற்றைப் பிடிக்கின்ற உழவர்கள் இரண்டு கைகளாலும் அவற்றைத் தழுவுவர்; அவை மிக்க வலிவுள்ளவையாதலால், அவை பிடிப்பவர்களை உதறித் தள்ளி விட்டுப் போய்விடும்; அங்ஙனம் தள்ளப் பெற்று விழுந்த உழவர்கள் மீண்டும் அவற்றைப் பிடிக்க எழுந்திருப்பர்; இதைக் கண்ட ஆமை அஞ்சி வரம்பிலே நின்ற மஞ்சள் புதரிலே புகுந்து மறையும் (6. 6: 3); அவ்விடத்தில் எழில் மிக்க மயில்கள் நடனமாட, அதற்கேற்ப வண்டுகள் இசைபாடும் (6. 5: 4).

அங்குள்ள மரத்தின் பொந்துகளில் வாழும் குஞ்சுகட்காக இரை தேடும் பறவைகள் நத்தைகளைத் திரட்டிக் கொண்டு செல்லும் (6. 5: 7); மீன்களை மிகுதியாகப் பிடித்துண்ணும் கொக்குகள் தம் பேடைகளுடன் ஓடிச் சென்று தாமரைப் பூவினுள் தேனைப் பருகா நிற்கும் (6. 5: 8); இன்னும் சோலையில் வண்டுகள் அப்போதலர்ந்த செண்பக மலர்களின் நறுமணம் மிக்க தேனை யுண்டு மகிழும் பூவின்மீது தங்கியிருக்கும் (6. 6; 1); அன்னப் பறவைகள் தம் பேடைகளோடு கூடி அங்குள்ள மகளிரின் நடையழகைக் கண்டு தாமும் அப்படியே நடக்க விரும்பும்; அந்த நடையழகு தமக்கு வாராமையால் வெள்கி ஒதுங்கிப் போகும் (6. 5: 5); சில அன்னப் பறவை

கள் நெய்தல் மலர்களிலுள்ள மதுவைப் பருகித் தாமரைப் பூவைப் படுக்கையாகக் கொண்டு அதிலே போய்ப் படுத் துறங்கும் (6. 5: 6); மெல்லிய பூக்களின்மீதுள்ள வண்டு கள் களித்துத் தேனைப் பருகி நிற்கும்; அழகிய தென்றல் மலர்களை வீசி இறைக்கும்; முல்லை மலர்கள் முறுவலிப் பன போன்று மலரும் (6. 7: 4).

> பள்ளிக் கமலத் திடைபட்ட
> பகுவாய் அலவன் முகம் நோக்கி,
> நள்ளி ஊடும் வயல் (6. 7: 6),

என்பதில் ஒரு புறத்தில் மலர்ந்த தாமரை மலர்களும் மற்றொரு புறத்தில் கூம்பியிருக்கும் ஆம்பல் மலர்களும் விளங்கப் பெற்ற வயலை வருணிக்கும் பாசுரம் இது.[12]

நிலவளத்தைப்பற்றிப் பேசிய ஆழ்வார் நறையூர் நீர் வளத்தையும் குறிப்பிடுவர். இப்பகுதியைப் பொன்னி எனப்படும் காவிரி நதி பாய்ந்து வளமாக்குகின்றது அந் நதி கழனிகளின் வரப்புகளின்மீது மலைப் பகுதிகளி லுள்ள இரத்தினங்களைக் கொணர்ந்து சிதறித் தள்ளுகின் றது. அவற்றுடன் சந்தனக் கட்டைகளையும் அகிற் கட்டைகளையும் எவரும் எடுத்துக் கொள்ளும்படியாகக் கொண்டுவந்து தள்ளுகின்றது. (6. 6:2,5,7); பொன்களை யும் முத்துகளையும் குளிர்ந்த அலைகளின் மூலமாகக் கொழிக்கின்றது. (6.9:6); நறையூரின் அருகிலுள்ள நிலத்தில் கரும்பும் செந்நெலும் போட்டி போட்டு வளர்ந்து பயன் தருகின்றன (6.6 7); நறையூர்ச் சோலை

---

12. இதன் ஆழ்பொருளை பராசரப்பட்டர் விளக்கிய பாங்கையும், திருநறையூர் எழும்பிய வினாவிற்குப் பட்டர் கூறிய விடையும் சுவைக் கத்தக்கவை. (சோழநாட்டுத் திருப்பதிகள் — முதற்பகுதி பக். 133 — 134 காண்க.)

களில் பாக்குக்குலைகள் குவிந்து காணப் பெறுகின்றன (6.6:8).

**தலத்தின் சிறப்பு:** நறையூரின் சிறப்பைப்பற்றியும் பாசுரங்களில் குறிப்புகள் கிடைக்கின்றன. இவ்வூரில் வாய்மையுள்ள அந்தணர்கள் அதிகமாக வாழ்கின்றனர். (6.5:1); நான்மறைகளை முறையே ஓதி சோம வேள்விகளை நடத்துவதைய கடமைகளாகக் கொண்ட அந்தணர்களும் அங்கு நிரம்பியுள்ளனர் (6 7:5); நான்கு மறைகள், ஐந்து வேள்விகள், ஆறு வேதாங்கங்கள், ஏழு இசை இவற்றைப் பொழுது போக்காகக் கொண்ட மறையோரும் அங்கு வாழ்கின்றனர் (6.7:7); வள்ளண்மை வாய்ந்த பார்ப்பனர்களும் அங்கு மிகுதியாக வாழ்கின்றனர்.

**நறையூர் நம்பியின் பெருமை:** நறையூர் நம்பியின் பெருமைகளைப் பேசும்போது ஆழ்வாரின் பக்திவெள்ளம் கரை புரண்டோடுகின்றது. முதலில் எம்பெருமானின் திருமேனியைச் சிந்திக்கின்றார் ஆழ்வார்.

பவ்வநீர் உடைஆடை ஆகச் சுற்றி
பார்அகலம் திருவடியா, பவனம் மெய்யா,
செவ்விமா திரம்எட்டும் தோளா, அண்டம்
திருமுடியா நின்றான் (6.6:3)

[பவ்வம்-கடல்; பார்-பூமி; பவனம்-காற்று; செவ்வி-அழகிய; மாதிரம்-திசைகள்; அண்டம்-அண்டபித்தி]

"விபுவான எம்பெருமானுக்குக் கடல் திருவரையில் உடுக்கும் ஆடையாகின்றது; நிலப்பரப்பெல்லாம் திருவடியாகின்றது; வாயு மண்டலம் முழுவதும் (ஏன்? விண்வெளி முழுவதும்) திருமேனியாகின்றது. திசைகளெட்டும் திருந்தோள்களாகின்றன; அண்டகடாகம் திருவபிடேகமாகின்

றது'' என்று உலக வடிவமாக இருக்கும் நிலைமையை உருவகத்தாலே அநுபவிக்கின்றார் ஆழ்வார். இத்திரு மேனி இன்னொரு பாசுரத்தில்,

நின்ற வரையும் கிடந்த கடலும்
திசையும் இருநிலனும்
ஒன்றும் ஒழியா வண்ணம் எண்ணி
நின்ற அம்மானார் (6. 10:7)

[வரை-மலை; இருநிலம்-பரந்தபூமி; ஒன்றும்-சிறிதும்; ஒழியாவண்ணம்-பாழாகாதபடி].

என்று காட்டப் பெறுகின்றது. அசித்தும் இறைவன் திருமேனியாகவுள்ளது என்ற வைணவ தத்துவத்தின் சரீர-சரீரி பாவனை ஈண்டுக் காட்டப் பெறுகின்றது. இங்ஙனம் பரத்துவநிலையிலுள்ள எம்பெருமானே நறையூர் நின்ற நம்பியாக உள்ளான் என்பது ஆழ்வார் கருத்தாகும்.

அடுத்து, எம்பெருமானின் அவதாரச் செயல்களில் இழிகின்றார் ஆழ்வார். கடலைக் கடந்து தேவர்கட்கு அமுதம் ஈந்தருளியவன்; பரமபாகவதனான பிரகலாதாழ்வானுக்கு நேர்ந்த இடர்களைப் பொறுக்கமாட்டாது நரசிங்கமூர்த்தியாகத் தூணில் தோன்றி இரணியனின் முரட்டுமார்பைத் திருநகங்களால் பிளந்தெறிந்த புனிதன்; மச்சாவதாரம் எடுத்து ஹயக்கிரீவன் அபகரித்துச் சென்ற திருமறைகளை மீட்டு நான்முகனிடம் அளித்தவன்; பரசுராமனாக அவதரித்து க்ஷத்திரியர்களை இருபத்தொரு தலைமுறையாக ஒழித்த திருத்தோளன்; வாணனின் ஆயிரந்தோள்களாகிய காட்டை அறுத்துத் திருவுள்ளம் உகந்தவன்; வாமன மாணியாகவந்து மாவலியிடம் மூவடி மண்இரந்து பெற்று, திரிவிக்கிரமனாக வளர்ந்து மூவுலகங்களையும் தனதாக்கிக்கொண்டவன்.

தன்னுருவம் ஆரும் அறியாமல் தான் அங்கோர்
மன்னும் குறளுருவில் மாணியாய் மாவலிதன்
பொன்இயலும் வேள்விக்கண் புக்கிருந்து போர்
வேந்தர்
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி
'என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண்
மன்னா! தரு'கென்று வாய்திறப்ப மற்றவனும்
'என்னால் தரப்பட்ட' தென்றலுமே அத்துணைக்கண்
மின்னார் மணிமுடிபோய் விண்தடவ மேலேடுத்த
பொன்னார் கனைகழற்கால் ஏழுலகும் போய்க்
கடந்து அங்
கொன்னா அசுரர் துளங்கச் செலநீட்டி
மன்னிவ் அகலிடத்தை மாவலியை வஞ்சித்து
தன்னுலகம் ஆக்குவித்த தாளானை'

—பெரி. திரு. மடல் 60-61

என்று இச்செயலை அற்புதமாகக் காட்டுவர்.

இந்த எம்பெருமான் இராவணனைத் தொலைத்து வீடணனுக்கு இலங்கையரசை நல்கியவன்; வராக அவதாரம் எடுத்துப் பூமியை அண்ட பித்தியினின்றும் விடுவித்தெடுத்த பெருமான். கிருட்டிணாவதாரத்தில் இந்த ஆழ்வாருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. ஆகவே அந்த அவதாரத்தைப் பல்வேறு நிலைகளில் அநுசந்தித்து அகம் மிக மகிழ்கின்றார். உறியார்ந்த வெண்ணெய் உண்டு உரலில் கட்டுண்டல், ஏழ்விடையை வென்று பின்னையை மணத்தல், பூதனையிடம் பாலுண்ணும் வியாஜத்தால் அவள் உயிரையும் உண்ணல், இரட்டை மருத மரங்களைச் சாய்த்தல், பார்த்தனுக்குத் தேரூர்ந்து பாரதப் போரை நடத்துதல், குவலயாபீடம் என்ற யானையை முடித்தல், மல்லர்களை மாய்த்தல், கன்றுகள் மேய்த்துக் குழலூதுதல், காளியனை அடக்குதல், கஞ்சனை மாய்த்தல் கோவர்த்தனத்தைக் குடையாக எடுத்துக்கல்மாரி காத்தல்,

குதிரை வடிவாய் வந்த கேசியைத் தொலைத்தல், காண்டவத்தைத் தீமூட்டல், கொக்கு உருவம் கொண்டு வந்த பகாசூரனைப் பிளந்து மாய்த்தல் போன்ற கண்ணனின் தீரச் செயல்களையெல்லாம் நினைந்து போற்றுவர். இங்ஙனம் செயற்கரியனவற்றைச் செய்த பெருமானே நறையூர் நின்ற நம்பி.

இவற்றைத் தவிர, வியூகமூர்த்தியாக நின்று அருஞ் செயல் புரிந்தவற்றையும் அநுசந்திக்கின்றார். பாலனாகி ஏழுலகுண்டு ஆலிலைமேல் அறிதுயில் கொண்டவன்; 'ஆதிமூலமே!' என்று கூவியழைத்த கஜேந்திரன் முன் தோன்றி அவன் சமர்ப்பித்த 1008 தாமரை மலரை ஏற்று முதலையைக் கொன்றொழித்தவன்; பாற்கடலைக் கடைந்து விண்ணவர் அமுதுண அளித்துப் பெண்ணமுதாம் பெரிய பிராட்டியைத் தான் கொண்டவன்; அன்னமாய் வந்து அருமறைகளை ஓதுவித்து அவற்றைக் காத்தவன்.

**நெஞ்சிற்கும் பிறர்க்கும் உபதேசம் :** இந்த ஆழ்வார் நெஞ்சிற்கு இரண்டு பதிகங்களாலும் (6. 4; 6. 9), பிறருக்கு ஒரு பதிகத்தாலும் (6. 6) உபதேசம் செய்வதைக் காண்கின்றோம். திருநறையூர் நம்பி சந்நிதி '**மணிமாடக் கோயில்**' என்று வழங்கி வந்ததாகத் தெரிகின்றது.[13] செம்பியன் கோச்செங்கணன் என்னும் ஓரரசன் நம்பிக்குத தொண்டு பூண்டு உய்ந்து போனான். "நம்பி ஒருவாள் கொடுத்தருள அத்தைக் கொண்டு பூமியை யடையத் தன் காலின் கீழே இட்டுக் கொண்டான் என்றொரு பிரஸித்த உண்டாய்த்து" என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம். எம்பெருமானின் திருவடிகளைப் பெற விருப்பமுடையவர்களை நோக்கித் திருநறையூர் மணிமாடம் சேருமாறு உலகிற்கு உபதேசிக்கின்றார் (6. 6).

13. திருநாங்கூர் மணிமாடக் கோயில் வேறு.

எம்பெருமானின் திருவடியினை வணங்குமாறு ஒரு தடவைக்கு ஒன்பது தடவையாக உபதேசிக்கின்றார் (6.9). இப்படி உபதேசிக்கும்போது பிராட்டியாரின் புருஷ காரத்தை மறந்தாரிலர்.

மின்னொத்த நுண்மருங்குல்
மெல்லியலைத் திருமார்பில்
மன்னத்தான் வைத்துகந்தான் (6)

[மின் ஒத்த - மின்னலைப் போன்று; மருங்குல் - இடை; மன்ன - பொருந்தும்படி.]

என்று ஆழ்வார் கூறுவதைக் காணலாம். "எம்பெருமானின் திருவெட்டெழுத்து மந்திரமே நமக்கு நன்று; தொண்டீர், அடியேன் 'நமோ நாரணமே' என்று அநுசந்தியா நின்றேன். நீங்களும் அதனையே சொல்லுங்கள்" (6. 10; 7) என்கின்றார். ஒரு திருமொழியில் (6. 4) மாதர்மீது மையல் கொள்வதும், அவர்கள் வெறுப்பதும், அவமானப்படுத்திப் பேசுவதுமான செயல்கட்கு இடம் கொடாமல் திருநறையூரைச் சேவிக்குமாறு நெஞ்சிற்குப் பணிக்கின்றார். திருவேங்கடத்தில் எழுந்தருளியிருப்பவனும், திருக்குடந்தையில் பள்ளி கொண்டிருப்பவனும் ஆகிய எம்பெருமான்களையெல்லாம் நறையூரில் கண்டதாகப் பேசுகின்றார் (6. 8). மற்றும் ஒரு திருமொழியில் பிறப்பைப் போக்குமாறும், தம்மீது திருவருள் பாலிக்குமாறும், திருவடிகளைச் சேவிக்க அருளுமாறும் இன்னும் பல படியாகவும் (7. 1) நெஞ்சுருக வேண்டுகின்றார். 'நாடேன் உன்னையல்லால் நறையூர் நின்ற நம்பி' என்றும் 'நாண்தான் உனக் கொழிந்தேன்' என்றும், 'என் சிந்தை தன்னால் நானே எய்தப் பெற்றேன்' என்றும் (7-2) மிக்க எக்களிப்போடு பேசுகின்றார். இத் திருத்தலத்தைப் பற்றின இறுதிப் பதிகத்தில் (7. 3) 'கனவிற் கண்டேன்; இன்று கண்டமையால் என் கண் இணைகள் களிப்பக் களித்தேனே' என்றும், 'என்

அன்பனையன்றி ஆதரியேனே' என்றும், 'எந்தையை எந்தை தந்தை அம்மானை எம்பிரானை எத்தால் மறக்கேனோ?' என்றும், 'தண் தாமரைக் கண்ணனுக்கு அன்றி என் மனம் தாழ்ந்து நில்லாது' என்றும் சொல்லிச் சொல்லி களிப்பெய்துகின்றார். அடுத்து திருச்சேறை செல்லத் திருவுள்ளம் கொள்ளுகின்றார்.

**24. திருச்சேறை**[14] : திருமங்கையாழ்வார் மட்டிலுமே இத்திருத்தலத்தை மங்களாசாசனம் செய்துள்ளார். எம்பெருமானுக்கு அடிமைப்படுவதைக் காட்டிலும் அவனுக்கு அடிமைகளான பாகவதர்கட்கு அடிமைப்படுதல் சிறந்தது என்பது வைணவதத்துவம். பகவத் பக்தியின்

---

14. **திருச்சேறை**: திருக்குடந்தை - திருவாரூர் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து சுமார் 12 கி.மீ தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உள்ளது. (திருநறையூருக்குத் தென்திசையில் 3.கி மீ. தொலைவில் உள்ளது). **எம்பெருமான்** : சாரநாதன்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். **தாயார்** : சாரநாயகி (இத்திருக்கோயிலில் ஐந்து நாச்சியார்கள் உள்ளனர்).

இத்தலத்து **எம்பெருமான்**; சாரநாதன்; **தாயார்**, சாரநாயகி; **தீர்த்தம்**. சாரதீர்த்தம்; நிலம் சாரக்ஷேத்திரம்; ஐந்து சாரமுள்ளபொருள்கள் ஒருசேர அமைந்திருத்தலால் இத்தலம் '**திருச்சேறை**' என்ற திருநாமம் பெற்றது. வடமொழியில் 'பஞ்ச ஸார க்ஷேத்திரம்' என்று வழங்குகின்றது. இங்ஙனம் சாரமுள்ள பொருள்களையுடைய இத்திருத்தலத்தில் காவிரி தவம் செய்து கங்கையைவிடச் சிறப்புப் பெற்றனள் என்பர். பெரி. திரு.7.4 (பதிகம்). 10.1;6; சிறி. திருமடல் (39); பெரி. திருமடல் (56) மேலும் விவரம் வேண்டுவோர் **சோ.நா.தி-**(1) கட்டுரை-13 காண்க.

உறைப்பே பாகவதபக்தியில் வெளிப்படும். இத் திருத்தலம் பற்றிய திருமொழியில் ஆழ்வார் 'திருச்சேறையையும் அவ்விடத்து எம்பெருமானையும் பணிகின்ற பாகவதர் களே எனக்கு உத்தேச்யர்' என்று அருளிச் செய்கின்ற முகத்தால் அத்திருப்பதியினிடத்தும் அங்கு எழுந்தருளி யிருக்கும் பெருமானிடத்தும் ,தமக்குள்ள பக்திப்பெருக்கை வெளியிடுகின்றார் (7.4).

கண்சோர வெம்குருதி வந்துஇழிய
 வெம்தழல்போல் கூந்த லாளை
மண்சோர முலைஉண்ட மாமதலாய்!
 வானவர்தம் கோவே! என்று
விண்சேரும் இளம்திங்கள் அகடுஉறிஞ்சு
 மணிமாடம் மல்கு செல்வத்
தண்சேறை எம்பெருமான் தாள்தொழுவார்
 காண்மின்-என் தலைமே லாரே (1)

[சோர-சுழலமிட்டுத் தளர; குருதி-இரத்தம்; இழிய-பெருக; தழல்-நெருப்பு; மாமதலாய்-இளம்பிள்ளையே; அகடு-கீழ்வயிறு; உறிஞ்சு-அளாவுகின்ற; மல்கு-நிறைந்திருக்கப்பெற்ற; தாள் - திருவடிகள்; தலைமேலார்-தலைமேல் வீற்றிருப்பர்].

என்பது முதற் பாசுரம்; "பூதனையை முடித்த சிறு குழந்தாய்! வானவர்தம் கோவே!" என்று சொல்லி அவனுடைய பரத்துவ சௌலப்பியங்களைப் போற்றி உருகுகின்ற பாகவதர்கள் எவரோ அவர்களே என் தலை மேல் வீற்றிருக்க உரியார்" என்கின்றார்.

இத்தலத்து எம்பெருமான்மீது திருவாய் மலர்ந் தருளிய பாசுரங்களில் ஆழ்வாரின் பக்திவெள்ளம் - பாகவதர்களின் மீதுள்ள ஆதரம் - கரை புரண்டோடு கின்றது. பாசுரங்களில் எம்பெருமான் இராமாவதாரம்,

கிருட்டிணாவதாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரங்களில் நிகழ்த்திய வீரச் செயல்கள் குறிப்பிடப் பெறுகின்றன. 'இத்தலத்து எம்பெருமான் பெரிய பிராட்டியாரைத் திருமார்பில் வைத்துக்கொண்டிருப்பவன்; கன்றினால் விளவெறிந்தவன்; இவனே திருச்சேறையில் நித்திய வாசம் செய்பவன். இவன்திருவடியைச் சேவிப்பவர்கள் ஒரு நொடிப் பொழுதும் என் நெஞ்சகத்தை விட்டு நீங்கார்; இதிலுள்ள 'எப்பொழுதும் என்மனத்தே இருக்கின்றாரே' என்பதற்குப் பெரிய வாச்சான் பிள்ளை, பாகவதர்கள் ஆழ்வார் திருவுள்ளத்தில் நிறைந்திருப்பார்களாதலால் சிந்தைக்கினிய பெருமானுக்கு அங்கு இடம் இல்லை என்று நயம்படப் பொருளுரைப்பர்(2).

''சூர்ப்பணகையின் 'மூக்கும் காதும் வெம்முரண் முலைக்கண்களும்' போக்கிய வீரனே?'' என்று சொல்லி எம்பெருமானுடைய திறலில் ஈடுபட்டு அவனது திருக்கழல் இணைகளையே துதித்து மலர்களையும் தீர்த்தங்களையும் சமர்ப்பிக்கும் அடியார்கள் நித்தியசூரிகளைக் காட்டிலும் சிறந்தவர்களாவர் (3); 'தேர்வீரனான இராவணனுடைய இலங்கைமா நகரைப் பொடிபடுத்தின பெருவீரனே!' என்று சொல்லித் திருச்சேறை எம்பெருமானுடைய பலப்பல திருநாமங்களை வாயாரப் பாடும் பெருமையுடையார் எவரோ அவரை ஒருநாளும் பிரியேன்' (4);'பிரகலாதாழ்வானைக் காத்தருளவேண்டி நரசிங்கமூர்த்தியாய்த் தூணில் தோன்றி இரணியனின் மிடுக்கைப் பொடித்த எம்பெருமானுக்கே அடிமையாயிருப்பேனேயன்றிச் சமணர் பௌத்தர் முதலானவர்கள் திரளில் சேரக்கடவேனல்லேன்?'(5)

'ஆதிவராக மூர்த்தியாய்த் தோன்றி அண்டபித்தியில் சேர்ந்திருந்த பூமியை அதினின்றும் விடுவித்துக் கொணர்ந்த பண்பாளா!' என்று இடையறாமல் சொல்லிக்கொண்டு நின் திருவடிக்கே அடிமையானேன்;

நின் திருவடிகளே எனக்குத் தஞ்சம்; நின்னையன்றி வேறொரு புகலையுடையேனல்லேன்; இது சத்தியம்; திருச்சேறை எம்பெருமானின் அடியார்களைச் சேவித்த மாத்திரத்தில் என்னுடைய கண்களும் நெஞ்சும் களிக்கின்ற படியைக்காணுங்கள்' (6); 'திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் பெருமானே! அஞ்சன மலை போன்ற குளிர்ந்த வடிவையுடைய மாயனே!' என்று சொல்லிக்கொண்டு திருச்சேறை எம்பெருமானின் திருவடிகளையே சிந்தித்துக் கொண்டிருக்கும் என்னுடைய எல்லா உணர்வுகளையும் தன் வசமாக்கிக் கொண்ட அப்பெருமானுக்கு ஆட்பட்டவர் எவரோ அவர்கள் திறத்தில் என் அன்பு பெருகுகின்றது' (7); 'விண்ணவரும் மண்ணவரும் ஈண்டித் தொழும்படியான திருவடிகளையுடைய திருச்சேறை எம்பெருமானைக் கண்ணாரக் கண்டும் கையாரத் தொழுதும் பரவசப் படுகின்ற வைணவர்களை நெஞ்சார நினைத்த மாத்திரத்தில் எம பயத்திற்கும் உட்படேன்' (8); 'பாகவதர்களைச் சேவிக்கப் பெற்றதனால் தமக்குண்டான எல்லை கடந்த மகிழ்ச்சிப் பெருக்கைப் பேசி, வஞ்ச நெஞ்சனான எனக்கு இப்படிப் பட்ட மகிழ்ச்சியை அநுபவிக்கும்படியான பேறு எங்ஙனம் வாய்த்ததோ? தெரியவில்லையே' (9) என்று வியப்பெய்துகின்றார் ஆழ்வார்.

இத்திருமொழியைச் சேவித்தால் பெறும் பயனையும் கூறுகின்றார் ஆழ்வார். 'திருச்சேறை எம்பெருமானைச் சேவிக்கச் செல்பவாகள் வேறு மலர்களைத் தேட வேண்டா; இத்திருமொழிப் பாசுரங்களை அநுசந்தித்தாலே பூவிட்டதற்கும் மேலாக எம்பெருமானின் திருவுள்ளம் உகக்கும்' என்கின்றார். அடுத்து திருக்குடந்தைக்குப் போகச் சித்தமாகின்றார்.

# 11. சோழநாட்டுத் திருத்தலப் பயணம்

திருச்சேறையைச் சேவித்த திருமங்கையாழ்வார் (25) **திருக்குடந்தைக்கு**[1] வருகின்றார். திருமங்கையாழ்வார் 15 தனி உதிரிப் பாசுரங்களாலும் (பெரிய திருமொழி), திருக்குறுந்தாண்டகத்தில் இரண்டு பாசுரங்களாலும், திருநெடுந்தாண்டகத்தில் மூன்று பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்துள்ளார். இரு மடல்களிலும் இத்தலத்தைப்பற்றிய குறிப்பு வருகின்றது. திருக்கோயி லின் இறைவன் சந்நிதியும், முன் மண்டபங்களும் ஓர் இரதம்போல், அமைந்துள்ளன. மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் சக்கரங்கள், இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகள் இருக்கின்றன. இதனை நோக்கிய திருமங்கையாழ்வாரும் இத்திருக்கோயில் எம்பெரு மானைப் பற்றி மங்களாசாசனம் செய்துள்ள **திருஎழுக் கூற்றிருக்கை** என்ற பிரபந்தமும் 'இரதபந்தம்' என்ற சித்திரக் கவியாக அமைந்துள்ளனர். இப்பிரபந்தம் சரணாகதித் தத்துவத்தை விளக்கும் பாசுரமாகும்.

---

1. **திருக்குடந்தை** : கும்பகோணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து மேல் திசையில் ஒரு கல் தொலைவில் உள்ளது சார்ங்கபாணி திருக் கோயில். ஊருக்கு நடுவே நடுநாயகம்போல் இருப்பது; கும்பகோணத்திலுள்ள எல்லாத் திருக் கோயில்களையும்விடப் பெரியது. கோபுரமும் அப்படியே மிகப் பெரிதாக அமைந்துள்ளது. பதினொரு மாடங்களைக் கொண்டது. **எம்பெரு மான்** : சார்ங்கபாணி, ஆராவமுதன்; சயனத்

திருக்குடந்தை
அந்தணர் மந்திர மொழியுடன் வணங்க
ஆடுஅரவு அமளியில் அறிதுயில் அமர்ந்த
பரமநின் அடியிணைப் பணிவன்
வரும்இடர் அகல மாற்றோ வினயே

என்று ஈற்றடிகள் அமைந்து இத்தத்துவத்தை விளக்குதல் காணலாம்.

திருமங்கையாழ்வார் ஆரா அமுதனிடம் அளவற்ற ஈடுபாடு கொண்டவர். இவர் இந்த எம்பெருமானை 'குடந்தை உத்தமன்' (1 5:4) என்கின்றார். 'தண் குடந்தை நகராளன்' (5.5:7) என்று பேசுகின்றார். 'கொந்துலாம் பொழில் சூழ்க் குடந்தை தலைக் கோவினை ...மறக்கேனே' (7.3:3) என்று உளம் உருகப் பாடுகின்றார்.

தூவிசேர் அன்னம் மன்னும்
சூழ்புனல் குடந்தை யானைப்
பாவியேன் பாவி யாது
பாவியேன் ஆயி னேனே
—திருக்குறுந். 14

[தூவி - சிறகு; துணை - பெண் அன்னம்]

---

திருக்கோலம் (உத்தியோக சயனம், உத்தான சயனம்); பாஸ்கர க்ஷேத்திரம். தாயார்: கோமள வல்லி. திருமங்கையாழ்வார் இத்திருத்தலத்திற்கு பதிகமாகப் பாசுரங்கள் அமைக்காதது ஏனோ? பெரி திரு. 1.1:2; 7;1.5:4; 2.4:1; 3.6:5,8; 5.5:4; 6.8:9; 6.10:1; 7.3:3; 7.6:9; 8.9:5; 9.2:2; 10.1:6; 10.10:8; 11.3:4; 11.6:9; திருக்குறுந் 6,14; திருநெடுந் 17,19,29; திருவழுக் 1; சிறி. திருமடல் (39).

என்பது திருக்குறுந்தொகைப் பாசுரம். 'பழுதே பலகாலும் போயின' என்று அங்கலாய்க்கின்றார், திருவுக்கும் திருவாகிய அழுந்தையில் மன்னி நின்ற அஞ்சனக் குன்றம் தன்னைச் சேவிக்கும் போதும், இந்த நகர் எம்பெருமானை ஆழ்வார் மனக்கண்முன் காட்சி தருகின்றார்.

பேரானை, குடந்தைப்
பெருமானை இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள்
மலர்மங்கை நாயகனை
ஆரா இன்னமுதைத்
தென்அழுந்தை மன்னிநின்ற
காரார் கருமுகிலைக்
கண்டு களித்தேனே (7.6:9)

[இலங்கு - விளங்குகின்ற; மலர்மங்கை - இலக்குமி; ஆரா - தெவிட்டாத; அழுந்தை - திருவழுந்தூர்; முகில் - மேகம் (உருவகம்)]

என்று எக்களிப்புடன் பாடுவதைக் காணலாம்.

எம்பெருமான் ஆசாரியனாக நின்று அவனிடம் திருமந்திர உபதேசம் பெற்ற ஆழ்வார்,

தூவிசேர் அன்னம் துணையொடு புணரும்
சூழ்புனல் குடந்தையே தொழுதுஎன்
நாவினால் உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம் (1.1:2)

[தூவி - சிறகு; துணை - பெண் அன்னம்]

என்று பாடுகின்றார்; ''ஆரா அமுதப் பெருமானைத் திருக்குடந்தையில் சேவித்தேன்; தீய பொருள்களைப் பேசின வாயாலே திருமந்திரத்தை அநுசந்தித்து ஸ்வரூபம்

பெற்றேன்'' என்று மகிழ்கின்றார். ''துவிசேர் அன்னம் துணையொடு புணரும்'' - என்றது பெருமாளும் பிராட்டியும் பிரியாது வாழும் சேர்த்தியைச் சொன்னபடியாம். ஈண்டு அன்னம் என்றது பெருமானை; துணை என்றது பெரிய பிராட்டியாரை. 'நம்முடைய குறையைப் பொறுப்பிப்பவளும் பொறுப்பவனும் பிரியாது வாழும் இடம் திருக்குடந்தை' என்ற படியாம்.

ஏனைய திருப்பதிகளைக் காட்டிலும் திருக்குடந்தையில் இந்த ஆழ்வாருக்கு ஆதரம் மிக்கது. முதல் திருமொழியில் மேற்கூறியவாறு பேசிய ஆழ்வார் இறுதிப் பிரபந்தமாகிய திருநெடுந்தாண்டகத்திலும் ''தண்குடந்தைக் கிடந்த மாலை, நெடியானை அடிநாயேன் நினைந்திட்டேனே'' (நெடுந்—29) என்று நாயகி நிலையிலும் திருக்குடந்தைக் கிடந்த மாலைப் பேசித் தலைக்கட்டுவதால், இந்த ஆதரம் உறுதிப்படுகின்றது. பரகால நாயகி நிலையிலும்,

பெற்றேன்வாய்ச் சொல்இறையும்
பேசக் கேளாள்;
பேர்பாடி தண்குடந்தை
நகரும்பாடி
பொற்றா மரைக்கயம்நீர்
ஆடப் போனாள்;
பொருஅற்றாள் என்மகளும்
பொன்னும் அஃதே

—நெடுந்-19.

[இறை - சிறிது; பேர் - திருப்பேர்நகர்; பொற்றா மரைக்கயம் - திருக்குளம்; பொரு - ஒப்பு]

என்று தாய்ப் பாசுரமாகப் பேசுவர் ஆழ்வார். இங்கு ஆழ்வார் நாயகி எம்பெருமானையே 'பொற்றாமரைக்-

கயமாகப்' பேசுகின்றாள் என்பது பொருந்தும். அகப் பொருளில் புணர்ச்சியைச் **சுனையாடல்** என்றும், **நீராட்டம்** என்றும் பேசுகின்றோமல்லவா? எம்பெருமானோடு கலவி செய்ய விரும்புவதையோ இங்குப் பொற்றாமரைக் கயத்தில் நீராடப் போவதாகச் சொல்லுகின்றாள். இங்கு இன்சுவை மிக்க பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கி யானம்: "மகள் அணியரங்கம் ஆடுதுமோ? என்று ஊரைச் சொன்னாள்; தான் பொற்றாமரைக் கயமென்று பெரிய பெருமாளைச் சொல்லுகின்றாள்; 'தயரதன் பெற்ற மரகத மணித்தடம் (திருவாய். 10.1:8) என்றும் 'வாசத்தடம் போலே வருவானே' (ஷை. 8.5:1) என்றும் தடாகமாகச் சொல்லக் கடவதிறே" என்பதாம். மேலும் 'உம் பொன்' என்கின்றது அல்லாத ஆழ்வார்கள்; 'மத்துறு கடைவெண்ணெய் களவினிலுரலிடை யாப்புண்டு, எத்திறம்! உரலினோடிணைந்திருந்தேங்கிய எளிவே' (ஷை—1.3:1) என்று அவதாரத்தை அநுசந்தித்தே அவர்கள் மோகித்தது! அர்ச்சாவதாரத்திலிறே இவள் மோகிப்பது" என்ற வியாக்கியானப்பகுதியும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. அடுத்து, ஆழ்வார் திருவிண்ணகர் செல்லச் சித்தமாகின்றார்.

26. **திருவிண்ணகர்:**[2] தென்திருவேங்கடம் என்று வழங்கப்பெறும் இத்திருத்தலத்தைத் திருமங்கையாழ்வார் மூன்று திருமொழிகளாலும் (6.1;6.2;6.3) ஒரு தனிப் பாசுரத்தாலும் மங்களாசாசனம் செய்துள்ளார். பெரிய திருமடலில் ஆழ்வார், 'விண்ணகருள் பொன்மலை' என்று எம்பெருமானைப் போற்றுகின்றார்.

---

2. **திருவிண்ணகர்:** இதை ஒப்பிலியப்பன் சந்நிதி என்றும் வழங்குவர். கும்பகோணத்திலிருந்து 6 கி. மீ. தொலைவிலுள்ளது. அடிக்கடி நகரப் பேருந்து வசதி உண்டு. தொலைவிலுள்ள சில ஊர்கட்குச் செல்லும் பேருந்துகளும் இச் சந்நிதி

**முதல்திருமொழி:** (6.1): சம்சாரத்தில் தமக்கு உண்டான வெறுப்பையும் விண்ணகரப்பனிடம் தமக்கு உண்டான விருப்பையும் அவனது திருவுள்ளத்தில் படும்படி ஒருமுறைக்கு ஒன்பது முறை விண்ணப்பிக்கின்றார். "விண்ணகர் மேவிய எம்பெருமானே! இவ்வுலகமெல்லாம் பிறர் வசப்பட்டிருக்கையில், நின்திருவடிகளைப் பரப்பி இலச்சினை பட நடந்து அவற்றை ஆட்படுத்திக் கொண்டது போலவே, அடியேனையும் ஆட்படுத்திக் கொள்ள வேண்டும் (1); பாற்கடல் கடையப்பட்டபொழுது அதில் தோன்றின நஞ்சினை அரனுக்கு உண்ணக் கொடுத்தாய்; புறவமுதாகிய உப்புச்சாற்றை உம்பர்கட்களித்தாய்; 'சீதக்கடலுள் அமுது' அன்ன பிராட்டியாராகிய உள்ளமுதினை நீ ஏற்றுக்கொண்டாய் (2); கரிய திருமேனியை உடையாய், உன் திருமேனியில் சிவனுக்கு வலப்புறத்தில் இடம் அளித்தாய்; திரிபுரம் எரித்தபோது அவனுக்கு அழல்நிற அம்பானாய் (3); பிரளய காலத்தில் இருசுடர்களையும் பல்வேறு உலகங்களையும், அவற்றிலுள்ள பிராணிகளையும் நின் திருவயிற்றில் வைத்துப் பாலகனாய் ஓர் ஆலிலையில் திருக்கண் வளர்ந்தாய் (4); ஒலிகட்கெல்லாம் மூலகாரணமான அகரமாக இருக்கின்றாய்(5); அசித்தைத் திருமேனியாகக் கொண்டாய்; நான்மறை

வழியாகச் செல்லும். நாகேஸ்வரம் இருப்பூர் நிலையத்திலிருந்து 3கி. மீ. தொலைவிலுள்ளது. இங்கிருந்தும் இத்திருத்தலத்திற்குச் செல்லலாம். **எம்பெருமான்:** ஒப்பிலியப்பன், திருவிண்ணகரப்பன், வேங்கடாசலபதி; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம். கிட்டத்தட்ட எட்டடி உயரம்; கம்பீரமான தோற்றம்; பால்வடியும் திருமுகம். **தாயார்:** பூமிப்பிராட்டியார்; இருந்த திருக்கோலத்தில் வடக்கு நோக்கிய திருமுகமண்டலம் கொண்டுள்ளார். இலக்குமி தேவிக்குத் தனிக்கோயில் இல்லை. பெரி. திரு. 6.1;6.2;6.3 (பதிகங்கள்); 10.1;8.திருநெடுந்.29; சிறி. திருமடல் (39) பெரி. திருமடல் (53).

களின் வடிவமுடையாய் (6); பிரணவத்தின் பொருளாகத் திகழ்கின்றாய் (7); மங்கையர்பால் காதலைப் பெருக்கிச் சிற்றின்பத்தை நுகர்வதால் பின்னையும் வரும் துன்பத் திற்குக் காரணமான கர்மத்தை நினைந்து அஞ்சி நின் திரு வடிகளைச் சரண் அடைகின்றேன் (8); பிறப்பு-இறப்பு வட்டங்களில் உள்ள துன்பங்களை நினைந்து நின் திருவடி களை அடைந்தேன் (9); உன்னைச் சேவிப்பதாகிய ஒரு பேற்றினை எனக்கு அருள் செய்வாயேல், அடியேன் 'இருள் தருமா ஞாலத்துள் இனிப் பிறவியான் வேண்டேன்' என்று பேசுகின்றார்.

**இரண்டாம் திருமொழி (6 2):** இத்திருமொழியில் ஆழ்வார் தான் அநாதிகாலம் சம்சாரத்தில் உழன்றபடி யையும், மேல்வரக் கடவதான நரக யாதனையை நினைந்து அஞ்சுகின்ற படியையும் பரக்க விண்ணப்பம் செய்கின் றார். "திருவிண்ணகரத்து எம்பெருமானே, நின்னைத் துதித்தற்குரிய சொற்களைக் கொண்டு அற்பர்களைத் துதிக்கும் எண்ணமுடையவனானேன் ஐம்புலஇன்பங்களை நுகர்ந்து தீர்த்தேன்; ஒரொரு காரணத்தை முன்னிட்டுப் பிறரிடமுள்ள அன்பையும் பகையையும் வெறுத்தொழித் தேன்; உன்னைச் சரணம் அடைந்தேன் (1); நெடுங்காலம் நின்னை நினையாதுமறந்தேன்; அசித்திலும் கடைகெட்ட வனானேன்; பிறப்பிறப்பு வட்டத்தில் சிக்கித் தடுமாறி னேன்; இன்று நின்திருவடிப்பேற்றிற்குத் தகுதியானேன் (2); இரண்டு விபூதிகட்கும் நாதனே, மிக்க அன்புடன் என் உள்ளத்தை இடமாகக் கொண்டு தேனைப்போல் இனிய னாயிருப்பவனே, 'தீண்டாவழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறி தசையும் வேண்டா நாற்றமிகும் உடல்' பயனற்றமை நன்கறிந்து நின்னைச் சரண் அடைந்தேன் (3); பெற்ற பிள்ளைகள் மனைவியர் முதலிய சுற்றத்தார் நான் இறக்கும் போது உதவி செய்பவரல்லர் என்பதை யறிந்து அவர்களைக் கைவிட்டேன்; நீ பார்த்தனுக்கு

அருளிய சரமசுலோகம் என்ற ஒள்வாள் உருவி வினைத் தூறுகளை வேரறுத்தேன்; நின்னைச் சரண் அடைந்தேன் (4); இதுகாறும் நீர்க்குமிழிகள்போல் இருந்து கழிந்த அரசர்கள் பல்லாயிரம் பேர்கள் ''இறந்தனர்'' என்ற சொல்லுக்கு இலக்காயினர். ஆகவே, உலக வாழ்வில் வெறுப்புற்று நித்திய ஐசுவரியம் பெறுவதற்காக நின்னை வந்தடைந்தேன் (5); நல்வழி நடக்க உடன்படாத ஐம் பொறிகளும் போகும் வழியில் போகேன்; நீயே மல்லர் களை அடக்கிய மாமல்லன்; மதிள் நீர் இலங்கையழித்த வில்லன்; எனவே, நின்னைச் சரண் அடைந்தேன் (6); ஐம்பொறிகளாகிய படுகொலைக்காரர் கையில் இனி ஒரு நொடிப் பொழுதும் நலிவு பட முடியாது; இந்தக் கணக் கிலே அடியேனை உனதருளால் வாங்கிவிட வேண்டு கின்றேன் (7); வினையார் சுற்றத்தார்போல் சுற்றிக் கொண்டு என்னை வெந்நரகில் தள்ள விரைகின்றனர்; ஆகவே, நின்னைச் சரண் அடைந்தேன் (7); நீயோ பிராட்டியாரும் நித்தியசூரிகளும் விரும்பிப் போற்றும் பெருமையுடையவன்; கழுத்திலே ஓலை கட்டித் தூது சென்றமையால் ஏற்றம் பெற்றவன்; திருமறைகளால் போற்றப் பெறுபவன் (9); ஆகவே நின்னைச் சரண் அடைகின்றேன்'' என்கின்றார்.

**மூன்றாம் திருமொழி** (6. 3): இத் திருமொழியில் தமது புருஷார்த்தம் இன்னது என்பதையும் திருநாட்டில் எம்பெருமான் தாளிணைக்கீழ் வாழ்ச்சியில் தமக்குப் பிறந்துள்ள பேரவாவையும் விரிவாக விண்ணப்பிக் கின்றார். ''நின்னை அநுபவிப்பதால் உண்டாகும் பேரின்பத்தைத் துறவேன்; நின் திருமேனியின் எழிலை என்றும் மறவேன்; சம்சாரத்தில் பிறக்க எண்ணேன்; நினக்கு அடிமைப் பட்டதால் சம்சாரத் தளை நீங்கப் பெற்றேன் (1); உலகப் பொருள்களில் பற்று, அவை கைகூடாவிடில் வரும் சினம், உடலைப்பற்றி வரும் உறவி

னரின் பற்று இவற்றைக் கைவிட்டேன்; நின் திருவடிகட்கு அடிமை பூண்டேன்; அறமே வடிவெடுத்த நின்னை என் நெஞ்சத்தில் நிலைநிறுத்திக் கொண்டேன் (2); நீயோ குறுங்குடியில் எளியனாயிருப்பவன்; திருநறையூர்த் தேனாக இனிப்பவன்; மான்போன்ற பார்வையையுடைய மாதர்களின் கண் அம்புக்கு அஞ்சி ஓடிவந்து நின்னைச் சரண்அடைந்தேன் (3); மாதர் இன்பத்தில் மதிகெட்டு மூழ்கினேன்; இதனால் வெந்நரகில் அழுந்தும் பலனைப் பெற்றேன்; நற்பேறாக உய்ந்து நின் திருவடிகளை அடைந்தேன் (4); நின்னையன்றி வேறொரு தெய்வத்தை நினைப்பவன் அல்லேன்; எல்லோரிலும் மேலானவனான நின்னை என் நெஞ்சில் நிறுத்திக் கிடைத்தற்கரியன வற்றைப் பெற்றேன்; சம்சாரத்தில் பிறவாமையாகிய பேற்றினையும் பெற்றேன் (5); ஏழு கடல்கள், பூமி, சந்திரன், சூரியன், குல பர்வதங்கள் ஆகியவை யாவும் நீயே; சர்வசரீரியாகிய நின்னையன்றி வேறு தெய்வத்தை அறியேன் (6); தேவரீர் சாரமாக ஒன்று சொல்லியருள வேண்டும்; அதற்குமேல் அடியேன் வாய் திறக்க வாய்ப்பு இருக்கக் கூடாது (7); (அஃதாவது, ஆழ்வீர், உம்மைத் திருவடி சேர்த்துக் கொண்டேன்); தேவரீர் பக்கம் நெஞ்சைச் செலுத்தியிருக்கும் அடியேனுக்குப் பரமபதம் கிடைக்கும் நாள் எதுவோ அந்நாளை அருளிச் செய்தல் வேண்டும் (8); பிராட்டி இணை பிரியாதிருக்கும்போது அடியேனுக்கு என்ன குறை? கருமங்கள் நெருங்காமல் பாதுகாக்க வேண்டும்; அவை 'தீயினில் தூசாகும்படி' அருளிச் செய்தல் வேண்டும் (9)'' என்று வேண்டு கின்றார்.

27. **நந்திபுர விண்ணகரம்**[3] : இத்திருத்தலத்தைத் திருமங்கையாழ்வார் மட்டிலுமே ஒரு திருமொழியால்

3. **நந்திபுர விண்ணகரம்** : இத்திருதலம் கும்பகோணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து சுமார் ஐந்து கி. மீ. அடிக்கடிப் பேருந்து வசதி இல்லை.

மங்களாசாசனம் செய்துள்ளார். நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம் ஆகும். இத் திருப்பதியில் நந்திவர்மன் என்ற ஓர் அரசன் சில திருப்பணிகள் செய்தனனாக அறியக்கிடக்கின்றது. நந்தி தேவர்க்குக் காட்சிதந்த நகரமாதலால் பற்றி நந்திபுர விண்ணகரம் என்று திருநாமம் பெற்றதாகவும் உரைப்பர்.

இத் திருமொழியின் முதற்பாசுரம்,

*தீதுஅறு நிலத்தொடுஎரி காலினொடு*
*நீர்கெழு விசும்பும் அவையாய்*
*மாசுஅறு மனத்தினொடு உறக்கமொடு*
*இறக்கை அவை ஆய பெருமான்,*
*தாம்செற உளைந்துதயிர் உண்டுகுடம்*
*ஆடுதட மார்வர் தகைசேர்*
*நாதன்உறை கின்றநகர் நந்திபுர*
*விண்ணகரம் நண்ணு மனமே* (1)

[தீதுஅறு-குற்றம் அற்ற; எரி-நெருப்பு; கால்-காற்று; கெழு-சிறந்த; விசும்பு-ஆகாயம்; இறக்கை-மரணம்; செற-சீற்றம் கொள்ள; உளைந்து-நடுங்கி; மார்பர்-மார்பை உடையவர்; தகை-அருள்]

என்று நடைபெறுகின்றது. இப்பாசுரத்தின் 'நாதன் உறைகின்ற நகர்' என்ற தொடரால் இத்திருத்தலத்தின்

---

குதிரை வண்டி, மாட்டு வண்டி வசதியைக் கொண்டே இந்த ஊரை அடைதல் வேண்டும். இத்திருத்தலம் நாதன்கோயில் என்ற திருப் பெயராலும் வழங்கி வருகின்றது. எம்பெருமான் : விண்ணகரப் பெருமான், சகந்நாதன் நாதப் பெருமாள்; மேற்கு நோக்கிய திருமுக மண்டலம்; இருந்த திருக்கோலம். தாயார் : சண்பகவல்லி. பெரி. திரு. 5. 10 (பதிகம்)

திருப்பெயர் **'நாதன் கோயில்'** என்று வழங்கியிருக்க வேண்டும். பாசுரங்கள்தோறும் நந்திபுர விண்ணகரத்தை நாடுமாறு மனத்தை ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார்.

**தலத்துச் சூழ்நிலை :** பாசுரங்களின் முற்பகுதி எம்பெருமானைப் பற்றியும் பிற்பகுதி திருத்தலச் சூழல், சிறப்பு இவைபற்றியும் பேசுகின்றன. திருத்தலச் சூழ்நிலை : கரிய அழகிய வண்டுகள் தம் இனங்களுடன் மதுவினைப் பருகிபூக்களைக் கோதி அதன் பிறகு களிப்புக்குப் போக்கு வீடாக இசை பாடப் பெற்ற சோலைகள் நிறைந்தது இத்திருத்தலம் (2). புதிது புதிதாக மலரும் பூக்களையுடைய சோலைகளில் பன்னிறத் தும்பிகள் திரிந்து கொண்டுள்ளன; வயல்கள் எப்போதும் கருவடைந்த பயிர்களால் நிறைந்திருப்பதால் அவை இரவு போல் இருண்ட காட்சியைத் தருகின்றன (3). சிறந்த சிறகுகளையுடைய மயில்களும் குயில்களும் சோலைகளில் நெருங்கி வாழ்கின்றன; நறுமணம் மிக்க மலர்கள் எங்கும் சிந்தப்பெற்றுள்ளன; வண்டுகள் முரன்று இசை ஒலிகளை எழுப்புகின்றன; பரந்து வளர்ந்துள்ள மலர்கள் மணம் வீசி நிற்கின்றன (4). இங்குள்ள சோலைகளில் குயில்கள் மாக்கிளைகளினின்றும் குதித்துக் கூவும்; அவ்வொலிகளைக் கேட்டு மயில்கள் நடனமாடும் (5). அன்றியும் வாத்தியங்களின் மெல்லோசையை மேக முழக்கமாகக் கருதியும் பாடல்களால் துதி செய்வதையும் அந்த இசைக்குத் தக்கவாறு தாங்களே நர்த்தனங்களும் ஆடக் கண்ட தேவர்கள் 'இப்பூவுலகில் இத் திருப்பதியைப் போன்ற நகரம் எங்கும் இல்லை' என்று கொண்டாடி மலர்கள் தூவுகின்றனர் (7) நல்ல நீர் வாய்ப்பு அமைந்த இத்திருத்தலத்தில் நீர்ப் பெருக்கில் பல பல மணிகள் கொழிக்கப் பெற்று வரும்; அம்மலர்களின் ஒளி எங்கும் பரவி இத்திருத்தலம் இரவிலும் பகல்போல் காட்சி தரும் (8).

**எம்பெருமான் :** இங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானைப்பற்றி ஆழ்வார் கூறுவது : நிலம் நீர் எரிகால் விசும்பு என்று வழங்கப் பெறும் ஐம்பெரும் பூதங் களுக்கும் அந்தராத்மாவாக இருப்பவன்; சேதநர்களின் எல்லா எண்ணங்கட்கும் ஊக்கம் தருபவன்; கண்ணனாகத் திருவவதரித்த காலத்து தயிர், பால், நெய் முதலிய வற்றைக் களவு செய்து உண்டவன்; அக்குற்றத்திற்காக யசோதைப் பிராட்டியால் கட்டுண்டவன்; குடக் கூத்தாடிய பெருமான் (1). பாலனாய் உலகேழும் தனது திருமேனி அளவில் ஒடுங்கும்படி வியத்தகு முறையில் திருவமுது செய்தவன் (2). இவ்வாறு உண்ட உலகங்களை படைப்புக் காலத்தில் வெளிப்படுத்தியவன் (3). அசுரர் களைக் கொன்று குவிந்து வெற்றி கொண்ட பெருமான் (4). சுதர்சனம் (திருவாழி) கௌமோதகி (கதை), பாஞ்ச சன்னியம் (திருச்சங்கு), நாந்தகம் (வாள்), சார்ங் கம் (வில்), ஆகிய ஐந்து ஆயுதங்களைத் திருக்கையில் ஏந்தியவன் (5). தம்பியுடனும் துணைவியுடனும் வெம்பீ எரி கானகத்தில் உலாவித் திரிந்த காகுத்தன் (6). புத்திர னில்லையே என்று கவன்ற நந்தரின் சோகம் தீரும்படி மதுரையினின்றும் ஒருவருக்கும் தெரியாமல் ஆய்ப்பாடிக்கு வந்து சேர்ந்த பெருமிடுக்கன் (7). தியானத்திற்குத் தகுந்த மூர்த்தியாக நந்திபுர விண்ணகரத்தில் திருக்கோயில் கொண்ட நாதன் (8). இந்த எம்பெருமானின் திருவா ணையைச் சிரசாக வகிக்கும் கடியார்கள் ஊழிப் பெரு வெள்ளத்திலும் தம் உடல்கள் அழியப் பெறார் (9). இங்ஙனம் எம்பெருமானுடைய பெருமையைப் பேசிய ஆழ்வார் தம் மனத்தை நோக்கி "நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே" என்று ஒருதடவைக்கு ஒன்பது தடவை யாகப் பன்னியுரைக்கின்றார்.

**28. வெள்ளியங்குடி:**[4] நந்திபுர விண்ணகரத்தி லிருந்து வெள்ளியங்குடிக்கு வருகின்றார் ஆழ்வார். இவ் வூர் சூழ்நிலையைப்பற்றி ஆழ்வார்,

> காய்த்தநீள் கமுகும் கதலியும் தெங்கும்
> எங்கும்ஆய் பொழில்களின் நடுவே
> வாய்த்தநீர் பாயும் மண்ணியின் தென்பால்
> திருவெள்ளி யங்குடி அதுவே (1)[5]

> [நீள்-ஓங்கியிருக்கும்; கமுகு-பாக்குமரம்; கதலி-வாழை; தெங்கு-தென்னை; பொழில்கள்-சோலைகள்; மண்ணி-ஓர் ஆறு]

என்று வருணிக்கத் தொடங்குகின்றார். "காய்கள் நிறைந்து ஓங்கிக் கிடக்கின்ற பாக்கு மரங்கள், வாழை மரங்கள், தென்னை மரங்கள்" இவை மலிந்திருக்கும் சோலைகளில் சென்று பாயும் மண்ணியாற்றின் தென்

4. **திருவெள்ளியங்குடி:** திருவிடைமருதூர் இருப் பூர்தி நிலையத்திலிருந்து 8 கி.மீ தொலைவு; மயிலாடுதுறை நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவு. கும்பகோணத்திலிருந்து அணைக் கரைக்குப் பேருந்து செல்லும் வழியில் செங் கனூர் என்ற ஊரில் இறங்கித் தென்திசையில் 3 கி.மீ. தொலைவிலுள்ள இவ்வூரை அடைதல் எளிது. மாட்டு வண்டியும் கிடைப்பதில்லை. 'நடராஜா' சர்வீஸ் தான்! சுக்கிரன் வழிபட்ட தலமாதல் பற்றி 'வெள்ளியங்குடி' என்று திரு நாமம் பெற்றது. இறைவன்: **கோலவில்லி இராமன்.** தாயார் **மரகதவல்லி.** கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்; புயங்க சயனம். வழிபாடு. 'வைகாநச ஆகமமுறை' இந்த எம்பெருமானைச் சேவித்தால் 108 எம்பெருமான்களைச் சேவித்த பலன் உண்டு. 4.10 (பதிகம்).

5. பெரி. திரு. 4-10.

கரையிலுள்ளது திருவெள்ளியங்குடி (1). நிறைந்து பூத்துக் குலுங்கும் சுரபுன்னை மரங்கள், இவற்றின் பொந்துகளி டையே வண்டுகள் நெருங்கிக்கொண்டு இராமாயண காலத்தில் மதுவனத்தில் புகுந்த வானர முதலிகளைப் போல பெரிய ஆரவாரத்துடன் மதுபானம் பண்ணி இசை பாடப் பெற்ற சோலைகள் சூழ்ந்த இடம் இது (2). இதன் அருகில் ஓடும் மண்ணியாற்றில் துறைதோறும் அலைகள் நவமணிகளைக் கொண்டு வந்து குவிக்கின்றன (4). இத்திருத்தலத்தைச் சார்ந்த வயல்கள் எப்பொழுதும் ஏர்கொண்டு உழப்படுகின்றன. இதனால் வெருவிய வாளை மீன்கள் அச்சமின்றி வாழ்வான் வேண்டிப் பொய் கைகளில் சென்றுசேர்கின்றன. சம்சார வாழ்க்கை ஆபத்துக்கிடமென்று துணிந்து அதனைவிட்டு நித்தியா னந்தமான பரமபதத்தில் வாழ்வதைக் கருதுகின்ற முமுட்சு களின் நிலையை இங்ஙனம் மீனைக் கொண்டு எடுத்துக் காட்டுவதாகக் கொள்வர் பெரியோர் (5). ஊற்று நீர் உள்ள நிலங்களில் முளைந்திருக்கும் வாழை மரங்களி னின்றும் உதிர்ந்த நன்கு பழுத்த கனிகளைக் கயல் மீன்கள் மேல் வீழ்ந்து புசித்துச் சேற்று நிலங்களில் துள்ள விளை யாடுகின்றன (6). மேலும்,

> அள்ளியம் பொழில்வாய் இருந்துண்டு குயில்கள்
> 'அரி அரி' என்றவை அழைப்ப
> வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வன்
> திருவெள்ளி யங்குடி அதுவே (7)
>
> [அள்ளி-தாதுகள்; வெள்ளியார்-சுக்கிரன்; விரைந்து-விரைவில்]

என்று இவ்வூரை எடுத்துக்காட்டுவர், ''தாதுகள் மணம் பரப்பும் அழகிய சோலைகளில் இருந்து மகிழும் குயில்கள் 'அரி, அரி' என்று கூவும் இடம் இது'' (7). மணம் வீசப் பெற்ற தாமரைமலர்கள் கரும்புக் காட்டிலும் செந்நெல்

வயல்களிலும் மலர்ந்து காணப்பெறுகின்ற, அழகிய அன்னப் பறவைகள் பேடையுடன் கூடித் தாமரை மலர்களின்மீது காட்சி அளிக்கின்றன (9). இதற்கு ஓர் உட்கருத்து உரைப்பர் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணா சமி. இரு பக்கத்திலும் கரும்பும் செந்நெலும் அசைவது சாமரம் வீசுவதொக்கும்; தாமரை மலரின்மீது அன்னமும் பேடையும் கூடி வாழ்வது பெருமானும் பிராட்டியும் கூடி வாழ்வதொக்கும்.[6]

**ஊர் சூழ்நிலை:** இந்த ஊரின் மாடமாளிகைத் தூண்களில் அழுத்தப்பெற்றுள்ள நவமணிகளின் ஒளி இடைவிடாது திகழ்வதால், 'இது பகல், இது இரவு' என்று சிலர் ஐயுறுவர். இது பொய்யுரை என்று சிலர் ஐயுறுவர். எம்பெருமான் கோயில் கொண்டுள்ள இத்தலம் அதிசயம் வாய்ந்ததாக அமையவேண்டும் என்னும் ஆசையால் ஆழ்வார் இங்ஙனம் அருளிச் செய்கின்றார். என்று கொள்ளவேண்டும் (8). அன்பின் மிகுதியால் இங்ஙனம் ஊறல் தகும். இத் திருத்தலத்து வாழும் அழகிய மகளிர் செய்யும் நடனப் பயிற்சினால் எழும் இன்னோசை நாற்றிசைகளிலும் உம்பர் உலகங்களிலும் பரவி அதிர்கின்றது (3). ஆழ்வாரின் ஆதராசியத்தால் விளைந்த கற்பனை இது.

**எம்பெருமான்:** பரத்துவநிலை, வியூக நிலை, விபவ நிலைகளிலுள்ள எம்பெருமானே அர்ச்சைநிலையில் திருவெள்ளியங்குடியில் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். இந்தமூன்று நிலை எம்பெருமான்கள் பாசுரங்களில் கலந்தே காணப்பெறுகின்றனர். பாசுரங்களில் ஆழங்கால்படும் நிலையில் இந்த எம்பெருமான்களையும் சிந்தித்து அநுபவிக்கின்றோம். இந்த எம்பெருமான் ஆய்ச்சியர் முறையிடும்படியாக வெண்

6. பெரி. திரு. 4.10:9 திவ்வியார்த்த திபிகை காண்க.

ணையை அமுது செய்த கள்வன்; பிரளய காலத்தில் ஆலந் தளிரில் கண்வளர்ந்தவன்; பூதனையின் முலைப்பாலை அமுது செய்யும் பாவனையில் அவளது உயிரைக் குடித் தவன்; இரட்டை மருத மரங்களை முறித்து ஒழித்து நள கூபர மணிக்கிரீவர்களின் சாபம் போக்கியவன்; மாவலி யிடம் மூவடி மண் பெற்று பெருநிலம் அளந்து கவர்ந்து கொண்டவன்(1). கண்ணனாக வந்து ஆநிரைகளை மேய்த்தவன்; கடலில் சேதுகட்டி அரக்கர்களின் தலை களை அறுத்துத் தள்ளினவன்; கார்கால மேகம் போன்ற வடிவுடையவன் (2). 'கருவிடமுள்ள காளியன் தடத் தைக் கலக்கி, முன்னழகழித்து, அவன்றன் படம் இறப் பாய்ந்து பன்மணிசிந்தப் பல்நடம்பயின்றவன்' (3). 'கறவை முன்காத்துக் கஞ்சனைக் காய்ந்த காளமேகத் திருவுருவன்; பறவை முன் உயர்த்துப் பாற்கடல் துயின்ற பரமன்' (4), 'பாரினை உண்டு பாரினை உமிழ்ந்தவன்; பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்து பகைவர்களின் தேர்களைப் பங்கப்படுத்திய பெருமான் (5). பூவைப்பூப்போல உரு மாய்ந்து போம்படியாக இலங்கையின் அரக்கர் சேனை கள் ஒழியும் படியாகக் கொடிய கணைகளைச் செலுத்திய கோல வில்லி இராமன் (6). வாமன மாணியாய் மாவலி யிடம் மூவடி மண் இறந்து பெற்றுத் திசைகளெல்லாம் விம்முற வளர்ந்த பெருமான் (7). நான்முகன் முதலிய தேவர்கள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து எம்பெருமானு டைய பரத்துவ குணங்களையும் சொல்லித் தொழுதேத்த அவர்கட்குத் திருவருள் சுரந்து கொண்டு திருப்பாற் கடலில் அரவணைப்பள்ளியின் கண்துயில் கொண்டிருக் கும் எம்பெருமான் (9). மேலும்,

முடியுடை அமரர்க் கிடர்செய்யும் அசுரர்
தம்பெரு மானை அன்று அரியாய்
மடியிடை வைத்து மார்வம்முன் கீண்ட
மாயனார் மன்னிய கோயில் (8)

[அமரர்-தேவர்; இடர்-துன்பம்; அரி-சிங்கம்;
அசுரர்தம் பெருமான்-இரணியன்]

என்று இத்திருக்கோயிலைப் பற்றிப் பேசுவர் ஆழ்வார். தேவர்கட்குத் துன்பம் இழைத்த இரணியனை நரசிங்கமாக வந்து தம் மடியில் வைத்து அவன்மார்பைக் கிழித்து உயிர்குடித்த பெருமான், பல சுருதிப் பாசுரத்தில் (10) வராக அவதாரம் எடுத்துப் பூமிப் பிராட்டியாரைத் தம் கோட்டிடை வைத்தருளியவனும் தெளித்த அலைகள் தம் திருவடியின்மீது மோதும் படியாகத் திருப்பாற் கடலில் கண் வளர்ந்தருள்பவனான எம்பெருமானே திருவெள்ளியங் குடியில் எழுந்தருளியிருப்பவன் என்கின்றார். மேற் குறிப்பிட்ட எம்பெருமான்களே அர்ச்சை வடிவத்தில் திருவெள்ளியங்குடியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளனர் என்பது ஆழ்வார் உணர்த்தும் கருத்து. எநத நிலையில் எழுந்தருளியிருந்தாலும் அவனே பரமபதநாதன் என்ற வைணவ சமயக்கருத்தினை உணர்த்தும் நிலையில் பாசுரங்கள் அமைந்துள்ளன.

**29. புள்ளம் பூதங்குடி.**[7] :வெள்ளியங்குடியிலிருந்து புள்ளம் பூதங்குடிக்கு வருகின்றார் மங்கை மன்னன். இராமபிரான் சடாயுவைத் தகனம் செய்து அப்புள்ள

7. **புள்ளம் பூதங்குடி** : மயிலாடுதுறை-திருச்சி இருப்பூர்தி வழியில் சுவாமி மலை என்னும் நிலையத்திலிருந்து 4 கி. மீ. தொலைவு. மாட்டுவண்டிகள் கிடைக்கும். கும்பகோணத்திலிருந்து சுவாமி மலைக்குப் போகும் பேருந்து வழியிலிருப்பதால் கும்பகோணத்திலிருந்து போவதே சிறப்பு. **எம்பெருமான்: வல்வில்லிராமன்.** தாயார் : **பொற்றாமரையாள்.** மூலவராகிய இராமன், கையில் திருவாழி, திருச்சங்குகளுடன் காட்சி தருவது எங்கும் காணாத காட்சியாகும். **நிலை:** கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்; புயங்க சயனம். பெரி. திரு 5.1 (பதிகம்)

ரசனை 'பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம்'[8] புகச்செய்த தலமாதல்பற்றிப் புள்ளம் பூதங்குடி என்ற திருநாமம் பெற்றது[9].

**தலச் சூழ்நிலை :** மருதநிலச் சூழ்நிலை. சோலைகளில் நறுமணம் மிக்க மலர்கள்மீது சுரும்பு என்ற வண்டினங்கள் இருந்து கொண்டு இன்னிசை எழுப்புகின்றன; அழகுமிக்க மயில்கள் கூத்தாடுகின்றன; பொறி சிறை கொண்ட வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன (1). தாழ்ந்திருக்கும் கழனிகளில் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன; பறவைகள் இக்கழனிகட்குச் சென்று தம் குட்டிகட்கு உணவாகக்கூடிய சிறு மீன்களைத் தேடுகின்றன (2). திருத்தலத்தைச் சுற்றிலுமுள்ள தோட்டங்களில் தென்னை மரங்கள் நிறைந்துள்ளன. அவற்றினின்றும் தேங்காய் நெற்றுகள் இற்று விழுங்கால் மீன்கள் துள்ளி அப்பால் ஓடுகின்றன; நாரைகளும் இதனால் சிதறி ஓடுகின்றன; கழனிகளிலும் தாமரை முதலிய பூக்கள் நிறைந்து காணப் பெறுகின்றன (3). சிவந்த கால்களையுடைய நாரைகள் கழனிகளில் நிறைந்து கிடக்கும் ஆரல் மீன்களைத் தமக்கு இரையாகக் கொள்வதற்கு வந்து சேர்கின்றன (5). ஒரு நாளும் வற்றாத நீர் நிலைகளில் உள்ள தாமரைப் பூக்களில் வண்டுகள் இருந்து இசைபாடுகின்றன; புன்னை மரங்கள் பொன்னிறமான மகரந்தங்களை உதிர்த்து நிற்கின்றன (6)[10] நாற்புறமும் உள்ள

8. கம்ப. ஆரணி. சடாயு உயர்நீத்த. 216

9. தொண்டை நாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய 'திருப்புட்குழி' திருநாமம் பெற்றது நினைவு கூரத்தக்கது.

10. இந்தப் பாசுரத்தில் ஆழ்வார் திருவாக்கைப் பேணி சந்நிதியில் இன்றைக்கும் ஒரு திருப் புன்னை மரம் வளர்க்கப் பெற்று வருதல் அறியத் தக்கது.

கழனிகளில் உள்ள அழகிய நீலமலர்கள் வண்டுகள் கூட்டம் கூட்டமாக விருந்து உண்பதற்கு தேனைப் பெருக்குகின் றன (7). காவிரி நதி ஒளியுடன் திகழும் நவமணிகளையும், மூங்கில் முத்துகளையும் சாமரங்களையும் பொன்னையும் தள்ளி வருகின்றன.

**ஊர்ச் சூழ்நிலை :** சிறந்த வேலைப்பாடுகளமைந்த மதில்களாலும் மாளிகைகளாலும் அழகிய மண்டபங்களி னாலும் சிறந்து காணப் பெறுகின்றது ஊர் (4). நாவில் நான்மறைகளை ஓதும் அந்தணர்கள் வாழும் இடமாகும் இவ்வூர் (5). இவ்வூரில் வாழும் அந்தணர்கள் மறைகளை ஓதுவதுடன் முத்தினையும் வளர்ப்பவர்கள்; இதனால் பெரும் புகழையும் பெற்றவர்கள்; பொறுமையும் வள்ளண்மையும் இவர்தம் சிறந்த பண்புகளாகும் (8).

**எம்பெருமான் :** எம்பெருமானின் சிறப்பு இவ்வாறு பேசப் பெறுகின்றது; "எவருக்கும் தம் முயற்சியால் அறியக் கூடாதவன்; எல்லாவுலகங்கட்கும் நாதன்; என்னை அடிமையாகக் கொண்டவன்; வாமன மாணி உருவங்கொண்டு மாவலியின் யாக பூமியில் அழகிய நடையுடன் சென்றவன் (1); வாமன உருவத்துடன் சென்று மாவலியை வஞ்சித்து எல்லா உலகங்களையும் சுவாதீனப் படுத்திக்கொண்டவன்; கஜேந்திரனின் துன்பம் தீர்த்த புனிதன் (2); இராவணன் முடியும்படி அம்புகளைப் பிரயோகித்தவன்; குதிரை வடிவத்துடன் வந்த கேசி என்னும் அசுரனின் வாயைக் கீண்டவன்; கம்சன் நிறுத்தி வைத்திருந்த சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லர்களை வென்றவன்; தவழ்ந்து சென்று இரட்டை மருத மரங்களை முறித்துத் தள்ளினவன் (3); கோவர்த்தன மலையால் இந்திரனின் கல் மாரியைப் பழுதாக்கினவன்; இராவணனின் இருபது தோள்களையும் அறுத்தொழித்த வல்வில்லையுடைய இராமன் (4, 7); யசோதைப் பிராட்டி கண்படாதபடி மறைத்து வைத்திருந்த தயிரை

யும் நெய்யையும் குடம் பாலையும் களவு வழியினால் அமுது செய்து திருவாழியைக் கையில் கொண்ட மாயன் (5); நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு மன்னுசினத்த மழவிடைகளை வென்றொழித்தவன் (6); உருத்திரனைப் புறமுதுகிட்டோடச் செய்து வாணனின் ஆயிரந்தோள்களை அறுத்தெறிந்த பெருமான் (7); பாரதப் போரில் பாண்டவர்களின் பட்சபாதியாக நின்று பார்த்தனுக்குச் சாரதியாகத் தேரோட்டினவன்; உருத்திரன் கையில் ஒட்டிக் கொண்டு ஒன்றாலும் நிரம்பாதிருந்த பிரம கபாலத்தைப் பிச்சையிட்டு நிரப்பியவன் (8); மண்ணுலகமும் விண்ணுலகமும் இருளால் சூழப் பெற்று மூடிக் கிடந்த நாளில் அன்ன வடிவமாய் அவதரித்து அருமறைகளை வெளிப்படுத்தி அருளியவன் (9); இத்தனை அரிய செயல்களை ஆற்றின எம்பெருமானே திருப்புள்ளம்பூதங்குடியில் கோயில் கொண்டிருப்பவன். அர்ச்சையில் விபவங்களும் (இராமன், கண்ணன், வாமன்) பரத்துவமும் அடங்கிருப்பதாகக் காட்டி எல்லா நிலை எம்பெருமான்களும் ஒருவனே என்பதை உணர்த்தும் வகையில் ஆழ்வார் பாசுரங்கள் அமைந்துள்ளன.

30. **திருக் கூடலூர்**[11] : புள்ளம் பூங்குடியிலிருந்து திருக்கூடலூருக்கு வருகின்றார் ஆழ்வார். இத்திவ்விய தேசம் **ஆடுதுறைப் பெருமாள் கோயில்**' என்ற திருநாமத்தாலும் வழங்கி வருகின்றது. திருக்கோயிலைச் சுற்றி மருதநிலச் சூழ்நிலைதான்.

---

11. **கூடலூர்** : அய்யம் பேட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவு. கும்பகோணம்-தஞ்சை பேருந்து வழியில் வருவதே சிறந்தது; சாலையின் மீதே உள்ளது. எம்பெருமான் : **வையம் காத்த பெருமாள்**; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார் : **பதுமாசன வல்லி**: பெரி. திரு. 5. 2 (பதிகம்).

**சூழ்நிலை (சோலை) :** சோலைகளில் மணம் மிக்கதாய், குளிர்ந்ததாய், இனிமையான தேனைப் பருகின வண்டுகள் குறிஞ்சிப் பண்ணைப் பாடுகின்றன (2). மரக் கொம்புகளிலுள்ள வண்டுகள் தமக்கு வாய்த்த இடங் களைத் துறந்து வயல்களில் ஏர் பிடித்து உழுகின்றவர் களின் தலைமுடியில் அணிந்திருக்கும் மலர்களில் உள்ள தேனை உணவாகக் கொண்டு இசைபாடுகின்றன (4). சோலைகளில் வண்டலிட்ட நுண்ணிய மணல்களில் மாம்பழங்கள் விழுந்து வரிசையாகக் கிடக்கின்றன (6). அங்கு முல்லைக் கொடிகள் குருந்த மரத்தை முட்டாக் கிட்டுப் படர்ந்துள்ளன (7). படர்ந்த மட்டைகளை (இலைகளை) யுடைய தென்னை மரங்கள். குளங்களின் கரைகளிலேயே நிற்கும்; அவற்றிலுண்டாகிய இளநீர்க் குலைகள் தாழ்ந்து நிற்கின்றபோது குளங்களை இளநீராலேயே நனைத்து மட்டைகளால் மறைத்து வைத்தாற் போலே இருக்கும் (8).

**வயல் வளம் :** பாசுரங்களால் வயல்வளத்தையும் அறிய முடிகின்றது. நாரைகள் நீர்நிலைகளில் சென்று அமர்ந்திருக்கும்; அவற்றின் கால்களில் சிறுமீன்கள் வந்து குத்தும்; குத்தினாலும் 'உறுமீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு' என்றாற்போல் அவற்றைக் கவனி யாது தாம் உட்கொள்ளும் பெருமீன்கள் வந்து கிட்டின வுடன் அவற்றின்மீது விழுந்து கொள்ளை கொள்ளும்(3). வண்டல் விட்டிருக்கும் நீர்நிலைகளில் கெண்டை மீன்கள் செருக்கினால் துள்ளும்போது அவற்றின் உடல் மின்னல் மின்னினாற்போலே இருக்கும். அதனைக் கண்ட மேகங் கள் தம்மிடத்து மின்னுகின்ற மின்னல் ஒளியே என்று கருதி மின்னலுக்கு அடுத்தபடி உண்டாக வேண்டிய இடி முழக்கத்தைச் செய்கின்றன (5)[12] வயல்களின் வாய்க்கால்

12. இடியும் மின்னலும் ஒரே காலத்தில்தான் உண்டாகும், ஒளியின் வேகம் அதிகமாதலால்

களில் தாழும் பூக்கள் மலர்ந்திருக்கும்; அவற்றைக் கண்ட கெண்டை மீன்கள் குருகுகள் தம்மை இரை கொள்ளுவதற் காக வந்து அசையாமல் நிற்கின்றன போலும் என்றெண்ணி அஞ்சி ஒளிந்து கொள்ளும் (9).

**ஆழ்வாரின் இறையநுபவம் :** இந்த எம்பெரு மானை ஆழ்வார்.

> தாம்தம் பெருமை அறியார், தூது
> வேந்தர்க்கு ஆய வேந்தர்[13]

என்கின்றார். எம்பெருமான் எல்லாம் அறிந்தவன் என்றும், எல்லா வல்லமையும் பெற்றவன் என்றும் வேத வேதாங்கங்களில் நுவலப் பெறாததால் அவன் தன் பெருமையைத் தான் அறிய வல்லவனல்லன்; 'உனக்கு இவ்வளவு பெருமை உண்டு' என்று பிறர் சொல்லக் கேட்பவனேயன்றிதன் பெருமையைத்தான் அறியாதவன். எம்பெருமானுக்குப் பெருமை பரத்துவம் பொலிய நிற்கும் இருப்பன்று. ஏவிய செயல்களை நிறைவேற்றுவதற்காகத் தன்னைத் தாழவிட்டுக் கொண்டிருக்கும் இருப்பே இங்குப் 'பெருமை' எனப்படுகின்றது. பாண்டவர்கட் காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது சென்று 'பாண்ட வர் தூதன்' எனப் பெயர் பெற்றான். இவனுடைய சௌலப்பிய குணம் அறிவிற் சிறந்தோரால் ஈடுபடும் படியாகவே இருக்கும். 'அரசர்க்கரசன்' என்ற பெருமை யும் மிக்குத் தோன்றும்.

இந்த எம்பெருமான் நப்பின்னைப் பிராட்டியை மணம் புணர்வதற்காகக் கொழுத்த ஏழு காளைகளை

---

மின்னல் முதலில் தெரியும்; ஒலியின் வேகம் குறைவாதலால் இடிமுழக்கம் பின்னர்க் கேட்கும்.

13. பெரி. திரு. 5. 2: 1

வலியடக்கிய வீரன் (2). எல்லா வல்லமையையும் உடையவன்; தயிருண்ணப் பார்க்கின்றான்; தன் விருப்பம் இந்த இருப்பால் நிறைவேறாதென்று அதற்காகப் பிள்ளை வடிவு கொண்டு தயிரமுது செய்கின்றான்; இதனால் தன் நீர்மையைக் காட்டுகின்றான் (3) கண்டார் கண்ணைக் கவரும் 'மன்னு குறளுருவில் மாணியாய் - மாவலி தன் பொன் இயலும் வேள்விக்கண் புக்கு இருந்து' மூவடி மண் இரந்து பெற்றவன் (4). அடியார்கள் துதிக்கும்படியாகத் தன்னுடைய கோலத் திருமேனி சூரிய மண்டலத்தையும் போய்த் தொடவளர்ந்து அண்டமெங்கும் பரவி நின்ற உத்தமன் (5). தக்கன் வேள்வியை அழித்த சங்கரன் சாபத்தைத் தீர்த்த பெருமான் (6). கடல்கள், மலைகள் முதலானவற்றோடு கூடிய உலகங்களையெல்லாம் பிரளயம் கொள்ளாதபடித் தன் திருவயிற்றிலே வைத்துக் காத்தவன் (7). திருநீர் மலையில் எழுந்தருளியுள்ள பெருமானே இங்கும் எழுந்தருளியுள்ளான் (8)[14] ஆற்றுப் பெருக்குபோல பெருகா நின்றுள்ள காலைக் கொண்ட ஆழ்வாரின் இதயம் உருகும் படியாக உட்புகுந்த பெருமான் திருக்கூடலூரில் எழுந்தருளியிருப்பவன்.

தேவர்கள் கூட்டமாகக் கூடி இத்தலத்து எம்பெருமானை வணங்கி வாழ்த்தியமையால் இத்திருத்தலம் **கூடலூர்** என்று திருநாமம் பெற்றதாகக் கூறுவர் பெரியோர்.

**31. ஆதனூர்**[15] : இந்தத் திவ்விய தேசம்' கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது, திருமங்கையாழ்வார் மட்டிலும்,

14. திவ்விய தேசத்தில் ஆங்காங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள் யாவரும் ஒருவனே என்ற உண்மையைத் தெரிவித்தவாறு.

15. **ஆதனூர் :** சுவாமிமலை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ளது. புள்ளம்

'ஆதனூர் ஆண்டளக்கும் ஐயன்'[16]—இவரை ஒரே அடியில் மங்களாசாசனம் செய்துள்ளார். திருமங்கையாழ்வாருக்கும் காமதேனுவுக்கும் எம்பெருமான் காட்சி தந்ததாக வரலாறு. திருமங்கையாழ்வாரின் திருமேனி எம்பெருமான் தங்கியிருக்கும் கருவறையிலிருப்பது இத்தலத்தின் சிறப்பாகும். காமதேனுவுக்குச் சேவை சாதித்தது பற்றி இத் திருத்தலம் ஆ + தன் + ஊர் = ஆதனூர் என்று திருநாமம் பெற்றதாகச் சொல்வர். ஆ—பசு.

---

பூதங்குடியிலிருந்து ஒரு கி. மீ. தொலைவிலுள்ளது. மிகச் சிறிய ஊர். கும்பகோணத்திலிருந்து சுவாமி மலை வழியாகச் செல்லும் பேருந்து சாலையில் 8 கி. மீ. தொலைவில் உள்ளது எம்பெருமான்: **ஆண்டு அளக்கும் ஐயன்;** கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்; புயங்க சயனம். **தாயார்:** அரங்க நாயகி பெரி. திரு. 7. 4 (பதிகம்); 10. 1: 6. சிறிய திருமடல் (56)

16. பெரி. திருமடல் - 70.

# 12. சோழநாட்டுத் திருத்தலப் பயணம்

ஆண்டளக்கும் ஆதனூரைச் சேவித்த பிறகு கலியன் (32) தஞ்சை[1] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். இத் திருத்தலம் தஞ்சை மாமணிக் கோயில், தஞ்சையாளிக் கோயில், மணிக்குன்றப் பெருமாள் கோயில் என்ற மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் இரண்டும் தஞ்சைக்கு வடக்கே வெண்ணாற்றங்கரையிலுள்ளன; மூன்றாவது இவற்றின் அருகிலுள்ளது. தஞ்சகாசுரனை

**திருத் தஞ்சை :** தஞ்சை இருப்பூர்தி நிலையத்திலிருந்து வடதிசையில் சுமார் 5 கி. மீ. தொலைவில் உள்ளது திருவையாற்றிற்குச் செல்லும் பேருந்தில் சென்று திருக்கோயில் அருகிலேயே இறங்கலாம் (1). தஞ்சை மாமணிக் கோயில் இறைவன்: நீலமேகப் பெருமாள் கிழக்குநோக்கிய திருமுக மண்டலம்; வீற்றிருக்கும் திருக்கோலம். தாயார்: செங்கமலவல்லி[2] தஞ்சையாளிக் கோயில் இறைவன் : நரசிம்மன்; இருந்த திருக்கோலம் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார் : **தஞ்சைநாயகி.** (3). தஞ்சை மாமணிக் கோயில் இறைவன்: மணிக்குன்றப் பெருமாள்; இருந்த திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்: அம்புயவல்லி. மூன்று திருக்கோயிலின்** உற்சவர் : **சீமந் நாராயணன்.** பெரி. திரு. 1. 1: 6; 7. 3: 9 மேலும் விவரம் வேண்டுவோர் சோ. நா. தி (1) கட்டுரை 7 காண்க.

எம்பெருமான் வதைத்த தலமாதல்பற்றி இத்திருத்தலம் **தஞ்சை** என்று திருநாமம் பெற்றதாகக் கூறுவர். திருமங்கையாழ்வார்,

எம்பிரான், எந்தை என்னுடைச் சுற்றம்
 எனக்கு அரசு, என்னுடை வாழ்நாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
 அவர்உயிர் செகுத்தஎம் அண்ணல்;
வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை
 மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்
 நாராய ணாஎன்னும் நாமம்[2]

[செகுத்த- அழித்த; அண்ணல-பெருமை பொருந்தியவன்; வம்பு-மணம்; உய்ய-கடைத்தேற]

என்ற பாசுரத்தில் முதலாவதான தஞ்சை மாமணிக் கோயிலைக் குறிப்பிடுவர். "எனக்கு உபகாரம் பண்ணினவனும், எனக்குத் தந்தையும், எனக்கு எல்லாவித உறவு முறையும், பகைவர்களை அழித்து என்னை ஆண்டவனும் என்னுடைய உயிருக்கு உயிரானவனும் அம்பு மாரியால் அசுரர்களைக் கிழங்கு எடுத்தவனுமான பெருமை பொருந்திய எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற பரம போக்கியமான தஞ்சை மாமணிக் கோயிலைத் தொழுது 'எல்லாவித உறவினனும் அவனே' என்பதன் பொருளுக்கு வாசகமான திருநாமத்தைக் காணப் பெற்றேன்" என்கின்றார்.

இத்திருக் கோயிலை மங்களா சாசனம் செய்த செய்த இன்னொரு பாசுரமும் உண்டு.

---

2. பெரி. திரு. 1. 1: 6

என்செய் கேன்அடி யேன்உரை யீர்இதற்கு
என்று எம்மனத் தேயிருக் கும்புகழ்
தஞ்சை ஆளியைப் பொன்பெய ரோன்நெஞ்சம்
அன்றி டந்தவ னைத்த ழலேபுரை
மின்செய் வாளரக் கன்நகர் பாழ்படச்
சூழ்க டல்சிறை வைத்திமை யோர்தொழும்
பொன்செய் மால்வரை யைமணிக் குன்றினை
அன்றி என்மனம் போற்றிஎன் னாதே[2]

[என்றும்-எக்காலமும்; புகழ்-கீர்த்தியையுடைய வன்; ஆளியை-ஆள்பவனை; பொன்பெய ரோன்-இரணியன்; இடத்தல்-பிளத்தல்; தழல்-நெருப்பு; மின்செய்-ஒளிவிடும்; சிறைவைத்து-அணைகட்டி; மால்வரை - பெரிய மலை போன்றவன்]

திருநறையூர் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது இடையிலே 'தஞ்சையாளி' யையும் நினைக்கின்றார் ஆழ்வார். "எப்போதும் என் இதயத்தை விட்டுப் பிரியாமல் வந்த புகழையுடையவனாய், தஞ்சை மாமணிக் கோயிலிலே எழுந்தருளியிருப்பவனாய், பிரகலாதன் பொருட்டு இரணியனின் மார்பை பிளந்தெளிந்தவனாய், இராவணனின் இருப்பிடமான இலங்கையைச் சுடுகாடாவதற்குக் கடலிலே அணைகட்டி எழுந்தருளினவனாய், இப்படிப்பட்ட வியத்தகு செயல்கட்குத் தோற்றுத் தேவர்களால் வணங்கப் பெறுபவனாய், அப்படி வண்ங்கப் பெறுவதில் ஒளிபெற்ற வடிவையுடையவனான எம்பெருமானையன்றி மற்றொருவரை என் மனம் வாழ்த்த விரும்பாது" என்கின்றார்

2. பெரி. திரு. 7.3: 9.

**33. திருக்கண்டியூர்**[3] : தஞ்சையாளியை விட்டுத் திருக்கண்டியூர் வருகின்றார் ஆழ்வார். ஒரே ஒரு பாசுரத்தில் மங்களா சாசனம் செய்கின்றார்.

*பிண்டிஆர் மண்டை ஏந்தி*
*பிறர்மனை திரிதந்து உண்ணும்*
*முண்டியான் சாபம் தீர்த்த*
*ஒருவன்ஊர் உலகம் ஏத்தும்*
*கண்டியூர் அரங்கம் மெய்யம்*
*கச்சிபேர் மல்லை என்று*
*மண்டினார் உய்யல் அல்லால்*
*மற்றையார்க்கு உய்யல் ஆமே*[4]

*[பிண்டி-உளுத்த பொடிகள்; திரிந்தது-திரிந்து; முண்டியான் - மொட்டையாண்டி; ஒருவன் - ஒப்பற்றவன்]*

என்பது பாசுரம். "எம்பெருமான் இதில் உகந்தருளின கண்டியூர் திருவரங்கம், திருமெய்யம், திருவெஃகா திருப்பேர்நகர், திருக்கடல் மல்லை ஆசிய திருப்பதிகளிலெங்கும் 'பதியே பரவித் தொழும் தொண்டர்' என்னும்படியாக மூழ்கியிருப்பவர்கள் உய்ய வழி உண்டே யல்லது அல்லாதவர்களுக்கு ஒரு நாளும் உய்ய வழி இல்லை" என்கின்றார் ஆழ்வார்.

---

3. **கண்டியூர் :** தஞ்சை-திருவையாறு நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் இராச கோபுரம் மூன்று தளங்களால் ஆனது. இறைவன் : **கமலநாதன்**; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். தாயார் : **கமலவல்லி நாச்சியார்.** திருக் குறுந். 19 மேலும் விவரம் வேண்டுவோர் சோ.நா.தி. (1) கட்டுரை 8 காண்க.
4. திருக்குறுந். 19.

34. **திருப்பேர் நகர்**[5]: கண்டியூரிலிருந்து திருப்பேர் நகர் வருகின்றார் ஆழ்வார். ஆழ்வார் சாளக்கிராமத்தி லிருப்பவனும் (பெரி. திரு. 1. 5: 4) திருவரங்கப் பெருமா னும் (ஷை 5. 6: 2) திருவழுந்தூர் ஆமருவி அப்பனும் (ஷை 7. 6: 9) திருப்பேர் நகர்ப் பெருமானே என்று முடிவு காட்டும் போக்கில் எல்லா அர்ச்சை எம்பெருமான்களும் ஒருவனே என்ற வைணவ தத்துவத்தை விளக்குகின்றார். இவற்றைத் தவிர ஒரு முழுப் பதிகத்தில் (5. 9) இந்நகர்ப் பெருமானை அநுபவித்து இனியராகின்றார்.

**ஊரின் சூழ்நிலையை** செய் அலர் கமலம் ஓங்கும் தென் திருப்பேர், (5. 9: 1) 'திங்கள் மாமுகில் அணவு செறி பொழில்' (2), 'தேனமர் பொழில்கள் சூழ்ந்த' தென் திருப்பேர் (4) 'சேலுகள் வயல் திருப்பேர்' (9) என்று பேசுகின்றார். **ஊரைப்பற்றி** 'பெருவரை மதிள்கள் சூழ்ந்த பெருநகர்' (3), 'திண்ணமா, மதிள்கள் சூழ்ந்த தென் திருப்பேர்' (7), 'செம்பொனார் மதிள்கள் சூழ்ந்த தென் திருப்பேர்' (8), 'பெருநகர் மதிள்கள் சூழ்ந்த

5. **திருப்பேர் நகர் :** கொள்ளிடத்தின் தென் கரையி லுள்ள தலம்; கல்லணைக்குக் கிழக்கே ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது. திருக்கோயில் 20 அடி உயரத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. இத்திருக் கோயிலை அப்பக் குடத்தான் சந்நிதி என்றும், ஊரைக் 'கோயிலடி' என்றும் வழங்குவர். இறைவன் : **அப்பக் குடத்தான்**. மேற்கு நோக்கிய திருமுக மண்டலம்; புயங்க சயனம். தாயார் : **கமலவல்லி, இந்திராதேவி** பெரி. திரு. 1. 5: 4; 5. 6: 2; 5, 9 (10); 7. 6: 9; 10. 1: 4; 10. 1: 10. திருநெடுந். 19; திருக்குறுந். 19 சிறி. திருமடல் 39. பெரி. திருமடல் 58, மேலும் விவரம் வேண்டுவோர் **சோ. நா. தி.** (2) கட்டுரை - 6 காண்க.

பெருநகர்' (3) என்று போற்றுவதுடன், இத்தகைய நகரில் 'நலங்கொள் நான்மறை வல்லார்கள்' (6) வாழ்வதையும் காட்டுவார்.

**இறையநுபவம்:** எம்பெருமானை ஆழ்வார் அநுபவிக்கும் விதம் அற்புதமானது. அவர் கூறுவார்: எம்பெருமான் திருவாழி, திருச்சங்குகளைக் கைகளில் ஏந்தியவன்; காளமாமுகில் வண்ணன்; தன்னுடைய சிறப்பியல்புகளையெல்லாம் தன் அடியார்கட்குக் காட்டிக் கொடுப்பவன். தன் திருவடிகளைப் பணிபவர்கட்கு அடிமைத் தன்மையை அருள்பவன்; திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையவன் (1). பிரளய காலத்தில் கடல் சூழ்ந்த உலகம் ஏழையும் உண்டு, பின்னர் உமிழ்ந்தவன் (2)[6]; நான் முகனைத் திருநாபிக்கமலத்தில் உண்டாக்கினவன்; தன் மார்பிலுள்ள வியர்வை நீரில் சிவனின் சாபத்தைத் தொலைத்து, 'நீ முன்போல் உம்பருலகை ஆளக் கடவாய்' என்று விடை கொடுத்தவன் (3, 4). 'வக்கரன் வாய் முன்கண்ட மாயனே' என்று வணங்கின தேவர்களின் வேண்டுகோட்கு இரங்கி நரசிம்மனாகி இரணியனின் உடலை நகங்களால் கிழித்து திருவுள்ளம் மகிழ்ந்தவன் (5). விலங்குகளால் கடல் அடைத்து விளங்கிழை பொருட்டு வில்லால் இலங்கை மாநகர்க்கிறைவனின் இருபது புயங்களையும் துணித்த வீரன் (6). அளவு மீறி வெண்ணெய் அமுது செய்ததால் யசோதைப் பிராட்டி மத்தினால் புடைப்பதாக வெருட்டிக் கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுவதற்கு இசைந்திருந்த கண்ணன் (7). நப்பின்னைப் பிராட்டியின் திருமேனியை அணைவதற்கு அசுர இயல்புகொண்ட ஏழு காளைகளைக் கொன்றொழித்தவன் (8). இத்தகைய எம்பெருமான்

---

6. இச்செயல் படைத்தல், அழித்தல்கட்குக் குறிப்பீடு.

தன் இதய கமலத்தில் இடைவிடாது வீற்றிருப்பவன். இவனது திருநாமங்களை நாடோறும் ஏத்தித் தாம் உய்ந்தமையை ஒரு தரத்திற்கு ஒன்பது தரம் எடுத்துக் கூறி இனியராகின்றார் ஆழ்வார்.[7]

35. **கரம்பனூர்:**[8] இது **உத்தமர் கோயில்** என்ற திருப்பெயரால் வழங்கி வருகின்றது. திருப்பேரர் நகரிலிருந்து இத் திருத்தலத்திற்கு எழுந்தருள்கின்றார் ஆழ்வார். இத் திருத்தல எம்பெருமானை இந்த ஆழ்வார் மட்டிலும் ஒரே பாசுரத்தால் மங்களாசாசனம் செய்துள்ளார்.

பேரானை குறுங்குடிஎம்
பெருமானை திருத்தண்கால்
ஊரானை கரம்பனூர்
உத்தமனை.[9]

என்பது பாசுரம். இந்தப் பாசுரமும் இவ் வெம்பெருமானைப்பற்றி நேராக மங்களாசாசனம் செய்ததன்று. திருவரங்க நாதனை மங்களாசாசனம் செய்தபோது இடைப்பிறவரலாக இந்த எம்பெருமான் பாசுரத்தில் இடம் பெறுகின்றார்.[10]

7. பெரி. திரு. 5-9.
8. **உத்தமர் கோயில்:** விழுப்புரம் — திருச்சி இருப்பூர்தி (குறுக்கு) வழியிலுள்ள நிலையம். நிலையத்திற்கு அருகிலுள்ளது இத்திருத்தலம். திருச்சியிலிருந்து நகரப் பேருந்து மூலம் வருவதே சிறந்தது. எம்பெருமான்: **புருடோத்தமன்:** கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம்; புயங்க சயனம். தாயார்: பூர்வதேவி பெரி. திரு. 5.6:2. மேலும் விவரம் வேண்டுவோர் **சோ. நா. தி.** (1) கட்டுரை — 3 காண்க.
9. பெரி. திரு. 5.6:2
10. திருமங்கையாழ்வார் 86 திவ்விய தேசங்கட்குப் பாசுரம் இட்டதாகச் சொல்லப்பெறுகின்றது.

**36. திருவெள்ளறை:** கரம்பனூர் உத்தமனைச் சேவித்த ஆழ்வார் திருவெள்ளறை[11] என்ற திவ்விய தேசத்திற்கு எழுந்தருளுகின்றனர். இந்தத் தலத்து எம்பெருமானை,

**'திருமெய்யத்து இன்னமுதவெள்ளம்'**

என்ற திருநாமமிட்டு (பெரி. திருமடல்) மகிழ்கின்றார்.

**தலச் சூழ்நிலை:** தென்றல் மாந்தோப்புகளினூடே புகுகின்றது; சோலைகளிலுள்ள மல்லிகை முல்லை மொட்டுகளை மலரச் செய்து நறுமணத்தைப் பரப்புகின்றது (1). குருக்கத்தி மலர்களில் அணைந்து செல்லும் மெல்லிளங் காற்று வீதிகள் தோறும் நறுமணம் பரப்பி வருகின்றது (2). வரால் மீன்கள் துள்ளி விளையாடப் பெற்றவையும் தாமரை மலர்களில் மனம் வீசப்பெற்றவையுமான தடாகங்களாய் சூழப்பெற்றது இவ்வூர் (3). மாஞ்

அதாவது 86 திவ்வியதேச எம்பெருமான்கள் இவர்தம் பாசுரங்களில் இடம் பெறுகின்றனர். நேராகப் பாசுரம் இட்டருளாதத் திருத்தலங்கட்கு இந்த ஆழ்வார் நேரில் வந்தாரா என்பது ஐயம். பிறஆழ்வார்கட்கும் இஃது ஒக்கும்.

11. **திருவெள்ளறை:** திருச்சி - துறையூர் பேருந்து வழியிலுள்ள ஒரு திருத்தலம். வழி காட்டியுள்ள இடத்தில் இறங்கி சுமார் ஒரு கி.மீ. தொலைவு நடந்து இவ்வூரை அடையலாம். இத்திருக்கோயில் சுமார் 100 அடி உயரமுள்ள ஒரு சிறு குன்றின் மேல் உள்ளது. கற்கள் வெண்மையானவை. எனவே 'திருவெள்ளறை' என்ற நாமம். இறைவன்; **புருடோத்தமன்;** நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். தாயார்: **பங்கயச் செல்வி, செண்பகவல்லி** பெரி. திரு. 5-3 (பதிகம்); பெரி திருமடல் 68; சிறி. திருமடல் 33 மேலும் விவரம் வேண்டுவோர் **சோ. நா. தி (1)** கட்டுரை 4 காண்க.

சோலைகளில் போய்ப் புகுந்து அவற்றின் தளிர்களைக் கோதியதனால் வாய்துவர்ப்படைந்த பெண் குயில்கள் பலாப் பழங்களின் மதுவை உண்டு அத்துவர்ப்பை மாற்றுகின்றன (4). பெரிய காட்டு முல்லைகள் கரும்பு களின் மேலேறிப் படர்ந்து வெண்ணிறப் பூக்களை மலர் விக்கின்றன; அம்மலர்களின்மீது வண்டுகள் மொய்க்கும் போது அவற்றின் வாய்களில் தேன் பெருகுகின்றது (5). ஆணும் பெண்ணுமாய்ப் பூவிலே படுத்திருந்த வண்டு களினிடையே ஊடல் உண்டாக, உடனே ஆண்வண்டு பேடைக்குத் தெரியாத ஓரிடத்தில் மறைந்திருக்க எண்ணி மகளிரின் கூந்தலில் மறைந்திருக்கைக்காக மதிமண்டலத் தில் படிந்திருக்கும் சிகரங்களையுடைய மாளிகைகளில் சென்று அணைகின்றன (6). தாமரைப் பூக்களிலுள்ள தேனினைப் பருகின மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக வண்டு கள் இனிய பாக்களைப் பாடுகின்றன (7). மாமரங்களி லும் தாழை மரங்களிலும் மாறாமல் பூத்திருக்கும் மலர் களையுடைய சோலைகளில் சுரும்பு என்னும் ஒருவித சாதி வண்டுகள் 'தென்னதென்ன' என இசைபாடுகின்றன (8). ஓங்கி வளர்ந்த அசோகமரத்தின் சிவந்த பூக்களின் மீது வண்டுகள் சஞ்சரிக்க அதனைக் கண்ட குயில்கள் 'அந்தோ! இவ்வண்டுகள் நெருப்பில் அகப்பட்டனவே' என்று கூவுகின்றன (9). இத்தகைய சூழலையுடைய திரு வெள்ளறை 'மசுலா மணிமாடங்கள்' சூழ்ந்தது (10).

**எம்பெருமான்:** மேற்காட்டிய சூழ்நிலையில் கோயில் கொண்டு எழுந்தளியிருக்கும் எம்பெருமனைப் பற்றி ஆழ்வார் கூறுவது: பெரிய மழு ஏந்தி இருபத் தொரு தலைமுறையில் க்ஷத்திரியப் பூண்டுகள் ஒழியு மாறு செய்தவன் பரசுராமன் (1); நான் மறைகளைத் தோற்று வருந்தின நான்முகனுக்குக் கருணை கூர்ந்த அயக்கிரீவவதாரம் செய்து அத்திருமறைகளை மீட்டுக் கொடுத்தவன் (2); ஏழுலகங்களையும் ஒருங்கே நலிந்து

கொண்டிருந்த இரணியனின் மார்பு இரு கூறாகும்படி தன் திருக்கை நகங்களாலே பிளந்த பெம்மான் (3); பாரதப் போரில் எதிரிகளான அரசர்களை மாளச்செய்து பஞ்ச பாண்டவர்கட்கு அரசினைப் பெற்றளித்தவன் (4); உடற் பண்பாலும், உயிர்ப்பண்பாலும் சிறந்தவளான பூமிப் பிராட்டியார் பிரளயப் பெரு வெள்ளத்தில் புக்கு அழுந்தினபோது கோல வராகவடிவு கொண்டு அண்ட பித்தியில் ஒட்டிக் கிடந்த பூமியைத் தோண்டி எடுத்துத் தன் கோட்டிடைவைத்தருளின கோமான். (5); தேவர் கட்கு அமுதளிப்பான் வேண்டி ஆமையாகத் திருவ வதரித்த ஆதிமூலன் (6) இறைவணனின் பத்துத் தலை களும் அற்று விழும்படி கோலவில்லினை வளைத்து அம் பெய்த கோமகன் (7); முன் பொருகால் இவ்வுலகங்களெல் லாம் அறிவுகெட்டு அஞ்ஞான இருளில் மூழ்கி இருந்த பொழுது அன்னமாகி அருமறை பயந்த வள்ளல் (8); மாவலியின் வேள்வி பூமியில் வாமன மாணியாக எழுந்தருளி அவனிடம் மூவடி மண் இரந்து பெற்று அப் பொழுதே அகலிடம் முழுவதையும் சுவாதீனப் படுத்திக் கொண்டான் (9). இங்ஙனம் பெருமைகள் எல்லாம் ஒருங்கே கொண்ட அஞ்சன வண்ணன் திரு வெள்ளறை யில் கோயில் கொண்டுள்ளான். அந்தப் பெருமானை 'நிற்பணிந்தெழுவேன்; எனக்கு அருள் புரியே' என்று வேண்டுகின்றார் ஆழ்வார்.

37. **உறையூர்**[12] : உறையூரைக் 'கோழி'' என்று குறிக்கும் சங்க இலக்கியம்[13] இத்தலத்திற்கு எழுந்தருள் கின்றார் ஆழ்வார். திருத்தலத்தை,

---

12. **உறையூர்** : தற்சமயம் திருச்சியைச் சார்ந்த ஒரு பகுதி இதனை 'நாச்சியார் கோயில்' என்று வழங்கி வருகின்றனர் பொதுமக்கள், திருச்சி கோட்டை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட ஒரு கி.மீ. தொலைவிலுள்ளது.

'கோழியும் கூடலும்'[14] என்ற ஒரே ஒரு தொடரால் மங்களாசாசனம் செய்துள்ளார். கோழி — உறையூர்; கூடல் — மதுரையில் கூடல் அழகர் கோயில் இறைவனும் இறைவியும் கருவறையில் சேர்ந்து சேவை சாதிக்கின்றன்.

38. **திருவரங்கம்**[15]: 'எங்கும் சுற்றிச் அரங்கனைச் சேர்' என்று முதுமொழிக் கிணங்க திருவரங்கத்திற்கு எழுந்தருள்கின்றார் ஆழ்வார். அரங்கன் மீது மிக்க ஈடுபாடு கொண்டு சுமார் 70க்கு மேற்பட்ட பாசுரங்களால் மங்களாசாசனம் செய்கின்றனர்.

**தலசூழா நிலை** : காவிரி, கொள்ளிடம் என்ற இரண்டு ஆறுகளுக்கிடைப்பட்ட தீவில் அமைந்

---

அடிக்கடி நகரப் பேருந்து வசதி உண்டு. அழகான சிறிய கோயில். **இறைவன் : அழகிய மணவாளன்**. நின்ற திருக்கோலம்; வடக்கு நோக்கிய திரு முக மண்டலம். தாயார் : **உறையூர் வல்லி, வாசவல்லி**, பெரி. திரு. *9.2:5*, சோ நா. தி. *(1)* கட்டுரை - *2* காண்க.

13. புறம் - *67*.

14. பெரி. திரு. *9.2:5*

15. **திருவரங்கம் :** விழுப்புரம் — திருச்சி (குறுக்கு) இருப்பூர்தி வழியில் ஒரு நிலையம். திருச்சியிலிருந்து அடிக்கடி நகரப் போருந்து வசதிகள் உண்டு. 'இது பெரியகோயில்' என்ற பெயராலும் வழங்கி வருகின்றது. உண்மையில் பெரிய கோயிலே இறைவன் **அரங்கநாதன்பெரியபெருமாள்** தாயார் : **சீரங்க நாச்சியார்**, இவருக்குப் பெரிய தனிச்சந் நிதி உண்டு. பெரி.திரு.*1.8:2;3.7:6*; **5.4**; *5,5; 5,6; 5 7; 5.8* (பதிகங்கள்); *7.3:4; 8.2:7; 9.9:2; 11.3:7; 11.8:8* திருகுறுந். *7,12,13,19*; திருநெடுந். *11,12,14,18,19. 23-25*. சி. திருமடல் *(39)*; பெரி.திருமடல் *(57)* **சோ.நா.தி.** *1*.கட்டுரை *1* காண்க.

துள்ளது. இத்திருத்தலம் நீர் வளம் காவிரி யாற்றால் ஏற்பட்டதால் அந்நதிபற்றிக் குறிப்பு அதிகமாக வருகின்றது. பாசுரங்களில் வண்டு பாடும் வார்புனல் வந்திழியப்பெற்றது; நீர் மதுவோடு கூடிப் பெருகும் (5.4:3) நீரில் சந்தன மரங்களும் நவமணிகளும் யானை மருப்பும் அகிலும் வேயின் முத்தும் மணியும் அடித்துக் கொள்ளப்பெற்று வரும். இந்த நீரால் வளம் பெற்ற வயல்களால் சூழப்பெற்றது இத்திருததலம்: வாழைத் தோப்புகளாலும் தென்னந் தோப்புகளாலும் சூழப் பெற்றது. நான் முகனும் அவனால் படைக்கப்பெற்ற அனைவரும் வந்து வணங்கும் இடம். விண்ணுள்ளாரும் மண்ணுலகோரும் வந்து வழிபடும் இடம். தேனும், தேனும் கலந்தாற்போலவும். பாலும் பாலும் கலந்தாற் போலவும் பரம ரசிகர்களான பாகவிதோத்தமர்கள் நெருங்கிப் பழகும் திருத்தலம்.

**எம்பெருமான் :** அரங்கத்துப் பள்ளியான் ஆழ்வார் பார்வையில்: இந்த எம்பெருமான் நான் முகனைப் படைத்தவன்; பிரளயகாலங்களில் உலகங்களைத் திரு வமுது செய்தவன் (5.4:1), ஆலந்தளிரில் கண்வளர்கின்ற மாயன். மணிமயமான கிரீடங்களை அணிந்து அரவணை யில் கிடப்பவன் (2). மாவலியிடம் மூவடி மண்ணை இரந்து பெற்ற வாமன மூர்த்தி (3) கடும் போரில் இலங்கை பாழாகும்படி வளைத்த வில்லைத் திருக்கரத்தில் உடையவன் (4) தாயாகிய யசோதைப்பிராட்டி போல வந்து நஞ்சு திட்டிய முலை கொடுத்த பூதனையின் உயிரை உண்ட கண்ணன் (6). இராவணனை வீர சுவர்க் கத்துக்கு அனுப்பிய சக்கரவர்த்தித் திருமகன்(5).

இன்னொரு பதிகத்தில் (5.6) தான் திருவரங்கத்தில் கண்ட எம்பெருமானை இனங்காட்டுகின்றார். நீண்ட கையையுடைய யானை போன்றவன்; கடலில் கண் வளர் கின்ற நீல மணி போன்றவன்; பசுமை நிறம் மிக்க மரகத

மணி போன்றவன்; மறைகளால் கூறப்பெற்றவன்; தனக்குச் சுவாமியானவன்; எப்பொழுதும் தனக்கு இனிமையாக இருப்பவன்; மழையினின்றும் ஆநிரைகளைக் காத்தவன் (1). திருப்பேர்நகரில் உறைபவன்; குறுங்குடியில் எழுந்தருளியிருப்பவன்; திருத்தண்காலில் நித்தியசந்நிதி பண்ணுபவன்; கரம்பனூரில் உத்தமனாக விளங்குபவன்; ஏழு கடல்கள், ஏழு குலபர்வதங்கள் ஏழு உலகங்கள் — இவற்றைப் பிரளயகாலத்தில் அமுது செய்தும் மனநிறைவு கொள்ளாதவன் (2). வராக கல்பத்தின் தொடக்கத்தில் கோல வராகமாய்த் திருவவதரித்துப் பூமியை அண்டபித்தியினின்றும் குத்தியெடுத்துக் கொணர்ந்தவன்; விரிந்த மண்ணுலகத்தையும் பரந்த விண்ணுலகத்தையும் தனக்கு உடலாக இருக்கப் பெற்றவன்; எப்போதும் தேனாய் அமுதமாய் இருப்பவன் முன்பொருகாலத்தில் திருமுள்ள முவந்து இடையனாகப் பிறந்தவன் (3).

விசாலமான கடலில் திருக்கண் வளர்ந்தருள்பவன்; வலிய உடலையுடைய அசுரன் ஆவேசித்து வந்த சகடம் கட்டுக் குலைந்து சின்னபின்னமாகும்படி திருவடியாலுதைத்தவன்; இரணியனைக் கிழித்துப் போட்டவன்; இரண்டு திருவடிகளினால் உலகம் எல்லாவற்றையும் அளந்து கொண்டவன்(4). நீராய், தீயாய், நெடு நிலனாய் இருப்பவன். இராவணனுடைய இலங்கை நகரைத் தீக்கிரையாச்சியவன்; வட முகாக்கினியாக இருப்பவன்; பரமபதத்திற்கு நிர்வாககன்; வைதிக அந்தணர்களின் மந்திர பூர்வமான அவிசை அக்கினிமுகத்தால் திருவமுது செய்பவன் (5). தம்முடை விருப்பு வெறுப்பை நீக்கி விட்டுத் தன்னைப்பற்றினவர்கட்கு உபாயமாக இருப்பவன் கம்சனைக்கொன்றொழித்தவன். உலகை உண்பதும் வெளிப் படுத்துவதுமான திருவயிற்றையுடையவன்; வாணாசுரப்போரில் உருத்திரனைச் சலிக்கச் செய்தவன். (6)

தன் சிந்தனைக்குப் பொருளாக இருப்பவன்; உபாய மாக இருப்பவன்; திருமகள் கேள்வன்; வேங்கடத்து அப்பன்; தன் நெஞ்சில் ஒரு நொடிப் பொழுதும் நீங்கா திருப்பவன்: திருக்கோவலூரில் திரிவிக்கிரமனாகச் சேவை சாதிப்பவன்; (7). பௌத்தர்கள், சமணர்கட்கு அருள் செய்யாதவன்; வைதிகர்கட்குத் திருவருள் சுரப்பவன் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்கட்கும் தனது தந்தை, தாய்க்கும் நித்திய சூரிகட்கும் சுவாமியாக இருப்பவன்(8). நிலையில்லாதவற்றை நெஞ்சிற் கொள்ளாமலும் இந்திரி யங்களைப் பொருள்கள்மீது செல்லாமலும் தடுத்துத் தன்னையே உண்மையாகச் சிந்திப்பவர்கட்குத் தன் சொரூபத்தைக் காட்டிக் கொடுப்பவன்; அஞ்சனம், காளமேகம் மரகதப்பச்சை இந்நிறங்களையுடையவன்(9). இத்தகைய எம்பெருமானைத் தென்னரங்கத்தில் கண்டதாகக் கூறுவார்.

பிறிதொரு பதிகத்தில் (5.7) திருவரங்கத்தில் எழுந் தருளியிருப்பவன் 'இன்னான், இன்னான்' என்று மீண்டும் விளக்குவார். நான்கு மறைகள், வேள்விகள், வியா கரணம் சொற்களால் அறியப்படும் பொருளும் காரண நிலையிலிருந்து காரிய நிலைக்கு வந்த நெருப்பு, நீர், பூமி, மேகம், வரவு, ஏழுகடல்கள், ஏழு குலபர்வதங்கள், ஆகாயம் இவற்றோடு கூடிய பிரம்மாண்டமும் தானாய் நின்ற எம்பெருமான் (1). இந்திரன், பிரமன், உருத்திரன் ஆகிய தேவர்கள் பல திருக்குணங்களைச் சொல்லித் துதிக்கப் பெற்றவனும் உயிர் வர்க்கத்திற்கெல்லாம் தந்தையாய், தாயாய், பிள்ளைகளாய், சுற்றங்களாய், அளவறிந்த பந்துவர்க்கங்களாய், சம்சார பந்தத்தை அறுக்க வல்ல மருந்தாய், சம்சார பந்தம் அற்றபின் விளையக்கூடிய நிர்மல சுபாவமாய், படைப்பு, காப்பு, அழிப்பு இவற்றிற்குக் காரணமாயிருக்கும் எம்பெருமான் (2). நிலையான பெரிய பூமி, மலைகள் கடல்கள் ஆகாயம், அசுரர்கள் இருப்பிடம் ஆகிய இவையெல்லாம் பேரிருள்

மூடப்பெற்றனவாய், விளங்கும் பிரகாசம் மழுங்கி பழைய நான் மறைகளும் மறைந்து போக, மீண்டும் தேவர்கட்கும் முனிவர்கட்கும் அருள் கூர்ந்து இருள் நீங்கும்படியாக வேதங்களை ஈந்த எம்பெருமான்(3). திருபாற்கடலை மந்தர மலையைக் கொண்டு ஆயிரந் தோள்களால் கடைந்தருளினவன்(4). தூணில் நரசிங்கனாகத் தோன்றி இரணியனின் மார்பைக் கீண்டவன்(5): பரசுராமனாக அவதரித்துக் கார்த்த வீரியனின் ஆயிரம் தோள்களையும் மழுப்படையால் கொய்தொழித்தவனும், அதன் பிறகு தேவர்கள் ஆயிரம் திருநாமங்களையும் சொல்லித் துதிக்க அலைகடலில் ஆயிரம் முகங்களையுடைய ஆதிசேடனாகிய திருப்பள்ளியில் அறிதுயில் கொள்ளுபவனுமான எம்பெருமான் (6). இராவணனைக் கொன்றொழித்து இலங்கோபுரியைப் பாழ்படுத்தியவனும் சமுத்திரராசன் வழிபடவும், வானர முதலிகள் கைங்காரியம் புரியவும் பெருமையுடையவனும், அலை கடலை மலைகளினால் அணைகட்டச் செய்தவனுமான எம்பெருமான்(7). காலம் முதலிய எல்லாப் பொருள்கட்கும் நிர்வாககனாய், வேள்விகட்குத் தலைவனாய், கஜேந்திரனுடைய துன்பத்தைப் போக்கியவனாய், இலங்காபுரியை அழித்தவனாய், அர்ச்சுனன்பொருட்டு திருவாழியைக் கொண்டு பகலவனை மறைத்தவனாய்த் திகழ்ந்த எம்பெருமான்(8). பூதனையின் முலையுண்ட பிள்ளையாய், பிரளயம் கொண்ட பூமியை வெளிப்படச் செய்தவனாய் ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளினவனாய், சர்வேசுவரனாய் மணிமுடியணிந்த தேவர்கட்கு எட்டாதவனாய், தன் நெஞ்சில் நின்று வெவ்விய துக்கங்களையும் போக்கினவனாய், கண்ணனாய் கோவர்த்தனமலையைக் குடையாய்க் கவித்தவனாய்த் திகழும் எம்பெருமான்(9). அரங்கமாநகரில் அறிதுயில் கொண்டு எழுந்தருளியிருப்பவன்.

இன்னுமொரு பதிகத்தில் (5.8) பல அன்பர்களை ஆதரித்த வரலாறுகளைக் கூறித் திருவரங்க நாதனின் திரு

வடிகளில் சரணம் புகுகின்றார். இராமவதாரத்தில் குகப் பெருமானிடத்தில் காட்டியருளின திருவருள் தன் திறத்தில் காட்டுமாறு இறைஞ்சுகின்றார் (1). வாயு தேவனின் குமாரனான அநுமனின் இழிகுணங்களைப் பாராட்டாமல் உடனிருந்துஉண்ட பெருங்கேண்மையை நினைந்து தன் திறத்திலும் அத்தகைய அன்பைக் காட்டுமாறு வேண்டுகின்றார்(2) கசேந்திரனுக்கு அருளினபெருமையை நினைந்து திருவடியை அடைந்ததாகச் செப்புகின்றார் (3). கருடனிடமிருந்து நாககுமாரனான சுமுகனைப் பாது காத்ததுபோல் தன்னையும் யமனது வசமாகாமல் பாது காக்குமாறு வேண்டுகின்றார் (4). கோவிந்தசாமி என்னும் என்னும் அந்தணனுக்கு அவன் கருத்தறிந்து காரியம் செய்ததுபோல் தன் கருத்தறிந்து செயற்படுமாறு இறைஞ்சுகின்றார் (5). மிருகண்டுவின் குமாரனான மார்க்கனுக்கு யம பயத்தை நீக்கி தன் திருவடியில் வைத்துக் கொண்டிருப்பதுபோல் தன்னையும் அப்படிப்பட்ட கிருபையால் ஆதரிக்க வேண்டுமாறு இறைஞ்சுகின்றார் (6). பல ஆண்டுகட்குமுன் மரித்த சாந்தீபினி குமாரனை மீட்டுக் கொடுத்தது போன்ற கருணையைத் தன் திறத்திலும் காட்டுமாறு வேண்டுகின்றார்(7) மாயமாய் மறைந்த வைதிக அந்தணனது நான்கு குமாரர்களையும் தேடிக்கொடுத்து உதவினது போன்ற கிருபையைத் தன் திறத்திலும் காட்டுமாறு இறைஞ்சுகின்றார் (8). தொண்டைமானுக்கு தனது திருவாழி திருச்சங்குகளை உதவிப் பகையை முடித்தருளியது போன்றும் பின்னர் அவனுக்கு மந்திரோபதேசம் செய்து ஆட்கொண்டது போலவும் தனக்கும் உதவுமாறு வேண்டுகின்றார் (9). இவற்றையெல்லாம் செய்தருளின் திருவரங்கனது அருஞ்செயல்களை நினைவுகூர்ந்து தன்னையும் அவர்களைப்போல் பாதுகாத்தருளுமாறு வேண்டி அவன் இணைத் தாமரை அடிகளில் சரண் புகுகின்றார்.

# 13. பாண்டிநாட்டுத் திருத்தலப்பயணம்

தென்னரங்கத்துப் பெரிய பெருமாளை அநுபவித்த ஆழ்வார் (1) திருமாலிருஞ் சோலை மலைக்கு[1] எழுந்தருளுகின்றார். இன்று இஃது 'அழகர் கோயில்' என்று வழங்கி வருகின்றது. இந்தத் தலத்து எம்பெருமானை ஆழ்வார் பல திருப்பாசுரங்களால் மங்களாசாசனம் செய்கின்றார்.

**தலச் சூழ்நிலை:** இத்தலச் சோலை சூழ்நிலையை 'வளங்கனி பொழில் சூழ் மாலிருஞ்சோலை' (பெரி. திரு. 2.7;7), 'தேனமர் பூம்பொழில் சூழ் திருமாலிருஞ்சோலை' (9.9:5), 'கிளை வளர்சூழ் திருமாலிருஞ்சோலை' (9 9:2),

---

1. **திருமாலிருஞ்சோலை மலை:** இந்தத் திவ்விய தேசம் மதுரைக்கு வடக்கே 12 கல் தொலைவிலுள்ளது. பேருந்து வசதிகள் உண்டு. மூலவர்: **பரமசாமி.** அழகர், கல்லழகர், மாலலங்காரர் என்ற பெயர்களும் உண்டு. நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம். உற்சவர் சுத்தத் தங்கத்தால் செய்யப் பெற்றவர். தாயார்: **கல்யாண சுந்தரவல்லி நாச்சியார்.** இவர் 'தனிக் கோயில் தயார். பெரி. திரு. 1.8:5; 2.7.7: 9.8 (பதிகம்); 9.9 (பதிகம்) 10.1:8; 11.7;9. திருகுறுந் 3; சிறி. திருமடல் (39); பெரி. திருமடல் (62). மேலும் விவரம் வேண்டுவோர் '**பாண்டி நாட்டுத் திருப்பதிகள்**' 6-வது கட்டுரை காண்க.

தேனமர் பூம்பொழில் சூழ் திருமாலிருஞ் சோலை' (9.9.5), 'சிலம்பு இயல் ஆறுஉடை திருமாலிருஞ்சோலை' (9.9:4), 'திங்கள் மாமுகில் திருமாலிருஞ் சோலை' (9.9:4), 'தென் அருவி கொழிக்கும் திருமாலிருஞ்சோலை' (9 9:7) 'பூம்பொழில் சூழ் திருமாலிருஞ் சோலை' (9.9:6) என்றெல்லாம் ஆழ்வார் வருணித்திடுவர். இதே சூழ்நிலையை இன்றும் காணலாம்.

சோலையின் சூழ்நிலையை மேலும் ஆழ்வார் விவரிப்பர். சோலை மரச்சாரலில் மூங்கில்கள் விண்டு விரிந்து வளர்ந்துள்ளன; நறுமணம் மிக்க குறிஞ்சி மலர்களிலுள்ள செவ்வித்தேனில் படிந்த வண்டுகள் இன்னொலியுடன் வட்டமிடுகின்றன (9 8:2) காலம் உணர்த்தும் சோதிடன் போன்று உரிய காலங்களில் பூக்கும் மேகமண்டலம் வரை ஓங்கி உயர்ந்த வேங்கை மரங்களும் கோங்கு மரங்களும் அங்குச் சூழப்பெற்றுள்ளன (9.8:3,4). ஒன்றோடொன்று பிணங்கி நிற்கும் விண்ணளாவும் மூங்கில்களின் நுனி மலையுச்சியிலுள்ள தேனடைகளின் வாயைக் கிழிப்பதனால் தேனீக்கள் நாற்புறமும் பறந்தோடுகின்றன; அதனால் தேனின் மணம் எம்மருங்கும் வீசுகின்றது (9.8:5). 'வருமழை தவழும் மாலிருஞ்சோலையில்' முகில்கள் ஆழ்கடலில் நீரை முகந்து கொண்டு விண்ணில் ஏறி இடி முழக்கம் செய்கின்றன; அவ்வொலியைக் கேட்கும் சிங்கங்கள் அது யானையின் பிளிறல் என்று கருதி எதிர் முழக்கம் செய்கின்றன (9.8:6); மதங்கொண்ட களிறுகளின் கவுள்களின் வழியே மதநீர் பெருகி வருகின்றது. அதனை வண்டுகள் பருகியும் அதனால் வற்றாது மேலும் பாய்ந்து சாரல்கள் தோறும் வெள்ளமிடுகின்றது (9 8:8). மலையினின்று இழியும் அருவிகள் சந்தனக் கட்டைகளையும் இரத்தினக் கற்களையும் உருட்டிக்கொண்டு வருகின்றன (9.8:1). விண்ணளவும் ஓங்கி உயர்ந்துள்ள சோலைகளில் மானினங்கள் மலையின் நீலப் பாறை வழிகளில் புகுந்து எங்கும் மேய்ந்து கொண்டிருக்கும் (9.8:7). குறவர்கள் தம்

கையிலுள்ள கவணில் வைத்தெறியும் மணிகளின் ஒளி மலையெங்கும் மிகுதியாகக் காணப்பெறுகின்றது. (9.8:3).

**எம்பெருமான் :** ஆழ்வார் அழகரை 'சோலைமலைக் களிறே' என்றும் 'தென் ஆனாய்' (4. 9: 2; திருநெடுந். 10 என்று யானையாக உருவகித்து விளிக்கின்றார். ஒரு பதிகத்தில் (9. 8) பாசுரங்கள் நெஞ்சுக்குரைப்பனவாக அமைந்துள்ளது. எம்பெருமான் ஏழு தீவுகளும் ஏழுமாக் கடல்களுமாய்ப் பரந்து நிற்பவன் (1). பூமாலையையும் தீர்த்தத்தையும் ஏந்திக்கொண்டு நித்திய சூரிகளும் தேவர்களும் ஆச்ரயிக்கும் எம்பெருமான்; சேஷசயனத்தில் சோதி மிக்க கிரீடத்தையுடையவனாய் இருப்பவன் (2). நோய்கள் வளரப் பெற்ற உடல் நீங்குமாறு நின்று துதிப்பதற்காக இப் பரந்த பூமியைத் தந்து அருளியவன்; வாமன மூர்த்தியாய் இப்பரந்த பூமியையெல்லாம் அளந்து கொண்டவன் (3). பூதனையின் நஞ்சு தீட்டப் பெற்ற முலையைச் சுவைத்து உண்டவன்; இரக்கமற்ற அரக்கியான தாடகை முடியும்படி சங்கல்பித்த பெருமான் (4). வணக்கமற்ற இராவணன் போர்க்களத்தில் முடியும் படியாக அவனுடைய மணியணிந்த தலைகள் பத்தும் தரையில் உருளும் படியாகவும், அவனுடைய கவந்தம் தெய்வ ஆவேசம் கொண்டதுபோல் நின்று ஆடும்படி யாகவும் செய்தவன் (5). அரவணையில் துயின்றவன்; விளங்கனியின்மீது அசுராவேசம் கொண்ட (வத்சலா சுரன்) கன்றினை வீசி எறிந்தவன்; இராசக் கிரீடை நடத்தினவன் (6). தேனுகன் ஆவி போவதற்காக கழுதை உடலுடன் வந்த அவனைப் பனங்கனிமேல் எறிந்தவன் (7). திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது சயனித்திருந் தவன்; திருவாய்ப்பாடியில் பிறந்து குதிரை வடிவாக வந்த கேசி என்ற அசுரன் வாயைக் கீண்டவன் (8). இத்தகைய எம்பெருமானை வணங்குவதற்குத் தன் நெஞ்சைத் தன்னுடன் வருமாறு அழைக்கின்றார்.

2. **திருமோகூர்**[2]: சோலைமலையிலிருந்து திருமோகூருக்கு வந்து சிறிய திருமடலில் **திருமோகூர்** (கண்ணி-74) என்று குறிப்பிட்டு மங்களா சாசனம் செய்கின்றார். இதைத் தவிர வேறு பதிகமோ தனிப் பாசுரமோ இல்லை. வேறு விவரம் தேவைப்படின் **பா. நா. தி** (கட்டுரை -5) கண்டு தெளியலாம்.

3. **திருக்கூடல்**[3] : மதுரை பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ஒரு திவ்விய தேசம். தென் மதுரை என்ற

---

2. **திருமோகூர் :** மதுரை இருப்பூர்தி நிலையத்திற்குக் கிழக்கே 7 கல் தொலைவில் உள்ளது. மேலூர் செல்லும் பேருந்தில் ஏறி திருவாதவூருக்குச் செல்லும் சாலையருகில் இறங்கி சில கெஜதூரம் நடந்து இவ்வூரை அடையலாம். **இறைவன் :** காளமேகப் பெருமாள், வழித்துணைப் பெருமாள்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார் :** திருமோகூர் வல்லி நாச்சியார், மேகவல்லி நாச்சியார். சிறிய திருமடல் (39).

3. **திருக்கூடல் :** டி. வி. எஸ். தொழிற்சாலைக் கருகில் உள்ளது. தொழிற்சாலையிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் சாலை வழியாக 100 கெ. தூரம் நடந்து சென்றால் இந்தச் சந்நிதியை அடையலாம். தரை தளம் : மூலவர் : **கூடலழகர்;** வீற்றிருந்த திருக்கோலம். கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம்; தாயார் : மதுரைவல்லி நாச்சியார், வகுளவல்லிநாச்சியார், மரகதவல்லி நாச்சியார், வரகுணவல்லி நாச்சியார் என்ற பெயர்களால் வழங்குவர். இவர்கள் யாவரும் தரை தளத்தில் எழுந்தருளியிருப்பவர்கள். தரை தளத்திற்கு மேல் இரண்டு தளங்கள் உண்டு. முதல் தளம் :**அரங்கநாதன்;** புயங்க சயனம். இரண்டாம் தளம் : சூரிய நாராயணன்; நின்ற திருக்கோலம். பெரி. திரு. 9. 2: 5. மேலும் விவரம் வேண்டுவோர் பா.நா.தி. 4-வது கட்டுரை கண்டு தெளிக.

திருப்பெயராலும் வழங்கும். இத்தலத்து எம்பெருமானை ஆழ்வார்,

கோழியும் கூடலும் (9. 2: 5)

என்ற ஒரே ஒரு தொடரால் மங்களாசாசனம் செய்துள்ளார். இங்கு 'கூடல்' என்பது இந்தத் திவ்விய தேசம். 'கோழி' என்பது திருச்சி உறையூரிலுள்ள திவ்விய தேசம் (சோழநாட்டிலுள்ளது).

4. **திருக்கோட்டியூர்:**[4] பசும்பொன்தேவர் மாவட்டத்தில் மதுரை-காரைக்குடி நெடுஞ்சாலையிலுள்ள திருப்புத்தூருக்குத் தெற்கே சிவகங்கைக்குப் போகும் வழியில் உள்ள திவ்வியதேசம். 'அணிபொழில், சேல்கள் பாய் கழனித் திருக்கோட்டியூர்' (9.10:10) என்று ஆழ்வார் மங்களா சாசனம் செய்வர்.

4. **திருக்கோட்டியூர்:** திருப்புத்தூரிலிருந்து தென் திசையில் சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது. தரைத் தளம்: மூலவர்: **உரகமெல்லணையான்;** திருப்பாற்கடல் நாதன் என்ற பெயராலும் வழங்கப்பெறுவான். 'ஸ்தித நாராயணன்' என்ற திருப்பெயரும் உண்டு. உற்சவர்; **சௌமிய நாராயணன்;** சயனத்திருக் கோலம்; கிழக்குநோக்கிய திருமுக மண்டலம். தாயார்: **திருமகள் நாச்சியார்.** நடுத்தளம்: நின்ற நாராயணன். பெரிய பிராட்டியுடனும் பூமிப் பிராட்டியுடனும் சேவை சாதிக்கின்றார். 'நின்ற நம்பி' என்ற திருப்பெயரும் இவருக்கு உண்டு. மேல்தளம்: இது 'பரமபதம்' என்ற பெயரால் வழங்கி வருவது. பரமபதநாதன் இரு பிராட்டிமாருடன் சேவை சாதிக்கின்றார். இருந்த திருக்கோலம். பெரி. திரு. 7.1:3; 9.10 (பதிகம்); 10.1:9. பெரி. திருமடல் (63). மேலும் விவரம் வேண்டுவோர் பா. நா. தி. 1-வது கட்டுரையைக் கண்டு தெளியலாம்.

**தலச்சூழ்நிலை:** திருக்கோட்டியூர் அருகிலுள்ள மணிமுத்தாற்றில் சிலநீர்ப் பெருக்குகள் குதிரை தாவுமாப் போலத் தாவித் தாவி ஓடுகின்றன (9.10:1). அந்தப் பெருக்குகளில் கொந்தளிக்கின்ற அலைகள் சாமரைக் கற்றை, சந்தனக் கட்டை முதலியவற்றை உந்தித் தள்ளி வருகின்றன (3). சோலைக் காட்சிகளைக் காட்டும் போக்கில் வண்டுகள் விளையாடும் முல்லை, மல்லிகை முதலிய மலர்களின் நறுமணத்தை அணவிக்கொண்டு மாருதம் வீசுவதாகக் கூறுவர் (2). ஊரினுள்ளும் நறுமணத்திற்குக் குறை இல்லை மலைமுல்லைப் பூக்களின் நறுமணத்தையும், சமநிலத்திலுள்ள கொடி மல்லிகையின் இனிய மணத்தையும் முகந்து கொண்டு வரும் தென்றல் ஊரிலுள்ள வீதிகளிலும் 'கம்' என்ற மணத்தைப் பரப்பி நிற்கின்றது (7).

**இறையநுபவம்:** ஆழ்வாரின் இறையநுபவமும் அவர்தம் பாசுரங்களில் பிரதிபலிக்கின்றன. அவர் கூறுவார்: தமக்கு அசாதாரண சுவாமியும், தமக்கு உபகாரகனும், நித்தியசூரிகட்குத் தலைவனும், அடியார்களின் நெஞ்சில் பிரியாமல் பொருந்தியிருப்பதுமான எம்பெருமான் (9.10:1); துக்கத்திற்குக் காரணமான நோய்களை நீக்கியருள்பவனும், தமக்கு வகுத்த இறையும், இனிய புன்முறுவலையும் சிவந்த திருப்பவளத்தையும் உடைய பூமிப் பிராட்டியினுடைய அழகை நுகர்பவனும் பெரிய பிராட்டியாருக்கு போக்கியனுமான எம்பெருமான் (2); கிருத யுகத்தில் வெளுத்த நிறமுடையவனும், கலியுகத்தில் கறுத்த நிறமுடையவனும், துவாபரயுகத்தில் நீலமணியின் நிறம் போன்ற நிறமுடையவனும், நித்தியசூரிகட்குத் தலைவனும், பிரளயகாலத்தில் ஏழு உலகங்களையும் தன் திருவயிற்றில் வைத்துக் காத்து பிறகு வெளிப்படுத்தினவனுமான சர்வேசுவரன் (3); ஏற்றினை ஊர்தியாக உடையவனும் மழு வாயுதத்தை ஏந்தியவனுமான சிவபெருமானுக்குத் திருவுள்ளமிரங்கி உடம்பில் ஒருகூறு கொடுத்

தவனும் பெரிய பிராட்டியாருக்குப் போக்கியனுமான எம்பெருமான் (4); கடலநிற வண்ணனும், நீலமணி நிறமுடையவனும், நித்திய சூரிகட்குத் தலைவனும் நீண்ட மாலையிடையே திருமுடியையுடையவனுமான எல்லாவற்றிலும் உயர்ந்தவனும், திரிவிக்கிரமாவதாரத்தில் பூமியை அளந்து கொண்டவனுமான எம்பெருமான் (5); தானே உலகக் காப்பாளன் என்று அகங்கரித்திருந்த இலங்காதிபதியான இராவணன் முடியும்படியாக அம்புமாரிபெய்தவனும், தன்னை அடிமை கொண்டவனுமான எம்பெருமான் (6); வத்சாசுரனைக் கொண்டு கபித்தாசுரன்மீது வீசியெறிந்து இருவரையும் முடித்தவனும், கல்மாரியினின்று ஆநிரையைக் காத்துத் திருவுள்ளம் உவந்தவனும், பூமிப் பிராட்டிக்குப் போக்கியனுமான எம்பெருமான் (7); குருந்தை முறித்துத் தள்ளினவனும், குவலாயபீடம் என்னும் யானையைச் சீறி முடித்தவனும், கேசி என்னும் குதிரையைக் கொன்றவனும், தன்னை ஆட்கொண்டருளத் தன் நெஞ்சில் புகுந்தருளினவனும், நித்திய சூரிகட்குத் தலைவனுமான எம்பெருமான் (8); வைணவர்களால் வணங்கப் பெற்றவனான எம்பெருமான் திருக்கோட்டியூரிலுள்ளான் என்று சொல்லிச் சொல்லித் தன்னையே மறக்கின்றார்.

5. **திருமெய்யம்:**[5] திருக்கோட்டியூரிலிருந்து திருமெய்யத்திற்கு வருகின்றார் ஆழ்வார்.

---

5. **திருமெய்யம்:** திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கில் 46 கல் தொலைவிலும் புதுக்கோட்டைக்குத் தெற்கில் மூன்று கல் தொலைவிலும் உள்ளது. திருவரங்கத்திற்கு அடுத்தபடியாகச் சிறப்புடையது; 'ஆதிரங்கம்' என்றே வழங்கப் பெறுவது இறைவன்; **சத்தியகிரிநாதன்;** நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார்; உய்யவந்தாள் நாச்சியார், பெரி. 2 5:8; 3 6:9; 5.5:2 6.8:7; 8.2:3; 10.1:5; 11 7:5. திருகுறுந்.

'உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டியார் உய்யல் அல்லால்
மற்றையோர்க் குய்ய லாமோ?

என்று பல தலங்களுடன் இத்திருத்தலத்தை நினைவு கூர் கின்றார். ''திருமெய்யத்து இன்னமுதவெள்ளம்' என்று எம்பெருமானைச் சொல்லி இன்புறுகின்றார். இந்த எம் பெருமானை ஆழ்வார் அநுபவிப்பது சொல்லுந் தரமன்று.

மையார் கடலும்
மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையும்
காயாவும் போன்றிருண்ட
மெய்யானை மெய்ய
மலையானைச் சங்கேந்தும்
கையானைக் கைதொழாக்
கையல்ல கண்டோமே (11. 7:5)

[மை ஆர்-கறுத்த; வரை-மலை; முகில்-மேகம்; கொய்ஆர்- பறிக்கும் நெருக்க விருப்பத்தைத் தரும்; இருண்ட-கறுத்த; மெய்யான்-திரு மேனியையுடையவன்]

என்கின்றார்.

கட்டேறு நீள்சோலைக்
காண்டவத்தைத் தீமூட்டி
விட்டானை, மெய்யம்
அமர்ந்த பெருமானை (6 8:7)

---

19: பெரி. திருமடல் (63). மேலும் விவரம் வேண்டு வோர் **பா. நா. தி.** (கட்டுரை-2) காண்க.

[கட்டுஏறு-காவல் மிக்கதுள்ள; அமர்ந்த-எழுந்தருள்கின்ற]

என்று திருநறையூர் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது இந்த எம்பெருமானும் ஆழ்வார் சிந்தையில் எழுகின்றார். நாயகி பாவனையில் எம்பெருமானை அநுபவிக்கும் திறம் பிறிதோரிடத்தில் காட்டப்படுகின்றது.[6]

6. **திருப்புல்லாணி:**[7] திருமெய்யத்திலிருந்து திருப்புல்லாணிக்கு வருகின்றார். இந்த ஆழ்வார் மட்டிலும் மங்களாசாசனம் செய்த தலம் இது.

**தலச் சூழ்நிலை:** அற்புதமான நெய்தல் நிலக் காட்சிகள் பாசுரங்களின்மூலம் அறிய முடிகின்றது. இராமேசுவரத்தில் கடல் அமைதியாக இருப்பதுபோல் திருப்புல்லாணியில் கடல் அமைதியாக இல்லை; அங்கு மிகவும் கொந்தளிப்புடன் உள்ளது. அச்சத்தை விளைவிக்கக் கூடிய பேரலைகள் காணப்படுகின்றன. திருமங்கையாழ்வாரும்,

பொருது முன்னீர்க் கரைக்கே
மணியுந்து புல்லாணி (9. 3: 2

---

6. இந்நூல் பின் இயல் ஒன்றில் காண்க.

7. **திருப்புல்லாணி:** இராமநாதபுரத்திலிருந்து கிழக் கரைக்குச் செல்லும் பேருந்து வழியில் சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது இத்திருத்தலம். கடற்கரையை ஒட்டியதலம். இறைவன்; **தெய்வச் சிலையார், கல்யாணசகந்நாதர்;** வீற்றிருக்கும் திருக்கோலம்; கிழக்குநோக்கிய திருமுக மண்டலம். தாயார்: **கல்யாணவல்லி நாச்சியார்** பெரி. திரு. 9.3; 9.4 (பதிகங்கள்) பெரி. திருமடல் (6 7), மேலும் விவரம்வேண்டுவோர் பா. நா. தி. (கட்டுரை-3) காண்க.

[பொருது - அலையெறிந்து; முந்நீர் - கடல்; மணி இரத்தினம்]

என்று கூறுவதைக் காணலாம். மேலும் ஆழ்வார் 'பொங்கு முந்நீர்க் கரைக்கே மணியுந்து புல்லாணி' (9. 3: 4) என்றும், 'புணரியோதம் பணிலம் மணியுந்து புல்லாணி' (9. 3: 5) என்றும், 'புணரி என்னப் புதம் செய்து வந்து புல்லாணி' (9. 3: 7) என்றும் இங்குள்ள கடல் வருணிக்கப்பெற்றுள்ளது. இந்த ஊர்க் கடற் கரைக்கு **'பொன்னங்கழிக்கானல'** (9. 4: 2) என்று, திருநாமம் இட்டு மகிழ்கின்றார் ஆழ்வார்[8].

இங்குள்ள கடற்கரைச் சோலைகள் ஆழ்வார் திருவாக்கில் மிக அற்புதமாக இடம் பெற்றுள்ளன.

இலங்கு முத்தும் பவளக்
  கொழுந்தும் எழில் தாமரை
—திருவாய் 5. 7: 1

புலங்கள் முற்றும் பொழில்சூழ்ந்து
  அழகாய புல்லாணி (9. 3: 10)

[இலங்கு - விளங்குகின்ற; கொழுந்து - துளிர்; எழில் - அழகிய; புலங்கள் - இடங்கள்; பொழில்- சோலைகள்]

என்பது அவர் காட்டும் சோலை. ஒளிமல்குகின்ற முத்துக் களையும் அழகிய பவளத் துளிர்களையும் அலர்ந்த

---

8. வானமாமலையில் **'சேற்றுத் தாமரை'** என்ற திருநாமத்துடன்தடாகமும், **'தேனமாம் பொழில்'** (ஷை 5. 7: 6) என்ற திருநாமத்துடன் தோப்பும், திருமோகூரில் **'தாளதாமரை'** (ஷை 10. 1: 1) என்ற திருநாமத்துடன் தடாகமும் நம்மாழ்வார் திருவாக்கில் வந்துள்ளமை ஈண்டு நினைந்து மகிழ்வதற்குரியவை.

தாமரைப்பொய்கைகளையும் உடைத்தானசோலைகளால் சூழப்பட்டது திருப்புல்லாணி என்ற திவ்விய தேசம் என்கின்றார்; 'தாதுமல்கு தடஞ் சூழ்பொழில்' (9. 3: 3), 'போது நாளும் கமழ்பொழில் சூழ்ந்த புல்லாணி' (9. 3: 3), 'செழுந்தடம் பூஞ்சோலை சூழ் புல்லாணி' (9. 4: 6), 'பூஞ்செருந்தி பொன்சொரியும் புல்லாணி' (9. 4: 8), 'போதலரும் புன்னை சூழ் புல்லாணி' (9. 4:9) என்பன பெருமான் திருவாக்குகளாகும். மேலும்,

> கள்ளவி ழும்மலர்க் காவியும்
> தூமடற் கைதையும்
> புள்ளும் அள்ளற் பழனங்களும்
> சூழ்ந்த புல்லாணி (9. 3: 6)

> [கள்-மது; அவிழும்-ஒழுகும்; காவி-செங்கழு நீர்ப் பூ; தூமடல் - வெளுத்த மடல்; கைதை - தாழை; அள்ளல் - சேறு; பழனம் - வயல்]

என்று அந்தத் தலத்தின் சூழலை நெய்தல் நிலக் கருப் பொருளைக் கொண்டே வருணித்திருக்கும் எழில் நலம் எவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும். ஆயினும் இன்று அச்சூழ்நிலையைக் காண முடிகின்றதில்லை.

**இறையநுபவம்:** இங்கு ஆழ்வாரின் அநுபவம் நாயகி பாவனையில் நடைபெறுகின்றது. மகள் பாவனை யில் பேசுகின்றார் ஆழ்வார். 'கொடிய பாவத்தையுடையே னான நான் என்னை நையச் செய்து கொள்வதால் என்ன பயன்? நெஞ்சமே! வா நாம் திருப்புல்லாணியை வணங்குவோம்' (9.3;1,2) 'பெருமானை மறக்க முடிய வில்லையே! 'நின்னைப் பிரியேன்' என்று சொல்லிப் போனவரிடம் சென்று வணங்குவோம்' (3). தோழியிடம் பேசுவது: 'உயிர்த் தோழியே, பிறரொருவரும் அறியாத படி (தேனுண்ணும் வண்டு ஒன்றே சாட்சி) என் பக்கல்

கலவிக்கு வந்த எம்பெருமான் நமக்குச் சொன்னபடி செய்திலன். ஆதலால் வா, புல்லாணிக்குச் சென்று வருவோம்' (4). மனத்திற்குச் சொல்லுவது : 'பாவியாகிய நான் நினைத்த மாத்திரத்தில் நெஞ்சு வேகும். மணம் மிக்க தாழம்பூக்களை நம் குழலில் சூட்டி 'இனி உன்னை விட்டுப் பிரிந்தால் உயிர் தடுமாறிப்போகும்' என்னும் படியான சொற்களைக் கூறி நம்மைவிட்டுப் பிரிந்த பெருமானைச் சந்தித்து வருவோம் வா, மனமே' (5); நெஞ்சுக் குச் சொல்லுவது : 'மனமே, அவனைச் சந்தித்து இங்கு இருப்பதால் என்ன பயன்? ஆகவே அவன் உறையுமிடத் திற்குச் சென்று வருவோம், வா' (6); மனத்திற்குச் சொல் வது: 'மனமே, பகலும் இரவும் கண்ணுறங்காதிருப்ப தனால் என்ன பயன்? அவன் வாழும் இடம் சென்று வணங்கி வருவோம், வா' (7) நெஞ்சிற்குச் சொல்வது : 'கலப்பையும் சக்கரமும் ஆகிய ஆயுதங்களைத் தரித்தவர் நம்மிடத்தில் அன்புடையவர்போல் காட்டிக்கொண்டு கபடத்துடன் சிறிதும் இரக்கமில்லாதவராக இருக்கின் றார். வா, அவரிடம் சென்று தொழுது வருவோம்' (8). தோழியிடம் சொல்லுவது 'தோழியே, அவனே நமக்குப் புருஷார்த்தம்: நாம் நீராடி அவன் திருநாமங்களை ஓதி அவன் திருவடிகளை நாள்தோறும் தொழுவோம். ஒன் றும் தாரான் எனினும் தந்திடுவான். அவன் அப்படித் தாரோதொழியினும் அவன் பொருந்தி வாழும் திருப் புல்லாணிக்குச் சென்று வருவோம், வா' (9) இப்படி நெஞ்சையும் தோழியையும் மாறி மாறி அழைக்கின்றார் ஆழ்வார்.

இந்த முயற்சி பயன்படவில்லை. கால் நடைதாராத் படி தளர்ச்சி. ஆகவே கண்ணிற் கண்ட பறவைகளைத் தூதுவிடுதல், முன்புள்ளார் நோவுபட அவர்கட்கு எம் பெருமான் உதவின நிகழ்ச்சிகளைக் கூறுதல், உறவினர் களின் அறிவுரைகளைச் செவிமடுக்காத நிலைமை ஏற்படு தல் போன்றவைகளால் இறைவனை அநுபவிக்கின்றார்.

''தோழி, திருப்புல்லாணியைச்சென்று தொழுவோம்என்று அவாவுற்றிருந்த நமக்கு துன்பப்படுவதே பலன் என்பதாயிற்றே! துன்பப்படுவதுதான் நமது தலைஎழுத்தோ! என்று வருந்திக் கூறுகின்றாள் பரகால நாயகி (9. 4: 1). ''பொன்னங்கழியிலுள்ள பறவைகளே வாமன வடிவங் கொண்டு மாவலியிடம் மூவடி மண்ணை இரந்து பெற்று மூவுலகையும் அளந்து கொண்டவன் செயலில் மயங்கியதால் என்மேனியெல்லாம் பொன்னாயிற்று. என் நிலையினைப் புல்லாணி எம்பெருமானுக்குத் தெரிவியுங்கள்'' (2). அதே பறவைகளிடம் தனது சிந்தை நோயைச் செப்பியருளுமாறு வேண்டுகின்றாள் (2) இரணியனுடைய மார்பைப் பிளந்து பிரகலாதனுக்கு அருள் புரிந்த பெருமான், பக்தர்களிடம் இப்படியே வேற்றுமையின்றி உதவ வேண்டியிருக்க, என்னளவில் அது செய்யாமை தகுதியோ?' (4); இலங்கை கலங்கியழியும்படி அம்பு கோத்த சக்கரவர்த்தித் திருமகன் பின்னே சென்று அவனுடைய பொய்யுரைகளை நம்பித் தரித்திருக்கின்றேன்! (5); 'பகலவன் மறைந்தான்; சந்திரன் தோன்றித் தன்னுடைய கிரணங்களால் தகிக்கின்றான்; புல்லாணியைத் தொழுததால் என் அழகும் கெட்டொழிந்தது; வளையல்களும் பறிபோயிற்று (6); 'மாடுகளின் கழுத்திலுள்ள மணியோசை ஓயாமல் கேட்பதால், அது தீயைக் காட்டிலும் கொடுமை புரிகின்றது. கடலும் வெவ்விய நெருப்பையே வீசுகின்றதே' (7); 'கசேந்திராழ்வானுக்கு அருள் புரிந்த எம்பெருமான் என் திறத்தில் தாமதிப்பது என்னே? இளமதியும் தகிக்கின்றானே! (8); நான் மறை வடிவினனும் வேள்வி வடிவினனும் மேலுலகங்களாகவும் சந்திர சூரியர்களாகவும் உலகங்களைக் காப்பவனாகவும் உள்ள எம்பெருமான் என் திறத்தில் அருள்புரியாதது என்னே!" (9). இவ்வாறு ஏக்கத்தாலேயே எம்பெருமானை அநுபவிக்கின்றாள்.

7. **திருத்தண்கால்**[9]: புல்லாணியை அநுபவித்த ஆழ்வார் திருத்தண்காலுக்கு வருகின்றார். தலத்தின் மீது நேரான பாசுரங்கள் இல்லை. தென்னரங்கத்தின் மீதுள்ள பாசுரம் ஒன்றில்,

> பேரானை குறுங்குடிஎம்
> பெருமானை திருத்தண்கால்
> ஊரானை கரம்பனூர்
> உத்தமனை (5. 6: 2)

என்று இவ்வூரையும் குறிப்பிடுகின்றார். திருநெடுத் தாண்டகத்திலுள்ள,

> பொங்கார்மேல் இளங்கொங்கை பொன்னே பூப்பப்
> பொருகயல்கண் நீர்அரும்பப் போந்து நின்று
> செங்கால மடற்புறவம் பெடைக்குப் பேசும்
> சிறுகுரலுக் குடல்உருகிச் சிந்தித்து ஆங்கே
> தண்காலும் தன்குடந்தை நகரும் பாடித்
> தண்கோவ லூர்பாடி ஆடக் கேட்டு
> 'நங்காய்! நங் குடிக்கிதுவோ நன்மை' என்ன
> நறையூரும் பாடுவாள நவில்கின்றாளே.
>
> —திருநெடுந். 17

[பொங்கு ஆர் - வளர்ச்சி மிக்க; பொன்-தேமல்; பொரு-போரிடும்; செங்கால-சிவந்த கால்களை யுடைய; புறவம்-புறாக்கள்]

---

9. **திருத்தண்கால்** : சீவில்லிபுத்தூர் — விருதுநகர், நெடுஞ்சாலையிலுள்ள தலம். இறைவன் : **தண்காலூர் அப்பன்**: நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார்: **அன்ன நாயகி, அனந்த நாயகி, அமுத நாயகி, ஜாம்பவதி** என்ற நால்வர். பெரி. திரு. 5. 6: 2; திருநெடுந். 17; சிறி. திருமடல் (39); பெரி. திருமடல் (59) மேலும் விவரம் வேண்டுவோர் **பா. நா. தி** (கட்டுரை - 8) காண்க.

என்ற திருந்தாண்டகப் பாசுரம் தாய்ப் பாசுரமாக நடை பெறுகின்றது. இதில் ஆழ்வாருக்கு நாயகி நிலை ஒரு புறமும், தாயின் நிலை மற்றொருபுறமுமாக நடக்கின்ற படியால் எம்பெருமானை அநுபவிப்பதில் விரைவு உண்டானமையும் 'நாம் பதறக் கூடாது' என்ற தீர்மான மும் உண்டாவதைக் காண முடிகின்றது.[10]

**8. திருக்குறுங்குடி**[11] : திருத்தண்காலிலிருந்து திருக்குறுங்குடிக்கு வருகின்றார் ஆழ்வார். இதனை வாமன க்ஷேத்திரம் எனவும் வழங்குவதுண்டு.

**தலச்சூழ்நிலை :** மலையையொட்டிய பகுதியாத லின் குறுங்குடி சோலைகள் சூழ்ந்த ஊராகக் காணப்படு கின்றது. மலையையொட்டிய பகுதியாதலின் இவ்வூர் நல்ல குளிர் சோலைகள் நிரம்பியுள்ளன. 'கொல்லை வளர் இளர் முல்லை புல்கும் குறுங்குடி' (9. 5: 6), 'கொங்கு அலர் தண்பனை சூழ்புறவின் குறுங்குடி' (7) என்ற ஆழ்வார் வாக்குகளால் இவ்வூர்ச் சுற்றுப் புறச் சூழ் நிலையினை அறியலாம். மேலும் இந்த ஆழ்வாரின்,

---

10. இந்நூல் - இயல் - 17இல் தாய்ப்பாசுரத்தின் தத்துவம் விளக்கப் பெற்றுள்ளது.

11. **திருக்குறுங்குடி :** வானமாமலையிலிருந்து மேல் திசையில் சுமார் 12 கி. மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு. திருநெல்வேலி — தென் காசி அகல இருப்பூர்திப் பாதையில் சேரன்மா தேவி நிலையத்திலிருந்து சுமார் 20 கி. மீ. தொலைவு. பேருந்து வசதி உண்டு. இறைவன் : **வைணவ நம்பி, மலைமேல் நம்பி, நின்ற நம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, திருப்பாற்கடல் நம்பி, திருக்குடி நம்பி** (7 நம்பிகள்). தாயார் : **குறுங்குடி வல்லி நாச்சியார்** பெரி திரு. 1. 6: 8; 5 6: 2; 6. 3: 3; 9.5; 9.6 (பதிகங்கள்) திருநெடுந். 4; பெரி. திருமடல் (55). மேலும் விவரம் வேண்டு வோர் **பா. நா. தி.** (கட்டுரை - 18) காண்க.

இரவும் பகலும் ஈன்தேன்
முரல வண்டெல்லாம்
குரவின் பூவே தான்மணை
நாறும் குறுங்குடி (9. 5: 4)

[தேன் - வண்டுகள்; ஈன் - இனிமையான்]

என்றும்,

இரவும் பகலும்
வரிவண் டிசைபாட
குன்றின் முல்லை மன்றிடை
நாறும் குறுங்குடி (9. 6: 9)

[குன்று - மலை; மன்று - நிலம்]

என்ற பாசுரப் பகுதிகள் இவ்வூர் மலைச்சாரலை ஒட்டியது என உணர்த்துகின்றன. குறுங்குடியின் குளிர்ந்த நீர்த்தடாகங்களில் செங்கால அன்னம் மணம் மிக்க தாமரைப் பூவில் தன்பேடையுடன் சேர்ந்து வாழும் என்றும் (2), மென்மையான சிவந்த கால்களையுடைய இனிய துணையாகிய நாரைச்சேவலுக்கு உணவு தேடிக்கொண்டு கள்ளப் பார்வையையுடைய அதன் பேடை வயல்களில் மேயும் என்றும் (3) இந்த ஆழ்வார் பேசுகின்றார். இன்னும், கொக்கின் குஞ்சு தகுந்ததான ஒரு மரத்தின் தாழ்ந்த கிளையில் ஏறி தாய்க்கொக்கின் வாயிலிருக்கும் 'வெள்ளிறா' என்னும் சாதி மீனை உண்ணும் என்றும் (9. 6: 1), சிவந்த வாயினையுடைய கிளிகள் பெண்களைப் போல் இனிமையாகப் பேசும் என்றும் (9. 6: 6) அந்தச் சூழ்நிலையில் கருப்பொருள்களின் செயல்கள் காட்டப் பெறுகின்றன. மற்றும்,

கொல்லை முல்லை மெல்லரும்
பீனும் குறுங்குடியே (9. 6: 7)

என்ற ஆழ்வாரின் வாக்கு,

கொல்லை முல்லை மெல்லரும்
பீனும் குற்றாலம் [12]

என்ற சம்பந்தப் பெருமானின் திருவாக்கினை நினைக்கச் செய்கின்றது. இருவரும் ஒரு காலத்தவர் என்பதையும் சிந்திக்கின்றோம்.

**இறையநுபவம் :** திருப்புல்லாணியில் ஆழ்வாருக்கு ஏற்பட்ட நாயகி நிலை இங்கும் தொடர்கின்றது. திரும் புல்லாணியிலிருந்து ஆழ்வாரின் நெஞ்சு குறுங்குடிக்குச் சென்றதேயன்றி உடல் அங்குச் செல்ல முடியவில்லை. ஆற்றாமையாலே, பாதகப் பொருள்களில் ஈடுபட்டுக் கண்ணுறங்காமல் துடிக்கும் நிலை ஏற்பட்டு விடுகின்றது. ''வெண்ணிறமுள்ள இளம்பிறை, பூக்களில் படிந்து வீசும் தென்றற்காற்று, ஒன்றி வாழும் அன்றிலின் இணைகள் (9. 5: 1); மல்லிகையில் அணைந்து வந்த மந்த மாருதம் (2); காலைப் பொழுதுபோல் வருத்துதல், இரவின் நாழிகை நீண்டது போன்ற தோற்றம், எரிகின்ற நெருப்பு போன்று தகிக்கும் வமை (3); மாலையில் வீடு திரும்பும் காளைகளின் கழுத்தில் தொங்கும் மணியின் ஒலி (4); ஆயன் தீங்குழல் ஓசை, தென்றலுடன் கூடிய மாலை, அந்திப் பொழுதில் தோன்றும் இளம் பிறை (5); கடலோசை, கோபாலனின் குழல் ஓசை (8) ஆகியவற்றால் படும் தொல்லைகளைப் பொறுக்க முடியாமல் தன் தாயாரையும் தோழிமாரையும் நோக்கிக் 'குறுங்குடிக்கே என்னை உயத்திடுமின்'' என்று வேண்டுகின்றார். இது கண்ணனை அடையவேண்டும் என்ற ஆர்த்தியைப் பொறுக்க மாட்டாத ஆண்டாள் தன்னைக் கண்ணன் எழுந்தருளியிருக்கும் இடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கு மாறு வேண்டுவதை[13] நினைக்கச் செய்கின்றது.

---

12. தேவாரம் 1. 99: 3
13. நாச். திரு. 12

பெரிய பிராட்டியாருடன் சேர்ந்துறையும் பெருமானை நினைத்தவுடன் பிராட்டியின் சந்நிதானமும் அவளுக்குத் தரிப்பைத் தருகின்றது. ஆழ்வார் தாமே நடந்து செல்லும்படியான நிலைமை ஏற்படுகின்றது. அங்குறையும் பெருமானுடைய சீலத்தை அநுசந்திக்கின்றார். சிவபெருமானுக்கு தன் உடலின் ஒரு கூறினைக் கொடுத்த சீலகுணம் நினைவிற்கு வருகின்றது. அநுகூலரான வைணவர்களையும் கூட்டிக்கொண்டு தாமே திருக்குறுங்குடி சென்று அநுபவிக்கத் துணிகின்றார் ஆழ்வார். அந்த அநுபவம் அமைந்தது இத் திருமொழி (9. 6).

நின்ற வினையும் துயரும்கெட மாமலரேந்தி
சென்றுபணிமின்! எழுமின்! தொழுமின்! தொண்டீர்
என்றும் இரவும் பகலும் வரிவண் டிசைபாட [காள்!
குன்றின் முல்லை மன்றிடை நாறும் குறுங்குடியே (9)

[தொண்டீர்-அடியார்களே; நின்றவினை-சஞ்சத கருமம்; துயர்-பிராரப்த கருமம்; குன்று-மலை; மன்று-வெளி நிலம்]

என்பது ஒரு பாசுரம். இத்திருமொழியில். "தொண்டர்களே! உங்களுடைய எல்லாப் பாவங்களும் தீரும்படியாக நன்மலர்களைக் கொண்டு போய்த் திருக்குறுங்குடியைத் தொழுதேத்துங்கள்!" என்கிறார். இப்படிச் செல்லுகின்றது இத்திருமொழி.

அடுத்து, மலைநாடு சென்று சில தலங்களை வழிபடத் திருவுள்ளம் பற்றுகின்றார்.

# 14. மலைநாட்டுத் திருத்தலப் பயணம்

திருக்குறுங்குடி நம்பியை மங்களாசாசனம் செய்து மனநிறைவு கொண்ட மங்கைமன்னன் மலை நாட்டை நோக்கிப் பயணமாகின்றார். முதலில் (1) திருப்புலியூரை (குட்ட நாட்டுத் திருப்புலியூர்) அடைகின்றார்.

1. **திருப்புலியூர்**[1]: முதலில் குட்ட நாட்டுத் திருப்புலியூரைஅடைகின்றார். இத்தலத்து எம்பெருமானைப்பதிகத்தாலோ பாசுரங்களாலோ மங்களாசாசசனம் செய்யவில்லை. சிறிய திருமடலில்,

> பேர் ஆலி, தண்கால்
> நறையூர் திருப்புலியூர் (39)

என்று பல தலங்களைக் கூறும் போக்கில் இத்திருத்தலத்தின் திருப்பெயரும் ஆழ்வார் திருவாயினின்றும் வெளிப்படுகிறது.

---

1. **திருப்புலியூர்**: திருச்செங்கனூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4கல் பேருந்து மூலம் சென்று இத் திருத்தலத்தை அடையலாம். இறைவன்: **மாயப்பிரான்**; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். தாயார்: **பொற்கொடி நாச்சியார்**. சிறி. திரு மடல் (3 9)இத்திருத்தலத்தைப் பற்றிய அதிகமான விவரங்கள் **மலைநாட்டுத் திருப்பதிகள்** (கட்டுரை 9) என்ற நூலில் காணலாம்.

**2. திருவல்லவாழ்:**[2] திருப்புலியூரிலிருந்து 'திருவல்லவாழ்' என்ற திவ்விய தேசத்திற்கு வருகின்றார். இதனை மக்கள் 'திருவல்லா' என்று வழங்குவர்.

**தலத்தின் சூழ்நிலை:** இருப்பூர்தி நிலையத்திலிருந்து திருக்கோயிலுக்குச் செல்லும் நடைபாதையில் இருமருங்கும் அடர்ந்து வளர்ந்துள்ள சோலைகளும் தோப்புகளும், வயல்களும் வாவிகளும், பூம்பொழில்களும் எவர் மனத்தையும் கவரும். இத்திருத்தலத்து எம்பெருமானைப் பற்றி திருமங்கையாழ்வார் தாமான தன்மையில் நின்று பேசுகின்றார். தம்முடைய நிலையை உள்நோக்கி ஆய்ந்து சம்சார பந்தம் (இவ்வுலகத் தொடர்பு) இன்னும் கழியவில்லை என்பதையும், இழவுக்கு அடியான உடல் உறவு இன்னமுத் தொடர்ச்சியறாது இருப்பதையும் கண்டு மனம் கவல்கின்றார் ஆழ்வார். திருவல்லவாழ் திருப்பதியை வாயாலே சொல்லுவதாக நெஞ்சு மருவப் பெற்றால் நன்று என்று அவருக்குத் தோன்றுகின்றது. தோன்றவே, அதனை நெஞ்சுக்கு உரைப்பதாக நடைபெறுகின்றது இவரது திருமொழி (9.7).

தந்தைதாய் மக்களே சுற்றமென்று
உற்றவர் பற்றி நின்ற
பந்தமார் வாழ்க்கை நொந்துநீ
பழியெனக் கருதி னாயேல்,

2. **திருவல்லவாழ்:** ஓர் இருப்பூர்தி நிலையம். நிலையத்திலிருந்து திருக்கோயிலுக்கு நடந்தே செல்ல வேண்டும். **இறைவன்:** கோலப்பிரான்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** செல்வத் திருக்கொழுந்து நாச்சியார், வாதசல்யதேவி. பெரி. திரு. 9.7 (பதிகம்); பெரிய திருமடல் (58) மேலும் விவரம் வேண்டுவோர் ம. நா. தி. (கட்டுரை 1-9) காண்க.

அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும்
ஆதியாய் ஆய னாய
மைந்தனாய் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே (9.7:1)

[உற்றவர்-உறவு முறையார்; பந்தம்-தளை; நொந்து-வருந்தி; வல்லையாய்-வல்லமையுடையாய்; மருவு-பொருந்தும்]

என்பது முதற் பாசுரம். 'சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன் மக்களும், மேலாத் தாய் தந்தையும் அவரே இனியாவாரே'[3] என்றவாறு எல்லா உறவு முறைகளும் திருமகள் கேள்வனே என்று கொண்டிருப்பதே முறை; அங்ஙனம் கொள்ளாது, ''அன்னை அத்தன் என் புத்திரர் பூமி வாசவர் குழலாள் என்று மயங்கி'' இன்னமும் பொய்யான பந்துகளிடத்தில் பற்று வைத்து இவ்வுலக வாழ்வு போதும் போதும் என்று வெறுத்துத் திருவல்லவாழ் பதியை வாயால் சொல்லுவதற்காகிலும் இசையுமாறு நெஞ்சினை வேண்டுகின்றார் ஆழ்வார்.

இவ்வுலக வாழ்வுக்குத் தொடக்கத் தளையாயிருப்பது மகளிரைத் தொடர்பாகவுள்ள சிற்றின்பம். 'அதனை முதலில் களைய வேண்டும் என்று முதல் மூன்று பாசுரங்களில் நினைவூட்டுகின்றார். ''மின்னல் கொடியையும் வஞ்சிக் கொடியையும் தோற்கும்படி செய்ய வல்ல நுண்ணிய இடையுடையவர்கள் மகளிர்; அன்ன நடை பயிலும் மெல்லியலார் அவர்கள் (2). மேலும் ஆடவர்களைச் செயற்கையழகினால் மயக்குவதற்குப் பலவகை அணிகளைப் பூண்டு பல்வேறு ஆடை வகைகளை அணிந்தவர்கள்; பொய்யுரைகளை மெய்போல் பேசும் திறனுடையவர்கள் (3). ஆண்

3. திருவாய் 5.1:8

களைத் தம் வசப்படுத்திக் கொள்ளத் தக்க தேனொழுகப் பேசும் இனிய சொற்களையுடையவர்கள் (4). ஆகவே நீ உய்யும் வழியைத் தேடுவாயானால், 'வல்லவாழ் செல் லுமா வல்லையாய் மருவு நெஞ்சே!''' என்று நெஞ்சிற்குப் பணிக்கின்றார்.

அடுத்து, செல்வ நிலையாமையைப் பேசுகின்றார் ஆழ்வார். ''நெஞ்சமே, இவ்வுலகத்துச் செல்வம் நிலை நிற்பதன்று; உயர்ந்த வெண் கொற்றக் குடையின்கீழ் மன்னர் மன்னனாய் வீற்றிருந்து யானைகள் சூழ வாழ்ந்த வர்களும் மாண்டனர் என்பதை நீ கண்டு, அல்லது கேட்டு அறிந்திருப்பாய் அன்றோ? ஆக இவ்வுலகச் செல் வம துயரை விளைவிப்பதன்றி மகிழ்ச்சி தருவதன்று என் பதை நீ எண்ணினாயாகில் திருவல்லவாழ் திருப்பதியில் பொருந்தப் பார்ப்பாயாக'' (5) என்கின்றார். இன்னும் ''இந்த உடலின் கீழ்மையையும் நீ அறிவாய் அன்றோ? 'தீண்டாவழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசை யும், வேண்டா நாற்றமிகும் உடல்'[4] என்பதன்றோ இவ் வுடலின் நிலை? இத்தகையதான உடலில் ஐம்பொறி களாகிய வன்குறும்பர் புகுந்து நின்று தமக்கு வேண்டிய றைக் காட்டும்படித் தொல்லை தருவதற்கு அஞ்சியா கிலும் திருவல்லவாழ் சென்று பொருந்துவாயாக'' (6) என்று தெருட்டுகின்றார்.

''இந்த உலகிலுள்ள நோய்கள் யாவற்றின் இருப் பிடம் இவ்வுடல், இந்த உடலைப் 'பொய்' என்று உண ராமல் 'மெய்' என்ற சொல்லாலும் வழங்கி வருகின்றனர்! மேலும், இவ்வுடலைத் தவிர 'ஆன்மா என்பதொன் றில்லை' என்றும் பிதற்றுகின்றார் சில பேயர்கள். இந்த வீணுரைகளின்மீது கருத்தைச் செலுத்தாது திருவல்லவாழ் சென்று உய்க'' என்று நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார்.

4. திருவரங்-கலம்.17

மேலும், ஐந்து பூதங்களாலும் ஆன இவ்வுடல் புகலிடம் அன்று; ஆன்மாவைக் கொண்டே நாம் கடைத் தேற வேண்டும் என்று கருதினாயாகில் திருவல்லவாழ் செல்வாயாக'' (7); ''பெரிய பிராட்டியாரும் தானுமாகச் சந்நிதி பண்ணியிருக்கும் திருவல்லவாழில் பொருந்தப் பார்'' என்கின்றார்.

**எம்பெருமான்:** திருவல்லவாழில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும் ஆதியாய் இருக்கும் ஆனாய மைந்தன்(1). அடியார்கட்குக் கையாளாய் இருக்கும் தன்மையைக் குன்றிலிட்ட விளக்கு போல் காட்டுவதற்காகப் பஞ்சபாண்டவர்கட்குத் தூதாக எழுந்தருளிய தேவாதிதேவன் (2). மாவலிபக்கல் மூவடி மண் இரந்து பெற்ற குறட் பிரமசாரிப் பெருமான் நம்மைப் பெற வந்து நிற்பவன் (3). நஞ்சு தீட்டிய முலையுடன் நடுநிசியில் வந்து பாலூட்டும் பாவனையில் தன்னைக் கொல்ல வந்த பூதனையை முடித்த பெருமான் (5). உலக வடிவாய்ப் பரந்து நிற்கும் பரப்பிரம்மன்(7). பரமபதத்திலிருக்க வேண்டியவன் அதனோடு தக்க போலியாகவுடைய திருமலையில் நிற்பவன்; கடல் நிறவண்ணன் (4). இவ்வாறு சொல்லிச் சொல்லி ஆழ்வார் திருவல்லவாழில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை அநுபவிக்கின்றார்.

4 **திருநாவாய்:**[5] திருமூழிக்களத்திலிருந்து திருநாவாய்க்கு வருகின்றார். இந்தத் தலத்து எம்பெருமான்மீது

5. **திருநாவாய்:** ஷோரனூர்-மங்களூர் இருப்பூர்தி வழியில் ஷோரனூரிலிருந்து 36 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு நிலையம் நிலையத்திலிருந்து சுமார் 2கி.மீ தொலைவிலுள்ளது இத்திருத்தலம். 'நடராஜா சர்வீசில்',இத்திருத்தலத்தை அடைதல் வேண்டும். சாலைக்கு உட்புறமாகச் சுமார் 100

தனிப் பாசுரங்களோ, தனிப் பதிகமோ இல்லை. திருநறை யூர் எம்பெருமானைச் சேவிக்கும் போது,

நாவாய் உளானை
நறையூரில் கண்டேனே (6.8:3)

என்று இவ்வூர் எம்பெருமானையும் சிந்திக்கின்றார். பதினெண் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்யும் பாசுரம் ஒன்றில்,

நம்பனைச் சென்று
காண்டும் நாவாயுளே (10.1:9)

என்று இவ்வூர் நாராயணனையும் நினைக்கின்றார்.

5. **திருமூழிக்களம்** :[6] திருவல்லவாழிலிருந்து திருமூழிக்களத்திற்கு வருகின்றார் ஆழ்வார். எரிணாகுளம் வந்து அங்கிருந்து ஆல்வே மூலம் வருதல் வேண்டும். திருமங்கையாழ்வார் ''முனியே! திருமூழிக் களத்து விளக்கே!'' (7.1:6) என்றும் ''மூழிக்களத்து விளக்கினை'' (பெ. திரு

கெ. தூரத்தில் திருக்கோயில் உள்ளது.
நாராயணன், நாவாய் முகுந்தன்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** மலர் மங்கை நாச்சியார், சீதேவி. பெரி. திரு. 6.8:3; 3.10:1:9. மேலும் விவரம் வேண்டுவோர் **ம. நா. தி** (கட்டுரை-13) கண்டு தெளியலாம்.

6. **திருமூழிக்களம்:** தென்னிந்திய இருப்பூர்தி வழியில் அங்கமாலி நிலையத்திலிருந்து சுமார் 6கி. மீ. தொலைவிலுள்ளது. குதிரை வண்டியில் தான் வரவேண்டிய நிலை. ஆல்வே நிலையத்தில் இறங்கி பேருந்து மூலம் வரலாம்; கோயிலருகில் இறங்கலாம்; ஒரு ஃபர்லாங் நடந்து திருக்கோயிலை அடைதல் வேண்டும். எந்தவித வசதி

மடல்-கண்.129). என்று போற்றுவார். திருநெடுந்தாண்டகத்திலும் ''பின்னானார் வணங்கும் சோதி திருமூழிக்களத்தானாய்! (10)'' என்பார். பரத்துவத்திலும் வியூகத்திலும் விபவங்களிலும் அந்தர்யாமித்துவத்திலும் அந்வயிக்கப் பெறாதவர்கள் இங்குப் 'பின்னானார்' எனப்படுகின்றனர். அன்னவர்கட்காகத் 'திருமூழிக்களம் முதலான அர்ச்சாவதார நிலங்களிலே எழுந்தருளியிருப்பவனே!' என்கின்றார் ஆழ்வார். இத்தலத்து எம்பெருமானைச் சுடர்ப் பொருளாக அருளிச் செய்திருப்பது சிந்திக்கத் தக்கது. எம்பெருமானுடைய கல்யாண குணங்களுள் 'சௌலப்பியம்' சிறந்தது; அத்திருக்குணம் இருட்டறையில் விளக்குப்போலே பிரகாசிப்பது அர்ச்சாவதாரத்திலே; அதைவிட கேவலம் அறிவிலிகளானவர்கட்கே காட்சி தரும் இடமாகிய திருமூழிக்களத்தில் அத்திருக்குணம் ஒளிபெற்று விளங்குதலால் அவ்விடத்தை 'விளக்கு' என்றும் 'சோதி' என்றும் செல்லுதல் பொருத்தமாகின்றது.

இத்துடன் ஆழ்வாரின் திருத்தலப்பயணம் நிறைவு பெறுகின்றது. இந்த ஆழ்வார் ஒருவரே அர்ச்சாவதார மூர்த்திகளை அதிகமாக வழிபட்டவர்.

களும் இல்லாத ஊர். **இறைவன்:** அய்யன், ... சுக்திநாதப் பெருமான்; நின்ற திருக்கோலம்; கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். **தாயார்:** மதுர வேணி நாச்சியார். பெரி. திரு. 7.1; திருநெடு. 10 திருநெடு. பெரி. திருமடல் (65) மேலும் விவரம் வேண்டுவோர **ம. நா. தி** (கட்டுரை-11) கண்டு தெளியலாம்.

# 15. அருளிச் செயல்கள்

**தி**ருமங்கையாழ்வார் 108 திவ்விய தேசங்களில் 86 திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்தும், யாதொரு காரணமும் பற்றாமல் கிடைத்த திருமந்திர உபதேசத்தையும் அதற்கு உள்ளீடான சீமந் நாராயண னுடைய சொரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களை யும், 'அருள்மாரி' என்னும்படியான பெரிய பிராட்டி யாரின் அருளினால் இவற்றையெல்லாம் கண்டு அநுப வித்து அதனால் உண்டான பெருங்களிப்பால் **1, பெரிய திருமொழி, 2. திருக்குறுந் தாண்டகம், 3. திருநெடுந் தாண் டகம், 4. திருவெழுக் கூற்றிருக்கை. 5. சிறிய திருமடல், 6. பெரிய திருமடல்** என்கின்ற ஆறுபிரபந்தங்களை அரு ளிச் செய்தனர். நம்மாழ்வார் அருளிச் செய்துள்ள **திரு விருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி** என்ற நான்கு பிரபந்தங்கட்கு இவை ஆறு அங்க மாக அமைந்துள்ளனவாகக் கொள்ளப்படும். இங்கு **'எண்கள்'** ஒற்றுமையேயன்றி பொருள் ஒற்றுமை இல்லை என்பதை நாம் உளங்கொள்ளல் வேண்டும்.

1. **பெரிய திருமொழி:** இதில் அடங்கிய பத்துகள் பதினொன்று; பத்துத் திருமொழிகள் கொண்டது ஒரு பத்து என்று வழங்கப்படுகின்றது. ஒரு திமொழி என் பது பத்துப் பாசுரங்களைக் கொண்டது. பத்தாம் பத்து ஏழாம் திருமொழியில் மட்டிலும் பதினான்கு பாசுரங்கள்

உள்ளன. பதினோராம் பத்தில் மட்டிலும் எட்டுத் திரு மொழிகள் உள்ளன. ஆகவே, பெரிய திருமொழியில் உள்ள பாசுரங்களின் தொகை 1084 ஆகும்.

திவ்விய தேசங்களில் ஈடுபடும் தன்மை ஆழ்வார்கள் அனைவர்க்கு ஒக்குமேயாயினும் திருமங்கையாழ்வார்க்கு அது மிகச் சிறந்து விளங்கும். திவ்விய தேசங்களை அநுபவிப்பதற்கென்றே தோன்றியவர் இந்த ஆழ்வார். 'மாயோனை வாள்வலியால் மந்திரங்கொண்ட மங்கையர் கோன்' எம்பெருமானிடத்தில் மந்திரோபதேசம் பெற்ற பின்னர் அத்திருமந்திரத்தையும் அதன் அரிய பெரிய பொருள்களையும் தாம் காணப்பெற்ற பேற்றினைப் பரமானந்தம் தோன்றப் பத்துப் பாசுரங்களாலே பேசி அநுபவித்து, அத்திருமந்திரம் விளைந்த திருப்பதியாகின்ற பதரிகாச்சிரமத்தை நாடிச் சென்று பாடி அங்கிருந்து வடநாடு, தொண்டைநாடு, நடுநாடு, சோழ நாடு, பாண்டிநாடு, மலை நாடுகளிலுள்ள திருப்பதிகள் பலவற்றையும் பாடிக் களிக்கின்றார். பெரிய திருமொழி என்னும் இத்தொகுதியினால் இவை யாவும் ஆழ்வாரின் அர்ச்சாவதார அநுபவங்களைக் காட்டுவனவாகும்.

இந்த அநுபவம் தவிர, இராமாவதாரத்தை இராட்சச பாவனையாலும், கிருட்டிணாவதாரத்தை யசோதைப் பிராட்டியின் பாவனையிலும் அநுபவிக்கின்றார்: மற்றையவதாரங்களின் மேன்மையோடு கிருட்டிணவதாரத்தின் எளிமையைச் சேர்த்து அநுபவித்தல் போன்ற அநுபவங்களை நுவலும் திருமொழிகளும் உள்ளன. தவிர, தாய்ப் பாசுரமாகவும், மகள் பாசுரமாகவும் அநுபவித்த திருமொழிகளும் உள்ளன. விபவாவதார மகிமையும் விபவாவதாரங்களில் எப்பெருமானுடைய செளலப்பியமும் பரத்துவமும் எதிரெதிராகக் கூறும் இரண்டு தோழியர் அநுபவமும் திருமொழிகளாக அமைந்துள்ளன.

இறுதித் திருமொழி உடல் உறவை அறுத்துத் தந்தருளு மாறு வேண்டும் பிரார்த்தனையாக முடிகின்றது.

2. **திருக்குறுந்தாண்டகம்** : **தாண்டகம்** என்பது தமிழில் ஒருவகைப் பிரபந்தம். இஃது அறுசீர் கொண்ட அளவொத்த அடிகள் நான்கினாலாவது, எண்சீர் கொண்ட அளவொத்த அடிகள் நான்கினாலாவது தாம் வழிபடும் தேவதையைப் புகழ்ந்து பாடும் பிரபந்தமாகும். '**அறுசீர்** கொண்டது **குறுந்தாண்டகம்; எண்சீர்** கொண்டது **நெடுந்தாண்டகம்.** முன்னதில் அடிதோறும் மெய்யெழுத் தும் உட்படப் **பதினைந்து எழுத்துக் குறையாமலும் இருபத்தாறு** எழுத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்; பின்னதில் அடிதோறும் **இருபத்தாறு** எழுத் துக்கு மேற்பட்டே இருத்தல் வேண்டும். இவற்றின் இலக்கணத்தைப் **பன்னிரு பாட்டியல்** போன்ற பாட்டியல் நூல்களில் காணலாம்.

பசி மிகுதியாகும்வரையில் சோறிடத் தாமதம் செய்யும் தாயைப்போலவே, எம்பெருமானும் தன்னை அநுபவிப்பதற்கு உறுப்பான பெருவிடாய் பிறப்பிப்பதற் காக முகங்காட்டாதொழிய, அவனை விட்டுக் கணமும் தரித்தற்கொண்ணாமல் பெருவிடாய்ப் பட்டவர்கள் நீரிலே விழுந்து நீரைக் குடிப்பது, நீரை வாரி மேலே இறைத்துக் கொள்வது முதலான செயல்களை மேற் கொள்ளுமாப்போலே, எம்பெருமானை வாயாலே பேசியும், தலையாலே வணங்கியும், நெஞ்சாலே நினைந் தும் தரிக்கப் பார்க்கின்றார் திருக்குறுந் தாண்டகத்தில்.

சான்றுகளாக ஒன்றிரண்டு பாசுரங்கள்:

நிதியினைப் பவளத் தூணை
　　நெறிமையால் நிறைய வல்லார்
கதியினைக் கஞ்சன் மாளக்
　　கண்டுமுன் அண்டம் ஆளும்

மதியினை மாலை வாழ்த்தி
வணங்கிஎன் மனத்து வந்த
விதியினைக் கண்டு கொண்ட
தொண்டனேன் விடுகு லேனே (1)

[நெறிமையால் - ஒரு நெறிப்பட்டு; மாள - இறக்க; ஆளும் - காக்கும்; மால் - வியாமோகமே வடிவெடுத்தவன்]

எம்பெருமானுடைய பெருமைகளைப் பன்னியுரைத்து என் நெஞ்சிலே வந்து புகுந்த இப்பெருமானை இனி நான் ஒருநாளும் விட மாட்டுகின்றிலேன்' என்கின்றார்

தொண்டெலாம் பரவி நின்னைத்
தொழுதடி பணியு மாறு
கண்டுநான் கவலை தீர்ப்பான்
ஆவதே பணியாய் எந்தாய்!
அண்டமாய் எண்டி சைக்கும்
ஆதியாய் நீதி யான
பண்டமாம் பரம சோதி!
நின்னையே பரவு வேனே (11)

[தொடி-அடிமை; பரவி-துதித்து; கண்டு-எண்ணி; ஆவதே-முடியுமோ; நீதி-முறைமை]

'என்னுடைய மனத்துயரங்களை நானே தீர்த்துக் கொள்ளப்போமோ? நீயே அருள் புரிய வேண்டும்' என்று எம்பெருமானை நோக்கிப் பிரார்த்திக்கின்றார்.

இப் பிரபந்தத்திலுள்ள **பாசுரங்கள் 20.** சைவ இலக்கியங்களுள் குறுந்தாண்டகம் காண்பது அருமை.

3. **திருநெடுந்தாண்டகம்:** இது முப்பது பாசுரங்களைக் கொண்டது. இவற்றின் பொருள்நெறி நோக்கி

முதல் பத்து, இரண்டாம் பத்து, மூன்றாம் பத்து என்று மூன்று பகுதிகளாகக் கொண்டும் சிலர் கூறுவர். முதல் பத்து ஆழ்வார் தாமான தன்மையிலும், இரண்டாம் பத்து பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு தாய்ப் பேச்சிலும், மூன்றாம் பத்து மகள் பேச்சிலுமாக அமைந்துள்ளன. பெரியவாச்சான் பிள்ளை இதனைச் சரமப் பிரபந்தமாகக் கொள்வர்.

கூரத்தாழ்வானின் திருமகனாரான பட்டர் இத்திரு நெடுந்தாண்டகத்திலே மிகவும் கருத்தூன்றி இதன் ஆழ் பொருளில் ஈடுபட்டு 'திருநெடுந்தாண்டக சாத்திரவல்லவர்' என்று பெயர் பெற்றவர் என்பதை யாவரும் நன்கு அறிவர். அதிலும் 'மைவண்ண நறுங்குஞ்சிக் குழல் பின்தாழ' (21) என்ற பாசுரத்திற்கு மிக விரிவாகப் பேருரை நிகழ்த்துவர் என்பதையும் அறிவர்.

மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின் தாழ
மகரம்சேர் குழையிருபா டிலங்கியாட
எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தார்என் முன்னே நின்றார்
கைவண்ணம் தாமரை வாய்கமலம் போலும்
கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே
அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டும் தோழி
அவரைநாம் தேவர்என்று அஞ்சி னோமே (21)

[மைவண்ணம்-கறுத்த நிறம்: குழல்-தலைமயிர்; பாடு-பக்கம்; எய் வண்ணம்-இயல்பாகவுடைய; சிலை-வில்; வண்ணம்-அழகுடையன; கமலம்-தாமரை; அரவிந்தம்-தாமரை; அவ்வண்ணத் தவர்-அப்படிப்பட்டவர்; தேவர்-பரதேவதை].

**இது மகள் பாசுரம்.** "இப்பாட்டு சக்கரவர்த்தித் திருமகன் தலைமகனாய்ச் சனகராசன் திருமகள் தலைமகளாக பிர

வர்த்தமாகிறது'' என்ற வியாக்கியான சூக்தி அறியத் தக்கது. ஆழ்வார் தாம் சனகராசன் திருமகளான நிலைமையிலேயே நின்று பேசுகின்றார்.

4. **திரு எழுக்கூற்றிருக்கை:** சித்திரகவி வகைகளுள் **'இரத பந்தம்'** அமைப்பில் அமைந்துள்ளது இது. இரத பந்தமாவது, தேரின் உருவந்தோன்றக் கட்டங்கள் போட்டு அவற்றில் எண் முறையே பாசுரப் பகுதிகளை அடக்க வேண்டும். தேருக்கு மேற்பகுதி என்றும், கீழ்ப் பகுதி என்றும் இரண்டு பகுதிகளாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். ஒவ்வொரு படியிலும் ஏழு கூறுகள் உண்டாகும்படிக் கீறவேண்டும். அப்படிக் கீறும்போது முதற்கூறு மூன்று அறையும், இரண்டாம் கூறு ஐந்து அறையும், மூன்றாம் கூறு ஏழு அறையும், நான்காம் கூறு ஒன்பது அறையும், ஐந்தாம் கூறு பதினோரறையும், ஆறாம் கூறு பதிமூன்றறையும், ஏழாம் கூறு அங்ஙனமேயாக, இப்படி ஒன்றற்கொன்று இரண்டறை மேற்பட்ட முறையே கீறவேண்டும். மேற்பகுதியில் தலையிலிருந்தும், கீழ்ப்பாகத்தில் அடியிலிருந்தும் இந்த முறை கொள்ளத் தக்கது வீரசோழியம் முதலிய இலக்கண நூல்களில் இதன் இலக்கணத்தைக் கண்டு தெளியலாம்.

ஆழ்வார்களுள் திருமங்கை மன்னன் ஒருவர்தாம் இவ் வகையான சித்திர கவி அருளியுள்ளார். இதைத் தவிர, திருக்குருகைப் பெருமாள் கவிராயர் செய்துள்ள 'மாறன் அலங்காரம்' என்ற சிறந்த நூலில் சொல்லணியியலில் நம்மாழ்வார் விஷயமாக ஒரு எழுகூற்றிருக்கை பாடியுள்ளார். ஞானசம்பந்தப் பெருமான் அருளியுள்ள தேவாரப் பதிகங்களுள்ளும் (முதல் திருமுறையில்)[1] ஒரு எழுகூற்றிருக்கை உண்டு. எழு கூற்றிருக்கையாகிய இப் பிரபந்தம் ஆசிரியப் பாவகையில் நிலைமண்டில ஆசிரியப்பாவாக

1. சம்பந்தர். 1.128 கழுமலம் பற்றியது.

அமைந்துள்ளது. இது திருக்குடந்தை ஆராஅமுதனை ஆர்த்தியோடு சரணாகதி செய்வதாக அமைந்த பிரபந்தம்[2].

5. **சிறிய திருமடல்:** இது 'மடலேறுதல்' என்னும் துறையில் அமைந்தது. இஃது ஆழ்வார் தாமான தன்மையிலிருந்து பேசும் பிரபந்தம் அன்று. கிருட்டிணாவதாரத்தில் குடக் கூத்தில் அகப்பட்டு அன்னவனை அநுபவிக்கப் பெறாது வருந்தி மடலெடுக்கத் துணிந்த ஒரு பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக்கொண்டு அவளுடைய பாசுரத்தாலே தமது நிலைமையை வெளியிடும் பிரபந்தம் இது. இஃது 'அவதாரங்களில் உண்டான நீர்மையை அழிக்கின்றேன்' என்று கூறுவதாக அமைந்தது. இப்பிரபந்தம் கலிவெண்பாவால் அமைந்தது.

6. **பெரிய திருமடல்:** இதுவும் மடலூர்தல் என்ற துறையில் அமைந்த நீண்ட பிரபந்தம். இதில் 'நீர்மைக்கு எல்லை நிலமான கோயில்களில் நின்ற நிர்மையையும் அழிக்கின்றேன்' என்கின்றார். இதுவும் நாயகி சமாதியில் நடைபெறுவது; கலிவெண்பாவால் ஆனது.

**மடல்பற்றிய கருத்து :** மடல்பற்றிய ஆழ்வாரின் கருத்தைக் காட்டுதல் பொருத்தமாகும். 'மடலேறுதல்' அகப்பொருள் துறைகளுள் ஒன்று என்பதை நாம் அறிவோம். காமம் காழ்க்கொள்ளும் காலத்தில் ஆடவன் தன் மார்பில் எலும்பு மாலையும் தலையில் எருக்கமாலையும் கொண்டு பனங்கருங்காற் செய்யபெற்ற குதிரை மேல் ஏறித் தெருவில் வருவது 'மடலூர்தல்' அல்லது 'மடலேறுதல்' ஆகும். ஆடவன் மகளிரைக் குறித்து மடலேறலாமேயன்றி பெண் ஆடவனைக் குறித்து

2. சாரங்கப்பாணிப் பெருமாள் கோயிலின் அமைப்பும் இரத அமைந்திருப்பதை இன்றுங் காணலாம்.

மடலூரல் ஆகாது என்பது தமிழ் நெறியில் விதிக்கப் பெற்ற ஒரு வரம்பாகும்.

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்னமை யான[3]

என்பது தொல்காப்பியம். திருவள்ளுவரும்,

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில் ( )

என்று இந்நெறியை வலியுறுத்துவதைக் காணலாம்.

திருமங்கையாழ்வார் பிராட்டிதசையை அடைந்து பரகால நாயகி ஆனபின்னர் மடலூரப் புகுதல் பொருந்துமோ? என்ற வினா எழுகின்றது. இந்த ஆழ்வார் அருளியுள்ள **சிறிய திருமடல்**, **பெரிய திருமடல்** என்ற இரு பிரபந்தகளிலும் ஆழ்வார் நாயகி மடலேறத்துணிவதாகக் கூறப்பெறுகின்றது. இதனைத் தமிழ் மரபினை மீறிய ஒரு புரட்சி என்று கருதலாமா? என்பது வினா. இரண்டு திருமடல்களிலும் ஆழ்வார் நாயகி 'மடலூர்வன், மடலூர்வன்' என்றுசொல்லி அச்சமுறுத்தினாரேயன்றி அச்செயலை முற்ற முடிய நடத்தினதாகக் கூறவில்லை. சிறிய திருமடலில்,

ஓர்ஆனைக் கொம்பொசித்து
ஓர்ஆனைக் கோள்விடுத்து
சீரானை செங்கண்
நெடியானை தேன்துழாய்த்
தாரானைத் தாமரைபோல்
கண்ணானை எண்ணருஞ்சேர்

3. தொல். பொருள் அகத்திணை-38 (இளம்)

பேராஆ யிரமும்
பிதற்றிப் பெருந்தேருவே
ஊரார் இகழினும்
ஊராது ஒழியேன்நான்
வாரார்பூம் பெண்ணை மடல்,[4]

என்று கூறுவார். பெரிய திருமடலிலும்,

உலகறிய ஊர்வன்நான் பரந்த
முன்னி முளைத்தெழுந்து ஓங்கி - ஒளிபரந்த
மன்னியபூம் பெண்ணை மடல்[5]

என்று உரைப்பர். இந்த இரண்டிலும் ஊரினதாகச் சான்றுகள் இல்லை. நம்மாழ்வார் பராங்குச நாயகி நிலையில் இம் மடலேறுதலைக் குறிப்பிடும்பொழுது,

தோழி! உலகு தோரலர் துற்ற, ஆம்
கோணைகள் செய்து குதிரியாய் மட லூர்துமே.[6]

[கோணை-மிணுக்கு. குதிரி-அடங்காத பெண்]

என்றும்,

யாம்மடல் ஊர்ந்தும் எம்மாழி
அங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந் துழாய் மலர்
கொண்டு சூடுவோம்
யாம்மடம் இன்றித் தெருவு
தோறயல் தையலார்
நாமடங் காப்பழி தூற்றி
நாடும் இறைக்கவே[7]

என்று கூறுவது ஈண்டு தப்பு நோக்கி அறிய தக்கது.

4. சிறிய திருமடல்.
5. பெரிய திருமடல்
6. திருவாய் 5.3;9
7. ஷை 5-3:10

எனவே, ஆழ்வார்கள் தமிழ் நெறியினை அறியாது கூறினார் என்று சொல்வதற்கில்லை. ஆகவே, அவர்கள் கூற்றினைப் புரட்சிப் போக்கு என்று சொல்லுவதும் ஒவ்வாது.

ஆழ்வார்தாமும் தாம் தமிழ்நெறியினை அறிந்திருப்பதாகவும், வடநெறியினைப் பின்பற்றியே இத்துணிவினை மேற்கொண்டதாகவும் கூறுவர்.

'மான்நோக்கின்
அன்ன நடையார்
அலரோ ஆடவர்மேல்
மன்னும் மடலூரார்
என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்ட றிவ
துண்டுஅதனை யாம்தெளியோம்
மன்னும் வடநெறியே
வேண்டினோம்.[8]

என்ற பெரிய திருமடல் பகுதியால் அறியலாம். ''மடலேறுதல் என்பது ஆசை மிகுதியால் மேற்கொள்ளும் ஒரு செயல். ஆசையை வரம்பிட்டுச் காக்க யாராலும் இயலாது. அரசாணைக்கும் அது கட்டுப்படுமோ? வேலியடைத்தால் நிற்குமோ வேட்கை? அளவு கடந்த வேட்கையின் காரணமாகி விளையக் கடவதான மடலூருதலை ஆண்கள்தாம் மேற்கொள்ளலாம், பெண்கள் மேற்கொள்ளலாகாது என்று வரம்பு கட்டுவது காதலின் இயல்பை அறியாதவர்களின் (உளவியல் உண்மையை உணராதவர்களின்) செயலாகும் என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்'' என்று கொண்டால் ஆழ்வார் புரட்சியான போக்குடையவர் என்று கருதலாம்.

8. பெரிய திருமடல்

# 16. அகப்பொருள் தத்துவம்

எம்பெருமானை அநுபவித்தல் பலவகைப் பட்டிருக்கும். அவனுடைய திருநாமங்களைச் சொல்லியநுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச் சொல்லியநுபவித்தல், வடிவழகை வருணித்து அநுபவித்தல், அவன் உகந்தருளின திவ்வியதேசங்களின் வளங்களைப் பேசியநுபவித்தல், அங்கே அநுபவமுள்ள ஸ்ரீ வைணவர்களின் பெருமையைப் பேசி அநுபவித்தல் என்று பலவகைப் பட்டிருக்கும் பகவதநுபவம். இவற்றுள் மிக அருமையான, அற்புதமான மற்றொரு வகையும் உண்டு. அதாவது ஆழ்வார்கள் தாமானதன்மையை விட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறிட்டுக் கொண்டு வேற்றுவாயாலே பேசி அநுபவித்தல். இப்படி அநுபவிக்கும் முறைகளில் பாசுரங்கள் வெளிப்படும் போது **தாய்ப் பாசுரம், தோழிப் பாசுரம், மகள் பாசுரம்** என்று, மூன்று வகைப்பட்டிருக்கும். அப்பொழுது ஆழ்வாருக்குப் **பரகாலர்** என்ற ஆண்மைப் பெயர் நீங்கி **பரகால நாயகி** என்ற பெண்மைப் பெயர் வழங்கப்படும். தாய் சொல்வது போலவும், மகள் சொல்வது போலவும் பாசுரங்கள் வெளிப்பட்டாலும், பாசுரம் பேசுகின்றவர் ஆழ்வாரேயாவர். இது பதிகங்கள்தோறும் வரும் பலசுருதிப் பாசுரங்களால் (திருக்கடைக் காப்புச் செய்யுட்களால்) தெளிவாகும். திருவிடவெந்தை எம்பெருமான் மீது தாய்ப் பாசுரமாக அருளிய திருப்பதிகத்தில் (பெரி. திரு. 3. 7) 'மன்னுமா மாட மங்கையர் தலைவன் மான

1. ஆ. சா. ஹிரு-133 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

வேல் கலியன் வாய்ஒலிகள்' என்றும்; திருநாகை அழகி யார்மீது மகள் பாசுரமாக அருளிய திருப்பதிகத்தில் (பெரி.திரு 9.2) 'கன்னி நல்மாமதிள் மங்கையர் வேந்தன் காமரு சீர்க்கலிகன்றி குன்றா இன்இசையால் சொன்ன செஞ்சொல் மாலை' என்றும் ஆழ்வார் பாசுரமாகவே தலைகட்டும். ஏனைய இடங்களிலும் இத்தகைய போக்கு அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். ஓர் ஆறானது பல வாய்க்கால்களாகப் பெருகி வேறுவேறு பெயர்களைப் பெற்றாலும் அவற்றில் பாய்ந்து செல்லும் நீர் ஒரே ஆற்று நீராகவே இருக்கும் என்பதை நாம் அறிவோம். அங்ஙனமே ஆழ்வாரது சொல் மூன்று நிலைகளாக வழிந்து புறப்பட்டாலும், அவை ஆழ்வாரது பாசுரங் களாகவே தலைக்கட்டும்.

ஆழ்வார்கள் தாமான தன்மையை விட்டுப் பெண் பாவனையை ஏறிட்டுக் கொள்ளுதல் எற்றுக்கு? என்ற வினா எழுகின்றது. ஆழ்வார்கள் பெண் தன்மையைத் தாமாக ஏறிட்டுக் கொள்ளுகின்றனரல்லர். இந்த நிலை (அவஸ்தை) தானே பரவசமாக வந்து சேருகின்றது. புரு புருடோத்தமனாகிய எம்பெருமானின் பேராண்மைக்கு முன் உலகம் அடங்கப் பெண்தன்மையாக இருத்தலாலும், சீவான்மாவுக்கு சுவாதந்திரிய 'நாற்றமேயின்றிப் பாரதந்திரியமே வடிவாயிருப்பதாலும் இவ்வகைகளுக் கேற்பப் பெண் பாவனை வந்தேறியன்றே என்று கொள் ளுதல் வேண்டும். எனவே, ஆழ்வார்கள் குறிப்பாக திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் பெண் தன்மை எய்திப் ,பல திருக்கோயில் எம்பெருமான்களைப் பக்திப் பரவசத்தால் பாடி அநுபவித்ததை அவரவர்களுடைய திருப் பாசுரங்களில் கண்டு மகிழலாம்.

வைணவர்களிடையே நிலவும் இன்னொரு மரபும் உண்டு. தண்டகாரண்ய முனிவர்கள் இராமபிரானது

பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆய மங்கையர்களாகிக் கண்ணனைச் கூடினர் என்ற வழக்கு ஒன்று உண்டு. ஆனால், ஆழ்வார்கள் அப்படியின்றி அப்பொழுதே பெண்மை நிலையை அடைந்து எம்பெருமானாகிய புருடோத்தமனை அநுபவிக்கக் காதலிக்கின்றனர். நம்மாழ்வார் போன்ற ஞானச் செல்வர்களிடத்தில் சில சமயம் ஞானம் தலை தூக்கி நிற்கும்; சில சமயம் பிரேமம் (காதல்) மீதூர்ந்து நிற்கும். இந்த இரண்டு நிலையிலிருக்கும்பொழுதும் அவர்கள் பாசுரம் அருளியுள்ளனர். இதனை,

ஞானத்தில் தம் பேச்சு
பிரேமத்தில் பெண்பேச்சு[2]

என்று குறிப்பிடுவர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். அதாவது ஞானநிலையிலிருக்கும் பொழுது. அவர்கள் தாமான நிலையிலிருந்து பேசுவர். பிரேமநிலையிலிருக்கும்பொழுது பெண் தன்மையை அடைந்து வேற்றுவாயாலே பெண் பேச்சாகப் பேசுவர்.

திருவாய்மொழியில் 27 பதிகங்கள் பெண்பாவனையில் பேசியனவாக அமைந்துள்ளன; இவற்றுள் தோழி பாவனையில் உள்ளவை 3 பதிகங்கள்; தாய் பாவனையில் இருப்பவை 7 பதிகங்கள்; மகள் பாவனையில் திகழ்பவை 17 பதிகங்கள். இவற்றை நாம் அறிவோம். பெரிய திருமொழியில் உள்ள அகப் பொருள் துறைகளில் அமைந்த பதிகங்கள் 23; திருநெடுந்தாண்டகத்தில் உள்ளவை 2 பதிகங்கள்; மடல் 2 ஆக மொத்தம் 27 பதிகங்கள் இவற்றுள்ளும் தாய்பாவனையில் உள்ளவை 12 பதிகங்கள்; மகள் பாவனையில் அமைந்தவை 15. தோழிபாவனையில் ஒன்று கூட இல்லை.

2. ஆசா. ஹிரு.118 (புருடோத்தமநாயுடு பதிப்பு).

**தத்துவம் :** மேற்குறிப்பிட்ட மூன்று நிலைகளும் 'ஞானாவஸ்தைகள்' என்னாமல் 'பிரஜ்ஞாவஸ்தைகள்' என்றது மூன்று விதமான நிலைகளும் அவர்கட்கு, எல்லாக்காலங்களிலும் உண்டு என்னும் இடம் தோற்று கைக்காக. திருவெட்டெழுத்தின் முப்பதப்பொருள்களைப் பற்றிய ஞானமும் இவர்கள் திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தன்றோ இருப்பது? மேற்குறிப்பிட்ட மூன்று வகையாகச் செல்லும் பாசுரங்கட்குத் திருமந்திரத்தின் அடிப்படையில் விளக்கமும் தந்துள்ளனர் நம் முன்னோர்கள். 'ஓம் நமோ நாராயணாய' என்பது திருமந்திரம். இதனுடைய மூன்று பதங்களும் முறையே மூன்று பொருள்களைச் சொல்லுகின்றன[3]. அவை சேஷத்துவம், பாரதந்திரியம், கைங்கரியம் என்பன. அதாவது 'பிரணவம்' சேஷத்துவத்தையும், (பிறருக்கு அடிமையாய் இருத்தலையும்), 'நமஸ்ஸு' பாரதந்திரியத்தையும் (பரன் அல்லது பகவானுக்கு வசப்பட்டிருத்தலையும்) 'நாராயணாய' சேதநன் ஈசுவரனுக்குப்புரியவேண்டிய கைங்கரியத்தையும் தெரிவிக்கின்றன. மற்றும் 'ஓம்' என்னும் 'பிரணவம்' பிரிந்திருக்கும் நிலையில் அ,உ,ம என்ற மூன்று எழுத்துகளைக் கொண்டது. இந்த மூன்று எழுத்துகளும் மூன்று பதங்களாய் மூன்று பொருள்களைத் தெரிவிக்கும், அஃதாவது அகாரம் பகவானையும், அதில் ஏறி மறைந்துள்ள வேற்றுமை சேஷத்துவத்தையும் (அடிமைத் தன்மையையும்) உகாரம் அந்த அடிமைத் தன்மையின் அநந் யார்ஹத்துவத்தையும் (மற்றவருக்கில்லாமல் ஈசுவரனுக்கே உரித்தாயிருத்தலையும்), மகாரம் ஞானவானாகிய சீவான்மாவையும் தெரிவிக்கின்றன. திருவெட்டெழுத்தின் மூன்று பதங்களாலும் குறிப்பிடப்பெறும் ஞானம் ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தே இருக்கும் என்பதை உணர்த்தவே

3. முமுட்சு - 29.

4. ஷை - 30.

தோழி, தாய், மகள் என்ற மூன்று நிலைகளும் எல்லாக் காலங்களிலும் இருந்தன என்று சொல்லப்பெற்றன. இதனை ஆசாரிய ஹிருதயம்[5] **'அவஸ்தாதிரய விருத்தி'** (திரயம் - மூன்று; அவஸ்தை - நிலை) என்று பேசும்.

**தோழிப் பாசுரங்கள் :** இப்பாசுரங்களால் ஆன்மாக்கள் யாவும் பிற தெய்வங்கட்கு அடிமைப் பட்டவை அன்று எனவும், அவை தமக்குத் தாமே அடிமை அன்று எனவும் ஆகிய அநந்யார்ஹ சேஷத் துவத்தைத் தெரிவிக்கின்றன. திருமங்கையாழ்வார் பாசுரத்தில் 'தோழிப் பாசுரங்கள்' பகுப்பு இல்லை.

**தாய்ப் பாசுரங்கள் :** இவை ஈசுவர பாரதந்திரியத் தையும் அவனே உபாயம் என்பதையும் தெரிவிக்கின்றன. பெரிய திருமொழியில் உள்ள பன்னிரெண்டு பதிகங்களும் ஈசுவர பாரதந்திரியத்தையும் அவனே உபாயமாகின்றான் என்ற கருத்தையும் தெரிவிக்கின்றன.

**மகள்பாசுரங்கள் :** பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் எல்லோருக்கும் சேஷியாய் (தலைவனாய்) சரண்யனாய், அறுதியிடப் பெற்றவன் எம்பெருமான். எல்லோருக்கும் புகலிடமாக இருப்பவனும் இவனே. பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் இவை உணரப் பெற்ற பின்பு, 'நாராய ணாய' என்ற சொல்லினால் கூறப்பெற்றுள்ள **சொரூபம்** ரூபம் குணம் விபூதி முதலியவற்றின்[6] சேர்க்கையாலுள்ள

5. ஆசா. ஹிரு. 138.

6. **சொரூபம்** - ஈசுவரனின் தியானத்திற்குரிய சொரூபம்; **ரூபம்** - பகவானுடைய திவ்வியமங்கள விக்கிரகஹம்; **குணம்** - ஆன்ம குணம், விக்கிரக குணம்; ஆன்ம குணங்கள் - ஞானம், சக்தி முதலியன; விக்கிரக குணம் - அழகு, மென்மை முதலியன; **விபூதி** - நியமிக்கப்படும் பொருள்.

பெருமையை நினைந்து மகிழ்பவள் மகள். எம்பெருமான் **சாத்தியோபாயமாக**[7] இருந்தால் தாம் செய்யும் சாதனங்கள் முடிவுற்ற பிறகே சாத்தியமாகின்ற பேறு கிடைக்கக் கூடும் என்று பொறுத்திருக்கலாம். ஆனால் அவன் **சித்தோபாயமாக**[8] இருப்பவன். அதனால் அவனைத் தாமதித்து அநுபவிக்கக் காரணம் இல்லை. அவனே உபாயம் என்ற கோட்பாட்டையும் மீறித தான் நினைத்த பேற்றினை உடனே பெற வேண்டும் என்ற பதற்றத்தை உடையவளாக இருக்கின்றவள் இவள். இந்த மனநிலை தான் '**மகள்**' (தலைவி) என்று குறிப்பிடப் பெறுகின்றது. திருமங்கையாழ்வாரின் மகள் பாசுரங்களாக உள்ள பதினைந்து பதிகங்களும் இந்த நிலையையேகுறிக்கின்றன. இந்த மூன்று நிலைகளும் தோன்றுவதை ஆசாரிய ஹிருதயம் விளக்குகின்றது.[9]

வேதாந்தங்களில் குறிப்பிடப் பெறும் பக்தி இங்ஙனம் ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்றலை அறியமுடிகின்றது. இவர்கள்எம்பெருமான்மீதுகொள்ளும் காமம் '**பகவத் விஷய காமம்**' என்று வழங்கப் பெறும். இங்ஙனம் இவர்கள் மாதவன்மீது கொள்ளும் காமம் மங்கையர்மீது கொள்ளும் காமத்தினின்றும் மாறுபட்டது. ஆயினும், சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப் பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் பகவத் விஷய காமத்துக்கும் கூறப்பெறும். சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பது போல, பகவத்

7. **சாத்தியோபாயம்** - மக்களால் சாதித்துக் கொள்ளுகின்ற உபாயம். எ-டு பக்தி, பிரபத்தி
8. **சித்தோபாயம்** - முன்னமே இருக்கும் உபாயம்; அஃதாவது இறைவனாகிய உபாயம்.
9. ஆசா. ஹிரு. 134 (புருடோத்தம நாயுடு பதிப்பு)

விஷயாநுபவத்திற்கும் **பரபக்தி**[10] **பாஞானம்**[11] **பரமபக்தி**[12] என்பவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப் பெறுகின்றன என்பதாகச் சமயச் சான்றோர்கள் கொள்வர்.

காதல் சுவையின் தொடர்பு சிறிதுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படையிலேயே பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்க, காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப்பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமான வேப்பிலை உருண்டையை உட்கொள்ள வேண்டியவர் கட்கு வெல்லத்தை வெளியிற்பூசிக் கொடுத்து உண்பிப்பது போலவும், கொய்னா மாத்திரைகட்குச் சருக்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும் சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலை நாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் பணிப்பர். இது கடையாய சாமத்திற்குக் காட்டப் பெறும் உத்தி முறையாக இறையனார் களவியலிலும் கூறப் பெற்

10. **பரபக்தி** - எம்பெருமானை நேரில் காணவேண்டும் என்ற ஆவல்.
11. **பரஞானம்** - எம்பெருமானை நேரில் காணல்.
12. **பரமபக்தி** - எம்பெருமானை மேன்மேலும் இடையறாது அநுபவிக்க வேண்டும் என்னும் ஆவல். அன்றியும், எம்பெருமானோடு கூடினபோது சுகிக்கும்படியாகவும் பிரிந்தபோது துக்கிக்கும் படியாகவும் இருப்பது **பரபக்தி**; பகவானுடைய முழுமையான நேர்க் காட்சி **பரஞானம்**; அவனுடைய அநுபவம் பெறாவிடில் நீரைவிட்டுப் பிரிந்த மீன்போல மூச்சு அடங்கும்படி இருத்தல் **பரமபக்தி**. இவ்வாறு நம் பண்டைய ஆசாரியர்கள் நிலைப்படுத்துவர்.

றுள்ளமையை[13] ஈண்டு ஒப்பு நோக்கி உணர்தல் தகும். ஆழ்வார்களின் முறுகிய பக்தி நிலையை உணர்த்துவதற் கேற்ற ஓர் இலக்கிய மரபே இஃது என்று கொள்ளினும் இழுக்கில்லை.

தாய், மகள் பாசுரங்களில் உள்ள பரகாலரின் பாசுரங்களை அடுத்து வரும் இயல்களில் காண்போம்.

---

13. இறை - கள - நூற்பா

# 17. தாய்ப் பாசுரங்கள்

பெரிய திருமொழியில் தாய்ப்பாவனையில் நடை பெறுவன பன்னிரண்டு பதிகங்கள்[1]. இவை ஈசுவர பார தந்திரியத்தையும், அவனே உபாயமாகின்றான் என்ற கருத்தையும் தெரிவிப்பதாகச் சுட்டி உரைத்தோம் (ஆ. ஹி. 134). பாசுரங்களைக் கொண்டு இவற்றை விளக்குவோம்.

1. **திவளும் வெண்மதிபோல்** (2. 7) மொழி '**திருவிடஎந்தை**' எம்பெருமான்பற்றியது. தாய் வாக்காக நடைபெறுவது. இதில் ஒரு பாசுரம்.

*ஊழியிற் பெரிதால் நாழிகை என்னும்;*
*ஒண்சுடர் துயின்றதால் என்னும்;*
*ஆழியும் புலம்பும்; அன்றிலும் உறங்கா;*
*தென்றலும் தீயினிற் கொடிதாம்;*
*'தோழி!ஓ! என்னும்; துணைமுலை அரக்கும்;*
*சொல்லுமின் என்செய் கேன்? என்னும்;*
*ஏழைஎன் பொன்னுக்கு என்நினைந்து இருந்தாய்?*
*இடவெந்தை எந்தை பிரானே! (4)*

1. பெரி. திரு. 2.7; 3.7; 4.8; 5.5; 8.1; 8.2; 9.9: 10.4 10.5; 10.7; 10.9; திருநெடுந் (11-20) தாய்ப்பாசுரங்களின் தத்துவம் முன்னர் விளக்கப் பெற்றது. இயல்-16 காண்க.

[ஊழி - கற்பம்; ஒண்சுடர் - சூரியன்: துயின்றது இறந்தது; ஆழி- கடல்; புலம்பும் - ஒலிக்கின்றது; தூணைமுலை - இரண்டு முலைகள்: அரக்கும் - பிடுங்குதல்; என் பொன் - என் மகள்]

காதல் மிகுதலால் பரகால நாயகின் வாய்வெருவுதல் களைத் திருத்தாயார் பாசுரமிட்டுப் பேசுகின்றாள்.

**ஊழியிற் பெரிதால் நாழிகை என்னும்** : தலைவனைப்பிரிந்த தலைவி ஆற்றாதாளாய் அவன் இல்லாமல் இரவு கழிக்க முடியாத நிலையைச் சொல்லும்போது, 'ஒரு நாழிகைப் பொழுது எத்தனையோ யுகமாய்ப் பெருகிச் செல்லுகின்றதே!' என்று இரவு நீட்டித்தலைச் சொல்லுவது வழக்கம். அப்படியே பரகால நாயகியும் சொல்லுகின்றாள். தலைவன் தலைவி கூடியிருக்கும் போது நீண்டகாலங்களும் ஒரு நொடிப் பொழுதாய்க் கழிந்துவிடும் என்பதும், பிரிந்த காலத்தில் ஒரு கணப் பொழுதும் பல்லூழிகளாய்க் கழியும் என்பதும் அநுபவப் புகழ் வாய்ந்தது.

பலபல ஊழிகள் ஆயிடும்;
அன்றிஓர் நாழிகையைப்
பலபல கூறிட்ட கூறாயிடும்;
.......................
பலபல நாள்அன்பர் கூடிலும்
நீங்கிலும் யாம்மெலிதும்

—திருவிருத். 16

என்ற நம்மாழ்வார் வாக்கும்,

கொடியார் கொடுமையின்
தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா (குறள் 1169)

என்ற வள்ளுவர் வாக்கும் இதனை நிலைநாட்டும். ''காதலரோடு நாம் இன்புற்றமுன்னாள்களில் குறியவாய், அவர் பிரிவாற்றேமாகின்ற இந்நாள்களிலே நெடிய வாய்ச் செல்கின் கங்குல்கள்'' என்ற பரிமேலழகரின் உரையும் இதனை அரண் செய்யும்.

**ஒண்சுடர் துயின்றதால் என்னும் :** நோயினால் துன்புறுவோருக்கும் காதல் நோயால் நலிவோருக்கும் பகற்பொழுது ஒருவாறு ஆற்றக் கூடியதாக இருக்கும்; இரவுப் பொழுதோ சிறிதும் பொறுக்க வொண்ணாதாய்க் கழிவது வழக்கம். ஆகவே, இவர்கள் 'பல்லைக் கடித்துக் கொண்டு இராப்பொழுதைப் போக்குவோம்' என்று எழு ஞாயிற்றை எதிர் பார்த்துக்கொண்டே இருப் பார்கள்; உண்மையில் இரவு முப்பது நாழிகையாயிருந் தாலும் காதல்நோய் மிக்கிருக்கும் காலத்தில் முப்பது யுகம்போல் நெடுகிச் செல்லுமாதலால், 'பாழும் பகலவன் செத்துதான் போய் விட்டானோ? உயிருடன் இருந்தானே யாகில் இப்படி இராக் காலமாய்ச் செல்லுமோ?' என்று இரவு நீடித்தலை நினைத்துக் கதறுவார்கள்; பராங்குச நாயகியும் (நம்மாழ்வார்),

பெண்பிறந்தார் எய்தும்
பெருந்துயர் காண்கிலேன்என்று
ஒண்சுடரோன் வாராது
ஒளித்தான் (திருவாய். 5,4:4)

என்றாள். இவளோ 'சூரியன் செத்தே போனான்' என்கின்றாள்.

**'தோழீ, ஆழியும் புலம்பும், அன்றிலும் உறங்கா, தென் றலும் தீயினிற் கொடிதாம்; ஓ:** மகள் தோழியை நோக்கிச் சொல்லுகின்ற சொற்களைத் தாயார் அப்படியே சொல்லுகின்றாள். மகள் சொல்லுவதாவது :

'தோழீ, கடல் எப்போதும் காதடைக்கும்படி கத்து கின்றதே! அன்றிற் பறவையும் கண் மூடாமல் கதறு கின்றதே! எல்லோர்க்கும் குளிர் வீசுகின்ற தென்றலும் எனக்கு நெருப்பைக் காட்டிலும் சூடாக வீசுகின்றதே!' என்கின்றாளாம். காதல் நோயால் தாக்கப்பெற்றவர்கட்கு கடலோசை அந்நோயை மிகுவிப்பதாகும். எப்பொழு தும் இணை பிரியாமல் நிற்கும் அன்றில் கணப்பொழுது ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்தாலும் அப்பிரிவைப் பொறுக்க முடியாமல் இறந்து படும். பிரிவைப் பொறாமல் கத்தும் அவற்றின் சிறுகுரல் காமநோய்ப் பட்டாரின் துயரை வளர்த்து மிகவும் வருத்தும்.

**துணை முலை அரக்கும் :** அரக்குதல் இடத்தை விட்டுப் பெயர்த்தல்.

கொள்ளும் பயன்ஒன்று இல்லாத
  கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில்
  எறிந்துஎன் அழலைத் தீர்வேனே

நாச்.திரு 13:8

என்று ஆண்டாள் அருளிச் செய்ததுபோல இப்பரகால நாயகியும் செய்யப்பார்க்கின்றாள்.

இப்பாசுரத்தில், ஆழ்வார் நாயகி "எம்பிரானே! உன்னை விட்டுப் பிரிந்து ஒரு நொடிப் பொழுதும் போக்க முடியவில்லை; இவ்விருள் தருமா ஞாலத்திலே என்னை வைத்திட்டு ஞானஒளி மழுங்கச் செய்கின்றாய்; ஞானம் என்னும் நிறை விளக்கு அணைந்து போயுள்ளது; சம்சார சாகரம் கொந்தளிக்கின்றது; இவ்வுலகத்துப் பொருள்களெல்லாம் எனக்குப் பாதகமாயுள்ளன; உன்னிடத்தில் நான் பக்தியை வைத்ததனாலன்றோ இப் பாடுபட நேர்கின்றது; அந்தப் பக்தியைக் கழற்றி

விட்டால் 'உண்டியே உடையே உகந்தோடும் இம் மண்டலத்தவர்களைப்' போலவே அடியேனும் சுகமாக வாழ்வேனன்றோ? ஆகவே பக்தியைத் தவிர்த்துக் கொள்ளலாமா என்றும் எனக்குத் தோன்றுகின்றது; பாவியேன் திறத்தில் என்ன திருவுள்ளமோ? சொல்லியருள வேண்டும்?'' என்று விண்ணப்பம் செய்கின்றாள்.

''உன் மனத்தால் என்னினைந்திருந்தாய்?'' என்று பாசுரம்தோறும் ஒருமுறைக் கொன்பதுமுறை வினவிக் கொண்டே வந்தவர் அதற்கு ஒரு மறுமொழியும் பெறாமல் எங்ஙனம் பதிகத்தை முடித்துவிட்டார்? என்ற வினா எழுகின்றது. மறுமொழி பெற்றே முடித்தார் என்பதே இதற்கு விடை. ''என்னினைந்திருந்தாய்?'' என்று கேட்ட ஆழ்வாரை நோக்கி, 'ஆழ்வீர்? நீர் கவலையற்றிரும்'; உம்மை நாம் கை விடுவோமா? உம்மிடத்தில் பூர்ணக் கிருபை செய்ததாகவே திருவுள்ளம் பற்றியிருக்கின்றோம்; இல்லையாகில் அங்கு நின்றும் இங்கு வந்து திருவிடஎந்தையில் நிற்போமா? அஞ்சற்க; உமக்கு அருள்புரிந்தோம்' என்று எம்பெருமானே சோதி வாய்திறந்து அருளிச் செய்ததனால் தேறுதல்டைந்து இத்திருமொழியைத் தலைக்கட்டினார். 'அருளாய், என்னுமித் தொண்டர்க்கின்னருள் புரியும் இடவெந்தை எந்தை பிரானை' (10) என்றதனால் இது தெளிவாகின்றதன்றோ?

**2. கள்வன் கொல்? (3. 7)**: இத் திருமொழி திருவாலி எம்பெருமான்பற்றியது. தாய்ப்பாசுரமாக அமைந்தது. இதில் ஒரு பாசுரம்.

கள்வன்கொல் யான்அறியேன்
கரியான்ஒரு காளைவந்து
வள்ளிமருங்குல் என்றன்
மடமானினைப் போதவென்று

வெள்ளிவளைக் கைப்பற்ற
பெற்றதாயரை விட்டகன்று
அள்ளலம் பூங்கழனி
அணியாலி புகுவார்கொலோ? (1)

[கள்வன் - திருடன்; கரியான் - கருநிறத்தவன்;
காளை - இளையான்; வள்ளி - வள்ளிக் கொடி;
மருங்குல்-இடை; அகன்று-நீங்கி; கழனி-வயல்]

இஃது 'உடன் போக்கு' என்ற துறையில் அமைந்தது. தலைவன் தலைவியைத் தோழியின் துணையால் தலைவியின் இல்லத்தினின்றும் பெயர்ந்து ஒருவருக்கும் தெரியாமல் நள்ளிரவில் தன் மனையிடத்துக்கு உடன் கூட்டிக் கொண்டு செல்லுதலை 'உடன் போக்கு' என்று வழங்குவர் அகப் பொருள் நூலார்.

பரகால நாயகி திருத்தாயாருடன் கண் உறங்கிக் கொண்டிருந்தபொழுது யாரும் அறியாமல் அவளைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போகத் துணிந்த வயலாளி மணவாளன் திருத் தாயார் சிறிது கண்ணயர்ந்த பொழுது அங்ஙனமே அவளைக் கொண்டு சென்று விட்டான். உடனே துணுக்கென்று கண்விழித்துக் கொண்ட திருத்தாயார் படுக்கையைத் தடவிப் பார்க்கின்றாள்; மகளைக் காண்கின்றிலள். தலைமகன் வயலாளி மணவாளனைக் குறித்து வாய் வெருவின படியை அறிந்தவளாதலின் அப் பெருமானே இவளைக் கொண்டு போயிருக்க வேண்டும் என்று நினைந்து எழுந்து பார்க்கின்றாள். தான் நினைத்த படியே வயலாளி மணவாளன் தன் மகள் கையைப் பிடித்துக் கொண்டு செல்வதைத் தன் கண்ணாலே கண்டு வாய்விட்டுப் பேசுவதாக நடக்கின்றது இத்திருமொழி. வயலாளி மணவாளனை நாளும் அநுபவிக்க வேண்டுமென்றிருந்த ஆழ்வாருடைய விருப்பம் இத் திருமொழியாகப் பரிணமித்து விட்டது போலும்.

திருத்தாயார் சொல்லத் தொடங்கும் போதே 'கள்வன் கொல்?' என்று எம்பெருமானைக் கள்ளனாக ஐயுற்றுச் சொல்லுகின்றாள். சாத்திரங்களில் சேதநன் கள்ளனாகக் கூறப் பெற்றுள்ளான். எம்பெருமானுக்கு உரிமைப் பட்டதான ஆன்மாவைத் தனக்கு அடங்கினதாக வும் பிறனுக்கு உரியதாகவும் கருதுகின்ற சேதநன் ஆன்மாவை அபகரித்த கள்வன் எனப்படுகின்றான். தன் உடைமையைத் தான் கைக்கொள்ளுகின்ற எம்பெரு மானைக் கள்வன் என்று சொல்லத் தகாது. ஆயினும் 'யான் என் தனதே' (திருவாய். 2. 9: 9) என்றிருக்கும் 'யான்' என்ற அகப் பற்றும்; 'எனது' என்ற புறப் பற்றும் நெடுநாளாகச் சேதநனிடத்து அழுந்திக் கிடக்கும் வாசனையின் உறைப்பினால் தன்னுடைய கள்ளத் தனத்தை எம்பெருமான்மீது ஏறிடலாகும் என்பது தோன்றக் 'கள்வன் கொல்?' எனப்பட்டது. ''செஞ் சொற் கவிகள்! உயிர் காத்து ஆட்செய்யுமின் திருமாலி ருஞ்சோலை வஞ்சக்கள்வன் மாமாயன்'' (திருவாய். 10. 7: 1) என்று கூறப் பெற்றதையும் காண்க)

**'கள்வன்கொல் யான் அறியேன்?** 'கள்வனே வந்தான்' என்று உறுதியாகச் சொல்ல நா எழவில்லை. சர்வசுவாமியானவன் தன் உடைமையைக் கொண்டு போனானாகையாலும், பிரகாசமாகவே கொண்டு போனானாகையாலும், கள்வன் என்னால் முடியாது; ஆயினும் 'எனது' என்ற புறப்பற்றின் ஊற்றத்தாலே 'கள்வன் கொல்? யானறியேன்' என்று ஐயுறுவது போலச் சொல்லப் பெற்றுள்ளது. இங்ஙனே திருத்தாயார் தெருவில் ஓடிவந்து 'கள்வன் கொல்? யான் அறியேன்' என்று கதறினவாறே இங்கும் அங்கும் உள்ளார் அனை வரும் திரண்டு வந்து சேர்ந்து 'அம்மா! இஃது என்ன அநியாயம்?' கள்வனா வந்துவிட்டான்? யார் அவன்? அவன் கவர்ந்து சென்ற பொருள் யாது? என்று பேரார்வ

மாய் வினவுகின்றனர். மேலே சொல்லுகின்றாள்; 'கரியான் ஒரு காளை வந்து' என்று தொடங்கி "நீலமேக நிறத்தனாய் இளம் பருவமுடையவனான ஒருவன் என் இல்லத்தினுள்ளே புகுந்து என் மகளைப் 'புறப்படு, புறப்படு' என்று சொல்லிக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போகின்றான்; காண்மின்!" என்கின்றாள்.[2]

3. **கவளயானைக் கொம்பொசித்த (4.8)** : இது திருநாங்கூர்த் திருப்பதிகளில் ஒன்றாகிய பார்த்தன் பள்ளி மீது நடைபெறும் தாய்ப்பாசுரம். "என் திருமகள் பரகால நாயகி இரவும் பகலும் திருப்பார்த்தன் பள்ளிப் பெருமானுடைய குணசேஷ்டிதங்களையே வாய் வெருவிக் கொண்டு அத் திருப்பதியின் பெயரையே பாடா நின்றாள்" என்று திருத்தாயார் வாயாலே தமது நிலைமையை உரைக்கின்றாள் ஆழ்வார் நாயகி. ஒரு முறைக்கு ஒன்பது முறையாக '**பார்த்தன் பள்ளி பாடுவாளே**' என்று பன்னியுரைக்கின்றாள்; ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு வகையாகக் கூறுகின்றாள்.

> கவளயானை கொம்பொசித்த
> கண்ணனென்றும், காமருசீர்
> குவளைமேகம் அன்னமேனி
> கொண்டகோன் என்னானை யென்றும்,
> தவளமாட நீடுநாங்கைத்
> தாமரையாள் கேள்வனென்றும்
> பவளவாயாள் என்மடந்தை
> பார்த்தான்பள்ளி பாடுவாளே (1)

[ஒசித்த-முறித்தொழித்த; குவளை-கருநெய்தல்பூ; மேனி-உடல்; தவளம்-வெண்மையான]

---

2. விளக்கம் மேலும் வேண்டுவோர் பெரி. திரு. 3. 7: 1 திவ்வியார்த் தீபிகை காண்க.

என்பது முதற்பாசுரம். "என் கணவன், செய்த அருமைச் செயல்கள் உங்களுக்குத் தெரியுமா? கம்சன் தன் மத யானையைக் (குவலயா பீடம்) தன் கணவனைக் கொல்லு மாறு அரண்மனையில் நிறுத்தி வைத்தான்; இவனோ சேற்றிலிருந்து முள்ளங்கிக் கிழங்கை இழுப்பவன் போல அந்தத் தந்தங்களை எளிதிற் பறித்திட்டு அந்த யானை யின் உயிர் தொலைத்திட்டான்; அப்படிப்பட்ட சூரன் காண்மின் என்கணவன்" என்கின்றாள். "இவ்வளவை யும் செய்தவள் பார்த்தன் பள்ளித் திருப்பதியின் திரு நாமத்தையிட்டு இசைபாடத் தொடங்கி விட்டாள்" என்கின்றாள்.

4, **வெருவாதாள் வாய்வெருவி (5.5)**: இது திரு வரங்கம் என்ற திவ்விய தேசத்தின்மீதான திருமொழி; தாயின் வாக்காக அமைந்தது. திரு அரங்கநாதன் திறத் தில் ஆழ்வாருக்கு உண்டான பிராவண்யத்தைத் திருத் தாயார் எடுத்துரைப்பதாக நடைபெறுகின்றது இத் திருமொழி.

*வெருவாதாள் வாய்வெருவி வேங்கடமே!*
*வேங்கடமே! என்கின் றாளால்*
*மருவாளால் என்குடங்கால் வாள்நெடுங்கண்*
*துயில்மறந்தாள் வண்டார் கொண்டல்*
*உருவாளன் வானவர்தம் உயிராளன்*
*ஒலிதிரைநீர்ப் பௌவம் கொண்ட*
*திருவாளன் என்மகளைச் செய்தனகள்*
*எங்ஙனம் உரைக்கின் றேனே (1)*

*[வெருவாதாள்-அஞ்சாதவள்; வெருவி-பிதற்றி; குடங்கால்-மடி; மருவாள்-பொருந்துகின்றிலள்; உருவாளன்-திருவுருவமுடையவன்; வானவர்-நித்தியசூரிகள்; ஒலி-சத்தமிடுகின்ற; பௌவம்-கடல்; திரு-இலக்குமி; செய்தனகள்-செய்தவற்றை; சிந்திக்கேன்-நினைக்கத்தான் முடியுமோ]*

என்பது முதல் பாசுரம். பரகால நாயகியைப் பெற்றெடுத்த திருத் தாயார் திருவரங்கநாதன் திறத்தில் தன் மகள் காதல் கொண்டு பித்தேறிக் கிடக்கும் நிலையை ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு வகையாக ஒன்பது பாசுரங்களில் பேசி ''என் மகளை இப்பாடுபடுத்தினானே எம் பெருமான்' என்று சொல்லித் தீர்க்கின்றாள்.

**வேங்கடமே! வேங்கடமே! என்கின்றாளால்:** திருவரங்கப் பதிகத்தில் வேங்கடம் குறிப்பிடுவது எற்றுக்கு? என்ற ஐயம் எழுகின்றது. இதற்கு பிரதிவாதி பயங்கரம் அண்ணசாமி தரும் விளக்கம்; விண்ணுலக வைகுந்த மாநகரே மண்ணுலகத் திருவரங்கமாகவும், விரஜை நதியே காவிரி நதியாகவும் பரவாசுதேவனே அரங்கநாதனாகவும் அவதரித்ததாக மாமுனிவர்களும் நம்முன்னோரும் கூறுவர். பரமபதநாதன் பயண மேற்கொண்டு புறப்பட்டு வருகையில் திருவேங்கடமலையில் சிறிது இளைப்பாற நின்றான். பின்னர்த் திருவரங்கத்தில் வந்து சாய்ந்தான். திருப்பாணாழ்வாரும் '**விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்**'[3] என்றார். இவரே மூன்றாம் பாசுரத்திலும் 'மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்திசெய்ய **நின்றான் அரங்கத் தரவின் அணையான்**'[4] என்றார். இதனால் திருவேங்கடமலையில் நின்றும் திருவரங்கத்தில் வந்து பொருந்தினமையும் சொல்லப் பட்டது. மேலும் திருவேங்கடமுடையான் நின்ற திருக் கோலத்தில் சேவை சாதிக்கின்றமையால் 'வெளிப் பயணத் திற்காக நிற்கின்றார் போலும்!' என்று தோற்றக் கூடிய தாதலாலும், திருவரங்கத்தில் கிடந்த திருக்கோலமாகச் சேவை சாதிக்கின்றமையால் ''இனி எங்கும் போக

3. அமலனாதி-1
4. ஷெ-3

நினைக்க வில்லை' என்று தோற்றக் கூடியதாதலாலும் பரம பதநாதன் புறப்பட்டு வருகையில் திருமலையில் நின்று கோயிலிலே வந்து சாய்ந்தான் என்று நிர்வகிப்பதில் பொருத்தம் நன்குள்ளது. ஆகவே, திருவரங்கத்திற்கும் மூலகந்தம் திருமலையாதலால் இப்போது திருவரங்கத்திலே ஆழ்வாருக்குண்டான பிராவண்யாதிசயம் அதற்கு வேர்ப்பற்றான திருமலையளவும் சென்றதனால் '**வேங்கடமே! வேங்கடமே!**' என்றது பொருத்தமாக அமைகின்றதன்றோ? பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானத்திலும் இதே கருத்து 'ஆலமர் வித்தாகக்' காணப்படுகின்றது.

**வெருவாதாள் வாய்வெருவி:** சிறிதும் அஞ்சாமல் 'வேங்கடமே வேங்கடமே' என்று வாய் பிதற்றுகின்றாள்; கணவனது ஊரின் பெயரை வாய்விட்டுச் சொல்வதற்குக் கூச்சப் படவேண்டியிருக்க, இவள் கூசாமல் சொல்லுகின்றாளே! 'இஃது என்ன சாகசம்!!' என்கை. மலையைச் சொல்லுகின்றாளேயன்றி மலையன்வரை செல்ல முடியவில்லை. மலையையே பலகாலும் சொல்லிக் கதறுகின்றாள். **ஆல்** — இந்த இடைச்சொல் பெண் பிள்ளையினுடைய வாய் வெருவுதலின் இனிமையைக் காட்டுகின்றது என்பர் அண்ணாசாமி,

இவ்விடத்தில் ஓர் ஐதிகம்: பட்டர் அடிக்கடி 'அழகிய மணவாளப் பெருமான்' என்றும், அனந்தாழ்வான் 'திரு வேங்கடமுடையான்' என்றும் அநுசந்தித்துக் கொண்டிருப்பார்கள். அவ் வநுசந்தானத்தில் அவர்களுடைய ஊற்றம் எல்லாம் நன்கு விளங்கா நிற்கும். அதுபோலவே பரகால நாயகியின் 'வேங்கடமே, வேங்கடமே' என்ற அநுசந்தானத்திலும் மிகச் சிறப்பான இன்பம் பொலிய நிற்கும் என்பது **ஆல்** — என்பதில் தோன்றும்.

**என்குடங்கால் மருவாளால்:** இவளை மடியிலே எடுத்து வைத்துக் கொண்டு உலகியல் பேச்சுகளால் இவளது நினைவை மாற்றி ஆற்றலாம் என்று கருதினாலும் இவள் என் மடியில் பொருந்த மாட்டுகின்றிலள். என் மடியைத் தவிர வேறொன்றையும் அறியாதிருந்த இவளுக்கு இப்போது என் மடி நெருப்புப் போலாயிற்றே. என்ற வருத்தம் இங்கு 'ஆல்' — என்பதில் தோன்றுகிறது.

**வாள்நெடுங்கண் துயில் மறந்தாள்:** இவள் நமது மடியில் பொருந்தாவிடினும் இவளைப் பஞ்சணையிலே கிடத்தி உறங்கப் பண்ணலாம் என்று நினைத்தாலும், உறக்கம் கொள்வதை அடியோடு மறந்திட்டாள். "தொல்லைமாலைக் கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ - கண்கள் துஞ்சுதலே"[5] என்று பாரங்குசநாயகி கூறுவதுபோல் ஆனாள். உறக்கம் என்னும் செயலை இனி இவளுக்குப் புதிதாகத்தான் கற்பிக்க வேண்டும்.

"நான் ஒருவருக்கும் அஞ்சாமலும் ஒரு நொடிப் பொழுதும் கண்ணுறங்காமலும் ஆபாச பந்துக்களிடம் பற்றுவையாமலும் திருவேங்கடமலையையே வாய்வெருவிக் கொண்டிருக்கின்றேன்" என்று ஆழ்வார் நாயகி தமது நிலையைத் திருத்தாயார் வாக்கில் வெளியிட்டுக் கொள்கின்றார். முன்னிரண்டு அடிகளால் 'தமக்கு இப்படிப்பட்ட பகவத் விஷய பிராவண்யம் வாய்த்ததற்கு அவனுடைய எழிலார்ந்த சிறப்பே காரணம்; அவனே இதற்கு நிலத்தைப் பண்படுத்துதல் போலத் தன் மனத்தைப் பண்படுத்தினான்' என்பன பாசுரத்தின் பின்னிரண்டடிகள்.

**வண்டார் கொண்டல் உருவாளன்:** எம்பெருமானுடைய திருவுருவத்திற்கு வண்டையும் மேகத்தையும் உவமையாகக் கொள்வது மரபு.

---

5. திருவிருத்-97.

**பௌவம் கொண்ட திருவாளன் என் மகளை :** தன்னுடைய எழிலார்ந்த வடிவைக் காட்டி முன்பு திருப் பாற்கடலில நின்றும் என் பெண் பிள்ளையைக் (இலக்குமி) கொள்ளை கொண்டான். இன்று சமுசாரக் கடலில் நின்றும் என் பெண்பிள்ளையைக் (பரகாலநாயகி) கொள்ளை கொண்டான். எப்போதும் இவனுக்குப் பெண்பிள்ளைக் கொள்ளை கொள்வதே செயல்முறை (modus operandi) போலும்!

'இப்போது இப்பெண் தாயின் வசத்தில்தானே இருக் கின்றாள். கொள்ளை கொண்டதாக எப்படிச் சொல்ல லாம்?' என்ற வினா எழுகின்றது. முன்னர்க் கூறிய நிலை மைகளை விளைவித்தலைவிட கொள்ளை கொள்வ தென்பது வேறொன்றுதுண்டோ? சம்சாரத்துக்கு ஆளா காதபடி செய்ததே கொள்ளை கொண்டது என்பது!

**எங்ஙனம் நான் சிந்திக்கேனே:** "எம்பெருமானு டைய சுவீகாரத்திற்கு இவள் இலக்காகப் பெற்ற பெருமை ஒருவரால் இன்னவிதம்தான் என்று சிந்திக்கக் கூடியதோ? நெடுநாளாக நடந்து வருகின்ற சமுசாரத்தில் இன்று இப் படிப் பட்ட பகவத் விஷயீகாரம் வாய்த்ததென்றால் இதற்குக் காரணம் அந்தப் பகவானும் அறியான்; இப் பெண்ணும் அறியாள்; கரையிலே நிற்கின்ற நான் எங்ங னம் அறிவேன்?" என்கின்றார் திருத்தாயார்.

5. **சிலையிலங்கு பொன்னாழி(8.1):** திருக்கண்ண மங்கை திருமொழியில் (7.10) எம்பெருமான் ஆழ்வாருக் குத் தன்னுடைய படிகளையெல்லாம் காட்டிக் கொடுக்க, அங்கு இனிய பாசுரங்களினால் வாயாரப் பேசி அநுபவித் தவருக்கு எம்பெருமானுடன் உடலுறவு கொள்ள வேண் டும் என்ற ஆசை கிளர்ந்தது: தம் நிலைமாறிப் பிராட்டி தசையை அடைந்து உடலுறவு பெறாமையாலே தம் ஆற்றாமையைத் திருத்தாயார் வாயாலே பேச வேண்டும்

படியான நிலைமை நேர்ந்தது. பரகாலநாயகி காதல் நோயால் பலவற்றையும் சொல்லி வாய்வெருவுதலைக் கேட்ட திருத்தாயார் 'இப்போது இவளுடைய பேச்சு களின் நிலையை (சந்நிவேசத்தை) ஆராய்ந்தால் இவள் பரத்துவத்தில் ஈடுபட்டிருக்க மாட்டாள்; வியூக மூர்த்தி யையோ அந்தர்யாமித்துவ மூர்த்தியையோ சிந்தித்திருக்க மாட்டாள்; அர்ச்சாவதாரங்களில் திருக்கண்ணபுரத் தெம் பெருமானிடம்தான் ஈடுபட்டிருக்க வேண்டும்: இல்லை யாகில் இப்படிப்பட்டவாய் வெருவுதல் இவளுக்கு ஏற்பட் டிருக்க முடியாது' என்று நெஞ்சிற் கொண்டு - தம் மகள் நிலையை வினவ வந்தவர்களை நோக்கி, 'என் மகளின் பேச்சுகளை நோக்கின அளவில் இவள் கண்ணபுரத் தம்மானைக் கண்டவளாயிருக்க வேண்டும்' என்று சொல் லுகின்ற போக்கில் இத்திருமொழி அமைந்துள்ளது.

'சிலையிலங்கு பொன்னாழி திண்படை தண்(டு)
ஒண்சங்கம்' என்கின் றாளால்
'மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக்கு
எற்றே காண்!' என்கின் றாளால்
முலையிலங்கு பூம்பயலை முன்போட,
அன்போடி, இருக்கின் றாளால்,
கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொலோ? (1)

[சிலை-வில்; ஆழி-சக்கரம்; தண்டு-கதை; ஒண் சங்கு-அழகிய சங்கு; எற்றே-எப்படி; பயலை-பசலை; முன்பு ஓட-முன்னே சென்று வழி காட்ட;அன்பு ஓடி-அன்பு பின் செல்ல; அம்மான் -சௌரிராஜன்]

என்பது முதற் பாசுரம். 'தன் அருமை மகள் சொன்ன சொற்கள் தனக்கு மிகவும் சுவையாக இருந்தபடியால் அவற்றைத் தன் வாயாலும் பேசி யநுபவிக்கின்றாள் திருத்தாயார்.

"என் மகள் எம்பெருமானுடைய திவ்வியாபரணங்களைக் கண்டுகந்து அவற்றையே வாய் வெருவுகின்றாள்; சிலை என்கின்றாள்; இலங்கு பொன்னாழி என்கின்றாள்; தண்டு என்கின்றாள்; சங்கு என்கின்றாள்; அவனுக்கு மலை போன்ற நான்கு திருத்தோள்கள் உண்டு என்கின்றாள்; அவற்றின் அழகை என் சொல்வேன் என்கின்றாள்; நாயகன்மீது அன்பு உண்டான பின்பு முலையில் பசலை நிறம் தோன்றுவது இயல்பு. ஆனால் இவளிடம் முன்பு பசலை நிறம் உண்டாகவும் பின்பு அன்பு விளையவும் நேர்ந்திருக்கின்றன. இப்படிப்பட்ட இவளது தன்மையை நோக்கினால் இவள் கண்ணபுரத்து எம்பெருமானைக் கண்டவளாக இருக்க வேண்டும்" என்கின்றாள் திருத்தாயார்.

6. **தெள்ளியீர் தேவர்க்கும் (8.2)**. மேலே குறிப்பிட்ட தாய்ப்பாசுரம் இத்திருமொழியாகவும் தொடர்ந்து வருகின்றது. இங்குத் திருத்தாயார் கண்ணபுரத் தெம்பெருமானையே நேராக நோக்கித் தன் பரிதாபத்தைப் பேசுகின்தாள். இத்திருமொழியில் சில பாசுரங்களில் தான் நொந்து கொண்டு பேசுவனவாகவும் செல்லும். ஆழ்வார்நாயகி சௌரிராஜப் பெருமானிடம் தனக்குண்டான அளவு கடந்த ஈடுபாட்டையும் (பிராவண்யத்தையும்) அவனைப் பிரிந்து தன் மேனி மெலிந்த படியையும் பேசுகின்றாள். பேசுகின்றபடியைக் கூறுவது இங்ஙனம்,

> கண்ணனூர் கண்ண புரந்தொழும் காரிகை
> பெண்மைஎன்? தன்னுடை யுண்மை யுரைக்கின்றாள்
> வெண்ணெயுண் டாப்புண்ட வண்ணம் விளம்பினாள்
> வண்ணமும் பொன்னிறம் ஆவ தொழியுமோ (5)

[காரிகை-அழகிய பெண்; பெண்மை - பெண்ணீர்மை; ஆப்புண்ட-கட்டுண்ட; வண்ணம்-

செய்தி; வண்ணம்-மேனி நிறம்; பொன் நிறம்-
பசலை நிறம்]

என்பது இத்திருமொழியின் **ஐந்தாவது** பாசுரம்.

**பெண்மை என்?:** "சௌரிராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்குமிடம் திருக்கண்ணபுரம். அவ்விடத்தை நோக்கி அஞ்சலி செய்கின்ற இப்பெண் மணி அந்த உடல் செயலோடு நில்லாமல் தன் நெஞ்சில் ஓடுகின்ற எண்ணங்களைச் சிறிதும் ஒளிக்காமல் உள்ளது உள்ளபடியே என்னிடம் வாய்விட்டுச் சொல்லுகின்றாள்; ஒன்றையும் மறைக்காமல் வெட்ட வெளிச்சமாக வெளியிடுவதற்குரிய, உயிர்த்தோழியிடத்தும் ஒளித்தே தீர வேண்டும் படியான, இரகசியச் சொற்களையும் என்னிடத்தில் கூசாமால் வாய் விட்டுச் சொல்லுகின்றாளே இவள்; இஃது என்ன பெண்மை? —பெண்மை குணத்திற்கு இது தகுதியோ?" என்கின்றாள் திருத்தாயார்.

**தன்னுடை உண்மை உரைக்கின்றாள் :** 'வடவரை நின்றும் வந்து இன்று கணபுரம் இடவகை கொள்வதுயாம் என்று பேசினாள்' என்று அடுத்து வரும் பாசுரத்தில் சொல்லுதலாலே அதுவே இதற்குப் பொருள் என்றும் கொள்ளலாம். திருவேங்கடமலையிலிருந்து திருக்கண்ண புரத்தில் நித்திய வாசம் பண்ண வந்திருக்கின்றவன் என்ப தாகக் தன்னுடைய உண்மையை உரைக்கின்றாள் என்க.

**வெண்ணெயுண்டு ஆப்புண்ட வண்ணம் விளம்பினாள் ;** இப் பெண்மகள் பிரிவாற்றாமையால் உடம்பு வெளுத்து வருந்திக்கிடக்கின்ற நிலை கண்டு எம்பெருமானிடத்தில் இவளுக்குண்டான காதலை மாற்றுவதற்காக 'அவனுடைய தீம்புகளையும் அவன் பட்ட அவமானங்களையும் எடுத்துரைத்தால் அவனிடத்தில் இவளுக்கு வெறுப்பு உண்டாகிவிடும்' என்றெண்ணிய சிலர், "கண்ணனாம் கண்ணன், என்ன கண்ணன்! வெண்ணெய்

எளியார் கையிலே பிடிபடுவதும் உரலோடு தாம்பினால் பிணிப்புண்டு ஏங்கிக் கிடப்பதும் இவையன்றோ அவனுடைய திவ்விய கீர்த்திகள்!'' என்று ஏச்சாகச் சிலர் சொல்லுவார்கள்; அவனிடம் இவளுக்கு வெறுப்பை உண்டாக்குவதற்காகச் சொல்லும் இச் சொற்கள் உவப்புக்கு எருவிட்டாற் போலாகின்றன: ''பெற வேண்டியதைப் பெற்றவனானவன் (அவாப்தசமஸ்த காமனானவன்) குறைவாளரைப்போலே வெண்ணெய் உண்ண ஆசைப் படுவதே! அந்த வெண்ணெயும் மனையிலே ஏராளமாக இருக்கவும், அது பிறருடையதாக இருக்க வேண்டும் என்றும், அதுவும் களவு வழியிலே சம்பாதித்து உண்ண வேண்டும் என்றும் விரும்பிக் களவு செய்வதே! அதைச் செய்தாலும் சாமர்த்தியமாகச் செய்து செரிப்பித்துக் கொள்ள வல்ல ஆற்றலிருந்தும், ஆற்றலற்றவனைப் போல் வாயது கையதாக அகப்பட்டுக் கொண்டு கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு அழுது ஏங்கிக் கிடப்பதே! ஆகா! இத்தனை சௌலப்பிய சௌசீல்ய குணம் வாய்ந்த ஒரு பெருமானையன்றோ நாம் ஆசைப்பட்டோம்! நம்முடைய பாக்கியமே பாக்கியம்! அவனுடைய சேர்க்கை (சம்ஸ்லேஷம்) நமக்குக் கிடையாதொழியினும் ஒழிக; இப்படிப்பட்ட பெருமானிடத்தில் நாம் ஆசைப்படப் பெற்றதே நமக்கு எல்லாப் பேறும் கிடைத்த படியாகும் அன்றோ? என்று சொல்லி அவனுடைய திருமேனியுடன் அணையப் பெற்றால் பிறக்கக்கூடிய மகிழ்ச்சி நிலைமையைப் பெறுகின்றாள் இப் பெண்பிள்ளை'' என்கின்றாள். இவ்விடத்தில் ''அவாப்த சமஸ்தகாமனானவன் ஒருத்தியுடைமையை ஆசைப்படுவதாம்; ஸர்வ சக்தியானவன் களவிலே இழிவதாம்; அது தன்னிலும் அகப்பட்டுக் கட்டுண்ணும்படி எளியனாவதாம்; இனி நமக்கொரு குறையுண்டோ? என்கின்றாள்'' என்ற இன்சுவை மிக்க வியாக்கியான ஸ்ரீ சூக்தி கண்டு மகிழத்தக்கது.

**வண்ணமும் பொன்னிறமாவ தொழிவதே :** பெண்டிர்க்குப் பிரிவாற்றாமையினால் தோன்றும் பசலை நிறம் பொன்னிறம் எனப்படும்; அது கவலைக்கு அறிகுறி. அந்த நிறம் ஒழிந்த தென்றால் மகிழ்ச்சி உண்டாயிற்று என்ற படியாம். அவனுடைய திருக்குணங்களைப் பிறர் ஏச்சாகச்சொன்னாலும் 'கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப் பெற்றான், காடுவாழ் சாதியும் ஆகப் பெற்றான், பற்றியுரலிடை ஆப்பு முண்டான் பாவிகாள், உங்களுக் கேச்சுக் கொலோ?' (நாச். திரு. 12: 8) என்னும் மெய்யன்புடையவளாதலால் அந்தத் திவ்விய கீர்த்தி செவிப்பட்ட மாத்திரத்திலும் அவனோடு தனக்குக் கலவி நேர்ந்ததாகவே கொண்டு நிறவேறுபாடு மாறப்பெற்றாள் என்க.

**7. மூவரில் முதல்வன் (9. 9) :** மாலிருஞ்சோலை வணங்குதும் வாமட நெஞ்சே!'' என்று, ஒரு தடவை சொன்னது போல் ஒன்பது தடவை சொல்லிக் கொண்டு திருமாலிருஞ் சோலையை அநுபவித்த ஆழ்வார் அவ்விடத்து அழகருடைய பேரழகிலே நெஞ்சைப் பறி கொடுத்து தாமான தன்மையை இழந்து ஒரு பிராட்டியின் நிலைய அடைகின்றார். தம் மகள் சுந்தரத் தோளுடையானை அணையவேண்டும் என்ற ஆற்றாமையால் வருந்துவதைத் திருத்தாயார் எடுத்துரைப்பதாய் நடைபெறுகின்றது இத்திருமொழி! ''அவனை அணைந்து ஆனந்திக்கும் படியான பாக்கியத்தைப் பெறுவளோ? அன்றி இங்ஙனம் நோவு பட்டுக்கொண்டே இருக்கக் கடவளோ என்று சங்கித்து இறுதிப்பாட்டில் 'அணையப் பெறுவாள்' என்று அறுதியிட்டுத் தரிக்கிற படியை வெளியிடுகின்றாள்'' என்பதாம்.

புள்ளினை வாய்பிளந்து
பொருமாகரி கொம்பொசித்து
கள்ளச் சகடுரைத்த
கருமாணிக்க மாமலையை

தெள்ளருவி கொழிக்கும்
　　திருமாலிருஞ் சோலைநின்ற
வள்ளலை வாணுதலாள்
　　வணங்கித்தொழ வல்லள்கொலோ? (7)

என்பது இத்திருமொழியின் ஏழாம் பாசுரம், "கண்ண பிரானாகத் திருவவதரித்து பாகாசுரனுடையவாயைக் கீண்டொழித்தும் கம்சனது மாளிகை வாசலிலே குவலயா பீட யானையைக் கொம்பொசித்துத் தொலைத்தும் மிகச் சிறுவயதில் சகடாசுரனைத் திருவடியால் வதைத் தொழித்தும் செய்தருளின பகைவர்களை அழிக்கும் பெருமை இன்றும் விளங்கும் படியாகத் திருமாலிருஞ் சோலையில் நித்திய சந்நிதி பண்ணியிருக்கின்ற பரம உதாரரான பெருமானை என்மகள் வணங்கித் தொழும் படியான பாக்கியம் பெறுவளோ?" என்கின்றாள் திருத் தாயார்.

8. **புள்ளுருவாகி நள்ளிருள் வந்த (10. 9):** இத் திருமொழி திருத்தாயார் பாசுரமாகச் சொல்லுகின்றது. சர்வேசுவரனான நாயகனோடு கலந்து பிரிந்து பிரிவாற் றாதளான பரகால நாயகியின் கடலின் மிக்க காதலையும் அக்காதலுக்குத் தக்கவாறு அவன் வந்து கலவி புரியாமல் அலட்சியமாக இருத்தலையும் நோக்கின திருத்தாயார் எம்பெருமானை நோக்கி "பிரானே, இவளை நீ இங்ங னம் நோவுபட விட்டிருப்பது தகுதியோ? பரத்துவத்தின் மேல் எல்லையில் நிற்கின்ற நமக்கு இப் பெண்பிள்ளை ஒரு பொருளோ? என்று அலட்சியமாக இவளை நினைத் திருக்கிக்கின்றாய் போலும்; இதுதானோ உன்னுடைய பெருமைக்குத்தகுவது?" என்று ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு பழமொழியை எடுத்துரைத்துப் பேசுகின்ற முகத்தால் ஆழ்வார் தம்முடைய காதலின் மிகுதியையும் அலட்சியம் செய்யாமல் கடுகக் கைப்பற்றியாக வேண்டும் என்பதையும் விண்ணப்பம் செய்வதாக அமைந்துள்ளது

இத்திருமொழி. ''அருளார் திருச்சக்கரத்தால்'' (திருவிருத். 33) என்ற திருவிருத்தப் பாசுரம் இத்திருமொழியுடன் ஒரு புடை ஒப்பாக இருப்பதை நோக்கி மகிழத்தக்கது.

செருவழி யாத மன்னர்கள் மாள
தேர்வலங் கொண்டுஅவர் செல்லும்
அருவழி வானம் அதர்படக் கண்ட
ஆண்மைகொ லோ?அறி யேன்நான்
திருமொழி எங்கள் தேமலர்க் கோதை
சீர்மையை நினைந்திலை, அந்தோ!
பெருவழி நாவற் கனியும் எளியள்
இவளெனப் பேசுகின் றாயே (5)

[செரு - போர்க்களம்; மாள - இறக்க; வானம் - வீரசொர்க்கம்; அதர்பட - பெருவழியாக்கின; ஆண்மை - ஆண்பிள்ளைத் தனம். திருமொழி - மதுரமான பேச்சு;, கோதை - மயிர்முடி; சீர்மை - சிறப்பு].

என்பது இத்திருமொழியின் ஐந்தாவது பாசுரம். ''பிரானே, பேச்சின் இனிமையாலே உனது நெஞ்சினையும் கவரவல்லாய். தலைவியின் பூவணிந்திருக்கும் அழகாலே உன்னைப் பிச்சேற்ற வல்லவளான பரகால நாயகியின் சிறப்பைச் சிறிதும் நினைக்கின்றிலையே; இவளிடத்தில் மிகவும் அலட்சியம் பாராட்டுகின்றனையே! இதற்கு என்ன காரணம்? பார்த்தன் சிலை வளையத் திண்டேர் மேல் முன்னின்று, மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியச் செய்த மிடுக்கை நினைத்தோ இவளை இங்ஙனம் அலட்சியம் செய்கின்றாய்?'' என்கின்றாள் திருத்தாயார்.

**செருவழியாத மன்னர்கள்:** பாரதப் போருக்கு முன்பு ஒரு காலும் ஓரிடத்திலும் தோல்விபெற்றறியாத

அதிரத மகாரதர்களான வீடுமன், துரோணர் முதலிய வர்கள்.

**தேர் வலங்கொண்டு:** தான் ஆயுதம் எடுப்பதில்லை என்று சூளுரைத்து வைத்திருப்பதனால் தேர்க்காலால் எதிரிகளை உழக்கினான்.

**அவர் செல்லும் அறுவழி வானம்:** போர்க் களத்தில் மாண்டொழிந்தவர்கள் வீரசொர்க்கம் புகுவதாகச் சாத் திரங்களின் கொள்கை. இதனால் இறந்த வீரர்கள் செல் லும் வழி 'அருவழி வானம்' எனப்பட்டது. பாரதப் பெரும் போருக்குமுன்பு நெடுநாளாகவே வீரசொர்க்கத் திற்குப் போவாரின்மையால் புல்லெழுந்து கிடந்த அவ் வழியைப் பெருவழியாகச் செய்தனன் கண்ணன். ''அப் படிப்பட்ட ''ஆண்பிள்ளைத் தனத்தை நினைந்தோ இவளைப் பொருட்படுத்தாதொழிகின்றாய்?'' என்கின் றாள் திருத்தாயார்.

**பெருவழி நாவற் கனியிலும் எளியள் இவள்:** ''பெரிய தொரு வழியில் நாவற்பழம் விழுந்து கிடந்தால் அதனைக் குனிந்து எடுக்கலாம்; அல்லது எடுக்காமல் தவிர்க்கலாம் அன்றோ? அதுவே எட்டாத இடத்தில் இருக்குமாயின் அதன்மீது விருப்பம் மிஞ்சியிருக்கும். சர்வ சாதாரணமான பல்லோர் செல்லும் விழியிலே விழுந்து கிடந்ததாகில்அஃது ஒரு பொருளாகத் தோன்றுவதில்லை. அது போலவே இவளையும் கருதுகின்றாய் போலும்'' என்கின்றாள் திருத் தாயார்.

**9. பொங்கார் மெல்லிளங் கொங்கை (திருநெடுந் 17):** முப்பது பாசுரங்கள் கொண்ட திருநெடுந்தாண்டகத் தில் (11-20) பாசுரங்கள் திருத்தாயார் கூற்றாக நடை பெறுகின்றது. இவற்றின் ஆழ்வாருக்கு நாயகி நிலை ஒரு புறத்திலும், தாய் நிலை மற்றொரு நிலத்திலும் நடக்

கிறபடியாலே எம்பெருமானை அநுபவிப்பதில் ஆழ்வாருக்கு விரைவு உண்டானமையும் 'நாம் பதறக் கூடாது' என்கின்ற தீர்மானம் மற்றொரு புறத்தில் உண்டானமையும் விளங்கும். தன் சொரூபத்தை நோக்குமளவில் தீர்மானம் உண்டாகும்; அவனுடைய தனிச் சிறப்பை நோக்குமளவில் பதற்றம் உண்டாகும்.

பொங்கார்மேல் இளங்கொங்கை பொன்னே பூப்பப்
பொருகயற்கண் நீர்அரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
சிறுகுரலுக்கு உடலுருகிச் சிந்தித்து ஆங்கே
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்
தண்கோவ லூர்பாடி ஆடக் கேட்டு
'நங்காய்! நங் குடிக்கிதுவோ நன்மை?' என்ன
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே! (17).

[பொங்கு-வளரும்; பொன்-பசலை; கயல்-கெண்டை; செங்கால-சிவந்த கால்களையுடைய; ஆட-கூத்தாட; குடி-குலம்]

என்பது **பதினேழாம்** பாசுரம். தன் மகள் சோர்வுற்ற நிலையைக் கண்ட திருத்தாயார். ''இவளுக்கு நாம் ஏதேனும் இதமான வார்த்தை சொல்லிப் பார்ப்போம், அதனாலாகிலும் வழிப்படக் கூடுமோ'' என்றெண்ணி 'நங்காய்' நீ இங்ஙனம் வாய்விட்டுக் கூப்பிடுதலும் மோகித்தலுமான இவை நின்பெண்மைக்குத் தகாது, நம் குடிக்கும் இழுக்கு' என்று சொல்ல, அங்ஙனம் அவள் இதம் சொன்னதுவே ஏதுவாக மேன்மேலும் அதிகமாக முயன்று பணைத்த படியைச் சொல்லுகிறது இப்பாசுரம்.

**பொங்கார் மெல்லிளங் கொங்கை பொன்னே பூப்ப:** காதல் நோயால் உடலில் தோன்றும் நிறவேறுபாடு

பொன்பூத்தலாகச் சொல்லப்படும்; பசலை நிறம் என்பதும் இதுவேயாகும் 'ஊருண்கேணி' (399) என்ற குறுந்தொகைப்பாடல் இது பரவுவதை விளக்குகின்றது.

**பொருகயல் கண்ணீரரும்ப:** போரிடும் கெண்டைகளாகக் கண்கள் வருணிக்கப்படும். அப்படிப்பட்ட கண்கள் நீர் பெருகி நிற்கும். காதலிகளின் கண்களில் நீர்பெருதல் எப்போதும் உள்ளதொன்று. கலவி நிகழும் காலத்தில் ஆனந்தக் கண்ணீர் பெருகும். பிரிந்து வருந்துங் காலத்தில் சோகக் கண்ணீர் பெருகும்.

**போந்து நின்று:** 'நாயகனே வந்து மேல்விழ வேண்டும்படியான முலையழகையும் கண்ணழகையும் உடைய நீ மேல் விழுதல் பெண்மைக்குத் தகாது' என்று அன்னை சொன்ன இதம் செவியைச் சுடுவதாக இருந்தது. நெருப்புப் பட்ட வீட்டில் நின்றும் பதறிப் புறப்படுமாப்போலே அத்தாய் இருந்த அகத்தில் நின்றும் சடக்கெனப் புறப்பட்டாள்.

**நின்று:** தரிப்புப் பெற்று நின்று என்றபடி. புறப்பட்டவாறே கால் பரவி நின்றாள்.

**செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும் சிறுகுரலுக்கு உடல் உருகிச் சிந்தித்தாங்கே;** பாம்புக்கு அஞ்சி யோடினவன் புலியின் வாயிலே விழுந்தாற்போலேயாயிற்று. தாயின் வாய்ச் சொல் பாதகமாயிருக்கிறதென்று வெளியில் வந்தவளுக்கு அதனிலும் கொடிய சொல் செவியில் விழுந்தது. அதாவது, புறா ஆணும் பெண்ணும் கூடிக் கொஞ்சும் பேச்சுகள் அவள் செவியில் பட்டன! 'அந்தோ! இவையும் கூடத் தம் விருப்பம் நிறைவேறப் பெற்றுக் களித்து வாழா நிற்க, நம் நிலைமை இப்படியாயிற்றே!' என்று உடல் உருகினாள். பண்டு அவனும்

தானும் களித்துப் பரிமாறின படிகளை நினைத்துக் கொண்டாள்; பின்னையும் உடலுருகினாள். **செங்கால மடப்புறவம்:** ஆண்புறாவின் சிவந்த கால்கள் நாயகனு டைய செந்தாமரை அடிகளை நினைப்பூட்டி வருத்தின போலும். இது கண்ணுக்கு இலக்கானபடி. **பெடைக்குப் பேசும் சிறு குரல்:** இது காதுக்கு இலக்கானபடி. இங் ஙனம் அவன் நம் காதிலே பேசும் பேச்சுகள் கேட்கப் பெறுவது என்றோ? என்று உடலுருகினாள்.

**ஆங்கே தண்காலும்...:** இதனால் தன் ஆற்றாமை மீதூர்ந்தவாறே நாயகனோடு பரிமாறுவதற்கான தக்க இடங்களைப் பற்றி வாய்விட்டுக் கூப்பிடத்தொடங் கினாள். திருத்தண் கால், திருக்குடந்தை, திருக்கோவலூர் முதலான திருப்பதிகளைச் சொல்லிப பாடத் தொடங் கினாள். தண்கால் - குளிர்ந்தகாற்று. தண்காலிலுள்ள எம்பெருமான் குளிர்ந்த தென்றல் போலவே சிரமம் போக்குகின்ற வடிவையுடையவனாக இருப்பதனால் அத் தலத்திற்கே 'தண்கால்' என்று திருநாமம் ஆயிற்று என்பர், பண்டு அப்பெருமான் தன்னை அணைக்கின்ற போது சிரமமெல்லாம் தீர்ந்து மிக்க இனிமையாக இருந்ததனால் மீண்டும் அங்ஙனமே ஆகவேண்டுமென்று தன்காலைப் பாடினாள்.

**தண்குடந்தை நகரும் பாடி :** 'எம்பெருமான் அமுது செய்த போனகம்சேஷபூதர்க்கு சுவீகரிக்க உரியது' என்று முறையிருக்க; திருக்குடந்தை ஆராவமுத ஆழ்வார், தமக்கு ஆக்கின திருப்போனகத்தை முற்படத் திருமழிசை பிரானை அமுது செய்யப் பண்ணுவித்துப் பின்னர்த் தாம் அமுது செய்தாரென்று ஒரு மரபுப் பெருமை உண்டு. இப்படியாக, அன்பரோடு புரையறக் கலந்து பரிமாறு கிறவன்' என்று உட்கருத்துடன் (ஸாபிப் பிராயமாகத்), திருக்குடந்தையைப் பாடினாள்.

**தண்கோவலூர்பாடி :** ''பாவருந் தமிழால் பேர்பெறு பனுவல் பாவலர் பாதிநாள் இரவில், மூவரும் நெருக்கி மொழி விளக்கேற்றி முகுந்தனைத் தொழுத நன்னாடு'' என்று வில்லிபுத்தூரராழ்வாரின் திருக்குமாரரான வரந் தருவார் புகழ்ந்து கூறும்படியான முதலாழ்வர்கள் (பொய்கையார், பூதத்தார், பேயார்) மூவரும் பகவத் சொரூபத்தை நன்கறிந்து அநுபவித்து ஆநந்தப் பெருக் கெய்தின வரலாற்றை நெஞ்சிற்கொண்டு திருக்கோவலூரைப் பாடினாள் என்க. இவ்விடத்து இன்சுவை மிக்க வியாக்கியான வாக்கியம் காண்மின்: ''ஆச்ரிதர் வந்து கிட்டினால் பின்னே அவர்களோடு முறையழியப் பரிமாறுகையன்றியே தானே மேல் விழுந்து சமஸ்லேஷத்த இடமாயிற்று திருக்கோவலூராகிறது. அவர்கள் மழை கண்டு ஒதுங்க அவர் களிருந்த விடத்திலே தானே சென்று தன்னை அவர்கள் நெருக்கத்தான் அவர்களை நெருக்க இப்படிப் பரிமாறி அவர்கள் போன விடத்திலும் அவ்விடத்திலே நிற்கிறானிறே 'வாசல் கடை கழியாவுள் புகா'(மு.திரு.86) என்று.

**ஆட :** திருத்தண்காலையும் திருக்குடந்தையையும் திருக்கோவலூரையும் வாயாரப் பாடினவிடத்திலும் மன நிறைவு பெறாமையாலே ஆடவும் தொடங்கினாள். இப்படி இவள் ஆடுகின்றபடியைக் கண்டும் பாடுகின்ற படிக் கேட்டும் அன்னை ''நங்காய் நம் குடிக்கு இதுவோ நன்மை?'' என்றாள்; அதாவது: ''சேத நலாபம் ஈசுவரனுக்குப் புருஷார்த்தமேயன்றி ஈசுவரலாபம் சேதநனுக்குப் புருஷார்த்தமன்றே; அவனுடைய பேற்றுக்கு அவன் தானேயன்றோ பதற வேண்டும்? நீ இங்ஙனம் பதறலாமா?'' என்றாள். இதனைச் சொன்ன தனையே ஏதுவாகப் பரகாநாயகி 'நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே?'

பெடையடர்த்த மடவன்னம்
 பிரியாது மலர்க்கமல
மடல் எடுத்து மது நுகரும்
 வயல் உடுத்த திருநறையூர்

என்ற ஊரிலே சேரப் பெறுவது எந்நாளோ? என்னா நின்றாள். தலைவலி போய் திருகுவலி வந்தது போலாயிற்று.

இந்த ஒன்பது பதிகங்களைத் தவிர;

10. 4. கண்ணனை அம்மம் உண்ண அழைத்தல்.
10.5. கண்ணனைச் சப்பாணி கொட்ட வேண்டுதல்.
10. 7. கண்ணனது செய்தியைக் குறித்து யசோதை பணித்தலும் ஆய்ச்சியர் முறையிடுதலும்

என்ற மூன்று பதிகங்களும் தாய்ப்பாசுரமாக வகைப்படுத்தினாலும் இவை யசோதைப் பிராட்டியினுடையனவயன்றிப் பரகால நாயகியினுடையவை அன்று.

# 18. மகள் பாசுரங்கள்

பெரிய திருமொழியில் மகள் பாவனையில் அமைந்த பதிகங்கள் பதினொன்று[1], திருநெடுந்தாண்டகத்தில் ஒரு பதிகம் (21-30) ஆக 12 பதிகங்களாகும். இவற்றுள் தூதுப் பதிகங்களாக நடைபெறும் பாசுரங்களை[2] அடுத்த இயலில் காண்போம். ஏனையவற்றை ஈண்டுக் காண்போம். மகள் பாசுரத்தின் தத்துவம் முன்னர் விளக்கப்பட்டது[3].

**1. திரிபுரம் மூன்று எரித்தானும் (2.8):** திருவிட எந்தைபற்றிய திருமொழியில் (2.7) ஆழ்வார் தாமான தன்மையை இழந்து பட்டபாடுகளைத் தாய் வாக்கு களாகக் கண்டோம்; தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமையைக் கண்ட தாய் இரங்குவதாக அமைந்த திருமொழி அது. இப்போது எம்பெருமான் இவ்வாழ் வாரை இப்படியா நாம் துடிக்க விட்டோம்! துடிப் பைத்தாமே முறையிட்டுக் கொள்ளும்படியாகவும் நாம் பிறபட்டோமே!' ஒன்று முடிமேல் மோதிக்கொண்டு அடி யார்கட்குத் தாம் உதவின குறைகளையும் பரம விலட் சணமான (தனித்தன்மையுடைய) வடிவழகையும் ஒளி விட்டுக் கொண்டு திருவட்டயபுயகரம் என்னும் கச்சித்

1. பெரி. திரு. 2.8; 3.6; 8.3; 9.2; 9.3; 9.4; 9.5; 10.10; 11.1: 11.2; 11.3.
2. பெரி. திரு. 3.6; 1,2,3,4; 9.4; 23; திருநெடுந்- 26.
3. இயல்-16.

திருப்பதியில் ஆழ்வார்க்குப் பரம போக்கியமான சேவை சாதித்தான் உருவெளித் தோற்றத்தில்; ஆழ்வாரும் பரகாலநாயகியின் நிலையிலேயே நின்று அப்பெருமானைச் சேவித்தார். என்றைக்கும் எங்கும் கண்டறியாத திருக்கோலமாக இருந்தது. அதனை மகள் பாசுரமாகக் கூறுவது இத் திருமொழி.

காதல் வெறி எத்தனையோ விதமாக உருவெடுக்கும். காரணமின்றி மகிழ்ச்சியும் எக்களிப்பும் உண்டாகும். துயரமும் துன்பமும் தலைக்காட்டும்; ஆறுதலும் ஆதரமும் தோன்றும். இன்னும் என்னென்னமோ செய்யும். கள்வெறியைவிடக் காதல் வெறி உறைப்புடையது; ஆற்றலுடையது. காதல் வெறி இராவணனையும் சூர்ப்பணகையையும் படுத்திய பாட்டைக் கம்பராமாயணம் படித்தோர் நன்கு அறிவர். இருவர் முறையே ஒரு தூணைச் சீதையாகவும் இராமனாகவும் காணும் காட்சியை மிகவும் அற்புதமாக, நகைச்சுவை தோன்றும் பாணியில், சித்திரித்திருக்கும் கம்பனின் கவித்திறமையை எவரும் மறத்தல் முடியாது.[4] காதல் வெறியைப் போன்றதே பக்தி வெறியும். பக்தியுணர்ச்சி முற்றிய நிலையில் அதன் விளைவு தனிச் சிறப்புடையது. அந்நிலயில் உருவெளித் தோற்றமாக அது செயல் புரிவதை ஆழ்வார் பெருமக்கள் அற்புதமாகக் காட்டியுள்ளனர். உருவெளித் தோற்றம் (Hallucination) என்பது என்ன? ஒரு பொருளைப்பற்றி இடைவிடாது நினைக்கின்ற முதிர்ச்சியில் நினைக்கப்பெற்ற பொருளின் உருவம் போலியாகக் கண்ணுக்கெதிரில் தோன்றுவதே உருவெளித் தோற்றம் என்பது. இந்த உருவெளித்தோற்றம் அன்பினாலும் நிகழும்; அச்சத்தினாலும் உண்டாகும். சூர்ப்பணகையினால் சீதாப்பிராட்டியின் அழகை விரிவாகக் கேட்டறிந்த இராவணன் அச்சீதையை இடைவிடாது நினைத்த கார

4. கம்பரா. ஆரணிய-மாரீசன்பதை 148, 149.

ணத்தால் தூண் ஒரு பெண்ணுருவமாகக் உருவெளித் தோற்றமாகக் காணப்பட்டது. அங்ஙனமே இராமனது அழகினில் ஈடுபட்டு அவனை அணைய வேண்டும் என்று எண்ணிய சூர்ப்பணகைக்கும் ஓர் ஆணுருவமாகத் தூண் காணப்பட்டது. இவை இரண்டும் அன்பினால் நிகழ்ந் தவை. இராவணன், தான் சீதையைக் கவரும் பொருட் டுத் தனக்கு உதவியாக, மாரீசனைப் பொன்மானாகச் செல்லுமாறு ஏவியபோது, மாரீசன் இருமுறை இராம னால் 'சூடு கண்ட பூனை'யாதலின், பார்த்தவிடமெங் கும் தனக்கு இராமனுருவம் தோன்றுவதாகக் கூறியது அச்சத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். இத்தகைய உரு வெளித் தோற்றத்தைத் தொல்காப்பியரும் 'நோக்குவன எல்லாம் அவையே போறல்' என்று ஒரு காதல் துறையாக வகுத்துக் காட்டுவர்.

அட்ட புயகரத்து எம்பெருமானைச் சேவித்த பரகால நாயகி கூறுகின்றாள்:

செம்பொன் இலங்கு வலங்கை வாளி
　　திண்சிலை தண்டொடு சங்கம் ஒள்வாள்
உம்பர் இருசுடர் ஆழி யோடு
　　கேடகம் ஒண்மலர் பற்றி, எற்றே!
வெம்பு சினத்து அடல்வேழம் வீழ,
　　வெண்மருப்பு ஒன்று பறித்து, இருண்ட
அம்புதம் போன்றவர் ஆர்கொல்! என்ன
　　அட்ட புயகரத் தேன்என் றாரே (3)

[இலங்கு-விளங்குகின்ற; வாளி-அம்பு; சிலை-வில்; வாள்-கத்தி; பற்றி-தரித்துக்கொண்டு; வெம்பு-சினம் மிக்க கோபம்; மருப்பு-தந்தம்; அம்புதம்-மேகம்]

என்பது மூன்றாவது பாசுரம். யாரோ பெரியவர் ஒருவர் சேவை சாதித்தார். பஞ்சாயுதங்களோடு கூடி, கண்ண

பிரானுடைய சிறுச்சேவகமும் திருமேனியழகும் தோன்று மாறு சேவை சாதித்தபடியை அநுபவித்துப் பேசுகின் றாள் ஆழ்வார் நாயகி. ''எதிரிகளை வெல்வதற்கும் என் னைப் போன்ற சிறுமிகளை வசப்படுத்திக் கொள்வதற்கும் உறுப்பாக திவ்வியயாயுதங்களை அணிந்து கொண்டு வந்தார்'' என்கின்றாள். ''ஓர் ஆபரணமும் இல்லா திருந்தாலும் திவ்விய சுந்தரமாய்த் திகழ்கின்ற திருக் கையிலே திவ்வியாயுதங்களையும் ஏந்திக்கொண்டுவந்து நின்றார் என்கின்றாள். அட்ட புயனாகையாலே எட்டுத் திருக்கைகளிலும் எட்டுப் பொருள்களைத் தரித்துக் கொண்டு வந்தமையைக் குறிப்பிடுகின்றன முன்னிரண்டு அடிகள்.

எதிரே வந்து தோற்றினவருடைய சொரூப சுபாவங் கள் ஆழ்வாருக்குத் தெரியாதிருந்தால் 'இவர் யார் கொல்?' என்று வினவலாம். 'செம்பொன் இலங்கு'என்று தொடங்கி 'இருண்ட அம்புதம் போன்றவர்' என்ற வரை மூன்றரை அடிகளால் அவருடைய சொரூபசுபாவங் களைச் சொல்லி வைத்து, 'இவர் ஆர்கொல்?' என்று வினவுவது பொருந்துமோ? எனின்: ''அடையாளம் சொல்லா நிற்கச் செய்தே நிச்சயிக்க வொண்ணாதபடி யிறே விஷய ஸ்வபாவம்!'' என்ற பெரியவாச்சான்பிள்ளை யின் வியாக்கியான சூக்தியில் விடைகாணலாம். அசாதா ரண இலட்சணங்களைத் தெரிந்து கொண்டபின் இன்னா ரென்றறியாமை என்று ஒன்று உண்டோ? என்று பலர்க் கும் நெஞ்சில் கலக்கமாகவே இருக்கும். ஆழ்வாருடைய நிலைமை வாய்த்தாலன்றித் தெளிவு பிறவாது; என் செய் வோம்? 'எதிரே வந்து தோன்றுகின்ற இவருடைய இலட் சணங்களைப் பார்த்தால் இவர் எம்பெருமானாயிருக்கக் கூடும்' என்று நினைக்க முடிகின்றது. ஆனால் 'நற்பேறு அற்றவர்களான நமக்கு அவர் இவ்வளவு எளிதாகச்சேவை சாதிக்க பிராப்தி இருக்க மாட்டாதே' என்று நம்முடைய

தண்மையை (தாழ்வை) நினைத்துக் கொண்டால் 'வேறு யாரேனும் ஒருவரோ இவர்' என்று ஐயுற இடம் உண்டா கின்றது - என்பதாகக் கொள்ளலாம்.

'அம்புதம் போன்றிவர் ஆர்?' என்று அவரையே முகம் நோக்கிக் கேட்க முடியாமல் தலைகுனிந்து வேறொருவரை நோக்கிக் கேட்பதுபோல் 'இவர் ஆர் கொல்?' என்று நான் கேட்டேன்; அதற்கு அவரே 'நான் அட்டபுயகரத்தேன்' என்று மறுமொழி கூறினர்' என்கின் றாள் பரகால நாயகி. 'நான் அட்டபுயன் என்றே எம் பெருமான் மறுமொழி கூறியிருக்கலாம்; தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பது போல் இவ்வாறு ஏன் சொன்னான்? என்ற வினா பிறக்கும்; அதற்கு விடை : 'நான் அட்ட புயன்' என்று சொல்லிக் கொண்டால் தன்னை எம்பெரு மானாகத் தானே வெளியிட்டதாக விளங்கிவிடும். அப்படித் தெளிவாகச் சொல்லிக்கொள்ள எம்பெருமா னுக்குத் திருவுள்ளம் இல்லை; வேறு மனிதனாகப் பொய் சொல்லிக் கொள்ளவும் விருப்பம் இல்லை; ஆகவே வெகு சாதுர்யமாகச் சொல்லிக் கொள்ளுகின்றான் 'அட்டபுய கரத்தேன்' என்று : 'அஷ்டபுய க்ஷேத்திரத்திற்கு நான் அதிபதி' என்றதாகவுமாம். 'அஷ்டபுஜ க்ஷேத்திரத்திலே கிடப்பானொருவன் நான்' என்று சாமர்த்தியமாகச் சொல்லிக் கொண்டதாகவுமாம்.

இங்ஙனம் இத்திருமொழி பரகால நாயகி தன் தாய்மார்க்கும் தோழிமார்க்கும் நடந்த வரலாறு சொல்லுவதாக அமைந்துள்ளது.

**2. தூவிரிய மலருழக்கி** (*3.6*) : முதல் நான்கு பாசுரங்கள் தூதுரைப்பன. இவை அடுத்த இயலில் (இயல்-19) **விளக்கம்** அடைகின்றன. ஏனையவை வயலாளி எம்பெருமானை நோக்கி ஆழ்வார் நாயகி தமது

ஆற்றாமையைத் தாமே சொல்லிக் கதறுவன. அவற்றுள் ஒரு பாசுரம்.

நிலையாளா நின்வணங்க
வேண்டாயே யாகிலும்என்
முலையாள ஒருநாளுன்
அகலத்தால் ஆளாயே
சிலையாளா மரம்எய்த
திறலாளா! திருமெய்ய
மலையாளா! நீயாள
வளையாள மாட்டோமே (9)

[நிலை ஆள ஆ - நிலைபெற்ற அடிச்சியாக; ஒருநாள் - ஒரு நாளாகிலும்; அகலம் - மார்பு; ஆளாய் - அணைத்தருள வேண்டும்; சிலை-வில்; மரம் - ஏழுமரா மரம்; திறலாளா - பெருமிடுக்கனே]

என்பது ஒன்பதாம் பாசுரம். 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்' (திருவாய் 3. 3: 1) என்றும், '''நியதமும் அத்தாணிச் சேவகமும்' என்றும் சொல்கிறபடி ஆற்றல் உள்ள வரைக்கும் உன் திருவடிகட்கு ஆளாய் இருக்க வேண்டியதே கடமை; ஆனாலும் இங்ஙனம் நீ திருவுள்ளம் பற்றினாலன்றி இந்த நித்திய கைங்கரியம் கிடைக்க மாட்டாதன்றோ? என்னை நித்திய கைங்கரியத்திற்கு ஆளாக்கிக் கொள்ளத் திருவுள்ளம் இல்லையெனினும் ஒரு நாளாகிலும் உன் திருமேனியை எனக்குத் தரலாகாதோ? இதுவும் நீ செய்ய மாட்டாயாகில் ஆர்த்தர்களை இரட்சிப்பதற்காகக் கையிலே வில் பிடித்துக் கொண்டிருப்பது எதற்காக? சுக்கிரீவனுக்கு நம்பிக்கையுண்டாக்குவதற்காக மராமரங்கள் ஏழையும் துளைத்த மிடுக்கையுடையவனென்று உன்னைப் புகழ்வது எதற்காக? திருமெய்யத்

திலே 'சத்தியேசன்' என்று பெயர் படைத்திருப்பது எதற்காக? நான் ஒருத்தி வாழும்படி காரியம் செய்ய மாட்டாத உனக்கு இப்புகழ் எல்லாம் பொருந்துமோ?'' என்கின்றாள்.

**3. கரையெடுத்த சுரிசங்கும் (8. 3) :** திருமொழி *8. 1, 8. 2* ஆகிய இரண்டும் திருக்கண்ணபுரத்து எம் பெருமான்மீது எழுந்த தாய்ப்பாசுரங்கள்; தம் மகள் கண்ணபுரத்தெம்பெருமானை சம்லேஷிக்க(புணர)விரும்பி அது நிறைவேறாமையால் அவள் வாய் வெருவுவதைக் கண்டு அதுபற்றித் திருத்தாயார் பேச்சாக வெளிவந்தது; கைவளை கொள்வது தக்கதே? (8. 2: 1) என்று திருத் தாயார் கண்ணபுரத்துச் சௌரிராஜப் பெருமாளை நோக்கிக் கேட்ட தலைமகள் உணர்ந்து தன் கையை நோக்கினாள்; கைவளைகள் காணப்பெறவில்லை; 'அந்தோ! வளை இழந்தேனே!' என்று ஒருகால் சொன்னாற்போலே ஒன்பதின்காற் சொல்லிக் கதறுகின்றாள்.

கரைஎடுத்த சுரிசங்கும்
கனபவளத்து எழுகொடியும்
திரைஎடுத்து வருபுனல்சூழ்
திருக்கண்ண புரத்து உறையும்
விரைஎடுத்த துழாய்அலங்கல்
விறல்வரைத்தோள் புடைபெயர
வரைஎடுத்த பெருமானுக்கு
இழந்தேன்என் வரிவளையே (1)

[கரை - ஒலி; சுரி - வளைந்த; கனம் - செறிந்திருக்கின்ற; எழு - வளர்ச்சியையுடைய; திரை - அலை; புனல் - நீர்; விரை - வாசனை; அலங்கல்- மாலை; வரை - மலை; வரிவளை - அழகிய வரிவளை ]

என்பது முதற் பாசுரம். இதனையடுத்த எட்டுப் பாசுரங்களும் 'இழந்தேன் என் வரிவளையே' என்று இறுகின்றன. ''பண்டு இந்திரனால் ஆயர் பெருமக்களுக்கும் ஆநிரைகட்கும் நேர்ந்த கல்மாரித் துன்பத்தைக் கோவர்த்தன மலையைக் குடையாகத் தூக்கி நிறுத்தி நீக்கின ஆபத்பந்துவன்றோ? அஃது என்றைக்கோ நடைபெற்றது என்று நினைக்க வேண்டாதபடி இன்றைக்கும் அப்படிப்பட்ட திருக்குணங்களை விளங்கக் காட்டிக் கொண்டு திருக்கண்ணபுரத்தில் நித்திய சந்நிதி பண்ணி இருக்கின்றானன்றோ? இப்படிப்பட்ட பெருமான் நம்மைக் கைவிடமாட்டான் என்று விச்வஸித்து (நம்பி) அவன் பக்கலிலே ஆசைவைத்ததற்குப் பலன் வளை இழக்கலாயிற்றே!'' என்று வருந்துகின்றாள் பரகால நாயகி. இத் திருமொழி முழுவதும் 'தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறுவதாக' அமைந்துள்ளது.

4. **பொன் இவர் மேனி (9. 2)**; திருநாகை எம்பெருமான் சௌந்தரியராஜன்மீது எழுந்தது இத் திருமொழி. தலைவனது உருவெளிப்பாட்டில் நலியும் தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்தது. திருக்கண்ணங்குடியிலிருந்து திருநாகைக்கு எழுந்தருளின ஆழ்வாரைச் சொல்லுக்கு எட்டாத எம்பெருமானின் வடிவழகு ஈர்க்கின்றது. அவ்வழகில் நெஞ்சைப் பறிகொடுத்த ஆழ்வார் தம் ஆண்மைத் தன்மையை இழந்து பெண்மை நிலை எய்திப் பரகால நாயகியாகின்றார். தன்னை ஈடுபடுத்தின அழகையும் மற்றும் நடைபெற்ற செய்திகளையும் தோழியிடம் கூறித் தரிக்கின்றதாகப் பாசுரங்களிட்டுப் பேசுகின்றார்.

திருக்கோயிலினுட் புகுந்து சௌந்தரியராஜனைச் சேவிக்கின்றாள் பரகால நாயகி. என்றைக்கும் எங்கும் கண்டறியாத திருக்கோலம் கொண்டிருந்தான் எம்பெருமான். அப் பெருமானை இன்னானென்று அறிய

மாட்டிற்றிலள். முகத்தை நேரே பார்த்து முன்னிலை யாக்கிச் சொற்கள் கூற முடியாதபடி சோதி வெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது. அதனால் அப்பெருமா னுடைய ஒப்புயர் வற்ற வடிவழகையும் திவ்விய அணிகள் திவ்விய ஆயுதங்கள் இவற்றின் பொருத்தங்களையும், சிருங்கார விலாசங்களையும், மற்றும் கண்ட அதிசயங் களையும் தன் தோழியிடம் சொல்லி வியக்கின்றாள்.[5]

பொன்இவர் மேனி;மரக தத்தின்
    பொங்கிளஞ் சோதி அகலத்து ஆரம்
மின்;இவர் வாயில்நல் வேதம் ஓதும்
    வேதியர்; வானத்து ஆவர்; தோழி!
என் னையும் நோக்கிஎன் அல்குல் நோக்கி
    ஏந்துஇளம் கொங்கையும் நோக்கு கின்றார்;
அன்னைஎன் நோக்கும்என்று அஞ்சு கின்றேன்
    அச்சோ ஒருவர் அழகி யவா! (1)

[மேனி-உடல்; அகலம்-மார்பு; ஆரம்-மாலை; அல்குல்-நிதம்பம்; அச்சோ - ஆச்சரியம்]

என்பது முதற் பாசுரம். ''தோழீ! நான் பெற்ற பேறே பேறு; அந்தோ! இழந்தாயே! நீ காணப் பெற்றிலையே!'' என்கின்றாள் பரகால நாயகி தோழியை நோக்கி. ''நங் காய்! என்ன அற்புதம் காணப் பெற்றாய்? விரித்துரை யாய்'' என்று வினவுகின்றாள் தோழி.

நடைபெற்றவற்றை நவில்கின்றாள் நாயகி. திவ்வி யாத்தும சொரூபம், திவ்விய குணம் முதலானவற்றை யெல்லாம் விட்டு முந்துற முன்னம் திவ்விய மங்கள விக்கி ரகத்திலே தன் நெஞ்சு பறியுண்டமை தோன்றச் சொல்லு

5. அர்ச்சை வடிவாக இருந்த எம்பெருமான் ஆழ்வார் நாயகிக்கு உருவெளித் தோற்றமாகக் காட்சி அளித்தான் போலும்!

கின்றாள்: 'பொன் இவர் மேனி' என்கின்றாள். இவருடைய வடிவைப் பார்த்தவாறே ''சுட்டு உரைத்த நன் பொன் உன் திருமேனி ஒவ்வாது'' (திருவாய் 3.1:2) என்கின்றபடியே நன்றான பொன் என்னலாம்படி இரா நின்றது. பொன்னிறம் போன்ற நிறமுடையவளான பிராட்டியின் இடைவிடாத நித்திய சேர்க்கையினாலே எம்பெருமானுடைய கரிய திருமேனியும் அப்படியே பொன்னிறமாக ஆய்விடுகின்றது.

உண்மையான உருவத்தின் நிறம் அடுத்து பேசப்பெறுகின்றது. ''மரகதத்தின்'' என்று தொடங்கி 'மரகதப் பச்சையின் சோதி போன்ற சோதியையுடைத்தான திருமார்பிலணிந்த திருமாலை மின்னல் போல் இரா நின்றது' என்கின்றாள். இதனால் சமுதாய சேரபைபற்றிப் 'பொன் இவர் மேனி' என்றது என்பது விளங்கும். பசுமை, நீலம், கருமை என்னும் நிறங்களை வேற்றுமை பாராட்டாது கூறுவது கவிமரபாதலால் எம்பெருமானுடைய காள மேகத் திருவுருவத்திற்கு மரகதப் பச்சையை உவமை கூறினது பொருத்தமாகின்றது. காணப்புக்கவர்களின் கண்ணையும் நெஞ்சையும் குளிர்வித்து அவர்களுடைய சம்சார தாபங்களையெல்லாம் போக்குந்தன்மையும் இதில் தொனிக்கும்.

இவர் மேனி பொன்; மரகதத்தின் பொங்கிளஞ்சோதி அகலத்து ஆரம் மின் என்று இரண்டு வாக்கியங்களாகக் கொள்வதன்றி இவர் பொன்; மேனி மரகதத்தின் பொங்கிளஞ்சோதி; அகலத்து ஆரம்மின் - என்று மூன்று வாக்கியங்களாக நிர்வகிப்பார் பிள்ளையமுதனார்.

''இவருடைய மேன்மையைப் பார்த்தால் தேவர்களோடொக்கச் சொல்லலாம்படி இருந்தார். ஆகவே 'வானவர் ஆவர்''' என்கின்றாள் ''வடிவழகைப் பார்த்தாலோ அரசர்களுடன் ஒப்பிட்டுச் சொல்லலாம்; பேசு

கின்ற பேச்சைப் பார்த்தால் வேதம் ஓதும் வைதிக அந்தணர்களுடன் ஒப்பிட்டுச் சொல்லலாம்; ஆகவே 'நல் வேதம் ஓதும் வேதியர்' என்று கூறலாம். எனவே, இன்னாரென்று அறுதியிட்டுச் சொல்ல முடிய வில்லையே தோழீ'' என்கின்றாள்.

தோழியானவள் தலைவியை நோக்கி, ''அஃது இருக்கட்டும். நீ அவரை ஏறிட்டு நோக்கினாயா? அவர் நின்னை நோக்கினது உண்டோ?'' என்று வினவ, அதற்கு அவள், ''கேளாய்; அதனையும் சொல்லுகின்றேன்'' ''என்னையும் நோக்கி, என் அல்குலும் நோக்கி ஏந்திளங் கொய்கையும் நோக்குகின்றார்'' என்கின்றாள். ''மர்மங்களில் கடாட்சியா நின்றார்; பார்த்த பார்வை ஒரு கால் மாற வைத்திலர்'' என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம்.

'நம்மைப் பாங்காக அநுபவிப்பதற்குறுப்பான பக்தி இவ்வாழ்வார்க்கு முதிர்ந்ததோ? என்று எம்பெருமான் ஆராய்ந்ததாகச் சொல்லியதாக இதனைக் கொள்ள வேண்டும். போகத்திற்குக் கொங்கை முதலிய உறுப்புகள் எப்படி இன்றியமையாதனவோ அப்படியே பகவதநுபவத்திற்குப் பரபக்தி, பரஞானம், பரமபக்தி நிலைகள் இன்றியமையாதனவாதலால் உள்ளுறையில் — அவற்றைப் பொருளாகக் கொள்ளல் வேண்டும்.

''அவர் நின்னை நோக்கின போது நீ செய்ததென்?'' என்று தோழி வினவ, ''அன்னை என்னை நோக்கும் என்று அஞ்சுகின்றேன்'' என்கின்றாள் தலைவி. ''அவர் பார்த்த பார்வையெல்லாம் எனக்குப் பெருமகிழ்ச்சியாக இருந்தது; ஆனால் இந்த நிலைமையை நம் தாய் காண்பாளாகில் என்ன பாடு படுத்துவளோ? என்று அஞ்சி நிற்பதே என் கருமமாயிற்று'' என்கின்றாள். ''நான் பதறி மேல் விழுவேன்; இதனைத்தாய் நோக்கினாலாகில் என்னாகுமோ?' என்று அஞ்சி ஒழிந்தேன்'' என்பது குறிப்பு.

5. **தன்னை நைவிக்கிலேன் (9.3):** சென்ற திருமொழியோடு திருமங்கையாழ்வார்க்குச் சோழ நாட்டுத் திருப்பதிகளின் அநுபவம் தலைக் கட்டிற்றாயிற்று. இனி, பாண்டி நாட்டுத் திருப்பதிகள் சிலவற்றின் அநுபவத்தில் ஆவல் கொண்டவராய் முதன்முதலாகத் திருப்புல்லாணியை அடைகின்றார். இரண்டு திருமொழிகளால் இத்திருப்பதியை அநுபவிக்கின்றார். திருநாகைப் பதியின் அநுபவத்தில் வந்து புகுந்த நாயகி பாவனை மீண்டும் தொடர்கின்றது. 'பிரிந்தவர்கள் இரங்குவது கடற்கரையிலே' (நெய்தல் திணை) என்பது தமிழ் அகத் திணை மரபு. திருப்புல்லாணி கடற்கரையில் அமைந்த தலமாதலின் நாயகனைப் பிரிந்து வருந்தும் நாயகியின் பாசுரமாகச் செல்லுகின்றது இத் திருமொழி.

'தலைமகன் தானே வந்து கூடுவான் என்று இதுவரை ஆற்றியிருந்ததுபோதும். இருந்தவிடத்தில் இருந்து கொண்டு உருகுவதால் யாது பயன்? அவன் மன்னியிருக்கும் புல்லாணியைப் போய்த் தொழுவோம்' என்று துணிந்து நெஞ்சையும் தோழியையும் துணை வேண்டிக் கூறுவதாகச் செல்லுகின்றது இத்திருமொழி.

தன்னை நைவிக்கிலென்
  வல்வினையேன் தொழுதும்எழு
பொன்னை நைவிக்கும்
  அப்பூஞ்செருந்தி மணநீழல்வாய்
என்னை நைவித்து
  எழில்கொண்டகன்ற பெருமானிடம்
புன்னை முத்தம் பொழில்சூழ்ந்து
  அழகாய புல்லாணியே (1)[6]

---

6. 'தன்னை நைவிக்கிலேன்' என்ற பாடம் எங்கும் வழங்கி வந்தாலும் அதுசரியான பாடம் அன்று. பாசுரத்தில் காட்டப் பெற்றுள்ள பாடமே

[வினை-பாவம்; நைவிக்கும்-தோற்கடிக்கவல்ல; செருந்தி-சுரபுன்னை; நீழல்வாய்- நிழலில்; அகன்ற-பிரிந்து சென்ற; முத்தம்-முத்து அரும்பின; பொழில்-சோலை]

என்பது முதற் பாசுரம். 'அந்தோ! இப்பொழுதும் உயிர் உடலை விட்டுப் போகமாட்டேன் என்கின்றதே! தலைவனைப் பிரிந்து நோவுபடும் இவ்வுயிர் ஏதுக்கென்று நைந்து கொண்டிருப்பதனால் என்ன பலன் உண்டு?'' என்பது முதலடியின் பொருள். 'இந்த நிலைமையில் நான் உயிரைத் துறந்து நித்தியானந்தம் அநுபவிக்க வேண்டியிருக்க, அது செய்யாமல் வருந்தி சீவித்திருக்கும் படியான மாபெரும் பாவத்தைப் பண்ணினேன்' என்பாள் **'வல்வினையேன்'** என்கின்றாள். ''வனவாசம் சென்ற இராமபிரான் பதினான்கு ஆண்டுகள் கழித்து மீண்டு வரும் அளவும் எப்படியாவது உயிர் தரித்திருந்து காண வேண்டும் என்று பாரித்த தசரத சக்கரவர்த்திக்கு உயிர் தானாகப் போயிற்று; 'உயிர் ஒழிந்தால் நல்லது' என்றிருக்கின்ற எனக்கு உயிர் தொலையாமை என்ன பாவமோ?'' என்கின்றாள்.

''முடிந்து பிழைப்போம் என்று பார்த்தால் முடியப் பெறுகின்றிலோம்; இனி உயிரை நோக்கிக் கொள்வதற்கு ஒரு பற்றாசு வேண்டுமே; அதற்காகத் 'திருப்புல்லாணியைத் தொழுவோம்'' என்கின்றாள். மேலே (9-ஆம் பாசுரம்) இரண்டாம் அடியாலும் மூன்றாம் அடியாலும் 'நம்மோடு கலந்து பிரிந்து போன பெருமான் உறையும் தேசம்' என்பது பெறப்படுகின்றது. செருந்தி—சுரபுன்னை.

---

சுத்தமானது. அடுத்த பாசுரத்தின் 'உருகி நெஞ்சே! நினைந்து இங்கு இருந்தேன் (2), 'எள்கி நெஞ்சே நினைந்திங்கிருந்தேன் (6) என்பவற்றோடு 'தன்னை நைவிக்கிலேன்' என்ற பாடமே நன்கு பொருந்தும்.

அதன் மலர்களும் மகரந்தமும் பொன்னிறமாக இருக்கு மாதலால் 'பொன்னை நைவிக்கும் அப்பூஞ் செருந்தி' எனப்பட்டது. ''நிறமும் மணமும் நிழலும் இவையெல்லாம் உண்டாயிருக்கிறபடி. ஒரு புலன் கொண்டு ஒதுங்க நிழல் இல்லை. எல்லாப் புலன்களையும் ஈர்க்கத் தக்க திறன் வாய்ந்த தேசம். கட்புலனுக்கு நிறம்; முகரும் புலனுக்கு மணம்; தொடுபுலனுக்கு நிழல்'' என்ற வியாக்கியானம் கண்டு மகிழத்தக்கது. ''அழகிய நிறமும் மணமும் உடைத்தான புன்னைப் பொழிலின் நிழலிலே கலந்து என் மேனி நிறத்தைக் கொள்ளை கொண்டு என்னை வெறுந் தரையாக்கிவிட்டு அகன்று போன பெருமான் உறையும் இடமான திருப்புல்லாணியைத் தொழுவோம் நெஞ்சே! புறப்படு'' என்கின்றாளாயிற்று. ''அவன் வஞ்சக் கள்வன் மாமாயனாலே தன் காரியத்தைச் செய்தான்; நாம் சேஷபூதராகையாலே நம் காரியத்தைச் செய்வோம் — சென்று தொழுவோம்'' என்பது குறிப்பு.

இத் திருமொழியின் ஒன்பதாம் பாசுரத்திலும் அதன் தீயிகை உரையிலும் ஆழங்கால் பட்டு அநுபவித்து மகிழ வேண்டும்.

6 **காவார் மடற்பெண்ணை (9.4)**: திருப்புல்லாணி வரை சென்று தொழ வேண்டும் என்றாள் பரகால நாயகி முன் திருமொழியில்; முயற்சி பயன்படவில்லை; கால் நடைதாராதபடி தளர்ச்சியுண்டாயிற்று. ஆகவே கண்ணிற்கண்ட பறவைகளைத் தூதுவிடுவது (2, 3 பாசுரங்கள்)[7], முன்புள்ளார் நோவுபட எம்பெருமான் அவர்களுக்கு உதவினபடியைச் சொல்லுவது, உறவினருடைய இத வார்த்தைகளைக் கேளாதபடியான நிலைமை பிறந்தமையைச் சொல்லுவதாய்ச் செல்லுகிறது இத்திருமொழி.

---

7. தூதுவிடுவது இயல் 19-ல் விளக்கப் பெற்றுள்ளது. ஆண்டுக் கண்டு கொள்க.

காவார் மடற்பெண்ணை
அன்றில் அரிகுரலும்
ஏவாயின் ஊடியங்கும்
எஃகிற் கொடிதாலோ?
பூவார் மணங்கமழும்
புல்லாணி கைதொழுதேன்
பாவாய்! இதுநமக்கோர்
பான்மையே ஆகாதே (1)

[கா ஆர் - சோலையெங்கும்; பெண்ணை - பனை மரம்; அரிகுரல் - தழுதழுத்த குரல்; ஏவாயில் - அம்புபட்ட புண்வாயில்; பாவாய் - தோழியே; பான்மை - சுபாவம்]

என்பது முதற் பாசுரம். ''தோழீ, திருப்புல்லாணியைச் சென்று தொழுவோம் என்று ஆசைப்பட்டிருந்த நமக்குத் துன்பப்படுவதே பலனாகத் தேறிற்றே! எஞ்ஞான்றும் துயருற்றிருப்பதே நமக்குத் தொழிலாயிற்றே!'' என்று வருந்திக் கூறுகின்றாள் பரகால நாயகி.

இந்தப் பாசுரத்தின் முதலடிக்குப் பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியான சூக்தி : ''தார்மிகரா இருப் பார் வைத்த தண்ணீர்ப் பந்தலிலே வழியடிக்காரர் ஒதுங்குமாப்போலே, மடலெடுத்தாகிலும் பிழைக்க நட்ட பனையிலே அன்றில் வந்து குடி புகுந்தது'' என்பது. **விளக்கம் :** நீர்வேட்கையுடையார் தண்ணீர் பருகி களைப்பு தீர்ந்து போகட்டும் என்று வள்ளண்மை மிக்கோர் தண்ணீர்ப் பந்தல் வைத்தால், வழிப்பறி செய்யும் கள்ளர்கள் அதிலே வந்து தங்கியிருந்து, வருகின்ற வர்களை நலிவுமாப்போலே, காதலர்கள் மடலூர்ந்தாகி லும் அபிமதம் (அன்பு?) பெற்று வாழ்ந்து போகட் டும் என்று (பனை மடல்களின் மிகுதிக்காக) வளர்த்து வைத்த பனந்தோப்பிலே அன்றிற் பறவைகள் வந்து

குடிபுகுந்து தழுதழுத்த தம் குரலினால் கொலை செய்கின்றனவே'' என்கின்றாள்.

**மடலூர்தல் :** தொல்காப்பியத்திலும் அகத்திணை இலக்கியங்களிலும் காதலர்களிடம் காணப்பெறும் - அவர்கள் கையாளும் - ஒருவித இலக்கிய மரபு. இதனைப் பரகால நாயகி இறைவன்பாற் காதல் கொண்டு இம் மரபினைக் கையாள நினைக்கின்றாள். நாயகனை ஒரு படத்தில் எழுதி, வைத்தகண் வாங்காமல் அதைப் பார்த்துக் கொண்டு மலர்கள் சந்தனம் முதலிய போகத்திற்குரிய பொருள்களை நஞ்சாக உதறித் தள்ளிவிட்டு, எருக்கம்பூ மாலையைச் சூடிக்கொண்டு, ஊணும் உறக்கமும் நீராடலும் இன்றி, தலைமயிரை விரித்த நிலையில் பனங்கருக்கலான ஒரு குதிரையேறி நான்கு தெருக்கள் கூடும் சந்திக்கு வருவார்கள் காதலர்கள். வந்து ''இன்ன படுபாவி என்னைக் காக்காமல் கைவிட்டான்; அவன் கண்ணற்றவன்; அவனிலும் விஞ்சிய கொடியவன் இல்லை; பல திருத்தலங்களில் அவன் சந்நிதி பண்ணி அடியாரைக் காக்கின்றான் என்பதும் இராமகிருஷ்ணாதி அவதாரங்களினால் பலரைக் காத்தான் என்பதும் முழுப் பொய்யான உரைகள்'' என்று கதறிக் கொண்டு கேட்டாரெல்லாரும் நடுங்கும் படியும் இரக்கம் கொள்ளும்படியும் திரிந்துழல்வதே மடலூர்தல் என்பது. இப்படிப்பட்ட முறையைக் கையாண்டாகிலும் எம்பெருமானை அணையப்பெறலாம் என்று கருதினாள் பரகால நாயகி. பனைமடல் கொள்ளுதற்காகப் பனை மரத்தருகில் சென்ற பொழுது அன்றிலின் அரிகுரலைச் செவியுற்றுக் கூறினாள் போலும்.

**அன்றில் :** அன்றில் என்பது ஒரு பறவை. அது பெரும்பாலும் பனைமரத்தில் வாழும். அது எப்பொழு

தும் ஆணும் பெண்ணும் வாயலகுகளைக் கோத்துக் கொண்டு இணை பிரியாது நிற்கும்; கணப்பொழுது ஒன்றை விட்டுப் பிரிந்தாலும் — வாயலகுகள் நெகிழ்ந்து விடுபட்டுப் பிரிந்தாலும், அப்பிரிவுத் துயரைப் பொறாமல் ஒன்றையொன்று ஒன்றிரண்டு முறை குரலெடுத்துக் கூவி அதன் பின்பும் தனதுணையைக் கூடாவிடில் இறந்து படும்; இப் பறவையை வட நூலார் 'கிரௌஞ்சம்' என்பர் ஆணும் பெண்ணுமான அந்த அன்றிற் பறவை இணை பிரியாமல் நெருங்கி ஒன்றோடொன்று வாயலகைக் கோத்துக்கொண்டு உறங்கும்பொழுது அவ்வுறக்கத்தில் வாயலகு தானாக நெகிழ்ந்தால் உடனே துயிலுணர்ந்து அந்த நெகிழ்ச்சியையும் பொறாமல் மெலிந்து பெருந்தொனியாகக் கூவுகின்ற மிக இரங்கத்தக்க சிறுகுரல் காதலர்களிடம் பரிவுத் துயரை வளர்த்து அவர்களை மிகவும் வருத்துவதாகக் கூறுவர். இந்த ஆழ்வார்,

> முன்னிய பெண்ணைமேல்
>     முள்முளரிக் கூட்டகத்து
> பின்னும் அவ்வன்றில்
>     பெடைவாய்ச் சிறுகுரலும்
> என்னுடைம நெஞ்சுக்குஓர்
>     ஈர்வாளாம்
>
> —பெரி. திருமடல். 46

என்று பெரிய திருமடலிலும் குறிப்பிடுவர்.

7. **தவள இளம் பிறை (9. 5)**: திருப்புல்லாணியில் இருந்த நாயகிபாவனை திருக்குறுங்குடியிலும் தொடர்கின்றது. திருப்புல்லாணியிலிருந்த நெஞ்சு திருக்குறுங்குடிக்குச் சென்றதேயன்றி, ஆற்றாமையால் உடல் அங்குச் செல்லவில்லை. கால் நடை தாராமையால் அங்குச் செல்ல முடியவில்லை; பாதகப் பொருள்கட்கு

ஈடுபட்டுக் கண்ணுறக்கம் கொள்ளாமல் துடிக்கும் படியா யிற்று தோழிமார் தாயார் முதலியோரை நோக்கி "மங்கைமீர், நான் இங்ஙனம் துடித்திருப்பது தகுதியோ? திருமால்தான் இரங்கியருளாதொழியினும் நீங்களாகிலும் இரங்கலாகாதோ? இங்கு எனக்கு இந்நிலையில் பிரதி கூலமாக இருக்கும் பொருள்கள் யாவும் அநுகூலமாக இருக்கும் இடத்தில் என்னைக் கொண்டு சேர்க்க லாகாதோ? தனியாக இருக்தும் என்னைத் துன்புறுத்தும் பொருள்கள் யாவும் அவனும் நானும் சேர்ந்திருக்கும் இடத்தில் அநுகூலமாகுமன்றோ? அங்ஙனம் ஆகும்படித் திருக்குறுங்குடியில் என்னைக் கொண்டு சேர்த்து விடுங் கள்" என்று வேண்டுகின்றாள்.

திண்திமில் ஏற்றின் மணியும், ஆயன்
தீங்குழல் ஓசையும் தென்றலோடு
கொண்டதோர் மாலையும், அந்தி ஈன்ற
கோலஇளம்பிறை யோடு கூடி
பண்டைய அல்ல இவைநமக்கு;
பாவியேன் ஆவியை வாட்டம் செய்யும்;
கொண்டல் மணிநிற வண்ணர் மன்னும்
குறுங்கு டிக்கே என்னை உய்த்திடுமின் (5).

[திமில்-முசுப்பு; ஆயன்-இடையன்; கோலம்-அழ கிய; ஆவி-உயிர்; கொண்டல்-மேகம்; மன்னு-பொருந்தி வாழப்பெற்ற].

என்பது ஐந்தாம் பாசுரம். இத்திருமொழியின் பாசுரங்கள் யாவும், 'குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்' என்றே முடிகின்றன. 'உய்த்திடுமின்' என்ற முன்னிலை ஏவல் பன்மை வினைமுற்றுக்கு ஏற்ப பாசுரந்தோறும் 'அன்னை மீர்' என்றோ 'தோழி மீர்' என்றே விளி வருவித்துக் கொண்டு பாசுரத்திற்குப் பொருள் காணல் வேண்டும்.

காளையின் மணியோசை, தென்றல் காற்று, மாலைப் பொழுது, இளம்பிறை ஆகிய இவை பிரிவாற்றாமையால் வருந்தும் காதலர்களை மேலும் வருந்தச் செய்யும். எரி கின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற் போன்ற நிலை யாக வடிவெடுக்கும். "இவை பலகாலும் நம்மை வருத்தி யிருந்தாலும் இப்போது வருத்துவனபோல் இதற்கு முன்பு ஒருநாளும் செய்யவில்லை; இவை ஒவ்வொன்றும் தனியாக நின்று கொலை செய்யப் போதுமானவை; கூட் டமாக வந்து இன்று நலிவதை அந்தோ! பொறுக்க முடிய வில்லை. சாதாரணப் பொருள்களை ஆசைப் படாமல் 'உயர்வற உயர்நலமுடையவனாய், அயர்வறும் அமரர் கள் அதிபதியானவனை' ஆசைப்படும் படியான பாவத் தைப் பண்ணினேன். என்னுடைய ஆவி இனித் தரிக்க விரகில்லை; நான் வேண்டும் என நீங்கள் நினைத்தால், திருக்குறுங்குடியில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்; அங்கே எழுந்தருளியிருக்கின்ற கொண்டல் மணிவண்ணரைக் கண்டவுடன் என் வாட்டமெல்லாம் தீரும்; மேகத்தையும் மணியையும் கண்ட பின்னரும் வாட்டம் நிற்குமோ? ஆகவே, பாதகப் பொருள்களின் வசத்திலே அகப்பட்டு நான் நலிவு படாமல் இவையெல் லாம் அநுகூலங்களாகப் பெறும் தேசத்தில் என்னைக் கொண்டு போய் விட்டிடுங்கள்" என்கின்றாள். கொண்ட தோர் மாலை— 'இன்று இவளை முடித்தே விடுவது' என் னும் கோட்பாடுடைய மாலைப் பொழுது. இவ்விடத்தில் ஆண்டாள் தன்னைக் கண்ணன் இருக்கும் இடங்களில் உய்த்திடுமாறு நுவலும் நாச். திரு. 12 அநுசந்திக்கத் தக்கது.

**8. திருத்தாய் செம்போத்தே (10. 10):** இது பரகால நாயகியின் பாசுரமாக நடைபெறுகின்றது. செம்போத்து, காக்கை, கிளி, குயில் முதலிய பறவைகள் தங்கள் வழக்கத் தின்படி ஒலி செய்து கொண்டிருக்கையில், அவற்றை

அருகில் வருமாறு அழைத்து எம்பெருமான் இங்கே வந்து சேரும் படியாகக் கூவ வேண்டும் என்று வேண்டிக் கொள் ளுவதாக அமைந்தது இத்திருமொழி.

> கோழி கூ என்னுமால்;
> தோழி! நான் என் செய்கேன்?
> ஆழிவண்ணர் வரும்பொழுது ஆயிற்று
> கோழி கூ என்னுமால் 6)

[ஆல்-மகிழ்ச்சி; ஆல்-கஷ்டம்]

கண்ணபிரான் முதலில் சாமக் கோழி கூவினதும் தான் குறித்த பெண்ணுடன் கலவி செய்யச் சென்று, மீண்டும் அக்கோழி கூவினதும் அவளை விட்டுப் பிரிவது என்ற ஒரு நியதி உண்டு. இந்த நியதியை அறிந்த பரகால நாயகி தன் தோழியை நோக்கி 'கோழி கூவென்னுமால் ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்று' என்றாள்; கோழியானது கூ என்று கூவா நின்றபடியால் கடல் வண்ணனான கண்ணபிரான் என்னோடு கலவி செய்தற்கு வருங்காலமாயிற்று என்று மகிழ்ந்து சொன்னபடி. 'பல பல ஊழிகளாயிடும்; அன்றியோர் நாழிகையைப் பல பல கூறிட்ட கூறாயிடும்' (திருவிருத் 16) என்று பராங்குச நாயகி கூறுகிறபடி பிரிவுக் காலம் அநேக கல்பங்களாவும் கலவிக்காலம் மிகக் குறுகிய காலமாகவும் தோற்றுவது இயல் பாதலால் இவள் கிருட்டிணனோடு கலவி நிகழ்ந்து முடிவதாகக் கொண்டு வருந்தித் 'தோழி! நான் என் செய்கேன்! கோழி கூ வென்னுமால்' என்கின்றாள். 'ஐயோ தோழி! நான் என் செய்வது! மறுபடியும் கோழி கூ வென்னப் போகிறதே! கோழி கூவினால் கண்ணன் ஓடிப் போய் விடுவானே!' என்றபடி.

இப்பாசுரத்தின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில்— ''கிருஷ்ணன் கோழியை மடியிலே இட்டுக் கொண்டு வரும்போலே காணும்!' என்று பட்டர் அருளிச்

செய்தாரென்று பிரசித்தமிறே'' என்ற சூச்தி குறிக்கொள்ளத் தக்கது. கலவிக் காலத்தைச் சூசிப்பிக்கின்ற கோழியும் பிரிவுக் காலத்தைச் சூகிப்பிக்கின்ற கோழியும் இப்பாசுரத்தில் ஒருங்கே குறிப்பிட்டபடியால் பட்டர் இவ்வாறு இரசோக்தியாக அருளிச் செய்தார் எனக் கொள்ளலாம்.

9. **குன்றம் ஒன்று எடுத்து ஏந்தி (11.1):** இதுவும் பிராட்டி பாசுரத்தாலே தம்முடைய பிரிவுத் துன்பத்தை விளங்கக் காட்டுகின்றார். ''இராம கிருஷ்ணாதி அவதாரங்களாலேயே பல படியாலும் உலகத்தை வாழ்வித்த பெருமான் நம்மை இப்பாடுபடுத்துகின்றானே!'' என்கின்றாள்.

கெண்டை ஒண்கணும் துயிலும் என்நிறம்
பண்டு பண்டுபோல் ஒக்கும்; மிக்கசீர்த்
தொண்டர் இட்டபூந் துளவின் வாசமே
வண்டு கொண்டுவந்து ஊது மாகிலே (9)

[இட்ட-சமர்ப்பித்த; கெண்டை-ஒருவகை மீன்; ஒள்கண்-அழகியகண் ]

என்பது இத்திருமொழியில் ஒன்பதாம் பாசுரம். ''எம் பெருமான் திருவடி இணைகளிலே பரம பாகவதர்கள் சமர்ப்பித்திருந்த திருத்துழாய் மலர்களின் பரிமளத்தைக் கொய்து கொண்டு வந்து வண்டு ஊதுமாகில் என்னுடைய கண்களும் துயில் கொள்ளும்; என்னுடைய மேனியும் பழைய நிறம் பெறும்'' என்கின்றாள்.

**என் நிறம் பண்டு பண்டு போலாக்கும்:** இதற்கு ஒரு சிறப்புப் பொருள் உண்டு. ''இப்போதைய என் நிலைக்கு முற்பட்டதான ஒரு நிலையுண்டோ, அதற்கும் முற்பட்டதான ஒரு நிலையுண்டோ அந்நிலையில் நான் எப்படி இருந்தேனோ அப்படி ஆவேன்'' என்றபடி.

**விளக்கம்:** இப்போதைய நிலை பிரிவு நிலைமை. இதற்கு முந்திய நிலை கூடிக்களித்திருந்த நிலைமை; இதற்கும் முந்திய நிலை பகவத் விஷய வாசனையே தெரியாமல் அந்யபரமாகப் (வேறொன்றில் கருத்தாகப்) பொழுது போக்கின காலம்; 'உண்டியே உடையே உகந்திருந்த' காலம். அப்போது உடல் வாடாமல் வதங்காமல் மாமை குன்றாமல் கொழு கொழு என்றிருந்த நிலைமை. ஒருவித கவலையுமின்றி உண்டு டுத்தித் திரியுங் காலத்தில் மேனி பளபளப்புடன் ஒளிவிட்டிருக்கும். பகவத் விஷயத்தில் ஈடுபட்டது முதலாக கண நேரம் கலவியும், நெடுங்காலம் பிரிவுமாக விசனமே மீதூர்ந்து நிற்கையாலே இப்போதைய பிரிவுத்துன்பத்திற்கு முந்திய தான கலவீ நிலையிலுள்ள நிறத்தைப் புகழ்ந்து கூறுதல் சிறவாதென்று அதற்கும் முந்தியதான வேறொன்றில் கருத்தாக இருந்த காலத்திலுள்ள நிறத்தை உத்தேசித்துப் 'பண்டு பண்டுபோலொக்கும்' என்றதாகும். இங்கே பெரிய வாச்சான் பிள்ளையின் அழகிய திவ்விய சூக்திகள்: ''அவன் வாய் புலற்றும் நிறம் அறப்பண்டு போலேயாம்; கலக்கையாகிறது பிரிவுக்கு அங்குரமிறே; கலந்து பிரிந்து இலாபாலாபங்கள் அறியாதே பூர்ணையாயிருந்த போதை நிறம் போலேயாம்'' என்பது.

**மிக்க சீர்த்தொண்டரிட்ட:** தொண்டர், சீர்த்தொண்டர், மிக்க சீர்த்தொண்டர் என்று மூவகைப் படுவர். தொண்டு செய்வோர். கீழான பலனை விரும்பி அடிமை பூண்டிருப்பவர்கள் **தொண்டர்**; சிறந்த புருஷார்த்தத்தை விரும்பி அதற்கு உபாயநுஷ்டானம் போல் அடிமை பூண்டிருப்பவர்கள் **சீர்த் தொண்டர்கள்**; ஒன்றையும் பேணாமல் ஸ்வயம் பிரயோஜனமாகக் கைங்கரியம் செய்து கொண்டு ஒன்றையும் கருத்தாகக் கொள்ளாதவர்கள் **மிக்க சீர்த் தொண்டர்கள்**. அப்படிப்பட்டவர்கள் சமர்ப்பித்த மலர்களின் பரிமளத்தையே இங்குப் பரகால நாயகி விரும்புவது

**10. குன்றமெடுத்து மழைதடுத்து (11. 2):** இத்திருமொழியும் நாயகி சமாதியால் அமைந்தது. பிரிவுத் துன்பம் மீதூர்ந்து அன்றில் தென்றல் முதலிய பொருள் சுளும் நோவுபடுத்துகிற படியை பன்னியுரைப்பது இதுவும்.

அன்னை முனிவதும்
அன்றிலின்குரல் ஈர்வதும்
மன்னும் மறிகடல்
ஆர்ப்பதும் வளைசோர்வதும்
பொன்னங் கலைஅல்குல்
அன்னமென்னடைப் பூங்குழல்
பின்னை மணாளர்திறத்தம்
ஆயின பின்னையே (5)

[முனிவதும் - சீறிச் சொல்வதும்; ஈர்வது - இம்சிப்பது; சோர்வது - கழல்வது; பின்னை - நப்பின்னைப் பிராட்டியார்]

என்பது இத்திருமொழியில் ஐந்தாம் பாசுரம்: "நான் பகவத் விஷயத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் அன்னை என்னை ஒருவார்த்தையும் பொடிந்து சொன்னதில்லை. அன்றிற் பறவையின் குரல் முன்பு கேட்கப்படும் போது செவிக்கு மிக இனிதாக இருந்தது; அப்போது கடல் ஒலியும் காது கொடுத்து கேட்கும்படியிருந்தது; உடலும் பூரித்து வளைகள் நெருக்குண்டிருந்தன. இப்போது அநுபவிக்கின்ற தொல்லைகளை முன்பு நான் அநுபவித்ததே இல்லை; பின்னைப் பிராட்டியாரின் மணாளரான எம்பெருமானிடம் நெஞ்சு செலுத்தப்பெற்ற பின்பே அன்னை சீறிச் சொல்லும் படியாகவும் அன்றிலின் குரலால் நலியும் படியாகவும், கடலொலிக்கு நோவுபடும் படியாகவும் கைவளையல்கள் கழலும் படியாகவும் நேரிட்டது" என்கின்றாள்.

**அன்னை முனிவதும் :** "பெற்றோர் உறவினர் முதலானோர் இருக்கும்போது அவர்களைக் கொண்டு தனக்குற்ற நன்மைகளைத் தேடிக் கொள்ள வேண்டியதே முறை. ஆனால் இச்சிறு பெண்பிள்ளை எல்லோரையும் கலக்காமல் தான்றோன்றியாகத் தானே (பகவத் விஷயத்தில்) ஒரு நாயகனைக் காதலிக்கப் புறப்பட்டாள்; இப்படியும் ஓர் அநியாயம் உண்டோ?" என்பது தாய் பொடிந்து சொல்வது.

**11. மன் இலங்கு பாரத்தது (11.3) :** முன்னைய திருமொழியிலேயே "நம்பெண்மை சிந்தித்திராது போய்த் தூமலர் நீர் கொடு தோழி! நாம் தொழுதேத்தினால், கார்முகில் வண்ணரைக் காணலாங் கொலோ? (11. 2: 9) என்று தன் இயல்புக்கு மாறாக அதிகமாக முயன்றாகிலும் எம்பெருமானைக் காணப்பெறுவோம் என்று ஆழ்வார் கோலினதால், இதனைப் பொறுக்க மாட்டாத எம்பெருமான் வந்து முகங்காட்டி "ஆழ்வீர், சிறிது காலம் தாமதித்த மாத்திரத்தினால் நீர் இத்தனைச் சாகசத்தில் இழியலாமோ? ஒரு சேதநனைப் பெறுவதற்கு நான் எவ்வளவு பாடுபடுகின்றேன் என்பதை நீர் அறிய மாட்டீரோ? உம்மைப் பிரிந்ததனால் நானன்றோ கிலேசப்படுகின்றவன்? என்னை விட்டு நொடிப் பொழுதும் தரிக்க மாட்டாதவர்கள் யாவரோ, அவர்களை விட்டு யானும் தரிப்பவனல்லனே; என்னுடைய நிலைமைகளை நீர் அறிந்தும் நீர் இவ்வாறு கிலேசப்படுதல் தகுமோ?" என்றாற்போலச் சில வார்த்தைகள் சொல்லித் தன் சொல்லாமையடங்கலும் காட்ட, ஆழ்வார் அவற்றையெல்லாம் அநுசந்தித்து விடாய்த்தவன் சிறிது நீர் பருகினால் அது விடாயைத் தணிக்காமல் மேன்மேலும் அதனை உணரச் செய்யுமாப்போலே அவ்வநுசந்தானமானது மேலும் விடாயைப் பிறப்பிக்க, அதனால் மிகவும் நோவுபட்டு, பின்னரும் அவனைக்

கிட்டி நித்தியாநுபவம் பண்ணப்பெற்றிலோமேயாகிலும் இவ்விடாயும் பதற்றமும் எல்லாம் இவ்விஷயத்தில் ஆகப்பெற்றோமே! என்று உண்டான மனநிறைவுடன் பேசித் தலைக்கட்டுவதாக அமைந்தது இத் திருமொழி. இதுவும் நாயகி பாசுரத்தால் நடைபெறுகின்றது.

கண்ணன் மனத்துள்ளே
நிற்கவும், கைவளைகள்
என்னோ கழன்ற?
இவைஎன்ன மாயங்கள்?
பெண்ஆனோம் பெண்மையோம்
நிற்க,அவன் மேய
அண்ணல் மலையும்
அரங்கமும் பாடோமே! (7)

[மாயங்கள் - ஆச்சரியம்; மேய - இருக்கும்; அண்ணல் - சிறந்ததான]

என்பது இப்பதிகத்தின் ஏழாம் பாசுரம். 'நோக்கி நோக்கி உன்னைக் காண்பான்' (4. 7: 5) என்ற திருவாய்மொழியில் எம்பெருமான் தம்முடைய எல்லா உறுப்புகளிலும் புகுந்து நின்றாலும், அதில் மனநிறைவு பெறாமல் கண்ணாற் காணப்பெற வேண்டுமென்று ஆசைப்பட்டு வருந்தின நம்மாழ்வாரைப் போன்று இப்பரகால நாயகியும் தனது நெஞ்சினுள்ளே எம்பெருமான் உறைந்திருப்பதைக் கண்டும் மன நிறைவு பெறாமல் வளை இழக்கின்றாள் என்பதை இப்பாசுரத்தில் காணலாம்.

''எம்பெருமான் தொலைவிடத்தனாயிருந்தால் காதல் பெறாமல் மேனி மெலிந்து வருந்துதல் தகுதியே; அவன் என் மனத்தினுள்ளேயிருந்து அருகிலிருப்பவனைப்போல் இருந்தும் இங்ஙனம் என் மேனி மெலிவதற்குக் காரணம் என்னவோ? இது வியப்பான நிகழ்ச்சியாயுள்ளதே'' என்

கின்றாள். முன்னடிகளில் பணப் பையில் ஏராளமான பணம் இருந்தும் புறங்கால் வீங்குவாரைப் போலாயிற்று இந்த நாயகியின் நிலையும். 'சங்கு சக்கரமும் சிரித்த முகமும் தொங்கும் பதக்கங்களுமாய்'க் கண்ணெதிரில் வந்தருளி சேவை சாதியாமல் உள்ளே உறைந்து மறைந்து கிடப்பதனால் என்ன பயன்' என நினைத்திருக்கின்றாள் போலும்.

**பெண்ணானோம் பெண்மையோம் :** பெண்ணாய்ப் பிறந்த நாம் பெண்மையை நன்கு காப்பாற்றிக் கொண்டோமானோம். கண்ணன் மனத்துள்ளே இருக்கவும் கைவளை கழலப்பெறுகின்ற நமக்கும் பெண்மைக்கும் வெகுதூரம் உண்டு என்றபடி. **நிற்க:** இஃது ஒரு புறம் இருக்கட்டும்; "குளிரருவி வேங்கடத் தென்குணம் பாடி அளியத்தக்க மேகங்காள்! ஆவிகாத்திருப்பேனே" (நாச்திரு. 8: 3.) என்றாற்போலே உள்ளவறையில் ஆவியைக் காத்திருப்பதற்காக அவன் விரும்பியுறையும் திவ்விய தேசங்களைப் பாடுகையில் ஒரு தடையுடையரா யிருந்தோமோ? கைவளையல்கள் கழன்றொழிந்தால் ஒழியட்டும்; பெண்மைக்குக் கேடு வந்தால் வரட்டும், அவன் விரும்பியுறையும் திருமலையையும் திருவரங்கத்தையும் பாடுவோம்" என்கின்றாள்.

**12. மின்னிலங்கு திருவுருவும்** (திருநெடுந் 25). திருநெடுந்தாண்டகத்தில் 21 முதல் 30 பாசுரங்கள் மகள் பாவனையில் அமைந்தவை. இவற்றில் தூது பாசுரங்களாக அமைந்தவை (26, 27) அடுத்த இயலில் விளக்கப் பெற்றுள்ளன. இவண் குறிப்பிட்டுள்ள பாசுரத்தில் பரகால நாயகி "தலைவன் தன் பக்கத்திலுள்ள அனைத்தையும் காட்டி என் பக்கத்திலுள்ளவை அனைத்தையும் கொள்ளை கொண்டு போயினான்" என்கின்றாள்.

மின்இலங்கு திருவுருவும், பெரிய தோளும்,
கரிமுனிந்த கைத்தலமும், கண்ணும், வாயும்,
தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்து இலங்கு மகரம்சேர் குழையும் காட்டி
என் நலனும் என்நிறையும், என்சிந் தையும்
என்வளையும் கொண்டு என்னை ஆளும்கொண்டு
பொன்அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலி னூடே
புனல்அரங்கம் ஊர் என்று போயி னாரே (25)

[இலங்கு - விளங்குகின்ற; உரு - மேனி; கரி - யானை (குவலயா பீடம்); முனிந்த - சீறிப் புடைத்த; நலன் - அழகு; நிறை - அடக்கம்; ஆள் - அடிமை; செருந்தி சுரபுன்னை]

என்பது பாசுரம். பாசுரத்தின் பொருள் நயம் பகவதநு பவம் விளைவிக்கத் தக்கது.

**மின்னிலங்கு திருவுருவும் :** 'மின்போலே விளங்கா நின்றுள்ள திருமேனியை முதலில் காட்டினார்' என்கின்றாள். 'கார் வண்ணந்திருமேனி' (18) 'கருநீல வண்ணன் தன்னை' (3), 'முகிலுருவம் எம் அடிகள் உருவந்தானே' (2) என்றெலாம் சொன்ன ஆழ்வார் இங்கு 'மின் இலங்கு திருவுரு' என்றது என்? என்னில் : வள்ளல் தன்மைக்கும் விடாய் தீர்க்கும் தன்மைக்கும் மேகத்தை ஒப்புச் சொன்னார் அங்கெல்லாம்; எதிர்விழி விழிக்க வொண்ணாத படியான தன்மையை நோக்கி இங்கு 'மின் இலங்கு திருஉரு' என்றார். ஆனாலும் காளமேகத்தின் நிறமன்றோ வடிவின் நிறம் என்னில்: திருவாழியாழ்வானுடைய புகர் திருமேனியெங்கும் பரவியிருக்கையாலே இவ்வாறு சொல்லக் குறை இல்லை. அருண கிரணத்தாலே மறைக்கப்பட்ட காளமேகம் எனவும் கொள்ளலாம். ''வடிவார் சோதி வலத்துறையும் சுடரொழி'' (1) என்ற திருப்பல்லாண்டும் நோக்கத் தக்கது. ''ஒரு கையில் சங்கு, ஒரு

கை மற்று ஆழியேந்தி உலகுண்ட பெருவாயார்'' (24) என்று சொன்னதும் நினைக்கத் தக்கது. இவ்வாறு பெரிய மேன்மையைக் காட்டிமை சொல்லிற்றாயிற்று.

**பெரிய தோளும்:** காலம் உள்ள அளவும் அநுபவித்தாலும் வேறொரு அவயவத்தில் போக வொண்ணாதபடி துவக்கவல்ல அளவிறந்த போக்கியதை வாய்ந்தவை திருத்தோள்கள். ''தோள்கண்டார் தோள்கண்டார்'' என்னும் படியானவை. தோள் நிழலிலே உலகம் அடங்கலும் ஒதுங்கினாலும் ஒதுங்கியவர்கள் சுருங்கி நிழலே மிக்கிருக்கும் படியான பெருமையைச் சொன்னதாகவும் கொள்ளலாம்.

**கரி முனைந்த கைத்தலம்:** கம்சனால் மதம் ஊட்டி நிறுத்தப்பெற்ற குவலயாபீடம் என்ற யானையைத் தொலைத்த மிடுக்கு விளங்க நின்ற திருக் கைகள். ஒரு சிறப்பும் வேண்டாது இயற்கையாகவே பரம போக்கியமாக இருக்கும் 'கண்ணும் வாயும்.'

**தன்னலர்ந்த நறுந்துழாய் முதலியவை:** தன் நிலத்திற் காட்டிலும் செவ்விபெற்று நறுமணம் மிக்க திருத்துழாய், வலையத்தினருகே திருத்தோள் அளவும் தாழ்ந்து விளங்குகின்ற மகர குண்டலங்கள்.

ஆக, இவற்றையெல்லாம் சேவை சாதிப்பித்தான். இவையெல்லாம் காட்சி அளவே.

எம்பெருமான் கொண்டவற்றை இனிச் சொல்லுகின்றாள்.

**என் நலனும்.........என்னை ஆளுங்கொண்டு:** ''எல்லாவற்றையும் சுவாதீனம் பண்ணுபவர் போலே வந்து எல்லாவற்றையும் கொள்ளை கொண்டார்'' என்கின்றாள். நலன்-நலம்; குணம் என்றபடி. நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்கின்ற ஆன்ம குணங்களையும் அழகு

மென்மை முதலிய விக்கிரகக் குணங்களையும் சொன்ன படி. இவற்றைக் கொள்ளை கொண்டார் என்றது நிற வேறுபாட்டை விளைவித்து வாய் பிதற்றச் செய்தார் என்றபடி.

மூன்றாம் அடியில் 'என்' நலனும் நிறையும், சிந்தையும் வளையும் கொண்டு' என்று சொல்லாமல் ஒவ்வொன்றிலும் என்' என்பதைச் சேர்த்துச் சொல்வதில் ஒரு சுவை (சுவாரஸ்யம்) உண்டு. ''அவருடைய குணங்களையும் அவருடைய ஆண்மையையும் அவருடைய நெஞ்சையும் அவருடைய ஆபரணங்களையும் கொள்ளை கொள்ளப் பிறந்தவள் நானாயிருக்க, என்னுடையவற்றை அவர் கொள்ளை கொண்டது என்ன அற்புதம்! காண்மின்!'' என்று எடுத்துக் காட்டுகிற படியாகும்.

**என்னை ஆளுங்கொண்டு:** ''என்னுடைய எல்லாச் சொத்துக்களையும் அபகரித்துக் கொண்டு போனதுடன் அவற்றைச் சுமந்து கொண்டு போவதற்கு ஆளாகவும் என்னையே அமைத்துக் கொண்ட விந்தை என்னே!'' என்கின்றாள். ''ஒருவருடைய வீட்டில் புகுந்து எல்லாப் பொருள்களும் கொள்ளை கொண்டு அவற்றை அந்த வீட்டுக்குரியவருடைய தலையிலே வைத்து சுமக்கச் செய்து கொண்டு போமாப் போல—வடபுலத்தில் (இமயத்தில்) கண்ணகி சிலைக்குக் கல்லெடுத்து—கனக விசையர் தலையிலே வைத்துச் சுமக்கச் செய்தது போலே—இருக்கின்றதே'' என்கின்றாள்.

இங்ஙனம் மீண்டும் கொள்வதற்கு ஆதாரம் இருக்க வேண்டும் அல்லவா? முதலே போய்விட்டால் மீண்டும் கொள்ளையிடுவதற்கு இடமில்லாது போகுமே என்று ''உள்ளம் புகுந்தென்னை நைவித்து **நாளும் உயர்ப் பெய்து** கூத்தாட்டுக் காணும்'' என்றபடி போகிற உயிரையும் போகவொட்டாமல் நிறுத்தி வைத்திருப்பது மேன்மேலும்

இம்சைகளைச் செய்வதற்கு ஆதாரமும் வேண்டும் என்றாயிற்று.

**புனல் அரங்கம் ஊர் என்று போயினார்:** "நான் உயிர் பெற்றிருப்பதாகத் திருவரங்கம் பெரிய கோயில் நம்மூர்" என்று சொல்லிக்கொண்டே போயினார்" என்கின்றாள்.

இங்கே வியாக்கியான சூக்தி: "திரு நகரியில் நின்றும் கோயிலளவும் செல்லப் பொழிலாய்க் கிடந்ததோ என்னில்: ஒரு காள மேகம் விர்ஷித்துக்கொண்டு போகா நின்றால் கண்டவிடமெங்கும் தளிரும் முறியும் ஆகாதோ? என்று பட்டர் அருள்செய்வர்" என்பது.

இங்ஙனமாக மகள் பாசுரங்கள் நடைபெறுவதை அநுபவித்து மகிழ்கிறோம். கண்ணனோடு ஊடி உரைத்தல் (10.8) என்ற திருமொழி மகள் பாசுரம் போல காணப்படினும் அது பரகாலநாயகியின் பாசுரம் அன்று.

# 19. மகள் பாசுரங்கள் - தூது பற்றியவை

தூது என்பது, ஒருவர் தம்முடைய கருத்தை இடை நின்ற ஒருவர் வாயிலாகக் கூறிவிடுப்பது. சங்க இலக்கியங்களில் 'காமம் மிக்க கழிபடர் கிளவிகளாக' இருந்த துறையே பிற்காலத்தில் தூது இலக்கியங்களாக வடிவு கொண்டது என்பது ஆய்வாளர்களின் கருத்து. பக்தி இலக்கியங்கள் வளர்ந்த காலத்தில் ஆழ்வார் பெருமக்கள் இந்த அகத்துறையைப் பயன்படுத்திய அருமைப்பாட்டை ஈண்டுக் காண்போம். ஆழ்வார் திருமொழிகளில் அவர்கள் தாமான தன்மையைவிட்டுப் பிராட்டியாரின் நிலையை ஏறிட்டுக் கொண்டதாகப் பாசுரங்கள் அமைக்கப்பெற்றிருக்கும். பெரும்பாலும் ஆழ்வார்கள் புள்ளினங்களையே தூது போகும் படியாகப் பாசுரங்கள் அமைப்பர்; குருகினங்கள், நாரைகள், அன்னங்கள், பூங் குயில்கள், கிளி, மயில், பூவை, அன்றில்கள் வண்டினங்கள் முதலியவை தூதுவிடும் பொருள்களாக அமைந்திருப்பதைக் காணலாம் இவற்றைத் தவிர வாடை மேகம், நெஞ்சு போன்றவற்றையும் இவர்தம் பாசுரங்களில் தூதுப் பொருளாக அமைந்திருப்பதையும் கண்டு மகிழலாம்.

இங்ஙனம் பறவைகளைத் தூது விடுவதற்கு உட்பொருள் உண்டு. ஆசாரிய ஹிருதயம்,

சேர்ப்பாரைப் பட்சிகளாக்கி ஜ்ஞான கர்மங்களைச் சிறகு என்று, குரு ஸப்ரஹ்மச்சாரி புத்ர சிஷ்ய ஸ்தானே பேசும் (சூத்திரம் - 150)

> [ஸப்ரஹ்மசாரி - ஒரு சாலை மாணாக்கர்; ஸ்தானே - இடத்தில்]

என்று குறிப்பிடுகின்றது. 'விண்ணோர் பிரானார், மாசுஇல் மலரடிக் கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே' (திருவிருத். 55) என்று ஆழ்வாரே அருளிச் செய்துள்ளமை யால் பகவத் விஷயத்தில் கொண்டு சேர்க்குமவர்கள் பறவைகளாகக் கொள்ளப்பெறுவர். இறகு சிறகுகளைக் கொண்டு பறவைகட்கு எங்ஙனம் விசும்பில் பறந்து செல்லுதல் இயலுகின்றதோ, அங்ஙனமே ஞானம், ஒழுக்கம் (அநுட்டானம்) என்னும் இரண்டாலும் இறை வன் அடையப் பெறுகின்றான் என்பது ஆன்றோர் கொள்கை. எனவே, ஞானத்தையும், அநுட்டானத்தை யும் சிறகுகளாகக் கொள்ளல் வேண்டும். ஆசாரியர்களும் ஒரு சாலை மாணாக்கர்களும், புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பார்கள் என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் கருத்தாகும்.

மேற்குறிப்பிட்ட பறவைகளிலும் அன்னம் வண்டு முதலியவையாகச் சொல்லப்பெறுபவர்கள் இன்னார் இன்னார் போன்றவர்கள் என்னும் உள்ளுறைப் பொரு ளும் (ஸ்வாபதேசப் பொருளும்) அருளிச் செய்யப் பெற்றுள்ளது. அவற்றை ஈண்டுக் குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமாகும். அன்னமாகப் பேசப்பெறுபவர்கள் செல்வநம்பி, பெரியாழ்வார், நாத முனிகள், ஆளவந்தார் ஆகியோர்[1]. நாரதமுனிவர் லோகசாரங்க முனிவரால்

1. ஆ.ஹி. 151 உரையில் விளக்கப் பெற்றுள்ளது.

முதுகில் சுமந்து செல்லப்பெற்ற திருப்பாணாழ்வார், தம்பிரான்மார் (அரையர்) போன்றவர்கள் தும்பி என்றும், வண்டு என்றும் பேசப் பெறுவர்[2]. அதே நூல் கிளி, பூவை, குயில், மயில் என்றவற்றிற்கு உள்ளுறைப் பொருளாக அமைபவர்கள் மதுரகவிகள், தொண்டரடிப் பொடியாழ்வார், கூரத்தாழ்வான், திருமாலையாண்டான், எம்பார், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் முதலாயினோர்களைக் கூறுவர்[3]. நாரை, கொக்கு, குருகு என்னும் பறவைகட்குக் குலசேகரப் பெருமாள், ஆசாரியபதத்தில் நின்றவர்களான முதலிகள் போல்வார் உள்ளுறைப் பொருள்களாக அமைவர்.[4] மேகத்திற்கு உள்ளுறையாக திருமழிசை பிரான், திருமங்கையாழ்வார் இராமாநுசர் முதலியோர் பேசப் பெறுவர்.[5]

**தூதுப் பாசுரங்கள்;** மயர்வற மதிநலம் அருளப் பெற்ற கலியன் திருமொழியில் தூதுப் பதிகங்கள் இல்லை. உதிரிப் பாசுரங்களே காணப்பெறுவன. திருவாலி எம்பெருமான் மீதுள்ள பதிகத்தில் (3.6) முதல் நான்கு பாசுரங்களே (1,2,3,4) தூதுரைப்பனவாக அமைந்துள்ளன. ஏனையவை எம்பெருமானை நோக்கித் தமது ஆற்றாமையை நோக்கித் கதறுவன. இங்ஙனமே புல்லாணி எம்பெருமான்மீதுள்ள பதிகத்தில் (9 4) இரண்டு பாசுரங்ளும் (2,3), திருநெடுந்தாண்டகத்தில் இரண்டு பாசுரங்களும் (26,27) தூதுரைப்பனவாகும். இவை யாவும் அர்ச்சையில் தூதுரைப்பனவாக அமைந்துள்ளன. அர்ச்சாவதார வழிபாட்டிற்கென்றே அவதரித்த ஆழ்வாரல்லவா?

2. ஆ. ஹி-152 (உரையில் விளக்கம் காண்க)
3. ஷெ-153 (விளக்கம் உரையில் காண்க).
4. ஷெ-154 (உரை காண்க)
5. ஷெ-155 (உரை காண்க)

**வண்டுவிடு தூது:**

*தூவிரிய மலருழக்கித்*
*துணையோடும் பிரியாதே*
*பூவிரிய மதுநுகரும்*
*பொறிவரிய சிறுவண்டே!*
*தீவிரிய மறைவளர்க்கும்*
*புகழாளர் திருவாலி*
*ஏவரிவஞ் சிலையானுக்கு*
*என்நிலைமை கூறாயே*

—பெரி. திரு. 3.6:1

[தூ-சிறகு; உழக்கி-மிதித்து; பொறி-புள்ளி; வரி-இரேகை; ஏ-அம்பு; சிலை-வில்]

இது பரகால நாயகி வயலாளி மணவாளனுக்கு ஒரு வண்டைத் தூது விடுவதாக அமைந்த பாசுரம்.

**துணையோடும் பிரியாதே:** அந்த வண்டு தன் பேடையுடன் கலந்து மலரில் மதுபானம் பண்ணிக் கொண்டுள்ளது. 'நான் துணைவனைப் பிரிந்து உணவும் உறக்கமும் இல்லாமல் வருந்திக் கிடக்கும்போது நீ இப்படி உன் காரியமே கண்ணாக இருப்பது தகுதியோ?' என்ற கருத்து முன்னிரண்டு அடிகளில் வெளிவரும்.

பரகால நாயகியைப் போல் அவை விரக வேதனைப் படாமல் துணை பிரியாதிருப்பதனால் சிறகை விரிக்கவும், மலர்களிலே கால் பாவமும், மதுவைப் பருகவும், மேனி நிறம் பெற்றிருக்கவும் உள்ள நிலையைக் காண்கின்றாள். "மலரைக் கண்டால் அருவருத்தும், போக்கியப் பொருள்களில் வெறுப்புற்றும் மேனி நிறம் அழிந்தும் இரா நின்ற என்னையும் உன்னைப் போலாக்க வேண்டாவோ? நானும் துணைவனோடு கலந்து வாழும் படி நீ செயலாற்ற வேண்டாவோ?" என்பது உள்ளுறை.

'உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேன்' (4.3:9) எனப்பட்ட பகவத் விஷயமாகிய மதுவை விரும்பியும், ஆசாரிய சேவையாகிய மதுவைப் பருகுதலையே விரதமாக உடையதாயும் மேலே பறந்து செல்வதற்குச் சாதனமாகிய இரண்டு சிறகுகள் போன்ற கர்மஞானங்களை உடையராகியும் சாரத்தைக் கிரகிக்கும் இயல்புடையவர்களாகிய ஸ்ரீவைணவர்களை வண்டாகச் சொல்லுவது வழக்கம். அப்படிப்பட்ட ஸ்ரீவைணவர்களை நோக்கி "நீர் எம்பெருமான் திருவடிகளிலே புருஷகாரம் செய்து அடியேனையும் உம்மைப்போலே பகவதநுபவமே நித்தியமாய்ச் செல்லுமாறு ஆட்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று பிரார்த்தித்தல் இதற்கு உள்ளுறைப் பொருள். "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிவது" (திருவாய். 4.6:8) சம்பிரதாயமாகும்.

பின்னிரண்டு அடிகளால் தனக்காகச் செய்ய வேண்டிய காரியத்தை நியமிக்கின்றாள். "வயலாளி மணவாளனை நீ இங்கே அழைத்துக் கொண்டு வர வேண்டா." "'இன்னாள் இன்னபாடுபட்டுக் கொண்டிருக்கின்றாள்' என்ற ஒரு சொல் அவன் திருச்செவியில் விழ விட்டால் போதும்" என்கின்றாள். 'உரையாயே' என்ற விடத்து பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்: "கொடுவர வேண்டா; அறிவிக்கு மித்தனையிறே இத்தலைக்கு வேண்டுவது! வருகை அவன் பணியே; வாராதொழியுமென்று ரட்சகனுக்குக் குறையாமே; நீங்களறிவித்த அநந்தரம் (உடனே) உங்கள் பேச்சுக் கேட்டுத் தானே வாரா நிற்கும்" என்பது.

அடுத்த பாசுரமும் வண்டைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இதன் பொருள்: "மலரத் தொடங்கின நீல மலரிலே குடும்பத்தோடு சென்றிழிந்து மதுபானம் பண்ணாநிற்கின்ற வண்டே! வயலாளி மணவாளன் என்

னோடு கலந்து பிரிந்து போனது முதலாக அவன் நினைத்திருப்பது இன்னதென்று தெரியவில்லை; என்னை மறந்து விட்டானோ? அன்றி என்னையே நினைந்து கொண்டு கிடக்கின்றானோ? இங்கே வருவதாக இருக்கின்றானோ? என்னை வரவழைத்துக் கொள்வதாக இருக்கின்றானோ? அன்றி நான் ஒருத்தி இருக்கின்றேன் என்பதைக் கணிசியாமலே கிடக்கின்றானோ? இப்போது அவன் செய்வதும் செய்ய நினைப்பதும் ஒன்றும் எனக்குத் தெரியவில்லை; என்னைப் பிரிந்து அவன் வருத்தமற்றிருப்பது போலவே நானும் அவனைப் பிரிந்து வருத்தமற்றிருக்கின்றேன் என்று அப்பெருமான் நினைத்து ஆறியிருக்கவும் கூடும்; நான் இங்ஙனே நோவுபடுகின்றேன் என்பது தெரிந்தால் இங்கு வந்து சேரத் தாமதிக்க மாட்டானாதலால், நீ அங்குச் சென்று நான் படுகின்ற நோயைத் தெரிவிக்க வேண்டும்'' என்கின்றாள்.

இந்தப் பாசுரத்திலுள்ள '**அறுகால சிறுவண்டே**' என்பதற்குப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான சூக்தி: ''இரண்டு காலுடையாரைப் போலன்றிக்கே ஆறுகாலுடையார்க்குக் கடுகப் போய்க் காரியம் தலைகட்டலாமிறே'' என்பது. இது போலவே திருநெடுந்தாண்டகத்தில் (26) '**அறுகால சிறுவண்டே தொழுதேன் உன்னை**' என்றவிடத்து வியாக்கியான சக்கரவர்த்தியின் உரையில், 'த்வி பாதத்தாயிருத்தல் சதுஷ் பாதத்தாயிருத்தல் செய்கையன்றியே கமந சாதநமான கால்கள் ஆறு உண்டாகப் பெற்றேன் என்கின்றாள்' என்பது பூருவர்கள் நிர்வாகம்; வண்டுக்குக்கமநசாதநம் சிறகாகையாலும் என் தலையிலே வைக்கைக்கு ஆறு கால் உண்டாகப் பெற்றேன் என்கின்கின்றாள்' என்று பட்டர் அருளிச் செய்வர். அறிவுக் கூர்மையுள்ள பட்டரின் நிர்வாகத்திற்கு அதே அளவு அறிவுக் கூர்மையுள்ள பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் தரும் விளக்கம்: ''வண்டுக்கு ஆறு

கால்கள் உள்ளனவாகிலும் விரைந்து செல்வதற்கு அவை பயன்படத்தக்கவை அல்லவே, சிறகாலே பறந்து செல்ல வேண்டிய சாதியாதலால். ஆகவே, 'அறுகால' என்ற சிறப்பிற்கு இன்சுவைமிக்க பொருள் பட்டர் அருளிச் செய்வது யாதெனில்: 'வண்டே! நீ எம்பெருமான் பக்கல் சென்று என் நிலையை விண்ணப்பம் செய்து அவனது அருளைப் பெற்று மீண்டு வந்தாயாகில் நீ செய்த பேருதவிக்குத் தோற்று உன் திருவடிகளை நான் தலைமேல் அணிந்து கொள்வேன்; அப்போது என் தலை நிறைந்திருக்கும்படி உனக்கு ஆறுகால் உண்டாயிருக்கப் பெற்றது பரமபாக்கியம்' என்கின்றாள் என்பதாம்.''

'உள்ளுறைப் பொருளில், புருஷகார கிருத்தியம் செய்யும் பாகவதர்களே வண்டின் இடத்தில் நிற்பதால் பாகவதர்களுடைய திருவடிகள் உத்தேச்யமாகக் குறையில்லையே.'

எங்கானல் அகம்கழிவாய்
  இரைதேர்ந் திங்கினிதமரும்
செங்கால மடநாராய்!
  திருமூழிக் களத்துறையும்
கொங்கார்பூந் துழாய் முடிஎம்
  குடக்கூத்தர்க்கு என் தூதாய்
நும்கால்கள் என் தலைமேல்
  கொழுமீரோ நுமரோடே (9.7;1)

என்ற திருவாய்மொழியில் பராங்குச நாயகி தூதுவிடுவதைக் காண்க' என்று மேலும் விளக்குவர் அண்ணா சுவாமிகள்.

நடுவில் வந்த நாரையிடம் பேசி அதனை அனுப்பி விட்ட பிறகு (3) மீண்டும் வண்டினை நோக்கிப் பேசுகின்றாள் ஆழ்வார் நாயகி.

தானாக நினையானேல்
　　தன்னினைந்து நைவேற்குஓர்
மீனாய கொடிநெடுவேள்
　　வலிசெய்ய மெலிவேனோ?
தேன்வாய வரிவண்டே!
　　திருவாலி நகராளும்
ஆனாயற்கு என்னுறுநோய்
　　அறியச்சென்று உரையாயே (3. 6: 4)

[நைவேற்கு - மனந்தளர்ந்திருக்கும் என்னை; மீனாய கொடிநெடுவேள் - மகரக்கொடியுடைய மன்மதன்]

உடையவன் உடைமையை விட்டுப் பிரிந்தால் 'ஐயோ! உடைமையை இழந்தோமே! மீண்டும் அதனைப் பெற வேண்டுமே! எப்படிப் பெறப் போகின்றோம்' என்று துணுக்குத் துணுக்குற்றிருந்து சொத்தின் மேலேயே கருத்தூன்றியிருக்க வேண்டுவது முறைமை; இந்த முறைமையை எம்பெருமான் நோக்குகின்றிலன்; தன் சரக்காகிய என்னைப் பிரிந்து கவலையற்றிருக்கின்றானே; உடையவன் கவலையற்றிருந்தானாகிலும் உடைமை கவலை கொள்வது நியாயமன்று; அசேதநமாய் இருந்து விட்டால் கவலை கொள்ளாதிருக்கலாம்; உணர்வு உண்டாகையாலே கவலை கொள்ளாதிருக்க முடியவில்லை என்பது முதலடியின் கருத்து "நாம் அவனைப் போலே யாக மாட்டோமே; நாமும் நினையாமைக்கு ஒரு நெஞ்சு படைக்கப் பெற்றிலோம்" என்பது வியாக்கியான சூக்தி,

ஒரு **மீனாய கொடி நெடுவேள் வலிசெய்ய மெலி வேனோ?** : அப்பெருமானை நினைந்திருப்பதே குற்றமாக மன்மதன் என்னை நோவுபடுத்துகின்றானே; நல்லதோ கெட்டதோ எம்பெருமானாலே விளைவதாக இருந்தால் சகிக்கலாம், தாங்கிக் கொள்ளலாம்; இடையில் மதன

வேள் என்னும் சிறு பயல் இம்சிக்கும் படியோ நம் கதி!' என வருந்துகின்றாள்.

> காமற்கு என்கடவேன்!
> கருமாமுகில் வண்ணற்கல்லால்
> பூமேல்ஐங் கணைகோத்துப் புகுந்து எய்ய
> காமற்கு என்கடவேன்? (10. 10: 7)

என்று பின்னரும் அருளிச் செய்வதைக் காணலாம். ஆசை அதிகரித்துச் செல்வதையும், அது கைகூடாமையால் கஷ்டம் மீதூர்ந்து செல்வதையும் காமனது இம்சையாகச் சொல்லுவது மரபு.

**தேன்வாய வரிவண்டே!** : "ஆபத்துக் காலத்தில் மதுரமான பேச்சுப் பேசுபவனன்றோ நீ? பிராட்டி அசோக வனத்திலே அசோக மரத்தில் மயிர்முடியைப் பிணைத்து உயிர் மாய்த்துக் கொள்ளப் புகுந்த சமயத்தில் ஒருவன் இனிமையான பேச்சுப் பேசி உயிர்விடாது செய்ததைப் போல உதவுபவனன்றோ? நீ" என்று புகழ்ந்து கூறுகின்றபடி.

**திருவாலி நகராளும் ஆனாயற்கு** : இதற்குப் பெரிய வாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் : "திருவாய்ப் பாடியில் சம்பத்தோடே திருவாலியில் சம்பத்தையும் கையடைப்பாக்கினால், பின்னை அவனுக்கு நொந்தாரை ஐயோவென்ன அவசரமுண்டோ?" என்று இதன் சுவையை அநுபவிப்பாரார்? அர்ச்சாவதாரத்தின் ஐசுவரியமும் விபவாவதாரத்தின் ஐசுவரியமும் ஒருமடை கொண்டிருக்குமிடம் என்பது தோன்ற மூலம் இருக்கும் அழகையறிந்து வியாக்கியானமிட்ட அழகை என் சொல்வோம்?

**என்னுறுநோய் அறியச் சென்றுரையாய்** : 'அறிய என்பதை 'உரையாய்' என்பதனோடு கூட்டியுரைத்தலும்

'சென்று' என்பதனோடு கூட்டியுரைத்தலுமாக இரண்டு நிர்வாக முண்டு. "நீ சென்று என்னுடைய நோயை அவன் நன்றாக அறிந்து கொள்ளும்படிச் சொல்லுக" என்பது முன்னைய அந்வயத்தின் பொருள். "நீ தளர்ந்து செல்லுகின்ற நடையிலேயே என்னுடைய ஆற்றாமை யெல்லாம் அவன் அறிந்து நாக்கிலும் பல்லிலும் நீர்ப் பசையற்று உடம்பு வெளுக்கும்படியாகச் சென்று தூது சொல்லுக" என்பது பின்னைய அந்வயத்தின் கருத்து.

வண்டுவிடு தூதாகத் திருநெடுந் தாண்டகத்திலும் ஒரு பாசுரம் உண்டு. இது அணி அழுந்தூர் ஆமருவி அப்பனுக்குத் தூது அனுப்புவதாக அமைந்தது.

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
தேன் அதனை வாய்மடுத்து, உன்பெடையும் நீயும்
பூமருவி இனிது அமர்ந்து பொறியில் ஆர்ந்த
அறுகால சிறுவண்டே! தொழுதேன் உன்னை;
ஆமருவி நிரையேய்த்த அமரர் கோமான்
அணிஅழுந்தூர் நின்றானுக்கு இன்றே சென்று
நீமருவி அஞ்சாதே நின்று ஓர்மாது
நின்நயந்தாள் என்றுஇறையே இயம்பிக்
காணே (26)

[தேன்மருவு - தேன் நிறைந்த; பொழில் - சோலை; போது - மலர்; வாய்மடுத்து - பானம் பண்ணி; பொறி - மேனியின் புகர்; மருவி - பொருந்தி; ஆநிரை - பசுக் கூட்டம்; மருவி - விரும்பி; மருவி - பொருந்தி; நயந்தாள் - ஆசைப் பட்டாள்; இறையே - சிறியதொரு வார்த்தையை]

என்பது பாசுரம். தலைவியை ஒரு முகத்தாலே ஆற்றுவிக்க வேண்டும் என்று நினைத்த தோழியானவள் சில

வினாக்களை விடுக்க, அவற்றுக்கு மறுமாற்றம் உரைக்கும் வகையில் 'மைவண்ண நறுங் குஞ்சி' (21) தொடங்கி ஐந்து பாசுரங்கள் சென்றன. தோழி வாளா இருக்க, தலைவிக்கு ஆற்றாமை மீதூர்ந்தது. கண்ணிற் கண்ட ஒரு வண்டைத் தூது விடுகின்றாள் பரகால நாயகி இப் பாசுரத்தில். இராமாவதாரத்தில் திர்யக்குகள் (பிராணிகள்) தூது சென்று காரியம் தலை வைக்கக் காண்கையாலே வண்டுவிடு தூதிலே முயல்கின்றாள் இங்கு. மேற்பாசுரங்களில் உரைத்தவற்றையெல்லாம் ஈண்டும் உரைத்துக் கொள்க.

**சிறு வண்டே!** : 'ஏற்கெனவே நீ சிறியையாயிருப்பதும் ஒரு நற்பேறு; அநுமன் இலங்கைக்குத் தூது சென்ற போது சில இடங்களில் தன் வடிவைச் சிறு வடிவாக ஆக்கிக் கொள்ள வேண்டியிருந்தது; நீ அங்ஙனம் செய்யத் தேவையில்லை; உன் உருவமே சிறியையாயிராய் நின்றாய் காண்' என்ற சிறப்புப் பொருள் தோன்றக் காணலாம். அநுமனாகில் 'இந்தக் குரங்கு இங்கே ஏதுக்கு வந்தது?' என்று ஆராயவேண்டியிருக்கும்; நீ வண்டாகையாலே 'தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர் முடிமேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையில்' (திருவாய். 1. 1: 7) விருப்பமான ஓரிடத்தில் இருந்து கொண்டு வார்த்தை சொல்லலாம் படியான பிறப்பன்றோ உன் பிறப்பு' என்பதுவும் கருத்தாகும் (விவட்சிதம்).

'சிறுவண்டே!' என்று உரக்கக் கூவினதும் வண்டு துணுக்கென எட்டிப் பார்க்கின்றது. 'தொழுதேன் உனை' என்கின்றாள் பரகால நாயகி. 'தலைமகனுடைய திருவடிகள் எனக்கு ஏதுக்கு? உன்னைத் துதிப்பதும் உன் காலில் விழுவதுமன்றோ எனக்குப் பணி?' என்பது குறிப்பு. எம்பெருமானைக் காட்டிலும் புருஷகார

பூதரான ஆசாரியர்கள் மிகவும் உத்தேச்யர் என்ற சாத்திரார்த்தம் ஈண்டு உணரத்தக்கது.

பாசுரத்தின் பன்னிரண்டடிகளில் செய்தியைக் கூறத் தொடங்குகின்றாள். ''அமரர் கோமான் பக்கல் சென்று தூது செல்லுக' என்றாள்; 'அந்தோ! அமரர் கள் அதிபதியன்றோ? அந்த மேன்மையிலே என்னால் கிட்ட நெருங்க முடியுமோ?'' என்று வண்டு சொல்ல, 'ஆமருவ நிரைமேய்த்த அமரர் கோமான்' என்கின்றாள்; பரத்துவம் ஒரு புறத்தே இருப்பினும் பசுக்களுடன் பொருந்தி அவற்றோடு பொழுது போக்குபவன் காண்; நித்திய சூரிகட்குத் தன்னையொழியச் செல்லாதாப் போலே பசுக்களை யொழியத் தனக்குச் செல்லாதபடி யான குடிப்பிறப்புடையவன் காண்; மேன்மையைக் கண்டு தயங்காமல் செல்லலாம்' என்கின்றாள்; 'ஆமாம் அஃது ஒரு காலத்திலன்றோ? கிருஷ்ணாவதாரம் கடந்து நெடுநாளாயிற்றே! என்று வண்டு சொல்ல, 'அணியழுந் தூர் நின்றானுக்கு' என்கின்றாள். அக்காலத்தில் பசுக் களை இரட்சித்தாற்போலே, அக்காலத்திற்குப் பிற்பட்ட வர்களாய்ப் பசுப்போல் இருப்பாரையும் இரட்சிக்கைக் காகப் 'பின்னானார் வணங்குஞ் சோதியாக'த் திருவழுந் தூரில் நிற்கின்றான் காண்; அங்கே சென்று அறிவிக்க வேண்டும் என்கின்றாளாயிற்று.

''எம்பெருமான் பிரிந்து சென்றபோது 'சேணுகளும் திருவரங்கம் நம்மூர்' என்றும் 'புனலரங்கம் ஊர்' என்றும் சொல்லிச் சென்று திருவரங்கத்திலே பொருந்தியிருக்க திருவழுந்தூரிலே தூது விடுகை பொருந்துமோ என்னில்: 'புனலரங்கம் ஊர் என்று போயினாரே' (25) என்றது உண்மைதான்; ஆயினும் பிரிந்து சென்றவர் முழுதும் போயிருக்கமாட்டார்; திருவழுந்தூரிலே பின்தங்கி நின்றி ருக்கக் கூடும்; அங்கே சென்று அறிவிக்கலாம்' என்கின்

றாள் போலும். அன்றியே, புனலரங்கம் ஊர் என்று போயினார்; திருவரங்கத்தே போய்ப் பார்த்தார்; நீர் வாய்ப்பும் நிழல் வாய்ப்பும் கண்டவாறே தனியே கிடப்பதற்குப் பொருந்தியிராது; எதிர் கொண்டு வரப்புறப் பட்டிருப்பார். இப்போது திருவழுந்தூரிலே எழுந்தருளியிருக்கக் கூடும்; அங்குச் சென்று அறிவிக்கலாம் என்கின்றாள் என்றும் கொள்ளலாம்.

**அணியழுந்தூர் நின்றானுக்கு:** 'இத் தலத்தைக் கடந்து அப்பால் போகமாட்டாமையாலே அங்கேயே நிலையாகப் பிரதிட்டை செய்ததுபோல் நிற்கின்றாள்' என்கின்றாள். 'திருவாலி - திருநகரியிலிருந்து ஆள் வருவது எப்போதோ? என்று எதிர்பார்த்த வண்ணம் நிற்கின்றான் என்கின்றாள்'' என்றும் சொல்லலாம்.

**இன்றே சென்று:** ''நாளை செய்கின்றேன் என்று சொல்லக் கூடாது; நாளைக்கு நான் இருக்கப் போகிறேனோ? நான் இல்லையானால் அவன்தான் இருக்கப் போகிறானோ? இரண்டு தலையும் அழிந்த பிறகு நீ எங்குச் சென்று யார் பக்களில் என்ன சொல்லப் போகின்றாய்? இரண்டு தலையும் அழிந்தால் பின்னர் உலகந்தான் இருக்குமா? நீயும் அழிந்தாய்யாவாய்; ஆக, நாங்களும் பிழைத்து நீயும் வாழவேண்டியிருந்தாயாகில் இன்றே சென்று அறிவிப்பாய்'' என்றாளாயிற்று.

**நீ மருவி:** அவன் ஆமருவி நிரை மேய்த்தவனாகையாலே திரியக் (பிராணி) சாதியான உனக்கும் முகந்தருவான்; நீ சென்று கிட்டலாம். அவனுடைய சீல குணத்தைக் கண்டும் 'அவரை நாம் தேவர் என்று அஞ்சினோமே' (21) என்று மருண்டு பின்வாங்கின என்னைப் போலன்றி அருகே பொருந்தி நிற்கலாம்.

**அஞ்சாதே நின்று:** வார்த்தை சொல்லும். விஷயத்திலும் அஞ்சவேண்டா; 'நம்முடைய அந்தப்புரத்தி

லிருந்து வந்தவர்கள் என்று தோற்றும்படி செருக்கி வார்த்தை சொல்ல வேண்டும்.

'அவர்க்கு அறிவிக்க வேண்டிய வார்த்தை என்ன?' என்று வண்டு கேட்க. **'ஓர் மாது நின் நயந்தாள்'** என்று சொல்லுக; 'ஒருத்தி' என்று சொல்லும் போதே அவரே தெரிந்து கொள்வர். 'ஒரு காட்டிலே ஒரு மான் அம்பு பட்டுக் கிடந்து துடிக்கின்றது' என்றால் உடனே அம்பு எய்தவனுக்குத் தெரியுமல்லவா?

**நின் நயந்தாள்:** 'ஓர் மாது' என்றாலே போதுமானது. அதற்கு மேலும் ஒருவார்த்தை சொல்ல வேண்டும் என்று நீ கருதினாயாகில் 'நின் நயந்தாள்' (உன்னை ஆசைப் பட்டிருக்கின்றாள்) என்று சொல்லுக. ஒரு தாழ்ந்த புருஷனை ஆசைப்பட்டாளல்லள்; பரம புருஷனான நின்னை ஆசைப்பட்டாள் என்று சொல்லுக; பரத்துவத்திலே ஆசைப்பட்டிலள், வியூகந்திலே ஆசைப்பட்டிலள், விபவவதாரங்களிலே ஆசைப்பட்டிலள், அந்தர்யாமித்துவத்திலே ஆசைப்பட்டிலள், ஆசைப்படுவதற்குரிய அர்ச்சாவதாரத்திலே ஆசைப்பட்டாள் என்று சொல்லுக'

**இறையே இயம்பிக் காண்:** 'முற்ற முடிய வார்த்தை சொல்ல வேண்டியதில்லை; சிறிது வாயைத் திறக்கும் போதே உன்னை அவர் எங்ஙனம் கொண்டாடப் போகின்றார், பார்; அநுமன் பெற்ற பரிசும் குறைவு என்னும் படியன்றோ நீ வெகுமானம் பெறப் போகின்றாய். நான் சொல்லவேண்டா; நீயே! அநுபவத்தில் அறிவாய்' என்கின்றாள்.

**நாரை விடுதூது:**

நீர் வானம் மண் எரி கால்
 ஆய் நின்ற நெடுமால்தன்
தராய நறுந்துளவம்
 பெருந்தகையேற்கு அருளானே'

நீராரும் வளர்பொழில்சூழ்
திருவாலி வயல்வாழும்
கூர்வாய சிறுகுருகே!
குறிப்பறிந்து கூறாயே (3.6:3)

வண்டைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கும் போதே பரகால நாயகியின் கண்வட்டத்தில் நாரை யொன்று வருகின்றது. அதனைப் பார்த்துப் பேசுகின் றாள்: "சோலை வாய்ப்புப் பொருந்திய திருவாலியின் கழனிகளிலே மேய்ந்து வாழ்கின்ற கூரிய வாயையுடைய சிறுகுருகே! எல்லாப் பொருள்களும் தானேயாய் நிற் கின்ற சர்வேசுவரனான வயலாளி மணவாளன் தனது திருத்துழாய் மாலையை எனக்கு அருள் செய்கின்றிலன்; (அதாவது-மார்பிலணிந்துள்ள மணமாலை என் கொங் கைத் தடத்தில் நெருக்குண்ணும்படி வந்து தழுவுகின்றா னிலன்). அவனுடைய திருவுள்ளம் என்மீது மாறி விட் டதோ? அறியேன். நீ சென்று அவனது திருவுள்ளத் தைத் தெரிந்து கொண்டு வந்து எனக்குச் சொல்ல வேண் டும்; நானொருத்தி இருக்கின்றேன் என்கின்ற நினை வோடேயிருந்து இவ்விடம் வருவதாக உள்ளானா? அல்லது, இத்தலையை மறந்தே யொழிந்தானா? அவனு டைய கருத்து இருக்கும் நிலையை அறிந்து கொண்டு வந்து எனக்குச் சொல்வாய்" என்கின்றாள்.

**குறிப்பறிந்து கூறாய்:** "அவனுடைய திருவுள்ளத்தை அறிந்து வந்து என்னிடம் சொல்லுக" என்ற பொருள் தவிர, மற்றொரு பொருளையும் சிந்திக்கலாம். அதாவது —" நான் உனக்குச் சொல்லும் தூது வார்த்தையை அவனிடம் சென்று திடீரென்று சொல்லிவிடாதே; எந்தச் சமயத்தில் சொன்னால் பலிக்குமோ அந்தச் சமயத்தில் சொல்லவேண்டுமாதலால் அந்தக் குறிப்பைத் தெரிந்து கொண்டு என் வார்த்தையை அவனிடம் சொல்லுக"

என்பதாம். ''நான் ஆற்றாமையாலே கண்ணாம் சுழலை யிட்டுச் சொன்னவற்றையெல்லாம் அங்குச் சொல்லாதே; அவன் தரிக்கும்படி அளவறிந்து வார்த்தை சொல்லுக என்றுமாம்'' என்ற பெரியவாச்சாம் பிள்ளை வியாக்கியான சூக்தியின் போக்கியதை அநுபவிக்கத் தக்கது.

திருநெடுந் தாண்டகந்திலும் நாரை விடுதூதாக ஒரு பாசுரம் காணப் படுகின்றது. இது திருக்கண்ணபுரத்து எம்பெருமானுக்குத் தூது விடுவதாக அமைந்தது.

செங்கால மடநாராய்! இன்றே சென்று
திருக்கண்ண புரம்புக்கு என்செங்கண் மாலுக்கு
என்காதல் என்துணைவர்க்கு உரைத்தி யாகில்
இதுஒப்பது எமக்குஇன்பம் இல்லை; நாளும்
பைங்கானம் ஈதுஎல்லாம் உனதே ஆகப்
பழனமீன் கவர்ந்துண்ணத் தருவேன்; தந்தால்
இங்கேவந் தினிதிருப்பது உன்பெடையும் நீயும்
இருநிலத்தில் இனிதின்பம் எய்த லாமே (27)

[செங்கால-சிவந்த கால்களையுடைய; மட-அழகிய; காதல்-விருப்பம்; நாளும்-நீ உள்ள காலமெல்லாம்; உனதே ஆக-உனக்கு உரியதாகும் படியாக; பழனம்-வயல்; பெடை-மனையாட்டி.]

முன்பாசுரத்தில் (26) வண்டைத் தூதுவிட்டாள்; அது சென்று தூதுரைத்துத் திரும்பும் அளவும் தரித்திருக்க மாட்டாமையால் பின்னையும் நாரையொன்றைத் தூது விடுகின்றாள். பிராட்டியைத் தேடும் பொருட்டு எல்லாத் திசைகளிலும் வானர முதலிகளை ஏவினாப்போலே இவளும் கண்ணாற் கண்டவற்றையெல்லாம் ஏவுகின்றாள். இராமாவதாரத்தில் வானரசாதி வீறுபெற்றது போலே ஆழ்வார்கள் அவதரித்த பின்பு பட்சி சாதி வீறு பெற்றது என்பர் பராசரபட்டர்.

'செங்கால மடநாராய்!' என்று மிக்கு இரக்கந் தோன்றக் கூவினதும் நாரையொன்று இசைவு தோன்ற அருகே வந்து நிற்கின்றது. இன்றே சென்று; நாளை பார்த்துக் கொள்வோம் என்று இருந்துவிடலாகாது; இப்போதே செய்ய வேண்டிய காரியம் காண். 'நான் பிராட்டியைப் பிரிந்து ஒரு நொடிப்பொழுதும் பிழைத் திருக்க மாட்டேன்' என்ற அவர் படியைப் பார்த்தாலும் காலதாமதம் செய்தலாகாது. என் நிலையைப் பார் தாலும் கால தாமதம் செய்யலாகாது. இப்பொழுதே புறப்பட வேண்டும்.

நாரை 'எவ்விடத்திற்கு?' என்ன 'திருக்கண்ணபுரம் புக்கு' என்கின்றாள் பரகாலநாயகி. முன் பாசுரத்தில் திருவழுந்தூருக்குச் செல்லுமாறு வண்டைத் தூதுவிட்ட ஆழ்வார் நாயகி இப்பாசுரத்தில் அத்திருப்பதியை விட்டுத் திருக்கண்ணபுரத்திற்குத் தூதுவிடுவானேன்? என்னில்: அந்த வண்டைத் திருவழுந்தூரில் அவன் கண்டிருப்பன்; அங்குத் தரித்திருக்க மாட்டாமல் அந்த வண்டுடன் அரைகுலையத் தலைகுறைய எதிரே வந்து ஒரு பயணம் புகுந்து திருக்கண்ணபுரம்வரை வந்திருக் கும் சமயம் இப்போது; அங்குச் செல்லலாம் என்கின்றாள் போலும். பொதுவாக எம்பெருமானை நோக்கித் தூது விடுகின்றாளாதலால் எந்தத் திருப்பதியை நோக்கித் தூதுவிடினும் குறையொன்றும் இல்லை என்க.

திருக்கண்ணபுரத்தில் அவரைக் கண்டுபிடிக்கும் வகை ஏதென்று நாரை வினவ, என செங்கண் மாலுக்கு என்கின் றாள். "அவர் என்னிடத்தில் கொண்டிருக்கும் மதி மயக்கம் (வியாமோகம்) எல்லாம் திருக்கண்களிலே காணலாம்படி இருக்கும் காண். 'கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப் பெரியவாய கண்கள்' என்னைப்பேதைமை செய்தனவே! (அமனாதி-8)

என்று திருப்பாணாழ்வார் கூறுவது போல் என்னைப் பிச்சேற்றின கண்களே அவரைக் கோள் சொல்லித் தருமே; என்னைப் பிரிந்திருக்கையிலே அவருக்கு உறக்கம் இராது; அதனாலும் கண்கள் குதறிச் சிவந்திருக்கும்; அந்த அடையாளம் கொண்டே அவரை இன்னார் என்று அறிந்து கொள்ளலாம்'' என்கின்றாள்.

**என் துணைவர்:** எந்த நிலையிலும் அவரே எனக்குத் துணையாயிருப்பவர்; கலந்து பிரிந்த போதும் என் ஆற்றல் குலையாதபடி குணாநுபவத்தாலே தரிப்பிக்க வல்ல துணைவர் என்ற படியைக் குறிப்பிடுவது.

அவரைக் கண்டு கூறவேண்டிய வார்த்தை என்? என்று நாரை வினவ, **'என்காதல் உரைத்தியாகில்'**[5] என்கின்றாள். ''நீ அவருக்கு வேறொன்றும் சொல்ல வேண்டா; 'இங்ஙனம் ஆசைப் பட்டுக் கிடக்கின்றாள் ஒருத்தி' என்று மட்டிலும் சொன்னால் போதும். மற்றையோருடைய காதலைக் காட்டிலும் தன்னுடைய காதல் மிகவும் சிறந்தது என்பது தோன்ற 'என் காதல்' என்கின்றாள்.

சொல்லாது ஒழிய கில்லேன் அறிந்த
அறிந்த சொல்லில் நும்அடியார்
எல்லா ரோடும் தக்க
எண்ணி யிருந்தீர், அடியேனை;
நல்லார் அறிவீர், தீயார்
அறிவீர் நமக்கிவ் வுலகத்தில்
எல்லாம் அறிவீர் ஈதே
அறியீர், இந்த ஞரீரே? (4,9:6)

என்ற பாசுரம் இங்கு அநுசந்திக்கத் தக்கது.

**என்காதல் :** என்னுடைய காதல் மற்றுமுள்ள முமுட்சுகளின் காதல் போலன்று; அயிர்வறும் அமரர்களின்

காதல் போலன்று. அயர்வறும் அமரர்கள் அதிபதியின் காதல் போலும் அன்று 'என்னுடைய காதல்' என்று சொல்லுவதே சிறந்தது. 'பரதாழ்வானுடைய நோய்' என்றால் மிகச் சிறந்ததென்று புகழ் பெற்றதன்றோ? அது போலே.

**உரைத்தியாகில் :** 'அங்குச் சென்றவாறே அவருடைய வடிவழகாலே கால் தாழ்ந்து போன காரியத்தை மறக்கவும் கூடும்; தன்னையும் மறக்கும் படியாக அன்றோ அவ்விடத்து இனிமை இருப்பது? அப்படிப்பட்ட அந்த வடிவழகில் கால் தாழாமல் தரித்து நின்று என் காதலை அவர் பக்கலில் உரைக்கவல்லையாகில்' என்கின்றாள். 'நீ வாய்படைத்தற்கு இதுவன்றே பயன்? பல வார்த்தைகளையும் சொல்லி வருகிற உன் வாயிலே என் விஷயமாக இந்த ஒரு வார்த்தை வந்தாலாகாதோ?' என்கின்றாள்.

'நான் சொன்ன மாத்திரத்தில் அவர் வந்திடுவாரோ?' என்று நாரை சொல்ல, **'உரைத்தியாகில் இது வொப்பதெமக்கில்லை'** என்கின்றாள். 'அவர் வரட்டும், வராமல் போகட்டும்; நீ அவரிடம் சென்று என் காதலைச் சொல்லுவதே எனக்குப் பரமானந்தம்' என்கின்றாள். அவர் பரம சேதநரன்றோ? தூதுரை செவிப்பட்டால் வாராதொழிவரோ? வந்தே தீருவர்' என்றிருக்கின்றாள்.

'எனக்காகச் சென்று தூதுரைத்தல் மாத்திரம் போதாது; அவ்வுபகார வாக்காலே நான் உனக்குச் செய்யும் சிறிய உதவியையும் அங்கீகரிக்க வேண்டும்' என்கின்றாள். **நாளும் பைங்கானம் ஈதெல்லாம் உனதேயாகப் பழனமீன் கவர்ந்துண்ணத்தருவன்:** பிரிந்தார் இரங்கும் இடம் நெய்தல் நிலமாகையாலே கடற்கரையிலேதான் இருக்கின்றாளாய், 'பரப்புடைத்தான கடற்கரைச் சோலையெல்லாம் எந்நாளும் உன் வசத்திலிருக்கும்படி பண்ணிவைப்பேன்; ஆனைக்கன்று போலேயிருக்கின்ற மீன்களை நீ மேல் விழுந்து புசிக்கும்படியாகச்

சேகரித்துத் தருவேன்' என்கின்றாள். இவ்வாறு புருஷ காரக் கிருத்தியம் பண்ணி பகவத் விஷயத்திலே சேர்ப்பிக் கும் ஆசாரியனுக்கு 'பொன்னுலகாளீரோ!' (திருவாய் 6.8:1) என்னுமாப்போலே உபய் விபூதியும் அளித்தாலும் தகும் என்றதாயிற்று. ஆசாரியன். ஒருகால் உபகரித்து தான் விடுவர்; சீடன் வாழ்நாள் உள்ள அளவும் அதனைச் சொல்லிக்கொண்டே இருக்கக் கடவன் என்ற சாத்திரப் பொருளும் இதில் விளங்கக் காணலாம். 'பழனமீன் கவர்ந்து உண்ணத் தருவன்' என்றதன் உள்ளுறைப் பொருள்: 'நாரைக்கு மீன் எப்படி இனிதோ அப்படி ஆசாரியனுக்கு உகப்பான பொருளைத் தந்து சிறு நன்றி யையாவது செலுத்த வேண்டும்' என்பதாகும்.

**தந்தால், இங்கே வந்து இனிதிருந்து உன்பெடையும்' நீயும் இருநிலத்தில் இனிதின்பம் எய்தலாம்:** ''நான் பண்ணின சிறிய உபகாரத்தை ஏற்றுக்கொண்டு நான் இருந்த இடத்தே வந்து புசிக்க வேண்டும்; தனியாக வந்திருக்க ஒண்ணாது. அபிமத விஷயத்தோடே கூட வந்திருக்க வேண்டும். நான் தனியே கிடந்து படுகின்ற வருத்தம் தீர உன்னையாவது கூடியிருக்கும் இருப்பிலே காணப்பெற வேண்டும். இவ்வாறு நானும் வாழ்ந்து நீயும் இனிது வாழ்ந்து நோக்க வேண்டும்'' என்கின்றாளா யிற்று.

**புள்ளினங்களைத் தூது விடுவது:** திருப்புல்லாணி வரை சென்று தொழவேண்டும் என்று முயன்ற பரகால நாயகி யின் முயற்சி பயன்படவில்லை, கால் நடை தாராதபடி தளர்ச்சி வுண்டாயிற்று; ஆகவே கண்ணிற் கண்ட பறவை களைத் தூதுவிடுகின்றாள்.

முன்னம் குறளுருவாய்
 மூவடிமண் கொண்டளந்த
மன்னன் சரிதைக்கே
 மாலாகில் பொன்பயந்தேன்;

பொன்னங் கழிக்கானல்
புள்ளினங்காள்! புல்லாணி
அன்னமாய் நூல்பயந்தற்கு
ஆங்கிதனைச் செப்புமினே (9.4;2)

[முன்னம்-முன்பொருகால், மன்னன்-தேவாதி தேவன்; புள்-பறவை; நூல்-வேதம்; பயந்த-உபகரித்த ]

புல்லாணி எம்பெருமானிடம் சில பறவைகளைத் தூதுவிடு வதாக அமைந்த பாசுரம் இது. ''அடியார்கட்குக் காரியம் செய்யமாட்டாதவனையோ நான் ஆசைப்பட்டுத் துடிக் கின்றேன்? பயனையே கருதும் இந்திரனுடைய கண்ணீ ரைக் கண்டு பொறுத்திருக்கமாட்டாமல் தன்னை அழிய மாறியும் காரியம் செய்தவனன்றோ அவன்?'' மாசுணாச் சுடருடம்பாய் மலராது குவியாது'' (திருவாய் 3.1:8) என்னும்படி எப்போதும் ஒருபடிப் பட்ட தன்மையை உடைத்தான திருமேனியை வாமன வடிவ மாக்கி ''அலம்புரிந்த நெடுந்தடக்கை''யைக் (திருநெடுந். 6) கொண்டு தானம் பெற்று மூவுலகளந்தான்; ஒருபோது தன்னை அநுசரித்திருந்தும் மற்றொரு போது படை யெடுத்து எதிரம்பு கோத்துத் திரிகின்ற இந்திரனுக்காக இத்தனை காரியம் செய்தான் என்று கேட்டு 'அப்படிப் பட்டவன் அந்தோ! பயன் கருதாத நமக்கு அப்படிப்பட்ட அருந்தொழிலொன்றும் செய்யாவிடினும் முகத்தையும் காட்டமாட்டா தொழிகின்றானே' என்று வருந்து வதாகச் சொல்லுகின்றாள் முன்னிரண்டடிகளால். மேனிநிறம் வேறுபடுவதைப் பொன்பயத்தலாகச்சொல்லு வது கவிமரபு.

**பொன்னங்கழிகானல்** : புல்லாணிகடற்கரைக்குஇத்திரு நாமம் இட்டு மகிழ்கின்றார் பரகாலர். வானமாமலையில் **சேற்றுத்தாமரை** (திருவாய் 5.7:1) என்ற திருநாமத்துடன்

தடாகமும் '**தேனமாம் பொழில்** [5.7:6) என்ற திருநாமத்துடன் தோப்பும் திருமோகூரில் **தாளதாமரை** (10.1:1) என்ற திருநாமத்துடன் தடாகமும் நம்மாழ்வார் திருவாக்கில் வந்துள்ளமை ஈண்டு நினைந்து மகிழ்த்தக்கது.

**அன்னமாய் நூல் பயந்தாற்கு :** இந்தச் சிறப்புப் பெயரிட்டு எப்பெருமானைக் குறிப்பிடுவதற்கு இரண்டு வகையான கருத்து உண்டு (1) 'பிரமன் இழந்த வேதங்களை அன்னமாய் அவதரித்து மீட்டுக் கொடுத்தமையால், அதுபோலவே தான் இழந்திருக்கும் மேனி நிறத்தையும் மீட்டுக்கொடுக்கவல்லவர் அவர் காண்மின்' என்று குறிப்பிடுதல் ஒரு கருத்து; (2) தூது போகின்ற நீங்கள் இவள் நம்மை பரபுருடன் பக்கல் போகச் சொல்லுகின்றாளே; இது நம்மாலாகுமோ? அவர் எங்கே? நாம் எங்கே என்று நீங்கள் அஞ்சவேண்டுவதில்லை; அவன்தான் அன்னமானவனாகெயாலே உங்கள் சாதியாக இருப்பவன் காண்மின்; இனத்தார் பக்கல் செல்லுவதற்கு அஞ்சவேண்டா' என்று குறிப்பிடுதல் மற்றொரு கருத்து.

**ஆங்கு இதனைச் செப்புமினே:** இங்கே பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானம் : ''ஒருத்தியின் நிறம் மீட்கைக்காக வந்திருக்கின்ற இடத்தே அறிவியுங்கள்; ஒருத்திக்கே காரியம் செய்யக் கடவோம் என்னும் நியதி உண்டோ?'' என்பது. ஆங்கு என்பது புல்லாணியைக் குறிக்கும். தன்னைப் பிரிந்து நிற வேறுபாடு அடைந்து வருந்திக்கிடக்கின்ற சீதாப்பிராட்டியின் நிறத்தை மீட்கைக்காக (அதாவது, அவளுடன் புணர்வதற்காக) வந்து நிற்கின்ற தலமாதலால் அக்கருத்தை உட்கொண்டு '**ஆங்கு**' என்று சொன்னபடி; 'சீதையாகின்ற ஒருத்திக்கே காரியம் செய்யக் கடவோம் என்று ஏதேனும் நியதி உண்டோ? பரகால நாயகிக்கும் சிறிது உதவக் கூடாதோ?' என்று சொல்லுங்கள் என்றவாறு. 'செப்புமின்' என்றதனால் அப்பெருமானை ஈண்டுக் கொண்டு வர முயலவேண்டா; என்

நிலைமையை அவருக்கு அறிவித்தால் போதுமானது; காரியம் தானாகவே நடைபெறும்.

அடுத்த பாசுரத்திலும் புள்ளினங்களை நோக்கி, 'தெய்வச் சிலையாற்கு என் சிந்தை நோய் செப்புமினே' என்று கூறுகின்றாள். ''சீதையின் சிந்தை நோயைத தவிர்ப்பதற்கென்றே வில் பிடித்து நிற்கும் அவர், அந்த வில்லைக் கொண்டே என் சிந்தை நோயையும் தவிர்க்கும் படி சொல்லுங்கள்'' என்றுகின்றாள் போலும்.

இங்ஙனம் ஆழ்வார் நாயகி பல இடங்களில் தூது விட்டாலும் அடைத்தக்க பொருள் ஒன்றேயாகும். ஐந்து நிலைகளிலும் இருக்கும் எம்பெருமான் ஒருவரேயாவர்.

# 20. ஆழ்வாரின் இறையநுபவம்

இறைவனுடைய அடியார்கள் இறைவனை அநுபவித்தல் பலவகைப் பட்டிருக்கும். சிலர் அவனுடைய திருநாமங்களைச் சொல்லி அநுபவிப்பர். சிலர் அவனுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லிச் சொல்லி அநுபவிப்பவர்'' இன்னும் சிலர் இறைவனுடைய வடிவழகை வருணித்துப் பேரின்பம் கொள்வர். மேலும் சிலர் இறைவன் கோயில் கொண்டருளின திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசியும், அவ்விடங்களில் அபிமானமுள்ள வைணவர்களின் பெருமையைப் பேசியும் அநுபவிப்பர். இவை தவிர நாயகி சமாதியை ஏறிட்டு கொண்டு வேற்று வாயாலே அநுபவிக்கும் நிலைமை ஒன்று உண்டு. இங்ஙனம் இறையநுபவம் பலவகையாக நிகழ்வதை ஆழ்வார்களின் பாசுரங்களில் கண்டு மகிழலாம். அன்றியும், இந்த ஆழ்வாரின் பாசுரங்களை ஆழ்ந்து கற்போர் அவரது பகவதநுபவம் இரண்டு வழிகளில் செல்வதைக் காணலாம். இவரிடம் ஞானதலை தூக்கி நிற்குங்கால் தாமான தன்மையில் (அதாவது ஆழ்வாராகவே நின்று) இருந்து கொண்டு இறைவனை அநுபவித்து அந்த அநுபவத்தைப் பாசுரங்களாக வெளியிட்டுள்ளார். அந்த அநுபவம் பல்வேறு விதமாக வெளிப்பட்டதை இந்தஇயலில்விரித்துரைக்கப் பெறுகிறது. பிரேமம் (காதல்) முறுகி மீதூர்ந்து நிற்குங்கால் பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு வேற்று வாயாலே பெண் பேச்சாகப் பாசுரங்களாக வெளி

யிட்டுள்ளார். இந்த அநுபவம் இயல்-16, 17, 18, 19 களில் விளக்கப்பெற்றுள்ளது.

**திருநாமங்களைச் சொல்லி அநுபவித்தல்:** சகஸ்ர நாம அர்ச்சினை இந்த முறையினின்றே எழுந்தது என்று கருதலாம். அநாதி காலம் சிற்றின்ப நுகர்ச்சிகளில் ஊன்றியவராய் எம்பெருமானை மறந்திருந்த இவ்வாழ்வார் ஒரு காரணமும் பற்றாத எம்பெருமானின் கருணையால் திருமணங் கொல்லையில் வழிப்பறி செய்து கொண்டிருந்த காலத்தில் திருஎட்டெழுத்து மந்திரம் பெற்றுத்தன் சொரூபம் உணர்ந்து, தாம் உய்வதோர் பொருளை அறிந்து கொண்ட களிப்பால், எக்களிப்பால், 'நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்று ஒரு முறைக்கு ஒன்பது தடவை சொல்லி மகிழ்கின்றார். இந்தப் பாசுரங்களையும் (1.1) பன்முறைப்படித்துப் படித்து அநுபவித்தால் அஃது ஒப்பற்ற அநுபவம் என்பதை அறியலாம்.

'நற்றுணையாக, நான் உய்ய'க் கண்டு கொண்ட நாராயணா என்னும் நாமம் அருளும் நன்மைகளையெல்லாம்,

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுந்துயர் ஆயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்,
நாராய ணாஎன்னும் நாமம் (6)

[குலம்-உயர்ந்த குலம்; செல்வம்-ஐசுவரியம்; நீள் விசும்பு-பரமபதம்; பெருநிலம்-கைங்கரியபதவி; வலம்-சக்தி; ஆயின-இதங்கள்]

என்ற பாசுரத்தால் ஆழ்வாரே எடுத்துக் காட்டி மகிழ்கின்றார். ''திருமந்திரம் நற்கலத்தைத் தரும் ஸ்ரீவைஷ்ணவ லட்சுமியை தரும்; கழுவாயால் தீரக் கூடிய பாபங்களும் கட்டாயமாக அநுபவித்தே தீரவேண்டிய பாவங்களும் எவ்வளவு இருப்பினும் அவை அடியவர் திறத்தில் ஒன்றுமில்லாமல் போகும்; தரை மட்டமாக்கி விடும்; ஒப்பற்ற ஆனந்தமயமான வீடுபேற்றையும் நல்கும்; அங்குக் கைங்கரியம் செய்யும் பணியையும் அளிக்கும். இடைவிடாமல் பகவதநுபவம் தருவதற்குப் பாங்கான ஆற்றலைத் தரும். மேலும் அறியாதவற்றையும் தானே கொடுக்கும். பத்துத் திங்கள் மெய்நொந்து பெற்ற தாய் செய்யும் நன்மைகளை விட அதிகமாகவே செய்யும்'' என்று விவரிக்கின்றார். ஆகவே இதனை,

துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நாம்முடை வினைக்கு
நாராய ணாவென்னும் நாமம் (10)

என்று அன்பர்க்கு உபதேசிக்கின்றார் ஆழ்வார். ''எனக்கு என்றும் தேனும் பாலும் அமுதமாய திருமால் திருநாமம் —நமோ நாராயணமே'' (6.10:6) என்று நமக்கு அமுதாகிய இதுவே கொடுவினைக்குக் கொடிய நஞ்சாகஇருக்கும்; ஆகையால் இத்திருமந்திரத்தைத் தவிர மற்றதெல்லாம் சம்சாரத்திலே வேர் விடுவதற்கு உறுப்பாக இருக்கும் என்றும், இஃதொன்றுமே சம்சாரத்தை வேரறுக்க வல்லது என்றும் தெளிந்து கொண்டு எப்போதும் இதனை அநுசந்திப்பதிலேயே ஊன்றியிருங்கள்'' என்று அன்பர்கட்கு உபதேசித்துத் தலைக்கட்டுகின்றார்.

திருவேங்கடம்பற்றிய ஒரு பாசுரத்தில் ய ஒரு குறிப்பு உள்ளது.

பேசு மின்திரு நாமம் எட்டெழுத்
　　தும்சொல் லிநின்று, பின்னரும்
பேசு வார்தமை உய்ய வாங்கிப்
　　பிறப்ப றுக்கும் பிரானிடம்
வாச மாமலர் நாறு வார்பொழில்
　　சூழ்த ரும்;உல குக்கெல்லாம்
தேச மாய்த்திக ழும்ம லைத்திரு
　　வேங்க டம்அடை நெஞ்சமே![1]

[சொல்லிநின்று-அநுசந்தித்து; பேசுவார்-அநுசந்திப்பவர்; உய்ய-உய்விக்க; அறுக்கும்-தொலைக்கும்; நாறும்-பரிமளிக்கும்; தேசம்-திலகம்]

என்பது ஒரு பாசுரம். இதில் முன்னிரண்டடிகள் பிறருக்கு உபதேசம்; பின்னிரண்டடிகள் தன் மனத்திற்கு அறிவுறுத்தல்.

முன்னிரண்டு அடிகள்: "திரு எட்டெழுத்து மந்திரத்தை அநுசந்தித்தால், ஒருமுறை அநுசந்தித்தாயிற்று என்று மன நிறைவு பெற்று ஓய்ந்து விடாமல் மேன்மேலும் அத்திருமந்திரத்தையே பேசிக்கொண்டிருப்பவர்களை உய்விக்கச் செய்து அவர்களுக்குச் சம்சார சம்பத்தத்தைப் போக்கித் திருநாட்டிலே நித்திய கைங்கரிய சாம்ராஜ்யமளிக்கும் பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தை முமுட்சுக்களே! நீங்கள் எல்லோரும் சொல்லுங்கள்; 'திருவேங்கடம்' என்று கற்கின்ற வாசகமே' என்னும்படியாக நீங்கள் எல்லோரும் 'திருவேங்கடம், திருவேங்கடம்' என்று சொல்லுங்கள்" என்ற கருத்தைத் தெரிவிக்கின்றன.

மேலும் திருநறையூர் பற்றிய ஒரு திருமொழி (6.10) முழுதும் 'நமோ நாராயணமே' என்று எட்டெழுத்து மந்திரத்தைப் பேசி இந்த ஆழ்வார் அநுபவிக்

1. பெரி.திரு. 1.8:9

கின்றார் இந்த ஆழ்வார் திருநறையூர் நம்பியிடம் திருவிலச்சினை (சங்க சக்கரம்) பெற்றார் என்பதை நாம் அறிவோம். இதனால் திருநறையூர் நம்பி இவ்வாழ் வாருக்கு ஆசாரியருடைய திருநாமமே அநுசந்தேய மாத லால் பெரிய திருமந்திரமாகின்ற அத்திரு நாமத்தைத் தாமும் அநுசந்தித்துப் பிறர்க்கும் கற்பிக்கும்படிச் சொல் லுகின்றார் இத் திருமொழியில்.

இந்த எட்டெழுத்து மந்திரத்தைப் பேசும்போது அதற்கு மூலமாக இருக்கும் எம்பெருமானின் அவதார சேஷ்டிதங்களை நாவினிக்கச் சொல்லிச் சொல்லி இறைய நுபவத்தில் ஈடுபடுகின்றார்.

கிடந்த நம்பி குடந்தை மேவிக்
கேழலாய் உலகை
இடந்த நம்பி எங்கள் நம்பி
எறிஞர் அரணழிய
கடந்த நம்பி கடியார் இலங்கை
உலகை ஈரடியால்
நடந்த நம்பி நாமம் சொல்லில்
நமோநா ராயணமே (1)

[கிடந்த-பள்ளி கொண்டிருக்கின்ற; மேவி-பொருந்தி; கேழல்-வராகம்; நம்பி-சுவாமி; எறிஞர்-சத்துருக்கள்; அரண்-கோட்டை; கடந்த-நாசம் செய்த; நடந்த-அளந்து கொண்ட.]

''வராக அவதாரத்தில் பூமிப் பிராட்டியை மீட்ட விடாய் தீரவும் இராமாவதாரத்தில் அரக்கரை அழித்து இலங்கையைப் பாழ்படுத்தின சிரமந்தீரவும் மாவலியின் செருக்கை யடக்குவதற்காக ஈரடியால் உலகமெல்லாந் தாவியளந்த ஆயாசம் தீரவும் திருக்குடந்தையில் திருக்கண் வளர்ந்தருளா நின்ற பெருமான் திருநறையூரில் திகழா

நின்றான்; அவனுடைய திருநாமம், 'நமோ நாராயணமே' என்பதாகும் என்கின்றார். இவ்வாறே எல்லாப் பாசுரங்களிலும் அவதார சேஷ்டிதங்களை நாவினால் நவிற்றி ஆழ்வார் இறையநுபவத்தில் திளைப்பதைக் காண்கின்றோம். ஒன்பதாம் பாசுரத்தில் ''கடலை ஆடையாக வுடைய பூமிப் பிராட்டியார், பெரிய பிராட்டியார், நான்முகன், சிவன், இந்திரன் மற்றுமுள்ள தேவர்கள் இவர்கட்கெல்லாம் நாதன் என்றே நாராயண நாமத்தின் பொருள்'' என்று வெளியிட்டு, ''துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்; துயரிலீர் சொல்லிலும் நன்றாம், நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணா என்னும் நாமம்'' (1.1:10) என்றருளிச் செய்ததை நினைந்த விண்ணம் ''நங்கள் வினைகள் தவிர உரைமின் நமோ நராயணமே'' என்கின்றார். இதனைத் தாமும் அநுபவித்து பிறரையும் அநுபவிக்குமாறு செய்கின்றார்.

திருமந்திரத்தின் முக்கியமான பொருள் பாகவத சேஷத்துவமே என்பதை ஆழ்வார் பாசுரம் விளக்குகின்றது. 'மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று உற்றதும் உன் அடியார்க்கு அடிமை' என்ற பாசுரப்பகுதியைக் காண்க.[1] பாகவத சேஷத்துவத்தின் விவரம் அடுத்து இயலில் காணலாம்.

**பகவத் குணாநுபவம் :** எம்பெருமானின் திருக்குணங்களைச் சொல்லிச் சொல்லி அநுபவித்தல் ஒருவகை பகவதநுபவம். எம்பெருமான் அநந்த கல்யாணகுணங்களின் நிதியாக இருப்பவன். அவனுடைய குணங்கட்கு ஓர் எல்லை இல்லை. பலவகைப்பட்டு எல்லையற்றிருக்கும் அத்திருக்குணங்கள் மேன்மைக் குணங்கள் என்றும் எளிமைக்குணங்கள் என்றும் இரண்டு பாகுபாடுகளை

1. இதன் விளக்கத்தைப் '**பாண்டி நாட்டுத் திருப்பதிகள்**' (பாரி நிலையம்' 184, பிரகாசம் சாலை, சென்னை-108)-பக் 165-166 காண்க.

உடையவை. ஞானம், சக்தி பலம், ஐசுவரியம், வீரியம் தேசு போன்றவை மேன்மைக் குணங்கள் (பரத்துவ குணங்கள்); வாத்சல்யம், செளலப்பியம், செளசீல்யம் போன்ற குணங்கள் (செளலப்பியகுணங்கள்) எளிமை குணங்கள். பகவத்குணங்களை அநுபவிப்போர் சிலர் பரத்துவ குணங்களில் ஈடுபடுவர்; சிலர் சில குணங்களில் இழிவர். பலர் இரண்டிலும் ஆழங்கால் படுவர்.

பரத்துவமும் செளலப்பியமும் தனித்தனியாகக் கொண்டாடத் தகுந்தவை அன்று: பயனற்றவையே யாகும் எம்பெருமான் இந்த இருவகைக் குணங்களாலும் நிறைந்தவன். அடியாரிடம் கூசாமல் வந்து பணிவதற் கீடான எளிமைக் குணங்களாலும் குறை வற்றவன்; வந்து பணிபவர்கட்கு விருப்பங்களைத் தலைக்கட்டித் தருவதற்கீடான மேன்மைக் குணங்களாலும் குறை வற்றவன். ஆகவே, பகவானுடைய குணங்களை அநுப விப்போருக்கு இரண்டும் பிராப்தமானவை.

இந்த ஆழ்வார் இந்த இரண்டுவகைக் குளங்களையும் பல பாசுரங்களில் அநுபவித்து மகிழ்ந்தவராயினும் இரண்டு திருமொழிகளில் விலட்சண மாக-மிகச் சிறப்பாக - அநுபவித்து மகிழ்கின்றார். இவற்றை இரண்டு வகை யாகவும் அநுபவிக்கின்றார். ஒரு திருமொழியில் (10.6) பரத்துவத்தை முன்னே பேசி செளலப்பியத்தைப் பின்னே பேசுவது இத் திருமொழி. கண்ணபிரான் திருவாய்ப்பாடி யில் களவு வழியில் தயிர் நெய் பால் முதலியவற்றை வாரி யுண்டு இடைச்சிகள் கையில் அகப்பட்டுத் தாம்பினால் கட்டுண்டு ஏங்கியிருக்கும் காலத்தில் அவனுடைய உண்மையான மேன்மையை அறிந்தவர்கள் 'எவ்வளவு மேன்மை தங்கிய இவன் எவ்வளவு எளிமையிலேயே இருக்கிறான்! இஃது என்ன ஆச்சரியம்?' என்று சொல்லி ஈடுபட்டபடியைத் தாமும் அநுகரித்துப் பேசுகின்றன இத்திருமொழியின் பாசுரங்கள் ஒவ்வொன்றும்.

*உளைந்திட் டெழுந்த மதுகை டவர்கள்*
*உலப்பில் வலியால் அவர்பால் வயிரம்*
*விளைந்திட்ட தென்றெண்ணி விண்ணோர் பரவ*
*அவர் நா ளொழிந்த பெருமான் முனநாள்*
*வளைந்திட்ட வில்லாளி வல்வா ளெயிற்று*
*மலைபோல் அவுணன் உடல்வள் உகிரால்*
*அளைந்திட் டவன்காண்மின், இன்றாய்ச் சியரால்*
*அளைவெண்ணெய் உண்டாப் புண்டிருந்*
*தவனே (3)*

*[உளைந்திட்டு-அஞ்சி நடு நடுங்கி; உலப்பு இல்-எல்லையில்லாத; வயிரம்-பகை; விண்ணோர்-தேவர்; பரவ-துதிக்க; நாள்-ஆயுள்; ஒழித்தட-முடித்த; வல்வாள் எயிறு-வலியவாள் போன்ற பற்கள்; அவுணன்-இரணியன்; உகிர் - நகம்']*

என்பது மூன்றாம் பாசுரம். மதுகைடவர்களை மாளச் செய்த பெருமையும், இரணியனுடைய உடலைப் பிளந்த வலிமையும் (பரத்துவ குணங்கள்) பேசி "இப்படிப்பட்ட பராக்கிரமசாலி இன்று அளை வெண்ணெய் உண்டு ஆய்ச்சியரால் ஆப்புண்டிருக்கும் எளிமை என்னே?" (எளிமைக்குணம்) என்று ஈடுபடுகின்றார். இங்கு ஒருவர் பேச்சாகச் செல்லுகின்றது பகவதநுபவம்,

மற்றொரு திருமொழி (11.5) ஆழ்வார் இரண்டு பிராட்டியார் நிலையை அடைந்து **ஏசிப் பேசுகின்ற** ஒருத்தியின் பாசுரத்தால் சௌலப்பிய குணத்தையும், **ஏத்திப் பேசுகின்ற** மற்றொரு பாசுரத்தாலே பரத்துவ குணத்தையும் அநுபவிப்பதாக நடைபெறுகின்றது.

*ஆழ்கடல்சூழ் வையகத்தார்*
*ஏசப்போய் ஆய்ப்பாடித்*
*தாழ்குழலார் வைத்த*
*தயிருண்டான் காணேடி*

தாழ்குழலார் வைத்த
  தயிருண்ட பொன் வயிறு, இவ்
ஏழ்உலகும் உண்டும்
  இடமுடைத்தாய் சாழலே (3)

[ஏடி-தோழி! வையகம்-பூமி; ஏச - தாழ்த்திப் பேச; சூழல்-கூந்தல் சாழலே-தோழி; ஆல்-ஆச்சரியம்]

என்பது மூன்றாம் பாசுரம். இதில் முன்னடிகள் இரண்டும் ஒருத்தி பாசுரம்; பின்னடிகள் இரண்டும் மற்றொருத்தியின் பாசுரம். முன்னிரண்டடிகளில் சௌப்பியகுணமும் பின்னிரண்டடிகளால் பரத்துவ குணமும் வெளியிடப் பெறுகின்றன.

"தோழி, எங்கள் பெருமான் மிகச் சிறந்தவன்; ஈருலகிற்கும் நாதன் என்றாயே; அஃது உண்மையாயின் அவன் 'ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி' (தே.பி.85.) என்றவாறு இருந்து கொண்டு மேன்மையாக விளங்க மாட்டானா? இந்த இருள்தருமா ஞாலத்தில் வந்து பிறந்தான்; தசரதசக்கரவர்த்திக்கு மூத்த மகனாகப் பிறந்தும், அரசுரிமையை இழந்து தன் மனைவியையும் கூட்டிக் கொண்டு கல்லும் முள்ளும் நிறைந்த காட்டிலே கால் நோவ நடந்து சென்றானே; மேன்மையுடையார் நிலை இதுவோ?" என்கின்றாள் ஒருத்தி.

"சகியே, ஐயோ, பரத்துவத்தில் கூடின இடத்தில் உள்ள செளலப்பியம் கொண்டாடத் தகுந்ததென்பதை அறிந்திலையே; 'கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்தான்' என்பதை மாத்திரம் பேசுகின்றாயே யன்றி அப்படி நடந்திருவடிகளையே வானவர்கள் சென்னிக்கு மலர்ந்த பூவாகக் கொள்ளுகின்றனர் என்பதை அறிந்திலையே! வானவர்களின் தலைகளிலேயே இருக்கவேண்டிய அத் திரு

வடிகள் அடியார்களைக் காப்பதற்காக வன்றோ காடுறைந்தன; தீயோர்களைத் துடைத்து நல்லோர் களைக் காத்தலை சங்கல்பமாத்திரத்தினால் செய்து விடாமல் கைதொட்டுச் செய்து நிறம்பெறவேண்டும் என்கின்ற விருப்பத்தினால் நல்லவர்களான முனிவர்களும் துட்டர்களான அசுரர்களும் இராக்கதர்களும் இருந்த விடங்களைத் தேடித் திரிந்து நடந்து சென்று செயல் முறையைப் பார்த்த மகாகுணம் அறியாயோ?'' என்கின்றாள் மற்றொருத்தி (1).

பெரியாழ்வார் **''என் நாதன் தேவிக்கு''** (3.9) என்னும் திருமொழியில் ஆய மங்கையரின் நிலையைத் தாமடைந்து ஒருத்தி கிருட்டிணாவதார வரலாற்றைப் பாடுவதாகவும், மற்றொருத்தி இராமாவதார வரலாற்றைப் பாடுவதாகவும், அருளிச் செய்ததும், **''கதிராயிரம்''** (4.1) என்னும் திருமொழியில் ஆழ்வாரே தம்மை இரண்டு வகையாக வகுத்துக் கொண்டு 'சர்வேசுவரனைக் கண்ணாலே காண வேண்டும்' என்று தேடுதலை ஒரு வகுப்பாகவும், 'அப்படித் தேடுகின்றீர்களாகில் அவனை உள்ளபடிக் கண்டார் உளர்' என்று விடையிறுத்தலை ஒரு வகுப்பாகவுமாக அருளிச் செய்ததும்; சூடிக் கொடுத்த சுடர்க் கொடியும் **'பட்டி மேய்ந்த காரேறு'** (14) என்னும் நாச்சியார் திருமொழியில் தன்னையே இரண்டு வகுப்பாக்கிக் கொண்டு ''இங்கே போதக் கண்டீரே'' என்று கேட்பதும், ''விருந்தாவனத்தே கண்டோமே'' என்று விடை கூறுவதுமாக அருளிச் செய்ததும் ஈண்டு நினைந்து மகிழத் தக்கன.

ஒருவர் இரண்டு மனிதர்களின் தன்மையை ஒரே சமயத்தில் அடைதல் என்பது பொருந்துமோ? என்னில்: எம்பெருமானின் அருளின் மிகுதியால் ஞானத்தில் தடையுற்றால் பொருந்தாதது ஒன்றில்லை. பரமபதத்தில் நித்திய

முக்தர்கள் ஒரே காலத்தில் பல உடலங்களைப் ஏற்பதாக உபநிடதங்கள் பகர்கின்றன; அது பொருந்துவது எம்பெருமான் அருளால் என்பது போலக் கொள்ளலாம்.

**வடிவழகை வருணித்துப் பேசுதல்:** அழகு என்பது ஒரு தத்துவம். 'உலகில் அழகுக்கு ஓர் எல்லை காண்பது, அவ்வடிவத்தைப் படைப்பவரின் தொழிற் குறைவினாலேயன்றி, அழகு என்னும் பொருளுக்கோ எல்லை இல்லை' என்று சித்தாந்தம் செய்து காட்டுவன் கம்பநாடன் சூர்ப்பணகையின் வாய்மொழியாக[3] சீதையைக் கண்டவுடன்,

> அரவிந்த மலருள் நீங்கி
> அடியிணை படியில் தோயத்
> திருஇங்கு வருவாள் கொல்லோ
> என்றகம் திகைத்து நின்ற[4]
>
> [அரவிந்தம்-தாமரை; இணை-இரண்டு; திரு-இலக்குமி; அகம்- மனம்]

என்று திகைத்து நின்ற சூர்ப்பணகை அழகு தன்னைப் படுத்தும் பாட்டைச் சொல்லுகின்றாள்.

> கண்பிற பொருளில் செல்லா;
> கருத்தெனில் அஃதே; கண்ட
> பெண்பிறந் தேனுக் கென்றால்
> என்படும் பிறருக்கு[5]

என்கின்றாள். பக்தர்களை இவ்வழகு ஈடுபடுத்தும் பாடு சொல்லுந் தரமன்று. அழகிய மணவாளனின் ஒவ்வோர் உறுப்பினழகிலும் ஈடுபட்டுப் பேசிய திருப்பாணாழ்வார்,

3. ஆரணி-சூர்ப்பண-60
4. ஷெ-59
5. ஷெ-60

கொண்டல் வண்ணனைக்
 கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்
 என்உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்
 கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்
 மற்றொன்றினைக் காணாவே.[6]

[கொண்டல்-மேகம்; வண்ணன்-நிறத்தன்; அண்டர்கோன்-நித்திய சூரிகட்குத் தலைவன்]

என்று முத்தாய்ப்பாகக் கூறுவர்.

சூடிக் கொடுத்த சுடர்க் கொடி அழகிய மணவாளரை "என் அரங்கத்து இன்னமுதர், குழல் அழகர் வாய் அழகர், கண் அழகர் கொப்பூழில் எழுகமலப் பூ அடிகர்"[7] என்று பேசி அவன் அழகில் ஆழங்கால் படுவர். மணக்கால் நம்பிகள்—அழகிய மணவாளனைக் காட்டி—ஆளவந்தாரைப் பக்தி நெறிக்குத் திருப்பின வரலாறும் உண்டு. உறங்கா வில்லியையும் பொன்னாச்சியாரையும் அழகிய மணவாளரின் எழிலுருவத்தைக் காட்டி அவர்களைக் விஷய காமத்தினின்றும் பகவத் விஷயகாமத்திற்கு உய்த்த பெருமையை எம்பெருமானார் பெறுகின்றார்.

நம்மாழ்வார் திருமாலிருஞ்சோலை அழகரின் திருமேனி அழகில் ஈடுபட்ட திறம் தனிச் சிறப்பு வாய்ந்தது. கற்பகத் தரு கப்பும் கிளையுமாகப் பணைத்துப் பூத்தாற் போலே நிற்கின்றான் எம்பெருமான். அவனது அழகு வெள்ளம் அலை மோதி ஆழ்வார்மீது பாய்கின்றது. எம்பெருமானை நோக்கி வினவுகின்றார்.

---

6. அமலனாதி-10
7. நாச். திரு. (11:2)

முடிச்சோதி யாய்உனது
    முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
    தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும்
    பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ?
    திருமாலே கட்டுரையே[8]

[முடி-தலை; அடி-திருவடி; படிச்சோதி-இயற்கை யான காந்தி; கடி-திருவரை]

என்ற திருப்பாசுரத்தில்.

காஞ்சி திருஅட்ட புயகரத்து எம்பெருமானின் உருவ வெளிப்பாட்டு அழகில் ஈடுபட்ட திருமங்கையாழ்வார் நாயகி பாவனையில்,

மேவி யெப்பாலும்விண் ணோர்வணங்க
    வேதம் உரைப்பர்,முந் நீர்மடந்தை
தேவி அப்பாலதிர் சங்கம; இப்பால்
    சக்கரம்; மற்றிவர் வண்ணம் எண்ணில்
காவி யொப் பார்; கட லேயு மொப்பார்;
    கண்ணும் வடிவும் நெடியராய் என்
ஆவியொப் பார்; (2.8:8)

[விண்ணோர்-நித்திய சூரிகள்; மேவி-சூழ்ந்து கொண்டு; முந்நீர் மடந்தை-இலக்குமி; தேவி-பட்டமகிஷி; வண்ணம்-நிறம்; காவி-கருநெய் தல்பூ; ஆவி-உயிர்]

என்று அநுபவித்துப் பேசுகின்றார். "என் முன்னே வந்து தோன்றின் பெரியவர் தனியராய் வந்திலர்; நித்திய சூரி

8. திருவாய்-3.1:1

கள் சுற்றிலும் சூழ்ந்து வணங்கி நிற்க வந்தார்; வாயில் நல்வேதம் ஓதும் வேதியர் என்று விளங்கும்படி வேதங் களை ஓதிக்கொண்டு வந்தார்; அருகில் பெரியபிராட்டி யார் தேவியாகத் திகழ்ந்தனள்; இருபுறத்திலும் திருவாழி திருச்சங்குகள் பொலிந்தன; கருநெய்தற் பூவோ! கடல் தானோ! என்னும்படியான வடிவு தோன்றிற்று; அவ்வடி வழகுக்கும் கண்ணழகுக்கும் எல்லை காண முடியவே இல்லை. என்னுடைய உயிர்த்தான் இங்ஙனம் உரு வெடுத்து வெளித்தோன்றுகின்றதோ என்று நினைக்கும் படிக்காதல் அன்புக்கு இலக்காக இருந்தார்'' என்கின்றாள் ஆழ்வார் நாயகி.

ஆழ்வார் நாகை அழகியாரின் சொக்கும் அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்து உருவெளிப்பாட்டில் கண்ட ஆழ்வார் நாயகி அவரை,

வம்பவி ழுந்துழாய் மாலை தோள்மேல்;
கையன ஆழிவும் சங்கும் ஏந்தி
நம்பர்நம் இல்லம் புகுந்து நின்றார்;
நாகரி கர்பெரி தும்இ ளையர்
செம்பவ ளம் இவர் வாயின் வண்மை
தேவர் இவரது உருவம் சொல்லில்
அம்பவ ளத்திர ளேயும் ஒப்பர் (9.2:4)

[வம்பு-பரிமளம்; ஆழி-சக்கரம்; கையன-கையி லுள்ளன; நம்பர்-சுவாமி; வண்ணம்-நிறம்;]

என்று வருணித்திடுவள். ''மணம் கமழுகின்ற திருத்துழாய் மாலையை இரண்டு தோள்களிலும் அணிந்துள்ளார்; திருக்கைகளிலே திருவாழி திருச்சங்குகளைப் பூவேந்துமாப் போலே ஏந்தியுள்ளார்; இப்படிப்பட்ட பரத்துவ நிலையி லுள்ளவர் நாம் இருக்கும் இடத்தே வந்து புகுந்துள்ளார்! பரம ரசிகராயும் உள்ளார்; இளம் பருவமுடையவர். இவ ருடைய திருப்பவளம் சிறந்த பவளம்போல் உள்ளது;

தேவாதி தேவராகத் தோற்றுகின்றார். திருவுருமோ பவ ளத்திரள் போலே மிகவும் விரும்பத் தக்கதாக உள்ளது'' என்கின்றாள்.

**திவ்விய தேச அநுபவம் (1):** திவ்விய தேசங்கள் சென்று அநுபவிக்குமாறு ஆற்றுப்படுத்தும் போக்கில் தாம் அவற்றை அநுபவிக்கும் வகை ஒன்று. தில்லைத் திருச்சித்திரக்கூடத்தைப்பற்றிப் பேசும் போது 'தில்லைத் திருச்சித்திர கூடம் சேர்மின்களே' (3. 2) என்கின்றார்; காழிச் சீராமநகர்பற்றிப் பேசும்போது 'காழிச் சீராம விண்ணகரம் சேர்மின் நீரே' (3.4) என்கின்றார்; திருநறை யூர்பற்றிப் பேசும்போது 'திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே' (6.6) என்கின்றார். இப்படிப் பல திருப் பதிகளையும் எடுத்துரைத்து 'சென்று சேருங்கள் - சென்று சேருங்கள்' என்றால் 'எந்தத் திருப்பதியில் சென்று சேர்வது?' என்று வைணவ அடியார் ஒருவரைச் சாமானி யர் ஒருவர் வினவ, அதற்கு அவர் ''ஆழ்வார்கள் திரு வாயில் நுழைந்து புறப்பட்ட திருப்பதிகள் எல்லாம் நாம் நுழைந்து புறப்பட வேண்டியது பிராப்தம்' என்று அவர் மறுமொழி பகர்ந்தாராம். 'பதியே பரவித் தொழும் தொண்டர்' (7. 1: 7) என்றும்,

'உலகம் ஏத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டினார் உய்யல் அல்லால்
மற்றையார்க் குய்ய லாமே

—திருக்குறுந் 19

என்றும்,

தான் உகந்த ஊரெல்லாம்
தன்தாள் பாடிப்
..............................
பூங்கோவல் ஊர்தொழுதும்
போது நெஞ்சே திருநெடுந்-6

என்றும் இந்த ஆழ்வாரே குறிப்பிடுவதால் எம்பெருமான் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் சென்று சென்று சேவிக்க வேண்டும் என்பது உட்கருத்தாகும்.

**மனத்தை ஆற்றுப் படுத்துதல் :** சில சமயம் மனத்தை வேறாகவும் தம்மை வேறாகவும் வேறுபடுத்திக் காட்டும் முறையில் மனத்திற்கு உபதேசம் செய்வார். இவ்வாறு நெஞ்சை வேறுபடுத்திச் சொல்லுதல் கவிமரபு. நெஞ்சைத் தூது விடுவதாகவும் சொல்லுவார்களன்றோ? நல்ல பொருள்களைப் பேசிக் கொண்டு பொழுது போக்குவதற்கு இந்த இருள் தருமா ஞாலத்தில் வேறு யாரும் உடன் படாமல் 'உண்டியே உடையே உகந்தோடு' பவர்களாயிருப்பதால் உசாத்துணைக்கு நெஞ்சு தவிர வேறில்லாமையால் அந்த நெஞ்சை நோக்கித் தானே வார்த்தை சொல்ல வேண்டும். ஆகையால் நெஞ்சை விளித்துப் பேசுவதென்பது பக்தர்கட்கு நற்போது போக்காக அமைந்த ஒன்று. இந்த மரபை யொட்டியே பரகாலரும், திருவேங்கடம்பற்றிய பதிகம் ஒன்றில் (1. 8), "திருவேங்கடம் அடை, நெஞ்சமே!" என்றும், திருநாங்கூர் மணிமாடக் கோயில்பற்றிய பதிகத்தில் (3. 8), "மணிமாடக் கோயில் வணங்கு என்மனனே" என்றும், திருநாங்கூர் அரிமேய விண்ணகரம்பற்றிய பதிகத்தில் (3.10) "அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே!" என்றும், திருநறையூர் பதிகம் ஒன்றில் (6.4) "நறையூர் நாம் தொழுதும் எழு, நெஞ்சமே!" என்றும், மற்றொரு பதிகத்தில் (6.9) "திருவாளன் இணை அடியே அடை,

நெஞ்சே! என்றும், திருமாலிருஞ்சோலை பதிகம் ஒன்றில் (9. 8) ''மாலிருஞ்சோலை வணங்குதும் வா, மட நெஞ்சே!'' என்றும் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக வற்புறுத்திக் கூறுவதைக் காண முடிகின்றது. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் அல்லவா? அது கருதி இங்ஙனம் உரைக்கின்றார் போலும்!

**பரத்துவ அநுபவம்:** பரத்துவம் என்பது எம்பெருமான் வைகுந்தத்தில் இருக்கும் இருப்பு. பெரும்பாலும் இந்த நிலை எம்பெருமானின் அநுபவம் பிறநிலை எம்பெருமானின் அநுபவங்களோடு கலந்தே காணப் பெறுகின்றது. திருநாங்கூர் செம்பொன் செய்கோயில் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது,

பிறப்பொடு மூப்பொன் றில்லவன் தன்னைப்
பேதியா இன்பவெள் ளத்தை
இறப்பெதிர் காலம் கழிவும் ஆனானை
ஏழிசை யின்சுவை தன்னை

மறைப்பெரும் பொருளை வானவர் கோனை
(4. 3: 2)

[பேதியா-என்றும் ஒருபடிப்பட்ட; இறப்பு எதிர் காலம் கழிவு - மூன்று காலங்களிலும்; ஆனான்-இருப்பவன்; ஏழு இசையின் சுவை - ஏழுஇசையின் இரசம்போல் போக்கியன்; மறைப் பொருள் - வேதங்களின் பொருளாயிருப்பவன்; வானவர் - நித்திய சூரிகள்]

என்று அநுபவிக்கின்றார். ''எம்பெருமான்பிறப்பு முதலிய விகாரங்களற்றவன்; என்றும் ஒரு படிப்பட்ட ஆனந்தக் கடலாயிருப்பவன்; மூன்று காலங்களிலும் உள்ளவன்; ஏழிசையின் சுவைபோல் போக்கியன்; திருமறைகளின்

பொருளாயிருப்பவன்; நிந்திய சூரிகளின் நாதன்' என்கின்றார்.

திருநறையூர் எம்பெருமானை மங்களா சாசனம் செய்யும் போது,

தன்னாலே தன்னுருவம் பயந்த தானாய்த்
தயங்கொளிசேர் மூவுலகும் தானாய் வானாய்
தன்னாலே தன்னுருவல் மூர்த்தி மூன்றாய்த்
தான்ஆயின் ஆயினான் (6. 6: 6)

[பயந்த - உண்டு பண்ணிக் கொண்ட; தானாய்- திவ்விய ஆத்தும சொரூபத்தையுடையவனாய்; தானாய் - தன்னுள் அடக்கிக் கொண்டவனாய்; ஆயன் - இடையன்]

என்று பரத்துவ நிலை எம்பெருபானை அநுபவிக்கின்றார். ''எம்பெருமான் தன்னுடைய சொரூப ஸ்திதி முதலியவை தானிட்ட வழக்காம்படி இருப்பவன்; மூவுலகினையும் தன்னுள் அடக்கிக் கொண்டவன்; பரம பதத்திற்குத் தலைவன்; தன்னுடைய சங்கல்பத்தினால் தன்னுடைய சொரூபத்தை மூன்று வகுப்பாக வகுத்துக் கொண்டவன்; இவனே இடையனாகவும் வந்தவன்'' என்கின்றார்.

திருக்கண்ண மங்கை எம்பெருமானை மங்களாசா சனம் செய்யும்போது,

திருத்த னைத்திசை நான்முகன் தந்தையைத்
தேவ தேவனை, மூவரில் முனைய
விருத்த னைவிளங் கும்சுடர்ச் சோதியை
விண்ணை, மண்ணினைக் கண்ணுதல் கூடிய
அருத்த னைஅரி யைப்பறி கீறிய
அப்பனை, அப்பில் ஆரழ லாய்நிறை
கருத்தனை (7. 10: 7)

[திருத்தன் - பூர்ண திருப்தியுடையவன்; நான் முகன் தந்தை - திருமால்; விண் - மேலுலகம்; மண்-பூவுலகம்; கண்ணுதல்-நெற்றிக்கண்ணன்; அருத்தன் - பாதிபாகத்தையுடையவன்; அரி - அரி என்ற திருநாம முடையவன்]

என்று பரத்துவ எம்பெருமானை அநுபவிக்கின்றார். இந்த எம்பெருமான் அவாப்த சமஸ்த காமனாகையிலே (பெறப்பட்ட சகல காமங்களையுமுடையவன்) எப்போதும் திருப்தியுடையவன்; நான்முகனின் தந்தை; தேவ தேவன்; மூன்று மூர்த்திகட்கும் முற்பட்ட தலைவன்; பூவுலகம், மேலுலகம் இவற்றை ஆள்பவன்; கண்ணுதலப் பனைப் பாதி பாகமாக உடையவன்; நீரிலுள்ள படமுகாக் கினி நீரெல்லாம் தன்னிடம் வந்து சுவறும்படி இருப்பது போல எல்லாப் பொருளும் தன்னிடத்திலே வந்து பொருந்துகின்ற முழு முதலாக இருப்பவன்'' என்கின் றார். இங்ஙனம் பல இடங்கள்.

**வியூக நிலையில் அநுபவம்** : வைகுந்த விண்ண நகர எம்பெருமானை மங்களா சாசனம் செய்யும் பாசு மொன்றில்,

வங்கமலி தடங்கடலுள் வானவர்க ளோடு
மாமுனிவர் பலர்கூடி மாமலர்கள் தூவி
'எங்கள்தனி நாயகனே! எமக்கருள்வாய்' என்னும்
ஈசன் அவன் (3. 9: 9)

[வங்கம் - மாக்கலங்கள்; தடகடல் - திருப்பாற் கடல்; ஈசன் - இறைவன்]

என்று வியூக நிலை எம்பெருமானை அநுபவிக்கின்றார். ''நான்முகன், சிவன் இந்திரன் முதலிய தேவர்கள் திருப் பாற்கடலில் வந்து கூடிச் செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி முதலிய மாமலர்களைப் பரி

மாறி ''எம்பெருமானே! எமக்கு அருள் புரியவேண்டும் என்று பிரார்த்திக்கும்படி அங்குப் பள்ளி கொண்டருளும் பெருமான்'' என்று அநுபவிப்பதைக் கண்டு மகிழலாம்.

திருவழுந்தூர் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும் பாசுரம் ஒன்றில்,

செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியின் இணைவருட முனிவர் ஏத்த
வங்கம்மலி தடங்கடலுள் அநந்தன் என்னும்
வரிஅரவின் அணைத்துயின்ற மாயோன் (7. 8: 1)

[செங்கமலம் - செந்தாமரை; திருமகள் - பெரிய பிராட்டியார்; புவி - பூமிப் பிராட்டியார்; வருட தடவ; வங்கம் - கப்பல்கள்; அநந்தன் - ஆதி சேடன்]

என்றுவியூக மூர்த்தியை அநுபவிக்கின்றார். ''செந்தாமரை மலரில் வாழ்கின்ற சீதேவியும், பூதேவியும் தனது இரண்டு திருவடிகளை வருடவும், மாமுனிவர்கள் புகழ்ந்து துதிக்கவும் அலைகள் நிரம்பிய திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான் என்ற புள்ளிகளையுடைய பாம்புப் படுக்கையில் அறிதுயில் கொண்டிருக்கும் ஆச்சரியமான குணமுடையவன் திருவழுந்தூரில் அர்ச்சை வடிவமாக எழுந்தருளியுள்ளான்'' என்கின்றார்.

**அவதாரங்களை அநுபவித்தல் :** இந்த ஆழ்வார் எம்பெருமானின் அவதாரங்களில் ஈடுபட்டு அநுபவிப்பது அற்புதமாக இருக்கும்.

சிலம்பின்இடைச் சிறுபரல்போல் பெரிய மேரு
திருக்குளம்பில் கணகணப்ப திருஆ காரம்
குலுங்க, நிலமடந்தை தனைஇடந்து புல்கிக்
கோட்டிடைவைத் தருளியஎம் கோமான்
கண்டீர் (4. 4: 8)

[பரல் - பருக்கைக் கற்கள்; கணகணப்ப - கண கணவென்று ஒலிக்க; திருஆகாரம் - பிராட்டி யிருக்கும் இருப்பு; நிலமடந்தை - பூமிப் பிராட்டி; இடந்து - கோட்டால் குத்தி எடுத்து; புல்கி - தழுவிக்கொண்டு]

என்பதும், இதே பாணியில்,

சிலம்புமுதல் கலன்அணிந்துஓர் செங்கல் குன்றம்
திகழ்ந்ததென, திருவுருவம் பன்றி ஆகி
இலங்குபுவி மடந்தைதனை இடந்து புல்கி
எயிற்றிடைவைத் தருளியஎம் ஈசன்
காண்மின் (7. 8: 4)

[கலன் - ஆபரணம்; இலங்கு - விளங்குகின்ற; புவி - பூமிப் பிராட்டி; புல்கி- அணைந்து; எயிறு- கொம்பு]

என்பதும் வராக அவதார அநுபவம். இதனை முத்தாய்ப் பாக,

தீதறு திங்கள் பொங்கு சுடரும்பர்
உம்பர்உல கேழி னொடும் உடனே
மாதிரம் மண்சு மந்த விடகுன்றும்
நின்ற மலையாறும் ஏழு கடலும்
மாதவர் சூழ்கு ளம்பின் அகமண்ட
லத்தின் ஒருபால் ஒடுங்க வளம்சேர்
ஆதிமுன் ஏன மாகி அரணாய
மூர்த்தி அதுநம்மை ஆளும் அரசே (11. 4: 3)

[தீதறு - குற்றம் அற்ற; பொங்குசுடர் - சூரியன்; உம்பர் - தேவர்; மாதிரம் - திசை; மண் - பூமி; வடகுன்று - மேருமலை; ஒடுங்க - அடங்கும்படி; ஏனம் - பன்றி; அரண் - இரட்சகன்]

சந்திரன், சூரியன் முதலிய அனைத்து அண்டங்களும் திருவடிக் குளம்பின் ஏக தேசத்தில் ஒடுங்கும்படியாக

வளர்ந்த வராக நாயனார் நம்மை ஆளவள்ள பிரபு என்று கூறித் தம்மையே மறந்து அநுபவிக்கின்றார் இப் பாசுரத்தில்.

**மச்சாவதார அநுபவம் :** ஆழ்வார் மச்சாவதாரத்தை அநுபவிக்கின்றார்.

கொழுங்கயலாய் நெடுவெள்ளம் கொண்ட காலம்
குலவரையின் மீதோடி அண்டத் தப்பால்
எழுந்தினிது விளையாடும் ஈசன் எந்தை (6. 6: 3)

[கொழுங்கயல்-கொழுத்த மீன்; நெடுவெள்ளம்-பிரளய வெள்ளம்; அண்டத்து - அண்டபித்தி அளவும்]

இப் பாசுரப் பகுதியில் மச்சாவதார வரலாறு அநுசந்திக்கப் பெறுகின்றது. இன்னொரு பாசுரத்திலும்,

வானோர் அளவும் முதுமுந்நீர்
வளர்ந்த காலம் வலியுருவின்
மீனாய் வந்து வியந்துய்யக்
கொண்ட தண்தார மறைக்கண்ணன் (8. 8: 1)

[வானோர் - தேவர்கள்; முதுமுந்நீர் - கடல் வெள்ளம்; வலி உருவின் - வலிமை கொண்ட வடிவை; உய்ய - பிழைப்பித்தருளின]

என்று இந்த அவதாரத்தை அநுபவிக்கின்றார்.

நிலையிடம் எங்கும் இன்றிநெடு வெள்ளம்
உம்பர் வளநாடு மூட இமையோர்
'தலையிட மற்றெ மக்கோர் சரணில்லை'
என்ன அரணாவன் என்னும் அருளால்

அலைகடல் நீர்குழம்ப அகடாட
ஓடி அகல்வான் உரிஞ்ச முதுகில்
மலைகளை மீது கொண்டு வருமீனை
மாலை மறவா திறைஞ்சென் மனனே (11. 4: 1)

[நிலையிடம் - நிலைத்து நிற்கும் இடம்; நெடு வெள்ளம் - பிரளய வெள்ளம்; உம்பர் - மேலுலகம்; இமையோர் - தேவர்கள்; தலையிட - தலை வணங்கி இரக்க; சரண் - புகலிடம்; வான்- ஆகாயம்; அகடு - வயிறு]

என்ற பாசுரம் முழுதும் மச்சாவதார அநுபவமாக அமைந்தது. ஒரு பிரமகல்ப முடிவில் பிரமசம்பந்தமான நைமித்திகப் பிரளயம் உண்டான பொழுது பூமி முதலிய உலகங்கள் கடலால் சூழப்பட்டு மூழ்கும் சமயத்தில் உறக்கம் தெளிந்தெழுந்து அந்த நீரில் படுக்க முயன்ற நான்முகனின் முகத்தினிறு கிளம்பிய நான்கு மறைகளையும் அயக்கிரிவன் என்னும் தானவன் அபகரித்துக்கொண்டு சென்று விட்டான். அப்பொழுது எம்பெருமான் இலட்ச யோசனை நீளமும் பதினாயிரம் யோசனை பருமனும் ஒற்றைக் கொம்பும் பொன்மயமான நிறமும் உள்ளமீன் வடிவமாக மக்கள் எல்லோரையும் கவரவல்ல உருவம் கொண்டு அண்டகடாகத்தளவும் செல்லத் துள்ளி விளையாடி முன்பு தானவன் கவர்ந்து சென்ற நான்மறைகளையும் மீட்டுக் கொடுத்ததுமன்றி மக்களையும் பிறவற்றையும் பிரளயாபத்தினின்றும் காத்தது மச்சாவதார வரலாறு.

**நரசிம்மாவதாரம்:** பல்வேறு பாங்கில் இந்த அவதாரத்தை அநுபவிக்கின்றார்.

திண்ணியதோர் அரியுருவாய் திசையனைத்தும்
நடுங்க,
தேவரோடு தானவர்கள திசைப்ப இரணியனை
நண்ணியவன் மார்பகலத் துகிர்மடுத்த நாதன் (3.9:2)

[திண்ணிய-வலிமிக்க; அரி-சிங்கம்; தானவர்கள்-அசுரர்கள்; திசைப்ப-கலங்க; நண்ணி-கிட்டி; உகிர்-நகம்; மடுத்த-ஊன்ற வைத்துப் பிளந்த]

என்பது நரசிம்மாவதார அநுபவம். இப்படிப் பல இடங்கள்.

பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில்ஓர் ஆயிரம் நாமம்
ஒள்ளிய ஆகிப் போத,அங்கு அதனுக்கு
ஒன்றுஓர் பொறுப்புஇலன் ஆகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்ப
பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை (2.3:8)

[ஓதி-வாசித்துவிட்டு; சிறுவன்-பிரகலாதன்; ஒள்ளிய-அழகாக; சீறி-கோபித்து; புடைப்ப-தட்ட; அனல்-நெருப்பு; பேழ்வாய்-பெரியவாய்]

என்ற பாசுரத்தில் சற்று விளக்கமாகவே இந்த அவதாரத்தை அநுபவிக்கின்றார்.

**வாமன—திருவிக்கிரம அவதாரம்:** மூவடியால் அளந்த நிகழ்ச்சி வேதங்களில் காணப்படுகின்றது. திருமங்கையாழ்வார் இந்நிகழ்ச்சியைப் பாசுரங்களில் அநுபவித்து அகமகிழ்கின்றார்.

கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்
கனவுஇல்மிகு சிறுகுறளாய் மூவடிஎன்று
இரந்திட்டு
அண்டமும்இவ் அலைகடலும் அவனிகளும் எல்லாம்
அளந்த பிரான் (3.10:5)

[கண்டவர்-பார்த்தவர்; வேள்வி-யாக பூமி; இரந்திட்டு-யாசித்து; அண்டம்-மேலுலகம்; அவனி-மண்டலம்; அளந்த-அளந்து கொண்ட]

"அநுகூலர் பிரதிகூலர் என்ற வேற்றுமையின்றி எவர் பார்த்தாலும் அவருடைய நெஞ்சைக் கவரக் கூடிய பேரழகு வாய்ந்த வாமன மூர்த்தியாகி மாவலியின் வேள்வி நிலத்தில் எழுந்தருளி 'என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடி மண்தா' என்று யாசித்து மூவடி மண் நீரேற்றுப் பெற்று உடனே விம்மி வளர்ந்து எல்லா உலகங்களையும் கவர்ந்து கொண்ட எம்பெருமான்" என்று சொல்லி இவ்வவதாரச் செயலை அநுபவிக்கின்றார் ஆழ்வார். இது திருநாங்கூர் அரிமேய விண்ணகரப் பெருமானை அநுபவித்த பாங்கு.

வானவர்தம் துயர்தீர வந்து தோன்றி
மாண்உருஆய் மூவடிமா வலியை வேண்டி
தான்அமர ஏழ்உலகும் அளந்த வென்றித்
தனிமுதல்சக் கரப்படைஎன் தலைவன் (7.8:6)

[வானவர்-தேவர்; துயர்-வருத்தம்; தோன்றி-அவதரித்து; மாண் உரு-பிரமசாரி; அமர-காலடியின் கீழ் அடங்கும்படி; அளந்த-தன் தாக்கிக் கொண்ட; வென்றி-வெற்றி; தனிமுதல்-ஒப்பற்றதும் மூலனாதுமான]

என்று திருவழுந்தூர் ஆமரவி அம்பனை இந்த அவதாரமாகக் கண்டு அநுபவிக்கின்றார்.

வெந்திறல் வாணன் வேள்வி யிடமெய்தி
ஆங்கோர் குறளாகி மெய்ம்மை உணர
செத்தொழில் வேத நாவின் முனியாகி
வைய அடிமூன்றிரந்து பெறினும்
மந்தர மீது போகி மதிநின்று இறைஞ்ச
மலரோன் வணங்க வளர்சேர்
அந்தரம் ஏழினூடு செலவுய்த்த பாதம்
அதுநம்மை ஆளும் அரசே (11.4:5)

[திறல்-வலமை; வாணன்-மாவலி; எய்தி-அடைந்து; மெய்ம்மை-உண்மையான யாசகன்; மூனி ஆகி-இருடிப்போல; வையம்-நிலம்; மந்தரம்- மந்தரகிரி! போகி-அளாவி; மதி-சந்திரன்; மலரோன்-நான்முகன்; அந்தரம்-மேலுலகம்]

என்று முன்னிரண்டு அடிகளில் வாமனவதாரச் செயலைப் பேசிப் பின் இரண்டு அடிகளில் திரிவிக்கிரமாவதாரத்தை அநுபவித்து அகமகிழ்கின்றார். இந்த அவதார அநுபவத்தை,

ஒண்மிகுதியில் புனல்உருவி ஒருகால் நிற்ப
ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து
எண்மதியும் கடந்துஅண்ட மீது போகி,
இருவிசும்பி னூடுபோய் எழுந்து, மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடி,
தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு
மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
மலர்புரையும் திருவடியை வணங்கி னேனே.
—திருநெடுந்-5

[ஒண்மிதி - அழகான ஓரடி; புனல் - ஆவரண நீர்; ஒரு கால் - ஒரு திருவடி; காமரு சீர் - பாக்கியசாலியான; எண்மதி - நினைத்திருந்த நிலை; அண்டம் - அண்டபித்தி; மீது - அப்பால்; விசும்பு - ஆகாயம்; தவிர ஓடி - கடந்து சென்று; தாரகை - நட்சத்திரம்; மலர்புரையும் - தாமரை மலரையொத்த]

என்ற திருந்நெடுந் தாண்டகத்தில் பன்னியுரைத்து அந்த எம்பெருமானை வணங்கி மகிழ்கின்றார்.

**பரசுராமாவதார அநுபவம்:** இந்த அவதாரத்தின் பெருமையைக் காழிச் சீராம விண்ணகரத்தின் பாசுரம் ஒன்றில் அநுசந்தித்து அகமகிழ்கின்றார்.

தெவ்வாய மறமன்னர் குருதி கொண்டு
திருக்குலத்தில் இறந்தோர்க்குத் திருத்தி செய்து
(3. 4. 5)

[தெவ்வாய - சத்துருக்களாகிய; குருதி-இரத்தம்; திருக்குலம் - தன் வமிசம்; திருத்தி-தர்ப்பணம்]

சமதக்கினிக்கு இரேணுகையிடத்துப் பிறந்தவன் பரசுராமன்; கார்த்தவீரியனின் புத்திரர்கள் யாகப் பசுவை நாடிச் சென்றபோது சமதக்கினியின் ஆசிரமத்திலிருந்த ஹோமதேநுவைக் கண்டு அந்த முனிவரைக் கொன்று பசுவைக் கவர்ந்து சென்றனர்; அவ்வமயம் வெளியே சென்றிருந்த பரசுராமன் மீண்டு வந்து தந்தை கொல்லப் பட்டிருப்பதைக் கண்டு 'க்ஷத்திரியரை வேரறுத்து இப்பழி தீர்ப்பேன்' என்று விரதம் பூண்டு க்ஷத்திரியரையெல்லாம் கருவறுத்து அவர்களது குருதி வெள்ளங்களைப் பெரிய தடாகமாக்கி அதில் தன் பிதிர்களுக்குத் தர்ப்பணம் செய்தான் என்பது வரலாறு. இப் பரசுராமன் சீமந் நாராயணனது அவதாரமாதலால் இச் செயலை எம்பெருமான் மேலேற்றிக் கூறினார் இங்கு.

திருக்கண்ணங்குடியை அநுசந்திக்கும் பாசுரம் ஒன்றில் இந்த அவதாரம் குறிப்பிடப்பெறுகின்றது.

மழுவினால் அவனி அரசைமூ வெழுகால்
மணிமுடி பொடிபடுத்து உதிரக்
குழுவுவார் புனலுள் குளித்துவெங் கோபம்
தவிர்ந்தவன் (9. 1: 6)

[மழு-கோடாலிப்படை; மூளழுகால் - இருபத்தொரு தலைமுறை; மணிமுடி - அழகிய கிரீடம்; பொடிபடுத்து - பொடிப் பொடியாக்கி; உதிரம் - குருதி; குழுவு - கடல்; வார்புனல் - வெள்ளம்; குளித்து - தீர்த்தமாடி]

என்ற பாசுரப் பகுதி காண்க. கார்த்தவீரியனின் மக்கள் இயற்றிய குற்றங் காரணமாக அவர்களைக் கொன்றதனால் கோபம் தணியப்பெறாமல் க்ஷத்திரிய வமிசம் முழுவதன் மேலும் சினங்கொண்டு உலகத்திலுள்ள அரசர் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டு அவர்களது குருதி வெள்ளத்தைப் பெரிய ஏரியாகத் தேக்கி அதில் தீர்த்தமாடித் தம் மூதாதையருக்குத் தர்ப்பணம் செய்த பெருமான் உறையும் இடம் திருக்கண்ணங்குடி என்கின்றார். அர்ச்சையில் விபவத்தைக் கண்டு மகிழ்கின்றார்.

திருமாலின் அவதார சேஷ்டிதங்களில் ஈடுபடும் ஆழ்வார் பாசுரம் ஒன்றில் இந்த அவதாரத்தை முழுமையாக ஒரு பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். இதில் வேறு இரண்டு நிகழ்ச்சிகளும் கலந்து வருகின்றன.

இருநில மன்னர் தம்மை இருகாலும்
எட்டும் ஒருநாலும் ஒன்றும் உடனே
செருநுத லூடு போகி அவராவி
மங்க மழுவாளில் வென்ற திறலோன்
பெருநில மங்கை மன்னர் மலர்மங்கை
நாதர் புலமங்கை கேள்வர் புகழ்சேர்
பெருநிலம் உண்டு மிழ்ந்த பெருவாய
ராகி அவர் நம்மை ஆள்வர் பெரிதே 11. 4: 6

[இருநிலம் - பெரிய பூமி; செரு - பூசற்களம்; நுதல்-முகப்பு; ஆவி-உயிர்; மல்க-முடியும் படியாக; மழுவாள் - கோடாலிப் படை; பெருநில மங்கை - பூமிப் பிராட்டியார்; புலமங்கை - இந்திரியங்களைக் கவர வல்ல நீளாதேவி; மலர்-மங்கை - பெரிய பிராட்டியார் ; ஆள்வர் - அடிமை கொள்வர்]

இதில் கோடலிப் படையைக் கையில் ஏந்தியவனும் பெரிய பிராட்டியார், பூமிப்பிராட்டியார்,நீளாதேவி இவர்களின்

நாயகனும் அநந்த கல்யாண குணங்கட்குக் கொள்கலமாக இருப்பவனும் ஒரு காலத்தில் எல்லா உலகங்களையும் திருவயிற்றிலே வைத்துக் காப்பாற்றியவனுமான பெருமான் நம்மை நீடுழிகாலம் அடிமை கொள்வான் என்று சொல்லி அநுபவிக்கின்றார்.

**இராமாவதாரம் :** இந்த எம்பெருமான் மானிட யோனியில் அவதரித்து மக்களிடையே வாழ்ந்து, பன்னெடுங்காலம் அரசு செலுத்தி வந்ததனால் ஆழ்வார்கள் வாக்கில் அதிகமாக இடம் பெறுகின்றான்.

கறைவளர்வேல் கரன்முதலாக் கவந்தன் வாலி
கணையொன்றி னால்மடிய இலங்கை தன்னுள்
பிறை யெயிற்று வாளரக்கர் சேனை யெல்லாம்
பெருந்தகையோ டுடன்துணித்த பெம்மான்
(2-10;5)

[கறை-குருதிக் கறை; கணை-அம்பு; பிறை எயிறு -பிறைபோன்ற கோரப்பல்; பெருந்தகை- இராவணன்; பெம்மான்-பெருமான்']

திருக்கோவலூர் எம்பெருமானைக்குறிப்பிடுங்கால் இந்த அவதார எம்பெருமானை அநுசந்தித்து அகமகிழ்கின்றார். அர்ச்சையும் அவதாரமும் ஒன்றே என்பது கருத்து.

சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரிந்த
கொடுமையிற் கடுவிசை அரக்கன்
எரிவிழித்து இலங்கும் மணிமுடி பொடி செய்து
இலங்கைபாழ் படுப்பதற்கு எண்ணி
வரிசிலை வளைய, அடுசரம் துரந்து,
மறிகடல் நெறிபட மலையால்,
அரிகுலம் பணிகொண்டு அலைகடல்
அடைத்தான் (5,7;7)

[அரிசுழல்-சுருண்ட கூந்தல்; கனிவாய்-கொவ்வைக் கனிபோன்ற திருப்பவளம்; திரு-பிராட்டி; பிரித்த-வேறு படுத்தின; எரிவிழி-நெருப்பு போன்ற கண்; வரிசிலை-அழகியவில்; அடுசரம்-கொலை அம்பு; துரந்து-பிரயோகித்து; மறி-அலைமறிகின்ற; நெறிபட-வழி அமைந்திட; அரி குலம்-வானரக்குலம்]

என்ற திருவரங்கப் பெருமானைப்பற்றிய பாசுரத்தில் இராவணன் முடிய இலங்கைபாழ்பட வானர முதலிகளைத் துணைகொண்டு கடலில் அணைகட்டின பெருமான் அரங்கமாநகர் அமர்ந்தான் என்கின்றார்.

ஒரு பாசுரத்தில் நேராக இராமாவதாரத்தையே பேசி அநுபவிக்கின்றார் பல அவதாரங்களைப் பற்றித் தனித்தனியே பேசி மகிழும் ஆழ்வார்.

இலைமலி பள்ளி எய்தி இதுமாயம் என்ன
இனமாய மான்பின் எழில்சேர்
அலைமலி வேற்கணாளை அகல்விப்ப தற்கொர்
உருவாய மானை அமையா
கொலைமலி எய்து வித்த கொடியோன் இலங்கை
பொடியாக வென்றி அமருள்
சிலைமலி செஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள்
திருமால் நமக்குகார் அரணே 11.4;7

[இலைமலி பள்ளி பர்ணசாலை; அலைமறி-துன்பப் படுத்தும் இயல்பு; அகல்விப்பதற்கு-பிரிப்பதற்கு; இனமாயமான் பின்- மான்களின் பின்;ஓர் உரு ஆய-மிக அழகிய உருவம்; மானை-மாரீசனாகிற மாய மானை; அமையா-கொன்று; கொடியோன்-இராவணன்; வென்றி அமர்-வெற்றிப்போர்; சிலைமலி-வில்லில் நிறைந்த; உய்த்த - பிரயோகித்த]

இராமாவதாரத்தைப்பற்றிப் பேசும் இப்பாசுரத்தில் மாயமானாகி வந்த மாரீசனையும் இராவணனையும் கொன்று ஒழித்த வரலாறுகள் கூறப்பெறுகின்றன.

**கிருட்டிணாவதாரம் :** அவதாரங்களில் மானிட யோனியில் பிறந்து மக்களிடையே வாழ்ந்து செளலப்பியம் செளசீல்யம் போன்ற திருக்குணங்கட்கு எல்லை நிலமாகவும் இடையே சுவாமித்துவம் போன்ற திருக்குணங்களையும் பிரகாசப்படுத்தியது கிருட்டிணாவதாரமாதலால் ஆழ்வார் பெருமக்கள் இந்த அவதார சேஷ்டிதங்களைப் பேசித் தம்மையே மறக்கின்றனர். திருமங்கையாழ்வார் அநுபவித்து மகிழும் சில பாசுரங்களைக் காண்போம்.

வில்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
   வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னை புரம்எரி செய்த
   சிவன்உறு துயர்களை தேவை
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
   பார்த்தன்தன் தேர்முன்நின் றானை (2.8:1)

[வில்விழவு-தநுர் யாகம்; மல்லு-மல்லர்கள்; வேழம்-குவலயா பீடம்; செற்றவன்-அழித்தவன்; சிவன் உறுதேவை- பிரமஹத்தி; பற்றலர்-பகைவர்]

என்ற பாசுரத்தில் கண்ணன் வில்பெரு விழவை நடத்தின கம்சன், சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்கள், குவலயா பீடம் இவர்களை அழித்த நிகழ்ச்சிகளையும் சிவனுக்கு நேர்ந்த பிரமஹத்தி சாபத்தைப் போக்கின செயலையும் பார்த்தனுக்குத் தேர் கடவி பகைவர்களை ஒழிந்த வரலாற்றையும் அநுசந்தித்துக் கிருட்டிணாவதாரத்தில் ஈடுபடுகின்றார். திருவல்லிக்கேணி பார்த்த சாரதியை

மங்களாசாசனம் செய்யும்போது இவை ஆழ்வார் மனத்தில் எழுகின்றன.

பேய்த்தாயை முலையுண்ட பிள்ளை தன்னைப்
பிணைமருப்பில் கருங்களிற்றைப்
பிணைமான் நோக்கின்
ஆய்த்தாயர் தயிர்வெண்ணெய் அமர்ந்த கோவை
அந்தணர்தம் அமுதத்தைக் குரவை முன்னே
கோத்தானை குடமாடு கூத்தன் தன்னைக்
கோகுலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக்
காத்தானை (2.5:4)

[பேய்த்தாய் - பூதனை; ஆய்த்தாயார் - யசோதைப் பிராட்டி; குரவை - இராசக் கிரீடை; குன்றம் - கோவர்த்தனம்]

கடல்மல்லைத் தலசயனப் பெருமாளை மங்களா சாசனம் செய்யும்போது பூதனையின் உயிர் உண்டது, யசோதைப் பிராட்டியின் வெண்ணெயில் ஊன்றியிருந்தது இடைப் பெண்களுடன் இராசக்கிரீடை கோத்தது, குடம் ஆடியது, கோவர்த்தனத்தைத் தூக்கி ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தது போன்ற கண்ணனது திருவிளையாடல்களை அநுசந்தித்து அகம் மகிழ்கின்றார்.

திருக்கோவலூர் திரிவிக்கிரமனை மங்களாசாசனம் செய்யும்போது,

உறிஆர்ந்த நறுவெண்ணெய் ஒளியால்சென்று அங்கு
உண்டானைக் கண்டுஆய்ச்சி உரலோடு ஆர்க்க
தறிஆர்ந்த கருங்களிறே போல நின்று
தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை
(2. 10: 6)

[உறிஆர்ந்த-உறிகளில் நிரம்பிய; ஆர்க்க-பிணைக்க; தறி-கட்டுத்தறி; களிறு-யானை; தட-கண்கள்-பெரியகண்கள்; பனிமல்கும்-நீர் நிரம்பும்]

என்று உறிகளில் நிரம்பிய வெண்ணெயை வாரி உண்டது, உரலோடு கட்டுண்ட காலத்து கண்கள் குளமானது போன்ற கண்ணனது செயல்களை நினைந்து களிக்கின்றார்.

திருநறையூர் நம்பியை மங்களாசாசனம் செய்யும் போது,

ஒளியா வெண்ணெய் உண்டான்என்று
உரலோடு ஆய்ச்சி ஒண்கயிற்றால்
விளியா ஆர்க்க ஆப்புண்டு
விம்மி அழுதான் (6.7:4)

[ஒளியா-மறைந்து நின்று; ஒண்கயிறு-அழகிய தாம்புக் கயிறு; விளியா-கோபித்து; ஆர்க்க-கட்ட; ஆப்புண்டு-கட்டுண்டு; விம்மி-விக்கி விக்கி]

என்றும்,

பந்துஆர் விரலாள் பாஞ்சாலி
கூந்தல் முடிக்க பாரதத்து
கந்துஆர் களிற்றுக் கழல்மன்னர்
கலங்க, சங்கம் வால் வைத்தான் (6.7:8)

[கந்து ஆர்-(மதநீரின்) மணம் பொருந்திய; கலங்க-மதி கலங்குமாறு; சங்கம்--பாஞ் சன்ணியம்]

என்றும் கண்ணனது சில திருவிளையாடல்களை நினைவு கூர்ந்து மகிழ்கின்றார்.

திருமாலிருஞ்சோலைமலை எம்பெருமானை மங்களா சாசனம் செய்யும்போது,

தேனுகன் ஆவி போயுக அங்கோர்
செழுந்திரள் பனங்கனி உதிர
தானுகந் தெறிந்த தடங்கடல் வண்ணர் (9.8:7)

[தேனுகன்-கழுதை வடிவமாக வந்த அசுரன்' உகந்த-மனம் உவந்த; கடல் வண்ணர்-பெருமாள்]

என்று கண்ணன் தேனுகனை வதைத்த செயலை அநுசந்தித்து அகமகிழ்கின்றார். இங்ஙனம் கண்ணின் திருவிளையாடல்கள் சொல்லி முடியா; பன்னியுரைக்கில் பாரதமாக விரியும்.

**கல்கி அவதாரம்:** இந்த அவதாரத்தைப் பற்றிய குறிப்பு அரிதாகவே காணப்பெறுகின்றது. கடல் மல்லைத் தலசயனப் பெருமாளை மங்களாசாசனம் செய்யும் பாசுரம் ஒன்றில்,

வையங் காக்கும்
கருப்பரிமேல் கற்கியைநான்
கண்டு கொண்டேன் (2.5:3)

[வையம்-உலகம்; கடும்பரி-கடுநடையையுடைய குதிரை; கற்கியை-கல்கி அவதாரத்தை]

என்று இந்த அவதாரம் குறிப்பிடப் பெறுகின்றது. அறங்கள் முற்றும் குன்றி மறங்கள் அதிகரித்துக் கலி முற்றுங் காலத்தில் எம்பெருமான் குதிரைமீது ஏறி வந்து கல்கி என்னும் திருநாமமுடையவனாய்த் துட்டர்களைத் தொலைத்து மண்ணின் பாரம்[9] நீக்குவான் என்பது நூற்கொள்கை. இது பவிஷ்யதவதாரம்; அதாவது வரப் போகின்ற அவதாரமாகும்.

---

9. பூமிதேவிக்குத் தன்மீது நல்லவர்கள் கோடிக் கணக்காக இருப்பினும் அவர்களைச் சுமப்பது இலவம் பஞ்சைப் போல் வருத்தமற்றிருக்கும்; ஒரு

**பிற அவதாரங்கள்:**

**அன்னமாகி அருமறைகள் அருளிச்செய்த வரலாறு:** திருப்புள்ளம்பூதங்குடி எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும் பாசுரம் ஒன்றில் இந்த வரலாற்றை நினைந்து அநுபவித்து மகிழ்கின்றார்.

> துன்னி மண்ணும் விண்ணாடும்
> தோன்றா திருளாய் மூடியநாள்
> அன்ன மாகி அருமறைகள்
> அருளிச் செய்த அமலன் (5.1:9)

[துன்னி-நெருங்கி; மண்ணும் - மண்ணுலகமும்; விண்ணும்-விண்ணுலகமும்; மூடிய நாள்-மூடிக் கிடந்தபோது]

என்பதில் இவ்வரலாறு குறிப்பிடப்பெறுகின்றது. முன் ஒரு கல்பத்தின் முடிவில் நான்முகன் துயிலுகையில் அவன் முகத்தினின்று வெளிப்பட்டுப் புருஷ உருவத்துடன் உலவிக் கொண்டிருந்தன அருமறைகள். அப்போது அருந்தவங்கள் இயற்றிப் பெருவரங்கள் பெற்ற சோமுகன் என்னும் அசுரன் அவற்றைக் கவர்ந்து கொண்டு மூவுலகங்களையும் இருள்மூடச்செய்துபிரளயவெள்ளத்தில்மறைந்து செல்ல, அதனையுணர்ந்த எம்பெருமான் ஒரு மீனாகத் திருவதரித்து அப்பெருங்கடலினுட் புகுந்து அவ்வசுரனைத் தேடிப் பிடித்துக் கொன்று அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக் கொணர்ந்து, பின்னர் சாரத்தையும் அசாரத்தையும் பிரிக்கவல்ல அன்னமாய்த் தோன்றி நான்முகனுக்கு அந்த வேதங்களை உபதேசித்தான் எம்பெரு

---

துட்டன் உண்டாகிலும் இரும்பு மூட்டையைத் தாங்குவதுபோல் மிக வருத்தமாக இருக்குமாம். இந்தப் பாரத்தை நீக்குவதற்காகவே எம்பெருமான் அடிக்கடி அவதாரம் எடுக்கின்றான். இஃது அவதார இரகசியமாகும்.

மான். இந்த எம்பெருமானே புள்ளம் பூதங் குடியில் எழுந்தருளியிருப்பதாக நினைந்து அநுபவிக்கின்றார் ஆழ்வார்.

திருவரங்கப் பெருமானை மங்களாசாசனம் செய்த பாசுரம் ஒன்றிலும் இந்த வராறு அநுசந்திக்கப்பெறுகின்றது.

மன்னுமா நிலனும் மலைகளும் கடலும்
வானமும் தானவ ருலகும்
துன்னுமா இருளாய்த் துலங்கொளி சுருங்கித்
தொல்லைநான் மறைகளும் மறைய
பின்னும்வா னவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப்
பிறங்கிருள் நிறங்கெட ஒருநாள்
அன்னமாய் அன்றங் கருமறை பயந்தான் (5.7:3)

[மன்னு - நிலைப்பெற்ற; வானம் - ஆகாயம்; துன்னு - நெருங்கிய; துலங்கு - விளங்கும்; தொல்லை நான்மறைகள் - பழைய வேதங்கள்]

என்ற பாசுரத்தில் இதனைக் கண்டு மகிழலாம்.

**அயக்கிரீவ அவதார அநுபவம் :** அழுந்தூர் மேவிய ஆமருவி அப்பனை மங்களாசாசனம் செய்யும் பாசுரம் ஒன்றில் இந்த அவதாரர் மூர்த்தியை அநுசந்திந்து அக மகிழ்கின்றார் ஆழ்வார்.

முன்னிவ்உல கேழுமிருள் மண்டி யுண்ண
முனிவரொடு தானவர்கள் திசைப்ப வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளை எல்லாம்
பரிமுகமாய் அருளியஎம் பரமன் (7.8:2)

[முன்-முற்காலத்தில்; இருள்-அஞ்ஞானம்; மண்டி -மிகுந்து; உண்ண - தன்வசமாக்கிக் கொள்ள; திசைப்ப-கலங்க; பரிமுகமாய்-அயக்கிரீவ மூர்த்தியாய்]

முன்னொரு காலத்தில் மதுகை பர் என்னும் அசுரர்கள் நான்முகனிடமிருந்து நான்மறைகளை அபகரித்துக் கொண்டு கடலில் மூழ்கிவிட, ஞானத்திற்குத் துணையான வேதங்களை இழந்ததனால் எல்லா உலகங்களும் அஞ் ஞான இருளில் அழுந்திவிட, எம்பெருமான் அயக்கிரீவ அவதாரம் செய்து வேதங்களை மீட்டுக் கொணர்ந்தான். இந்த எம்பெருமான்தான் திருவழுந்தூரில் எழுந்தருளி யிருப்பதாகக் கருதுகின்றார். திருவெள்ளறை எம்பெரு மானை மங்களாசாசனம் செய்யும்போது இந்த அவ தாரத்தை அநுசந்திக்கின்றார்.

வசையில் நான்மறை கெடுத்தஅம் மலரயற்
கருளிமுன் பரிமுகமாய்
இசைகொள் வேதநூல் என்றவை பயந்தவனே (5.3:2)

[வசை-குற்றம்; கெடுத்த-போக்கடித்து வருந்தி நின்ற; மலரயன்-பிரமன்; பரிமுகமாய்-அயக் கிரீவ அவதாரமாய்]

என்ற பாசுரப் பகுதியில் இந்த அவதாரம் குறிப்பிடப் பெற்றுள்ளதைக் காணலாம். சுவாமிதேசிகன் திருவயிந்திர புரம் ஔஷதாத்திரி என்னும் குன்றில் அயக்கிரிவ மந்தி ரத்தை ஆவ்ருத்தி செய்தபோது, அயக்கிரீவன் பிரசன் னாகி சுவாமிக்கு விசேஷகடாட்சம் செய்தருளினதாக வரலாறு.

ஆழ்வார்கள் பாசுரங்களில் கிருட்டிணாவதாரமும் இராமாவதாரமும் அதிகமாகக் காணப்பெறுகின்றன. காரணம், இவர்கள் மக்களிடையே பிறந்து வளர்ந்து மக்களோடு அதிகமாகப் பழகி 'இக' வாழ்வு வாழ்ந்த தால் அவர்கள் அதிகமாகக் கொண்டாடப் பெற்றுள்ள னர் என்று கருதலாம். ஆனால் கண்ணனின் மூத்த சகோதரன், சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் நம்பி மூத்தபிரானும் பரசுராமனும் மக்களின் நடுவே

பிறந்திருந்தாலும் அவர்களின் செயல்கள் ஆழ்வார்களின் பாசுரங்களில் அதிகமாக இடம் பெறவில்லை. காரணம், 'அவதார இரகசியம்' என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அவதாரம் கெளணாவதாரம், (அதாவது ஆவேச அவதாரம்) சாட்சாத் அவதாரம் என்று இருவகைப் படும். கெளணாவதாரம் அகங்காரத்துடன் கூடிய சீவர்களை அடங்கி ஒடுக்குவதற்காக ஈசுவரன் ஆவேசமுகத்தான் அநுட்டித்து நிற்பது. பரசுராமன் அவதாரம் அந்த வகையைச் சேர்ந்தது. இந்த அவதாரம் க்ஷத்திரியர்களின் அகந்தையை அடக்குவதற்காகவே எடுக்கப்பெற்றது. பலராமன் கடவுளின் அவதாரம் அன்று. ஆதிசேடனே அவனாக வந்து தோன்றியதாக ஐதிகம். பலராமனுக்கு மதிப்பு அதிகமாக இருந்தது. ஆவேசவாதாரத்தை முமுட்சுக்கள் (மோட்சத்தில் விருப்பமுள்ளவர்கள்) உபாசித்துப் போற்றுவதில்லை. ஆனால் புபூட்சுக்கள் (சம்சாரிகள்) போற்றுவர்.

**உலக உருவாயவன் :** சீமந் நாராயணனே முழுமுதற் கடவுள். அவன் உலகஉருவாய் இருப்பவன். திருவரங்க நாதனை மங்களாசாசனம் செய்யும்போது,

பண்டை நான்மறையும், வேள்வியும், கேள்விப்
பதங்களும், பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி அனலும்,
பெருகிய புனலொடு நிலனும்,
கொண்டல்மா ருதமும், குரைகடல் ஏழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்றஎம் பெருமான் (6. 7: 1)

[மறை-வேதம்; கேள்விப்பதங்கள்-வியாகரணம்; பிண்டமாய் விரிந்த-பிண்ட உருவாக இருந்து

> பின்னர் விரிவு பெற்ற; ஒளி-காந்தி; அனல்-நெருப்பு; மாருதம்-வாயு; விசும்பு-ஆகாயம்; அண்டம்-பிரமாண்டம்]

என்ற பாசுரத்தில் இக் கருத்தை வெளியிட்டு எம்பெருமானை அநுபவிக்கின்றார். "பண்டை நான்மறை, வேள்வி, இலக்கணம், இலக்கணத்தின் பொருள் காரணமாக இருந்த காரியப் பொருள், நெருப்பு, நீர், பூமி, மேகம், வாயு, ஏழு கடல், ஏழு மலை, ஆகாயம் ஆகிய இவற்றோடு கூடிய அண்டமாய் நிற்கும் எம்பெருமான்" என்று சொல்லி பெரிய பெருமாளை அநுபவிக்கின்றார் ஆழ்வார்.

திருநறையூர் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது உலகமாய் நின்ற எம்பெருமானை,

> பல்வநீர் உடைஆடை ஆகச் சுற்றி
> பார்அகலம் திருவடியா பவனம் மெய்யா
> செவ்விமா திரம்எட்டும் தோளா, அண்டம்
> திருமுடியா நின்றான் (6. 6: 3)
>
> [பவ்வம் - கடல்; உடை ஆடை - அரையில் உடுத்தும் பீதாம்பரம்; பார் அகலம்-பூமிப்பரப்பு; பவனம்-வாயு; மெய்-திருமேனி; செவ்வி-அழகிய; மாதிரம்-திசை; தோள்-புயம்; அண்டம்-அண்ட பித்தி; திருமுடி-திரு அபிஷேகம்]

என்று அவன் ஜகத்ஸ்வரூபியாய் இருக்கும் தன்மையை அழகிய உருவகத்தால் அநுபவித்து மகிழ்கின்றார். எங்கும் பரவி (விபு) நிற்கும் எம்பெருமானுக்குக் கடல் நீர் அரையில் உடுக்கும் பீதாம்பரமாகின்றது; பூமிப் பரப்பெல்லாம் திருவடியாகின்றது; வாயுவெல்லாம் திருமேனியாகின்றது; எட்டுத் திசைகளும் திருத்தோள்களாகின்றன; அண்டகடாகம் திருமுடியாகின்றது. ஆக இவ்வகைகளினால் ஜகத்ருபியாயிருக்கின்ற எம்பெருமான்

திருநறையூர் மணிமாடத்தில் எழுந்தருளியுள்ளான் என்கின்றார்.

**பாலனாய் ஏழுலகுண்ட வரலாறு :** 'பாலனாய் ஏழுல குண்டு ஆலிலையில் என்னவசஞ்செய்த' வரலாறு பல பாசுரங்களில் அநுசந்திக்கப்பெறுகின்றன. திருவிண்ண கர் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும் பாசுரம் ஒன்றில்,

பார்எழு கடல்எழு மலைஎழுமாய்ச்
சீர்கெழும் இவ்வுலகு ஏழுமெல்லாம்
ஆர்கெழு வயிற்றினில் அடக்கிநின்றுஅங்கு
ஓர்எழுந்து ஓர்உரு ஆனவனே[10] (6. 1: 5)

[பார்எழு - ஏழுத்தீவுகள் அடங்கிய பூமி; கடல் எழு-ஏழு கடல்கள்; மலை எழு-ஏழு மலைகள்; உலகேழு-ஏழு உலகங்கள்; ஓர் எழுத்து-அகாம்]

''ஏழு தீவுகள், ஏழு கடல்கள், ஏழு மலைகள் முதலிய வற்றை எல்லாம் பிரளய காலத்தில் நின் திருவயிற்றில் அடக்கிக்காத்தவன்; எழுத்துக்கெல்லாம் அகரமாக இருப்பவன்'' என்கின்றார்.

திருநறையூர் எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்பாசுரம் ஒன்றிலும் இவ்வரலாற்றை அநுசந்தித்து மகிழ்கின்றார் ஆழ்வார்.

10. **ஏழுதீவுகள் :** நாவலந்தீவு, (சம்பு), இறலித் தீவு, குசத்தீவு, கிரவுஞ்சத் தீவு, சால்மலித்தீவு, பாகத் தீவு, புட்கரத் தீவு; **ஏழு கடல்கள் :** உப்பு, பால், தேன், நெய், கருப்பஞ்சாறு, தயிர், தூய நீர்; **ஏழுமலைகள்:** இமயம், மந்தரம், கயிலை, வடவிந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி; **ஏழுகீழ் உலகம் :** அதல, விதல, சுதல, தராதல, மகாதல, ரசாதல பாதாலம்; **ஏழுமேலுலகங்கள் :** பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர் லோகம், ஜனலோகம், தபர்லோகம், சத்திய லோகம்.

அம்பரமும் பெருநிலனும் திசைகள் எட்டும்
அலைகடலும் குலவரையும் உண்ட கண்டன்
கொம்புஅமரும் வடமரத்தின் இலைமேல் பள்ளி
கூடினான் (6. 6: 1)

[அம்பரம் - ஆகாயம்; பெருநிலன் - பரந்த பூமி; கொம்பு அமரும் - கிளைகள் பொருந்திய; வடமரம் - ஆலமரம்; பள்ளிக் கூடினான் - சயனித்துக் கொண்டான்]

இதில் ''ஊழிப் பெருவெள்ளம் பரந்து உலக முழுவதையும் அழிக்கப்பட இருந்த காலத்தில் ஒன்று தப்பாமல் அனைத்தையும் திருவயிற்றினுள் வைத்தருளிப் பாது காத்து ஒரு சிற்றாலந்தளிரில் துயில் கொண்ட பரமன்'' என்று திருநறையூர் எம்பெருமானை அநுபவித்து மகிழ் கின்றார். இந்த வரலாறு மிக அதிகமான பாசுரங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

**கஜேந்திரனுக்கு அருளல்** : 'ஆதிமூலமே!' என்று பெருங்குரலிட்டு அழைத்த கஜேந்திரன் என்ற யானை அரசுக்கு அருளிய செயல் பல பாசுரங்களில் அநுசந்திக் கப் பெறுகின்றன. ஒரு பாசுரத்தில் (2.10:10) ''வாரணங் கள் இடர் கடிந்தமால்'' என்று குறிப்பிட்டு மகிழ் கின்றார் ஆழ்வார். திருக்கோவலூர் திரிவிக்கிரமனை மங்களாசாசனம் செய்யும் பாசுரமொன்றில்,

கொழுந்தலரும் மலர்ச்சோலைக்
குழாங்கொள் பொய்கைக்
கோள்முதலை வாய்எவிற்றுக்
கொண்டற்கு எள்கி
அழுந்தியமா களிற்றினுக்கு அன்று
ஆழி ஏந்தி
அந்தாமே வரத்தோன்றி
அருள்செய் தானை (2.10:3)

[கொழுந்து-தளிர்; குழாம்-கூட்டம்; பொய்கை-தடாகம்; கோள் முதலை-வலிவுள்ள முதலை; கொண்டற்கு-காலைக் கல்விதற்கு; எள்கி-மெலிந்து; அழுந்திய-வருந்தின]

என்ற பாசுரத்தில் இந்த வரலாற்றை அநுபவித்து மகிழ்கின்றார். இதே வரலாறு திருவல்லிக்கேணி பார்த்த சாரதியை மங்களாசனம் செய்த பாசுரம் ஒன்றிலும் அநுசந்திக்கப் பெறுகின்றது.

மீன்அமர் பொய்கை நாள்மலர் கொய்வான்.
வேட்கையி னோடுசென்று இழிந்த
கான்அமர் வேதம் கையெடுத்து அலற
கராஅதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து
சென்றுநின்று ஆழிதொட் டானை (2.3:7)

[மீன் அமர்-மீன்கள் உள்ள; பொய்கை-தடாகம்; நாள் மலர்-அன்றலர்ந்தபூ; வேட்கை-விருப்பம்; கான்அமர்-காட்டில் திரியும்; வேழம்-யானை; கை-துதிக்கை; எடுத்து-உயரத் தூக்கி: அலற-கூச்சலிட; கரா-முதலை; கதுவ-கவ்விக் கொள்ள; புள்-கருடன்; ஆழி-சக்கரப்படை]

இந்தப் பாசுரத்தில் அந்த வரலாறு ஆழ்வார் அநுபவமாகின்றது.

**இராமாவதார அநுபவம்:** ஆழ்வார் இந்த அவதாரத்தை அநுபவிப்பது சற்று விநோதமாக அமைந்துள்ளது. இலங்கைப் போர்க்களத்தில் இராவணனுடன் மாண்டு போன அரக்கர்கள் போக, மிகுந்திருந்த அரக்கர்கள் தங்கள் உயிருக்கு மன்றாடும் நிலையில் பெருமாளுடைய வெற்றிச்செல்வத்தை எடுத்துரைத்துப் பாசுரமிட்டுப் பேசி மகிழ வேண்டும் என்ற ஆசை ஆழ்வாரிடம் எழுந்தது.

அந்த ஆசையைத் தம்முடைய வாயால் பேசுவதைவிட தோற்றுப்போன அரக்கர்களின் வாயால் பேசிய துபவித்தல் பாங்கு என்று திருவுள்ளம் கொண்டார். தரமான தன்மையிலிருந்து அந்த வெற்றியைப் பேசலா மாயினும், "நீராடவாராய் (2-4;1), பூச்சூட்டவாராய் (2,7;1), 'காப்பிடவாராய் (2.8;1)" என்று பெரியாழ்வார் தம் வாயால் பேசாமல் யசோதைப்பிராட்டி சொல்லும் பாசுரமாகப் பேசினதைப்போல் இவரும் அந்த வெற்றியை அரக்கர் பேசும் பாசுரமாகவே அருளிச் செய் கின்றார் (10.2). உயிருக்கு மன்றாடும் இவர்கள் விபீஷ ணாழ்வானைப் போல் உண்மையான சேஷத்துவத்திற்கு இசைந்து தொழவில்லையாயினும் ஆழ்வார் இதனை ஆய்ந்து மதிப்பிடாமல் எம்பெருமானுடைய வெற்றி யைப் பேசுகின்றார்கள் என்பதையே மனத்தில் கொண்டு அவர்கள் நிலையைத் தாம் ஏறிட்டுக்கொள்ளுக்கின்றார். இவ்விடத்தில் "தமக்கு அபிமதமான (ஆர்வமான) இராம விஜயத்தை எதிரிகள் மேலெழுந்திட்ட பாசுரத்தாலே அநுபவிக்கின்றார். அங்குத்தை (அப்பக்கம்) விஜயம் தமக்கு இஷ்டமாகையாலே அவ்விஜயத்திற்கு இலக் காய்த் தோற்ற இராட்சசர் தசை பிறந்து, பிராட்டியார் தசை பிறந்து பேசுமாபோலே, தாமான தன்மை தோற்றாதே, தோற்ற இராட்சசர் பாசுரத்தாலே இராம விஜயத்தைப் பேசி அநுவிக்கின்றார்" என்ற பெரியவாச் சான் பிள்ளையின் ஸ்ரீ சூக்தி கண்டு மகிழத் தக்கது.

தண்ட காரணி யம்புகுந் தன்று
    தைய லைத்தக விலியெங் கோமான்
கொண்டு போந்துகெட் டான்; எமக்கிங்கோர்
    குற்ற மில்லை;கொல் லேல்;குல வேந்தே!
பெண்டி ரால்கெடு மிக்குடி தன்னைப்
    பேசு கின்றதென்? தாசர தீ!உன்

அண்ட வாணர் உகப்பதே செய்தாய்:
அஞ்சி னோம்—தடம் பொங்கத்தம்
பொங்கோ (3)

[அன்று-வனவாசகாலத்தில்; தையலை-பிராட்டியை; தகவு இலி-ஈர நெஞ் சற்றவன்; கெட்டான்-முடிந்தான்; இங்கு-இதில்; கொல்லேல்-கொல்லற்க; பெண்டிரால்-பெண் சாபத்தால்; குடி-இராக்கதர் குலம்; பேசுகின்றது-பேசுவதற்கு; அண்ட வாணர்-தேவர்கள்; உகப்பதே-மகிழக் கூடிய காரியத்தையே]

என்ற **மூன்றாம்** பாசுரம் அரக்கர்கள் இராமபிரானை விளித்து தங்கள் தோல்வியும் இராமபிரானது வெற்றியும் தோற்றச் சொல்லிக் கூத்தாடுகின்றனர்.

''குற்றமற்றாரை நலியாத இட்சுவாகுமரபின் அணி விளக்காக அவதரித்த பிரானே! எங்கள் இராவணன் தனக்கு ஒருவகையான தீங்கும் செய்யாத உம்மிடத்தில் தானே வீண்பகைகொண்டு நெடுந்தொலைவு கடந்து தண்டகாரணியத்திடல் புகுந்து சிறிதும் ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாதவனாய் அழகில் சிறந்த பிராட்டியைக் கவர்ந்து கொண்டு வந்து சேர்ந்தான்; இக் குற்றத்தை அவன் மட்டிலும் செய்தானேயன்றி நாங்கள் அவன் செயலில் ஈடுபடவில்லை. நாங்கள் அவனுடைய சேவகர்களாகையால் அவன்கீழ்க் குடிவாழ்ந்த குற்றவாளிகளேயன்றி பிராட்டியைக் கவர்ந்த செயலில் நாங்கள் குற்றவாளிகள் அல்லோம். ஆதலால் எங்களைக் கொல்லாதொழிய வேண்டும். பொருள் நசையே காரணமாகக் கொண்டு கெட்டொழியும் இவ்விழி குலத்தைப் பற்றி நாங்கள் என்ன சொல்ல முடியும்? தேவரீருடைய அடியார்களான தேவர்கள் இராவணனால் தொல்லைப் பட்டவர்களாதலால் 'அப்பாவி தொலைவது என்றோ?' என்று

எதிர் நோக்கி இருந்தனர். அவர்கள் மனோராதம் நிறைவேறியது. இவ்வளவே போதுமானது; இனி எங்களைப் பொருட்படுத்தாது ஒழியவேண்டும்'' என்று வேண்டுகின்றனர்.

''தடம் பொங்கத்தம் பொங்கோ' — என்ற முடிபையுடையன இத் திருமொழிப் பாசுரங்கள், இத்தொடர் இவ்வருளிச் செயல் தவிர வேறு எவ்விடத்தும் கையாளப் பெற்றதாக அறியக் கூட வில்லை. இஃது ஒரு சங்கேத சப்தாநுகாரம் (பொருளற்ற ஒரு சொற்றொடர்) என்றே தோன்றுகின்றது. ''தோற்றவர்கள் தோல்வியாலே பறையடிக்க ஆவதொரு கூத்துண்டு; அந்த சப்தாநுகாரம்'' என்று மட்டிலுமே பெரிய வாச்சான் பிள்ளையும் அருளிச் செய்திருப்பதைக் காண்கின்றோம்.

அடுத்த திருமொழியும் (10.3) இலங்கை அரக்கர்களின் பாசுரமாகவே நடைபெறுகின்றது. அந்த அரக்கர்கள் நிலையில் நின்று ஆழ்வார் ஸ்ரீராம விஜயத்தைப் பேசியநுபவிக்கின்றார் இத் திருமொழியில்.

> 'எம்பிரானே! என்னை
> யாள்வாய்!' என்றென் றலற்றாதே
> அம்பின் வாய்ப்பட் டாற்ற
> கில்லா திந்திர சித்தழிந்தான்
> நம்பி அநுமா! சுக்கி
> ரீவா! அங்கத னே! நளனே!
> கும்ப கர்ணன் பட்டுப்
> போனான்—குழமணி தூரமே (2)

[அலற்றாதே-கோஷம் போடாமல்; வாய்பட்டு-இரையாகி; ஆற்றகில்லாது- தரித்திருக்க முடியாமல்; பட்டுப் போனான்-முடிந்து போனான்]

என்பது இத்திருமொழியின் இரண்டாம் பாசுரம். எல்லாப் பாசுரங்களும் 'குழமணிதூரமே' என்று

அநுமன், சுக்கிரீவன், அங்கதன், நளன் ஆகிய நால்வரையும் விளித்துத் தங்கள் தோல்வியைச் சொல்லிக் கொள்ளுகின்றனர் தோல்வியுற்ற அரக்கர்கள். வானர முதலிகட்குள்ளே இந்நால்வரே முக்கியமானவர்கள். அநுமனுடைய வீரச்செயல்களை முன்னமே கண்டவர்கள்; சுக்கிரீவன் வானரங்கட்கெல்லாம் அரசன் என்பதை அறிந்தவர்கள்; அவனுடைய இரக்கம் முக்கியம் என்பதை உணர்ந்தவர்கள். அங்கதனுடைய அற்புதச் செயல்களில் ஒன்றை அவன் தூது வந்த காலத்தில் நேரில் அறிந்தவர்கள். அணைகட்டுதலாகிய அருஞ்செயல் நளனால் நிறைவேறிற்று என்பதை அறிந்தவர்கள்: "இந்த நால்வர்களையும் விளித்து சொன்னது; இந்திரசித்தும் கும்பகர்ணனும் 'எம்பிரானே! என்னை ஆள்வாய்!' என்று சொல்லி வாழ்ந்து போக வாய்ப்பு இருக்க, அதனைச் செய்யமாட்டாமல் அம்புக்கு இலக்காகி மாண்டொழிந்தனர்; நாங்கள் அங்ஙனம் ஆகாமல் வாழ்ந்து போகப் பார்க்கின்றோம்" என்கின்றனர்.

**குழமணிதூரம்:** தோற்றவர்கள் தங்கள் தோல்விக்கு ஈடாக ஆடுவதொரு கூத்து. மேலே குறிப்பிட்ட 'தடம் பொங்கத்தம் பொங்கோ' என்பதற்கும் இலக்கணமும் இலக்கியமும் இவ்வருளிச் செயல்களே என்று கருத இடம் உண்டு.

**யசோதைப் பிராட்டி நிலையில்:** கண்ணபிரான் விளையாட்டின் விருப்பத்தால் முலையுண்பதையும் மறந்து திரியா நிற்க, யசோதைப் பிராட்டி அப்பிரானை விளித்து முலையுண்ணாமையை அவனுக்கு அறிவித்துத் தன் முலைகளை உண்ண வேண்டுமென்று வற்புறுத்தியதை ஆழ்வாரும் அநுபவிக்க விரும்பித் தம்மை யசோதைப் பிராட்டியாகப் பாவித்துக் கொண்டு அவனை அம்மம் உண்ணுமாறு வேண்டுவதாக அமைந்துள்ளது ஒரு திருமொழி (10.4).

பிள்ளைகள் செய்வன செய்யாய்;
　　பேசின் பெரிதும் வலியை;
கள்ள மனத்தி லுடையை;
　　காணவே தீமைகள் செய்தி
உள்ளம் உருகிஎன் கொங்கை
　　ஓட்டந்து பாய்ந்திடு கின்ற
பள்ளிக் குறிப்புச்செய் யாதே;
　　பாலமு துண்ணநீ வாராய் (6)

[செய்வன-தீம்புகள்; வலியை-மிடுக்குடைய; கள்ளம்-கபடம்; ஓட்டந்து-பால் பெருகி; பள்ளிக் குறிப்பு-உறக்கக் குறிப்பு]

என்பது ஆறாம் பாசுரம். பாலமிழ்தம் பருக வருமாறு அழைக்கின்றாள். தம்மைத் தாயாகவும் எம்பெருமானைக் கண்ணனாகவும் பாவித்துக்கொண்டு கிருஷ்ணாநுபவம் பெறுகின்றார். ஒவ்வொரு பாசுரமும் இவ்வாறு பல்வேறு அநுபவங்களைப் பேசுகின்றன.

''கண்ணா! இத்திருவாய்ப்பாடியில் நீ மட்டும் அன்று; நூற்றுக் கணக்கான பிள்ளைகள் உளர். உன்னைப்போல் அவர்களும் தீம்பு செய்பவர்களே. ஆயினும் நீ செய்யும் தீம்பு மற்ற பிள்ளைகள் செய்யும் தீம்புகளைப் போலன்று. நீ மிகவும் மிடுக்குடையவன். நீ கள்ள நெஞ்சினையுடையாய். நீ தீம்பு செய்வதைத் தடுத்து உன்னைத் தண்டிக்க நினைப்பவர்களும் தம் முகத்தில் கையை வைத்துக்கொண்டு 'இஃதென்ன ஆச்சரியம்!' என்று வியந்து காணும்படியான தீம்புகளைச் செய்கின்றாய். அத்தீம்புகளைக் காணவே என் உள்ளம் உருகுகின்றது; முலை வழியேபாலும் வழிகின்றது. நீயோ முலையுண்பதில் விருப்பற்று, கண்கள் சிவப்பது, மூரிநிமிர்வது, கொட்டாவி விடுவது முதலான உறக்கக் குறிப்புகளைக் காட்டுகின்றாய். இவற்றைத் தவிர்த்துப் பாலமுதம் பருகவாராய்!'' என்றழைக்கின்றாள்.

கண்ணபிரான் செய்யும் தீமைகளைப் பட்டியலிட்டுப் பாசுரமாகச் சொல்லில் கண்ணெச்சில் படும் என்று பொதுப் படையாகப் ''பிள்ளைகள் செய்வன செய்யாய்'' என்றும் 'பேசில் பெரிதும் வலியை' என்றும் சொல்லுகின்றாள் என்பதை உணர்ந்து அநுபவிக்க வேண்டும்.

பெரியாழ்வாரும் ஒருதிருமொழியில் (2.2) இங்ஙனம் கண்ணனை அநுபவிக்கின்றார். இரண்டையும் ஒப்பிட்டு அநுபவிக்கலாம். பெரியாழ்வார் திருமொழி உச்சிப் போதில் முலையுண்ண அழைப்பதுபோல் அமைந்துள்ளது. இத்திருமொழி அந்தியம் போதில் முலையுண்ண வருமாறு அழைப்பதுபோல் அமைந்துள்ளது.

மற்றொரு திருமொழி (10.5) 'சப்பாணி கொட்டுதல்'[11] என்ற விளையாட்டை நுவல்வது. இந்த விளையாட்டை அக்காலத்தில் யசோதைப் பிராட்டி கண்ணனைப் பிரார்த்தித்து அநுபவித்தாள். இதைப் பெரியாழ்வார் 'மாணிக்கக் கிண்கிணியார்ப்ப' (1.6) என்ற திருமொழியில் அநுகரித்து அநுபவித்தார். கலியனும் அதனை இத்திருமொழியில் அநுபவிக்கின்றார் யசோதை நிலையில் இருந்து கொண்டு.

பூங்கோதை யாய்ச்சி கடைவெண்ணெய் புக்குண்ண
ஆங்கவள் ஆர்த்ததுப் புடைக்கப் புடையுண்டு
ஏங்கியிருந்து சிணுங்கி விளையாடும்
ஓங்கோத வண்ணனே! சப்பாணி;
    ஒளிமணி வண்ணனே சப்பாணி (1)

[பூகோதை-பூவை அணிந்த மயிர் முடி; கடை-கடையப்பெற்ற; புக்கு-புகுந்து; ஆர்த்து-கட்டி; புடைக்க-அடிக்க; சிணுங்கி-சீராட்டப் பெற்று; ஓங்கு ஓதம்-தேங்கின கடல்]

---

11. **சப்பாணி கொட்டுதல்**- ஒரு கையோடு மற்றொரு கையைச் சேர்த்துக் கொட்டுதல்.

என்பது முதல் பாசுரம். யசோதைப் பிராட்டி பேசுகின்ற இப்பாசுரத்தில் 'பூங்கோதையாய்ச்சி' என்று தன்னையே படர்க்கையாகச் சொல்லிக் கொண்டபடி. பெரியாழ்வார் திருமொழியிலும் 'சீதக்கடல்' (1 2). இப்படி அடிக்கடி வருதலைக் காணலாம்.

''யசோதைப் பிராட்டிக் கடைந்த வெண்ணெயைக் கள்ள வழியால் வாரி விழுங்கியதால் அவள் அவனைப் பிடித்துக் கொண்டு 'கண்ணி நுண்சிறுத்தாம்பினால்' கட்டிப் புடைக்க, அதனால் சிறிது நேரம் வருந்திக் கிடந்து பின்னையும் அவள் சீராட்டியதனால் விளையாட்டில் இழிகின்ற கடல்வண்ணனே! சப்பாணி கொட்டுக!'' என்று பிரார்த்திப்பது இப்பாசுரம். இத்திருமொழியில் கண்ணபிரான் செய்த சிறுகுறும்புகளையும் அசாதாரணச் செயல்களையும் யசோதை வாக்காகச் சொல்லிச் சொல்லி அநுபவித்து மகிழ்கின்றார் ஆவார்.

இராமாவதாரத்தை அநுபவித்த இரண்டு திருமொழிகளில் இராக்கதர்களின் நிலைமையை ஏறிட்டுக் கொண்டு பேசினார்; ஈண்டு யசோதைப் பிராட்டியின் நிலையை ஏறிட்டுக் கொண்டு பேசுகின்றார். பகவத் விஷயத்தை அநுபவிக்கும்போது வெறுப்புக்கும் விருப்புக்கும் வேறுபாடு இல்லை, இரண்டாலும் பகவானுடைய திருக்குணங்கள் எடுத்துரைக்கப்பெற்று அநுபவிப்பதால்.

**உறுப்புகளால் அநுபவித்தல்** : கண், செவி, வாய், மூக்கு முதலிய உறுப்புகள் எம்பெருமானால் நமக்கு அளிக்கப் பெற்றது அவற்றால் பகவத்விஷயாநுபவம் பெறுவதற்காக; பெற்றுக் களிப்பதற்காக. இத்திருமொழி (11.7) தம்முணர்வைப் பலரும் தெரிந்து கொள்ளுமாறு அருளிச் செய்யப்பெற்றது. இஃது ஒருவித இறையநுபவம்.

நீள் நாகம் சுற்றி நெடுவரை நட்டு ஆழ்கடலைப்
பேணான் கடைந்தமுதம் கொண்டுகந்த பெம்மானை
பூணார மார்வனைப் புள்ளூரும் பொன்மலையைக்
காணாதார் கண்ணென்றும் கண்அல்ல கண்டாமே
(11. 7: 1).

[நீள் நாகம்-வாசுகி; வரை-மலை; நட்டு-நாட்டி; பேணான் - மதியாதவனாகி; உகந்த - மனம் மகிழ்ந்த; புள்-கருடன்; என்றும்-ஒருநாளும்; கண்டாம்-அறிவோம்]

என்பது முதற் பாசுரம். எம்பெருமானைச் சேவிக்கப் பெறாதவர்களுடைய கண்கள் ஒருநாளும் கண்களல்ல என்கின்றார். "கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே; கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே" என்பது சிலப்பதிகாரம் (ஆய்ச்சியர் குரவை) இங்ஙனமே ஒவ்வோர் உறுப்புகளின் பயனையும் எடுத்துக் காட்டி தாம் எம்பெருமானை அநுபவிப்பதுடன் மற்றவர் களையும் அம்முறையில் ஆற்றுப்படுத்துகின்றார். இவ் விடத்தில் பெரியாழ்வார் யசோதை பாவனையில் கண்ண னது திருமேனியழகை (1. 2) திருப்பாதம் தொடங்கி திருக்குழல்கள்வரையில் ஒவ்வோர் உறுப்பையும் அநுப விப்பதை நினைக்கின்றோம். அன்றியும், நாவுக்கரசரின் திருவங்க மாலையும் (தேவா. 4. 9) ஒப்பு நோக்கி அநுப வித்து மகிழத்தக்கது.

இங்ஙனம் ஆழ்வாரின் இறையநுபவம் பலவிதங்களில் நடைபெறுகின்றதைக் கண்டு நாமும் அதில் ஆழங்கால் படுகின்றோம்.

# 21. தத்துவக் கருத்துகள்

பக்தி இலக்கியங்களைத் தோத்திர நூல்கள், சாத்திர நூல்கள் என இருவகையாகப் பகுத்துப் பேசலாம். சாத்திர நூல்கள் தத்துவங்களை விளக்குவதற்காக எழுந்தவை. ஆதலால் அவற்றில் தத்துவங்கள் அளவை முறையில் கோவையாக எடுத்து விளக்கப் பெறும். தோத்திர நூல்கள் எம்பெருமான் புகழ் பாடுபவை; பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட, கேட்போர் பாடுவோர் நெஞ்சில் அது ஊற்றெடுக்கப் பாடப்பெறுபவை. இவற்றில் தத்துவக் கருத்துகள் கோவைப்பட அமைந்திருக்கும் என்று எதிர் பார்க்க முடியாது. அவை ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக அமைந்து பாசுரங்களுக்கு வளஞ்சேர்ப்பவையாக அமைந்திருக்கும். திருமங்கையாழ்வாரின் அருளிச் செயல்களை ஆழ்ந்து கற்கும்போது-ஆழங்கால்படும்போது - இந்த உண்மை தெளிவாகும். ஆகவே, இந்த இயலில் வைணவதத்துவம் இன்னதென விளக்கி, அதன் அடிப்படையில் ஆழ்வாரின் அருளிச் செயல்களில் தத்துவக் கருத்துகள் அமைந்திருக்கும் பாங்கினைச் சுட்டி விளக்க முற்பட்டால் தத்துவக் கருத்துகள் அநுபவமாகித் தெளிவுபெறும். பாசுரங்களும் தேனாக இனிக்கும். எம்பெருமானும் ''அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேனாக'' இருப்பதைக் காட்டும் போக்கில் தட்டுப்படுவான்.

வைணவ சமயத்தின் கொள்கைகளை (1) **தத்துவம்**, (2) **இதம்**, (3) **புருஷாத்தம்** என்று சுருக்கமாகக் கூற லாம்.

## 1. தத்துவம் :

தத்துவங்கள் **மூன்று**. அவை சித்து, அசித்து, ஈசுவரன் என்று வழங்கப்பெறுவன. **சித்து** என்பது, உயிர்களின் தொகுதி; ஆன்மாக்களின் கூட்டம். இது **சேதநம்** என்றும் வழங்கப்பெறும். **அசித்து** என்பது, மக்கள், விலங்கு முதலியவற்றின் உடல் முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதி என்பது; இதனை மூலப்பிரகிருதி எனவும் வழங்குவர். இஃது அசேதநம் என்ற பெயராலும் வழங்கப்பெறும். ஈசுவரன் என்பவன் இறைவன். இவை மூன்றும் **'தத்துவத்திரயம்'** (திரயம் - மூன்று) என்ற பெயரால் வழங்கி வருகின்றன.

**சித்து** : ஞானத்திற்கு இடமான ஆன்மா அல்லது உயிர் சித்து என வழங்கப்பெறுகின்றது. இஃது அன்ன மயம், பிராணமயம், மனோமயங்கட்கு அப்பாலாயிருப் பது. தேசம், இந்திரியங்கள், பிராணன், ஞானம் இவற்றிற்கு வேறுபட்டது. அறியும் தலைவனும், அறிவும், அறியப்பெறும் பொருளும் தானாகவே இருப்பது. அணுவின் அளவினை உடையது; ஆனந்த சொரூபமானது என்றும் நிலை பெற்றிருப்பது. இது கண் முதலிய இந்திரியங்கட்குத் தோற்றாது. மனத்தாலும் இதனை நினைக்க முடியாது. இதனைப் பகுதிகளாகவும் பிரிக்கமுடியாது; அவயவமும் அற்றது. வளர்தல், பருத்தல், குறைதல் முதலிய வேறுபாடுகள் இதற்கு இல்லை. அறிவு மயமாக இருக்கும் இந்த ஆன்மா அறிவுக்கும் இருப்பிட மானது. இந்த அறிவு **'தர்மபூத ஞானம்'** என்று வழங்கப் பெறும். இதனால் ஆன்மா 'தர்மி பூதஞானம்' என்று வேறொரு பெயராலும் வழங்கப்பெறும். இந்தச்

சீவான்மா தனக்கு எப்பொழுதும் தோன்றிக்கொண்டே இருக்கும். தன்னை **'நான்'** என்று அறியும் பொழுது தர்மபூதஞானம் உதவ வேண்டும் என்பதில்லை. ஆனால் சீவான்மா தன்னைத் தவிர வேறு எந்தப் பொருளையும் தன் தர்மபூதஞானத்தால் மட்டிலுமே அறிய முடியும். தன் சொருபத்தைத் தர்மபூதஞானத்தைக் கொண்டும் அறியலாம். ஆன்மா இறைவன் ஏவியபடி நடப்பது; அவனால் தரிக்கப்பெற்று, அவனுக்கு அடிமையாகவே இருப்பது.

**சித்தின் வகை :** சீவான்மாக்கள் எண்ணற்றவர். இவர்களின் தொகுதி **பத்தர்** (தளைப்பட்டிருப்பவர்), **முத்தர், நித்தியர்** என்னும் வேற்றுமையால் மூவகைப் பட்டிருக்கும். இவர்களுள் பத்தர் என்பவர், 'மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய காலமும் கணக் கும் நீத்த காரணனின், மாயையால் மறைக்கப் பெற்ற சொருபத்தையுடையவர்கள்; அநாதி அஞ்ஞானத்தால் தேடிய புண்ணிய பாவங்களால் **(வினையினால்)**[1] சூழப் பெற்றவர்கள்; இவர்கள் அவரவர்களில் வினைக்குத் தக்கவாறு மாறி மாறித் தேவ, மனித, விலங்கு, தாவர வடிவங்களைப் பெற்றுத் துக்க பரம்பரைகளை அநுப விக்கும் சம்சாரிகளாவர். நம் போலியர் இவர்களுள் அடங்குவோம். முத்தர் என்பவர், இவ்வுலகத் தளைகள் கழிந்து பரம பதத்தில் பகவதநுபவ கைங்கரிய போகரான வர்கள் ஆவர். முமுட்சு நிலையிலிருந்து மோட்சத்தை அடைபவர்கள் இந்தக் குழுவில் அடங்குவர். **நித்தியர்** என்பவர், ஒருநாளும் சம்சாரசம்பந்தம் சிறிதும் இலலாத அனந்தன் கருடன் சேனை முதலியார் (விஸ்வக்சேனர்) தொடக்கமானவர்கள்.

---

1. வினை மூவகைப்படும். இப்பிறப்பிற்கு முன்னைய பிறப்புகளில் செய்த வினைகளுள் இப்பிறப்பில் அநுபவத்திற்கென்று அளந்து

**அசித்து ;** அசித்து என்பது அறிவில்லாத பொருள். இது விகாரத்திற்கு இடமானது. அதாவது முன்னைய நிலைகளை விட்டு வேறு நிலைகளை அடைவதாகின்ற வேறுபாட்டிற்கு இடமாய் இருக்கும். இந்த அசித்து இராசச, தாமசங்கள் கலிவாத **சுத்த சத்துவம்** என்றும் இராசச தாமசங்கள் கலந்த **மிச்ரதத்துவம்** என்றும், சத்துவம் முதலிய குணங்களற்ற **சத்துவ சூனியம்** என்றும், மூவகைப்படும்.

**சுத்த சத்துவம் :** இஃது ஆதல் அழில் இல்லாதது; ஞானத்தையும் ஆனந்தந்தையும் எண்டாக்கக் கடவது இறைவனின் அநுபவத்தின் பொருட்டே உண்டான இச்சையாலே நித்திய விபூதியில் (பரமபத்தில்) விமானம், கோபுரம், மண்டபம், உப்பரிக்கை முதலிய வடிவுடன் தோற்றக் கடவது. இது வைகுந்தத்திலிருந்து மேலே எல்லையின்றி எங்கும் பரவிநிற்கும். நெருப்பு, கதிரவன் முதலிய ஒளியுள்ள பொருள்களும் மின்மினிக்கு ஒப்பாம் படி அளவிறந்த ஒளி வடிவானது; கணநேரத்திற்குக் கண நேரம் முன்பில்லாத வியப்பினை உண்டாக்கவல்லதாக இருக்கும்.நித்தியர்,முக்தர் ஈசுவரன் இவர்கள் ஞானத்தால் தன்னை அறியவொண்ணாதபடி ஒளி விட்டுத் திகழும். ஆனால் சம்சாரிகட்கு அங்ஙனம் தோற்றாது. இந்த சுத்த சத்துவம் வைகுந்தத்திலிருதது மேலே எல்லையின்றி எங்கும் பரவி நிற்கும் தன்மையுடையதாயிருக்கும்.

**மிச்ர தத்துவம் :** இதுவே மூலப்பிரகிருதியாகும். இதில் சாத்துவிகம், இராசசம், தாமசம் ஆகிய மூன்றும் கூடி, கர்மவான்களாகிய சம்சாரி சேதநருடைய ஞான ஆனந் தங்கட்கு மறைவை உண்டாக்கும்; அது வல்லாததனை

---

கொள்ளப் பெற்ற வினைத் தொகுதி பிராரத்தம் (நுகர்வினை) எனப்படும. எஞ்சிய வினைத் தொகுதி **சஞ்சிதம்** (பழவினை) எனப்படும். இப் பிறப்பில் செய்யப்படும் வினைத்தொகுதி **ஆகா மியம்** (எதிர்வினை) என வழங்கப்படும்.

அதுவாக நினைக்கும் விபரீத அறிவினையும் விளைவிக்கும் இஃது உற்பத்தி, விநாசம் இல்லாதது. ஈசுவரனுடைய உலகப் படைப்பு முதலியவற்றிற்கு விளையாட்டுக் கருவியாக இருந்து, ஏற்றத்தாழ்வு உள்ள இடம். அவை இல்லாத இடம் என்ற வேறுபாட்டாலும், அழிக்கும் காலம் படைப்புக் காலம் ஆகிய இரண்டு வகையான கால வேறுபாட்டாலும், சூக்கும விகாரங்களையும் தூல விகாரங்களையும் உண்டாக்கக் கடவது. இந்த மிச்ரதத்துவம் அவித்யை, மாயை, திரிகுணம் என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும்.

இந்த மிச்ரதத்துவம் இருபத்து நான்கு வடிவங்களாக இருக்கும். அதாவது சேதநரைப் பூரிக்கச் செய்யும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், ஆகியபுலன்கள் ஐந்தும்; வாக்கு, கால், கை, வாய், எருவாய் (உபத்தம்) ஆகிய கருமேந்திரியங்கள் ஐந்தும்; மண், நீர், எரி, கால், ஆகாயம் என்னும் பூதங்கள் ஐந்தும்; இங்குள்ள, தளைப்பட்டுள்ள (பத்தான்மாக்கள்) ஆன்மாக்கள் பொருந்தியுள்ள மூலப்பிரகிருதி ஒன்றும்; மகத் (மான்) தத்துவம் ஒன்றும்; அகங்கார தத்துவம் ஒன்றும்; மனம் ஒன்றும் என இருபத்து நான்காம், இந்த இருபத்து தத்துவங்களையும்[2] கலந்துதான் ஈசுவரன் தானாகவும் நான்முகன் மூலமாகவும் இந்த அகிலத்தைப் படைக்கின்றான்.[3]

**சத்துவ சூனியம்:** இது காலத்தத்துவம் என்று வழங்கப்படும். இஃது எங்கும் பரவி நிற்கும் ஒரே திரவியம்.

---

2. புருடன் (ஆன்மா, புருடோத்தமன் (பரமான்மா) ஆகிய இரண்டும் சேர்ந்து வைணவ தத்துவம் 26 ஆகின்றது.
3. மேலும் விளக்கத்திற்கு இந்த ஆசிரியரின் **முக்தி நெறி** பக் (40-43) காண்க.

இதில் சத்துவம் முதலிய பிரகிருதியின் மூன்று குணங்களும் இல்லை. எதிர், நிகழ், கழிவு முதலிய விவகாரங்களுக்கும இதுவே காரணம் ஆகும். நிமிடம், வினாடி, நாழிகை முதல் பரார்த்தம் வரையிலுள்ள பகுதிகள் எல்லாம் இத இதனுடையனவே. இஃது ஈசுவரப் படைப்பில் பரிணா மங்களுக்குக் காரணமாய், தோற்றம், ஈறு, அற்றதாய், அவனுடைய படைப்பு, அளிப்பு, அழிப்பு ஆகிய விளை யாட்டிற்குக் கருவியாய் அவனுக்கு உடலாகத் திகழும். வைகுந்தத்தில் முன்பின் என்ற அளவிற்குக் காலம் உளதா யினும் அதன் சம்பந்தம் இன்றி அனைத்தும் எம்பெரு மானது சங்கற்பத்தினால் மட்டிலும் நடப்பனவாகும்.

**ஈசுவரன்:** சீமந் நாராயணனே முழுமுதற் கடவுள்; சாவேசுவரன். இவன் எப்பொழுதும் மாறுபாடத் தன்மை யுடையவன், சத்தியம், ஞானம், ஆனந்தம், அனந்தம் இவற்றின் சொருபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப்பெறாதவன். 'அந்தமில் ஆதி அம் பகவன்' (திருவாய் 1.3:5). எங்கும் நிறைந்திருப் பவன்." உடல் மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந் துளன்" (ஷ்டி 1 1:7). மூன்றுவிதசேதந அசேதந பரிணாம ரூபமான வேறுபாட்டின் குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன்.

பிறப்பொடு மூப்புஒன்று இல்லவன் தன்னைப்
பேதியா இன்பவெள் ளத்தை
இறப்பு எதிர் காலம் கழிவும் ஆனானை (4.3.2)

[பேதியா-விகாரமடையாத]

என்று குறிப்பிடுவர் பரகாலர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகைப் பட்ட பலன்களையும் உயிர்கட்குத் தந்து அவற்றின் புகலி

டமாக இருப்பவன்; தனக்கு ஒப்பாரும் மிககாரும் இல்லா தவன். ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம் தேஜஸ் முதலிய மங்கள குணக கூட்டங்களால் அலங்கரிக் கப் பெற்றவன். அவனிடம் இக்குணங்கள் ஆதல் அழிதல் இன்றி எப்பொழுதும் நிறைந்திருக்கும. இவற்றைத் தவிர வாத்சல்யம், சௌலப்பியம், சௌசீல்யம் முதலிய எண் ணற்ற குணங்களையும் கொண்டவன்[4].

இவ்வுலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் காரணபூதன்.

பூவளர் உந்திதன்னுள் புவனம் படைத்து
உண்டு உமிழ்ந்த
தேவர்கள் நாயகன் (9.9:1)

உடம்புருவல் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுய்ய நின்றானை (2.5:3)

என்பர் திருமங்கையாழ்வார். திருநெடுந் தாண்டகத்தில் ஒரு பாசுரம் இக்கருத்துகளைத் தெளிவாக விளக்கு கின்றது.

பார்உருவி நீர்எரிகால் விசும்பு மாகிப்

பலவேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏர்உருவில் மூவருமே என்ன நின்ற
இமயவர்தம் திருவுருவே றெண்ணும்போது
ஓர்உருவம் பொன்னுருவம்; ஒன்று செந்தீ
ஒன்றுமா கடல்உருவம்; ஒத்து நின்ற
மூவுருவம் கண்டபோ தொன்றாம் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவந்தானே (2)

---

4. முத்திநெறி—கடிதம் 6-பக் 49 55 விவரம் காண்க.

[பார் - பூமி; கால் - காற்று; விசும்பு - ஆகாயம்; சமயம்-ஏற்பாடு; பரந்து-வியாபித்து; ஏர்-அழகிய; இமையவர்-தேவர்; வேறு-தனித்தனி யாகப் பிரித்து; ஒத்துநின்ற - சேர்ந்திருக்கும் போது; முகில்-காளமேகம்]

இப்பாசுரத்தில் முத்தொழில்களைச் செய்யும் மும்மூர்த்தி களைப் பேசி நான்முகன் பரமசிவன் ஆகிய இருவர் சேஷபூதராய், சிருஷ்டிக்கப்படுகின்றவராய், சரீரபூதராய் இருப்பதையும், நாராயணன் சேஷியாய், சிருஷ்டி செய்ப வராய் சரீரியாய் இருப்பதையும் காட்டுகின்றார்.

திருமால், நான்முகன், சிவன் என்ற மும்மூர்த்திகளின் உருவங்களை ஆராயுமிடத்து நான்முகன் உருவம் பொன் னிறமானது; சிவனுடைய வடிவம் சிவந்த தீ வடிவினது; நாராயணன் வடிவம் கருங்கடல் வடிவினது. இம் மும் மூர்த்திகளையும் பிரமாணங் கொண்டு பரிசீலனை செய்யு மிடத்து ஐம்பெரும் பூதங்களை உண்டாக்கியும் பல வகைப்பட்ட சமயங்களை (ஏற்பாடுகளை)யுடைய சகத்தைப் படைத்தும், இப்படிப் படைக்கப்பட்ட சகத் தில் அந்தர்யாமியாய் வியாபித்தும் நிற்கின்ற எம்பெரு மானுடைய உருவம் காளமேக உருவமாக இருக்கும் என்று சொல்லப் படுகின்றதால், முகிலுருவமுடையவனே எம்பெருமான் என்பது உறுப்படுகின்றது.

**பார் உருவி :** பார் பூமிக்கு விசேடணம். அண்ட காரணமான ஐம்பெரும்பூதங்களைச் சிருட்டித்தவன் என்பதை முதல் அடி குறிப்பிடுகின்றது. இவற்றைச் சிருட்டித்த எம்பெருமானுக்கு அண்டத்தில் பிறந்தவர் களான நான்முகன் முதலானாரோடு சமம் என்று ஐயுற இடம் இல்லை என்பதை தெளிவு படுத்துவதற்காக இங்ங னம் குறிப்பிடப் பெற்றது.

படைப்பு இருவகைப்படும். அவை சமஷ்டி சிருஷ்டி, வியஷ்டி சிருஷ்டி என்பன. இவற்றுள் நாமரூப வியாகம் இல்லாதது சமஷ்டி சிருஷ்டி; அஃது உள்ளது வியஷ்டி சிருஷ்டி. **'பார் உருவி நீர் எரிகால் விசும்புமாகி'** என்றது சமஷ்டிசிருஷ்டியைச் சொன்னவாறாம். **'பல்வேறு சமய முமாய்'** என்றது வியஷ்டி சிருஷ்டியைச் சொன்னவாறாம். அதாவது பல்வேறு தேவர், மானிடர், விலங்குகள், தாவ ரங்கள் என்று பலவகைப்பட்ட பாகுபாடுகளையுடைய சகத்தை உண்டாக்கினவன் என்பதை விளக்கினபடி யாகும். சமயம்-ஏற்பாடு. தேவதைகள் ஆராதிக்க உரியராயும் அமுதம் உண்பவராயும் இருத்தல் அவர்களுக் கான ஏற்பாடு; மனிதர்கள் ஆராதனை செய்பவர்களாயும் உணவு உண்பவர்களாயுமிருத்தல் அவர்களுக்கான ஏற்பாடு; விலங்குகளும் தாவரங்களும் ஆராதனைக்குக் கருவியாக இருத்தல் அவற்றுக்கான ஏற்பாடு.

**மூவருமே என்ன நின்ற இமையவர் :** படைத்தல், காத் தல், அழித்தல் என்பன மூன்று தொழில்கள். இவை மூன்றையும் நாராயணன் ஒருவனே நிர்வகித்தாலும், அவனே நான்முகனிடம் உள்புகுந்து படைத்தலையும், உருத்திரனிடம் உள்புகுந்து அழித்தலையும், தானான தன்மையிலேயே காத்தலையும் நடத்தி வருவதையும் கண்டு இந்த மூன்றுக்கும் ஒருவனே தலைவன் என்பதைத் தெளியாமல் சாமானியர் ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு தெய்வத்தை சுதந்திர நிர்வாககனாகக் கருதி மூன்று மூர்த்திகளும் தலைவர்கள் என்று சொல்லுவதைக் கருத்தில் கொண்டு 'மூவருமே என்ன நின்ற இமையவர்' என்கின்றார். அன்றியும், நான்முகன் சிவன் இவர்களும் எம்பெருமானுடைய திருமேனி என்று தெளியக் கண்ட ஆழ்வார் அவர்களையும் **'திருவுரு'** என்ற பெருமை யுடைய சொல்லாலே குறிப்பிடுகின்றார் எனலாம்.

**வேறு எண்ணும் போது :** 'நன்றெழில் நாரணன் நான்முகன் அரன் என்னும் இவரை ஒன்றநும் மனத்து வைத்து உள்ளி' (திருவாய்) என்ற நம்மாழ்வார் வாக்கின் படி ஒரு தத்துவமாக மனத்தில் கொள்ளும்போது முகிலுரு வம் ஒன்றே தோன்றும்; அங்ஙனமின்றி பிரித்து நோக்கும் போது மயக்கத்திற்குக் காரணமான அசாதாரண வடிவங் களைச்சொல்லுவதாகத் தோன்றும். நான்முகனது பொன் உருவமாக இருக்கும்; பொன் எல்லா அணிகளும் பண்ணு வதற்கு உரித்தாயிருப்பதுபோல், அவன் உருவம் பதி னான்கு உலகங்களையும் படைப்பதற்கு உரிய உருவம் என்று தோன்றுவதைக்குறிப்பிடும். உருத்திரனது உருவம் செந்தீ வடிவமாக இருக்கும்; தீயினது இயல்பு அனைத் தையும் கொளுத்துகையாலே உருத்ரனது இயல்பு சகத்தையெல்லாம் அழிப்பதற்கு உரித்தாயிருப்பதாக இருப்பதைக் குறிப்பிடும். கண்டார்க்கு விடாயைத் தீர்ப்ப தாக இருப்பதும், துட்டப் பிராணிகள், நல்ல பிராணிகள், இரத்தினம் முதலியவற்றோடு வேறுபாடு இன்றி எல்லாப் பொருள்களையும் தன்னுள்ளே இட்டு வைத்துக் காப்பது கடலின் இயல்பாகக் காணப்படுவதால், எம்பெருமா னுடைய இயல்பை நோக்கும்போது அண்டினவர்கட்குத் தாபத்திரயகரமாயும், அடைந்தாரைத் தன் அபிமானத் தில் அடக்கிக்காப்பதாகத் தோற்றுவதையும் குறிப்பிடும்.'

**ஒத்து நின்ற மூவுருவும் கண்டபோது :** அவரவர்களு டைய தொழிலுக்கு ஏற்ப அவரவருடைய உருவம் பொருத்தமாக இருப்பதைக் குறிப்பிடுகின்றது இத் தொடர். சிருஷ்டிக்குப் பொருத்தமாகவுள்ளது பொன் உருவம்; அழித்தலுக்குப் பொருத்தமாக அமைவது செந்தீ உருவம்; காப்பதற்குத் தகுதியாக இருப்பது மாக் கடலுரு வம். இவ்வாறு பொருத்திக் காண்க. ஆக, இப்படிப்பட்ட மூவுருவையும் பிரமாணகதி கொண்டு ஆராய்ந்தால்,

'பாருருவி நீரெரிகால் விசும்புமாகிப் பல்வேறு சமயமு மாய்ப் பரந்து நின்ற' ஒன்றேயான சோதியாகும். என்பது உறுதியாகும்.

**எம் அடிகள் உருவம் முகில் உருவம்** : 'மாக்கடல் உருவம்' என்றதையே இங்கு 'முகிலுருவமே' என்று திரும்பக் கூறுகின்றார். கருத்தை வற்புறுத்துவதற்கு மேலும் இந்த ஆழ்வார்,

> யாவருமாய் யாவையுமாய்
> எழில்வேதப் பொருள்களுமாய்
> மூவருமாய் முதலாய
> மூர்த்தி (4. 1: 2)

என்றும்,

> வான்நாடும் மண்நாடும்
> மற்றுமுள்ள பல்லுயிரும்
> தானாய எம்பெருமான்
> தலைவன் (4. 1: 3)

என்றும்,

> தன்னாலே தன்உருவம் பயந்த தானாய்த்
> தயங்கொளிசேர் மூவருக்கும் தானாய் வானாய்
> தன்னாலே தன்உருவம் மூர்த்தி மூன்றாய்த்
> தானாயன் ஆயினான் (6. 6: 6)

என்றும் போற்றியுரைத்தலைக் கண்டு மகிழலாம். இதனை நம்மாழ்வாரும்,

> இவையும் அவையும் உவையும்
> இவரும் அவரும் உவரும்
> எவையும் எவரும் தன்னுள்ளே
> ஆகியும் ஆக்கியும் காக்கும்
> அவையுள் தனிமுதல் எம்மான்[5]

---

5. திருவாய். 1. 9: 1

என்று போற்றியுரைப்பர். 'அழிப்பொடு அளிப்பவன் தானே'[6] என்றும், 'காக்கும் இயல்பினன் கண்ண பெருமான்'[7] என்றும், பேசுவர். சிறார் வீடுகட்டி அழிக்குமாப் போலே இம் முத்தொழில்களும் இவனுக்குத் தன் இச்சையாலே உண்டாகும் விளையாட்டேயாகும். இதனை நம்மாழ்வார்,

> துன்பமும் இன்பமும் ஆகிய
> செய்வினை யாய்உல கங்களுமாய்
> இன்பமில் வெந்நர காகி
> இனியநல் வான்சுவர்க் கங்களுமாய்
> மன்பல் உயிர்களும் ஆகிப்
> பலபல மாய மயங்குகளால்
> இன்புறும் இவ்விளை யாட்டுடை
> யான்[8]

என்று குறிப்பிடுவர். இதனையே கம்பநாடன்,

> உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
> நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகி லாவிளை யாட்டுடை யாரவர்[9]

என்று விளங்குவன். ஆழ்வார்களின் பாசுரங்களில் தோய்ந்து நின்ற நிலையே இக்கூற்றுக்குக் காரணமாகலாம்.

**உண்டு உமிழ்தல் :** பொதுவாக ஆழ்வார்களின் பாசுரங்களில் 'உண்டு உமிழ்தல்' என்ற தொடர் காணப்பெறுதல்போல திருமங்கை ஆழ்வார் பாசுரங்களிலும் காணப்பெறுகின்றது.

---

6. திருவாய். 1. 9: 8
7. ஷை 2. 2: 9
8. ஷை 3. 10: 7
9. கம்பரா. காப்பு

ஞாலம் முற்றும் உண்டுஉமிழ்ந்த
நாதன் என்றும், நானிலம்சூழ்
வேலை அன்ன கோலமேனி
வண்ணன் என்றும் (4.8:6)

என்ற திருநாங்கூர் பார்த்தன்பள்ளிப் பாசுரத்திலும் (தாய்ப் பாசுரமாக வருவது),

பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து
பாரதம் கையெறிந்து ஒருகால்
தேரினை ஊர்ந்து தேரினைத் துரந்த
செங்கண்மால் (4.10;5)

என்ற திருவெள்ளியங்குடிப் பாசுரத்திலும் இத்தொடர் வருவதைக் காணலாம்.

இங்கு 'உண்ணல்' என்பது அழித்தலையும், 'உமிழ்தல்' என்பது படைத்தலையும் குறிக்கின்றது. முன்னது உலகம் இருக்கும் நிலையில் சூக்குமமாக இருக்கும் நிலையையும், பின்னது பருப்பொருளாக இருக்கும் நிலையையும் குறிக்கின்றன. இவற்றை விளக்குவதற்குமுன்னர் வேறொரு கருத்தையும் உளங்கொள்ளல் வேண்டும். உயிரல்லாத உலகப் பொருள் அனைத்திற்கும் மூலப் பகுதியே (பிரகிருதியே) காரணமாகும். ஒரு பொருள் உண்டாவதற்கு மூன்று காரணங்கள் கூறுவதுண்டு. அவை முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் ஆகும். மண் பானையாக வனையப்பெறு மிடத்து மண் முதற்காரணம் (உபாதானகாரணம்); அதாவது காரியமாக மாறுவது முதற்காரணம். இங்கு மண் பானையாக மாறிற்று. முதற்காரணமாக உள்ள ஒரு பொருளை மாற்றவல்ல கர்த்தாவை நிமித்த காரணம் என்று கூறுவர். இங்கு, பானையை வனையவல்ல குயவன் நிமித்த காரணம் ஆகின்றான். அவன் குடத்தை வனைவதற்குக் கருவியாகவுள்ள தண்டு, சக்கரம் முதலி

யவை துணைக்காரணம் (சகஹாரி காரணம்). இங்கு மண் பானையாகிற காரணமாவதற்கு மூன்று காரணங்களும் வெவ்வேறு பட்டிருப்பதைக் காண்கின்றோம். இங்ஙன மின்றி உலகத்தோற்றத்திற்கு—உலகம் உண்டாகிய காலத்தில்—ஈசுவரனே மூவகைக் காரணங்களாக உள்ளான். அதாவது ஈசுவரனே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலுக்கும் காரணமாகின்றான். இதுவே வைணவ தத்துவமாகும்.[10]

சித்தும் அசித்தும் சூக்குமமாக (நுண்மையாக) இருக்கும் நிலையில், அஃதாவது உலக உற்பத்திக்கு முன்னர் — அவற்றுக்குள் இறைவன் அந்தர்யாமியாக சங்கல்பத்தோடு இருக்கும் நிலையில்—இறைவன் உலகிற்கு முதற் காரணமாகின்றான். இங்ஙனம் நுண்ணிய நிலையில் இருக்கும் சித்து அசித்துகளை வெளிப்படுத்தி 'உலகப் படைப்பு செய்வோம்' என்று இறைவன் எண்ணுகின்ற திலையில் இறைவன் உலகிற்கு நிமித்த காரணமாக அமைகின்றான். இறைவனுடைய ஞானம், சக்தி முதலியவையே துணைக் காரணமாகின்றன. ஆக, இறைவன் இம்முறையில் உலகப் படைப்பிற்கு மூன்று காரணங்களுமாக உள்ளான் என்று மெய் விளக்க அறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். இக்கருத்தினை நம்மாழ்வார் பல இடங்களில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

நினைந்த எல்லாப் பொருள்கட்கும்
வித்தும்ஆய், முதலில் சிதையாமே
மனம்செய் ஞாலத்து உன்பெருமை
மாசு ணாதோ? மாயோனே (திருவாய் 1.5:2)

10. இதன் விரிவான விளக்கத்தை இந்த ஆசிரியரின் **முத்திநெறி** (பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை—108) பக். 12-15 கண்டு தெளிக.

தானோர் உருவே தனிவித்தாய்த்
தன்னின் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய் (டி 1.5:4)

எப்பொருட்கும்
வேர்முதலாய் வித்துமாய்ப்
பரந்து தனிநின்ற
கார்முகில் வண்ணன்
எம்கண்ணன் (டி 2.8;10)

என்ற பாசுரப் பகுதிகளில் இதனைக் கண்டு தெளியலாம்.

மேற்கூறிய மூன்று காரணங்களுள் இறைவன் உலகிற்கு முதற்காரணம் என்பது மிகவும் முக்கியமானது. இதனைத் தெளிவாக்க வேண்டும். காரணப் பொருள் பின் காரியப் பொருளாக மாறுவது முதற்காரணம் என்பது பொதுவிதியாகும். இங்கு இறைவனே இவ்வுலகப் பொருளாக மாறினான் என்றால் அங்ஙனமன்று. இவ்வுகப் பொருள்கட்கு அவற்றின் நுண்ணிய நிலை முதற் காரணம். பருப்பொருளாக மாறிய நிலைமை காரியம். இறைவன் நுண்ணிய நிலையிலுள்ள சித்து அசித்துகளில் உள்ளேயும் அந்தர்யாமியாக உள்ளான். நுண்மையான சித்து அசித்துகளில் இறைவன் அந்தர்யாமியாக இருக்கும் நிலை முதற்காரண நிலையாகும். பருப்பொருளாக உள்ள சித்து அசித்துகளில் இறைவன் அந்தர்யாமியாக உள்ள நிலையே காரிய நிலையாகும். முதற்காரமாகவுள்ள நிலையிலும், காரியமாகவுள்ள நிலையிலும் சிறிதும் வேறுபடுவதில்லை. இதனால் ஈசுவரன் விகாரமற்றவன் — நிர்விகாரகன்— என்று சொல்லுவதில் தவறில்லை.[11] இக்கருத்தை ஆழ்வார் பாசுரத்தில் 'வித்தாய் முதலில் சிதையாமே' (திருவாய் 1.5:2) என்று தொடர் அழகுடன் விளக்

11. தத்துவத்திரயம்-ஈசுவரப் பிரகரணம் 26.

குவதைக் கண்டு தெளியலாம். உலகத்துப் பொருள்கள் போலன்றி இறைவன் தன் நிலையில் சிறிதும் சிதைவின்றி இருந்து கொண்டே எல்லாப் பொருள்கட்கும் வித்தாக உள்ளான் (முதற் காரணமாகின்றான்) என்பது கருத்தாகும். இங்ஙனம் இருத்தல் அவனுடைய ஆச்சரிய சக்தியாகும். இதனையே திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்,

சின்னூல் பலபலவாயால் இழைத்துச்
சிலம்பி பின்னும்
அந்நூல் அருந்தி விடுவதுபோல்
அரங்கர் அண்டம்
பனனூறு கோடி படைத்துஅவை
யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர் போத
மனம் மகிழ்ந்தே[12]

என்று மிக அழகான உவமை கலந்த பாடலால் விளக்குவர். சிறிய சிலந்திப் பூச்சி தன்னிடத்திலிருந்து நூலை உண்டாக்கிப் பின் அதனை விழுங்குகின்றது. நூல் உண்டாவதற்கு முதற் காரணமாகவுள்ள அப்பூச்சி நன் நிலையில் அழிவதில்லை. ஒரு சிறிய சிலந்திக்கு இச்செயல் கூடுமேல் தன் நிலையில் சிதைவின்றித் தான் உலகிற்கு முதற் காரணமாகிய எல்லாம் வல்ல இறைவனுக்கு அரிதாகுமோ?

'ஒரு சிலந்திக்குண்டான ஸ்வபாவம்
சர்வ சக்திக்குக் கூடாதொழிய
கிறே'[13]

என்ற தத்துவத்திரய வாக்கியத்தை ஈண்டு நோக்கி உணற்பாலதாகும்.

12. திருவரங்க மாலை-18
13. தத்வ. ஈசுவரப்-29

ஈசுவரன் அனைத்திற்கும் ஆதாரமானவன்; அனைத்தையும் அடக்கி ஆள்பவன்; அனைத்தினுடைய பலனையும் அநுபவிப்பவன். மேலும் அசித்து (இவ்வுலகப் பொருள்) மாறுபாடடைவதற்கும் இவனே காரணன்.

கருமமும் கரும பலனும்
ஆகிய காரணன் (திருவாய் 3.5:10)

என்ற திருவாய் மொழித் தொடரால் இதனை அறியலாம். இறைவன் தன்னை அடைந்தவருடைய எல்லா வினைகளையும் போக்குபவன். சகல வேதங்களாலும் போற்றப்பெறுபவன். இந்த உலகிலுள்ள உயிர்களின் பக்தி மூலமும் பிரபத்தி மூலமும் வீடுபேற்றினை அடைவதற்கு இவனே துணையாவான்.

தாய்நினைந்தகன் றேயொக்க என்னையும்
தன்னை யேநினைக் கச்செய்து தான்எனக்
காய்நினைந்தருள் செய்யும் அப்பனை (3.5:10)

என்பர் கலியன். கன்றானது எப்பொழுதும் தன் தாயையே நினைத்துக் கொண்டிருக்குமாப்போலே உலகிக்கெல்லாம் தாயாகிய தன்னையே தானும் (ஆழ்வாரும்) நினைத்திருக்குமாறு செய்தவன் என்கின்றார்.

நித்திய விபூதியாகிய பரமபதத்தில் இவனுக்கெனத் தனியான திவ்விய மங்கள உருவம் உண்டு. இந்த உருவம் ஈடும் எடுப்புமற்றது. பேரொளியினை உடையது; பேரழகு வாய்ந்து கண்டாரை ஈர்ப்பது. 'பயிலும் சுடர்ஒளி மூர்த்தி; பங்கயக் கண்ணன்' (திருவாய் 3.7:1), 'மாசறு சோதி என் செய்யவாய் மணிக்குன்றம்' (டி 5.3:1) என்று இவ்வுருத்தின் அழகில் நெஞ்சைப் பறிகொடுத்த ஆழ்வார்களின் கூற்றுகளைப் பாசுரங்களெங்கும் காணலாம். இந்த உருவத்துடன் பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார், நீளாதேவி ஆகியோருக்கு நாயகனாக இருப்பவன். இதனை,

இன்துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கு
இன்பன்; நல்புவிதனக் கிறைவன்;
தன்துணை ஆயர் பாவைநப் பின்னை
தனக்கிறை; (2.3:5)

என்ற பரகாலரின் வாக்கால் அறியலாம்.

**சரீர-சரீரி பாவனை :** சேதநமும் அசேதனமும் இறைவனின் திருமேனியாக அமைந்துள்ளன என்பது வைணவ தத்துவம். திருமங்கையாழ்வார்,

திடவிசும்பு எரிநீர் திங்களும் சுடரும்
செழுநிலத்து உயிர்களும் மற்றும்
படர்பொருள் களுமாய் நின்றவன் (4. 3: 3)

என்ற பாசுரத்தில் இந்த இரண்டு தத்துவங்களையும் சேர்த்துக் கூறுவதைக் காணலாம். மேலும்,

பவ்வநீர் உடையாடை ஆகச்சுற்றி
பார்அகலம் திருவடியா பவனம் மெய்யா
செவ்விமா திரம்எட்டும் தோளா அண்டம்
திருவடியா நின்றான் (6. 6: 3)

என்பதில் அசித்தை மட்டிலும் உடலாகக் காட்டுவர். சுத்த சத்துவம், மிச்ரதத்துவம், சத்துவ குனியம் ஆகிய மூன்று பகுதிகளும் ஈசுவரனுக்கு உடலாயும் நித்தியர் முத்தர் பத்தர் என்ற மூன்றுவித ஆன்மாக்களும் ஈசுவரனுக்குப் போக்கியமாயும் (அநுபவப் பொருளாயும்), போகத்திற்கு உபகரணமாயும், போகத்தை அநுபவிக்கத் தக்க இடங்களாயும் இருக்கும் என்பதையும் தெளிவாக அறியலாம்.

சரீர - சரீரி பாவனையை விளக்கும் பாசுரங்கள் இந்த ஆழ்வாரின் அருளிச் செயல்களில் ஏராளமாக உள்ளன. அவற்றுள் சில :

அம்பரம் அனல்கால் நிலம்சலம்
ஆகி நின்ற அமரர்கோன் (1.8:8)

வான்நாடும் மண்நாடும்
மற்றும் உள்ள பல்உயிரும்
தான்ஆய எம்பெருமான் (4.1:3)

குன்றமும் வானும் மண்ணும்
குளிர்புனல் திங்களோடு
நின்றவெம் சுடரும் அல்லா
நிலைகளும் ஆய எந்தை (4.5:7)

நீர் அழல் வான்ஆய் நெடுநிலன் கால்ஆய்
நின்றநின் நீர்மை. (10.9;9)

தீஎம் பெருமான் நீர்எம் பெருமான்
திசையும் இருநிலனும்
ஆயஎம் பெருமான் ஆகிநின்றால் (4.9:5)

என்பனவாகும்.

**விளக்கம்:** சரீர-சரீரி பாவனை என்ற கருத்தை இவ்விடத்தில் விரிவாக விளக்குவது பொருத்தமாகும். உயிர் உடலில் இருந்து அதனைத் தரிக்கச் செய்கின்றது. உயிரின் றேல் உடல் வீழ்ந்து விடுதல் கண்கூடு. மேலும் உயிர் தான் உடலை இயக்குகின்றது. உயிர் உடலுக்குத் தலைவனாக உள்ளது. அங்ஙனமே இறைவன் எல்லாப் பொருள்களில் இருந்து அவற்றைத் தன் விருப்பம்போல் நடத்தி அவற்றிற்குத் தலைவனாகவும் இருக்கின்றான். ஆயினும், உடலினுள் உயிர் இருப்பதற்கும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. உயிர் அணு அளவினதாய் உடம்பினுள் ஓரிடத்திலிருந்து தன் ஞானத்தால் (தர்மபூத ஞானத்தால்) உடல் முழுவதும் வியாபித்து இவ்வுடம்பைப்பற்றிய நிகழ்ச்சிகளை உணர்த்துகின்றது. இறைவன் அங்ஙனமின்றி ஒவ்வொரு பொருளுள்ளும் முழுவதும் தன் சொரூபத்தோடு

வியாபித்துள்ளான். அன்றியும், உடலினுள் உயிர் இருப்பதற்கும், உடல் உயிர் ஆகிய இரண்டினுள் இறைவன் இருப்பதற்கும் மற்றொரு வேறுபாடும் உண்டு. உயிர் உடலினுள் இருக்கும்போது அவ்வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வுகள் (விகாரங்கள்) உயிருக்கு உண்டாவதில்லை. ஆனால் அவ்வுடலைப்பற்றிய இன்பத்துன்ப உணர்ச்சிகள், அறிவின் சுருக்கம், பெருக்கம் ஆகியவை உயிருக்கு உண்டு. உடலின்மீது தண்ணிய காற்று வீசுங்கால் இன்புறுதலும், தீ சுடுங்கால் துன்புறுதலும் உடலினுள் இருக்கும் உயிருக்கு நேரிடுகின்றன. இனி, குழந்தைப் பருவத்தில் அதனுள் இருக்கும் உயிரின் அறிவு சுருங்கிய நிலையிலிருந்து பின்பு வளர்ச்சியுறுதலைக் காண்கிறோம். மற்றும், மக்கள் உடம்பினுள் உள்ள உயிர் ஐம்பொறி அறிவும் உடையதாக உள்ளது. அவ்வுயிரே, மரம் எறும்பு முதலிய உடல்களில் புகுந்தால் ஐம்பொறியறிவுமின்றிச் சில குறையவும் பெறுகின்றன. இனி, உயிர் பரு உடலைப் பெறாத நிலையில் அறிவு சுருங்கியிருத்தலும், அறிவு விரிந்திருத்தலும் உண்டு. இங்ஙனமாக உடலைப்பற்றி நிற்கும் உயிர் அவ்வுடலுக்கேற்ப இன்பதுன்ப உணர்ச்சிகளும் அறிவின் சுருக்கமும் பெருக்கமும் அடைதல் தெளிவாகும். ஆனால் உடம் உயிர் இவ்விரண்டினுள்ளும் கலந்து நிற்கும் இறைவனை இவ்வேறுபாடுகள் சிறிதும் அடைவதில்லை. உயர்திணை அஃறிணையாகிய எல்லாப் பொருள்ளும் இறைவன் கலந்து நின்று அவற்றின் அவத்தைகள் தன்னைத் தொடராதபடி இருக்கின்றான். உடலிலுள்ள உயிர் அவ்வுடலுக்குரிய வளர்ச்சி தேய்வு நரைதிரை முதலிய விகாரங்களை அடைவதில்லை என்பதனை நாம் உணர்வோமாயின், அவ்வுடல் உயிர் இரண்டின் விகாரங்களும் இறைவனை அடைவதில்லை என்பதனையும் உணரலாம் என்பது இராமாநுசர் அருளிய விளக்கம் ஆகும்.

இதற்குக் காரணம் 'பிரவேச ஹேது விசேடம்' என்பர் மெய் விளக்க அறிஞர்கள். ஆன்மா உடலினுள் கர்மம் அடியாகப் பிரவேசிக்கின்றது; இறைவன் இவ்விரண்டினுள் (உடல், உயிர்) திருவருள் காரணமாகப் பிரவேசிக்கின்றான். சிறைக் கூடத்தில் சிறையனும் கிடந்தான், அரசகுமாரனும் இருந்தான். சிறையன் கர்மம் அடியாகப் பிரவேசிக்கையாலே துக்கத்திற்கு ஏதுவாயிற்று; அரசகுமாரன் இச்சையால் பிரவேசித்தால் போகரூபமாயிருந்தது. இந்த எடுத்துக் காட்டால் மேற்கூறிய கருத்தைத் தெளியலாம்.[14]

**இறைவனின் ஐந்து நிலைகள்:** இறைவனுடைய திவ்விய மங்கள உருவம் பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து நிலைகளில் இருக்கும். பரத்துவம் என்பது, காலம் நடையாடாததும், ஆனந்தம் அளவிறந்து ஒப்பற்றதாயும் உள்ள நித்தியவிபூதியில் (வைகுந்தத்தில்) இருக்கும் பரவாசுதேவனின் இருப்பு. வியூகம் என்பது, பரவாசுதேவன் லீலாவிபூதியில் (இந்த உலகில்) அதன் படைப்பு, அளிப்பு, அழிப்பு இவற்றை நடத்துவதற்காகவும் சம்சாரிகட்கு வேண்டியவற்றை ஈர்ந்து வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காதற் பொருட்டும், வீடு பேற்றினை விரும்பித் தன்னை இடையறாது உபாசிப்பவர்கட்கும் (நினைப்பவர்கட்கும்) அவாகளது தளைகளைப் போக்கித் தன்னை வந்தடைவதற்குக் காரணமான பேரருளைச் சுரப்பதற்காகவும் வியூகவாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்நன் அநிருத்தன் என்ற பெயர்களுடன் வடிவங் கொண்டு திருப்பாற்கடல் இருக்கும் நிலை. இவற்றுள் வாசுதேவ வடிவமான பரத்துவத்தில் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் என்ற ஆறு குணங்களும் நிறைந்திருக்கும். ஏனைய மூன்றிலும் அவரவர்கள்

14. ஈட்டின் தமிழாக்கம்-திருவாய் 3.4:10 காண்க.

மேற்கொண்ட செயலுக்குத் தக்கவாறு ஒவ்வொன்றிலும் இரண்டிரண் குணங்கள் விளக்கம் பெற்றிருக்கும்.

**கிளை வியூகங்கள்:** மேற்குறிப்பிட்ட நான்கு வியூகங்களும் ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பன்னிரண்டு கிளை வியூகங்களாகப் பிரியும். வியூகவாசுதேவமணிடத்துக் கேசவன், நாராயணன், மாதவன் என்ற கிளைகளும்; சங்கர்ஷணனிடம் கோவிந்தன், விஷ்ணு மதுசூதனன் என்பவைகளும்; பிரத்தியும்னனிடத்து திரிவிக்கிரமன், வாமனன் சிரீதரன் என்பவைகளும்; அநிருத்தனிடத்து. இருடிகேசன், பதுமநாபன், தாமோதரன் என்பவைகளும் தோன்றி அவ்வப் பெயர்களைப் பெறுவர்.[15] இவை யாவும் பன்னிரு திங்களின் தலைவர்களாக இருக்கும். இவற்றின் அறிகுறியாகத்தான் வைணவர்கள் தம் திருமேனியில் துவாதசமாகத் திருமண் காப்பிட்டுக் கொள்வர். இப்பன்னிரு திருமண் காப்பும் அவர்கள் திருமேனியில் மேற்சொன்ன பன்னிருவரும் அதிட்டித்து இருக்கும் இடங்களைக் குறிக்கும்.

**விபவம் :** விபவ அவதாரங்கள் எண்ணிறந்தவை. இவை ஆதிஅம் சோதி உருவை அங்கு வைத்து இங்குப் பிறந்தவையாதலின், பிறப்பு இறப்பு அற்றவனான இறைவனது தன்மைகளைக் கொண்டவை. இந்த அவதாரங்கள் யாவும் ஆழ்வார்களின் பாசுரங்களில் குறிப்பிடப் பெறுகின்றன. ஒரு திருப்பதிகத்தால் திருமங்கையாழ்வார் அவதாரங்களில் ஈடுபட்டுப் பேசுவதைக் காணமுடிகின்றது. இதில் ஒன்று,

துணைநிலை மற்றெமக்கு ஓர் உள தென்றிராது
தொழுமின்கள், தொண்டர்! தொலைய
உணமுலை முன்கொடுத்த உரவோளது ஆவி
உகஉண்டு, வெண்ணெய் மருவி

15. திருவாய் 2.7 (பன்னிரு திருநாமப் பாட்டு.

*பணைமுலை ஆயர்மாதர் உரலோடு கட்ட,*
*அதனோடும் ஓடி, அடல்சேர்*
*இணைமருது இற்றுவீழ நடைகற்ற தெற்றல்*
*வினைப்பற் றறுக்கும், விதியே (11.4.9)*

இது கிருட்டிணாவதாரத்தில் ஆழ்வார் ஆழங்கால் பட்டதைக் காட்டுவது. மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமன - திரிவிக்கிரமன், பரசுராமன், இராமன், ஹம்சம் அவதாரங்களைக் கூறும் பாசுரங்கள் இப்பதிகத்தில் உள்ளன. திருமங்கையாழ்வார் அவதாரங்களில் ஈடுபட்டதைப் பல்வேறு இடங்களிலும் காணலாம்.

*பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு*
*பார்த்தன்தன் தேர்முன் நின் றானை*
*சிற்றவை பணியால் முடிதுறந் தானை*
*திருவல்லிக் கேணிகண் டேனே (2.3:1)*

இதில் அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்ட நிலையில் கிருஷ்ணாவதாரம், இராமாவாதாரம் இவற்றில் ஈடுபடுகின்றதைக் காண்கின்றோம். பெரும்பாலும் இராமாவதாரத்திலும் கிருஷ்ணாவதாரத்திலும் அதிகமாகவும், வாமனம், நரசிம்மம், வராகம் முதலியவை அவற்றுக்கு அடுத்துக் குறைவாகவும் குறிப்பிடப்பெற்றுளன. முன்னவை மக்களிடையே தோன்றி அதிகக் கால அளவு பழகினமையே இதற்குக் காரணமாகக் கொள்ளலாம். இதன் காரணமாக இறைவனின் மங்கள குணங்களை மக்கள் அநுபவிப்பதற்கு வாய்ப்புகள் மிக்கு இருந்தன. ஆகவே, ஆழ்வார்களும் அவற்றில் அதிகமாக ஈடுபட்டுப் பேசுகின்றனர்.

**அந்தர்யர்மித்துவம் :** சேதநர்களின் உள்ளேபுக்கிருந்து எல்லாச்செயல்கட்கும் தாம் ஏவுபவனாக இருப்பதோடு அவர்கட்குத் தியான ருசி பிறந்தபோது தியானத்திற்கு உரியனாவதற்காகவும், அவர்களைக் காப்பதற்காகவும், அழகேவடிவெடுத்தாற்போன்ற மங்களகரமான திருமேனி

யுடன் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவனாய், பெரிய பிராட்டியரோடு கட்டைவிரல் அளவாக ஒவ்வொரு இதய கமலத்துக்குள்ளே எழுந்தருளியிருக்கும் இருப்பே இந்த நிலையாகும்.

திருவேங்கடம்பற்றிய திருப்பதிகம் ஒன்றில்,

*மின்ஆர் முகில்சேர் திருவேங் கடம்மேய*
*என்ஆனை என்அப்பன் என்நெஞ்சில் உளானே*
*(1.10:6)*

*தேனே! திருவேங்கட மாமலை மேய*
*கோனே! என்மனம் குடிகொண் டிருந்தாயே*
*(1.10:7)*

*வந்தாய்; என்மனம் புகுந்தாய் மன்னிநின்றாய்*
*(1.10:8)*

என்று ஆழ்வார் பேசுவது இந்த நிலையையை யாகும்.

திருவிண்ணகர் பதிகம் ஒன்றில்,

*'வானே மாநிலமே!*
*வந்துவந்தென் மனத்திருந்த*
*தேனே! (6.2:3)*

என்றும்,

*சுடர்போல்என் மனத்திருந்த*
*வேதா! (6.2:9)*

என்றும், மற்றொரு பதிகத்தில்,

*உன்னைஎன் மனத்தகத்தே*
*திறம்பாமல் கொண்டேன் (63:2)*

என்றும்,

*நின்னைநெஞ்சில்*
*உய்யும் வகையுணர்ந்தேன் (6.3:6)*

என்றும் எம்பெருமான் இருப்பதாகப் பேசுவது இந்த நிலை எம்பெருமானையேயாகும்.

திருநறையூர்ப் பதிகம் ஒன்றில்,

சிறியாய்,ஓர் பிள்ளையுமாய்
உலகுண்டோ ராலிலைமேல்
உறைவாய் என்நெஞ்சினுள்ளே
உறைவாய், உறைந்ததுதான்;
அறியா திருந்ததயேன்.
அடியேன் (7.2:4)

என்றும், ''என் நெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போக லொட்டேன்'' (7.2:5) என்றும், ''இப்போதென் நெஞ் சினுள்ளே புகுந்தாயைப் போகலொட்டேன்'' (9.2:8) என்றும், ''யானாய் என்றனக்காய் அடியேன் மனம் புகுந்த, தேனே!'' (7.2:9) என்றும் இந்த நிலை எம்பெரு மானை அநுசந்தித்து மகிழ்வதைக் காணலாம்.

**அர்ச்சாவதாரம் :** அர்ச்சாவதாரம் என்பது, 'தமரு கந்தது எவ்வுருவம் அவ்வுருவம்' (முத. திருவந். 44) என்ற பொய்கையாழ்வார் கூற்றுப்படி அன்பர்கள் எதைத் தமக்குத் திருமேனியாகக் கொள்ளுகின்றனரோ அதனையே இறைவன் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னாரிடத்தில் தோன்றி சந்நிதி பண்ண வேண்டும் என்கின்ற நியமமில்லாதபடி, தான் விரும்பிய எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் எவரிடத்திலும் தோன்றிச் சந்நிதிபண்ணி நீராட்டம், தளிகை, இருப்பு முதலிய எல்லாச் செயல்களையும் உடையவனாகக் கொண்டு திவ்விய தேசங்களிலும் அன்பர்களின் திருமாளி கைகளிலும் எழுந்தருளியிருக்கும் நிலை இது. உலகியலில் மண்டியிருப்போருக்குத் தன்பக்கம் ருசி உண்டாக்குதலும் ருசி பிறந்த பிறகு தன்னைத் துதிப்பவர்களுடைய கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இனிதாம்படிப்போக்கியத்திற்கு இடமாயிருந்தலும், தன்னை உபாயமாகப் பற்றும்

அளவில் எல்லா உலகினரும் உபாயமாகப் பற்றுவதற்குத் தகுதியாயிருத்தலும், பரமபதத்தில் போய் அநுபவிக்க வேண்டாமல்,

அண்டர் கோன்'அணி
அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள், மற்
றொன்றினைக் காணாவே (அமனாதி-10)

என்ற திருப்பாணாழ்வார் அநுப வித்தவாறு அநுபவிக்கத் தக்கதாக இருத்தலும் இந்த அரச்சாவதாரத்தில் முற்றுப் பெற்றிருக்கும். எல்லா ஆழ்வார்களும் இந்த அர்ச்சா வதாரத்தில்தான் அதிகமாக ஈடுபட்டுப் பேசுவர். திருமங்கையாழ்வார் 85 அர்ச்சாவதார எம்பெருமான் களைப் பாடிப் பரவசப் பட்டவர்.

**பிள்ளை உலக ஆசிரியர் :** இறைவனின் இந்த ஐந்து நிலைகளையும் உவமைகள்மூலம் அழாக விளக்குவர் பிள்ளை உலக ஆசிரியர்.

"பூகத ஜலம் போலே அந்தர் யாமித்துவம்; ஆவரண ஜலம் போலே பரத்துவம்; பாற்கடல்போலே வியூகம்; பெருக்காறு போலே விபவம்;அதில் தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்"[16]

[பூகதம்-பூமிக்குள் இருக்கின்ற; ஆவரணம்'-மூடிக்கொண்டிருப்பது]

இந்த வாக்கியத்தில் பரத்துவம் முதலான எம்பெருமான் நிலைகளின் அருமையையும், அர்ச்சாவதாரத்தின் எளிமை யையும் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குவர் இந்த ஆசாரியப் பெருமகனார். இதனைத் தெளிவாக்குவது இன்றியமையாததாகின்றது.

16. ஸ்ரீவச, பூஷ. 42

தண்ணீர் வேட்கை கொண்டவனுக்கு வேறு இடங்கட்குச் செல்ல வேண்டாதபடி தண்ணீர் தான் நிற்கும் இடத்தில் பூமிக்கடியில் இருந்தாலும் கொட்டும் குந்தாலியும் கொண்டு கல்லினால் அல்லது நீர் கிடைக்காதிருப்பது போல, 'எம்பெருமானைக் கண்டு பற்ற வேண்டும்' என்ற அவா இருந்தும் 'கட்கிலீ' (திருவாய் 7.2:3) என்று நம்மாழ்வார் குறிப்பிட்டவாறு கண்களால் காணமுடியாதபடி அட்டாங்க யோக முயற்சியால் மட்டிலும் காணக் கிட்டுபவன் அந்தர்யாமித்துவ நிலையிலுள்ள இறைவன். "அப்பால் முதலாய் நின்ற அளப்பரிய ஆரமுது" (திருநெடுந். 14) என்று பரகாலர் கூறியவாறு இந்தலீலா விபூதிக்கு அப்பாற்பட்டிருப்பவன் பரத்துவ நிலை எம்பெருமான். அப்படி மிக்க நெடுந்தூரம் அன்றி இந்த உலகின் எல்லைக்குள் இருப்பினும் "பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்" (பெரிய திருவந் 34) என்று சடகோபர் கூறுகின்றபடி கேட்டிருக்கும் என்பதன்றிச் சென்று காண அரிதாம்படி இருப்பவன் வியூகநிலை எம்பெருமான்.

மிக அண்மையிலிருந்தும் வெள்ளம் வருங்காலத்தில் இருந்தவர்கட்கு மட்டிலும் பருகும்படியாய் வேறு காலங்களில் இருப்பவர்கட்குப் பருகுவதற்கு அரிதாய் இருந்தும் பெருக்காறு போலே, "மண்மீது உழல்வாய்" (திருவாய் 6.9:5) என்று நம்மாழ்வார் கூறுவதுபோல் பூமியிலே அவதரித்துச் சஞ்சரித்தும் அக்காலத்தில் வசித்தவர்கட்கு மட்டிலும் அடையத் தக்கவர்களாய்ப் பிற்காலத்தில் உள்ள இவனுக்குக் கிட்டாத நிலையில் இருப்பவர்கள் விபவநிலை எம்பெருமான்கள். மேற்கூறிய எம்பெருமான்கள் போலன்றி, காண்பதற்குத் தேசத்தாலும் காலத்தாலும் கரணத்தாலும் கிட்டுவதற்குச் சேயதாயன்றி, கோயில்களிலும் வீடுகளிலும் என்றும் ஒக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி "பின்னானார்

வணங்கும் சோதியாக'' (திருநெடுந். 19) இருப்பவன் அர்ச்சாவதார எம்பெருமான், பல. இடங்களிலும் எழுந் தருளியிருக்கும் நிலைகளை நினைந்து ''மடுக்கள்'' என்று பன்மையாக அருளிச் செய்தார். அவதாரங்களின் குணங் கள் எல்லாம் அர்ச்சையையினிடத்திலே குறைவற்று நிறைந்திருப்பதாலும், அவதாரங்களின் திருவுருவங்களை அர்ச்சை வடிவமாகப் பல இடங்களில் மேற்கொண்டிருப் பதாலும் ''அதிலே தேங்கின மடுக்கள் போலே'' என்று குறிப்பிட்டார் இந்த ஆசாரியப் பெருமகனார்.

**பாகவதர்களின் பெருமை:** அடியவர்களின் பெரு மையை எல்லாச் சமயங்களும் புகழ்ந்து பேசுகின்றன; இஃது ஒரு சமயதத்துவமும் ஆகும். ஆன்மா உய்வதற்கு இன்றியமையாது அறியவேண்டிய பொருள்கள் யாவும் பெரிய மந்திரத்திற்குள்ளே அடங்கியுள்ளன என்று முமுட் சுப்படி பேசுகின்றது[17]. இவற்றுள்ளும் சாரமாய் அறியும் பொருள், 'அடியார்க்கு அடிமை' என்பது தேர்ந்த பொருளாகும் என்பர் திருமங்கை மன்னன்.

மற்றும்ஓர் தெய்வம்
உளதென் திருப்பாரோடு
உற்றிலேன்; உற்றதும்
உன்னடி யார்க்கடிமை
மற்றெல்லாம் பேசிலும்
நின்திரு எட்டெழுத்தும்
கற்றுநான் கண்ண
புரத்துறை அம்மானே (8.10:3)

திருமந்திரம் பல பொருள்களை நுவலும்; அஃதாவது **'அஞ்சர்த்தம்'**[18]. இஃது அர்த்த பஞ்சகம் எனப்படும். ஈசு வரனின் சொரூபம், ஆன்மாவின் சொரூபம், ஆன்மா

17. முமுட்சு-22.
18. ஷை-23.

அடையும் பயன், அடைவதற்கு வழியாகவுள்ள உபாய சொரூபம், அப்பயனை அடைவதற்குப் பகையாக உள்ள வற்றின் சொரூபம் ஆகியவற்றை விளக்கமாகத் தெரிந்து கொள்வதே 'அர்த்த பஞ்சக ஞானம்' எனப்படும். திரு வாய்மொழி ஆயிரமும் இதனையே விளக்குகின்றது. திருப் பாவையும் இதனையே பேசுவதாகப் பெரியோர் பணிப்பர். வேதங்களும் இதிகாசங்களும் புராணங்களும் ஐந்து பொருள்களையே சொல்லுகின்றன.

பகவத் சேஷத்துவத்திற்கு எல்லைநிலம் பாகவத சேஷத்துவம். இதனைத் திருக்கடல் மல்லைத் திருப்பதிகம் (3.6), திருச்சேறைத் திருப்பதிகம் (2.6) ஆகிய இரண்டி லும் விளக்குவர் ஆழ்வார். இந்த இரண்டிலும் அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை இடைவிடாது சிந்திக்கும் பாகவதர்கள்தாம் ஆழ்வார்களால் நினைக்கப் பட்டவர்கள். உலகில் தமக்குத் தொண்டு புரிவதைக் காட்டிலும் தம் குழந்தைகளுக்கு அன்புடன் தொழில் புரி யுங்கால் பெற்றோர் மிக்க மகிழ்ச்சி அடைவதைக் கண் கூடாகக் காண்கின்றோம். அங்ஙனமே எம்பெருமானும் தம் அடியார்க்குத் தொண்டு புரியும் போதே முழுமையான முக மலர்ச்சியை அடைகின்றான். பகவத் பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும். எம்பெரு மானுடைய பாதுகைகளிலே ஆதரம் வைத்து அவற்றைக் கண்களில் ஒற்றிக் கொள்வதையும், தலைமேல் அணிந்து கொள்வதையும், அவற்றை அலம்பிய தீர்த்தம் பருகுவதை யும் நாம் செய்கின்றோம். இதனால் நமக்கு எம்பெருமா னிடத்திலுள்ள பக்தி வெளியாகின்றதல்லவா? இங்ஙனமே இவ்விரண்டு திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் எம் பெருமான்களைப் பணிகின்ற பாகவதர்களே தாம் வழி படுவதற்கு உரியவர்கள் என்கின்றார் ஆழ்வார்.

தண்ணார்ந்த கடல்மல்லைத்
தலசயனத் துறைவாரை
எண்ணாதே இருப்பாரை
இறைப் பொழுதும் எண் ணோமே (2.6:1)

கானத்தின் கடல்மல்லைத்
தலசயனத் துறைநின்ற
ஞானத்தின் ஒளியுருவை
நினைவார்என் நாயகரே (2.6:3)

......... கடல்மல்லைத்
தலசயனத் துறைவாரைக்
கொண்டாடும் நெஞ்சுடையார்
அவர்எங்கள் குலதெய்வமே (2.6:8)

என்றெல்லாம் அடியவர் வணக்கம் காட்டப் பெறுகின்றது. திருநாமப் பாசுரம்:

வடிவொள்நெடு வேல்வலவன்
கலிகன்றி ஒலிவல்லார்
முடிகொள்நெடு மன்னவர்தம்
முதல்வர்முத லாவாரே (2.6:10)

என்பது. இதில் ஓர் இதிகாசம் பாகவத சேஷத்துமே பரம புருஷார்த்தம் என்று பரம போக்கியமாக அருளிச் செய்த ஆழ்வார் பலன் சொல்லுமிடத்து அகங்காரத்திற்கு மூலகாரணமாகவும் பாகவத சேஷத்துவத்திற்கு இடையூறாகவும் உள்ள இகபோக ஐசுவரியத்தைப் பலனாகச் சொல்லுவதேன்?'' என்று **நஞ்சீயர் பட்டரைக் கேட்டார்.** அதற்கு அவர் மிக்க சுவையுடன் (ரஸோக்தியாக) மறுமொழி ஒன்று பகர்ந்தாராம். அதாவது, ''திருமங்கையாழ்வார் திருவவதரித்த பின்பு கீழான (தியாஜ்யமான) ஐசுவரியமும் பரம புருஷார்த்தமாய் விட்டது காணும்; பணமுள்ளவிடங்களில் சென்று கொள்ளையடித்துப் பக

வத் பாகவத கைங்கரியங்கள் பண்ணுகின்றவராகையாலே கீழான (ஹேயமான) ஐசுவரியமும் இவ்வாழ்வார் திருவுள்ளத்தால் உத்தேச்யமாய் விட்டதிறே'' என்றாராம். யார் யார் எந்தெந்தப் பலனை விரும்பினாலும் அந்தந்தப் பலன் இவ்வருளிச் செயல் மூலமாகக் கிடைக்கும் என்பது உண்மைப் பொருளாகும்.

இங்ஙனமே திருச்சேறை எம்பெருமான் மீதுள்ள பாசுரங்களிலும் அப்பெருமானைப் பணிகின்றவர்கள் பாகவதோத்தமர்களே என்று தமது பாகவத பக்தியை வெளியிடுகின்றார் ஆழ்வார்.

தண்சேறை எம்பெருமான் தாள்தொழுவார்
காண்மின்என் தலைமே லாரே (7.4:1)

தாதோடு வண்டலம்தம் தண்சேறை
எம்பெருமான் தாளை ஏத்தி
போதோடு புனல்தூவும் புண்ணியரே
விண்ணவரின் பொலிகின் றாரே (7. 4: 3)

சந்தப்பூ மலர்ச்சோலைத் தண்சேறை
எம்பெருமான் தாளை நாளும்
சிந்திப்பார்க் கென்னுள்ளம் தேனூறி
எப்பொழுதும் சிந்திக்குமே (7. 4: 5)

என்ற பாசுரப் பகுதிகளில் ஆழ்வாரின் பாகவத பக்தியைக் கண்டு தெளியலாம்.

இத் திருமொழியின் வியாக்கியானத் தொடக்க உரையில் "பிள்ளையழகிய மணவாளரையர் கரையோரமே போகா நிற்க, 'உள்ளே மாமதலைப் பிரானைத் திருவடி தொழுது போனாலோ?' என்று ஒருவர் சொல்ல, அதற்கு அவர்'ஆர் தான் திருமங்கையாழ்வாருடைய பசைந்தவளையத்திலே(வளையம் - திருமுடியில் அணியும் மாலை) கால் வைக்கவல்லார்' என்றருளிச் செய்தார்'' என்று உள்ளது.

இந்த சூக்தி ஈண்டு அநுசந்திக்கத் தக்கது. இதன் கருத்து: பிள்ளையழகிய மணவாளரையர் என்பவர் ஏதோ ஒரு காரியமாக திருச்சேறை வழியாய் ஓரிடத்திற்கு எழுந்தருள நேர்ந்தது. அவர் திருச்சேறைப் பகுதியினுட் புகாமல் வயல் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கு அவரைக் கண்டாரொருவர் 'வயல் வழியே போவானேன்? திருப்பதியினுள்ளே புகுந்து சாரநாதப் பெருமாளைச் சேவித்துப் போகலாகாதோ?' என்று கேட்க, அதற்கு அரையர் சமத்காரமாக ஒரு விடையளித்தார். அது யாருதனில்: ''தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என்தலை மேலாரே' என்றார்; அப்பாசுரத்தின்படி, திருச்சேறை எம்பெருமானைச் சேவிப்பவர்கள் ஆழ்வாருடைய திருமுடியிலேற வேண்டியதாகுமே; அது நமக்குப் பெருத்த அபசாரமல்லவா? அதற்கு அஞ்சியே உள்புகாமல் கரையோரமே போய் விடுகிறேன்'' என்றாராம். இஃது ஒரு சுவையான பேச்சு, திருச்சேறை எம்பெருமானைச் சேவிப்பவர்கள்பக்கலில் ஆழ்வார் கொண்டுள்ள பிரதிபத்தியை விளங்கக் காட்டினபடி இது.

பாகவதர்களின் சம்பந்தப் பெருமையை,

> 'வேதகப் பொன்போலே இவர்க
> ளோட்டை சம்பந்தம்'[19]

என்று பேசுவர் பிள்ளை உலக ஆசிரியர். 'வேதகப் பொன்' ஆவது பலவிதமான சித்த மருந்துகளையிட்டுப் பலகால் உருக்கிக் குளிகையாகப் பண்ணி, இரசவாதிகள் தங்கள் கைகளில் வைத்திருக்கும் பரிசவேதி[20]யாகிய பொன். அதுபோலவே, 'இவர்களோட்டை சம்பந்தம்'

---

19. ஸ்ரீவச. பூஷ். 224 (புருடோத்தம நாயுடு பதிப்பு)
20. **பரிசவேதி** — தன்னுடைய சம்பந்தத்தால் பேதிப்பது; வேறு படுத்துவது. பரிசம் - சம்பந்.

என்றது, அந்தப் பொன் தீண்டின அளவிலே இரும்பைப் பொன்னாக்குவது போலே ஆயிற்று பிறவியிலே உண்டான நைச்யம் (தாழ்வு) முதலானவற்றையுடைய சிறந்தவரான இந்தப் பாகவதர்களுடைய சம்பந்தம். தாழ்ந்த பிறவியால் (பார்ப்பனப் பிறவியால்) வந்த குற்றத்தைப் போக்கி இவனையும் (பார்ப்பனனையும்) பாகவதனாக்கி விடும் என்றபடி.

நம்மாழ்வாரும் தம்மைத் 'திருமாலுக்குரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்'' (திருவாய். 6.9 : 11) என்றும், 'நேர்பட்ட நிறை மூவுலகுக்கும் நாயகன் — தன் அடிமை நேர்பட்ட தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டர் சடகோபன்' (ஷெ 8.9: 11) என்றும் அறிமுகப்படுத்திக் கொள்வதனாலும் 'பாகவதத் தொண்டே திருமந்திரத்தின் சாரமான பொருளாகும்' என்பது தெளிவாக அறியக் கிடக்கின்றது.

## 2. இதம் (Means)

துன்பம் கலவாத இன்பம் எதுவோ அதுவே மோட்சம் அல்லது வீடுபேறு என்று வழங்கப் பெறும். அந்த நிலையை அவாவி நிற்பவர்கள் முமுட்சுகள். இவர்கள் முத்தி நிலையை அடையும் நெறிகள் இரு வகைப்படும். வைணவ சமயம் **சித்தோபாயம், சாத்தியோபாயம்** என்ற இரு நெறிகளைக் கூறும். சித்தோபாயம் என்பது நம்மால் செய்யப்பெற வேண்டியதல்லாது முன்பேயுள்ள நெறி; இறைவன். திருமங்கையாழ்வார் 'நன்ளேன் உன்னையல்லால் நறையூர் நின்ற நம்பியோ!' (7.2: 1) என்ற பாசுர அடியில் சித்தோபாயத்தை வெளியிடுகின்றார். இன்னொரு பாசுரத்திலும் இந்த ஆழ்வார்,

---

தம். வேதி — பேதிப்பது. இரும்பின் கரிய நிறத்தைப் பொன்னிறமாக்குவது.

வேங்கடத்து அரியை பரிகீறியை
வெண்ணெய்உண்டு உரலிடை ஆப்புண்ட
தீங்கரும்பினை, தேனைநன் பாலினை
அன்றி என்மனம் சிந்தைசெய் யாதே (7.3:5)

என்று எம்பெருமானையே சித்தோபாயமாகக் கொண்டிருப்பதைக் காணலாம். நாயக நாயகி பாவனையில் வரும் பாசுரங்களில் **மகளிர் பாசுரங்கள்** இந்த நெறியைக் குறிப்பிடுகின்றன.

சாத்தியோபாயம் என்பது, நம்மால் மேற்கொள்ளப் பெறும் உபாயமாகும். இது **பக்தி** என்றும், **பிரபத்தி** என்றும் சாத்திரங்களில் இருவகையாகப் பேசப்பெறும். சேதநன் இவற்றுள் ஒன்றை அநுட்டித்த பின்பே எம்பெருமான் அவனை ஏற்றுக்கொண்டு பலன் தருகின்றான். வினையிலே கிடந்துழலும் சேதநனைப் பகவான் தேர்ந்தெடுப்பதற்குக் காரணம், அவன் மேற்கொள்ளும் நெறியேயாகும். இல்லாவிடில் எல்லாச் சீவர்களுக்கு முத்தி சித்திக்க நேரிடும். பக்தி, பிரபத்தி ஆகிய நெறிகளில் ஒன்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதே சேதநனின் முத்தி நெறியாகும்.

**பக்திநெறி :** பக்தி நெறியை மேற்கொள்பவர் பக்தர் எனப்படுவர். பத்தர் எனினும் பித்தர் எனினும் ஒன்றேயாகும். உலகில் நோயால் கொள்ளும் பித்தும், மருளால் கொள்ளும் பித்தும் துன்பம் தருவன. அருளால் கொள்ளும் பித்து அளவிலா இன்பம் தருவது. "பத்தராய் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்" (7. 39: 10) என்பர் சைவசமய குரவருள் ஒருவராகிய சுந்தர மூர்த்தி அடிகள். குலசேகரப் பெருமாளும் "பேதை மணவாளன்தன் பித்தனே" (பெரு. திரு. 3: 6), "எம்பிரானுக்கு எழுமையும் பித்தனே" (3: 6), "பித்தனாய்

ஒழிந்தேன்'' (3: 7) ''பேயனாய் ஒழிந்தேன் எம்பிரா னுக்கே'' (3: 8) என்ற அவர்தம் வாக்குகளால் தம்மைப் 'பித்தன்' என்றும் 'பேயன்' என்றும் கூறிக்கொள்வ தனால் இதனை மேலும் தெளிவு பெறலாம். இந்தப் பக்தி நிலையை மெய்விளக்க அறிஞர்கள் **பக்தியோகம்** என்று வழங்கி அதை எட்டு அங்கங்களாக முறைப் படுத்தி வகுத்துக் காட்டுவர்.

எட்டு அங்கங்களாவன: (1) **இயமம்** என்பது, அகிம்சை சத்தியம், திருடாமை, காமத்தை அடக்குதல், பொருளைச் சேர்க்க முற்படாமை ஆகிய நிலை; (2) **நியமம்** என்பது, தூய்மை, உள்ளத்தைக் கொண்டு மன நிறைவு பெறுதல், விரதம், தவம் முதலியன செய்தல், வேதாந்த பரிசயம் செய்தல், எல்லாச் செயல்களையும் இறைவனிடம் சமர்ப்பித்தல்; (3) **ஆசனம்** என்பது, பதுமாசனம் முதலிய ஆசனங்கள்; (4) **பிராணாயாமம்** என்பது, மூச்சைக் கட்டுப்படுத்தி ஆளுதல்; (5) **பிரத்தியா காரம்** என்பது, புலன்களை உலகப் பொருள்களினின்றும் திருப்புதல்; (6) **தாரணை** என்பது, பகவானுடைய திருமேனியை மனத்திற் கொள்ளுதல்; (7) **தியானம்** என்பது, இடைவிடாது இறைவனை நினைத்தல்; (8) **சமாதி** என்பது, இறைவனை நேரிற்கண்டாற் போன்ற நிலையினை அடைதல்.[21] இந்த எட்டு அங்கங்களை யுடைய பக்திநெறியொழுகுவார்க்குப் பிராட்டிக்கு அமுத மாக இருக்கும் எம்பெருமான் குறிப்பொருளாக வீடு பேற்றினை அளிப்பான்.

இந்த நெறி மிகக் கடினமானது. இக்காலத்தில் பக்தி நெறியை அநுட்டிப்பதற்கு அதிகாரிகள் (Qualified

21. தே. பி. 254

persons) இலர் என்று கூடக் கூறலாம். நாதமுனிகள் போன்ற யோகமுறையைத் தெளிந்தவர்கள்தாம் இதற்கு அதிகாரிகளாவர்.

**பிரபத்தி நெறி:** இது சரணாகதி நெறியாகும். எல்லோரும் எளிதாக அநுபவிக்கக் கூடியது. சுக்கிரீவன், வீடணன், காகம் (காகாசுரன்) போன்றோர் இந்நெறியைக் கடைப் பிடித்தே உய்ந்தவர்கள். இந்தப் பிரபத்தி நெறியை உபதேசித்தவர் நம்மாழ்வார். இவரைப் பிரபந்த ஜனகூடஸ்தர் என்று வழங்குவதும் உண்டு. பிரபத்தி நெறியைக் கடைப் பிடிக்கும் வைணவர்கள் யாவருக்கும் தலைவர் என்பது இதன் பொருள். இவர் பிரபத்தி செய்தது அர்ச்சாவதாரத்திலாகும். திருமங்கையாழ்வார் கடைப்பிடித்த நெறியும் இதுவே; எல்லா ஆழ்வார்களும் இந்நெறியை ஒரே குரலாகப் போற்றுகின்றனர். நம்மாழ்வார் திருவேங்கடவனைச் சரண் புகுந்த 'அகலகில்லேன்' (திருவாய் 6.10:10) என்று தொடங்கும் பாசுரமே சரணாகதி தத்துவத்தை விளக்கும் திருமறை போன்ற பாசுரமாகும். முதலில் "திருவேங்கடம் அடை நெஞ்சே' என்று ஒரு முறைக்கு ஒன்பது முறை கூறிய திருமங்கையாழ்வார் அந்த வேங்கடத் தெம்மானை நோக்கிப் பேசுகின்றார்.

> வேய்ஏய் பூம்பொழில்சூழ்
> விரைஆர்திரு வேங்கடவா!
> நாயேன் வந்தடைந்தேன்
> நல்கிஆள்என்னைக் கொண்டருளே (1.9:1)

இப்படி ஒன்பது முறை பன்னிப் பன்னி உரைக்கின்றார். இது சரணாகதி தத்துவத்தை — பிரபத்தி நெறியை — விளக்க வந்த பாசுரமாகும். திருவரங்கம்பற்றிய பதிகம் ஒன்றில் (5.8)

ஆழி வண்ணா! நின்
அடி இணை அடைந்தேன் (1)

என்றவராறு ஒருமுறைக்கு ஒன்பது முறை பன்னி உரைத்து அரங்கநகர் அப்பனைச் சரணம் அடைகின்றார்.

திருவிண்ணகர் எம்பெருமானை மங்களாசாசனம் செயயும் மூன்று திருமொழிகளும் (6.1;6.2;6.3) சரணா கதி தத்துவத்தை விளக்குவனவாகும்.

துறந்தேன் ஆர்வச்செற்றச்
சுற்றம்; துறந்தமையால்
சிறந்தேன் நின்னடிக்கே
அடிமை; திருமாலே! (6.3:2)

என்ற திருப்பாசுரத்தில் இந்நெறி சுட்டப்பெறுவதைக் காணலாம். திருநறையூர் திருப்பதிகம் ஒன்றில் நெஞ்சை ஆற்றுப் படுத்தும் போக்கில்,

மூவுலகும் பலிதிரிவோன்
இடர்கெடுத்த திருவாளன்
இணைஅடியே அடைநெஞ்சே (6.9:1)

என்று ஒருமுறைக்கு ஒன்பது முறை இந்த நெறியை வற்புறுத்துகின்றார்.

உள்ளத்தை உருக்கும் பாசுரங்கள் நைமிசாரணியத்து எம்பெருமான்மீதுள்ளவை. பாசுரங்கள் தோறும் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக "உன் திருவடி அடைந்தேன்" என்று சொல்லிச் சரண் அடைந்ததைக் காண்கின்றோம். பிராட்டியை முன்னிட்டுச் சரணம் அடைவது ஆன்மாவின் சொரூபமாகையால்,

தேன்உடைக் கமலத் திருவினுக் கரசே
....................................
நானுடைத் தவத்தால் திருவடி
அடைந்தேன் (1.6:9)

என்று பிராட்டியாரை முன்னிட்டுச் சரணம் அடை வதைப் பாசுரத்தில் காணலாம். சரணம் அடையும் போதே கூடாவொழுக்கத்தை நினைவுறுத்தும் பாங்கில்

வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரம்என்று இவற்றை
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி
எற்றிவைத் தெரிஎழு கின்ற
செம்பினால் இயன்ற பாவையைப் பாவீ
தழுவுஎன மொழிவதற் கஞ்சி
நம்பினேன் வந்துஉன் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய் (1.6:4)

என்ற பாசுரம் அமைந்து விடுகின்றது.

பிரபத்தி செய்வோருக்கு முக்கியமாக வேண்டப் பெறு பவை ஆகிஞ்சன்னியமும் நன்னியகத்துவமும். ஆகிஞ்சன் னியம் என்பது, கன்ம ஞான பக்திகளாகின்ற மற்ற உபா யங்களில் தொடர்பற்றிருத்தல், அநன்னியகதித்துவம் என் பது, ஆன்மா பாதுகாப்பிற்கு வேறொரு காக்கும் பொருள் அற்றிருத்தல். 'சமதமங்களாகிற ஆன்ம குணங் களையும் பெற்றிலேன்; கன்மஞான பக்திகளாகிற அறஞ் செய்துமிலேன்' என்பதைத் திருமங்கையாழ்வார்,

நலந்தான் ஒன்றுமிலேன்
நல்லதோரறஞ் செய்துமிலேன் (1 9:4)

என்று கூறுவது ஆகிஞ்சன்னியம்.

புகல்ஒன்று இல்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே
(திருவாய் 6.10:10)

என்பதில் தனக்கு எம்பெருமானைத் தவிர வேறு உபாய மில்லை என்று கூறிக்கொண்டு நம்மாழ்வார் சரண் புகுவது அநன்னிய கதித்துவம்.

**புருஷகாரம்:** தகவுரை கூறுதல். இது பிராட்டிக் குரியது. வைணவ தத்துவத்தில் இவள் புருஷகார பூதை யாகச் செயற்படுகின்றாள். பிரபத்தி நெறியில் பெரிய பிராட்டியாரோடு கூடிய எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்ற வேண்டும் என்பது விதி.

வைணவமந்திரமாகிய துவயம் இதனைச் செப்பு கின்றது (ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே — என்ற முதல் வாக்கியம்). மக்களுக்கு இறைவனும் இறைவியுமான இருவரோடு சம்பந்தம் இருக்கவும், இறைவனை அடையும் போது பிராட்டி புருஷகாரமாக அமைவது ஏன்? இதற்கு விடை: சேதநன் தான் எம்பெரு மானுக்குச் சேஷபூதன் (அடிமை) ஆகவும், எம்பெருமான் தனக்குச் சேஷி (தலைவன்) ஆகவும் இருக்கும் தொடர்பை நன்கு அறிந்தவன் என்பது உண்மையே. ஆயினும், "இவள் தாயாம் தன்மையால் வந்த வாத்சல்யத்தை மிகுதியாக உடையவள்." தந்தையாகிய எம்பெருமானைப்போல் வன்மையும் மென்மையும் கலந்திராமல் மென்மையே வடிவு கொண்டவள். பிறர் கண்குழிவு காட்டாத தன் மையாள்; தீய மனமுடையவர்களையும் மருவித் தொழும் மனமுடையவர்களாகுகைக்குத் தக்க செயல் புரிபவள். குற்றமுடையவர்கட்குக் கூசாமல் வந்து காலிலே விழலாம்படி இருப்பவள். ஆனமையால் வந்த வன்மை யோடே தந்தையாம் தன்மையால் வந்த நகலம் செய்யும் தன்மையுடையவரையும், குற்றங்களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டுக் கொடிய தண்டனை

களை விதிக்கும் செயற்கையாலே, குற்றமுடையவர்கள் முன் செல்லக் குடல் கரிக்கும்படி இருக்கும் சர்வேசுவரனைத் தக்க வழிகளாலே குற்றங்கள் அனைத்தையும் மறைப்பித்துச் சேர்ப்பிக்குந் தன்மையள். இத்தகையவள் பாவமே செய்து பாவிகளான மக்கள் சர்வேசுவரனைப் பற்றுங்கால் புருஷகாரமாக வேண்டும்''[22] என்பது மணவாள மாமுனிகளின் கருத்தாகும்.

இதனைப் பிள்ளை உலக ஆசிரியர்,

நீரிலே நெருப்புக் கிளருமாப் போலே, குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம் பிறந்தால் பொறுப்பிப்பது இவளுக்காக''[23]

என்று விளக்குவர். பகவான் மிக்க அருள் நிறைந்த திருவுள்ளத்தானாக இருப்பினும், சேதநன் செய்த அளவு கடந்த குற்றங்கள், குளிர்ந்த நீரில் நெருப்புப் பிறத்தல் போன்று, அவனுக்குச் சீற்றத்தை உண்டாக்குகின்றன. அச் சீற்றத்தை மாற்றிக்கொண்டு இவனுடைய குற்றங்களைப் பொறுப்பது பிராட்டியாருக்காகவேயாகும்.

பிராட்டியார் உலக உயிர்கட்குத் தாயாக இருப்பதால், இவர்களுடைய துக்கத்தைப் பொறாதவராயும் இருக்கின்றாள். பகவானுக்குப் பத்தினியாக இருப்பதால் அம்முறையில் அவனுக்கு இனிய பொருளாக இருக்கின்றார். இக் காரணத்தால் இவரே அருள் நிறைந்த புருஷகாரமாக அமைந்து விடுகின்றார். இதனால் இருவரையும் உபதேசித்தால் திருத்துகின்றார். இங்ஙனம் திருத்திச் சேர்த்து வைத்ததற்கு இவரைவிடத் தகுந்தவர் வேறொருவர் இருத்தல் முடியாது[24]. ஸ்ரீவசன பூஷணமும் இதனை,

---

22. ஸ்ரீவச. பூஷ. 7இன் உரை (புருடோத்தம நாயுடு பதிப்பு)
23. முமுட்சு-27
24. முமுட்சு-128

இருவரையும் திருத்துவது
உபதேசத்தாலே[25]

என்று பகர்கின்றது. இதனை ஈண்டு விளக்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

எம்பெருமாட்டி இறைவனை நோக்கி இவ்வாறு பேசுவாள்: "இவனுடைய குற்றங்களைக் கணக்கிட்டு நீர் இப்படித் தள்ளிக் கதவு அடைத்தால், இவனுக்கு வேறு ஒரு புகல் உண்டோ? உமக்கும் இவனுக்கும் உண்டான உறவு முறையைப் பார்த்தால் 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' (திருப். 28) என்கின்றபடி குடநீர் வழிந்தாலும் போகாதது ஒன்றன்றோ? உடைமையாக இருக்கின்ற இவனை அடைதல் சுவாமியான[26] உம்முடைய பேறாக அன்றோ இருப்பது? எதிர் சூழல் புக்குத்[27] திரிகின்ற உமக்கு நான் சொல்ல வேண்டுமா? காப்பாற்ற வேண்டும் என்ற விருப்பத்தோடு வந்த இவனைக் காப்பாற்றாதபோது 'எல்லாப் பொருள்களையும் காப்பவர்' என்ற உம்முடைய தன்மை குலைந்து போகாதோ? அநாதி காலமாக நம்முடைய ஆணையை மீறித் தன் இச்சைப்படியொழுகிப் போந்த இவனைக் குற்றங்களுக்கேற்பத் தண்டிக்காமல் நாம் ஏற்றுக் கொள்ளின் நாம் ஏற்படுத்திய சாத்திரங்களின் மரியாதை குலையாதோ என்றல்லவா நும் திருவுள்ளத்தில் ஓடுகின்றது? அங்ஙனமாயின் நும்மை நாடி வந்த இவனைக் காக்காமல் இவனுடைய குற்றங்களை மட்டிலும் நோக்கித் தண்டித்தால் உம்முடைய அருட்குணம் நிலைப்பது எவ்வாறு?

---

25 ஸ்ரீவச. பூஷ-12

26. சுவாமி—சொம்மையுடையவன் சுவாமி; சொம்—சொத்துடைமை.

27. திருவாய் 2.7:6.

இவனைக் காப்பாற்றிய பொழுதன்றோ உம்முடைய அருட்குணம் ஒளி பெறும்? 'இவனைத் தண்டிக்கவில்லையேல் சாத்திரம் நிலையாது; இவனைக் காக்கவில்லையேல் அருள் முதலிய குணங்கள் ஒளி பெறா' என்று அஞ்ச வேண்டா; உம்மைச் சிறிதும் நோக்கிப் பாராது தன்னிச்சையில் செல்பவனிடம் சாத்திரத்தைப் பயன்படுத்துவீர்; 'உம்மை அன்புடன் நாடி வந்த இவனைப் பாவங்களினின்றும் நீக்கிக் காப்பாற்றுவீர். இப்படிச் செய்தால் சாத்திரமும் பழுது படாது; உம்முடைய அருட்குணமும் உயிர் பெற்றுத் துலங்கும்.' இவ்வாறு எம்பெருமானுக்கு ஏற்ற பற்பல இனிய சொற்களைப் பகர்ந்து அவன் சினத்தை மாற்றி அவனுக்குச் சேதநனிடம் அருள் பிறக்குமாறு செய்வர். இவ்வினிய சொற்களாலும் ஈசுவரனது நெஞ்சம் இளகவில்லையேல் பிராட்டியார் தம் அழகைக் காட்டி அவனைத் தம் வசப்படுத்திச் சேதநனை அங்கீகரிக்குமாறு செய்வர்.

எம்பெருமாட்டி சேதநனை நோக்கி இவ்வாறு பேசுவர்; "உன் குற்றங்களின் மிகுதியைப் பார்த்தால், உனக்கு ஓரிடத்திலும் காலூன்ற இடம் இல்லை. ஈசுவரன் யாதொன்றாலும் தடைசெய்யப்படாத சுதந்திரத்தையுடையவனாதலால், குற்றங்களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டு அறுத்து அறுத்து நுகர்விப்பான். இதற்கு நீ தப்ப வேண்டுமாகில் அவன் திருவடிகளில் தலை சாய்க்கையைத் தவிர வேறு வழி இல்லை. குற்றங்கள் நிறைந்த உன்னை அவன் ஏற்றுக்கொள்வானோ? என்ற ஐயம் வேண்டா; ருசி பிறந்த அளவில் உன்னுடைய குற்றங்கள் அனைத்தையும் பொறுப்பான். இனியனவாகவும் கொள்தற்கு ஈடானவுமான குணங்களால் நிறைந்தவன் என்ற புகழ் பெற்றவன். ஆகவே, நீ உய்ய வேண்டுமானால்

அவனை அடைந்திடுக'' என்று நல்லுபதேசம் செய்வார். இதனைப் பிள்ளை உலக ஆசிரியர்,

> ''உபதேசத்தாலே மீளாதபோது சேத
> நனை அருளாலே திருத்தும்; ஈசு
> வரனை அழகாலே திருத்தும்''[28]

என்று அழகாகக் காட்டுவர். பெரிய மிடுக்கனும் முரடனுமான அநுமனையே தமது உபதேசத்தாலே பொறுக்குமாறு செய்தவர்.[29] தம் அழகில் சிக்குண்டு தம்மிடம் அளவு கடந்த அன்புடையவனும், தம் சொல்லின்படி நடப்பவனுமான பெருமானைப் பொறுக்குமாறு செய்வார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பிராட்டியாரின் புருஷகாரத்தினால் ஈசுவரனுடைய சுதந்திரத் தன்மை மாய்கின்றது. புருஷகாரத்திற்கு முன்னர்த் தலையெடுக்கப்பெறாமல் மறைந்திருத்தனவும் புருஷகாரத்திற்குப் பின்னர் ஓங்கி நிற்பனவுமான குணங்கள் வாத்சல்யம், சுவாமித்துவம், செளலப்பியம், செளசீல்யம், ஞானம், சக்தி என்பவை என்று தெரிவிப்பர் பிள்ளை உலக ஆசிரியர்.[30] சேதநன் எம்பெருமானைப்பற்றும் போது உதவி புரிவது செளலப்பியம் என்னும் அருள் குணம். 'செளலப்பியத்திற்கு எல்லை நிலம் அர்ச்சா

---

28. ஸ்ரீ நிவச. பூஷ 14

29. அசோகவனத்தில் அநுமன் பிராட்டியை இம்சித்த அரக்கிமாரைத் தம்மைத் துன்புறுத்தியது அரசனாணைப் படியேயன்றித் தாமே பிழை செய்திலர் என்று கூறி மாருதியைச் சமாதானப் படுத்தினர் என்பது இராமாயண நிகழ்ச்சி.

30. முமுட்சு-137 இவற்றின் விளக்கத்தை உரையில் காண்க.

வதாரம்'[31] என்று கூறும் முமுட்சுப்படி. காரணம், இஃது எப்போதும் நம்மருகில் நிலைபெற்றுக் கண்ணால் கண்டு களிப்பதற்கு இடந்தருகின்றது.

கருணையே வடிவு கொண்டதைப் போன்ற ஈசுவரத் தன்மை கீழடங்கி, அவனுடைய அருட்டன்மை மேல் கிளம்பச் செய்பவருமான பிராட்டியார் உடன் இருந்த தனால் காகாசுரன பிழைத்தான். இவர் பிரிந்ததனால் இராவணன் இராமபிரானின் அம்பிற்கு இலக்காகி உயிர் இழந்தான். இன்னும் ''உந்து மதகளிற்றன்'' (திருப். 18) என்ற திருப்பாவையின் (ஆயச் சிறுமிகள் தங்கட்குப் புருஷகாரமாக இருப்பவளான நப்பின்னையை எழுப்பும் பாசுரம்) உரையிலுள்ள ''பிராட்டியை விரும்பாமல் பெருமானைப் பற்றின சூர்ப்பணகை கேட்டினை அடைந்தாள்; பெருமாளையொழியப் பிராட்டியைப் பற்றின இராவணனும் கேட்டினை அடைந்தான்; இருவரையும் பற்றின வீடணன் உய்ர்ந்தான்'' என்ற குறிப்பு ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. இன்னும் இராமனை ஏசிப் பேசினபோது,

ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை[32]

என்று குறிப்பிடுகின்றான். ''மனைவியைப் பிரிந்ததனால் உன் மதி கெட்டுப் போய் இங்ஙனம் செய்தாயோ?''

31. முமுட்சு-139. இந்தப் பெருங்குணம் 'இருட்டறையில் விளக்குப்போலே பிரகாசிப்பது இங்கே. (அர்ச்சையில்) என்று பேசும் ஸ்ரீவச. பூஷ 40'
32. கம்ப. கிட்கிந், வாலிவதை-38

என்ற தொனி இதில் காணப்படினும் ''புருஷகார பூதை யான பிராட்டி அருகில் இல்லாததனால்தான் எனக்கு இக்கேடு நேர்ந்ததோ?'' என்ற ஆழ்பொருளும் இதில் அடங்கிக் கிடப்பதைக் காணமுடிகின்றது. இங்ஙனமாகப் பிரபத்திக்குப் 'பிராட்டியின் புருஷகாரம்' இன்றியமையாத தாகின்றது. ஆகவே, ஒருவர் பிரபத்தி செய்யும்போது எம்பெருமான், எம்பெருமாட்டி ஆகிய இருவர் சேர்த்தி யில்தான் இரக்க வேண்டும் என்ற நியதியைக் காண முடிகின்றது. இதற்கு எம்பெருமானார் (இராமாநுசர்) நம்மனோர் புரிந்த கொடிய குற்றங்களைப் பொறுக்கு மாறு சீரங்கநாச்சியாரும் அழகிய மணவாளப் பெரு மாளும் ஒரே சேர்த்தியில் எழுந்தருளியிருக்கும் காலத்தை நோக்கிக் கொண்டிருந்து **பங்குனி உத்திரத்தில்** பிரபத்திப் பது தக்க சான்றாகும்.

## 3. புருஷார்த்தம்

புருஷன் - ஆன்மா; அர்த்தம் - பொருள்' ஆன்மா அடைய வேண்டிய பொருள். இது வீடு பேறு; மோட்சம், வைணவதத்துவத்தின் நவநீதம் போன்றிருப்பது இது; மோட்சத்திலும் ஆன்மாவின் குறிக்கோள் கைங்கரியம்; அடிமைத் தொழில். அதாவது வைகுந்தத்தில் பரமபத நாதனுக்கு அடிமைத் தொழில் புரிவதே வைணவர்கள் விரும்பும் வீடுபேற்றின் பலனாகும். நம்மாழ்வார் இதனையே விரும்புகின்றார்.

ஒழிவில் காலம் எல்லாம்
உடனாய் மன்னி
வழுஇலா அடிமை
செய்ய வேண்டும் (திருவாய் 3.3:1)

என்பது ஏழுமலையப்பன்மீதுள்ள பாசுரம். இதில் ஆழ்வார் அவனுக்குக் கைங்கரியம் புரிய விரும்புவதைக்

காணலாம். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் இத் திருவாய் மொழியைப் பாடப்புக் கால் 'ஒழிவில் கால மெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்' என்று இங்ஙனே நெடும்போதெல்லாம் பாடி, மேல்போக மாட்டாமல் அவ்வளவிலே தலைக்கட்டிப் போவாராம்'' என்பது ஈட்டில் காணபெறும் செய்தியாகும்.

திருமங்கையாழ்வாரும் திருவேங்கடம்பற்றிய திருப் பதிகம் ஒன்றில் (1.9), நாயேன் வந்தடைந்தேன்; நல்கி, ஆள் என்னைக் கொண்டருளே' (1), அடியேனை ஆட் கொண்டருளே' (2) என்று பாசுரந்தோறும் தன்னை அடிமை கொண்டருளுமாறு வேண்டுகின்றார். மற்றொரு திருப்பதிகத்தில் (2.1) தன்நெஞ்சைநோக்கித்''திருவேங்கட முடையானுக்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே'' என்று பாசுரந்தோறும் சொல்லிச் சொல்லி உகக்கின்றார்; நெஞ்சையும் புகழ்கின்றார்.

திருமந்திரத்தால் சேஷத்துவ ஞானம் ஏற்படுகின்றது என்பதை நாம் அறிவோம். பரமபுருடனுக்குச் சிறப்பை உண்டாக்கும் பொருளாய் இருத்தலே சேஷத்துவமாகும். இச் சிறப்பு சேதநன் அவனுக்கு அடிமைத் தொழில் செய்யும்போதுதான் ஏற்படும். அங்ஙனம் செய்யாதபோது ஏற்படுதல் இல்லை. இம்முறையில் இதனை நுணுகி நோக்கின், சேஷத்துவ ஞானம் அடிமைத் தொழிலைப் பற்றிய அறிவாய்த் தேறி நிற்கும். வைணவ சமயத்தில் இச்சையை ஞான விசேடமாகவே கொள்ளுகின்றமை யினால் அவ்வறிவு பலத்தில் விருப்பமுடையதாகவே (பலேச்சையாய்) முடியும். ஒருவன் ஒரு பலத்தை விரும் பினால், அவன் அதற்கேற்ற வழியில் நுழைதல் உலக அநுபவமாகும். இங்ஙனமே திருமந்திரத்தால் மேற்கூறிய பலேச்சை ஏற்படுகின்றமையினால் அப்பயனை அடைய பகவானுடைய சரண கமலங்களையே இவன் சாதனமாய்ப் பற்றவேண்டியவனாகின்றான்.

சேதநன் எம்பெருமானுக்குச் செய்ய வேண்டிய அடிமைத் தொழில் **வாசிகம், காயிகம்** என இருவகைப் படும். அவற்றுள் வாசிகமாவது, பரமபுருடனை அநுபவிக்கும்போது வாயினால் சாம கானத்தைச் செய்தல், திருமந்திரத்தைச் சொல்லுதல், ஆழ்வார் பாசுரங்களை ஓதுதல் முதலியவையாகும். காயிகமாவது, இளைய பெருமாளைப்போல் உடனிருந்து உடலினால் அடிமைத் தொழில் புரிதலாகும். திருக்கோயிலில் திருவலகிடுதல், மூர்த்திக்கு அபிடேகம் செய்தலும், அலங்கரித்தலும்; இல்லத்திலும் எம்பெருமானுக்கு அவைபோன்ற கைங்கரியத்தைச் செய்தலும் ஆகும். இவை மட்டுமேயன்றி பரமபுருடனுக்கு எல்லாச் செல்வங்களும் மேன்மேல் உண்டாக வேண்டும் என்று மனத்தால் பாரிக்கின்ற பாரிப்பையும் மானசமான கைங்கரியம் என்று பெரியோர் பணிப்பர்.

சேஷத்துவமே ஆன்மாவிற்குச் சொருபமாதலினாலும் தொண்டு செய்யாதபோது அச்சேஷத்துவம் கைகூடாதாதலினாலும், தொண்டு ஆன்மாவிற்கு ஒரு காலத்திலன்றி என்றும் உள்ளது. 'கைங்கரியந்தான் நித்தியம்'[33] என்று கூறுகின்றது முமுட்சுப்படி. அகவிதழ் இன்றேல் மலர் இல்லை. அங்ஙனமே சேஷத்துவம் இல்லாதபோது ஆன்மா இல்லை. இந்த சேஷத்துவம் தொண்டு செய்யாதபோது சித்தியாது. ஆதலினாற்றான் ஆசாரியர்கள் "உனக்கு என்றும் தொண்டனாய் இருந்து உன்னை மகிழ்விக்கின்றேன்" என்றும் "உனக்கு என்றும் கைங்கரியம் புரிபவனாகக் கடவேன்" என்றும் அருளிச் செய்துள்ளதை நோக்கி அறிதல் வேண்டும்.

இந்தக் கைங்கரியத்தை நித்தியமாகப் பிரார்த்தித்தே பெறுதல் வேண்டும் என்று கூறும் முமுட்சுப்படி[34].

33. முமுட்சு-175
34. ஷை-176.

அடிமைத் தொழில்களை ஏற்றுக்கொள்ளுகின்ற ஈசுவரன் யாவரிலும் மேலானவனாதலினாலும், செய்பவனான சேதநன் அத்தியந்த பாரதந்திரியனாதலினாலும்[35], வேண்டிப் பெறாதபோது கைங்கரியம் கைகூடுதல் அருமை ஆதலினாலும் சேதநன் இதனை இடையீடின்றி வேண்டியே பெறுதல் வேண்டும். வேண்டுதல் என்பது, "அடிமையாகிய என்னைத் தலைவனாகிய தேவரீர், உம்முடைய உவப்பிற்கு உறுப்பாகப் பயன்படுத்திக் கொண்டு அடியேன் உளனாமாறு அருள்புரிய வேண்டும்" என்பதாகும்.

பிரார்த்தித்துதான் பெறுதல் வேண்டும் என்பதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம். ஒரு குழந்தை பிணியினால் தாக்குண்டு உணவில் விருப்பற்றுக் கிடக்கின்றது. பிணி நீங்கியவுடன் இக் குழந்தை தானாக அன்னையிடம் வந்து "அம்மா எனக்கு அம்மம்!" என்று கேட்குங்கால் அன்னை அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றாள். இங்ஙனமே சேதநனும் அநாதிகாலமாய் ஐசுவரியம் முதலியவற்றில் உண்டான விருப்பமாகின்ற நோயினால் எம்பெருமானை மறந்து ஈசுவர கைங்கரியத்தில் விருப்பற்றுக் கிடக்கின்றான். எப்படியோ இக் கைங்காரியத்தில் ருசி[36] பிறந்து, தானே ஈசுவரனிடம் போந்து,

எற்றைக்கும் ஏழேழ்
　　பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம்
　　உனக்கேநாம் ஆட்செய்வோம்[37]

---

35. அத்தியந்த பாரதந்திரியம்-விசேடமாய்ப் பகவானுக்கு வசப்பட்டிருத்தல்.

36. ருசி-பாவச் செயல்களையோ புண்ணியச் செயல்களையோ அறிந்தே செய்தற்குக் காரணமாயுள்ள சுவை.

37. திருப். 29

என்று ஆண்டாள் கண்ணனைப்பிரார்த்தித்தது போன்று, இவனும் 'உனக்கே கைங்கரியம் புரிய அருள்புரிதல் வேண்டும்' என்று பிரார்த்திக்கும் வார்த்தை செவி ஏற்றவுடன் சேஷியாகின்ற ஈசுவரன் மகிழ்கின்றான். இந்த மகிழ்ச்சியின்[38] பொருட்டே சேதநன் ஈசுவரனைப் பிரார்த்திக்க வேண்டியுள்ளது. சேதநனுடைய கைங்கரியத்தைப் போன்றே, இப் பிராத்தனையும் எம் பெருமானின் மன உகப்பிற்கும் முகமலர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றது. ஆகவே, இப்பிரார்த்தனையும் சேதனுக்கு இன்றியமையாததாகும்.[38]

38. முமுட்சு-164

## பின்னிணைப்பு—1

# பயன்பட்ட நூல்கள்

## (அ) தமிழ் நூல்கள்


*அண்ணங்கராசாரிய சுவாமிகள், பி. ப.:* **திவ்வியார்த்த தீபிகை** *(கிரந்தமாலா ஆபீஸ் காஞ்சிபுரம்)*

*அப்புள்ளை :* **வாழித் திருநாமம்.**

*அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் :* **ஆசாரிய ஹிருதயம்-மணவாள மாமுனிகளின் வியாக்கியானம்-தமிழாக்கம் (1965).** *சென்னைப் பல்கலைக் கழகம்.*

*ஆழ்வார்கள் :* **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்,** *கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு (திருவேங்கடத்தான் திருமன்றம், 19-B. பெருமாள் முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.*

*ஆழ்வார்கள் :* **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** *(மர்ரே கம்பெனி, ராஜம் பதிப்பு).*

*கம்பர் :* **சடகோபர் அந்தாதி — வை.** *மு. சடகோப ராமாநுசாச்சாரியார் உரை.*

*கிருஷ்ணவேணி அம்மையார், எஸ் :* **செம்பொருள்** *(திருமலை-திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி-517 501).*

கோபாலகிருஷ்ணமாசாரியார், வை. மு. : **கம்பராமாயணம்** — உரை (தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005).

சஞ்சீவி, ந. (பதிப்பு) **தெய்வத்தமிழ்** (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை-600 005.)

சீராமதேசிகாசாரியார் : **தேசிகப் பிரபந்தம்** — உரை, (ஒப்பிலியப்பன் சந்நிதி, கும்பகோணம்).

சுந்தர ராமாநுச சுவாமிகள் : **தத்துவத்திரயம்** — விளக்கவுரை [வேலூர் வைணவ சித்தாந்த மகா சங்கம், வேலூர் (1951)].

சுப்பு ரெட்டியார் ந. **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை**— மூன்றாம் பதிப்பு (1988) பழநியப்பா பிரதர்ஸ், திருச்சிராப்பள்ளி — 620 002.

சுப்பு ரெட்டியார், ந. : **பாண்டிநாட்டுத் திருப்பதிகள்** — (இரண்டாம் பதிப்பு-1990) பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108

சுப்பு ரெட்டியார், ந. : **சோழநாட்டுத் திருப்பதிகள்** — பகுதி I, 1981. பகுதி II 1981. (பாரி நிலையம்)

சுப்பு ரெட்டியார் ந. : **வடநாட்டுத் திருப்பதிகள்** — 1991 2-ஆம் பதிப்பு (பாரி நிலையம், சென்னை-108).

சுப்பு ரெட்டியார், ந. : **முத்திநெறி** (பாரி நிலையம் — சென்னை-600 108, 1982)

சுப்பு ரெட்டியார் ந: 1) மலை நாட்டுத் திருப்பதிகள் — இரண்டாம் பதிப்பு (1988), பாரி நிலையம், சென்னை-108.

சுப்பு ரெட்டியார் ந: 2) பாண்டிநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பதிப்பு-1990)

3) வடநாட்டுத் திருப்பதிகள் (இரண்டாம் பதிப்பு-1991)

4) தொண்டை நாட்டுத் திருப்பதிகள் (முதற் பதிப்பு-1973)

சுப்பு ரெட்டியார், ந: கண்ணன் பாட்டுத் திறன் (1982), சர்வோதய இலக்கியப் பண்ணை - மதுரை 625 001

வரதராசன், மு. : தமிழ் இலக்கிய வரலாறு (சாகித்திய அகாடமி, சென்னை-600 018, ஐந்தாம் பதிப்பு-1983)

(ஆ) ஆங்கில நூல்கள்

Srinivasachari, P. N. :The Philosophy of Vishtadvaita. (The Adyar Library, 1943).

Subbu Reddiar, N. : Religion and Philosophy of Nelayira Dirya Prabandham with Special Refer ence of Nammalvar (S. V. University, Tirupa ti-2. 1978).

Subbu Reddiar, N: Collected Papers (1985), Paari Nilyam, Madras - 600 108

## பின்னிணைப்பு—2

### திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த திருத்தலங்கள் (திவ்வியதேசங்கள்)

குறிப்பு : ஒவ்வொரு தலத்தின் பெயருடன் 'திரு' என்ற அடைமொழியைச் சேர்த்துப் படிக்கவும்.

| தி. தே. | பதிகம் பாசுரங்கள் | பாசுரத் தொகை | பக்கம் |
|---|---|---|---|
| *அட்டபுயகரம் (தொ. தி)* | *பெ.திரு. 2,8 (10)*<br>*பெ. திருமடல் 64.* | *11* | *107* |
| *அத்திகிரி (தொ. தி)* | *பெ. திரு. 6.10:4*<br>*கு. தா. 19*<br>*நெ. தா. 15.* | *3* | *104* |
| *அயிந்திரபுரம் (ந. தி)* | *பெ.திரு. 3.1 (10)* | *10* | *150* |
| *அயோத்தி (வ. தி)* | *பெ.திரு. 10.3:8* | *1* | *61* |
| *அரங்கம் (சோ.தி.)* | *பெ.திரு. 1.8:2;*<br>*3. 7: 6. 5. 4 (10);*<br>*5.5 (10); 5.6 (10);*<br>*5.7 (10); 5.8(10);*<br>*6. 6: 9; 7. 3: 4;*<br>*8. 2: 7; 9. 9: 2;* | | |

| | | | |
|---|---|---|---|
| | 10. 3: 7; 11.1: 8 (58)<br>கு.தா: 7,12,13,19(4)<br>நெ. தா: 11,12,14<br>18,19,23,24,25 (8)<br>சி. மடல் (39)<br>பெ மடல் (57) | 72 | 311 |
| அரிமேயவிண்ணகரம் (சோ.தி) | பெ.திரு. 3.10(10) | 10 | 223 |
| அல்லிக்கேணி (தொ. தி) | பெ.திரு. 2.3 (10) | 10 | 84 |
| அழுந்தூர்(சோ.தி) | பெ. திரு.7. 5 (10);<br>7.6 (10); 7. 7 (10);<br>7. 8(10); 10.1:7<br>நெ. தா. 15, 26<br>சி. மடல் (39)<br>பெ. மடல் (61) | 45 | 185 |
| ஆதனூர் (சோ.தி) | பெ. மடல் (65) | 1 | 299 |
| ஆயர்பாடி (வ. தி) | பெ. தி 1. 8: 4;<br>5. 5: 5; 5. 9: 8 | 3 | 57 |
| ஆலி (சோ.தி) | பெ. திரு. 2. 4: 1;<br>3.5; 3.6; 3.7 (30),<br>4. 9: 2; 6. 8: 2;<br>8.9:6, 8; 10. 1: 3; | | |

| | | | |
|---|---|---|---|
| | 11.3:9; 11.7:3; 11.8:6; நெ. தா: 12; சி. மடல் (39)பெ.மடல்(67) | 43 | 171 |
| இடஎந்தை (தொ. நா) | பெ. திரு. 1. 8: 4; 2. 7(10) சி.மடல்(39) பெ. மடல் (58) | 13 | 94 |
| இந்தளூர்(சோ.தி) | பெ. திரு. 4. 9 (10) பெ. மடல் (63) | 11 | 175 |
| உறையூர் (சோ.தி) | பெ. திரு. 9. 2: 5 | 1 | 310 |
| ஊரகம் (தொ.தி) | நெ. தா. 8, 13. சி. மடல் (39) பெ. மடல் (63). | 4 | 120 |
| எவ்வுளூர்(தொ.தி) | பெ. திரு. 2. 2 (10) பெ. மடல் (57) | 11 | 80 |
| கடல் மல்லை (தொ. தி) | பெ. திரு. 2.5 (10); 2. 6 (10); 3.5(10):8; 7. 1: 4 கு. தா. 19 நெ. தா. 9 சி. மடல் 39 பெ. மடல் 58 | 26 | 89 |

| | | | |
|---|---|---|---|
| கடிகை (தொ.தி) | பெ. திரு. 8. 9: 4, 9<br>சி. மடல் 39 | 3 | 99 |
| கண்டியூர் (சோ.தி) | நெ. தா. 19 | 1 | 304 |
| கண்ணங்குடி (சோ. தி) | பெ. தி. 9. 1 (10) | 10 | 252 |
| கண்ணபுரம் (சோ. தி) | பெ. திரு. 8. 1<br>to 8. 10. (100)<br>நெ. தா. 16, 27<br>சி. மடல் (19)<br>பெ. மடல் 45, 68 | 105 | 248 |
| கண்ணமங்கை (சோ. தி) | பெ. மடல் 7. 6: 5<br>7. 10 (10); 10. 1: 1<br>11. 6. 7<br>சி. மடல் (39)<br>பெ. மடல் (57) | 15 | 260 |
| கரம்பனூர் (சோ.தி) | பெ. திரு. 5. 6: 2 | 1 | 307 |
| கள்வனூர் (தொ. தி) | நெ. தா. 8 | 1 | 132 |
| காரகம் (தொ.தி) | நெ. தா. 8 | 1 | 123 |
| கார்வானம் (தொ. தி) | நெ. தா. 8 | 1 | 123 |

காழிச் சீராமவிண்ணகரம் (சோ.தி)	பெ. திரு. 3. 4 (10)	10	166

| | | | |
|---|---|---|---|
| காழிச் சீராமவிண்ணகரம் (சோ.தி) | பெ. திரு. 3. 4 (10) | 10 | 166 |
| காவளம்பாடி (சோ. தி) | பெ. திரு. 4. 6 (10) | 10 | 205 |
| குடந்தை (சோ.தி) | பெ. திரு. 1. 1: 2, 7; 1. 5: 4; 2. 4: 1; 3. 6: 5, 8; 5. 5: 7; 6. 8: 9; 6: 10: 1; 7. 3: 3; 7. 6: 9; 8. 9: 5; 9. 2: 2; 10. 1: 6; 10. 10: 8 11. 3: 4; 11. 6: 9 கு. தா. 6, 14 (2) நெ. தா. 17,19, 29 (3) எழுகூற் 1 சி. மடல் (39) பெ. மடல் (54) | 25 | 277 |
| குறுங்குடி (பா.தி.) | பெ. திரு. 1. 6: 8; 5. 6: 2; 6. 3: 3; 9, 5 (10) 9, 6 (10) நெ. தா. 14 பெ. மடல் 55 | 25 | 331 |
| கூடலூர் (சோ. தி) | பெ. திரு. 5. 2 (10) | 10 | 296 |
| கூடல் (பா. தி) | பெ. திரு. 9. 2: 5 | 1 | 320 |

| | | | |
|---|---|---|---|
| கோட்டியூர் (பா. தி) | பெ.திரு. 7. 1: 3; 9. 10 (10); 10. 1: 9; பெ. மடல் (63) | 13 | 321 |
| கோவலூர் (ந. தி) | பெ. தி 2. 4: 1; 2. 10 (10); 5. 6: 7; 6. 10: 5; 7. 3: 2; 7. 10: 4 நெ. தா. 6, 7. 17 சி. மடல் (39) பெ. மடல் (60) | 30 | 137 |
| சாளக்கிராமம் (வ.தி) | பெ. திரு. 1. 5 (10) | 10 | 50 |
| சிங்கவேழ்குன்றம் (வ. தி.) | பெ. திரு. 1. 7 (10) | 10 | 68 |
| சித்திரகூடம் (சோ. தி) | பெ. திரு. 3. 2 (10) 3. 3 (10); பெ. மடல் (24) | 21 | 160 |
| சிறுபுலியூர் (சோ. தி) | பெ. திரு. 7. 9 (10) | 10 | 242 |
| செம்பொன் செய் கோயில் (சோ. தி) | பெ. திரு 4. 3 (10) | 10 | 233 |

| | | | |
|---|---|---|---|
| சேறை (சோ. தி) | பெ. திரு 7. 4 (10);<br>10. 1: 6;<br>சி. மடல் (39);<br>பெ. மடல் (56) | 12 | 273 |
| தஞ்சை (சோ. தி) | பெ. திரு. 1. 1: 6;<br>7. 3: 9. | 2 | 301 |
| தண்கா (தொ. தி) | பெ. திரு 10. 1: 1;<br>நெ. தா. 14. | 2 | 119 |
| தண்கால் (பா. தி) | பெ. திரு 5. 6: 2;<br>நெ. தா. 17;<br>சி. மடல் (39);<br>பெ. தி. 59; | 4 | 330 |
| தலைச்சங்க நாண் மதியம் (சோ. தி) | பெ. திரு. 8. 9: 9;<br>பெ. மடல் (67) | 2 | 184 |
| துவாரகை (வ. தி) | பெ.திரு. 6. 6: 7; 6.8: 7 | 2 | 66 |
| தெற்றியம்பலம் (சோ. தி) | பெ. திரு. 4. 4 (10) | 10 | 236 |
| தேவனார் தொகை (சோ. தி) | பெ. திரு. 4. 1 (10) | 10 | 198 |
| நந்திபுர விண்ணகரம் (சோ. தி) | பெ. திரு. 5. 10(10) | 10 | 285 |

| | | | |
|---|---|---|---|
| நறையூர் (சோ.தி) | பெ. திரு. 2. 4: 1;<br>4. 9: 2; 6. 3: 3;<br>6. 4 to 7. 3 (100)<br>7. 7: 4; 8. 2: 2;<br>10. 1: 5<br>நெ. தா. 16, 17<br>சி. மடல் (30)<br>பெ. மடல் (38) | 110 | 265 |
| நாகை (சோ. தி) | பெ. திரு. 9. 2: (10) | 10 | 255 |
| நாவாய் (ம. தி) | பெ.திரு. 6. 8: 3; 10.1:9 | 2 | 339 |
| நிலாத் திங்கள் துண்டம் (தொ.தி) | நெ. தொ 8 | 1 | 132 |
| நின்றவூர் (தொ.தி) | பெ. திரு. 2. 5: 2;<br>7. 10: 5. | 2 | 1683 |
| நீரகம் (தொ. தி) | நெ. தா. 8 | 1 | 122 |
| நீர்மலை (தொ.தி) | பெ. திரு. 2. 4 (10);<br>2; 7: 8; 5. 2: 8;<br>6. 8: 4; 7. 1: 7;<br>8. 2: 3; 9. 2: 8<br>10. 1: 1;<br>நெ. தா. 18<br>சி. மடல் (39)<br>பெ. மடல் (67) | 20 | 86 |

| | | | |
|---|---|---|---|
| நைமிசாரண்யம் (வ. தி) | பெ. திரு. 1. 6 (10) | 10 | 62 |
| பரமேச்சர விண்ணகரம் (தொ. தி) | பெ. திரு. 2. 9 (10) | 10 | 124 |
| பவளவண்ணம் (தொ. தி) | நெ. தா. 9 | 1 | 129 |
| பாடகம் (தொ.தி.) | பெ. திரு. 6. 10: 4<br>பெ. மடல் (63) | 2 | 130 |
| பார்த்தன்பள்ளி (சோ. தி) | பெ. திரு. 4. 8 (10) | 10 | 207 |
| பாற்கடல் (வ. தி) | பெ. திரு. 1. 6: 6;<br>1. 6: 9; 1. 8: 2; 3 5:2, 7;<br>4. 10: 4, 10; 5. 4: 2; 5. 6:1<br>5. 7: 6; 7. 1: 3; 7. 3: 6;<br>7. 4: 7; 7. 8: 1; 8. 9: 2;<br>8. 10: 7; 9. 6: 2; 9. 9: 1;<br>10. 1: 3; 11. 5: 10<br>நெ. தா. 9, 15 | 22 | 60 |
| பிரிதி (வ. தி) | பெ. திரு. 1. 2 (10) | 10 | 42 |
| புட்குழி (தொ.தி) : | பெ. திரு 2. 7: 8<br>பெ. மடல் (57) | 2 | 133 |
| புலியூர் (ம. தி) | சி. மடல் (39) | 1 | 335 |

| | | | |
|---|---|---|---|
| புல்லாணி (பா. தி) | பெ. திரு 9. 3 (10); 9. 4 (10) பெ. மடல் (67) | 21 | 325 |
| புள்ளம் பூதங்குடி (சோ. தி) | பெ. திரு 5. 1 (10) | 10 | 293 |
| பேர்நகர் (சோ, தி) | பெ. திரு 1. 5: 4; 5. 6: 2; 5. 9 (10); 7. 6: 9; 10: 4, 10 (15) கு. தா. 17, 19 (2) நெ. தா. 8, 19, 19, (3) சி. மடல் (39) பெ. மடல் (58) | 22 | 305 |
| மணிக்கூடம் (சோ. தி) | பெ. திரு, 4. 5 (10) | 10 | 201 |
| மணி மாடக்கோயில் (சோ. தி) | பெ. திரு. 3. 8 (10) | 11 | 214 |
| மாலிருஞ்சோலை (பா. தி) | பெ. திரு 1. 8: 5; 2. 7: 7; 4. 9: 2; 7. 3: 6; 7. 9: 7; 9. 2: 3, 8; 9. 8 (10); 9. 9 (10) 10. 1: 8; 11. 2: 8; 11. 7: 9 நெ. தா 3; சி. மடல் (30) பெ. மடல் (62) | 33 | 317 |

| | | | |
|---|---|---|---|
| மூழிக்களம் (ம.தி.) | பெ. திரு 7. 1:6; நெ. தா 10 பெ. மடல் (55) | 3 | 340 |
| மெய்யம் (பா. தி.) | பெ. திரு 2. 5: 8 3. 6: 9; 5. 5: 2; 6. 8: 7; 8. 2: 3; 10, 1: 5 11. 7: 5 (7) கு. தா. 19 பெ. மடல் (63) | 9 | 323 |
| மோகூர் (பா. தி) | சி. மடல் (39) | 1 | 320 |
| வடமதுரை (வ.தி.) | பெ. திரு 6. 7: 5; 6. 8: 10; 9. 9: 6 சி. மடல். (39) | 4 | 55 |
| வண்புருடோத்தம் (சோ. தி) | பெ. திரு 4. 2 (10) | 10 | 228 |
| வதரி (வ. தி). | பெ. திரு 1. 3 (10) 1. 4 (10) சி. மடல் (39) | | 45 |
| வல்லவாழ் (ம தி) | பெ. திரு 9. 7 (10) பெ. மடல் (58) | 11 | 336 |
| விண்ணகர் (சோ. தி) | பெ. தி. 6. 1 (10) பெ. திரு 6. 2 (10); | | |

| | | | |
|---|---|---|---|
| | *6. 3 (10); 10. 1 : 8 (31)*<br>*நெ. தா. 29.*<br>*சி. மடல் (39)*<br>*பொ. மடல் (53)* | *34* | *281* |
| *வெஃகா (தொ. தி)* | *பெ. திரு 2. 6: 5; 10. 1:7*<br>*நெ. தா 8, 13, 14*<br>*சி. மடல் (39)*<br>*பெ. மடல் (64)* | *7* | *16, 105* |
| *வெள்ளக்குளம்*<br>*(சோ. தி.)* | *பெ. திரு 4. 7 (10)* | *10* | *210* |
| *வெள்ளறை*<br>*(சோ. தி)* | *பெ. திரு 5.3 (10);*<br>*10. 1: 4.*<br>*பெ. மடல் (68)*<br>*சி. மடல் (33)* | *13* | *308* |
| *வெள்ளியங்குடி*<br>*(சோ)* | *பெ. திரு 4. 10 (10)* | *10* | *289* |
| *வேங்கடம் (வ. தி)* | *பெ. திரு. 1. 8* to *10*<br>*2. 1 (40); 3. 5: 9;*<br>*4. 3: 8; 4. 7: 5 : 5; 5. 3: 4*<br>*5. 5: 1; 5. 6: 7; 6. 8: 1;*<br>*7 1: 3; 7. 3: 5; 7. 10: 3;*<br>*8. 2: 3; 9. 7: 4; 9. 9: 9;*<br>*10. 1: 2; 10. 9: 2; 10. 10: 5* | | |

| | | | |
|---|---|---|---|
| | 11. 3: 7; 11. 5: 10 (58) | | |
| | கு. தா. 7 | | |
| | தெ: தா. 17 | | |
| | சி. மடல் (39) | | |
| | பெ. மடல் (62) | 59 | 75 |
| வெஃகா | | | |
| (தொ. தி). | பெ. மடல் (63) | 1 | 118 |
| வைகுந்தம் (தி. நா) | பெ. திரு 7. 3: 5 | 1 | 61 |
| வைகுந்தவிண்ணகரம் (சோ. தி.) | | | |
| | பெ. திரு 2. 9 (10) | 10 | 220 |

சுருக்கம் :

| | |
|---|---|
| சோழ நாட்டுத் தலங்கள் | 38 |
| பாண்டி நாட்டுத் தலங்கள் | 8 |
| மலைநாட்டுத் தலங்கள் | 4 |
| நடுநாட்டுத் தலங்கள் | 2 |
| தொண்டைநாட்டுத் தலங்கள் | 22 |
| வடநாட்டுத் தலங்கள் | 11 |
| திருநாட்டுத் தலம் | 1 |
| மொத்தம். | 86 |

## பின்னிணைப்பு-3

# 108—வைணவ திவ்விய தேசங்கள்

ஈரிருப தாம்சோழம்;
    ஈரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு;
    ஓரிரண்டாம்—சீர் நடுநா(டு)
ஆறோ (டு) ஈரெட்டுத்தொண்டை
    அவ்வடநா (டு) ஆறிரண்டு
கூறுதிரு நாடாகக்
    கொள்.[1]

—பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்

### சோழநாட்டுத் திருப்பதிகள்—40

கடல்கிழக்குத் தெற்குக் கரை பொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லேணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.[2]

1. திருவரங்கம் பெரிய கோயில்
2. திருவுறையூர்
3. திருத்தஞ்சை
4. திருவன்பில்
5. திருக்கரம்பனூர்
6. திருவெள்ளறை
7. திருப்புள்ளம் பூதங்குடி
8. திருப்பேர் நகர்
9. திருஆதனூர்
10. திருவழுந்தூர்
11. திருச்சிறுபுலியூர்
12. திருச்சேறை
13. திருத்தலைச் சங்க நாண்மதியம்
14. திருக்குடந்தை

---

1. நூற். திருப். அந். 6.
2. ஓர் பழம் பாடல்

15. திருக்கண்டியூர்
16. திருவிண்ணகர்
17. திருக்கண்ணபுரம்
18. திருவாலி
19. திருநாகை
20. திருநறையூர்
21. திருநந்திபுர விண்ணகரம்
22. திருவிந்தளூர்
23. திருச்சித்திரகூடம்
24. திருச்சீராம விண்ணகரம்
25. திருக்கூடலூர்
26. திருக்கண்ணங்குடி
27. திருக்கண்ணமங்கை
28. திருக்கவித்தலம்
29. திருவெள்ளியங்குடி
30. திருமணிமாடக் கோயில்
31. திருவைகுந்த விண்ணகரம்
32. திருஅரிமேய விண்ணகரம்
33. திருத்தேவனார் தொகை
34. திருவண் புருடோத்தமம்
35. திருச்செம்பொன் செய்கோயில்
36. திருத்தெற்றியம் பலம்
37. திருமணிக்கூடம்
38. திருக்காவளம்பாடி
39. திருவெள்ளக்குளம்
40. திருப்பார்த்தன் பள்ளி

**பாண்டிநாட்டுத் திருப்பதிகள்—18**

வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் —உள்ளாரா
வாண்ட கடல்கிழக்காம ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி.[3]

1. திருமாலிருஞ்சோலை மலை
2. திருக்கோட்டியூர்
3. திருமெய்யம்
4. திருப்புல்லாணி

---

3. ஓர் பழம் பாடல்.

5. திருத்தண்காலூர்
6. திருமோகூர்
7. திருக்கூடல்
8. சிரீ வில்லிபுத்தூர்
9. திருக்குருகூர்
10. திருத்தொலைவில்லி மங்கலம்
11. சிரீவரமங்கை
12. திருப்பேரை
13. சிரீவைகுண்டம்
14. திருப்புளிங்குடி
15. திருவரகுண மங்கை
16. திருக்குளந்தை
17. திருக்குறுங்குடி
18. திருக்கோளூர்

## மலை நாட்டுத் திருப்பதிகள் — 13

வடக்குத் திசைப்பழநி வான்கீழ் தென்காசி
குடக்குத் திசைகோழிச் கூடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட்டிற் கெல்லையெனச் செப்பு.[4]

1. திருவனந்தபுரம்
2. திருவண்பரிசாரம்
3. திருக்காட்கரை
4. திருமூழிக்களம்
5. திருப்புலியூர்
6. திருச்செங்குன்றூர்
7. திருநாவாய்
8. திருவல்லவாழ்
9. திருவண்வண்டூர்
10. திருவாட்டாறு
11. திருவித்துவக்கோடு
12. திருக்கடித்தானம்
13. திருவாறன்விளை

## நடுநாட்டுத் திருப்பதிகள்—2

1. திருவயிந்திபுரம்
2. திருக்கோவலூர்

## தொண்டை நாட்டுத் திருப்பதிகள்—22

மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு.[5]

---

4. ஓர் பழம் பாடல்
5. ஓர் பழம் பாடல்.

1. திருக்கச்சி-அத்திகிரி
2. திருஅட்டபுயகரம்
3. திருத்தண்கா
4. திருவேளுக்கை
5. திருப்பாடகம்
6. திருநீரகம்
7. திருநிலாத்துண்டம்
8. திருவூரகம்
9. திருவெஃகா
10. திருக்காரகம்
11. திருக்கார்வானம்
12. திருக்கள்வனூர்
13. திருப்பவளவண்ணம்
14. திருபரமேச்சுர விண்ணகரம்
15. திருப்புட்குழி
16. திருநின்றவூர்
17. திருஎவ்வுளூர்
18. திருநீர்மலை
19. திருஇடஎந்தை
20. திருக்கடல்மல்லை
21. திருவல்லிக்கேணி
22. திருக்கடிகை

**வடநாட்டுத் திருப்பதிகள்—12**

1. திருவேங்கடம்
2. திருச்சிங்கவேழ்குன்றம்
3. திருஅயோத்தி
4. திருநைமிசாரணியம்
5. திருச்சாளக்கிராமம்
6. திருவதரியாச்சிரமம்
7. திருக்கங்கைக் கரைக் கண்டம்
8. திருப்பிரிதி
9. திருவடமதுரை
10. திருத்துவாரகை
11. திருவாய்ப்பாடி
12. திருப்பாற்கடல்

**திருநாட்டுத் திருப்பதி—1**

1. திருநாடு : இதுவே வைகுந்தம். திருமாலின் ஐவகை நிலைகளுள் பரத்துவம் விளங்கும் தானம்.

குறிப்பு : இந்த 108 திருப்பதிகளைப் பேராசிரியர் ரெட்டியார் சேவித்து **மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிகள், பாண்டிநாட்டுத்**

**திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், சோழநாட்டுத் திருப்பதிகள்—முதற் பகுதி, சோழநாட்டுத் திருப்பதிகள்—இரண்டாம் பகுதி**—என்ற 6 நூல்களை வெளியிட்டுள்ளார். இதில் திருப்பதிகட்குச் செல்லும் வழி, திருப்பதிகளில் தங்கும் வசதிகள், ஆழ்வார் பாசுரங்களின் அநுபவம் முதலியவை விளக்கப் பெற்றுள்ளன. திருத்தலப் பயணிகட்கும் ஆழ்வார் பாசுரங்களை அநுபவிக்க விரும்புபவர்கட்கும் பயன்படும் நூல்கள் இவை.

| | |
|---|---|
| சோ. நா. திருப்பதிகள் | 40 |
| பா. நா. திருப்பதிகள் | 18 |
| ம. நா. திருப்பதிகள் | 13 |
| ந. நா. திருப்பதிகள் | 2 |
| தொ. ந. திருப்பதிகள் | 22 |
| வ. நா. திருப்பதிகள் | 12 |
| தி. நா. திருப்பதி | 1 |
| மொத்தம் | 108 |

இவற்றைப் பக்தியுடன் சேவித்து இறையநுபவம் பெற்றால் இம்மை மறுமைப் பயன்கள் அனைத்தும் கிட்டும்,

## பேராசிரியர்

## டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியத்தில் - அறம், நீதி, முறைமை
18. புதுவை (மை)க் கவிஞர்
சுப்பிரமணிய பாரதியார்—ஒரு கண்ணோட்டம்

19. பாவேந்தர் பாரதிதாசன் —ஒரு கண்ணோட்டம்
20. திருக்குறள் தெளிவு

**சமயம் தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

21. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
22. சிலநோக்கில் நாலாயிரம்
23. வைணவமும் தமிழும்
24. சைவசமய விளக்கு
25. ஆன்மிகமும் அறிவியலும்
26. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
27. கலியன் குரல்
28. கீதைக் குறல் (பதிப்பு)
29. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
30. கண்ணன் துதி
31. இராமர் தோத்திரம்
32. கீதைப் பொழிவுகள்
33. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
34. முருகன் துதியமுது

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள்**

35. மலைநாட்டுத் திருப்பதிகள்
36. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
37. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
38. வடநாட்டுத் திருப்பதிகள்
39. சோழநாட்டுத் திருப்பதிகள் — முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)

40. சோழநாட்டுத் திருப்பதிகள்—
இரண்டாம் பகுதி (அச்சில்)
41. தம்பிரான் தோழர்
42. நாவுக்கரசர்
43. ஞானசம்பந்தர்
44. மாணிக்கவாசகர்

திறனாய்வு :

45. கவிதை யநுபவம்
46. பாட்டுத் திறன்
47. கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்
48. அகத்திணைக் கொள்கைகள்
49. புதுக்கவிதை — போக்கும் நோக்கும்
50. கண்ணன்பாட்டுத் திறன்
51. பாஞ்சாலி சபதம் — ஒரு நோக்கு
52. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
53. குயில்பாட்டு — ஒரு மதிப்பீடு
54. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
55. ஆழ்வார்கள் ஆரா அமுது
56. விட்டு சித்தன் விரித்த தமிழ்
57. சடகோபன் செந்தமிழ்
58. பரகாலன் பைந்தமிழ்
59. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
60. பாவேந்தரின் பாட்டுத் திறன்
61. பாண்டியன் பரிசு — ஒரு மதிப்பீடு

வரலாறு தன் வரலாறு

62. நினைவுக் குமிழிகள் — முதற்பகுதி
63. நினைவுக் குமிழிகள் — இரண்டாம் பகுதி

64. நினைவுக் குமிழிகள் — மூன்றாம் பகுதி
65. நினைவுக் குமிழிகள் — நான்காம் பகுதி
66. நினைவுக் குமிழிகள் — ஐந்தாம் பகுதி
67. மலரும் நினைவுகள்
68. வேமனர்
69. குரஜாட
70. சி. ஆர். ரெட்டி
71. தாயுமான அடிகள்
72. பட்டினத்தடிகள்
73. வடலூரர் வள்ளல்
74. பிரதிவாதி பயங்கரம்

**அறிவியல்:**

75. மானிட உடல்
76. அணுவின் ஆக்கம்
77. இளைஞர் வானொலி
78. இளைஞர் தொலைக்காட்சி
79. அதிசய மின்னணு
80. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
81. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
82. அம்புலிப் பயணம்
83. தொலை உலகச் செலவு
84. அணுக்கரு பௌதிகம்
(செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
85. இல்லற நெறி
86. வாழையடி வாழை
87. அறிவியல் விருந்து
(தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)

88. தமிழில் அறிவியல் — அன்றும் இன்றும்
89. வானமண்டலக் காட்சி
90. விண்வெளிப் பயணம்

**ஆராய்ச்சி :**

91. வடவேங்கடமும் திருவேங்கடமும்
92. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
93. வைணவச் செல்வம்
(தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
94. Religion and Philosophy of Nalnyiram with Specia Reference to Nammalvar
95. Studies in Arst and Science: (61st Birth Day Commemoration Volume)
96. Collected Papers·

# இந்நூலாசிரியரைப் பற்றி. .



பிறப்பு : 27 - 8 - 1916

77-அகவையை எட்டிய இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி. ஏ., எம்.ஏ., பிஎச். டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும் (1941-1950), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஓய்வுபெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்ரவரி-1979 ஜூன்) கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச். டி.) பட்டம் பெற்றவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (16), சமயம் (24), திறனாய்வு (15), அறிவியல் (17), ஆராய்ச்சி (6), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு (13)—என்று 96 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழகஅரசு பரிசுகளும்; அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசும்-ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும், பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதையும், இவர்தம் தமிழ்ப் பணியைப் பாராட்டித் தமிழக அரசு திரு. வி. க. விருதையும், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை தெளிவு இவர் தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.